II. 8

131

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS - 600 090.

DASAN'S LIBRARY
NO. 47
VEPERY, MADRAS.

J. M. J.

A

# GRAMMAR

BY THE REVEREND FATHER C. J. BESCHI,
JESUIT MISSIONARY IN THE KINGDOM OF MADURA.

கடவுள் - துணை.

திருமதுரைச் செந்தமிழ்த் தேசிகருந் தைரியநாத சுவாமிகளாகிய

## வீரமாமுனிவர்

திருவாய்மலர்ந் தருளிச்செய்த வைந்திலக்கணத்

# தொன்னூல்விளக்கம்

மூலமும் - உரையும்.

இதனை அச்சிற்பதிப்பித்துத்தரல்வேண்டுமென்று வேளாளகுலோத்துங்கரிலொருவராகிய
ரா-ரா - அருளானந்தப்பிள்ளைகுமாரர்,
நெல்லித்தோப்பு - உபதேசியார்,

## மரியேசவேரியாப்பிள்ளை

வேண்டும்பொருளைக்கொடுத்து விரும்பிக்கேட்டுக்கொண்டபடி
புதுவைமாநகரத்திற்கனம்பொருந்திய திருச்சவைக்கல்விச்சங்கத்துச்
செந்தமிழ்ப்புலவருங்களத்தூர்
சுவாமிமுதலியார்குமாரருமாகிய,

## வேதகிரிமுதலியாரால்

பழுதறவாராய்ந்து, நன்னூல் - நேமிநாதம் - இலக்கணவிளக்கம் - அகப்பொருள்-புறப்பொருள் - யாப்பருங்கலம் - காரிகை - தண்டியலங்காரம் - தொல்காப்பியம் - பாட்டியல் செய்யுளியல் - வீரசோழியம் - இவைமுதலிய இலககணச்சூத்திரங்களைமேற்கோளாகவும், குறள் - நாலடி - சங்கசெய்யுள் - ஔவைவாக்கியம் இவைமுதலிய இலக்கியச்செய்யுளை உதாரணமாகவுஞ்சேர்த்து - அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இஃது

புதுவையில்பிராஞ்சுமகாராசாவினது தருமக்கல்விச்சங்கத்துத்
தலைமைப்புலமைநடாத்தும்
ஷாப்பு ஞானியாப்பிள்ளை குமாரர்

## அதிசெயநாதப்பிள்ளை

என்பவரால் - நிறைவேறப்பட்டது.

௲அ௱௩௰அ-க்குச்சரியான - விளம்பி - ௵.

1838

இதன்விலை - ரூ - ச.

DE L'IMPRIMERIE DE C. GUERRE.

II. 8
131
DASAN'S LIBRARY NO. 147 VEPERY, MADRAS.

கடவுள் துணை.

இஃது வீரமாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய ஐந்திலக்கணத்

# தொன்னூல்விளக்கம்.

மூலமும் - உரையும்.

## பொதுப்பாயிரம்.

நீர்மலிகட றவழ் நிலன்முதன்மற்றருஞ், சீர்மலியுலகெலாஞ் செய்தளித்தழிப்ப, வல்லவனுய்முதன்
மட்டிறெருப்பெதி, நில்லவனுயுய நிறையோனொருவனைப், பன்மையெர்ழியப் பணிந்தேயிராவிருட், ட
ன்மையொழியத் தரணியிற்றோன்றிய, வாதவனிகரிரு ளகத்தறவன்னு, ளேதியமறைநா லோதினனாகி,
யம்மெய்ப்பொருளொன் றவன் வருமுணரச், செம்மெய்ப்பொருளத் திருமறைவழங்க, வமைத்துளத்தெ
ழுந்த வாசையுட்டூண்டிச், சமைத்துளயாவருந் தாங்கசத்தருகென, வேவியதாக விப்பணியேற்றிநான்,
மேவியவைம்பொருள் விளக்கனுணர்ந்து, விரிவிலாத்தொன்னூல் விளக்கமெனும்பெயர்த், தரியவாசிரிய
ரருந்தமிழ்ச்சொல்விற், பிறநானமுடிந்தது பெயர்த்துடன்படுத்தியும், புறநான்முடிந்தது பொருத்தி
யுந்தானொரு, வழிநான்முடித்தனன் வாய்ப்பருமெய்ம்மறை, மொழிநாலத்தராய் முதிர்சிறப்பிவணயி,
லிரோமைநாட்டினின்றெய்தியமுனிவருள்,விநோதமொழிதயைமேவக, நேரமாதவத்தின்வீரமாமுனியே.

*என்பது* இவற்றுணூலின்பெயருமாக்கியோன்பெயருமாக்கிய காரணவகையுந்தரும்பொருளள
வுங் கொள்வோர்பயனுமென்றிவ்வைந்துமுப்படவிசூத்திரம் பொதுப்பாயிரமாகவம்மாமுனிமாணுக்க
ருணூலினெளியனெனு மன்பிலுயர்ந்தோ னுரைத்தவாறு காண்க.—என்வனையோவெனில்— நூலேநு
வல்வோ னுவலுந்திறனே, சொள்வோன்கோடற் கூற்றுமைந்து, மெல்லாநூற்கு மிவைபொதுப்பாயி
ரம். *எ-து* நன்னூன்மேற்சொ ஆகையில், விருத்தி. பெருங்கடல்சூழ்ந்த பூவுலகாதி மற்றுண்டாய
செல்வமுடைய வுலகங்களியாவைந் தானுளவாக்கவு நிலைபெறக்காக்கவு மழிவுறநீக்கவும் வல்லவனுகி யாதி
யுமந்தமுமளவுமொப்பு மெதிருமில்லாதவனு யெவ்வகைப்பொருளினு மேனின்றுயர்ந்த கடவுளொருவ
னைமற்றைத்தேவரைநீக்கித் தனியேபணிந்துபோற்றி மாவிராவிருவனீக்க விப்பூவுலகிற்றோன்றிய பரு
தியைப்போல மனவிருளாகிய வஞ்ஞானத்தைநீக்க வக்கடவுளோதித்தந்த வேதநூலையோதுங் குருவே
யாகி யம்மெய்க்கடவுளை யெவருமறிந்துவணங்கவு மவனேதந்தவேதநா லெர்க்கும்வழங்கவு மாசையே
மனத்துட்டூண்டி யேவியதாக விதுவேகாரணமெனத்தா னெழுத்துச்-சொற்-பொரு-ளியாப்-பணியெ
னவைந்திலக்கணப்பொருட்களைக் கல்லாதவருங்கண்டுணரும்படி தெளிவாகவிளக்சத் துணிந்ததைப் பற்
றித் தொன்னூல்விளக்கமென விந்நூற்பெயராகிப் பிறதமிழ்நாலோர் முன்னுரைத்தோதிய வற்றைத்
தானுடன்படுத்தியுந் தமிழ்ப்புறநாலோர் விதித்தவற்றுட்சிலதொன்பொருத்தியு மீண்டொருவழி நூலெ
ன முடித்துரைத்தாரிவராரோவெனின் மெய்யங்கடவுடந்த மெய்ம்மறைநாலிற்குருக்களாகச் செல்வவி
ரோமைநாட்டினின் றெழுந்தருண் முனிவருளொருவராகிய வீரமாமுனியென்பாரெனக் கண்டுணர்க. ஆ
கையினிவருஞ் சூத்திரவிதிப முறையின்விரிவு மம்மாமுனிதான் றரவே செவி வாயாகப்பருக நெஞ்சுகன்
ணுகவுணர்ந்துகொள்வது கல்விவிரும்பினர்கடனே, என்றவாறு. பதிசம் பாயிரம் முகவுரை ஒன்றும்(க)
பொதுப்பாயிரமுற்றிற்று.

## சிறப்புப்பாயிரம் எழுத்ததிகாரம்.

(க-ரு) சொன்னூலுடையாத் தொகைக்குணத்தொன்று, முன்னூறந்த முதல்வனைப்போற்றி, நன்
னூலாய்ந்தோர் நவின்றவைம்பொருட், டொன்னூல்விளக்கமுன சொற்றுதுமெழுத்தே.

*எ-து* சொல்லத்தகுமெந்நால்வகையானு மடையப்படாததேவகுணங்களியாவையுந் தொகுத்
துளனாகி மிக்காருமொப்பாருமின்றி யொன்றாய்நிற்குங் கடவுளிவனென முதனூலாகியவேத நாலைத்தந்
தமுதல்வனைப்பணிந்து நானேவழுவிலவுரைக்கவு மற்றவர்பயனுடுகெட்பவுந் துணைச்செயல்வேண்டி
யவனடி தலைமேலணிந்துபோற்றி முன்செந்தமிழ்நூற் கற்றோருரைத்த வெழுத்துச்சொற்பொருளியா
ப்பணி யெனவைம்பொருளிலக்கணங்களை விளக்கத்தொடங்கி முன்னீண்டெழுத்தியல்பின்னதென வு
ரைத்துக்காட்டுதுமாகையி விதுசிறப்புப்பாயிரம் என்வனைதெய்வவணக்கமுஞ்செய்பொருள் விளக்கமுஞ்
செப்புவதாகுஞ் சிறப்புப்பாயிரம். ஆதலாலிலக்கியவகையான் மூத்தோர்புதைத்தவரும் பயனுகியபொ
ருளைக் கண்டறிந்தெடுப்பதற் கிலக்கண நூலெவிளக்காம் விளக்குதலால் விளக்கென்னப்பட்டது ஒளிவி
டா மூடினதீபத்தாற் பயனில்லையென்றதுபோல முன்மேனூர்தந்த விலக்கணநூலெலாஞ் செந்தமிழ்ச்சி
றந்தமொழியோடு மூடிக்கிடப்ப விக்காலத் தவ்விளக்கொளியைக் காண்பாரில்லாததற் கொருபயனுமி
ல்லை தென்மொழியார்க்கு வடமொழியைத் தானுணர்த்தக்கருதியவர் முன்னறிந்த தமிழ்ச்சொற்கொண்
டல்லோ வடமொழிப்பயனை யுரைத்தல் வேண்டுமாகையான் மூத்தோர்புதைத்த நூனலம்விளங்கவுங்
கல்லாதவரும் பயன்கொண்டுணரவு நானேயதன்மேற்கவித்த போர்வை நீக்கியறிஞர் முன்கொளுத்தின
தீபமெவர்க்குமெறிப்பக் கையிலேந்தினாற்போல வவர்முன்செந்தமிழ் மொழியான்மறைத்த விலக்கண

நூலை யிலக்கணத்தமிழாயால் வெளிப்பொருள் க்க கிலைத்தேனுமிது முன்னோர்தந்தயாவையும் விரித்து நாத்தாவினாலும் பெருகிக்கண்டவருஞ் சித்துணியாமொன்று கருதிமுனமிகவறிய வேண்டுமதொன்றைத்தெரிந்து தருமேவனிறகு முவைத்து முற்றுமுன்னேதாபினை கொண்டுவருவதன்றியே பறக்கும் பருவமில்லாதபின்றுமே மேய்வனபறவையல்லோ வவ்வாறிங்ஙனநாலெழுத்தோர் சொன்னதை யவரவர்தழேகண்டு பிடிக்கவேண்டுவதைத மாத்திரம் விதிவிரித்துரைப்பேன தன்பின்முவைத்த சிறகைவிரித்து மேலபறந்து மேய்ந்தாற்போலவுந்தந்த பாசத்தைப்பற்றி மலையொத்துயர் மதயானையையேறிநடாத்தினாற்போலவுஞ் சிறியோர் தெப்பத்தைப்பிடித்துப் பெரும்வெள்ளத்தை நீந்தினாற்போலவுமிங்ஙன நான்றத்த வற்றைக்கொண்டு செந்தமிழ்ப் பெருங்கடனீந்தவு முழுகவுஞ் செய்துமுறறுவதெல்லாம் புகழ்ப்புலவர்புதைத்தப்பெரும்பயனவமணித்தாமெடுத்தணிவதேயெளிதாமங்ஙனமீண்டு நாமொருபுது நூலாயினுந்தொன்னூலிற் கொருபுதுவழி யாயினுங்காட்டுவதுணாரதுயர்ந்த முன்னோர்தந்த நூலவிளக்குதற் கருதிதெளிவுவேண்டி வேறுவேறுச்சூத்திரந் தரினுமெழுத்தோர் நரைத்த புற்பலவற்றையும் பொருத்துதுமயினுஞ் செந்தமிழுணர்ந்தோர் வழியேயன்றிப்புறனடையாய்ச் சிலவிகற்பம்புறநால் வழியேசென்றுகாட்டுதுமாகையான்முன்னோர் நாலினடையினும் விகற்பனடையினு மெழுத்துச்சொற் பொருளியாப் பணியெனவைந்திலக்கணங்களை யைந்ததிகாரமாக விண்டுபிரித்துக்கூறுதுங் கூறியநடையில் வழுவினுமுற்றறி துணர்ந்தோரிசைதன்பொடு தாங்கிக்கண்டவழுவிவன தீர்ப்பது, மீண்டைம்பொருளை யுரைத்தவழிபிழி வெனினுந் துணிந்தகருத்துநன்றென வொருவா திவற்றைக்கொள்வதுங்கடனே. எ-று. (க)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

---

# எழுத்ததிகாரம்.

## முதலாவதெழுத்தியல்.

(உ-சூ.) தோற்றமும்வகுப்புந் தோன்றும்விகாரமுஞ், சாற்றுளித்தோன்றுந் தானெழுத்தியல்பே

*எ-து.* எழுத்திலக்கணமாமாறுணர்த்துதும் எழுத்தின்றோற்றமும் வகுப்பும் விகாரமும் என்றிம்மூன்றனுள் எழுத்துவகைப்பாடெல்ல மடங்கும் என்வன தே ற்றமென்புளி எழுத்துப்பிறக்கு மிடமும் முறையும் எண்ணுமெனவும் வகுப்பென்புளி முதல்சார்புயிர்மெய்முதலியகூறுபாடெனவும் விகாரமென்புளி பதத்திலும புணர்பிலும் வருந்திரிபாக்சமுதலிய வேறுபாடெனவுந்தோன்றும். எ-று. உளி, எ-து. இடம். உழியென்பாருமுளர். (க)

(ங-சூ.) உயிரிடை,பினமிடமுரம்வலியுச்சிமெலியியை, முதலிடமாயிதழ் மூக்கணம்பன்று, வைந்துவிணபிடத்நா மக்காரப்பிறப்பே.

*எ-து* எழுத்தின்றோற்றமாமாறுணர்த்துதும் உதானவாயுவின்காரணமாக எழுத்தெல்லாம் பிறக்குமாயினும் அவற்றுட்பன்னிருயிர்க்கும் ஆறிடையினத்திற்கும் மிடறேமுதலிடமாகவும் ஆறுவல்லினத்திற்கும் நெஞ்சேமுதலிடமாகவும் ஆறுமெல்லினத்திற்கும் உச்சியேமுதலிடமாகவும் அன்றி உதடும் - மூக்கும் - அண்ணமும் - பல்லும் - நாவும் - எனவிவ்வைந்தேதுவணையிடமாகவும் எழுத்தெல்லாம்பிறக்குமென்றுணர்க. ஆயினும் இவற்றையும் எழுத்தின்முறையையும் எண்ணையும் உணர்த்துவ துறுயயன்றிப்பொழுதழிவாகையானும் இனிச்சிலவுரைப்பது முறையமென்றமையானும் இங்ஙன மவற்றைநீக்கி எழுத்தின்வகுப்பும் விகாரமுமெனுமற்றிரண்டையுமவிளக்கக்கூறுதும் இதன்விரிவைபுணரவேண்டில் தொல்காப்பியத்துட்காண்க அதனினும்விரிவு பேரசத்தியம் நன்னூல். எ-று. (உ)

முதலாவமெழுத்தின்றோற்றமுற்றிற்று.

---

## இரணடாவதெழுத்தின்வகுபபு.

(ச-சூ) முதல்சார்புயிரோ மூவினமெய்யே, முதற்கண்ணெழுத்தே மொழிமீற்றெழுத்தே, யுயிர்மெய் குறினெடிலோடொப்த, மாறுகுறுக்கமளபெடையிரண்டு, மாத்திரைப்புணர்பெனவகைப்படுமெழுத்தே

*எ-து* எழுத்தின்வகுப்பாமாறுணர்த்துதும் இம்முதற்சூத்திரத்துள்இனிச்சொல்லக் குறித்தவகையெல்லாந்தொகைப்படக்காட்டித்தனம் ஆகையிலவ்வவசூத்திரத்துள் அவ்வவற்றைமுறையேகாண்க. (க)

(ரு-சூ.) முதலெழுத்துயிரீராறுடன்மூவாறே, சார்பெழுத்துயிர்மெய் தனியாய்தத்தோ, டஃகிய இ உஐஔமவ்வாய்த, முயிரளபெற்றள பொருபஃதென்ப.

*எ-து.* முதல்சார்பெழுத்தாமாறுணர்த்துதும் தமிழெழுத்தெல்லா முதலெழுத்தெனவுஞ் சார்பெழுத்தெனவும் இருவகைப்படும் இவற்றுட் பன்னீருயிரும், பதினெண்மெய்யும், ஆசமுதலெழுத்தொருமுப்பதுமாம். சார்பெழுத்தோவெனில், உயிர்மெய்யும் ஆய்தமும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஐகாரக்குறுக்கமும் ஔகாரக்குறுக்கமும் மகரக்குறுக்கமும் ஆய்தக்குறுக்கமும் உயிரளபெடையும் ஒற்றளபெடையும் ஆகச்சார்பெழுத்தொருபஃதாகும் எ-று. முதலுக்கு, தலைமை பிரதானம் எ-ம். சார்புக்கு, தலைமையின்மை அப்பிரதானம். எ-ம். கூறுவர், எ-று. (உ)

(சு-சூ.) எ ஒவ்வும் றனழவ்வு மென்னைம்முதலி, முயிர்மெய்புயிரளபொழியெஞ்சார்பு, மந்தமிழ்க் குரிய வாரியமும்பிறவே.

*எ-து.* முன்சொன்னவற்றிற்குச் சிறப்புவிதி விகற்பித்துணர்த்துதும் கூறியமுப்பது முதலெழுத்துள்ளே எகர ஒகரங்களென இருகுற்றுயிரெழுத்தும் றனழவென மூன்றொற்றும் ஆகமுதலெழுத்தைந்தும கூறியபத்துச்சார்பெழுத்துள்ளே ஆய்தமும் ஒற்றளபும் ஆறுகுறுக்கமும் எனவெண்சார்பெழுத்துந்தமிழ்மொழிக்குரியன, அன்றியாரியமொழிக்குள்ளில்லன, சொன்னவிப்பதின்மூன்றொழித்தொழிந்த பத்துயிர்ட பதினைந்தொற்றென முதலெழுத்திருபத்தைந்து முயிர்மெய்யுயிரளபெடைச்சார்பெழுத்திரண்டுமாகத்தமிழிற்குமாரியத்திற்கும் பொதுவெழுத் திருபத்தேழென்றுணர்க, அன்றியுந்தென்மொழிக்கில்லனவாகி வடமொழிக்குரியவெழுத் தெத்துவணையோவெனில்ஆரியமொழியில்வழங்குமுயிர்பதினாறுள்ளும் மெய்ம்முப்பத்தேழுள்ளும் சொன்னபொதுவெழுத்தன்றி உயிராறும் ஒற்றிருபத்திரண்டுமாக வடமொழிக்குரிய வெழுத்திருபத்தெட்டெனக்கொள்க, இங்ஙனம் ஆரியமொழிகளைத் தமிழிடத்துரைக்குங்கால் பொதுவெழுத் தால்வரும்பதமே சிறப்புடைத்து அல்லனவருகல் சிறப்பன்றெனக் கண்டுணர்க. நன்னூல். றனழ எ ஒவ்வுமுயிர்மெய்யு முயிரளபல்லாச்சார்ட்டந்தமிழ்ப்பிறபொதுவே. எ-று. (௩)

(௭-சூ.) இடுகுறிகாரண மிவைபொதுச்சிறப்பென, வீரிரண்டாகு மெழுத்தின்பெயரே.

*எ-து.* தமிழில்வழங்குநாற்பதுவகை எழுத்திங்ஙனம் வேறுவேறுப்விளக்கா முன்னர் வழங்குமவற்றின்பெயரைக்கூறுதும் அவைநால்வகைப்படும் இடுகுறிப்பொதுப்பெயரும் இடுகுறிச்சிறப்புப்பெயரும் காரணப்பொதுப்பெயரும் காரணச்சிறப்புப்பெயருமென்றுணர்க, [உதாரணம்.] உயிரோ-உயிர்மெய்யே-உடம்பே-என்பன. இடுகுறிப்பொதுப்பெயர் அவற்றுள் அ ஆ க ங முதலிய இடுகுறிச்சிறப்புப்பெயர். குறில். நெடில் வல்லினம். மெல்லினம் இடையினம் முதலியகாரணப்பொதுப்பெயர், குற்றியலுகரங் குற்றியலிகரமுதலிய காரணச்சிறப்புப்பெயரெனக்கொள்க. ஆகையில் [உ-ம்.] நாகு-என்னுமொழியீற்றெழுத்து இடுகுறிப்பொதுப்பெயரால் உயிர்மெய் எ-ம். இடுகுறிச்சிறப்புப் பெயரால்-கு-எ-ம். காரணப்பொதுப்பெயரால்குற்றெழுத்து எ-ம். காரணச்சிறப்புப்பெயரால் குற்றியலுகரம்எ-ம். பிறவுமேற்கும் பெயரோடுவழங்கும். எ-று. (௪)

(௮-சூ) அம்முதலீராறுயிர் கம்முதன்மூவாறுடல், குறில் அ, இ, உ எ ஒவ்வைந்தேநெடில், ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வேழே.

*எ-து* உயிருமுடலுங் குறிலுநெடிலுமாமாறுணர்த்துதும் உயிரெழுத்துப்பன்னிரண்டு [உ-ம்] அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ. எம். மெய்யெழுத்தப்பதினெட்டு. [உ-ம்.] க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன். எ-ம். பன்னீருயிர்களுட்குற்றெழுத்தைந்து. [உ-ம்] அ இ உ எ ஒ எ-ம் நெட்டெழுத்தேழு [உ-ம்] ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எ-ம். வரும் உயிராய்வரினுமொற்றொடுத்துயிர் மெய்யாய் வரினுங் குறில் குறிலேநெடில் நெடிலேயாம். உயிருக்கு ஆவி-அச்சு-சுரம். எ-ம். மெய்க்கு, புள்ளி-உடல்-உடம்பு-ஒற்று-அல்-வியஞ்சனம்-எ-ம. குறிற்கு, குறில்-குறுமை-இரச்சுவம். எ-ம. நெடிற்கு, நெடில்-நெடுமை-தீர்க்கம்-எ-ம் கூறுவர். எ-று. (௫)

(௯-சூ) வலிகசடதபற மெலிஙஞணநமன, விடையயரலவழள வெனமூவினமே.

*எ-து* மூவினமாமாறுணர்த்துதும் முன்சொன்னபதினெட்டொற்றெழுத்து மூவினமாகவகுக்கப்படுமவை வல்லினமாறு. [உ-ம்] க் ச் ட் த் ப் ற் எ-ம மெல்லினமாறு [உ-ம] ங் ஞ் ண் ந் ம் ன், எ-ம். இடையினமாறு [உ-ம்] ய் ர் ல் வ் ழ் ள் எ-ம் வருமெனக்கண்டுணர்க வலிக்கு வலி-வன்மை-வன்கணம்-சப்பரிசம்-எ-ம் மெலிக்கு மெலி-மென்மை-மென்கணம் அநுநாசிகா பரிசம் எம். இடைக்கு இடை-இடைமை இடைக்கணம் அந்தத்தக்கரம்-யண் எ-ம். கூறுவர் எ-று: (௬)

(௰-சூ.) உயிர்கசதபஞநமவயமுதற்கே எ ஒ ஔவுமெல்லினஙவ்வு, நீத்துயிர்ணமனவிடையினமீறே

*எ-து*. முன்சொன்னமுப்பது முதலெழுத்துள்ளே மொழிமுதற்கண் வருமெழுத்துமொழியீற்றின்கண்வருமெழுத்தும் அவையிவையென்றுகாட்டுதும் பன்னீருயிரும் கம்முதலென்பதுயிர்மெய்யுமொழிமுதற்கண்வரப்பெறுமெனக்கொள்க [உ-ம்] அவல் ஆவல் இனம் ஈனம் உழி ஊழி எரி ஏரி ஐயம் ஒதி ஓதி ஔவியம் எ-ம். கனி சனி தனி பனி ஞமலி நதி மதி வதி யதி பிறவுமன்ன அன்றியுங்குற்றெகரங்குற்றொகர மௌகாரமொழிந்தொழிந்த வென்பதுயிரும் ண் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் எனவென்பதொற்றுமொழியீற்றின் கண்வரப்பெறுமெனக்கொள்க.[உ-ம்]பல-பலா-கரி-தீ-உரு-மகடூ-சே-கலை-ஓ,எ-ம். மண் கம் மின் மெய் சீர் பல் தெவ் கூழ் சள் எ-ம். பிறவுமன்ன அன்றியு மேவவிடத்து நொ எ-ம் து எ-ம். சௌ எ-ம். உரிஞ் எ-ம். பொருந் எ-ம் வருமெனக்கொள்க. யதி-எ-து, முனிவர் எ-று. (௭)

(௰௧-சூ) உயிரோமெய்யவணந்துயிர்மெய்யாகு மவையிரு நூற்றொருபத்தாறென்ப.

*எ-து* உயிர்மெய்யாமாறுணர்த்துதும் உயிருமெய்யுங்கூட்டிஉச்சரிக்கப்படாநிற்குமெழுத்தே உயிர்மெய்யெனப்படும். [உ-ம்.] க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ எ-ம். வரும் ஆகையிற் பன்னீருயிருமூவாறுமெய்யோடுறழ உயிர்மெய் இருநூற்றொருபதினாறென்ப அரைமாத்திரையாகிய மெய்யொடு ஒருமாத்திரையாகிய குற்றுயிரும் இரண்டுமாத்திரையாகிய நெட்டுயிரும் கூடி நின்றவழி ஒன்றரைமாத்திரையும் இரண்டரைமாத்திரையும் இசையாது உயிரளவாகிய ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையும் இசைப்பனவாம் ஒலிவடிவினும் வரிவடிவினும் முதலெழுத்தின்வேறாய் உயிரும்-மெய்யுங்கூடிப்பிளவுபடாதொலித்தலான் உயிர்மெய்யெனப்பெயராய்ச் சார்பெழுத்தினொன்றாயின ஒலிவடிவு செவிப்புலனறிதல். வரிவடிவு-கட்புலனறிதல். எ-று. (௮)

(௰௨-சூ.) நீட்டல்சுழித்தல், குறின்மெய்க்கிருபுள்ளி.

*எ-து.* எழுத்துவடிவமாமாறுணர்த்துதும், மெய்யின்வடிவும் உயிர்மெய்யின்வடிவும்பலமுறை

வேறுபடாமையானும்எகரம்-ஏகாரம். ஒகரம்-ஓகாரம். எப்போதும் ஒருவடிவாகையானும் மயக்கநீப்பது வேண்டி மேற்புள்ளிகொடுத்தார்புலவர், ஆகையில் குற்றெழுத்தின்மே னீண்டபுள்ளியும் ஒற்றெழுத்தின் மேற்சுழித்தபுள்ளியும் வருமென்றுணர்க. [உ-ம்] எரி-ஏரி, ஒதி - ஓதி, மண்மகள் - மண்கள், தரம்-தாம், கணமணி-கண்மணி, எ-ம். வரும். சூத்திரம். மெய்யினியற்கைப் புள்ளியொடுநிலைய, லெகரவொகரத் தியற்கையுமற்றே. எ-ம். கூறினர். எ-று. . . . . . . . . . . . ( ௯ )

(௰௩-சூ.) ஆய்தங்குறில்வலிக்காகுநடுவே, யஃதீற்றுலளத் திருந்துளியஃகும்.

*எ-து.* குறுகாதவாய்தங்குறுகியவாய்தமாமாறுணர்த்துதும் ஆய்தங்குற்றெழுத்திற்கும் உயிரொடுபுணர்ந்த ஆறுவல்லெழுத்திற்கும் நடுவேவரப்பெறும் இதனுருவொவெனில் முப்புள்ளிவடிவு இது மெய்யெழுத்தின் றன்மைத்தாவதன்றி அதன்மேலுயிரேறப்பெறுதெனக்கொள்க. [உ-ம்.] எஃகு கஃசு கஃடு பஃது கஃபு கஃறு எனவரும். இவ்வாறுடன் அஃகடிய எனப்புணர்ச்சிவிகாரத்தால்வருமாய்தமும் அஃகான் எனச்செய்யுள் விகாரத்தால்வருமாய்தமுங்கூடி எட்டாதல்காண்க. அஃகேனம் தனி நிலை புள்ளி ஒற்று ஆய்தம் எனினுமொக்கும் இவ்வாறுவருதல் குறுகாதவாய்தம் அன்றியும் ஈற்று லகார ளகாரங்கள் தவ்வொடுபுணருங்கால், திரியும் திரிந்தவழியின் ஆய்தம்வரும் வரினுங்குறிகி ஆய்தக்குறுக்கமாகும் [உ-ம்.] கல் தீது கஃறீது முள் தீது முஃடீது எ-ம். வரும் ஆய்தமென்றதுடுகுறிப்பெயர் முதலெழுத்துமுப்பதினொன்றல்லாது வேறுய் நிற்றலானும் உயிர்போலத்தனித்தொலியாதுமாய் மெய்போல உயிரேறப்பெறுதுமாய்முதலெழுத்தாந்தன்மை எய்தாமையானும் இருமருங்கும்வருமெழுத்தை ச்சார்ந்தொலித்தலானுஞ் சார்பெழுத்தினொன்றாயின. எ-று. . . . . . . ( ௰ )

(௰௪-சூ.) யம்முதலிய்யா மிருகுறளுக்கெடி, லஃகுமற்று மசைச்சொன்மியாவே,

*எ-து.* குற்றியலிகரமாமாறுணர்த்துதும். நிலைமொழிக் குற்றியலுகரத்தின்முன்னே வருமொழிமுதற்கண் யகரம் புணர்ந்துகெடுமிகரமும் முன்னிலையசைச்சொல்லாகிய மியாவெனு மொழியில்வந்த மிகரமும் குற்றியலிகரமாகும் [உ-ம்] நாகியாது, ஈறியாது, நாடியாது, தேசியாது, ஐதியாது, கோடியாது, என நெடிற்றொடர்மொழிக்குற்றியலிகரமேழும் எஃகியாது என ஆய்தத்தொடர்மொழிக்குற்றியலிகரமொன்றும் - வரகியாது - பலாசியாது - குழலினிதியாழினிது - பாவிறியாது - உருபியாது - அருபியாது - வானேறியாது - ஓணியாது - செங்கோடியாது, என உயிர்த்தொடர்மொழிக் குற்றியலிகரம் பதினொன்றும் கொக்கியாது-கச்சியாது-பட்டியாது-முத்தியாது - செப்பியாது-பற்றியாது, என வன்றொடர்மொழிக் குற்றியலிகரமாறும் சங்கியாது - மஞ்சியாது - துண்டியாது-பந்தியாது-அம்பியாது-கன்றியாது,எனமென்றொடர்மொழிக்குற்யலிகரமாறும் நொய்தியாது-சார்பியாது - சால்பியாது-மாழ்கியாது-தெள்கியாது,என இடைத்தொடர்மொழிக்குற்றியலிகரமைந்தும் கேண்மியா-சென்மியா-என மியாவெனுமசைச்சொல்லி மிகரமொன்றும் ஆகமுப்பத்தேழும்வந்தன. சூத்திரம் வல்லெழுத்தாறூ டெழுவகையிடத்து, முகரமவையாம் யகரமோடியையி, னிகரங்குறுகு மென்மனார்புலவர் *எ-து* குற்றியலுகரந்திரிந்த இகரமாறும் மியாவென்னுமசைச்சொலி மிகரமொன்றும் ஆகக் குற்றியலிகரம் ஏழேயாயினும் இடமும் பற்றுக்கோடுஞ்சார்ந்து முப்பத்தேழாயின. இசரந் தன்மாத்திரையிற் குறுகி ஒலித்தலின்காரணத்தால் முதலெழுத்தினொன்றின்வடிவின் வேறுய்க் குற்றியலிகரமெனப்பெயரஞ் சார்பெழுத்தினொன்றாயின. நன்னூல். யகரம்வரக்குற ளுத்திரியிகரமு, மசைச்சொன்மியாவி னிகரமுங்குறிய. எ-து. மேற்கோள். எ-று . . . . . . . . . . . ( ௰௧ )

(௰௫-சூ.) தனிக்குறிலல்லவற் றிறுதிவன்மை, யூர்ந்துளிக்குறுகு முகரமென்ப, தொடருயிருக்குறடைத்துனும்யவ்வரின், உ இயாஞ்சில முற்றுகரமுமற்றே.

*எ-து*குற்றியலுகரமாமாறுணர்த்துதும் தனிநெடிலேழும் ஆய்தமொன்றும் மொழியிடையிறுதிகளில்வரப்பெறுத ஔகாரமொழித்தொழிந்த உயிர்பதினொன்றும் வல்லெழுத்தாறும் மெல்லெழுத்தாறும் வல்லெழுத்துக்களோடு தொடராதவகரமொழித்தொழிந்த இடையெழுத்தைந்தும் ஆகியமுப்பத்தாறெழுத்தினுள் யாதானுமொன்று ஈற்றுக்கயலெழுத்தாய்த் தொடரப்பட்டு மொழியிறுதிக்கண் வல்லாறனுள் யாதானுமொன்று பற்றுக்கோடாக அதவனையூர்ந்துவருமுகரந்தன் மாத்திரையிற்குறுகும். அதுகுற்றியலுகரமாம். [உ-ம்] நாகு ஈறு நாடு தேசு ஐது கோடு சௌடு என நெடிற்றொடர்மொழிக்குற்றுகரமேழும் எஃகு என ஆய்தத்தொடர்மொழிக்குற்றுகரமொன்றும் வரகு டலாசு பரிசு பாவிறு உருபு அருபு வானேறு ஓணாது என உயிர்த்தொடர்மொழிக்குற்றுகரம் பதினொன்றும் கொக்கு கச்சு பட்டு முத்து செப்பு பற்று என வன்றொடர்மொழிக்குற்றுகரமாறும் சங்கு பஞ்சு துண்டு பந்து அம்பு கன்று என மென்றொடர்மொழிக்குற்றுகரமாறும் நொய்து சார்பு சால்பு மாழ்கு தெள்கு என இடைத்தொடர்மொழிக்குற்றுகாமைந்தும் ஆசமுப்பத்தாறும்வந்தன. சூத்திரம் நெடிலேதுறிலிணை குற்றெடிலென்றிவை, யொற்றொடுவருதலொடு குற்றொற்றிறுதியென், றேழ்குற்றுகரக்கிடனெனமொழிப. எ-ம். எழுவகையிடத்துங்குற்றிய லுகரம்வழுவின்றிவருஉம் வல்லாறூர்ந்தே. எ-ம் கூறினர் நுந்தமெயனுமுன்றபெயருசாமுந்துறுகும். அன்றியும் ஆறுவல்லினத்தோடீற்றுசாம் தனிக்குறிலிணைந்துவரின்குறுகாது [உ-ம்.] எகு பசு நடு விது வபு மறு எனவிவைவல்லினத்தோடு கூடியவீற்றுகரமாயினும் தனிக்குறிலிணைந்தமையால் குற்றிய லுகரமல்லன முற்றிய லுகரமாம் நன்னூல் நெடிலோடாய்தமுயிர்வலிமெலியிடை தொடர்மொழியிறுதி வன்மையூருகர மஃகும்பிறமேற் றொடாவும் பெறுமே. எ-து. மேற்கோள் வபு எ-து. உடல் அன்றியுங்குற்றிய லுகரத்தின்கீழ் உயிர்வரினுகரங்கெட்டுபின்றவொற்றின்மேல்வருமுயிரோறவும்யவ்வரினிய்யாகி அவ்வாறுகவுமிங்ஙனமொரொவிடத்து முற்றிய லுகாமும்

இவ்விருவழியாற் கெடவுமாமெனக்கொள்க. [உ-ம்.] காடவர்ந்தது-வண்டிமிர்ந்தன, எ-ம். சோட்டியாவளை-குழலினிதியாழினிது எ-ம் இருவழிக்குற்றியலுகரங்கெட்டன. தெளிவரிது-கதவடைத்தான், எ-ம். அறிவியாது-விழவியாழ்,எ-ம். இருவழிமுற்றுகரங்கெட்டன. ஆயினுந்தனிக்குறிற்சேர்ந்த முற்றியலுகரம் எவ்வழியானுங் கெடாதெனக்கொள்க. [உ-ம்.] கடுவுண்டான்-மதுவருந்தினான், எ-ம். நடுயாமம்-இப்பசுயாது, எ-ம். இருவழித்தனிக்குறின்முற்றிய லுகரங்கெடாதனபிறவுமன்ன.—நன்னூல்,உயிர்வரினுக்குறண்மெய்விட்டோடும். எ-ம் உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே. எ-ம். யவ்வரினிய்யாம் எ-ம். மேற்கோள் அன்றியும் சில்முற்றுகரமுமற்றேறயென்றமையால் [உ-ம்.] பானு உதையம்,பானுதையம் எ-ம். வரும். இடமும்பற்றுக்கோடுஞ்சார்ந்து உகரந்தன் மாத்திரையிற்குறுகி ஒலித்தலின்காரணத்தான்முதலெழுத்தினொலிவடிவின் வேறுய்க்குற்றிய லுகரமெனப்பெயராய்ச்சார்பெழுத்தினொன்றாயின. எ-று. (௰௨)

(௰௬-சூ.) ஐத்தனித்தளபெடுத்தன்றிமூவிடத்து, மௌவுமுதலிடத்தஃகுமென்ப.

*எ-து.* ஐகாரக்குறுக்கமுமௌகாரக்குறுக்கமுமாமாறுணர்த்துதும் ஐகாரந் தனிநின்றவிடத்துமளபெடுத்தவிடத்துங்குறுகாமன்மற்றைமொழிமுதலிடைகடைவரின் றன்மாத்திரையிற்சுருங்கி ஐகாரக்குறுக்கமெனப்படும்.[உ-ம்]ஐப்பசி-மொழிமுதலும், மடையன்-மொழிக்கிடையும், குவளை-மொழிக்கடையும் குறுகினவாறுகாண்க. ஔகாரமுமொழிமுதலிடத்துக்குறுகும். [உ-ம்.] ஔவியம்-சௌவை எ-ம். வரும்—சூத்திரம். அளபெடைதனியிரண்டல்வழி ஐஔ,வுளதாமொன்றனைதனிமையுமாகும். எ-ம். கூறினர், ஐகாரஔகாரக்குறுக்கமும் ஒவ்வொன்றேயாயினும் இடவகையால் ஐகாரக்குறுக்கமூன்றும் ஔகாரக்குறுக்கமொன்றுமாம், ஐகாரம் ஔகாரம் இடஞ்சார்ந்துதன்மாத்திரையிற்குறுகி ஒலித்தலின்காரணத்தால் முதலெழுத்தினொலிவடிவின்வேறுப் ஐகாரஔகாரக்குறுக்கமெனப்பெயராய்ச்சார்பெழுத்தினொன்றாயின. எ-று. (௰௩)

(௰௭-சூ.) மகரம்வளக்கீழ், வம்மேற்குறுகும்.

*எ-து.* மகரக்குறுக்கமாமாறுணர்த்துதும், இனிச்சொல்லும்படிலளத்திரிந்து னணவாகியபின் மகரம்வரினது குறுகும். [உ-ம்.] போலும்-மருளும்,என்பதற்கு-போன்ம்-மருண்ம்-என்பதாம்,என்னெனில் அம்மகரங் கான்மாத்திரையாகக் குறுகிநிற்கும். [உ-ம்.] சிதையுங்கலத்தைப்பயினாற்றிரிந்துந் திசையறியுமீகானும் போன்ம், எ-ம் வெயிலியல்வெஞ்சுரமையநீயெய்தின், மயிலியன்மாதுமருண்ம். அன்றியுமகரவீற்றுமொழியின்கீழ் வகரம்வரின்மகரங்குறுகும் [உ-ம்] மரம்வளர்ந்தது-சமம்விரிந்தது, எ-ம். வரும் மகரக்குறுக்கமொன்றேயாயினும் இடவகையான்மூன்றாகும், இடமும்பற்றுக்கோடுஞ்சார்ந்து மகரந்தன் மாத்திரையிற்குறுகி ஒலித்தலின்காரணத்தால்முதலெழுத்தினொலிவடிவின்வேறுய் மகரக்குறுக்கமெனப் பெயராய்ச்சார்பெழுத்தினொன்றாயின. எ-று. (௰௪)

(௰௮-சூ.) உயிர்நெடிலினக்குறிலுற்றளபெடுக்கு, மொற்றளபெழும்வேறுற்றுக்குறிற்கீழ், ஙியைந்துரழவொழியிடைமெலியாய்தம்

*எ-து* அளபெடையாமாறுணர்த்துதும். உயிரளபெடை ஒற்றளபெடையெனவிருவகைப்படும், அவற்றுள் உயிரளபெடையாவது, ஓசையுமளவும்பெறுவதுவேண்டி மொழியின்முதலேயிடையேகடையேநின்ற நெட்டெழுத்தெல்லாநீளப்பெறுமப்பொழுதொவ்வொன்றற்கினமாகியகுற்றெழுத்து வந்த அளபிற்குக்குறியாகநிற்கும் இவ்வாறுநெட்டெழுத்தேழுமளபெடுக்கும் அப்போததற்கதற்கினமாவன. ஆ அவ்வும்,ஈ இவ்வும்,ஊ உவ்வும்,ஏ எவ்வும்,ஐ இவ்வும்,ஓ ஒவ்வும்,ஔ உவ்வும், எனவினமாகும் [உ-ம்] ஆஅ-ஈஇ-ஊஉ-ஏஎ-ஐஇ-ஓஒ-ஔஉ-எனமொழிமுதலினும் படாஅசை-பரீஇசம்-கொடூஉரம்-படோஒகம் சடைஇயம் - புரோஒசை- என மொழிக் கிடையினும். கறாஅ - குரீஇ - மரூஉ - விலேஎ - அசைஇ - அரோஒ, என மொழிக்கடையினும் உயிர் அளபெடுத்துவந்தன, இவைசெய்யுட்கண்வருவன அவைவருமாறு [உ-ம்]ஓஒதல்வேண்டுமொளிமாழ்குஞ்செய்வினை,யாஅதுமென்னுமவர்.உறாஅர்க்குறுநோயுரைப்பாய் கடலைச,செறாஅஅய்வாழியநெஞ்சு. அனிச்சப்பூக்கால்களையாள்பெய்தாணுசுப்பிறகு, நல்லபடாஅபறை என. முறையேமொழிமுதலிடைகடைமூவிடத்தளபெடுத்தன. அன்றியும் ஔகாரம்மொழிக்கிடையினுங் கடையினும்வாராமையானும் அவ்விடங்களில் அதுநீங்கலாகி அளபெடுக்கும் அளபெடைபத்தொன்பதுடனேகெடுப்பதூஉங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றுங்கே, யெடுப்பதூஉமெல்லாமழைஎன. இன்னிசைநிறைக்கவருமளபெடையும், உரனசைஇயுள்ளந் துணையாகச்சென்றார், வரனசைஇயின்னுமுளேன், எனச்சொல்லிசைநிறைக்கவருமளபெடையுங்கூடி இருபத்தொன்றுதல்காண்க. முதலெழுத்தினொலிவடிவினும் வரிவடிவிற்குறியினும்வேறுய் நெட்டுயிர் தன்மாத்திரையினீண்டளபெடுத்தலின் காரணத்தானுயிரளபெடையெனப்பெயராய்ச்சார்பெழுத்தினொன்றாயின—சூத்திரம் தனிநிலைமுதனிலையிடைநிலையீறென, நால்வகைப்படூஉமளபாய்வருமிடனே எ-ம். குன்றிசைமொழிவயினின்றிசைநிறைக்க,நெட்டெழுத்திம்பரொத்தகுற்றெழுத்தே, ஐஔவென்னுமாயீரெழுத்திற், கிகரவுகரமிசைநிறைவாகும். எ-ம். கூறினர்—நன்னூல் இசைகெடின்மொழிமுதலிடைகடைநிலைநெடி,லளபெழுமவற்றவற்றினகுறில்குறியே. இவைமேற்கோள். இசைகெடினும் இசைகெடாவிடினும் வழக்கச்சொல்லிடத்து முயிரளபெடைவழங்குமென்றுணர்க. அன்றியும் ஒற்றளபெடையாவது மெல்லினமாறும் ரழவொழித்தொழிந்த இடையினநான்கும் ஆய்தமும் இருகுற்றெழுத்தின்கீழும் ஒருகுற்றெழுத்தின்கீழும் மொழியினிடையினுங் கடையினுநின்றளபெடுக்கும். எடுத்தவளபிற்குக்குறியாக இரட்டித்துவரும் [உ-ம்] அங்ங்சம்-முஞ்ஞ்சு-மாண்ண்டு-பருந்ந்து-அரும்ம்பு-மான்ன்று-காவ்வ்வை-அரைய்ய்யர் - சால்ல்கள்-திரள்ள்கல-வரஃஃகு-என இருகுற்றெழுத்தின் கீழிடையினும்-மங்ங்கலம்-மஞ்ஞ்சு-மண்ண்ணு-பந்ந்து - அம்ம்பு-

மின்ன்னு-தெவ்வ்வர்-வெய்ய்யர்-செல்ல்க-கொள்ள்க-எஃஃகு, என ஒருகுற்றெழுத்தின் கீழிடையினும், மடங்ங்-உரிஞ்ஞ்-அரண்ண்-பொருந்ந்-கனம்ம்-பரன்ன்-பகல்ல்-திரள்ள், என இருகுற்றெழுத்தின்கீழ்க்கடையினும்-நங்ங்-நஞ்ஞ்-கண்ண்-நந்ந்-அம்ம்-பொன்ன்-தெவ்வ்-செய்ய்-கல்ல்-வள்ள், என ஒருகுற்றெழுத்தின் கீழ்க்கடையினும் ஒற்றளபெடுத்துவந்தன இவைசெய்யுட்கண்வருவன அவைவருமாறு [உ-ம்.] இலங்ங்குவெண்பிறைசூடீசனடியார்க்குக், கலங்ங்குநெஞ்சமிலைகாண். எங்ஙிறைவனுளனென்பாய்மனனேயானெங்ஙனெனத்திரிவாரின், மடங்ங்கலந்தமனனேகளத்து, விடங்ங்கலந்தானைவேண்டு அங்ங்கனிந்தவருளிடத்தார்க்கன்புசெய்து, நங்ங்களங்கறுப்பாநாம். என முறையே குறிலிணைக்கீழ் குறிற்கீழ் இடையினுங் கடையினும் நான்கிடத்தளபெடுத்தன, அன்றியும் ஆய்தம்-குறிலிணைக்கீழ்க்குறிற்கீழ்க்கடையில்வாராமையானும் அவ்விடங்களில் அதுநீங்கலாகி அளபெடுக்குமளபெடைநாற்பதுடனே விலஃஃகு விங்கிருளோட்டுமேமாதரிலஃஃகுமுத்தினினம். எஃஃகிலங்கியகையராயின்னுயிர், வெஃஃகுவார்க்கில்லை வீடு, என குறிலிணைக்கீழ்க்குறிற்கீழிடையில்வந்த அளபெடையுங்கூடி நாற்பத்திரண்டாதல்காண்க. ஆயினும் ஒற்றளபெடைசெய்யுளிடத்தேயன்றிப்பெறாதெனக்கொள்க—சூத்திரம் வன்மையொடுரஃகானழஃகானொழித்தாங், கன்மையாய்தமேமாடளபெழுமொரோவழி. எ-ம். கூறினர்—நன்னூல். ஙஞணநமனவயலளவாய்த, மளபாங்குறிலிணைக்குறிற்கீழிடைகடை, மிகலேயவற்றின்குறியாம்வேறே. இவை. மேற்கோள். ஆய்தம். உயிர்க்குறிலும். உயிர்மெய்க்குறிலும். இருமருங்குநின்றெழுப்ப இருசிறகினுமெழும்பறவையினுடல்போல எழுந்தொலித்தலால் இருதிக்கண்விலக்கினர். ஒற்றுத்தன்மாத்திரையினீண்டளபெடுத்தலின் காரணத்தான்முதலெழுத்தின்ஒலிவடிவினும். வரிவடிவிற்குறியினும்வேறாய். ஒற்றளபெடையெனப்பெயராய்ச்சார்பெழுத்திலொன்றாயின. அளபெடைக்கு. அளபு. புலிதம். எ-ம். கூறுவர். எ-று. (௰௫)

(௰௬-சூ.) கண்ணிமைகைந்நொடிகாட்டுமாத்திரையி, லஃகியமவ்வுமாய்தமுங்காலே, உஇக்குறளொற்றுப்தமரையே, குறிலேஐஔக்குறளொற்றளபொன்றே, நெடிலிரண்டுயிரளபொருமூன்றென்ப.

*எ-து.* மாத்திரையாமாறுணர்த்துதும். கண்ணிமையும் கைந்நொடியும். எழுத்தின்மாத்திரைக்களவாம். இவ்வளவின்றன்மையால். ஆய்தக்குறுக்கமும். மகரக்குறுக்கமும். கான்மாத்திரை. ஒற்றும். குற்றியலிகரமும். குற்றியலுகரமும். ஆய்தமும் அரைமாத்திரை. குற்றெழுத்தும். ஐகாரக்குறுக்கமும். ஔகாரக்குறுக்கமும். ஒற்றளபெடையும். ஒருமாத்திரை. நெட்டெழுத்து. இரண்டுமாத்திரை. உயிரளபெடை மூன்றுமாத்திரைபெறுமெனக்கொள்க.—சூத்திரம். உன்னல்காலேயூன்றலரையே, முறுக்கன்முக்கால் விடுத்தலொன்றே. எ-ம். கூறினர். அன்றியும். செய்யுட்கண்வேண்டுமிடத்து குற்றியலிகரமும். குற்றியலுகரமும் உயிராகவெண்ணுதிருக்கவும். ஒற்றளபெடைவேண்டுமிடத்து. உயிர்மெய்போல. குற்றெழுத்தாகவெண்ணவும். உயிரளபெடைநெட்டெழுத்தாகவும். குற்றெழுத்தாகவும். எண்ணவும்படும். [உ-ம்.] குறள். குழலினிதியாழினி தென்பர்தம்மக்கண். மழலைச்சொற்கேளாதவர். இதனுள். இயாழ். என்னுங்குற்றியலிகரம் எண்ணப்படாதென்க. எஃஃகிலங்கியகையராயின்னுயிர், வெஃஃகுவார்க்கில்லைவீடு. இதனுள். ஈராய்தம்வந்த வொற்றளபெடை. எண்ணப்படாதென்க. கற்றதிலாயபயனென்கொல் வாலறிவ, னற்றாடொழாஅரெனின். இதனுள். உயிரளபெடை ஈரெழுத்தாக எண்ணப்பட்டதென்க. வேண்டுமிடத்து எண்ணப்படாமையும்பெறும்.—யாப்பருங்கலம். தவிர்சீர்வண்ணந் தாங்கெடவரினே, குறுகியவிகரமுங் குற்றியலுகரமு, மளபெடையாவியுமலகியல்பிலவே எ-து மேற்கோள். எ-று. (௰௬)

(உ௰சூ) முதலீற்றுயிரிருமொழியேசேர்புளி, இஈஎஐயீறியையுட்யவ்வே, மற்றையுயிர்க்கீழ்வகரம்புணரும்

*எ-து.* புணர்பெழுத்தாமாறுணர்த்துதும். உயிரான்முடிந்தசொல்லும். உயிரான்றுவக்கினசொல்லுந்தம்முட்புணருங்கால் அவ்விரண்டுயிர்நடுவே ஓரொற்றிசைத்தல்வேண்டும் இசைப்படுமெழுத்தேபுணர்பெழுத்தெனப்படும். இ ஈ எ ஐ என்னு நிலைமொழி உயிரீற்றின்முன்வருமொழியன்னீருயிரும்புணரில் யகரவுடம்படுமெய்யாம். அ ஆ உ ஊ ஒ ஓ ஔஎன்னு நிலைமொழிஉயிரீற்றின்முன் வருமொழியன்னீருயிரும்புணரில். வகரவுடம்படுமெய்யாம். ஏகாரவீற்றின்முன்பன்னீருயிரும்புணரில். இவ்விருவியும்பெறும். [உ-ம்.] மணி அழகு, மணியழகு. தீ எழுந்தது, தீயெழுந்தது. சே அழகு, சேயழகு. கை அழகு, கையழகு. எ-ம் மர இலை, மரவிலை. பலா இலை, பலாவிலை. கடு இது, கடுவிது. பூ இதழ், பூவிதழ். தே அடிமை, தேவடிமை. சோ அழகு, சோவழகு. கௌ எகினன், கௌவெகினன். எ-ம். அரசனே அவன், அரசனேயவன். அரசனே அவன், அரசனேவவன். எ-ம். வரும்—நன்னூல். இஈஐவழியவ்வுமேனை, யுயிர்வழிவவ்வு மேமுனிவ்விருமையு, முயிர்வரினுடம்படுமெய்யென்றாகும் எ-து. மேற்கோள். எ-று. (௰௭)

இரண்டாவதெழுத்தின்வகுப்புமுற்றிற்று.

## மூன்றுவதெழுத்தின்விகாரம்.

(உ௪-சூ.) திரிபழிவாக்கந்திரட்டுநால்விகாரம்.

*எ-து.* விகாரமாமாறுணர்த்துதும். பதத்தோடுபதம்புணருங்காற்சந்திகாரணமாகப் பன்முறைநிலைப்பதவீற்றெழுத்தாயினும்வரும்பதமுதலெழுத்தாயினும்பலவிடத்தொருப்பட இரண்டும்வேறெழுத்தாகத்திரிதலுமுற்றுங் கெடுதலுமாகும். பன்முறையிருபதாடுமே ஆக்கமாக ஓரெழுத்துமிகலுமாம். இம்மூவிகாரமன்றியுஞ்சிலமுறைஇருபதமொருபதமாகத்திரண்டுகலப்புளிச்சிலவெழுத்து அவ்வழிவிகாரப்படுமெனக்கொள்க. இவற்றுள், திரிதல் ஆதேசம். எ-ம். கெடுதல். உலோபம். எ-ம். மிகுதல். ஆகமம். எ-ம். கல

த்தல். சங்கிரணம். எ-ம். வடமொழியானேவழங்கும். தொகைப்படச்சொன்ன. இந்நாலெழுத்தின் விகாரம்வகைப்படவிளங்குதற்கல்வழிப்பொருளுஞ்வேற்றுமைப்பொருளுஞ்விளக்கல்வேண்டும். எ-று. (க)

(உஉ-சூ.) அல்வழிவேற்றுமையாமிரண்டவற்றுள், விரியினுமுருமெபடாவிவினைசார்பெயரோ, யல்வழிப்பொருட்பெயராகுமென்ப, வேற்றுருபில்லதுவிரிக்குங்காலை, வேற்றுமைக்கொளினது வேற்றுமைப்பொருளே.

*எ-து.* அல்வழியுஞ்வேற்றுமையுமாமாறுணர்த்துதும். வினைச்சொற்சார்ந்த முதற்பெயராகி விரியினும் வேற்றுமைஉருபுபெறாதுநிற்கும் பெயரோஅல்வழிப்பொருட்பெயர். எ-ம். முன்னேவேற்றுமைஉருபு கொள்ளாதாயினுஞ்விரிக்குங்காலைவேற்றுமை உருபுகொண்டுவருஞ்பெயரோவேற்றுமைப்பொருட்பெயர். எ-ம். கொள்க. [உ-ம்.] விதியைவிளக்குங்கல்லெடுத்தான்-கல்வீடு-கல்லியல்பு-என்பவற்றுளுருபுதோன்றாதாயினும்பொருளைவிரித்தாற்.கல்லையெடுத்தான்.கல்லாலாயவீடு. கல்லினதியல்பென்றவ்வுருபுகூட்டவேண்டினமையால் இதிலேகல்லென்னுஞ்சொல்வேற்றுமைப்பொருட்பெயரெனப்படும். அவ்வுருபுதோன்றாதுங்கூட்டாமலும்விரித்துரைக்கப்படும்பெயர் அல்வழிப்பொருட்பெயரெனப்படும். [உ-ம்.] கல்சிறிது கல்லுயர்ந்தது. இதிலேகல்லென்னுஞ்சொல்அவ்வுருபில்லாமையானும் பொருளைவிரிக்க அவ்வுருபுகூட்ட வேண்டாமையானும் அல்வழிப்பொருட்பெயரெனப்படும். அன்றியும் [உ-ம்.] பொன்னுடையான். என ஐ.உருபுதொக்கியும், பொன்வ்னையுடையான், என விரிந்தும். கல்லெறிந்தான், என ஆல்.உருபுதொக்கியும். கல்லாலெறிந்தான், என விரிந்தும். கொற்றன்மகன், என, கு. உருபுதொக்கியும். கொற்றற்குமகன், என விரிந்தும். மலைவீழருவி, என இன்.உருபுதொக்கியும். மலையின்வீழருவி, என விரிந்தும். மலைபினுச்சி, என அது.உருபுதொக்கியும், மலையினதுவுச்சி, என விரிந்தும் மலைமுழை, என கண் உருபுதொக்கியும். மலைக்கண்முழை, என விரிந்தும்.வேற்றுமைப்புணர்ச்சி ஆறும்வந்தன. அன்றியும் [உ-ம்] கொல்யானை-என வினைத்தொகையும். கருங்குதிரை என பண்புத்தொகையும். ஆயன்சாத்தன், சாரைப்பாம்பு. என இருபெயரொட்டுப்பண்புத்தொகையும். பொற்சுணங்கு, என உவமைத்தொகையும். இராப்பகல், என உம்மைத்தொகையும். பொற்றொடி, என அன்மொழித்தொகையும் கொற்றன் கொடுத்தான், என எழுவாய்த்தொடரும். கொற்றா சொல், என விளித்தொடரும், உண்ட சாத்தன், என பெயரெச்சத்தொடரும். உண்டுவந்தான், என வினையெச்சத்தொடரும் குண்டுகட்டெருமை, என குறிப்புவினைமுற்றுத்தொடரும். உண்டான்சாத்தன், என தெரிநிலைவினைமுற்றுத்தொடரும். அதுமற்றம்ம, என இடைச்சொற்றொடரும். நனிபேதை, என உரிச்சொற்றொடரும். நெருப்பு, நெருப்பு, என அடுக்குத்தொடரும். கூடியதொகைநிலை ஐந்தும். தொகாநிலை ஒன்பதும் ஆகிய அல்வழிப்புணர்ச்சி பதினான்கும் வந்தன. இவ்விருவழியிலும், தழாத்தொடருஞ்சிலவுண்டெனக்கொள்க. அவ்வவருமாறு, கைக்களிறு. எ-து. கையையுடையகளிறு, என விரிக்கப்படுதலால் கை எ-து. களிறு என்பதைத்தழுவாமையால் இப்படிவருகின்றவைகளெல்லாந் தழாத்தொடரசிய வேற்றுமைப்புணர்ச்சியாம். சுனையாழவம்மி மிதப்ப, எ-து. சுனைமிதப்ப அம்மியாழ எனக்கூட்டப்படுதலால் சுனை, எ-து. ஆழ என்பதையும். அம்மி, எ-து. மிதப்ப. என்பதையுந் தழுவாமையால் இப்படிவருகின்றவைகளெல்லாந் தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சியாம். (சொல்லில், வேற்றுமையிலக்கணம் விரித்துக்கூறுதும்,) எ-று. (உ)

(உங-சூ) வலிவரின்மஃகான்வருக்கமாகு, நவ்வரின்றனிக்குறின்மவ்வுநவ்வா,மவ்வழியன்றிமகரங்கெடுமே.

*எ-து* மகரவிகாரமாமாறுணர்த்துதும். ஈற்றுமகரத்தின்கீழ் கசத. மொழிக்குமுதல்வரின் இவற்றிற்கினவெழுத்தாக மகரந்திரிந்துமுறையே ங்ஞ்ந். என அதற்கதற்குவருக்கவெழுத்து வருமெனக்கொள்க [உ-ம்] மனம். களித்தது. மனங்களித்தது. எ-ம். மனம். சலித்தது. மனஞ்சலித்தது. எ-ம் மனம். தளர்ந்தது மனந்தளர்ந்தது. எ-ம். பிறவுமன்ன. அன்றியும். ஈற்றுமகரத்தின்கீழ் நம்முதல்வந்தால் அம்மகரங்கெடும். [உ-ம்.] மனம். நலம். மனநலம் எ-ம். முகம் நிறம். முகநிறம். எ-ம். பிறவுமன்ன. அன்றியுமகரவீற்றுமொழிதனிக்குறிலாயின்மகரந்திரிந்துநகரமாம் [உ-ம்.] வெம் நீர். வெந்நீர். எ-ம். செம் நெல். செந்நெல். எ-ம். பிறவுமன்ன. எ-று. (ங)

(உச-சூ.) ணனமுன்தகரம்டறவாமுறையே, ணனவல்வழிக்கென்றுமியல்பாம், வேற்றுமைப்பொருட்கவைவலிவரின்டறவாம், ணனமுன்குறில்வழிநகரம்ணனவா, மற்றதுணனமுன்மாட்ந்துகெடுமே.

*எ-து.* ணகாரனகாரங்களால்வரும்விகாரமாமாறுணர்த்துதும் ஈற்றுணகரத்தின்கீழ்மொழிமுதல்வருந்தகரந்திரிந்துடகரமாகவும். ஈற்றுனகரத்தின்கீழ்மொழிமுதல்வருந்தகரந்திரிந்து றகரமாகவும்பெறும். [உ-ம்.] கண் - திறந்தது - கண்டிறந்தது - எ-ம். மின் - தெளிந்தது. மின் - றெளிந்தது. எ-ம். பிறவுமன்ன. அன்றியும் ணனவீற்றுமொழிகள் அல்வழிப்பொருட்புணர்ச்சியில். நகரமொழிந்த எவ்வினவெழுத்துவரினும் திரியாதியல்பாம், [உ-ம்] மண்கடிது-மண்சிறிது - மண்டீது-மண்பெரிது-மண்ஞான்றது-மண்மாண்டது-மண்யாது-மண்வலிது, எ-ம். பொன்கடிது - பொன்சிறிது - பொன்றீது-பொன்பெரிது-பொன்ஞான்றது-பொன்மாண்டது-பொன்யாது - பொன்வலிது, எ-ம். வரும். ஆயினும உருபினாற்றோன்றுமற்பொருளினால்வேற்றுமையினால்வரும். ஈற்றுணனவின்கீழ் மொழிமுதல் வல்லினம்வரின். ணகரம். டகரமாகவும் னகரம். றகரமாகவுந்திரியும். [உ-ம்] மண்குடம். மட்குடம். மண்சாடி-மட்சாடி-மண்தாழி - மட்டாழி - மண் - பாவை-மட்பாவை. எ-ம் பொன்-குடம் - பொற்குடம் - பொன் - சாடி - பொற்சாடி - பொன்-தாழி - பொற்றாழி-பொன் - பாவை-பொற்பாவை. எ-ம். பிறவுமன்ன. அன்றியும். ணனவீற்றுமொழிகள்தனிக்குறிலாயின் மொழிமுதல்வரும். நகரந்திரிந்துமுறையே ணகர-னகரமாகும். [உ-ம்] கண்-நெடிது-கண்ணெடிது. எ-ம். மின்-நெடிது-மின்னெடிது. எ-ம். வரும்

அன்றியும். ணன-வீற்றுநிலைப்பதங்கள்தனிக்குறிலல்லாதாயின்மொழிமுதல்வரும்.நகரங்கெடும். [உ-ம்.]
கவண்-நெடிது;கவணெடிது. எ-ம். கலன்-நெடிது. கலனெடிது எ-ம். தூண்-நெடுமை,தூணெடுமை. எ-ம்.
மான்-நெடுமை, மானெடுமை. எ-ம். பிறவுமன்ன.—நன்னூல். ணனவல்லினம் வரட்டறவும்பிறவரி, னியல்
புமாகும்வேற்றுமைக்கல்வழிக், கணநத்துமெய்வரினுமியல்பாகுமே, எ-து. மேற்கோள். எ-று. ( ச )

(உரு-சூ.) தேனெனுமொழிமெய்சேரிருவழியுந், தானியல்பாமெலிவரின்றன்னீற்றழிவும், வலிவ
ரினீறுபோய் வலிமெலிமிகலுமா, மின்பின்னுவ்வுறில்வன்மையுமிகுமே, யென்றன்வலிவரினியல்புந்திரி
புமா, நின்னென்றுமியல்பாய்நிற்குமென்ப, வூன்குயினியல்பாமுற்றவேற்றுமைக்கு; மெகின்மரமல்ல
தேவிருவழியியல்பு; மவ்வுறிவலிவரின்வலிமெலிமிகலுமாம்.

*எ-து.* முன்சொன்னவிதியிற்சிலவிகற்பமா மாறுணர்த்துதும். தேனெனுமொழி. எவ்வகை
மெய்வரினும். இயல்பாதலுமெல்லினம்வரின். னகரங்கெடுதலும்வல்லினம்வரின். னகரங்கெட்டுவல்லெ
ழுத்துமெல்லெழுத்து. மிகுதலுமாகும். வேற்றுமையிடத்தும்அல்வழியிடத்துமென்ப. [உ-ம்.] தே
ன்கடிது-தேன்சுவை- இயல்பாயின. தேன்- குடம்- தேக்குடம். தேன்-கடிது - தேச்கடிது-எனஇருவழி
யும். ஈறுகெட்டுவலிமிச்கன. தேன்குடம். தேங்குடம். தேன்-கடிது- தேங்கடிது. எனஇருவழியும். ஈறு
கெட்டுமெலிமிக்கன. தேன்-மூரி- தேமூரி-தேன்-மாண்டது - தேமாண்டது-என. இருவழியும் ஈறுகெட்
டன. அன்றியும். மின் - பின்-என்னும். இருமொழி-ஈற்றில் - வல்லினம்வரின்-உகரம்பெற்று - வல்லொ
ற்றிரட்டும் - வேற்றுமையிடத்தும்- அல்வழியிடத்தும்- [உ-ம்.] மின்-கடிது-மின்னுக்கடிது-பின்கடிது
பின்னுக்கடிது- எ-ம். மின்-கடுமை-மின்னுக்கடுமை-பின்-கடுமை-பின்னுக்கடுமை - எ-ம். வரும்- இவற்றுள்
சிறிது- பெரிது- தீது- எ-ம் சிறுமை- பெருமை- தீமை- எ-ம் முறையேகூட்டிக்காண்க- அன்றியும்-தன்
என்- என்னும். இருமொழி ஈற்றில். வல்லினம்வரின். இயல்புந்திரிபுமாம். நின். என்னும். மொழியீற்றி
ல்வல்லினம்வரின். எப்போதுமியல்பாம். [உ-ம்.] தன்பகை- என்பகை - என. இயல்பாயின. தன்பகை-தற்
பகை- என்பகை- எற்பகை- என. ஈறுதிரிந்தன- நின்பகை- இயல்பாயின- நிற்பகை என வாரா அன்றியும்
ஊன்- குயின்- என்னும- இருமொழிஈற்றில்- வேற்றுமைப்புணர்ச்சியில் வல்லினம்வரின- திரியாதியல்
பாம். [உ-ம.] ஊன்கடுமை- ஊன்றீமை- எ-ம் குயின்குழாம்- குயின்றிரள்- எ-ம். வரும் குயின் எ-து.
மேகம் அன்றியும் எகின். எ-து. புளியமரமுதற்பன்மரமும்-அன்னம். கவரிமா - புள்ளிமான் - நீர்நாய். எ
ன்றிவையாகும். இவற்றுண். மரமல்லாதன - எகின். என்னுமொழி - இருவழியுமூவினம்வரின் - இயல்
பாகவும்-அன்றியும். வல்லினம்வரின். அகரச்சாரியைபெற்றுவல்லொற்றுமெல்லொற்றுமிகவும்பெறும்.
[உ-ம்] எகின்-கால்-எகின்கால். எ-ம். எகின்-பெரிது. எகின்பெரிது எ-ம் இருவழியிலும் இயல்பாயின.
எகின்-கால், எகினக்கால். எ-ம். எகின்-கால், எகினங்கால். எ-ம். எகின்-பெரிது, எகினம்பெரிது. எ-ம். எகின்
பேடை, எகினப்பேடை எ-ம். இருவழியிலும்வலிமெலிமிக்கன. எகின்-அழகு, எகினவழகு. எ-ம். எகின்-வலி
து,எகினவலிது. எ-ம். மற்றை எழுத்துப்புணர்வழி அகரம்பெற்றவாறுகாண்க. பிறவுமன்ன எ-று.( ரு )

(உசா-சூ.) ளவேற்றுமையிற் றடவுமல்வழி, யவற்றோடுறழ்வும் வலிவரின்தவ்வரி, னியல்புந்திரிந்தபின்
கெடுதலுமாகும், ளத்தனிக்குறிற்கீழல்வழித்தவ்வரின், திரிந்தொழிந்தாய்தஞ் சேருமென்ப, ளமுன்மெ
லிவரினிருவழினணவா, மவற்றுளந்திரிந்தழிவாந்தனிக்குறி, னண்ணியளமுன நவ்வுனணவாம்.

*எ-து.* லகரளகாரங்களின் விகாரமாமாறுணர்த்துதும். ளவீற்றுநிலைப்பதங்கள் வேற்றுமை
ப்பொருளாய் வல்லின முதற்பதத்தோடுபுணருங்காலை லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் திரியும்
[உ-ம்.] கல்-புறம், கற்புறம். நால்-புறம், நாற்புறம். விரல்-புறம், விரற்புறம். சாரல்-புறம்,சாரற்புறம்.
எ-ம். முள்-புறம், முட்புறம். வாள்-புறம், வாட்புறம். புரள்-புறம், புரட்புறம். எ-ம். திரிந்தன பிறவுமன்
ன. அல்வழியிடத்தோவெனில் இயல்புந்திரிபுமாம் [உ-ம்.] கல்பெரிது - விரல்சிறிது-வாள்பெரிது, எ-ம்.
இயல்பாயின: கல்-பெரிது, கற்பெரிது. விரல்-சிறிது, விரற்சிறிது. வாள்-பெரிது, வாட்பெரிது. எ-ம்.
திரிந்தன பிறவுமன்ன. வேற்றுமைப்புணர்ச்சியில் லகரளகரவீற்றில் தவ்வவணையின்வருமொழிமுதலும்நி
லைமொழியீறும் திரியும் [உ-ம்.] நால்-தவலை, நாறவலை. நாற்றவலை. கடல்-திரை, கடறிரை. கடற்றிரை. வா
ள்-திறல், வாடிறல். வாட்டிறல். அவள்-தாய், அவடாய். அவட்டாய். எ-ம். இருமொழிதிரிந்தன பிறவும
ன்ன அல்வழிப்புணர்ச்சியில் தனிக்குறிலல்லாத லகரளகரவீற்றில் தவ்வவணையில் இயல்பும் கெடுதலுமாம்
[உ-ம்.] பொருத்தல்-தவலை, பொருத்தறவலை. அவள்-தந்தாள், அவடந்தாள். எ-ம். திரிந்தன பிறவுமன்ன
அன்றியும் பொருத்தல்தவலை. அவள்தந்தாள். எ-ம். வழக்கிடத்தாகும். அல்வழிப்புணர்ச்சியில் தனிக்குறில்
லகரளகரவீற்றில் தவ்வவணையின் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் ஆய்தமாகவும்பெறும் [உ-ம்]
கல்-தீது, கற்றீது. கஃறீது. பல்-தொடை, பஃறொடை. அல்-திணை, அஃறிணை. எ-ம். முள்-தீது, மு
ட்டீது. முஃடீது. எ-ம். பிறவுமன்ன. அன்றியும்நிலைமொழி லகரளகரவீற்றில் மெல்லினம்வரின் லகரம்
னகரமாகவும். ளகரம் ணகரமாகவும்திரியும். வேற்றுமையிடத்தும் அல்வழியிடத்தும் [உ.ம்.] கல்-மலை
கன்மலை. முள்-முடி, முண்முடி. எ-ம். கல்-முளைத்தது, கன்முளைத்தது. முள்-முரிந்தது, முண்முரிந்தது.
எ-ம். இருவழியுந்திரிந்தன, பிறவுமன்ன. தனிக்குறிலல்லாத லகரளகரவீற்றில் நகரம்வரின்: லகர ளகரந்திரிந்
து நகரங்கெட்டு னகரணகரமாகும் [உ-ம்.] வில்-நீளம், வினீளம். சால்-நீளம், சானீளம். நால்-நுனி,
நானுனி. எ-ம். இருள்-நீண்டது, இருணீண்டது. சோள்-நீண்டது, சோணீண்டது வாள்-நுனி, வாணுனி
எ-ம். பிறவுமன்ன இவ்வாறன்றி தனிக்குறிலணைந்த லகரளகரவீற்றில் நகரம்வரின் லகரளகரந்திரிந்துநகர
ங்கெட்டு னகரணகரமாகும் [உ-ம்]கல்-நெஞ்சு, கன்னெஞ்சு முள்-நிலம். முண்ணிலம். எ-ம். வரும எ-று.(சா)

(உஎ-சூ.) சஞயவரின்ஐஅச், சமமெனத்திரியும்.

*எ-து* அகரவைகாரங்களின்விகாரமாமாறுணர்த்துதும். மொழிக்குமுதலினும்மொழிக்குஇடையினும் நின்ற அகர ஐகாரங்கள். சஞயவரின் றம்மில்வேறுபாடின்றி ஒன்றற்கொன்றாகத்திரியும். [உ-ம்] பசல்-பைசல், மஞ்சு-மைஞ்சு, அய்யர்-ஐயர், எ-ம். மொழிமுதல் அகரம்-ஐகாரமாகத்திரிந்தது. அரசு-அரைசு, முரஞ்சு-முரைஞ்சு, அரயர்-அரையர், எ-ம். மொழியிடைஅகரம். ஐகாரமாகத்திரிந்தது. இவையேமொழிமுதற்போலிமொழியிடைப்போலி. எ-ம். கூறுவர். அன்றியும். ஐந்நாறு-ஐஞ்ஞூறு, மைந்நின் றகண்-மைஞ்ஞின் றகண்-நெய்ந்நின் றவிளக்கு, நெஞ்ஞின் றவிளக்கு. எ-ம். வரும் மொழிக்கடைப்போலி. [உ-ம்,] நலம்-நலன், குலம்-குலன், குளம்-குளன், பழம்-பழன், பயம்-பயன், கடம்-கடன், அகம்-அகன், மனம் மனன், எ-ம். சுரும்பு-சுரும்பர், கொம்பு-கொம்பர், வண்டு-வண்டர், மாது-மாதர், சாம்பல்-சாம்பர், பந்தல்-பந்தர், அனந்தல்-அனந்தர், குடல்-குடர், அரும்பு-அரும்பர், எ-ம். வரும். நன்னூல். அஐமுதலிடையொக்குஞ்சஞயமுன். எ-து. மேற்கோள். எ-று. (எ)

(உஅ-சூ.) அடைமொழிஉக்குறள், ஐயாதலுமாம்.

*எ-து.* குற்றியலுகரவிகாரமாமாறுணர்த்துதும். குற்றியலுகரவீற்றுச்சிலபதம். அடைமொழியாய்நின் றுதொகைப்பொருளாகமற்றொருபதத்தோடும் பகுபதமாகவிகுதியுருபோடும். புணருங்காலை உகரந்திரிந்து. ஐயாகவும்பெறும், [உ-ம்] ஆண்டு-ஆண்டை, ஈண்டு-ஈண்டை, யாண்டு-யாண்டை, மற்று மற்றை, இன்று-இன்றை, அன்றுவாக்கியம்-அற்றைவாக்கியம், பண்டுசெயதி-பண்டைச்செயதி, இன்று-நாள், இற்றைநாள், நேற்று-கூலி, நேற்றைக்கூலி, மூவாண்டு-நெல், மூவாட்டைநெல், எ-ம். பிறவுமன்ன. தொகைப்பொருளாக உகரந்திரிந்தவாறுகாண்க. ஈராட்டையான்-பண்டையான். மற்றையவர், பகுபதமாக. உகரந்திரிந்தவாறுகாண்க. அன்றியும். அளவடியான்வரும். கலிவிருத்தமட்டைவிருத்த மென்பார் இன்றைப்புலவருட்சிலர்—நன்னூல். ஐயீற்றுடைக்குற்றுகரமுமுளவே. எ-து. மேற்கோள். எ-று. (அ)

(உகூ-சூ.) தெவ்வென்பதிருவழிஉவ்வெய்திச்சேரும், வலிமிகுமவ்வரின்வவ்வுமவ்வாமென்ப.

*எ-து* இனிச்சிலசிறப்புவிதிகளை யுணர்த்துதும். தெவ்என்னுமொழிவல்லினத்தோடுபுணரின். உகரமெய்தி. வல்லினமிகுதலும். மகரத்தோடுபுணரின். வகரங்கெட்டுமகரமிகுதலுமாம். [உ-ம்.] தெவ்-கடிது, தெவ்வுக்கடிது-தெவ்-கடுமை-தெவ்வுக்கடுமை, எ-ம். தெவ்-மன்னர், தெம்மன்னர், தெவ்-மூவர், தெம்மூவர், எ-ம். வரும். தெவ். எ-து. பகை.—நன்னூல். தெவ்வென்மொழியேதொழிற்பெயரற்றே, மவ்வரின்வஃகான்மவ்வுமாகும். எ-து. மேற்கோள். எ-று. (கூ)

(ந௰-சூ.) யரழமுன்வலிவரினல்வழிக்கியல்பு, மடைமொழிக்காக்கமுமவைவேற்றுமைக்கண், மிகலுந்தன்னினமெலியெய்தலுமாம்

*எ-து.* யரழ என்னுமூன்றொற்றையும் ஈற்றிலேயுடைய நிலைமொழிமுன்னே. கசதபவருமொழிமுதல்வந்துபுணர்ந்தால். அல்வழியில். மிகாமல். இயல்பாம். [உ-ம்.] நாய்சிறிது-தேர்சிறிது-வீழ்சிறிது-எ-ம். வரும். அன்றியும். நிலைமொழிப்பதம்தொகைப்பட்டு அடைமொழியாகநின்றால் வருமொழிப்பதமுதலில்வல்லினமிகும். [உ-ம்.] பொய்-செல்வம், பொய்ச்செல்வம், சார்-பருவம், கார்ப்பருவம், பாழ்-கொல்லை. பாழ்க்கொல்லை. எ-ம். இவைமூன்றும். பண்புத்தொகை. அன்றியும். அம் மூன்றொற்றையும், ஈற்றிலேயுடைய. நிலைமொழிப்பதங்கண்முன்வேற்றுமையில் வல்லினமுதன்மொழிவந்துபுணர்ந்தால். வல்லினமிகுதலுமெல்லினமுறழ்தலுமாகும். [உ-ம்] வேய்-துறை, வேய்க்குறைவேர்-குறை-வேர்க்குறை வீழ்-குறை-வீழ்க்குறை. எ-ம். வேய்-குறை-வேய்ங்குறை-வேர்-குறை-வேர்ங்குறை - வீழ்-குறை-வீழ்ங்குறை. எ-ம் வேற்றுமைவழிக்கண் வல்லினமிக்கலுமெல்லினமுறழ்தலுமாயினவாறுகாண்க. எ-று. (௰)

(நக-சூ) சிலபலதம்மொடுசேர்புளிபியல்பு, முதன்மெய்க்கடைமெய்மிகலுமீறுபோய், லறவ்வாதலும்லாவாதலுமாம், பிறவரினகரநிற்றலுங்கெடலுமாம்

*எ-து.* சிலபலவென்னும் இவ்விருசொல்லும் இரட்டித்துவருங்கால். இயல்பாய்நிற்கவுமுதலொற்றுயிினுங். கடையொற்றுயிினுமிக்குவரவும். அகரங்கெட்டு லகரம் றகரமாகவும்பெறும். [உ-ம்.] பலபல சிலசில-என. இயல்பாயின. பலப்பல. சிலச்சில. என. ஒற்றுமிக்கன. பற்பல-சிற்சில. என. அகரங்கெட்டு லகரம் றகரமாயின. பல்பல-சில்லசில. என லகரமிக்கன. ஓரோவிடத்து. ல லாவாகத்திரியும் [உ-ம்.] பலாம்-சிலாம். எ-ம். அன்றியும்பிறமொழிபுணருங்கால் அகரம் நிற்கவுநீங்கவுமாம். [உ-ம.] பல்கலை. என. அகரநீங்கிற்று. பற்கலை, என அகரநீங்கி லகரம். றகரமாயிற்று. பலநாள. என. அகரநின்றது. பன்னாள். அகரங்கெட்டு லகரம் னகரமாயிற்று. பலமணி, பன்மணி. பலவணி. பல்லணி. பலவாயம். பல்லாயம். பலவவனா. பல்வவனா. பல்ஞானம். பன்ஞானம். எ-ம். வரும். ஆயினுந் தசரம்வரின். இயல்பாகவும். அகரம் போய். இருபத்தாறுஞ்சூத்திரத்தின்படி தனிறவ்வெய்தி ஆய்தம்வரவுமாகும். [உ-ம்.] பல்தொடை-பஃறொடை-பல்தாழிசை-பஃறாழிசை. எ-ம். பிறவுமன்ன. பல்பல-சில்சில. எ-ம். வரும். எ-று. (௰க)

(நஉ-சூ.) ஆமாவல்வழிஆவீறுமுற்று, மியாவிவைமுன்வலிமிகாதியல்பாகும்.

*எ-து.* அல்வழிவந்த ஆமாவென றஇருபெயரும். மியாவென றஅசைச்சொல்லும். ஆவீற்றவெதிர்மைறமுற்றுவிவனையும். எனவிவைவல்லினத்தோடுபுணருங்கால். ஒற்றிரட்டாவெனக்கொள்க. [உ-ம்.] ஆகறந்தன-மாபயந்தன-ஆசிறிய-மாபெரிய. எ-ம். கேண்மியாசோதாய்-சொன்மியாபாவாய். எ-ம். இவற்றைத்தின்றுகுதிரை. கடவோடாகால்வனெடுந்தேர். எ-ம். இவற்றைச்சிறப்பித்துவிளக்கினமையால். ஆவீற்றமற்றைப்பெயரும், முற்றுவிவனையல்லனவிவனையும்வரின் வல்லினமிரட்டுமெனக்கொள்க. [உ-ம்.] புறாப்பறப்பன-கடாப்பெரிய-மிடாச்சிறிய-ஓடாக்குதிரையுமுழாக்காவனையுமாகா-ஓடாத-உழாதனவரின்வல்லினமிரட்டா — நன்னூல் அல்வழியாமாமியாமுற்றுமுன்மிகா. எ-து. மேற்கோள். எ-று. (௰உ)

(நங-சூ.) தனிக்குறிலீற்றுத்தரும்பெயர்செய்யுட்கே, ஆ அவ்வாதலுமதனேடுவ்வவனையலுமாம்.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

*எ-து.* செய்யுளிடத்துத்தனிக்குறிற்கீழேஆகாரவீற்றுச்சிலபெயர்முன்னேபலபெயர் வருங்கால் அவ்வாகாரங்குறிகி. அகரமாகவும். அகரமாயினபின். உகரமிவணேர்துவரவும். பெறுமெனக்கொள்க. [உ-ம்.] சுறமறிவனதுறைமெயலாநிலவிரிகானல்வாய். எ-ம். நிலவுபாய்ந்தகடலிற. சுறவுபாய்ந்துகளித்தன எ-ம். இருவகைவிகாரம்வந்தவாறுகாண்க. அன்றியும். [உ-ம்] இரா-இரவு-புறா-புறவு-சுறா-சுறவு-நிலா-நிலவு-விளா-விளவு-பலா-பலவு. என. இயல்பாகியுங் குறிகியும். உகரம்பெற்றும். வழக்கிடத்துவரும்—நன்னூல் குறியதன்கீழாக்குறுகலுமதனே, டுகரமேற்றலுமியல்புமாந்தூக்கின். எ-து. மேற்கோள். எ-று. (௰௩)

(௩௪-சூ.) தமிழ்வேற்றுமைக்கச்சாரவும்பெறுமே

*எ-து* தமிழ். என்னுஞ்சொல்லேவேற்றுமைப்பொருளாக வருங்கால். அகரச்சாரியை பெற்றும் பெறுமையும். வருமெனக்கொள்க. [உ-ம்] தமிழ்க்கூற்று. தமிழ்ச்சொல். என. அகரச்சாரியைபெறுதுவந்தன. தமிழப்பல்லவதரையர். தமிழநாகன். தமிழவளவன். தமிழவரசன். என. அகரச்சாரியைபெற்றுவந்தன. — நன்னூல். தமிழவ்வுறவும்பெறும்வேற்றுமைக்கே. எ-து. மேற்கோள். எ-று. (௰௪)

(௩௫-சூ.) தனிவழிஐயுந்தனிக்குறில்யவ்வுந், துவ்வுநொவ்வுந்தொடர்மெலிமிகுமே.

*எ-து* ஓரெழுத்துமொழியாகவரும், ஐகாரமும். தனிக்குற்றெழுத்துக் கூடினயகரமும். எவற்சொற்களாகிய, து-நொ, என்றிருமொழிகளும்நிலைப்பதமாகிவரும்பதமுதற்கண்.மெல்லினம் புணரின்.அல்வழியானும்வேற்றுமையானும், ஒற்றிரட்டும், [உம்.] கை-மாறனது. கைம்மாறனது, கை-மாற்று. கைம்மாற்று-கைஞான்றது. கைஞ்ஞான்றது. கை-நீண்டது. கைந்நீண்டது. மெய்-ஞான்றது. மெய்ஞ்ஞான்றது. மெய்-மாண்டது. மெய்ம்மாண்டது, மெய்-நீண்டது, மெய்ந்நீண்டது. என, அல்வழியிலும், கைஞ்ஞாற்சி-கைந்நீட்சி, கைம்மாட்சி.மெய்ஞ்ஞாற்சி. மெய்ந்நீட்சி.மெய்ம்மாட்சி, என வேற்றுமையிலும், ஒற்றுமிக்கன. துந்நாடா-தும்மாடா. நொந்நாகா-நொம்மங்கா. என எவற்சொல்லினுமிக்கன. அன்றியும். துய்யவனு-துவ்வளவா. நொய்யவனு-நொவ்வளவா. எ-ம். வரும். எ-று. (௰௫)

(௩௬-சூ.) தனிச்குறின்மெய்யுயிர்சார்புளிமிகும்ரழத், தனிக்குறிற்சாராதாமுமிகாவென்ப

*எ-து.* தனிக்குறில். நிலைப்பதத்திற்றுஒற்றெழுத்தெல்லாம். உயிர் தொடர்ந்துவரின். இரட்டும் [உ-ம்.] கண்-அழகு, கண்ணழகு, சம்-அழகு, கம்மழகு, பொன்-அழகு, பொன்னழகு, மெய்-அழகு, மெய்யழகு-கல்-அழகு, கல்லழகு, தெவ்-அழகு, தெவ்வழகு, புள்-அழகு, புள்ளழகு, எ-ம். வரும். அன்றியும். ரழவெனஇரண்டொற்றுந்தனிக்குறின்மொழியீற்றின்கண்வரவும் இரட்டவும்பெறுதெனக்கொள்க.— நன்னூல் தனிக்குறின்முன்னொற்றுயிர்வரினிரட்டும். எ-து. ரழத்தனிக்குறிலணையா. எ-து. மேற்கோள் எ-று. (௰௬)

(௩௭-சூ.) மெலிவலித்தல்வலிமெலித்தல், குறுமைநீட்சிகுறுந்தொகைவிரிமே, மற்றொருமொழிமூவழிகுறைதலுமென, வேண்டுளித்தனிமொழிவிகாரமொன்பதே.

*எ-து.* சந்திக்காரணமாகவருமுன்காட்டிய எழுத்தின் விகாரங்களன்றியேதனித்தொரு மொழியின்வரும் விகாரங்களின்னெனர்த்துதும். அவையொன்பதாம். மெலித்தலும்வலித்தலும் குறுக்கலும் நீட்டலும் தொகுத்தலும் விரித்தலும் அன்றி. ஒருமொழிதானே முதல் இடை கடை. என மூவிடத்துக்குறைதலுமாம். [உ-ம்.] வாய்ந்தது. எ-து. வாய்த்தது. என. வலித்தல்விகாரம், கட்டை, எ-து. தண்டை என மெலித்தல்விகாரம். நிழல், எ-து. நீழல். என நீட்டல்விகாரம். பாதம், எ-து. பதம். என குறுக்கல்விகாரம். தண்டுறை, எ-து. தண்ணந்துறை. என விரித்தல்விகாரம். வேண்டாதார், எ-து. வேண்டார். என தொகுத்தல்விகாரம். அன்றியுந்தாமரை எ-து. மரையிதழ்புரையுமஞ்செஞ்சீறடி, என மொழிமுதற்குறைந்தவிகாரம். யாவர், எ-து யார். என மொழியிடைக்குறைந்தவிகாரம். நீலம், எ-து. நீலுண்டகண், என நிறப்பகடு. என மொழிக்கடைக்குறைந்தவிகாரம். இவ்வொன்பதுவிகாரங்களுள். சிலசிறுபான்மையாகையிற்றானே வழங்காதவற்றை இலக்கியங்களுட்காண்புழியறிந்துகொள்க. இவைசெய்யுள்விகாரம் அன்றியும் புணர்ச்சிவிகாரமும், புணர்ச்சியில்விகாரமும், சிலவுள [உ-ம்.] நிலவலயம்-பொற்குடம்-வாழைப்பழம்-எ-ம். வரும்- இவைபுணர்ச்சிவிகாரம். புணர்ச்சியில்விகாரம் எழாகும். முதலாவது. தோன்றல் [உ-ம்] குன்று-குன்றம், செல் உழி-செல்வுழி, எ-ம். இரண்டாவது, திரிதல். [உ-ம்] மாகி-மாசி, எ-ம். மூன்றாவது. கெடுதல், [உ-ம்] யார்-ஆர், யாவர்-யார், எ-ம். நான்காவது. ரீளல், [உ-ம்] பொழுது-போது, பெயர்-பேர், எ-ம். ஐந்தாவது நிலைமாறுதல். [உ-ம்.] வைசாகி-வைகாசி-நாளிகேரம்-நாரிகேளம்-தசை-சதை-ஞிமிறு-மிஞிறு-சிவிறி-விசிறி-எ-ம். ஆறாவதுமருவிவழங்குதல். [உ-ம்.] என்றந்தை-எந்தை. எ-ம். எழாவது. ஒத்து நடத்தல். [உ-ம்] நண்டு-ஞெண்டு-நெண்டு-ஞெண்டு-நமன்-ஞமன். எ-ம். வரும். எ-று. (௰௭)

(௩௮-சூ.) இருமொழியொருமொழியெனச்சங்கீர்தமாய், நிலமொழியீற்றுயிர்நீங்கலுமதமேல், டவணமொழிமுதற்கண்.அ-ஆவாதலும், இ-ஈ-எ-யாதலும். உ-ஊ-வாதலுமாம்.

*எ-து.* ஆதியிற்காட்டியநால்வகைவிகாரங்களுட்டிரட்டெனும்விகாரமாமாறுணர்த்துதும். இரட்டெனினுஞ் சங்கீதமெனினுமொக்கும். ஆகையிலிருபதமொருபதமாக ஓரோவிடத்துநிலைப்பதவீற்றெழுத்தும்வரும்பதமுதலெழுத்தும். ஒன்றாகத்திரண்டுவிகாரப்படுமாகும். இதுவடமொழிகளின்கண் மிகவுமிழங்குமென்றுணர்க. ஆகையின்முந்திநிலைப்பதவீற்றுயிர்கெடும். அதுவேகெட்டதன்மெய்ம்மேல்வரும்பதமுதலுயிரேறும். இவ்வாறுவருதல். தீர்க்கசந்தி-குணசந்தி-விருத்திசந்தி. எனப்படும். அவைவருமாறு அகரஆகாரங்களிலொன்றன்முன். அவ்விரண்டிலொன்றுவந்தால். ஆகாரமும். இகரஈகாரங்களில் ஒன்றன்முன். அவ்விரண்டில். ஒன்றுவந்தால். ஈகாரமும். உகரஊகாரங்களில். ஒன்றன்முன். அவ்விரண்டிலொன்றுவந்தால்ஊகாரமும்முறையேநிலைப்பதவீறும்வரும்பதமுதலுங்கெடத்தோன்றுதல் தீர்க்கசந்தியாகும். [உ-ம்.] வேத-ஆகமம், வேதாகமம். குள-ஆம்பல், குளாம்பல். பஞ்ச-அக்கம், பஞ்சாக்கம். சிவ-ஆலயம், சிவாலயம், சரண-அரவிந்தம். சரணாரவிந்தம். சேநா-அதிபதி, சேனாதிபதி. பாத-அரவிந்தம், பா

தாரவிங்கம். அக-அரி, அகரி. மர-அடி, மராடி. சுசி-இந்திரம், சுசீந்திரம். கிரி-ஈசன், கிரீசன். மகீ-இந்திரன், மகீந்திரன். மகீ-ஈசன், மகீசன். குரு-உதயம், குரூதயம். தரு-ஊனம், தரூனம். சுயம்பூ-உபதேசம், சுயம்பூபதேசம். சுயம்பூ-ஊர்ச்சிதம், சுயம்பூர்ச்சிதம். எ-ம். வரும். அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில். ஒன்றுவந்தால். ஏகாரமும். அவ்விரண்டில். ஒன்றன்முன். உகர ஊகாரங்களில் ஒன்றுவந்தால் ஓகாரமுமுறையே நிலைப்பதவீறும் வரும்பதமுதலுங்கெடத்தோன்றுதல் குணசந்தியாகும். [உ-ம்.] சுர-இந்திரன், சுரேந்திரன். நர-இந்திரன், நரேந்திரன். தரா-இந்திரன், தரேந்திரன். சறுவ-ஈசுரன், சறுவேசுரன். உமா-ஈசன். உமேசன், சித-இந்து. சிதேந்து, அமல-உற்பவி, அமலோற்பவி. மகா-உதரம். மகோதரம், சுத்த-உதகம், சுத்தோதகம். ஞான-ஊர்ச்சிதன், ஞானோர்ச்சிதன். மந்திர-ஊகி, மந்திரோகி. தாம-உதரன். தாமோதரன், தயா-உற்பத்தி. தயோற்பத்தி, தயா-ஊர்ச்சிதன். தயோர்ச்சிதன், எ-ம் வரும். அகரஆகாரங்களில்ஒன்றன்முன். எகாரஐகாரங்களில், ஒன்றுவந்தால். ஐகாரமும். அவ்விரண்டில் ஒன்றன்முன் ஒகார ஔகாரங்களில் ஒன்றுவந்தால் ஔகாரமுமுறையே நிலைப்பதவீறும் வரும்பதமுதலுங்கெடத்தோன்றுதல் விருத்திசந்தியாகும். [உ-ம்] சிவ-ஏகம், சிவைகம். சிவ-ஐக்கியம், சிவைக்கியம். தர-ஏகவீரன், தரைகவீரன். ஏக-ஏகன், ஏகைகன். கலச-ஓதனம், கலசௌதனம் மகா-ஐசுவரியம், மகைசுவரியம். கோமள-ஓடதி, கோமளௌடதி. திவ்விய-ஔடதம், திவ்வியௌடதம். மகா-ஓடதி, மகௌடதி. மகா-ஔவுடதம், மகௌடதம். எ-ம். வரும். ஒருபதத்துள்ளேமுதனின்ற இகர ஈகார எகாரங்கள், ஐகாரமாகவும். உகர ஊகார ஓகாரங்கள், ஔகாரமாகவும். அகரம், ஆகாரமாகவும் எழாமுயிர்-ஆர்-ஆகவுந் திரிந்துவருதல் ஆதிவிருத்திசந்தியாகும். [உ-ம்.] சிவனைப்பணிவோன்-சைவன், வீரத்தின்றன்மை-வைரம், கேவலத்தன்மை-கைவல்லியம், எ-ம் புத்தனைப்பணிவோன்-பௌத்தன், சூரன்றன்மை-சௌரியம், கோசலன்புத்திரி-கௌசலை, எ-ம். தசரதன்புத்திரன்-தாசரதி, எ-ம். கிருத்திகையின்புத்திரன்-கார்த்திகேயன், எ-ம். வரும் (அ௬சூ.காண்க) இனித்திசைத்தொகையிற்சொல்லும்படியேகுவ்விற்றுத்திசைப்பெயர் அஃதொழித்து, குண-குட-வட-தென்-எனநிற்கும். அவ்வத்திசைக்கண்ணுளது சுருதிப்பகுபதமாகச்சொல்லுங்கால் அதுவெனும்விகுதியைக்கூட்டி இவ்விலக்கணத்தாற் - குணாது-குடாது-வடாது, எ-ம். இவற்றைப் போலிலக்கணமின்றாயினுந்தெற்குளது-தெனாது. எ-ம். வழங்கும் (௯௧௭-சூத்திரத்திற்காண்க) எ-று (௰௮)

(௩௯-சூ.) ஈறுபோயிடை யாவேற்றிரட்டிய, சொல்லேமிகுதி தோற்றுமென்ப, விலக்கணமின்றியியைந்துளபிறவே.

*எ-து* ஒன்றன்மிகுதிக்காட்டவதன்பெயரிரட்டிமுதன்மொழியீற்றெழுத்துளதெனிற்கெட்டு அதனயல்ஊயிராகாரமாகத்திரிந்துவல்லினம்வரினுமிகாமல்வழங்கும்[உ-ம்]பலபலகோடி-கோடாகோடி-பலபலகாலம்-காலாகாலம்-நீதாநீதி-கோணகோணம்-குலாகுலம்-தாராதாரம-தேசாதேசம்-கருமாகருமம், எ-ம். பிறவுமன்ன. இப்பலவிகற்பமன்றியே இலக்கணமில்லாமையும்புலவரால்வழங்கும் விகாரங்களுமுளவெனக்கொள்க. அவையே இலக்கணப்போலிமொழி, எ-ம். மரூஉமொழி, எ-ம். இனிச்சொல்லும்படிவழங்கும் அவற்றுள், இலக்கணப்போலிவருமாறு. [உ-ம்.] இல்-முன், முன்றில. வேட்கைநீர்-வேநீர். நகர்ப்புறம் புறநகர். வேட்கையவர், வேணவாய். கண்மீ, மீகண். கோவில், கோயில் பொதுவில், பொதியில். பின், பின்றை. எ-ம். வரும். அன்றியும் மரூஉமொழிவருமாறு. [உ-ம்.] அருமருந்தன்ன பிள்ளை, அருமந்தபிள்ளை. கிழங்கன்னபழஞ்சோறு, கிழங்கம்பழஞ்சோறு. சோழநாடு, சோணாடு எவன், என்-என்ன. பெயர், பேர். யாடு, ஆடு. சாத்தன்றந்தை, சாத்தந்தை. சென்னைபுரி, சென்னை. புதுவைபுரி, புதுவை மலையமாநாடு, மலாடு. பாண்டியநாடு, பாண்டிநாடு. தஞ்சாவூர், தஞ்சை. பனையூர், பனசை. சேந்தமங்கலம், சேந்தை. ஆற்றூர், ஆறை. ஆதன்றந்தை, ஆந்தை. பூதன்றந்தை, பூந்தை. வடுகன்றந்தை, வடுகந்தை. என்றந்தை, எந்தை. உன்றந்தை, உந்தை. முன்றந்தை, முந்தை. யார், ஆர். யாவை, ஆவை. யாறு, ஆறு. மரவடி, மராடி. குளவாம்பல், குளாம்பல். அ இ என்னுஞ்சுட்டுக்கவை அந்த இந்த எ-ம். வரும். இத்தொடக்கத்தேற்குஞ் செய்கையறிந்துமுடிக்கவும். போலிமொழியும் மரூஉமொழியும் ஒருமொழியினுந்தொடர்மொழியினும் விகாரப்பட்டுவருவன. (௨௯௰௪-சூத்திரத்திற்காண்க.) எ-று. (௰௯)

(௪௰-சூ.) உயிரேகுறினெடிலொற்றுமுவின, முயிர்மெய்யாய்தமோரறுகுறுக்க, மளபெடைமாத்திரைப்புணர்பெனவகுத்து, ணநமனவௗதவுநண்ணுந்திரிபல, தேவைதிரியாதியல்பாமென்ன, விவன்விளக்கியவெழுத்தினியல்பே.

*எ-து.* இவ்வெழுத்ததிகாரத்துள் விளங்கியவற்றை இங்ஙனந்தொகையாகத்தந்தவாறுகாண்க. அன்றியும். (இந்நூற்புணர்ச்சிமுடிவில். நன்னூற்புணர்ச்சிசில்கூறுதும்.) இயல்புபுணர்ச்சிவருமாறு. (சூத்திரம்.) பொதுப்பெயருயர்திணைப்பெயர்களீற்றுமெய், வலிவரினியல்பாமாவியரமுன், வன்மைமிகாசிலவிகாரமாமுயர்திணை, [உ-ம்.] சாத்தன்பெரியன். சாத்தன்பெரிது, அவன்பெரியன். அவள்பெரியள். சாத்திபெரியள். சாத்திபெரிது தாய்பெரியள் அவர்பெரியர். குமரக்கோட்டம். (சூ.) ஈற்றியாவினாவிளிப்பெயர்முன்வலியியல்பே. [உ-ம்.] நம்பியாகொண்டான். நம்பியோசென்றான். நம்பியேதந்தான் யாகுறிது விடலதா, (சூ.) செய்யியவென்னும்வினையெச்சம்பல்வகைப், பெயரினெச்சமுற்றறனுருபே, யஃறிணைப்பன்மையம்மமுன்னியல்பே. [உ-ம்.] உண்ணியகொண்டான். உண்டசாத்தன், உண்டபோனான். வாழ்கவொற்று-தனகைகள், பலகுதிரைகள். அம்மகொற்று. (சூ) பவ்வீநீமீமுன்னரல்வழி, யியல்பாம்வலிமெலிமிகலுமாமீக்கே. [உ-ம்.] மீகுறிது. நீகுறியை, மீகண்-மீக்கண். (சூ.) விகாரமனைத்துமேவலதியல்பே. [உ-ம்.] பொன்மணி. ஒளிமணி. (சூ.) மூன்றாறுருபெண் வினைத்தொகைசுட்டீறு, குகரமுன்னரியல்பாம். [உ-ம்.] சாத்தனொடுசென்றான். சாத்தனதுகலம். ஒருகை. அடுகளிறு, அதுகுறிது (சூ.) வன்றொடரல்லனமுன்மிகாவல்வழி. [உ-ம்.] நாகுகடிது. எஃகுசிறிது. வரகுதீது. குரங்குபெரிது.

தெள்குகொடிது. எகுகால். (சூ.) இடைத்தொடராய்தத்தொடரொற்றிடைமின், மிகாநெடிலுயிர்த்
தொடர்முன்மிகாவேற்றுமை. [உ-ம்.] தெள்கின்கடுமை. எஃகின்கடுமை. நாகின்கடுமை. வரகின்கடுமை.
(சூ.) இடைச்சொல்லேயோமுன்வரினியல்பே. [உ-ம்.] அவனேகொண்டான். அவனோகொண்டான்,
(சூ.) அல்வழிஇஐம்முன்னராயி, னியல்புமிகலும்விகற்பமுமாகும். [உ-ம்.] பருத்திகுறிது. யானைகுறி
து. கிளிக்குறிது, தினைக்குறிது. சிலசூத்திரத்துண்மிக்கதறிச், அன்றியும். விகாரப்புணர்ச்சிவருமாறு. (சூ.)
ஒருபுணர்க்கிரண்டுமூன்றுமுறப்பெறும். [உ-ம்.] யானைக்கோடு. நிலப்பனை, பனங்காய். (சூ.) தோன்
றறிரிதல்கெடுதல்விகார, மூன்றுமொழிமூவிடத்துமாகும். [உ-ம்.] பூங்கொடி. பஃறலை. நிலவட்டம்.
(சூ.) மரப்பெயர்முன்னரினமெல்லெழுத்து, வரப்பெறுனவுமுளவேற்றுமைவழியே. [உ-ம்.] விளங்கா
ய்-மாங்கொம்பு, (சூ.) சுவைப்புளிமுன்னின, மென்மையுந்தோனறும். [உ-ம்.] புளிங்கறி-புளிஞ்சோறு-
புளிந்தயிர்-புளிம்பாளிதம். (சூ.) தெங்குநீண்டீற்றுயிர், மெய்கெடுங்காய்வரின். [உ-ம்.] தேங்காய். (சூ.)
சாவவென்மொழியீற் றுயிர்மெய்சாதலும்விதி. [உ-ம்.] சாக்குத்தினன். (சூ.) பூப்பெயர்முன்னினமென்
மையுந்தோன்றும். [உ-ம்] பூங்கொடி-பூஞ்சோலை-பூம்பனை. (சூ) ஆ முன்பகரவீயனைத்தும்வரக்குறுகு
மேலனவல்வழியியல்பாகும்மே. [உ-ம்.] ஆப்பியரிது - ஆப்பிகுளிரும்-ஆப்பிநன்று-ஆப்பிவலிது, (சூ.)
பனைமுன்கொடிவரின்மிகலும்வலிவரி, னைபோயம்முந்திரள்வரினுறழ்வு, மட்டுரிவனைகெட்டந்நீள்வுமா
ம்வேற்றுமை. [உ-ம்] பனைக்கொடி-பனந்தாண்-பனாட்டு-பனந்திரள், (சூ.) வேற்றுமையாயினைகானி
றுமொழி, யீற்றழிவோடமம்மேற்பவுமுளவே [உ-ம்] புன்னையங்கானல்-வழுதுணங்காய் - ஆவிரம்வேர்.
(சூ) நெடிலோடுயிர்த்தொடர்குற்றுகரங்களுட், டறவொற்றிரட்டும்வேற்றுமைமிகவே [உ-ம்.] ஆட்டு
க்கால்-சோற்றுப்பானை-மூயிற்றுக்கால்-முருட்டுக்கால்-சாட்டரண், (சூ.) ஆவியரழவிறுதிமுன்னிலைவி
னை, யேவன்முன்வல்லின மியல்பொடுவிகற்பே. [உ-ம்.] உண்டிசாத்தா-உண்டனைசாத்தா-உண்டாய் சா
த்தா-உண்டனீர்சாத்தரோ - எறிசாத்தா - விடுசாத்தா - ஆய்சாத்தா - வாழ்சாத்தா - நடக்கொற்றா - எய்க்
கொற்றா, ( சூ. ) மென்றொடர்மொழியுட் சிலவேற்றுமையிற், றம்மினம்வன்றொட ராகாமன்னே
[உ-ம்.] மருத்துப்பை-கருப்புவில்-கற்று, (சூ.) இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன், கசதபமிகும்விதவா
தனமன்னே. [உ-ம்] ஆடூஉக்குறியன் - தாராக்கடிது - ஒற்றைக்கை - ஆடிக்கொண்டான் - பூத்துக்கா
ய்த்தது - பொள்ளெனப் பறந்தது - எரிசுனை - குழந்தைகை, ( சூ ) அகமுனர்ச்செவிகை வரினிடையன
கெடும். [உ-ம்.] அஞ்செவி-அங்கை, (சூ) வல்லேதொழிற்பெயரற்றிருவழியும், பலகைநாய்வரினும்வேற்
றுமைக்கவ்வுமாம், [உ-ம்] வல்லுக்கடிது - வல்லப்பலகை-வல்லநாய், (சூ.) வவ்விறுசுட்டிற் சற்றுறல்வழி
யே. [உ-ம்.] அவற்றை-இவற்றை, (சூ.) சுட்டின்முன்னாய்தமன்வரிற்கெடுமே. [உ-ம்.] அதனை, (சூ.) அ
த்தினகரமகரமுனையில்லை, [உ-ம்] மகத்துக்கை-மரத்துக்குறை, (சூ.) நவ்விறுதொழிற்பெயர்க் கவ்வு
மாம்வேற்றுமை. [உ-ம்.] பொருநக்கடுமை, (சூ.) புள்ளும்வள்ளுந்தொழிற்பெயருமானும். [உ-ம்] புள்ளு
க்கடிது-வள்ளுக்கடிது, (சூ.) இல்லெனின்மைச் சொற்கையடைய, வன்மைவிகற்பமு மாகாரத்தொடு,
ருள், (சூ.) மீன்றவ்வொடுபொரூஉம் வேற்றுமைவழியே [உ-ம்.] மீற்கண், (சூ.) மவ்வீறொற்றழிந்து
வன்மையாகலுமியல்புமாகும். [உ-ம்.] இல்லைப்பொருள்-இல்லைபொருள், இல்லாப்பொருள்- இல்பொ
யிரீறொப்பவும், வன்மைக்கினமாத் திரிபவுமாகும். [உ-ம்.] வட்டவாழி-வட்டக்கடல்-வட்டவாரி, (சூ.) ஈமு
ங, கம்முமுருமுந்தொழிற்பெயர்மானு, முதலனவேற்றுமைக்கவ்வும்பெறுமே [உ-ம்] ஈமுக்கடிது-கம
முக்கடிது-உருமுக்கடிது-ஈமக்குடம்-கம்மக்குடம். (சூ.) வேற்றுமைமப்போய் வலிமெலியுறழ்வு, மல்வ
ழியுயிரிடைவரினியல்பும்முள. [உ-ம்] குளக்கரை-குளங்கரை-குளமழகு-குளம்யாது, பிறவுமன்ன. சிலசூ
த்திரத்துண்மிகாதறிக, இவ்விருவகைப்புணர்ச்சி அல்வழிவேற்றுமையில்மெய்ம்முதன்மெய்யீறு, உயிர்மு
தலுயிரீறு, உயிர்முதன்மெய்யீறு, மெய்ம்முதலுயிரீறு, பெயர்முதற்பெயரீறு, வினைமுதல்வினையீறு
வினைமுதற்பெயரீறு, பெயர்முதல்வினையீறு, பகாப்பதத்தோடுபகாப்பதம், பகுபதத்தோடுபகுபதம்
பகாப்பதத்தோடுபகுபதம், பகுபதத்தோடுபகாப்பதம், புணரப்படும். [உ-ம்.] பொற்குடம். எ-து. மெ
ய்ம்முதன்மெய்யீறாய்ப் பெயர்முதற்பெயரீறாய்ப் பகாப்பதத்தோடுபகாப்பதமாயும், பொன்னொடிந்த
து. எ-து. மெய்ம்முதலுயிரீறாய்ப் பெயர்முதல்வினையீறாய்ப் பகாப்பதத்தோடு பகுபதமாயும், உன்
டோது. எ-து. உயிர்முதலுயிரீறாய் வினைமுதல்வினையீறாய்ப் பகுபதத்தோடுபகாப்பதமாயும், உண்
வள்செவ்வாய். எ-து. உயிர்முதன்மெய்யீறாய் வினைமுதற்பெயரீறாய்ப் பகாப்பதத்தோடுபகாப்பதமாயு
ம்புணரப்பட்டன. பிறவுமன்ன இருமயக்கம்வருமாறு. (சூ.) கசதப வொழித்தவீரேழன்கூட்ட, மெய்ம்
மயக்குடனிலை ரழவொழித்தீரெட், டாகுமிவ்விருபான் மயக்குமொழியிடை, மேவுமுயிர்மெய்மயக்கள
வின்றே [உ-ம்] சங்கம்-வேற்றுநிலைமெய்ம்மயக்கம், அறம்-உடனிலைமெய்ம்மயக்கம், பிறவுமன்ன.
(நன்னூலிற்காண்கவென் றபிறப்பு வருமாறு.) (சூ.) அவ்வழி ஆவியிடைமையிடமிடறுகு, மேவுமென்மை
மூக்காம்பெறும்வன்மை, அவற்றுள் - முயற்சியுள் அ ஆவங்காப்புடைய, இஈஎஏஐ அங்காப்போ, ட
ண்பன்முதனாவிளிம்புறவருமே. உஊ ஒஓஔவிதழ்குவிவே. கஙவுஞ்சஞவும்டணவுமுதலிடை, நுனிநாவண்
ணமுறமுறை றவருமே. அண்பல்லடிநாமுடியுறத்தநவரும் மீகீழிதழுறப்பமப்பிறக்கும். அடிநாவடியண
முறயத்தோன்றும். அண்ணநுனிநாவருட ரழவரும் அண்பன்முதலுமண்ணமு முறையினாவிளிம்பு வீங்
கி, யொற்றவும்வருடவும் லகாரளகாரமாயிரண்டும்பிறக்கும். மேற்பல்லிதழுறமேவிடும் வவ்வே, அண்ண
நுனிநாநனியுறிற் றனவரும். ஆய்தக்கிடந்தலையங்காமுயற்சி, சார்பெழுத்தேனவுந் தம்முதலனைய. (ந-ஞ்,
சூத்திரத்திற்கூறியபிறப்பு இவையேகாண்க) எ-று. (௨௰) மூன்றாவதெழுத்தின்விகாரமுற்றிற்று.
அதிகாரம்ஒன்றற்குஇயன்மூன்றற்குப்பாயிரமுட்பட, ஆ௯ சூ ௪௰க.மேற்கோள்-சூ. ௮௰. ஆ௯ சூ. ௱௨௧.

எழுத்ததிகாரம்முற்றிற்று முற்றும்.

இரண்டாவது.

# சொல்லதிகாரம்.

## முதலோத்துச்சொற்பொதுவியல்.

(சக-சூ.) முச்சயத்தொழிற்கொடு முச்சகந்தனித்தா, ளச்சயனடிபணிந் தறைகுசொல்விளக்கே.

*எ-து.* சொல்லிலக்கணமாமாறுணர்த்துதும். யாவராலும்வெல்லப்படாதவல்லமைகொண்டு எல்லாவற்றையும் படைத்து-அளித்து-அழித்து, என்னும் இம்முத்தொழிலை இயற்றி மூவுலகனைத்தையும் பொதுவறத்தான்றனி ஒருவனாயாளாநிற்குங்குறைப்பாடில்லாக்கடவுள் இணையடிமலரைவணங்கிச்சொல்லிலக்கணத்தைவிளக்குதும், ஆதியும் அந்தமும் நடுவும் குறையறமுடிப்பதற்கு அதிகாரங்கடோறும் பாயிரமாகத்தெய்வவணக்கம் ஈண்டுஞ்சொல்லிதன்முன்னோர்காட்டியவழியெனக்கொள்க. ஒன்றும்பலவுங்கூடியஎழுத்தினடையாற்சொற்களாகையின் எழுத்தியல்விளக்கியபின்னர். அவற்றாலாகியசொல்லைவிளக்கச்சொல்லதிகாரம்வந்தமுறைமையெனக்காண்க. சொல்லெனினும் பதமெனினு மொழியெனினுமொக்கும் இவ்வதிகாரப்பொருளும்பிரிவின்முறையும் இனிவருஞ்சூத்திரத்தால்விளங்கும் இஃதுசிறப்புப்பாயிரம் (சூ.) தெய்வவணக்கமுஞ்செயப்படுபொருளு, மெய்தவுரைப்பதுதற்சிறப்பாகும். எ-று. (க)

(சஉ-சூ.) எச்சொல்லும்பெயர்வினையிடையுரியெனநான், கிவற்றுட்பொதுவெனவியற்சொற்றிரிசொ, லொருமொழிதொடர்மொழியொருவிலாப்பொதுமொழி, பகாப்பதமென்றுபகுபதமென்று, வாகுபெயரிருதிணையும்பான்மூவிடனே, சாரியையெனப்பொதுதகுதியீராறே.

*எ-து.* பெயரேவினையேயிடையேயுரியே. எனநாற்கூறுபாடாகச் சொல்லெல்லாம்வகுக்கப்படும். அவற்றுட்பொருளைவிளக்குவதுபெயரே பொருளதுதொழிலைவிளக்குவதுவினையே. இவையிரண்டையுஞ்சார்ந்தொன்றுவது. இடையே அவ்விரண்டையுந் தழுவிப்பற்பலகுணங்களைவிளக்குவது. உரியே ஆயினும்இந்நால்வகைச்சொற்களை ஒவ்வோரோத்தாகவிளக்காமுன்னர்இச்சூத்திரத்தில் இயற்சொன்முதலாகச் சாரியையீறாகக்காட்டிய பன்னிருதகுதிச்சொற்பொதுவையவாகையிற் பொதுவியலென வோரோத்தாகிப்பிற்கூட்டி இவ்வதிகாரம் ஐந்தோத்தாகப்பிரிக்கப்படுமெனக்கொள்க எ-று. (உ)

(சங-சூ.) இயற்சொல்லென்ப தியல்பிற்றிரிபிலா, தானெளிதெவர்க்குந் தன்பொருள்விளக்கலே.

*எ-து.* இயற்சொல்லாமாறுணர்த்துதும். மொழியானும் பொருளானுந்திரிபின்றி எவர்க்குந்தன்பொருளைக்காட்டிவிளக்குதற்கு இயல்பினையுடையசொல் இயற்சொல்லாகும் [உ-ம்] அவன்-அவள் அவர்-அது-அவை-மகன்-மகள்-பொன்-மணி, இவை. பொருளால்வருபெயரியற்சொல். நிலம்-மலை-யாறு-கடல், இவை இடத்தால்வருபெயரியற்சொல். இன்றுநாளை-பண்டு-மேல், இவை. காலத்தால்வருபெயரியற்சொல். தலை-முகம்-கொம்பு-மலர், இவை. சினையால்வருபெயரியற்சொல். வட்டம் - சதுரம்-செம்மை-வெண்மை, இவை குணத்தால்வருபெயரியற்சொல். ஆடல்-பாடல்-நிற்றல்-நீங்கல், இவை தொழிலால்வருபெயரியற்சொல். அன்றியும் இயற்சொல்நால்வகையென்பர். [உ-ம்.] மண்-மரம், இவை பெயரியற்சொல். உண்டான்-உறங்கினன், இவை வினையியற்சொல். அவனை-அவனால், இவை. இடையியற்சொல். அ[illegible]பு-அழகு, இவை உரியியற்சொல். பிறவுமன்ன எ-று. (ங)

(சச-சூ) திரிசொல்லொருபொருட்பெறிபலசொல்லும், பலபொருட்கொருசொல்லும்பயன்பட்டற்குரியன

*எ-து.* திரிசொல்லாமாறுணர்த்துதும். பலசொல்லாகி ஒருபொருளைவிளக்குவனவும் ஒருசொல்லாகிப்பலபொருளைவிளக்குவனவுந் திரிசொல்லெனப்படும். [உ-ம்.] வெற்பு-விலங்கல்-விண்டு-அடுக்கல்-பொறை-வரை-குன்று-பிறவும். பலசொல்லாகி மலை எனும் ஒருபொருளைவிளக்குந்திரிசொல். ஓடை எ-து ஒருசொல்லாயியானைப்பட்டம் எ-ம். ஒருமரம், எ-ம் ஒருகொடி, எ-ம். நீர்நிலை, எ-ம். பலபொருளைவிளக்குந்திரிசொல். அன்றியும் திரிசொல்நால்வகையென்பர். [உ-ம்.] கிள்ளை-சுகம்-தத்தை, இவைகிளி என்கிற ஒருபொருள்குறித்தபலபெயர்த்திரிசொல். வாரணம், இது.யானையுங்கோழியுஞ் சங்குமுதலாகியபலபொருள்குறித்த ஒருபெயர்த்திரிசொல். படர்ந்தான்-சென்றான், இவை போயினான் என்கிற ஒருபொருள்குறித்த பலவினைத்திரிசொல். வரைந்தான், இது நீக்கினான்-கொண்டான், என்கிறபலபொருள்குறித்த ஒருவினைத்திரிசொல். சேறும்-வருதும், இவற்றினுடைய-றும்-தும்-விகுதிகள். தன்மைப்பன்மை எதிர்காலம் என்கிற ஒருபொருள்குறித்தபலவிடைத்திரிசொல். கொல்-இது ஐயம் அசைநிலை எனகிற பலபொருள்குறித்த ஓரிடைத்திரிசொல். சால-உறு-தவ-நனி-கூர்-கழி, இவை மிகல் என்கிற ஒருபொருள்குறித்தபலவுரித்திரிசொல் கடி-என்கிறது காப்பு-கூர்மை-அச்சம்-கரிப்பு-விளக்கம்-சிறப்பு-மணம் முதலியபலபொருள்குறித்த ஓருரித்திரிசொல். மற்றவையுமிப்படியேவருதல்காண்க. இயற்சொல் - ரூடியார்த்தம். எ-ம். திரிசொல்-யோகார்த்தம், எ-ம். வடமொழியில்வழங்கும். எ-று. (ச)

(சரு-சூ.) ஒருமொழியொன்றையும் பலவையுந்தொடர்மொழி, பொதுவவ்விரண்டையும் புகலுந் தன்மைய, தொகைதொகாவென விருதொடர்மொழியென்ப.

*எ-து.* மும்மொழிகளாமாறுணர்த்துதும். முதலாவது, ஒருமொழிகள்பகுப்பில்லாது ஒருபொருளை உணர்த்துவன ஒருமொழிகளெனப்படும்[உ-ம்] நம்பி-நங்கை-நிலம்-நீர்-வந்தான்-வந்தாள். எ-ம்.பிறவுமன்ன. இரண்டாவது, தொடர்மொழிகள். பலமொழிதொடர்ந்துநின்றுபொருளை உணர்த்துவன தொடர்மொழிகளெனப்படும். இவையேதொகைநிலைத்தொடர்மொழிகள் எ-ம். தொகாநிலைத்தொடர்

மொழிகள் எ-ம். இருவகைப்படும். தொகையாய்த்தொடர்ந்துவருமொழிகள் ஆறெனப்படும். தொகாமையாய்த்தொடர்ந்துவருமொழிகள் ஒன்பதெனப்படும். [உ-ம்.] அறஞ்செய்தான் - உருபுத்தொகை - கொல்புலி-வினைத்தொகை-கருங்குவளை-குணத்தொகை-வேல்விழி - உவமைத்தொகை - இராப்பகல்-உம்மைத்தொகை-தாழ்குழல்-அன்மொழித்தொகை, எ-ம். வரும். தொகைநிலைத்தொடர்மொழிகள். வந்தான்சாத்தன்-தெரிநிலைவினைமுற்று. வில்லினனிவன்-வினைக்குறிப்புமுற்று. வந்தவரசன் - பெயரெச்சம். வந்துசென்றான்-வினையெச்சம். ஐயன்வந்தான்-வினைமுதல். ஐயாகேள்-விளி. கல்வியைவிரும்பினான்-இரண்டனுருபு. தவத்தால்வீடெய்தான்-மூன்றனுருபு. இரப்போர்க்கீய்ந்தான்-நான்கனுருபு. குணத்திற்சிறந்தோன்-ஐந்தனுருபு. கடவுளதுகிருபை-ஆறனுருபு. விளக்கின்கண்ணொளி-எழனுருபு. இதுவோகண்டபயன்-இடைச்சொல். நனிபேதை-உரிச்சொல். வருகவருக-அடுக்கு. எ-ம். வரும். தொகாநிலைத்தொடர்மொழிகள்—நன்னூல்—முற்றீரெச்சமெழுவாய்விளிப்பொரு, ளாறுருபிடையுரியடுக்கிவைதொகாநிலை. எ-து. மேற்கோள். இவையெல்லாம்ஒருவசனத்துளடங்கும் [உ-ம்.] வெய்யகண்ணனேகடிபோய்மலைபிளிழிந்தயாவனையதுகோட்டை நனிக்கட்பொருட்குவாளாற்கொய்தான். எ-ம். வரும். மூன்றுவதுபொதுமொழிகள் ஒருமொழியாய்நின்று ஒருபொருளைஉணர்த்தியும். அதுவேதொடர்மொழியாய்நின்றுபலபொருளைஉணர்த்தியும்இரண்டற்கும்பொதுவாய்நிற்பனபொதுமொழிகளெனப்படும். [உ-ம்.] எழுந்திருந்தான். இதுவேஒருமொழியாகஎழுந்தானென்றுகொள்ளவும் தொடர்மொழியாகஎழுந்துபின்னிருந்தானென்றுகொள்ளவுமாம். வேங்கைஇதுவேஒருமொழியாகப்புலியுமரமுமென்றுகொள்ளவும்தொடர்மொழியாகவேதுங்கையென்றுகொள்ளவுமாம். தாமரைஇதுவே ஒருமொழியாக ஒருபூவென்றுகொள்ளவும். தொடர்மொழியாகத்தாவுகின்றமரையென்றுகொள்ளவுமாம். தொகைநிலை-சமாசமென்பர். எ-று (௫)

(௪௬-சூ) பகாப்பதமென்பபயனுற்குறியாற், பகாதொன்றுநிப்பகுப்பிற்பயனிலா, நகிழ்ந்தியல்கின்றநால்வகைச்சொல்லே

*எ-து.* பகாப்பதங்களாமாறுணர்த்துதும். பெயர்-வினை-இடை-உரி எனநால்வகைச்சொல். தாமேவிளக்கும்பொருடபயனுலாயினுஞ்சொல்பவன் குறித்தபயனுலாயினும்பகாதொன்றுநிப் பகுப்பினும் பயனிலாவாகிஒருபொருளைத்தருவனவெல்லாம்பகாப்பதங்களெனப்படும் [உ-ம்] நம்பி-நங்கை-மலை-கடல்-நாடு-நிலம்-நீர்-தீ-காற்று-வான். என்பனபெயர்ப்பகாப்பதங்கள். நட-வா-போ-மடி-கிட-உண்-தின் என்பன. வினைப்பகாப்பதங்கள். மன்-கொல்-மற்று-போல்-அம்ம. என்பன. இடைப்பகாப்பதங்கள் உறு-தவகடி. நனி-எழில். சால்-கழி. என்பன உரிப்பகாப்பதங்கள். இவையெல்லாந்தாமேவிளக்கும்பொருட்பயனால் ஒன்றுநின்றபகாப்பதங்கள். கூத்தன்-கறுப்பன்-சிலம்பி. முதலியவோவெனில்கூத்தையாடினான். எ-ம். கரியநிறத்தையுடையான். எ-ம். மலைபிற்பிறந்தான. எ-ம். பகுக்கப்பட்டுப்பலபொருளைத்தருவன வாகையிற்பகாப்பதங்களல்லன. மக்களுள்-விலங்கினுள்-இன்னான், இன்னது, என இடுகுறிப்பெயராகக்குறிக்கப்பட்டு ஒன்றாய்நின்று ஒருபொருளைத்தருதலால் பகாப்பதமாயின. இடுகுறிப்பெயர்-பகாப்பதங்கட்குறித்துக்காரணப்பெயர்-பகுபதங்கட்குறித்து. வடநூலார் பகாப்பதத்தை-ரூடமென்பர். எ-று. (௬)

(௪௭-சூ.) பகுபதமொன்றாய்ப்பலவொருங்குணர்த்திப், பொழுதுகொள்வினையும் பொருளிடங்காலஞ், சினைகுணந்தொழிலாறுஞ்சேர்ந்தபெயருமாம்.

*எ-து.* பகுபதங்களாமாறுணர்த்துதும். ஒருமொழியாகநின்று ஒருப்படப்பலபொருளை உணர்த்துவன பகுபதங்களெனப்படும். மேற்காட்டிய-மலை-ஓடை முதலியதிரிசொல் ஒன்றாகிப் பலபொருளை உணர்த்தினும் பகுபதங்களல்லன. தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங் காலத்தைத்கொண்டுவரும்வினை-வினைப்பகுபதம். பொருள்-இடம்-காலம்-சினை-குணம்-தொழில். என அறுவகைக்காரணங்களையடுத்துவரும்பெயர்-பெயர்ப்பகுபதம், [உ-ம்.] ஓதினான். எ-து. ஓதுந்தொழிலையு மிறந்தகாலத்தையும் பாடுவான். எ-து. பாடுந்தொழிலையும் வருங்காலத்தையுமுணர்த்துதலால்வினைப்பகுபதம். வில்லினன் எ-து. வில்லையும்-வில்லையுடையானையுமுணர்த்துதலால். பொருட்காரணப் பெயர்ப்பகுபதம். பொன்னன் - முடியன். என்பன பொருளால்வருபெயர்ப்பகுபதங்கள். வெற்பன்-எயினன்-ஆயன்-ஊரன்-துறைவன்-என்பன. இடத்தால்வருபெயர்ப்பகுபதங்கள். மூவாட்டையான்-வேனிலான்-மாசியான்-ஆதிரையான்-நெருநலான்-இற்றையான்-என்பன. காலத்தால்வருபெயர்ப்பகுபதங்கள். திணிதோளன்-வரைமார்பன்-ஒன்றரைக்கண்ணன்-செங்குஞ்சியான. என்பனசினையால்வருபெயர்ப்பகுபதங்கள். கரியன்-செய்யன். என்பன குணத்தால்வருபெயர்ப்பகுபதங்கள். ஓதுவான்-பாடுவான் - ஈவான்-உண்பான் - தச்சன்-கொல்லன்-கணக்கன்-பிணக்கன். என்பன தொழிலால்வருபெயர்ப்பகுபதங்கள். அன்றியும். நடந்தனன். எ-து. பகுதிவிகுதி யிடைநிலைசாரியைசந்திவிகாரத்தான்முடிந்த வுயர்திணை யாண்பாலொருமைப்படர்க்கை யிறந்தகாலங்காட்டுமுடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்றாறெழுத்தொருமொழியியற்றும் வினைமுதற்பகுபதம். நடக்கின்றார். எ-து. பகுதிவிகுதியிடைநிலைசந்தியான்முடிந்த வுயர்திணைப் பலர்பாற்படர்க்கை நிகழ்காலங்காட்டுமுடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்றேழெழுத் தொருமொழியியற்றும் வினைமுதற்பகுபதம், நடப்பாள். எ-து. பகுதிவிகுதி யிடைநிலைசந்தியான்முடிந்தவுயர்திணைப் பெண்பாலொருமைப்படர்க்கை யெதிர்காலங்காட்டுமுடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்றைந்தெழுத்தொருமொழியியற்றும்வினைமுதற்பகுபதம். பொன்னன். எ-து. பகுதிவிகுதியான்முடிந்தவுயர்திணை யாண்பாலொருமைப்படர்க்கை முக்காலங்காட்டுநான்கெழுத்தொருமொழி குறிப்புவினைமுற்றுப் பகுபதம். முக்காலமுணர்த்துமாறு. பொன்னன். என்பதை பொன்னையுடையனுயினான். என. இறந்தகாலங்கருதியயினும். பொன்னையுடையனாகின்றான் என நிகழ்காலங்கருதியாயினும். பொன்னையுடையனுவான்

என எதிர்காலங்கருதியாயினும். இப்படி. ஒருகாலஞ்சொல்லுவான் குறிப்பாற் கேட்பானுக்குத் தோன்றவுரைப்பதாம். கரிய. எ-து. பெயரெச்சக்குறிப்புவினைப்பகுபதம். இன்றி. எ-து. வினையெச்சக் குறிப்புவினைப்பகுபதம். நடந்தவன். எ-து. வினையாலணையும்பெயர்ப்பகுபதம். நடந்திலன். எ-து. எதிர்மறைப்பகுபதம் நடந்து. எ-து. வினையெச்சப்பகுபதம். நடக்கும். எ-து. பெயரெச்சப்பகுபதம். பிறவுமன்ன. வடநூலார் பகுபதத்தை-யௌகிகம் என்பர். எ-று. (௭)

(௪௮-சூ.) உயிர்மவிலாறுந்தபநவிலைந்துங், கவசவினாலும்யவ்விலொன்றும், மாகுநெடிநொதுவாங்குறிலிரண்டோ, டோரெழுத்தியல்பதமாறேழ்சிறப்புள, பகாப்பதமேழும்பகுபதமொன்பது, மெழுத்தீறுகத்தொடருமென்ப.

*எ-து.* ஓரெழுத்தொருமொழியு மிருபதவெழுத்தளவுமாமாறுணர்த்துதும். பகாப்பதமோவ்வோரெழுத்துப்பதங்களாகவுநிற்கும். அவைஎத்தனையோவெனில். ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ. எனத்தனியுயிர்ப்பதமாறும், மா-மீ-மூ-மே-மை-மோ. எனத்தனிமகரப்பதமாறும். தா-தீ-தூ-தே-தை. எனத்தனித்தகரப்பதமைந்தும். பா-பூ-பே-பை-போ. எனத்தனிப்பகரப்பதமைந்தும். நா-நீ-நே-நை-நோ. எனத்தனிநகரப்பதமைந்தும். கா-கூ-கை-கோ. எனத்தனிக்ககரப்பதநாலும். சா-சீ-சே-சோ. எனத்தனிச்சகரப்பதநாலும் வா-வீ-வே-வை. எனத்தனி வகரப்பதநாலும். யா. எனத்தனி யகரப்பதம். ஒன்றும். ஆக நெட்டெழுத்துத்தனித்துநின்றுவரும்பதம்நாற்பதும். நொ-து. எனக்குற்றெழுத்துத்தனித்துநின்றுவரும்பதம். இரண்டுங்கூடியநாற்பத்திரண்டுஞ்சிறப்புள இவையன்றிப்பகரவீகாரமுதலியசிறப்பில்லனவுஞ்சிலவுள. அன்றியும்பலவெழுத்துத்தொடர்ந்துவரும் பதத்துட்பகாப்பதம் இரண்டெழுத்துமுதல்எழெழுத்தீறுகவும்பகுபதம்இரண்டெழுத்துமுதல் ஒன்பதெழுத்தீறுகவுந்தொடர்ந்துவருமெனக்கொள்க. ஈண்டுயிரும்முயிர்மெய்யுமன்றிஒற்றுமெண்ணுக. [உ-ம்.] அணி-அறம், அகலம்-அருப்பம், அருப்பலம்-உத்திரட்டாதி. என்பனபகாப்பதங்கள். கூனி-கூனன்-குழையன்-பொருப்பன்-ஆரணத்தான்-அரங்கத்தான்-உத்திராடத்தான்-உத்திரட்டாதியான்-என்பனபகுபதங்கள். அருப்பலம். எ-து. அனிச்சமரம், அருப்பம்-ஊர், ஆ-பசு, ஈ-வண்டு, ஊ-ஊன், ஏ-அம்பு, ஐ-அரசன், ஓ-மடையடைக்குங்கதவு, மா-அழகு, மீ-மேல், மூ-மூப்பு, மே-ஏவல், மை-கறுப்பு, மோ-மோவன்னேவல், தா-பகை, தீ-நரகம், தூ-சுத்தம், தே-கடவுள், தை-பூசநாள், பா-வெண்பா, பூ-பூமி, பே-நுரை, பை-நிறம், போ-ஏவல், நா-நாக்கு, நீ-முன்னிலை, நே-அன்பு, நை-ஏவல், நோ-நோய், கா-சோலை, கூ-பூமி, கை-சிறுமை, கோ-கண், சா-ஏவல், சீ-இலக்குமி, சே-எருது, சோ-மதில், வா-விளித்தல், வீ-சாவு, வே-ஏவல், வை-வைக்கோல், யா-அஃறிணைப்பன்மைவினா. நொ-ஏவல், து-உண். கு-கௌ-வௌ-பீ-எனச்சிறப்பில்லனவுங்கொள்க. எ-று. (௮)

(௪௯-சூ.) ஆகுபெயரொன்பதவ்வவமுதற்சினை, கருவிகாரியம்பண்பிவற்றொன்றன்பெயர், பிறிதொன்றற்குரைக்கும்பெற்றிதானே.

*எ-து.* ஆகுபெயராமாறுணர்த்துதும். ஆகுபெயர். ஐவகைப்படும். முதற்குச்சினையும். சினைக்குமுதலும். காரணத்திற்குக்காரியமும். காரியத்திற்குக்காரணமும். ஒன்றன்பண்புமற்றொன்றற்கேற்புழியுரைப்பதுமைவகையாகுபெயராம். [உ-ம்.] பூநிழற்சோலை. எ-து. பூவெனுஞ்சினைப்பொருளாற்பூத்தமரங்களாகியமுதற்பொருளைக்காட்டுஞ் சினையாகுபெயர். புளியம்பழந்தின்றவனைப்புளியைத்தின்றான். எ-து. சினையைக்காட்டுமுதலாகுபெயர். ஞாயிறெழுந்ததற்கொளியெழுந்தது. எ-து. காரணத்தைக்காட்டுங்காரியவாகுபெயர். தாமரைகதிர்படமலரும். என்பதற்கு. ஞாயிறுபடமலரும். எ-து. காரியத்தைக்காட்டுங்காரணவாகுபெயர். பூத்தனவென்பதற்குக்குவளைநோக்கின. எ-து. முல்லைநகைத்தன. எ-து. ஒன்றன்பண்புமற்றொன்றற்குரைத்தபண்பாகுபெயர். அங்ஙனஞ்சினைப்பட்டு. எ-து. சீனதேயத்துறப்பாரியமைந்தாற்செய்யப்பட்டதென்றுகாட்டினவதனாற்சினையைக்காட்டுமுதலாகுபெயர். அரிசி-நாழி, பஞ்சு, துலாம். எ-து. நாழியாலளக்கப்பட்டதுந்துலாத்தானிறுக்கப்பட்டதுங்காட்டினவதனாற்காரியத்தைக்காட்டுங்காரணவாகுபெயர். அன்றியுஞ்சிலநூலாசிரியர் ஆகுபெயர்பன்னிரண்டும்பிறவுமாமென்றுங்கூறுவர். [உ-ம்.] தாமரையினதுபூவைத்தாமரை. எ-து. தாமரையென்னு முதற்பொருளின்பெயர் அதன்சினையாகியமலருக்காதலால்பொருளாகுபெயர். அகத்திருக்கின்றமனைதை. அகம். எ-து. அகமென்னுமுள்ளிடப்பெயர்மனதிற்காதலால். இடவாகுபெயர், கார்காலத்திலுண்டாகும்பயிரை. கார். எ-து. காரென்னும் ஒருபருவகாலத்தின்பெயர் அப்பருவகாலத்தில்விளையும்பயிருக்காதலால். காலவாகுபெயர், புளியையுடைமரத்தினை. புளி-எ-து. புளியென்னுஞ்சினைப்பெயர். அதன்முதற்பொருளாகியமரத்திற்காதலால்சினையாகுபெயர், நீலஞ்சூடினாள்-எ-து. நீலமென்னுங்குணப்பெயர் அந்நிறத்தையுடையகுவளைமலருக்காதலால்-குணவாகுபெயர்வற்றலோடுண்டான். எ-து. வற்றலென்னுந்தொழிற்பெயர்அதவனைப்பொருந்தியதோருணவிற்காதலால். தொழிலாகுபெயர். ஒன்றுவந்தது. எ-து. ஒன்றென்னுமெண்ணுப்பெயர் அதனாலெண்ணப்படுமொருபொருளுக்காதலால். எண்ணலளவையாகுபெயர்-துலாக்கோல். எ-து. துலாமென்னும்எடுத்தலளவைப்பெயர். அதன்கருவியாகியதராசுக்காதலால்-எடுத்தலளவையாகுபெயர்நாழியுடைந்தது. எ-து. நாழியென்னுமுகத்தலளவைப்பெயர்-அதன்கருவிக்காதலால். முகத்தலளவையாகுபெயர். வேலூர்த்தடி-விளைந்தது. எ-து. தடியென்னும்நீட்டலளவைப்பெயர். அதனாலளக்கப்பட்டவயலுக்காதலால். நீட்டலளவையாகுபெயர். நன்னூலிற்குரைசெய்தான். எ-து. உரையென்னுஞ் சொல்லின்பெயர், அதன்பொருளுக்காதலால்-சொல்லாகுபெயர், விளக்குமுறிந்தது. எ-து. விளக்கென்னுந்தானியின்பெயர் அதற்குத்தானமாகிய தண்டிற்காதலால்-தானியாகுபெயர்-திருவாசகம். எ-து. வாசகமென்னுங்காரணத்தின்பெயர், அதன்காரியமாகியஒருநூலுக்காதலால் காரணவாகுபெயர். இந்நூல்-அலங்காரம்

எ-து. அலங்காரமென்னும் இலக்கணமாகியகாரியத்தின்பெயர். அதன்கருவியாகிய நாலுக்காதலால், காரியவாகுபெயர். திருவள்ளுவர். எ-து. திருவள்ளுவரென்னுங்கருத்தாவின்பெயர். அவராற்சொல்லப்பட்ட நாலுக்காதலால். கருத்தாவாகுபெயர், தோகைவந்தாள். எ-து. தோகையென்னுமுவமையின்பெயர், அதையுவமானமாகக்கொண்டபெண்ணிற்காதலால்-உவமையாகுபெயர், அன்றியும். விடாதவாகுபெயர்-விட்டவாகுபெயர்-இருமடியாகுபெயர்-மும்மடியாகுபெயர்-நான்மடியாகுபெயர்-அடையடுத்தவாகுபெயர். இருபெயரொட்டாகுபெயர். எ-ம். பெயர்பெற்றுவழங்கும். [உ-ம்] ஆயிரங்குதிரையால்அவ்வூர்கொள்ளையிடப்பட்டது. எ-து. குதிரையென்னும்பெயர்தன்னியற்பொருளாகியபரிமாவைவிடாமல்அவைசவாரோடாத்துஞ்சேவகரையும் உணர்த்துதலால் விடாதவாகுபெயர். கங்கைக்கணிடைச்சேரி. எ-து. கங்கையென்னும்பெயர்தன்னியற்பொருளாகியவெள்ளத்தைவிட்டு அதன்கரையைமாத்திரமுணர்த்துதலால், விட்டவாகுபெயர். கார்-எ-து காரென்னுங்கருநிறத்தின்பெயர். மேகத்திற்குஆகுபெயராயும் அம்மேகம், பெய்யும். பருவத்திற்குஇருமடியாகுபெயராயும், அப்பருவத்தில்விளையும் பயிருக்குமும்மடியாகுபெயராயும்வரும். நான்மடியாகுபெயர். இவ்வாறுவருதல்காண்க. வெற்றிலைநட்டான். எ-து. இலையென்னுஞ்சினைப்பெயர் அடைபடுத்துமுதற்பொருளுக்கானமையால் அடையடுத்தவாகுபெயர். வகரக்கிளவி. எ-து. இதில்வகரமாகிய அடைமொழியானது. கிளவிஎன்னும்இயற்பெயர்ப்பொருளைவிசேடித்து நிற்காது எழுத்தாகியஆகுபெயர்ப்பொருளைவிசேடித்துநிற்கக் கிளவி என்பதே ஆகுபெயர்ப்பொருளையுணர்த்த அவ்விருபெயரும் ஒட்டிநிற்கையால் இருபெயரொட்டாகுபெயர். விட்டும்விடாதவாகுபெயர்வருமாறு. [உ-ம்.] அவனிவன். எ-து அவன். என்னும்பெயர்க்கு இயற்கைப்பொருள் அவ்விடத்தில் அக்காலத்தோடுகூடினவன். இவன். என்பதற்கு இயற்கைப்பொருள் இவ்விடத்தில் இக்காலத்தோடு கூடினவன், என்புழி. இவ்விடத்து இக்காலத்தோடுகூடி இருக்கிறவனிடத்தில் அவ்விடத்து அக்காலத்தோடுகூடுகை இராததால், அவன் என்னும்பெயர் விசேடணப்பொருளைவிட்டுவிசேடியத்தைமாத்திரம் உணர்த்தலால். விட்டும்விடாதவாகுபெயர். தேவர்முதலியபெயரைமக்களுக்கிட்டு வழங்குவனவுஞ்சொல்க.—நன்னூல்.—பொருண்முதலாறோடளவைசொற்றானி, கருவிகாரியங்கருத்தனாதியு, ளொன்றன்பெயரானதற்கியைபிறிதைத், தொன்முறையுரைப்பனவாகுபெயரே. எ-து. மேற்கோள். எ-று. (௯)

(௫௭-சூ) திணையிரண்டெனமக்கடேவர்நரக, ராவருயர்திணையஃறிணைபிறவே, பாலைந்தாண்பெண்பலருயர்திணையே, யன்றியுமொன்றுபலவஃறிணையென்ப.

*எ-து.* திணைபாலாமாறுணர்த்துதும். உயர்திணை. எ-ம். அஃறிணை. எ-ம். திணைஇருவகைப்படும். மக்களும் தேவரும். நரகரும் உயர்திணை, உயிருள்ளனவும், உயிரில்லனவும்அஃறிணைஇவ்விருதிணையும். ஐம்பாலாகப்பிரிக்கப்படும். ஐம்பாலைவடநூலார்பிரகிருதியென்பார். அவை, ஆண்பால், பெண்பால், உயர்திணைஒருமை, பலர்பால், உயர்திணைப்பன்மை, ஒன்றன்பால்அஃறிணைஒருமை, பலவின்பால்அஃறிணைப்பன்மை [உ-ம்.] வந்தான்-வந்தாள்-வந்தார்-என்பனஉயர்திணைமுப்பால். வந்தது-வந்தன, என்பன அஃறிணை இருபால்.—சேம்பிராதம்.—மக்கணரகரோவானவரோடென்னும்பொருள்சு, டொக்கவுயர்திணையாந்தாய்மொழியாம்.-மிக்க-வுயிருள்ளனவுமுயிரில்லனவுஞ், செயிரிலஃறிணையாஞ்சென்று. ஒருவனொருத்திபலரொன்றுபலவென்று, மருவியபாலைந்துந்துவதற்பின் - பொருவிலா-வோங்குதிணைப்பாலொருமூன்றேழிந்தவை, பாங்கிலஃறிணைப்பாலாம். இவைமேற்கோள். எ-று. (௰)

(௫௪-சூ.) மூவிடந்தன்மைமுன்னிலைபடர்க்கை, தன்மையாகுநான்-யான்-நாம்-யா, முன்னிலைநீ-நீயிர்-நீவிர்-நீரெல்லீர், ரெல்லையடர்க்கையெல்லாம்பொதுவே, யாருநீதாமொருமையாநீர்நீவி, ரெல்லீர்நீயிர்தாமெல்லாம்பன்மை.

*எ-து.* மூவிடமாமாறுணர்த்துதும். அவற்றுள்-தன்மை [உ-ம்] நான்-யான்-நாம்-யாம். எ-ம். முன்னிலை [உ-ம்.] நீ-நீர்-நீயிர்-நீவிர்-எல்லீர். எ-ம். படர்க்கை. [உ-ம்.] அவன்-அவள்-அவர். எ-ம். வரும். எல்லாமென்பது. மூவிடத்திற்கும்பொதுவெனக்கொள்க. ஒருமையும்பன்மையும்வருமாறு. [உ-ம்.] யான்-நான்-தன்மைஒருமை, யாம்-நாம். தன்மைப்பன்மை. நீ-முன்னிலைஒருமை நீவிர்-நீயிர். முன்னிலைப்பன்மை. அவன்-அவள்-படர்க்கைஒருமை. அவர்கள், படர்க்கைப்பன்மை, தன்மைக்கு-உத்தமன். எ-ம். முன்னிலைக்கு. மத்தியமன். எ-ம். படர்க்கைக்கு, பிரதமன். எ-ம். வடநூலார்கூறுவர். எ-று. (௰௪)

(௫௨-சூ) சாரியையென்பசார்பதமெழுத்தென, பதத்தொடுவிகுதியும்பதமுமுருபும், புணர்புளியிடையிற்புணர்வனவவற்றுள், அ எ உ ஐ குன் அன்று னின்ன, றற்றிற்றத்தந்தம்நம்நும்மெனப், பதினேழுன்றிப்பிறவுமாம்பொதுச், சாரியையவற்றோர்வழி யன்றுரும்விகற்பமே.

*எ-து* சாரியையாமாறுணர்த்துதும். தொடர்மொழியாகப்பதத்தோடுபதமும் பகுபதமாகப்பகுதியோடு விகுதியும்பெயர்ப்பொருளாகப் பெயரோடுருபும்புணருங்காலேநிலைப்பதத்திற்கும் வரும்பதம் விகுதியுருபுகட்குமிடையே சிலவெழுத்துஞ்சிலபதமும். ஓரோவிடத்துவரும். வரின் அவைசாரியையெனப்படும். ஆகையிற்சொன்ன மூவகைப்புணர்ச்சிகட்குப் பொதுச்சாரியை மேற்சொன்ன அம்முதற்பதினேழும்பிறவுமாம். [உ-ம்.] அ-தனக்கு, எ-சவனேதாணி, உ-சாத்தனுக்கு, ஐ-மற்றையவர், கு-மொழிகுவான், ன்-ஆன்சன்று, அன்-ஒன்றன்கூட்டம், ஆன்-இருப்பான், இன்-வண்டிவில், அல்-நறுந்தொடையல்குடி, அற்று-பலவற்றை, இற்று-பதிற்றுப்பத்து, அத்து-நிலத்தியல்பு, அம்-புளியங்காய், தம் - எல்லார்தம்மையும், நம் - எல்லாநம்மையும், நும் - எல்லீர்நும்மையும், எனமுறையேபதினேழுசாரியைவந்தவாறுகாண்க. இவைபோல்வனபல்வுமுளவெனக்கொள்க. ஆயினும் இவற்றிற்செல்லாமொருவழியன்றிஒன்றற்சொன்றும்இரண்டும் வருதலுமொன்றும்வாராமையும் ஒன்றற்கோரிடத்துவருதலுமோ

ரிடத்துவாராமையுமாம் [உ-ம்] பதப்புணர்ச்சிக்கண்-மலையுச்சி-அலங்கல்வேல்-சாரியையின்மை-மனவூக்கம்-மனத்தாண்மை- ஒன்றன்கண்வந்ததும்-வாராமையும்-விகுதிப்புணர்ச்சிக்கண்-மலையான்- ஊரான்- சாரியையின்மை-வெற்பன்-வெற்பினன்-வில்லன்-வில்லினன்-ஒன்றன்கண் வந்ததும்-வாராமையும். இனியுருபுபுணர்ச்சிக்கண்-மலையை-புகழை-சாரியையின்மை-நிலத்துக்கு-நிலத்துக்கண்-நிலத்திற்கு-நிலத்தின்கண்-மீளவும்-நிலக்கு-நிலக்கண்-ஒன்றன்கண் ஞென்றுமிரண்டும் வந்ததுமொன்றும்வாராமையும்வந்த வழியேகாண்க. ஆகையிலேற்குமிட ஙளையறிந்துவேண்டுவன வருவித்துப்புணர்க்க. என்வலி.—நன்னூல் — பதமுன்விகுதியும்பதமுமுருபும் புணர்வழியொன்றும் பலவுஞ்சாரியை வருதலுந்தவிர்தலும் விகற்பமுமாகும் எ-து. மேற்கோள். எ-று. (௰௨)

முதலோத்துச்சொற்பொதுவியன்முற்றிற்று.

# இரண்டாமோத்துப்பெயர்.

## முதலாவது வேற்றுமையியல்.

(௫௩-சூ) பெயரேவேற்றுமை பெற்றிடம்பாறிவண, காட்டித்தொழிலலகாலங்காட்டா, மரபுகாரணமாக்கங்குறியென், றவைநாற்றகுதியாகுமென்ப.

*எ-து.* மேலேவகுத்துக்கூறிய நால்வகைச்சொற்களு ளிவ்வோத்தின்கண்ணேபெயர்ச்சொல்லியல்பிவணிவிளக்குதும் பெயரெனப்படுவன இனிவரும்வேற்றுமையுருபுகளைக்கொள்வதற்கு உரியனவாகி மேற்காட்டியமூவிடம் இருதிணைஐம்பால் என்றிவற்றைக்காட்டித்தொழிலின் காரணமாக வரும்பெயர் காலங்காட்டுவதன்றியே அல்லனவெல்லாங்காலங்காட்டாமல் வருமெனக்கொள்க. அன்றியுமரபுபெயரும், காரணப்பெயரும், ஆகுபெயரும், இடுகுறிப்பெயரும், எனநால்வகைப்படும் பெயரெல்லாமெனக்கண்டுணர்க. இவையே பொருட்பெயரும், விவினையாலணையும்பெயரும், தொழிற்பெயரும், பண்புப்பெயரும், என இந்நால்வகையுள்ளடங்கும் [உ-ம்.] பொன்னன்-பொருட்பெயர். உண்டவன்-விவினையாலணையும்பெயர். நடத்தல்-தொழிற்பெயர், சண்டை-கூத்து - வேட்டை - முதனிலையில்லாததொழிற்பெயர்கள். கருமை-பண்புப்பெயர். எ-று. (௧)

(௫௪-சூ) காரணமில்லன மரபுபெயரே, காரணங்காட்டிக் காரணப்பயன்கொளல், காரணப்பெயரே காரணங்காட்டா, ததன்பயன்கொள்வதாகுபெயரே, காரணங்காட்டினுங் காரணப்பயன்கொளா, விடுகுறிப்பெயராமென்பகற்றோரே.

*எ-து.* கூறியநால்வகைப்பெயர்களு மிவையெனவுணர்த்துதும். இவற்றுட்காரணமின்றிப்பொருளின் இயல்பிவணிக்குறித்துவருவன மரபுபெயரெனப்படும். [உ-ம்.] மகன்-மகள்-கரி-பரி-பொன்-மணி-வான்-நிலம்-அகம்-புறம்-இரா-பகல்-வருடம்-மாதம்-சால்-தவலை-தளிர்-பூ-காய்-கனி-வட்டம்-நீளம்-வெம்மை-தண்மை-ஊண்-தின்-ஆடல்-பாடல். என்பனமரபுபெயர். அன்றியும். பொருள்-இடம்-காலம்-சினை-குணம்-தொழில்-கருத்தா-மிகுதி-என. எண்காரணங்களால்வந்து அவற்றின்பயன்கொள்வன காரணப்பெயரெனப்படும். [உ-ம்.] தமன்-நமன்-நுமன்-எமன்-என சுற்றத்தால்வருபெயரும். ஒருவன். என. எண்ணால்வருபெயரும், அவையத்தான், அத்திகோசத்தான். என. குழுவால்வருபெயரும். வில்லினன், புண்ணினன். முதலியபெயரும். பொருட்காரணப்பெயர்களாம், வெற்பன். பொருப்பன். என. குறிஞ்சித்திணையால்வருபெயரும்-மறவன்-எயினன்-என. பாலைத்திணையால்வருபெயரும். ஆயன்-அண்டன். என. முல்லைத்திணையால்வருபெயரும். ஊரன்-உழவன். என. மருதத்திணையால்வருபெயரும். சேர்ப்பன்-பரதவன். என நெய்தற்றிணையால்வருபெயரும். காவலூரான்-கருவூரான் என. ஊரால்வருபெயரும். அருவாளன்-சோழியன். என. தேயத்தால்வருபெயரும். வானத்தான்-விசும்பான் என வானால்வருபெயரும். மண்ணகத்தான்-பாதலத்தான். முதலியபெயரும். இடக்காரணப்பெயர்களாம். பிரபவன்-இபவன். என. வருடத்தால்வருபெயரும். வேனிலான்-காரான், என பருவத்தால்வருபெயரும். தையான்-மாசியான். எனமாதத்தால்வருபெயரும். ஆதிரையான்-ஓணத்தான். என. நாளால்வருபெயரும். நெருநலான்-இற்றையான். முதலியபெயரும், காலக்காரணப்பெயர்களாம். அலைகாதான், சுரிகுழலான். என. உறுப்பால்வருபெயரும், நெடுங்கையன்-செங்கண்ணன். முதலியபெயரும், சினைக்காரணப்பெயர்களாம். பெரியன்-சிறியன். என அளவால்வருபெயரும், அறிஞன்-புலவன், என. அறிவால்வருபெயரும். அமுதனையான்-விடமனையான், என. ஒப்பால்வருபெயரும். குறளன்-கூனன், என. வடிவால்வருபெயரும். கரியன்-சிவப்பன். என. நிறத்தால்வருபெயரும், தேவன்-மானுடன், என. கதியால்வருபெயரும். அந்தணன்-அரசன், என-சாதியால்வருபெயரும், சேரன்-சோழன். என. குடியால்வருபெயரும். ஆசிரியன்-படைத்தலைவன், என. சிறப்பால்வருபெயரும். நல்லன்-தீயன், முதலியபெயரும். குணக்காரணப்பெயர்களாம், ஓதுவான்-ஈவான், எனஒழுகலீதலால்வருபெயரும். வாணிகன்-தூதன், முதலியபெயரும். தொழிற்காரணப்பெயர்களாம். வள்ளுவப்பயன். குயக்கல். தொல்காப்பியம். முதலியகருத்தாகாரணப்பெயர், கமுகந்தோட்டம்-சாளைக்காடு, முதலியமிகுதிகாரணப்பெயர். எண்வகைக்காரணங்களால் காரணப்பெயர்வந்தவாறுகாண்க. அன்றியும். பலகாரணங்களால்வரினும்வருமக்காரணங்காட்டாது. ஒன்றன்பெயரை ஒன்றற்காக்கிவருவன. ஆகுபெயரெனப்படும். [உ-ம்.] புழுக்கப்பட்டசோற்றைப்புழுக்கல். எ-து. தொழிலாகுபெயர். புளியையுடையமரத்தினை. புளி. எ-து சினையாகுபெயர். கார்நிறத்தையுடையமேகத்தை. கார். எ-து. குணவாகுபெயர். பிற

வாகுபெயர். (சகூ-ஞ்சூத்திரத்திற்காண்க.) அன்றியும். பலகாரணங்களால்வந்தனவாகக்காட்டினும். அவ
ற்றின்பயவனைக்கொள்ளாது. இடுகுறியால்அக்காரணங்கவினைக்குறியாது. இதற்கிதுபெயரெனக்குறித்து
ஒருபொருளைத்தருவன. இடுகுறிப்பெயரெனப்படும். [உ-ம்] கறுப்பன் எ-து. குணக்காரணப்பெயரும்
அ அமுகன். எ-து. சிவனைக்காரணப்பெயரும், கூத்தன். எ-து. தொழிற்காரணப் பெயருமாயினும்.
இவைமுதலாயினஇதற்கிதுபெயரெனக்குறித்து மக்கட்காயினும்விலங்ட்காயினுஞ்சொல்லின்இடுகு
றிப்பெயராம். இவையேதனித்துந்தொகுத்தும், வழங்கும். [உ-ம்] கறுப்பன் கூத்தன், முதலியனதனித்
தியலிடுகுறிப்பெயராம். படை-சேவனை-நாடு-ஊர். முதலியனதொகுத்தியலிடுகுறிப்பெயராம். இவ்விருவ
கையாகும். இடுகுறிப்பெயர். அன்றியும். [உ-ம்] மரம்-மலை-கடல்-நிலம்-யாறு-சோறு. என்பன. இடு
குறிப்பொதுப்பெயர். விள-பலா-பலவின்-என்பன. இடுகுறிச்சிறப்புப்பெயர். பறவை-அணி-என்பன. கா
ரணப்பொதுப்பெயர். அன்னம்-மயில்-முடி-என்பன. காரணச்சிறப்புப்பெயர். முள்ளி-கறுப்பன்-அந்த
ணன் என்பன. காரணவிடுகுறிப்பெயர். முள்ளி. எ-து. முள்ளையுடையனவற்றையெல்லாம். உணர்த்து
ங்கால். காரணக்குறி. எ-ம். அவற்றுள்ஒருசெடியைமாத்திரம் உணர்த்துங்கால்காரணவிடுகுறி. எ-ம். கூறு
வர். கறுப்பன். எ-து. கறுப்பையுடையவனையுணர்த்துங்கால். காரணக்குறி. எ-ம். கறுப்பில்லாவனை உண
ர்த்துங்கால். இடுகுறி எ-ம். கூறுவர். வடநூலார். இடுகுறியை. ரூடி. எ-ம். காரணக்குறியை. யோகம்,
எ-ம். காரணவிடுகுறியை. யோகரூடி. எ-ம். கூறுவர். இவற்றைத்தனித்தனிவிளக்குதும. எ-று. (௨)

(௫௫-சூ) வேற்றுமைப்படுத்தலின்வேற்றுமையாமிவை,பெயர்ஐஆல்குஇன்அதுகண்விளியெட்டே

*எ-து.* பெயர்க்குரியவேற்றுமையாமாறுணர்த்துதும். எவ்வகைப்பொருளும் வேறுபட அத
ன்பெயரீறுகவரும் உருபெல்லாம்வேற்றுமையெனப்படும், இவற்றை வடநூலார் பிரத்தியமென்பர்.
அவையே பெயர்முதற்சூத்திரத்திற்காட்டிய எட்டெனக்கொள்க. எ-று. (௩)

(௫௬-சூ.) எழுவாயுருபா மியல்பிற்பெயரே, மீண்டதன்பொருளாம் வினைபெயர்வினாவே.

*எ-து.* முதல்வேற்றுமையிலக்கணமாமாறுணர்த்துதும். முதல்வேற்றுமைக்கு உருபாவது, தி
ரிபின்றித்தன்னியல்பாக நிற்கும்பெயர்தானேயாம். இதற்குப்பொருளாவன வினையைக்கொள்ளலும்,
பெயரைக்கொள்ளலும், வினாவைக்கொள்ளலும், இதற்குப்பொருள்களாம். [உ-ம்.] சாத்தன்வந்தான்,
கொற்றன்வாழ்க, அவன்பெரியன், என்பவை வினைகொளவந்தன. அரசனவன், ஆவொன்று, என்ப
வைபெயர்கொளவந்தன அவன்யாவன், அவள்யாவள், என்பவைவினாக்கொளவந்தன. பிறவும் - வினைமுத
ல், கருத்தா-செய்பவன், இவை யொருபொருட்கிளவி. வடநூலார் கருத்தாவென்பர். வினைமுதற்பொரு
ளாவது, தன்புடைபெயர்ச்சியாகிய செயலிற்சுதந்தரமுடையபொருளாம். வேந்தன்வந்தான், என்புழி
வேந்தன் என்கிறபெயர்ப்பொருளாகிய ஒருவன் தன்புடைபெயர்ச்சியாகிய வருதற்றொழிலிற்சுதந்தரமு
டையபொருளாய் வினைமுதலாதல்காண்க. இம்முதல்வேற்றுமைக்கு-ஐம்முதலிய உருபுகளின்றாயினுஞ்
சிறுபான்மைஆனவன்-ஆகின்றவன்-ஆவான்முதலாக ஐம்பாலினும்வருகிறசொல்லுருபுகளுண்டு [உ-ம்]
கொற்றனானவன்-கொற்றியானவள் - கொற்றரானவர்-கோவானது - கோக்களானவை-எனச் சிலவிடங்
களில்வரும். அன்றியுஞ் சாத்தனென்பவன், எனவருதலுமறிக. எ-று. (௪)

( ௫௭-சூ. ) இரண்டாவதனுருபை யேயதன்பொரு, ளாக்கலழித்த லடைதனீத்த, லொத்தலுடை
மை யாதியாகும்.

*எ-து.*இரண்டாம்வேற்றுமையிலக்கணமாமாறுணர்த்துதும். இரண்டாம்வேற்றுமைக்கு. உரு
பு - ஐ - ஒன்றேயாகும். இதற்குப்பொருள். ஆக்கல். அழித்தல். அடைதல். நீத்தல். ஒத்தல். உடைமை.
இவைமுதலியனவாம் [உ-ம்] அறத்தையாக்கினன். நாவலைச்சார்ந்தான், குடத்தைவனைந்தான், கோயிலைக்க
ட்டினன், இவைஆக்கப்படுபொருள். மரத்தைக்குறைத்தான், கயிற்றையறுத்தான், வினையைவென்றான்
பகையைக்கொன்றான், இவைஅழிக்கப்படுபொருள். தேனையூர்ந்தான், நாட்டைநண்ணினன், வீட்டை
மேவினன், அறத்தையடைந்தான், இவைஅடையப்படுபொருள், ஆசையைத்துறந்தான், அல்லலையொ
ழித்தான், காமத்தைநீத்தான், கலவைத்துறந்தான், இவைநீக்கப்படுபொருள், பொன்னையொத்தான், பு
லியைப்போன்றான், வேலைநிகர்த்தான். வெற்பையவனையான், இவைஒக்கப்படுபொருள், அருளையுடையா
ன். பொருளையுடையான், அறிவையுடையான், பொறையையுடையான், இவைஉடைமைப்பொருள், செ
யப்படுபொருளாவது. கருத்தாவின்றொழிற்பயனுறுவது. வருக்கையைவளர்த்தான், என்புழிமண்வெட்
டல். குழிதொட்டல். விதைநடுதல். புனல்விடுதன்முதலியசெயல்கருத்தாவின்றொழிலாம், தளிர்த்தல், பரு
த்தல், பூத்தல், காய்த்தன்முதலியகாரியம், அத்தொழிலின்பயனும், அப்பயனுக்கிடம்வருக்கையாதலால்,
வருக்கைசெயப்படுபொருளாம், அதனிலிருக்கும்பயனுக்கிடமாகுகை செயப்படுபொருண்மையாம், வரு
க்கை. எ-து. பலா. எட்டியைவெட்டினன். என்புழி. வாளால்வீசுதன்முதலியசெயல்கருத்தாவின்றொழிலா
ம் துண்டாதல் பிளவாதன்முதலியகாரியம். அத்தொழிலின்பயனும். அப்பயனுக்கிடம், எட்டியாதலால்.
எட்டிசெயப்படுபொருளாம். அதனிலிருக்கும்பயனுக்கிடமாகுகை செயப்படுபொருண்மையாம். கோட்
டையைக்கட்டினன். என்புழி கால்வெட்டல். நால்கட்டல், சேறிடுதல், கல்லடுக்கன்முதலியசெயல். கருத்தா
வின்றொழிலாம். மாடங்கூடமதின்மாளிகையாதன்முதலியகாரியம். அத்தொழிலின்பயனும், அப்பயனு
க்கிடங்கோட்டையாதலால், கோட்டைசெயப்படுபொருளாம். அதனிலிருக்கும்பயனுக்கிடமாகுகைசெ
யப்படுபொருண்மையாம். நகரையடைந்தான். என்புழி நடந்து செல்லன்முதலியசெயல்கருத்தாவின்றொ
ழிலாம். அடைதல்சேர்தன்முதலியகாரியம். அத்தொழிலின்பயனும், அப்பயனுக்கிடம்நகராதலால். நகர்
செயப்படுபொருளாம். அதனிலிருக்கும்பயனுக்கிடமாகுகை செயப்படுபொருண்மையாம். நாயகியைநீ

க்கினன். என்புழி வெறுத்தல் நீக்கல் முதலியசெயல். வினைமுதற்றொழிலாம், நீங்குதன்முதலியகாரியம், அத்தொழிலின்பயனும். அப்பயனுக்கிடநாயகியாதலால், நாயகிசெயப்படுபொருளாம். அவளிலிருக்கும் பயனுக்கிடமாகுகை செயப்படுபொருண்மையாம். குடத்தைநிகர்த்தான். என்புழி உபமானமாக்குகையா னிகர்த்தல். கருத்தாவின்றொழிலாம். அதனாலுளதாகியபயன், உபமானமாகுகை அதற்கிடங்குடமாதலால் குடஞ்செயப்படுபொருளாம். அதனிலிருக்கும்பயனுக்கிடமாகுகை செயப்படுபொருண்மையாம். பொருளையுடையான், என்புழி ஈட்டல்-கூட்டன்முதலிய செயல்செய்பவன்றொழிலாம் தனதாகக்கொள்ளுதன்முதலியகாரியம். அத்தொழிலின்பயனும். அப்பயனுக்கிடம்பொருளாதலால், பொருள்செயப்படுபொருளாம். அதனிலிருக்கும்பயனுக்கிடமாகுகைசெயப்படுபொருண்மையாம், செயப்படுபொருண்மூவகைப்படும். [உ-ம்] சோற்றையுண்டான். எ-து. கருத்துண்டாய்ச்செயப்படுவது. சோற்றைக்குழைத்தான். எ-து. கருத்தின்றிச்செயப்படுவது. பதரையுநெல்லையும் பணத்திற்குக்கொண்டான். எ-து. இருமையுமாய்ச்செயப்படுவது எ-ம். வரும். உண்டலைச்செய்தான், எ-து. அகநிலையாயிற்று. தன்னைப்புகழ்ந்தான், எ-து. செயப்படுபொருளேகருத்தாவாயிற்று. இச்செயப்படுபொருள் ஐயுருபோடன்றி மற்றையுருபுகளோடும்வரும் [உ-ம்.] அடிசிலடப்பட்டது, எழுவாய். அரிசியாலடிசிலாக்கினன், ஆல். மலையொடொக்குமலை, ஒடு. இவட்குக்கொள்ளுமிவ்வணிகலன், கு. பழியினஞ்சும்பாவலன். இன். பிள்ளைத்தமிழதுகுற்றங்கூறினர், அது. தலைவன்கட்சார்ந்தாள், கண். எ-ம். வரும். செயப்படுபொருள்குன்றாதன்வினைகளினும் பிறவினைகளினும் இரண்டுருபுகளியைந்திரண்டுசெயப்படுபொருள் வருதலுமுண்டு [உ-ம்] பசுவினைப்பாலைக்கறந்தான்-யானையைக்கோட்டைக்குறைத்தான், எ-ம். பகைவரைச்சிறைசாலையையடைவித்தான் - சாத்தனைச்சாதத்தையுண்பித்தான், எ-ம் வரும். முறையேகாண்க. செயப்படுபொருளை வடநூலார்-கர்மம், என்பர். காரியம், எ-ம். வரும். ஆதியென்றமிகையால் பலவகைவினைகளும் இதற்குப்பொருளாம். [உ-ம்.] வீட்டைவிரும்பினன்-நூற்பொருளையறிந்தான், என்பவற்றுள் விரும்பலும்-அறிதலுமுதலிய வினைமுதற்றொழில்களுக்கு வீடும்பொருளும் விடயமாயினும் இவையுஞ்செயப்படுபொருளாம். மற்றைவேற்றுமைகளுமிவ்வாறறிக. எ-று. (௫)

(௫௮-சூ.) மூன்றாவதனுருபாலானொடொடு, கருவிகருத்தா வுடனிகழ்வதன்பொருள்.

*எ-து.* மூன்றாம்வேற்றுமை யிலக்கணமாமாறுணர்த்துதும். மூன்றாம்வேற்றுமைக்கு, உருபு-ஆல்-ஆன்-ஒடு-ஓடு-இந்நான்குமாம், இதற்குப்பொருள் கருவிப்பொருளும், கருத்தாப்பொருளும், உடனிகழ்ச்சிப்பொருளுமாம். கருவி-காரணம், எ-து. இவை ஒருபொருட்கிளவி. கருவிப்பொருள் இருவகைப்படும். [உ-ம்.] மண்ணாற்குடத்தைவனைந்தான்-கண்ணாற்கண்டான் - உணர்வினாலுணர்ந்தான், இவைமுதற்கருவிப்பொருள். தண்டசக்கரத்தாற்குடத்தைவனைந்தான் - நாழியாலளந்தான், இவை துணைக்கருவிப்பொருள். கருத்தாப்பொருள் இருவகைப்படும், [உ-ம்.] அரசனாற்கோயிற்கட்டுவிக்கப்பட்டது-தேர்செய்விக்கப்பட்டது, இவைஏவுதற்கருத்தாப்பொருள், தச்சனாலாயகோயில்-கோட்டை, இவை இயற்றுதற்கருத்தாப்பொருள். வடநூலார்-எழுவாய்க்கருத்தவை, அபிபிதகருத்தன் எ-ம். மூன்றனுருபின்கருத்தவை அநபிபிதகருத்தன், எ-ம். ஏவுதற்கருத்தவை, ஏதுகருத்தன், எ-ம் இயற்றுதற்கருத்தவை-பிரயோசகிய கருத்தன், எ-ம். கூறுவர். உலகத்தோடொப்பவொழுகல்-தவத்தொடுதானஞ்செய்வார்-கனலொடுபுகை-குடையொடுநிழல்-நூலொடுபுகழ், இவை உடனிகழ்ச்சிப்பொருள். ஆல்-ஆன்-இவ்வுருபுகட்குக் கருத்தாவுங்காரணமுஞ்சிறந்தனவாம் ஒடு-ஓடு-இவ்வுருபுகட்கு உடனிகழ்ச்சிப்பொருள்சிறந்தனவாம். அன்றியும் ஆல்-ஆன்-நிற்குமிடங்கட்கு-கொண்டு, எ-து. உருபாம். [உ-ம்.] வாள்கொண்டுவெட்டினன், எனவரும். ஒடு-ஓடு நிற்குமிடங்கட்கு உடன், எ-து. உருபாம். [உ-ம்] மகனுடன்மருமகன்வந்தான், எனவரும். ஆல் - ஆன், உருபுகள் தொறுவெனும்பொருளையுந்தரும், [உ-ம்] ஊராலோராலயம், எ-து. ஊர்தோறுமோராலயம், எனவரும். ஆல்-ஆன்-சினைப்பொருளாகவும்வேற்றுமைசெய்யும். [உ-ம்] கண்ணாற்குருடன்-காலான்முடவன், எனவரும். ஒடு-ஓடு-நால்வகையாகவேற்றுமைசெய்யும். [உ-ம்] தொடியொடுதொல்கவின்வாடியதோள். எ-து. வேறுவினையுடனிகழ்ச்சிப்பொருள்-மலையொடுபொருதமாலியானை, எ-து. வினையில்பொருள். எழுத்தொடுபுணர்ந்தசொல் எ-து. ஒற்றுமைப்பொருள். பாலொடுதேன்கலந்தற்றே, எ-து கலப்புறுபொருள் சிறுபான்மை-கருவிப்பொருளானது எழுவாயுருபோடும், நான்கனுருபோடும், ஐந்தனுருபோடும், ஆறனுருபோடும்வரும். [உ-ம்.] கண்ணுன்தகாணும்-எழுவாய், கண்ணிற்குக்காணலாம்-கு கண்ணிற்காணலாம்-இன், கண்ணதுகாட்சி-அது, எனவரும். கருவியைவடநூலார்-கரணம், என்பர் எ-று. (௬)

(௫௯-சூ.) நான்காவதற்குருபாகுங்குவ்வே, கொடைபகைநேர்ச்சிதகவதுவாதல், பொருட்டுமுறையாதியி னிதற்கிதெனல்பொருளே.

*எ-து.* நான்காம்வேற்றுமையிலக்கணமாமாறுணர்த்துதும். நான்காம்வேற்றுமைக்கு. உருபு. கு-ஒன்றேயாகும். இதற்குப்பொருள், கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, இவைமுதலியனவாம், [உ-ம்] புலவற்குப்பொன்னைக்கொடுத்தான் என்புழி. பொன்-கொடைப்பொருளா அதனோடுசம்பந்தமுடையபொருள். புலவனாதலால் புலவன்கோளிப்பொருள், கொடுத்தலும். ஏற்றலும் பலவகைப்படும். [உ-ம்] அரசனுக்கமைச்சனணிகொடுத்தான். எ-து. இழிந்தோனளித்தல். அமைச்சனுக்கரசனுடையளித்தான். எ-து. உயர்ந்தோனளித்தல். பாண்டியனுக்குவிருந்திட்டான் சோழன். எ-து. ஒப்போனளித்தல். கள்ளனுக்குக்கசையடிகொடுத்தான். எ-து. வெறுப்பாயளித்தல். கணவனுக்கின்பங்கொடுத்தாள். எ-து. விருப்பாயளித்தல், மருமகனுக்குமகளைக்கொடுத்தான், எ-து. வழக்கத்திலளித்தல். மகனுக்கரசுகொடுத்தான். எ-து. உரிமையிலளித்தல். அரசனுக்குத்திறைகொடுத்தான், எ-து. அச்சத்தில

ளித்தல். தாய்தந்தைக்குத்திவசங்கொடுத்தான், எ-து. பாவனையிலளித்தல். இவைகொடைப்பொருள், தனக்குத்தான்சோறிட்டான். எ-து. ஈவோனேற்றல். குருவிற்குக்குடைகொடுத்தான். எ-து. மிக்கோனேற்றல் சோற்றிற்குநெய்விட்டான். எ-து. உணர்வின்றியேற்றல். ஆவிற்குநீர்விட்டான். எ-து. சேளாதேற்றல் இரப்போர்க்கீந்தான், எ-து. கேட்டேயேற்றல், மாணாக்கனுக்கறிவுகொடுத்தான், எ-து. எலாதேற்றல். இவையேற்றல், மக்கட்குப்பகை, வெகுளிதன்னோய்க்குத்தானேமருந்து. பாம்புக்குப்பகை. கருடன், எலிக்குப்பகை பூனை. இவைபகைப்பொருள். அறத்திற்குப்பொருணேர்ந்தான். விளக்கிற்குநெய். இவை நேர்ச்சிப்பொருள். புலவர்க்குரித்தேபுகழ், அறத்திற்குத்தக்கதருள். இவை தகுதிப்பொருள். ஆடைக்குநூல் ஆழிக்குப்பொன். இவைமுதற்காரணகாரியமாகிய அதுவாதற்பொருள், முதற்காரணம். ஆதிகாரணம் சமவாயிகாரணம், முக்கியகாரணம். என்பன ஒருபொருட்கிளவி. கூலிக்குழைத்தான் கூழிற்குக்குற்றேவல். இவைநிமித்தகாரணகாரியமாகியபொருட்டுப்பொருள். எனக்குத்தாய்-உனக்குமகள். இவைமுறைப்பொருள். ஆதியென்றமிகையால்-கைக்குக்கடகம். கரும்பிற்குவேலி, மயிருக்கெண்ணெய். உயிருக்குண்டி நாய்க்குநட்பு-தாய்க்குக்காதல், எனக்குநல்லவன்-அரசற்கமைச்சன்-ஊர்க்குப்பொய்கையணி, பொய்கைக்கணி-கான்யாறு. எ-ம். வரும். சிறுபான்மைகோடற்பொருளானது எட்டாம்வேற்றுமையொழிந்தமற்றையுருபுகளோடும்வரும் [உ-ம்] இரப்பவரென்பெறினுங்கொள்பவர். எழுவாய்.செய்யவடவ்வையைக்காட்டிவிடும். ஐ. நாகரார்ப்பலி-ஆல்-நாகரினன்புசெய்தான். இன். நாகரது-பலி-அது-ஊர்க்கட்சென்றான், கண்-எனவரும். இதனைவடநூலார்சம்பிரதானமென்பர். எ-று. (௭)

(௫௰-சூ.) ஐந்தாவதற்குரு பில்லுமின்னு, நீங்கலொப்பெல்லை யேதுப்பொருளே.

*எ-து.* ஐந்தாம்வேற்றுமையிலக்கணமாமாறுணர்த்துதும். ஐந்தாம்வேற்றுமைக்கு-உருபு-இல்-இன்-என இவ்விரண்டுமாகும், இதற்குப்பொருள் நீக்கப்பொருளும்-ஒப்புப்பொருளும்-எல்லைப்பொருளும்-ஏதுப்பொருளுமாம். [உ-ம்.] ஊரினீங்கினான், எ-ம்—குறள் — தலையினிழிந்தமயிரனையர்மாந்தர், நிலையினிழிந்தக்கடை. எ-ம். இவை நீக்கப்பொருள். காக்கையிற்கரிது களம்பழம், எ-ம்—குறள்—சிறுமைபலசெய்துசீரழிக்குஞ்சூதின், வறுமைதருவதொன்றில். எ-ம். இவை ஒப்புப்பொருள், அதனின்மெல்லிது-அதனிற்பெரிது, இவை ஒப்பொடுநீங்கல். திருக்காவலூரின்மேற்கு - யாற்றின்வடக்கு-மதுரையின்வடக்குச்சிதம்பரம், இவை எல்லைப்பொருள். அறிவிற்பெரியன் - பொருளின்மெலியன், எ-ம். இவை ஏதுப்பொருள்-சிறுபான்மை. இவ்வைந்தனுருபு, மூன்றனுருபோடும், நான்கனுருபோடும்வரும் [உ-ம்.] பாம்பினிற்கடைந்தகடல்-வாளின்வெட்டினான். ஆல். சிதலெறும்பாதிமூக்கறிவின்மூவறிவுயிர்க்கு எ-ம். வரும். மதுரையைநீங்கினான். என இரண்டனுருபோடுநீக்கப்பொருளும் புதுவைக்குத்தெற்குப் புலியூர். என நான்கனுருபோடு எல்லைப்பொருளும். வந்தவாறறிக. வடநூலார் நீக்கப்பொருளை அபாதானமெ-ம். எல்லைப்பொருளை அவதி எ-ம். கூறுவர். சிறுபான்மை. இல்-இன்-இவ்வுருபுகளோடு-உம் சேர்ந்துவரும். [உ-ம்.] அவனினும்பாமரன்-இவனினும்பெரியன். எனவரும். இல் இன் எல்லைப்பொருளில். ஐயுருபோடுகாட்டினும் பார்க்கினுஞ்சேர்ந்து சொல்லுருபுகளாகவரும். [உ-ம்] அவனைக்காட்டினும்வல்லவனிவன் இவனைப்பார்க்கினுமூடனவன் எனவரும், நீக்கப்பொருளில். இல் இன் உருபுகளின் மேல்நின்று இருந்து தனித்தும். உகரம்பெற்றுஞ் சொல்லுருபுகளாகவரும், [உ-ம்] ஊரினின்றுநீங்கினான்-ஊரிலிருந்துபோனான் ஊரினின்றும்வந்தான்-ஊரிலிருந்தும்போனான். எ-ம். வரும் எ-று. (௮)

(௫௧-சூ.) ஆறனொருமைக்கதுவுமாதுவும், பன்மைக்கவ்வுமுருபாம்பண்புறுப், பொன்றன்கூட்டம்பலவினீட்டந், திரிபினாக்கஞ்சேர்ந்ததற்கிழமையும், பிறிதின்கிழமையும்பேணுதல்பொருளே.

*எ-து* ஆறும்வேற்றுமையிலக்கணமாமாறுணர்த்துதும். ஆறும்வேற்றுமைக்கு, உருபு-அது-ஆது-அ-இம்மூன்றுமாகும். ஒருமைப்பெயர்க்கு-அது-ஆது-உருபாம். பன்மைப்பெயர்க்கு, அ-உருபாம். இதற்குப்பொருள், குணம்-உறுப்பு-ஒருபொருட்டிரட்சி-பலபொருட்டிரட்சி-ஒன்றுதிரிந்தொன்றாதல், ஆகியதற்கிழமை ஐந்தும், பிறிதின்கிழமைமூன்றும், இவைமுதலியனவாம். தன்னோடொற்றுமையுடையபொருள்-தற்கிழமை-தன்னின்வேறாகியபொருள்-பிறிதின்கிழமை, கிழமை. எ-து. உரிமை. [உ-ம்] எனதுகை-எனாதுகை-நினதுநிலம்-நினாதுநிலம், ஒருமையில்-அது-ஆது, வந்தன. எனகைகள்-தனதாள்கள்-புலியநகங்கள், பன்மையில் - அ - வந்தது—சிந்தாமணி—நுனசீறடிநோவநடந்துசெலே, லெனதாவியகத்துறைவாயெனுநீ, புனைதாரவனேபொய்யுரைத்தவையால், விலையேனொழியத்தனியேகினையே. எம் வரும். தற்கிழமை. [உ-ம்] காக்கையதுகருமை-கொக்கதுவெண்மை-இவை பண்புத்தற்கிழமை. சாத்தனதுகை-யானையதுகோடு - செய்யுளதடி-இவை உறுப்புத்தற்கிழமை. நெல்லதுகுப்பை-மாந்தரதுதொகுதி-எள்ளதீட்டம்-இவை ஒன்றன்கூட்டத்தற்கிழமை. படையதுதொகை-விலங்கினதீட்டம்-இவை பலவின்கூட்டத்தற்கிழமை. மஞ்சளதுபொடி - நெல்லதுசோறு-இவை ஒன்றுதிரிந்தொன்றாயதன்றற்கிழமை. சில்நூலார், சாத்தனது செலவு-வருகை-இருக்கை-இவைதொழிற்றற்கிழமை என்பர். பிறிதின்கிழமை [உ-ம்] சாத்தனதாடை-அரசனதாழி-ஆவினதுகன்று-இவை பொருட்பிறிதின்கிழமை. சாத்தனதுவீடு-புலியதுகாடு-இவை இடப்பிறிதின்கிழமை. புதனதுவாரம் - மன்மதனதுவேனில் - இவைகாலப்பிறிதின்கிழமை. இச்சம்பந்தப்பொருள் இம்மூவுருபுகளோடன்றிஐந்தனுருபோடும் எழனுருபோடும்வரும். [உ-ம்.] தருவினீங்கினகொம்பு-இன், உயிரின்கண்ணுணர்வு-கண்எ-ம். வரும். சிறுபான்மை உடையவென்னுஞ்சொல்லுருபாயினும் குவ்வுருபாயினும்வரும். [உ-ம்.] சாத்தனுடையமகன்-மகள், சாத்தனுக்குமகன்-மகள், எ-ம் வரும். ஒரோவிடத்து அவனதுமனையாள்-அரனதுதோழன் என உயர்திணையில்-அது-வருபும் வரும் வடநூலார்-சம்பந்தப்பொருளை-சேஷார்த்தம் என்பர், எ-று. (௯)

(சூஉ-சூ.) ஏழனுருபுகண்ணாதியாகும், பொருண்முதலாறுமோரிருகிழமையி, னிடனாய்நிற்றலிதன்பொருளென்ப.

*எ-து.* ஏழாம்வேற்றுமையிலக்கணமாமாறுணர்த்துதும். ஏழாம்வேற்றுமைக்கு உருபுகண்முதற்பலவுமாம். இதற்குப்பொருள் பொருளிடங்காலஞ்சினைகுணந்தொழிலென்றிவ்வாறுந் தற்கிழமையானும்பிறிதின்கிழமையானும் ஒன்றற்கிடனாய்நிற்ப இதற்குப்பொருளாம். பொருளிடமாதற்கு. [உ-ம்.] மணியின்கண்ணொளி, தற்கிழமைப்பொருட்கிடம், பனையின்கட்கிளி. பிறிதின்கிழமைப்பொருட்கிடம். இடமிடமாதற்கு [உ-ம்.] கடலின்கட்டிரை. தற்கிழமைப்பொருட்கிடம்: ஆகாயத்தின்கட்பறவைபிறிதின்கிழமைப்பொருட்கிடம், காலமிடமாதற்கு. [உ-ம்.] நாளின்கண்ணாழிகை. தற்கிழமைப்பொருட்கிடம் காரின்கண்முல்லைபிறிதின்கிழமைப்பொருட்கிடம். சினையிடமாதற்கு. [உ-ம்] கையின்கண்விரல். தற்கிழமைப்பொருட்கிடம், கையின்கட்கடகம். பிறிதின்கிழமைப்பொருட்கிடம். குணமிடமாதற்கு, [உ-ம்.] நிறத்தின்கண்ணெழில். தற்கிழமைப்பொருட்கிடம், இளமைக்கட்செல்வம். பிறிதின்கிழமைப்பொருட்கிடம். தொழிலிடமாதற்கு. [உ-ம்.] ஆடற்கட்சதி. தற்கிழமைப்பொருட்கிடம். ஆடற்கட்பாட்டு. பிறிதின்கிழமைப்பொருட்கிடம் அன்றியுங்கண்முதற்பலவும் இதற்குருபென்றமையால், இங்ஙனங்கண்ணென்பதிடத்தைக்குறித்தலின் எவ்வகையிடத்திற்குமேற்றபெயரொல்லா மிதற்குருபாகவேற்பன. கண்முதலாகவிருபத்தெட்டும் இடப்பொருள்காட்டும் உருபுகளென்றுநன்னூலில்விரித்துத்தந்தது. (சூ) கண்கால்கடையிடைதலைவாய்திசைவயின், முன்சார்வலமிடமேல்கீழ்புடைமுதல், பின்பாடளைதேமுழைவழியுழியுளி, யுள்ளகம்புறமில்லிடப்பொருளுருபே. இதற்கு [உ-ம்] ஊர்க்கணிருந்தான்-கண். ஊர்க்காலிவந்தபொதும்பர்-கால். வேலின்கடைமணிபோற்றிண்ணியான்-கடை நல்லாரிடைப்புக்கு-இடை. வலைத்தலைமானன்னநோக்கியர்-தலை, குரைகடல்வாயமுதென்கோ-வாய், தேர்த்திசையிருந்தான்-திசை, அவர்வயிற்செல்லாய்வயின்-கற்றார்முற்றோன்றாகழிவிரக்கம்-முன்-காட்டுச்சாரோடுங்குறுமுயால்-சார். கைவலத்துள்ளதுகொடுக்கும்-வலம். இல்லிடப்பரத்தை-இல்-தன்மேற்கடுவரைநீரிற்கடுத்துவரக்கண்டும்-மேல். பிண்டிக்கண்ணார்நிழற்கீழெழுந்தமடிகள்-கீழ். எயிற்புடைநின்றான்-புடை. சுரன்முதல்வந்தவுரன்மாய்மாலை-முதல். காதலிபின்சென்றதம்ம. பின்-யாம்பாடவண்ணயாதநாள. பாடு-கல்லளைச்சுனைநீர். அளை-தோழிக்குரியவைகோடாய்தேத்து. தேம்-அவனுழைவந்தான். உழை-நின்றதோர்நறவேங்கைநிழல்வழியசைந்தன்ன. வழி-உறையுழியோலைபோல. உழி-குயில்சேர்குளிர்காவுளிசேர்ந்துறையும். உளி-முல்லையங்குவட்டுள்வாழும். உள்-பயன்சாரப்பண்பில்சொற்பல்லாரகத்து. அகம்-செல்லுமென்னுயிர்ப்புறத்திறுத்தமருண்மாலை. புறம்-ஊரிலிருந்தார். இல்-கண்ணகன்ஞாலம், வீட்டின்புறத்திலிருந்தான். எ-ம். வரும். இவ்வுருபுகட்குஇன்னும்வேறுபொருளுண்டு கூட்டிப்பிரிக்குங்கூட்டமும் பிரித்துக்கூட்டுங்கூட்டமும். இருவரின்முடியுமொருவினைத்தொழிலுமாகியவிடமில்லாதவிடங்களும் அவ்வுருபுகளின்பொருளாம். [உ-ம்.] குறிலைந்தனுள்-அ-இ-உ-என்னுமிம்மூன்றுஞ்சுட்டு, அவருள்வல்லவனிவன்கூட்டிப்பிரிக்குங்கூட்டம் விஞ்ஞையில்லாதவனைவிலங்கினுள்வைத்தெண்ணப்படும், பிரித்துக்கூட்டுங்கூட்டம். வித்தையுள்ளவனைவிண்ணவருள்வைத்தெண்ணப்படும் அவனுமிவனும்போர்செய்தற்கண்மழைபெய்தது சூதாடற்கட்டுக்கம்வந்தது. இருவரின்முடியுமொருவினைத்தொழில் எ-ம் வரும். சிறுபான்மை-இவ்விடப்பொருள், எழுவாயுருபோடும்-இரண்டனுருபோடும்-நான்கனுருபோடும்வரும். [உ-ம்.] தான்போதிகையைத்தொட்டது, எழுவாய்-தூணைச்சார்த்தான்-ஐ-இன்றைக்குவருவான்-கு எ-ம். வரும். இதனைவடநூலார். அதிகரணமென்பர். எ-று. (௰)

(சூங-சூ.) அதனோடைடம்முதலாறுமேற்கும்.

*எ-து.* இனிச்சிலவிசற்பமாமாறுணர்த்துதும் அதுவென்பதுஆறும்வேற்றுமைக்குஉருபாமெனினும், அதுவேமுதற்பெயரோடுகூடிஅன்சாரியைபெற்றுஐம்முதல்கண்ணீறாகிய ஆறுருபுகளோடுபுணர்ந்துவருமெனக்கொள்க. [உ-ம்] சாத்தனதனை-சாத்தனதனால்-சாத்தனதற்கு-சாத்தனதனின் சாத்தனது சாத்தனதன்கண். எ-ம் வரும். —நன்னூல்— ஆறனுருபுமேற்குமவ்வுருபே. எ-து.மேற்கோள். எ-று. (௰க)

(சூச-சூ.) ஐ ஆன்குச்செய்யுட்கவ்வுமாகு, மாகாவஃறிணைக்கானல்லாத.

*எ-து* சிலவேற்றுமையுருபுதிரிதற்குப்புறனடையாமாறுணர்த்துதும் செய்யுளிடத்துயர்திணைப்பெயரொடுவந்த. ஐ ஆன் கு என்னுமூன்றுவேற்றுமையுருபுகடிரியவும்பெறுந்திரிந்துழி அகரமாமெனக்கொள்க [உ-ம்.] காவலோனைக்களிறஞ்சும். எ-து. காவலோனக்களிறஞ்சும். எ-ம். புலவரானுரைத்தநூல் எ-து. புலவரானவுரைத்தநூல். எ-ம். கடிநிலையின்றேயாசிரியற்கு. எ-து. ஆசிரியற்க. எ-ம். வரும் அஃறிணைப்பெயர்களோடோவெனில். ஆனெனுமுருபுதிரியவும்பெறும் ஒழிந்த ஐயும் குவ்வுந்திரியா [உ-ம்.] புள்ளினானெழுந்தவோதை எ-து. புள்ளினனவெழுந்தவோதை. எ-ம். வரும். ஆயினுமிவையெலாஞ்சிறுபான்மையெனக்கொள்க எ-று. (௰உ)

(சூரு-சூ) உவ்வீறுவினைச்சுட்டெண்ணிவைவேற்றுமை, வழியன்சாரியைமருவவும்பெறுமே, யற்றும்பன்மையாம்வினைச்சுட்டென்ப, வவ்விறுமஃறிணைப்பன்மைக்கற்றே

*எ-து.* ஐம்முதலாறுருபுஞ் சாரியையும் புணர்ச்சியாமாறுணர்த்துதும். உகரவீற்றுவினைப்பெயருஞ்சுட்டுப்பெயரும் எண்ணின்பெயரும் ஐம்முதலாறு வேற்றுமையுருபுகளோடுபுணருங்காலும். வேற்றுமைப்பொருளாய் மற்றொருபெயரொடுதொடருங்காலும் அன்சாரியையணையவும்பெறும். [உ-ம்] யாதனையுமியான். யாதன்கொம்பு. எ-ம். அதனை-இதனை-உதனை-அதனியல்பு-இதனிலை-உதன்வழி. எ-ம். ஒன்றனை-இரண்டனை-மூன்றனை-ஒன்றன்பால்-ஆறனுருபு-எட்டனியல்பு. எ-ம் மூவகைப்பெயருமிருவழி. அன்சாரியைபெற்றவாறுகாண்க. மருவவுமென்றும்மைவந்தமையாலச்சாரியையின்றியும் வேற்று

மைப்புருபுபெறுமென்றுணர்க [உ-ம்] யாதை-அதை-ஒன்றை-பிறவுமன்ன. மீளவும்பொதுமுறையால். இன்சாரியைபெற்றுவரும் [உ-ம்] யாதினால்-அதினால்-ஒன்றின்முதலிய. எ-ம். தொடர்மொழியாகவிற்புழி. அன்-இன்-என்றிருசாரியையுமிலொன்றின்றிவழங்கா. இதன்பொருள். இதின்பொருள் ஒன்றன்பால். ஒன்றின்பால். எ-ம். பிறவுமன்ன. இவற்றுள்ளும் அன்சாரியைசிறப்பெனக்கொள்க. அன்றியுஞ்சுட்டுச்சொற்பன்மை. [உ-ம்] இவை-அவை-உவை-இவ்-அவ்-உவ். எ-ம். வினச்சொற்பன்மை. [உ-ம்.] எவை, எவ், யாவை, எ-ம். இவையெலாம் அற்றுச்சாரியைபெற்றுருபுபோடுபுணரும் [உ-ம்.] இவற்றை- அவற்றை-உவற்றை-எவற்றை-யாவற்றை எ-ம் பிறவுமன்ன. மீளவும். அற்றுச்சாரியையோடு இன்சாரியைபெற்றுருபோடுபுணரவும்பெறும். [உ-ம்.] இவற்றினை-இவற்றினால்-இவற்றிற்கு-இவற்றினின்-இவற்றினது-இவற்றின்கண். எ-ம். பிறவுமன்ன. அன்றியுமினிச்சொல்லும்படி அஃறிணைப்பெயருட்சிலபன்மையில். அ, வெனமுடியும். இவையெல்லாம், அற்றுச்சாரியைபெற்றுருபோடுபுணரும். [உ-ம்.] பல-பலவற்றை, சில-சிலவற்றை, அரிய-அரியவற்றை-பறப்பன-பறப்பனவற்றை, எ-ம் பிறவுமன்ன. எ-று. (௰௩)

(௬௬-சூ.) எல்லாமென்பதிழிதிணையாயி, னற்றோடுருபின்மேலும்முறுமே, யன்றேனம்மிடையடைந்தற்றுது, மெல்லாருமெல்லீருமென்பவற்றும்மை, தள்ளிநிரலேதம்நும்சாரப், புல்லுமுருபின்பின்னரும்மே.

*எ-து.* இதுவுமது, எல்லாமெனும்பெயர் அஃறிணையானகாலை அற்றுச்சாரியையுமுருபின்மேலும்மையும்பெறும். [உ-ம்.] எல்லாவற்றையும் எல்லாவற்றோடும். எ-ம். அவ்வாறடைமொழியாகவரினுமாம். [உ-ம்.] எல்லாவற்றுத்தலையும். எல்லாவற்றுக்காதும், எ-ம். அதுவே உயர்திணையானகாலை இடையே. நம்மெனுஞ்சாரியையுருபின்மேலும்மும்பெறும் [உ-ம்] எல்லாநம்மையும்-எல்லாநம்மாலும். எ-ம். அவ்வாறடைமொழியாக எல்லாந்தலையும் எல்லாங்காதும் எ-ம். அன்றியும். எல்லாருமெல்லீருமென இருமொழியுமீற்றும்மை. ஒழிந்துமுறையே. தம் நும் எனச்சாரியையுமுருபின்மேலும்மையும் பெறும். [உ-ம்.] எல்லார்தம்மையும், எல்லார்தம்மாலும், எ-ம். எல்லீர்நும்மையும். எல்லீர்நும்மாலும், எ-ம். அவ்வாறடைமொழியாக, எல்லார்தங்காதும், எல்லீர்நுங்காதும். எ-ம். வரும் பிறவுமன்ன. எ-று. (௰௪)

(௬௭-சூ.) ஆமாகோனவ்வணையவும்பெறுமே.

*எ-து.* இதுவுமது, ஆ மா கோ என்னுமிம்முப்பெயரும், னவ்வெனுஞ்சாரியைபெற்றுருபோடுபுணரும் [உ-ம்.] ஆன் மான் கோன் ஆனை மானை கோனை ஆனால் மானால் கோனால் எ-ம். பிறவுமன்ன. அவ்வாறடைமொழியாக. ஆன்கன்று, மான்றலை, கோன்குணம். எ-ம். வரும். பிறவுமன்ன. இங்ஙனம்-மா. எ-து. விலங்கு மரம் இவையெனக்கொள்க. அன்றியும். னவ்வணையவுமென்றமையா லச்சாரியையணையாமலும்பொதுவழியால் உருபுபெற்றுவரும், [உ-ம்.] ஆவை-ஆவினை - மாவை-மாவினை-கோவை-கோவினை எ-ம். வரும். பிறவுமன்ன. எ-று. (௰௫)

(௬௮-சூ.) தான்-தாம்-நாமுதல் குறுகும்யான்யாம், நீ நீர் என்எம் நின்நும்ஆம்பிற, குவ்வின்அவ் வருநான்காறிரட்டா

*எ-து* இதுவுமது, தான்-தாம்-நாம்-என முப்பெயருமுதலுயிர்குறுகி. தன்-தம்-நம்-எனவாகி ஐம்முதலாமுருபுகளைப்பெறும். அன்றியும் யான். எ-து. என், யாம், எ-து. எம், நீ, எ-து. நின். நீர், எ-து. நும். எனவாகி அவ்வுருபுகளைப்பெறும். அன்றியும்-குவ்வெனும் நான்காம்வேற்றுமையில்-அ-எனுஞ்சாரியை பெற்றுக் ககரமிரட்டும், அன்றியுமெழுத்தின்விகாரங்களுட்சொன்னபடி தனிக்குறிலீற்ற வொற்றெழுத்துயிர்வரினிரட்டுமென்றமையான்மற்றவிடத்தீற்றுமெய்யெழுத்திரட்டி நான்காம்வேற்றுமையிடத்தும் ஆறாம்வேற்றுமையிடத்து முயிரொடுபுணரினுமிரட்டா [உ-ம்.] தன்னை - தன்னால்-தனக்கு-தன்னின்-தனது, தன்கண். எ-ம். தம்மை-நம்மை, என்னை-எம்மை, நின்னை-நும்மை, எ-ம். பிறவுமன்ன. நீர். நீவிர்-நீயிர்-ஒருவழியாகநும்மாம். அன்றியுஞ்சூத்திரத்துட்பிறவென்றதனால் நீ எ-து. உன்-நுன்-எ-ம். நீர், எ-து. உம்-நும், எ-ம். வரும். அன்றியுமிவையெல்லாந்தம்மொற்றிரட்டினவிடத்துஞ் செய்யுள்வேண்டுழி இரட்டாமல்வரவும்பெறும் [உ-ம்.] எனை-நினை, நமை-நுமை, தனை-தமை, எ-ம். பிறவுமன்ன. எ-று (௰௬)

(௬௯-சூ.) எட்டனுருபேயெய்துபெயரீற்றின், றிரிபுகுன்றன்மிகுதலியல்பயற், றிரிபுமாம்பொருள்படர்க்கையோரைத், தன்முகமாகத்தானழைப்பதுவே.

*எ-து.* எட்டாம்வேற்றுமையிலக்கணமாமாறுணர்த்துதும். எட்டாம்வேற்றுமைக்குஉருபுதன்பெயரீற்றினது திரிபும். ஈற்றினதுகேடும், மிகுதலும், இயல்பும், ஈற்றயலின்றிரிபும், ஈறுகெடுதலுமீற்றயற்றிரிதலும் ஈறுகெட்டீற்றயறிரிந்தேமிகுதலுமாம். இதற்குப்பொருள். அழைப்பது-அழைத்தலும்விளித்தலுமாக்கும், இஃதுவிளிவேற்றுமை, விளித்தற்குச்சருவியானவுருபை. விளி எ-து. சாரியவாகுபெயர். [உ-ம்.] நம்பீ-அன்னாய்-தன்பெயரீற்றினதுதிரிபு. ஐய மன்ன-ஈற்றினதுகேடு. ஐயனே-மன்னனே மிகுதல், ஐயன்கூறாய்-நம்பிவாராய், இயல்பு-ஐயான்கேள் ஊரீர்வம்மின். ஈற்றயலின்றிரிபு. ஐயா-கண்ணா-ஈறுகெட்டீற்றயற்றிரிதல், ஐயாவே-கண்ணாவே. ஈறுகெட்டீற்றயற்றிரிந்தீற்றின்மிகுதல். இவ்வாறெல்லாப்பெயர்க்குமேலாமையால் வேறுவேறுசத்தருவோம், அவற்றைத்தத்தமிடத்திற்காண்க. இதனைவடநூலார். சம்போதனமென்பர். எ-று. (௰௭)

(௭௰-சூ.) எப்பெயர்க்கண்ணுமியல்புமேயு, மிகரநீட்சியுமுருபாமன்னே.

*எ-து.* மூவகைப்பெயர்களுக்கும்பொதுவாகியவிளியுருபாமாறுணர்த்துதும்; உயர்திணைப்பெயர்க்கும். அஃறிணைப்பெயர்க்கும். பொதுப்பெயர்க்கும். விளியுருபாவன. இயல்பாதலும் எகாரமிகுதலும் இகரமீகாரமாதலுமாம். [உ-ம்] முனிகூறாய். நம்பிகூறாய்-வேந்துகூறாய், ஆடூஉக்கூறாய். விட

விகூறாய்-கோக்கூறாய்-இறைவன்கூறாய், மகள்கூறாய், மாந்தர்கூறீர். குருசில்கூறாய், ஆய்கூறாய்-இயல்பாயின. வேந்தே-வேளே-மாந்தரோ-சேயே. எகாரமிக்கன. நம்பீகூறாய்-தோழீவாராய். இகரமீகாரமாயின. இவை உயர்திணைப்பெயரில்வந்தவிளி. புறாவழகியை-தும்பியினியை, விகொடியை வண்டுகொடியை பூக்கொடியை-சேக்கொடியை, வாடைகொடியை-நோக்கொடியை, அன்னங்கூறாய்-மான்கூறாய், பேய்கொடியை-சூர்கொடியை, வேல்கொடியை, யாழினியை, தேள்கொடியை, இயல்பாயின. புறாவே-சுறாவே, கிளியே-அளியே, எகாரமிக்சன. கிளீ-தும்பீ இகரமீகாரமாயின. இவை அஃறிணைப்பெயரில் வந்தவிளி. பிதாவுளையாய்-நம்பிநல்காய், ஆண்கூறாய் தாய்சேளாய் இயல்பாயின. ஆணே-பெண்ணே-தாயே, பிதாவே, எகாரமிக்சன. சாத்தீ-கொற்றீ-இகரமீகாரமாயின. இவை பொதுப்பேரில்வந்தவிளி. மன்னேயென் றமிசையால். இவ்வுருபுகள்சிலவற்றிற்குப்பொருந்தாமையாயினுங்கொள்க. எ-று. (மஅ)

(எசு-சூ.) ஐயிறுபொதுப்பெயர்க்காயுமாவு, முருபாமல்லவற்றாயுமாகும்.

* எ - து. * ஐகாரவீற்று முப்பெயர்க்கும் விளியுருபாமாறுணர்த்துதும். ஐகாரவீற்றுப்பொதுப்பெயர்க்கு. ஆய்-ஆ-உருபாம். உயர்திணை அஃறிணைப்பெயர்க்கு. ஆய்-உருபாம். [உ-ம்.] அன்னை அன்னாய், அன்னா, பொதுப்பெயர்க்கு. ஆயும்-ஆவும். வந்தன. விடலை-விடலாய், மடந்தை-மடந்தாய் என. உயர்திணைப்பெயர்க்கு. ஆய்வந்தது நாரை-நாராய், கொன்றை-கொன்றாய், என. அஃறிணைப்பெயர்க்கு. ஆய் வந்தது. எ-று. (மகூ)

(எஉ-சூ.) ஒருசார்னவ்வீற்றுயர்திணைப்பெயர்க்கண், ணளபீறழிவயனீட்சியதனோடு, டீறுபோதல வற்றோடோவுற, வீறழிந்தோவரலிறுதியவ்வாத, லதனோடயறிந்தேயுறலீறழிந், தயலேயாதலும்விளியுருபாகும்.

*எ - து.* னகாரவீற்றுயர்திணைப்பெயர்க்கு விளி யுருபாமாறுணர்த் துதும். னகாரவீற்றுஉயர்திணைப்பெயர்க்கு. விளி உருபு அளபெழல் ஈறழிவு அயனீளல். அயனீண்டீறுகெடுதல். ஈறுகெட்டயனீண்டோகாரமிகல். ஈறழிந்தோகாரமிகல். இறுதியவ்வாதல், இறுதியவ்வாயீற்றயலாகாரமோகாரமாயேகாரமிகல் ஈறழிந்தயலிலகரமேகாரமாதல், இவையாகும். [உ-ம்.] கிழான்-கிழாஅன், பெருமான் பெருமாஅன், அளபெழுந்தன. இறைவன்-இறைவ, நாதன்-நாத, ஈறழிந்தன. ஐயன்-ஐயான், நம்பன்-நம்பான், அயனீண்டன. இறைவன்-இறைவா, மன்னன்-மன்னா, அயனீண்டீறுகெட்டன. ஐயன்-ஐயாவோ-நண்பன்-நண்பாவோ - ஈறுகெட்டயனீண்டோகாரமிக்கன. திரையன், திரையவோ, பெருமான் பெருமாவோ, ஈறழிந்தோகாரமிக்கன. மலையான்-மலையாய், பூணன்-பூணாய், உண்டான் - உண்டாய், இறுதியவ்வாயின. வாயிலான்-வாயிலோயே, உண்டான் - உண்டோயே, இறுதியவ்வாயீற்றயலாகாரமோகாரமாயேகாரமிக்கன முருகன்-முருகே, ஐயன்-ஐயே-அண்ணன்-அண்ணே, ஈறழிந்தயலிலகரமேகாரமாயின. பிறவுமன்ன. எ-று. (உம)

(எங-சூ.) ளஃகானுயர்பெயர்க்களபீறழிவய, னீட்சியிறுதியவ்வொற்றாத, லயலிலகரமேயாதலும் விளித்தனு.

*எ - து.* ளகாரவீற்றுயர்திணைப்பெயர்க்கு விளியுருபாமாறுணர்த்துதும். ளகாரவீற்றுஉயர்திணைப்பெயர்க்கு. விளி உருபு அளபெழல். ஈறழிதல்-ஈற்றயனீளல், ளவ்வொற்றுயவ்வொற்றாதல் ஈற்றயலகரமேகாரமாதல். இவையாகும். [உ-ம்.] வேள்-வேஎள், அளபெடுத்தது. கண்ணாள்-கண்ணா, குழலாள்-குழலா, ஈறழிந்தன. நமர்கள்-நமர்காள், மக்கள்-மக்காள், ஈற்றயனீண்டன. கண்ணாள்-கண்ணாய், குழலாள்-குழலாய், ளவ்வொற்றுயவ்வொற்றாயின அடிகள்-அடிகேள், மக்கள்-மக்கேள், ஈற்றயலகரமேகாரமாயின. பிறவுமனன. எ-று. (உக)

(எச-சூ) ரவ்வீற்றுயர்பெயர்க் களபெழலீற்றய, லகரம் இ ஈ யாதலாண்டை, ஆஈயாதலதனோடே யுற, லீற்றேமிக்கயல் யாக்கெட்டதனய, னீடலீருற விவையுமீண்டுருபே.

*எ-து* ரவ்வீற்றுயர்திணைப்பெயர்க்கு விளியுருபாமாறுணர்த்துதும். ரவ்வீற்றுயர்திணைப்பெயர்க்கு, விளி உருபு, அளபெழல், ஈற்றயலகரமிகரமீகாரமாதல் ஈற்றயலாகாரமீகாரமாதல் ஈற்றயலாகார மீகாரமாயேகாரமிகல், ஈற்றயல் யாக்கெட்டதனயலிகரமீகாரமாயேகாரமிகல், திரிபொன்றின்றி ஈர்மிகல், இவையாம். [உ-ம்] நம்பிமார்-நம்பிமாஅர்-ஊரார் - ஊராஅர்-அளபெடுத்தன, தெவ்வர்-தெவ்விர்-தெவ்வீர் - வேந்தர்-வேந்திர்-வேந்தீர். அமரர் - அமரிர்-அமரீர்-பாகர்-பாகிர்-பாகீர் - ஈற்றயலகரமிகரமீகாரமாயிற்று, ஊரார் - ஊரீர் - பார்ப்பார் - பார்ப்பீர் - ஈற்றயலாகாரமீகாரமாயிற்று, ஊரார்-ஊரீரோ-முனியார்-முனியீரோ - சுவாமியார்-சுவாமியீரோ-ஈற்றயலாகாரமீகாரமா யேகாரமிக்கது நம்பியார்-நம்பீரோ-தோழியார்-தோழீரோ-ஈற்றயல் யாக்கெட்டதனயலிகரமீகாரமாயேகாரமிக்கது, தமர்-தமரீர் - எமர்-எமரீர்-பிறர் - பிறரீர்-ஈர்மிக்கது, ஈண்டென்றமிகையால் கடலாரோ-கடலீரோ - மயிலாரோ-மயிலீரோ-சாத்தியாரோ-சாத்தியீரோ-என அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களைச்சிறப்பித்து உயர்திணைப்போலவழங்குதலுங்கொள்க. எ-று. (உஉ)

(எரு-சூ.) லகாரவீற்றுயர்பெயர்க் களபயனீட்சியும், யகாரவீற்றிற்களபுமாமுருபே.

*எ-து.* லகார யகார வீற்றுயர்திணைப்பெயர்க்கு விளியுருபாமாறுணர்த்துதும். லகாரவீற்றுயர்திணைப்பெயர்க்கு விளி உருபு-அளபெடை ஈற்றயனீட்சியாம், யகாரவீற்றுயர்திணைப்பெயர்க்கு விளி உருபு-அளபெடையாம் [உ-ம்.] வலம்புரித்தடக்கைமாஅல்-அளபு, மடவரல்-மடவரால் - தாழ்குழல்-தாழ்குழால் - தோன்றல் - தோன்றால்-ஈற்றயனீண்டன, மணிப்பூணாய்-மணிப்பூணஅய்-வேற்கண்ணாய்-வேற்கண்ணஅய்-தோளாய் - தோளாஅய்-அளபெடுத்தன பிறவுமன்ன. எ-று. (உங)

(எசா-சூ.) ணவ்வீற்றுயர்திணை யல்லிருபெயர்க்கண், ணிறுதியழிவத ஞேடயனீட்சி.

*எ-து* னகரவீற்றுப்பொதுப்பெயர்க்கு மஃறிணைப்பெயர்க்கும் விளியுருபாமா றுணர்த்துதும். னகாரவீற்றிருபெயர்க்கு விளி உருபு-ஈறழிதல், ஈறழிந்தயனீளலாம். [உ-ம்] சாத்தன்-சாத்த-கொற்றன்-கொற்ற-ஈறழிந்தன, சாத்தன்-சாத்தா-கொற்றன்-கொற்றா - ஈறழிந்தயனீண்டன, இவைபொதுப்பெயர். அலவன்-அலவ-சஇழன்-சஇழ-ஈறழிந்தன, அலவன்-அலவா - கஇழன்-கஇழா-ஈறழிந்தயனீண்டன, இவை அஃறிணைப்பெயர். எ-று. (உச)

(எள-சூ.) ளவீற்றஃறிணைப் பெயர்ப்பொதுப்பெயர்க்கண், ணீற்றயனீட்சியு முருபாகும்மே.

*எ-து* லகாரளகாரவீற்றஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் விளியுருபாமாறுணர்த்துதும். லகாரளகாரவீற்றிருபெயர்க்கு விளி உருபு-ஈற்றயனீட்சியாம். [உ-ம்.] முயல் - முயால் - கிளிகள்-கிளிகாள் - அஃறிணைப்பெயரயனீண்டன. தூங்கல் - தூங்கால்-மக்கள்-மக்காள் - பொதுப்பெயரயனீண்டன, எ - று. (உரு)

(எஅ-சூ.) அண்மையினியல்புமீ றழிவுஞ்சேய்மையி, னளபுட்புலம்பி னேவுமாகும்.

*எ-து* முன்சொன்னவிளியுருபுகட்குப்புறனடையாமா றுணர்த்துதும். சொல்லப்பட்ட பலவிளி உருபுகளினுள் இயல்பும் ஈற்றழிவும். கிட்டினோரை அழைப்பதற்கேற்பன. [உ-ம்.] ஐயன்கேள் - இயல்பு. ஐயகேள், ஈரழிவு. அளபெடை, மிகவகன்றோரை அழைப்பதற்கேற்பன. கிழாஅன்-நம்பிமாஅர், அளபு ஓகாரம்புலம்பின் அழைப்பதற்சேற்பன. ஐயாவோ, எ-ம். மற்றவைபொதுப்படவேற்பன. அண்மை எ - து, சமீபம். சேய்மை, எ - து. தூரம். எ - று. (உசா)

(எகூ-சூ.) பலர்பால்ரவ்வுங் கள்ளுமீ றுமே.

*எ-து.* பலர்பாலென் றவுயர்திணைப்பன்மைக்குருபாமா றுணர்த்துதும். பலர்பாலென் றவுயர்திணைப்பன்மைக்கு உருபு, ர்-கள்-எனவிரண்டாம். [உ-ம்.] தமர்-நமர்-நுமர்-எமர் பிறவும். கிளைப்பெயர் பூணினர்-முடியினர்-வெற்பர்-ஊனவர்-பார்ப்பார்-பிரமர் - சத்திரியர்-வைசியர்-சூத்திரர் பிறவும். ரவ்வீற்றுப்பலர்பால், அடிகள்-முனிகள் - மனுக்கள்-கோக்கள்-வேள்கள்-விடலைகள்-மடந்தைகள் பிறவும். கள்ளீற்றுப்பலர்பால் அவ்விருருபுகூட்டிப்பலர்கள், அரசர்கள், எ-ம். வரும். பிறவுமன்ன. எ-று. (உஎ)

(அ0-சூ.) மூன்றுதுவ்வுறின் அ ன ஐயும், பலவின்பாலீ றுங்கள் ளீறுமற்றவை, யன்றியுமிருமைக்கஃறிணைப்பொதுவே.

*எ-து.* பலவின்பாலென்ற அஃறிணைப்பன்மைக்குருபாமா றுணர்த்துதும். ஒருமைக்கண்ணே விகுதியாகவே து-என்னுமுருபேற்ற அஃறிணைப்பெயரெல்லாம்பன்மைக்கண்-அ-ன-ஐ - எனவிம்மூன்றுருபுகளைப்பெற்றுமுடியும். [உ-ம்.] எப்பொருளது-என்றதற்கு-எப்பொருள-எப்பொருளன-எப்பொருளவை, எ-ம். முதலது, என்றதற்கு முதல-முதலன-முதலவை, எ-ம். அரியது, என்றதற்கு அரிய அரியன-அரியவை, எ-ம். இவ்வாறே உள்ள-உள-இல்ல-இல-பல்ல-பல-சில்ல-சில இவைபோல்வனபிறவு மஃறிணைப்பன்மையாம். மற்றவஃறிணைப்பெயர்கட்கு-கள்-பன்மைக்கண்ணுருபாம் [உ-ம்] நிலங்கள்-நீர்கள்-நரிகள்-நாய்கள் பிறவுமன்ன. ஆயினுமிவ்விரண்டாம் வகைப்பெயரொல்லாமுருபுமாறுமலு மொருமைக்கும்பன்மைக்கும் பொதுவாய்நிற்பனவாம். [உ-ம்] மரம்வளர்ந்தது-மரம்வளர்ந்தன - கனியினிது-கனியினியன - மாடுவந்தது - மாடுவந்தன பிறவுமன்ன—நன்னூல்—பால்பகாவஃறிணைப் பெயர்கள்பாற்பொதுமைய. எ-து. மேற்கோள் எ-று. (உஅ)

(அக-சூ) ஒருமையிற்பன்மையும் பன்மையிலொருமையு, மோரிடம்பிறவிடந் தழுவலுமுளவே.

*எ-து.* பால்வழுவமைதியுமிடவழுவமைதியுமாமா றுணர்த்துதும். ஒருமைப்பாலிற்பன்மைப்பாலும் பன்மைப்பாலிலொருமைப்பாலும் ஓரிடத்திற்பிறவிடமுந் தழுவிக்கூறலுளவாம். [உ-ம்.] நீயெரிந்தன-நீரிருந்தன-பாலிருந்தன என ஒருமைச்சொல் பன்மைதழுவின. நாடெலாம்வாழ்ந்தது - படையெலாமொய்த்தது-கண்சிவந்தது - உள்ளியதெல்லாமுடன்வந்தடைந்தது. எனப்பன்மைச்சொல் ஒருமைதழுவின. நீயோ-அவனோ-யாரிதுசெய்தார்-யானேஅவனோயாரிதுசெய்தான். என ஓரிடத்துக்குரியசொல்லே பிறவிடந்தழுவின பிறவுமன்ன. எ-று. (உகூ)

(அஉ-சூ) எப்பொருளெச்சொலினெவ்வா றுயர்ந்தோர், செப்பினரப்படி செப்புதன்மரபே.

*எ-து.* மரபாமா றுணர்த்துதும். வேற்றுமைவகையினும் பெயர்க்கும் வேற்றுமைக்குமிடை நிலையென வருஞ்சாரியைவகையினு மற்றைத்தமிழ்மொழிநடையினும் இலக்கியவழியேவழங்கும். விகற்பங்களியாவையுமவ்வொன்றுயச்சிறப்பித்துரைப்பது இலக்கண நூற்களிலடங்குந் தன்மையன்றே ஆகையின்முன்னோர்காட்டினமாத்திரையாய்ந்துணர்ந் தொப்படைப்பதறிவோரியல்பெனக்கொள்க.ஈண்டுப்பெயரியலுரைத்தலி னொருபொருளைக்குறித்தபலசொல்லாகவருஞ்சில திரிசொல்லுரிமையை விளக்கிக்காட்டலேநன்றென முன்னோர்வழியைப்பற்றிச் சிலதிரிசொற்பெயரியல்பினைவிளக்குதும், இவ்வுமை யைக்காட்டுஞ் சொற்பலவாகியவற்றுள்வரும் [உ-ம்.] குழவி, எ-து. மக்கள்-யாவனை-பசு - எருமை-மான்-மரை-கரடி-சியம்-வருடை - மதிக்குமுரித்து. மக, எ-து. மக்கள்-முசு-குரங்குகட்குமுரித்து. பிள்ளை, எ-து மக்கள்-பூவல்-தாண்டுவன-தவழ்வன-பறப்பன - கோட்டில்வாழ்விலங்கு-ஓரறிவுயிர்கட்குமுரித்து. பார்ப்பு, எ-து. பறவை-தவிழ்வன-கோட்டில்வாழ் விலங்குகட்குமுரித்து. பறழ், எ-து. பன்றி-முயல்-நீர்நாய்-கோட்டில்வாழ்விலங்குகட்குமுரித்து. குருளை, எ-து யாளி-புலி-பன்றி-நாய்-மான்முசு-பாம்புகட்குமுரித்து மறி, எ-து. ஆடு-மான்-குதிரை-மேடவிராசிக்குமுரித்து. கன்று, எ-து. பசு-எருமை-ஆமா-மரைமா-கவரிமா-மான்-ஒட்டகம்-யானை - ஒருசாரோரறிவுகட்குமுரித்து. குட்டி, எ-து. சிங்கம்-புலி-கரடி - யானை-கு

திரை-ஒட்டகம்-மான்-ஆடு-நாய்-பன்றி-முயல்-நரி-குரங்கு - முசு - சேரி-நாவி-வெருகு-பாம்பு-அணில்-எலிக ட்குமுரித்து. பொரி, எ - து. எருமைக்குரித்து. களபம், எ - து. யாவனைக்குரித்து. இவையெலாமிவனைச் சொற்களாகியிவ்வாறுவருவன மரபெனப்படும். — தொல்காப்பியம். — மற்றருஞ்சிறப்பின்மரபியல் கிளப்பிற், பார்ப்பும்பறழுங்குட்டியுங்குருளையுங், கன்றும்பிள்ளையுமகவுமறியுமென், றொன்பதுங்குழ வியோடிளமைப்பெயரே. எ-து. மேற்கோள். இவ்வாறன்றி. ஆமைக்குழவி, குதிரைப்பார்ப்பு அன்ன ப்பறழ். யாவனமறி-பூவனைக்கன்று-எலிக்குருளைமுதலியவரின்மரபுவழுவாம் — தொல்காப்பியம். — மரபு நிலைதிரிதல்செய்யுட்கில்லை, மரபுவழிப்பட்டசொல்லினை. எ-து. மேற்கோள். அன்றியுமுறுப்புவகைக்கு ள்பலசொல்உள்ளும் வரும். [உ-ம்] கை, எ-து. மக்கள்-யாவனை-புலி-கரடி-கோட்டில்வாழ்விலங்குகட்குமு ரித்து. விரல், எ-து. மக்கள்-கரடி-நாய்-கோட்டில்வாழ்விலங்குகட்குமுரித்து. நுதல், எ-து. மக்கள்-யாவனை-ஒருசார்புவிலங்கிற்குமுரித்து. முலை, எ-து. மக்கள்-ஆ-எருமை-ஆடு-நாய்கட்குமுரித்து. விலங்கிற்குட் டிக்குரியவொருசாரானவற்றிற்குமுரித்து. கூந்தல், எ-து. பெண்டீர்-பிடி-குதிரை-பனை-கமுகுகட்குமுரி த்து. கண், எ-து. கட்பொறியுளவுயிர்கட்கன்றி-கமுகு-கரும்பு-மூங்கில்-பீலித்தோகை-கருவி-தேங்காய்கட் குமுரித்து. ஏடு, எ-து. பனை-பூவிதழ்கட்குமுரித்து. தோடு, எ-து. பனை-தெங்கு-தாழை - பூவிதழ்கட்குமு ரித்து. இதழ், எ-து. கண்ணிமை-உதடு-பூவிதழ்-பனைகட்குமுரித்து. ஓலை, எ-து. பனை-தெங்கு-தாழைகட் குமுரித்து. ஈர்க்கு, எ-து. தெங்கு-பனை-மாவென்பவற்றிற்குமுரித்து. மடல், எ-து. பனை-தெங்கு-கமு கு-மூங்கில்-வாழை-தாழை-ஈந்திற்குமுரித்து. பாளை, எ-து. தெங்கு-கமுகுகட்குமுரித்து. குரும்பை, எ-து. தெங்கு-பனைகட்குமுரித்து. குலை. எ-து. தெங்கு-கமுகு-வாழை-ஈந்து-பனை-சாந்தட்குமுரித்து. தாறு, எ-து. கமுகு-வாழை-ஈந்திற்குமுரித்து. சுளை, எ-து. பலா-பருத்தி-பாகற்பழங்கட்குமுரித்து. வீழ், எ-து. ஆல்-இறலி-தாழை-சீந்தில்கட்குமுரித்து. நுகும்பு, எ-து. பனை-வாழை-மரல்-புல்லென்பனவற்றிற்குமுரி த்து. இலை, எ-து. தெங்கு-ஈந்து-பனைகட்குமுரித்து. அடை, எ-து. தாமரை-ஆம்பல்-நெய்தற்றொட க்கத்துக்குமுயிர்நிலையோரறிவுகட்குந்தாம்பூலத்திற்குமுரித்து. பொகுட்டு, எ-து. தாமரைக்குங்கோங்கி ற்குமுரித்து. குரல், எ-து. பெண்டீர்மயிர்-மிடறு-தினை-வரகு-பூளை - நொச்சி-புதவம்புற்கட்குமுரித்து. நெல், எ-து. சாலிமுதலியவற்றிற்கும்-மூங்கிற்கும் - ஐவனத்திற்குமுரித்து. இவையெலாமுறுப்புச்சொற் களாகி இவ்வாறுவருவதுமரபெனப்படும், இவ்வாறன்றி [உ-ம்] எருமைக்கை-குதிரை நுதல்-கமுகோலை-பலாக்குலை-மாந்தாறு-வாழைச்சுளை-புல்லிலைமுதலியவரின்மரபுவழுவாம். இவ்வாறேமுன்னோர்காட்டிய வழியைப்பற்றியதற்கதற்குரிய சொல்லுதல் மரபெனப்படும். (அன்றியுமிதற்குப் பொருளதிகாரத்திற் சொல்லுரிமைவிளக்கியவழியைக்காண்க.) எ-று. (௩௰)

முதலாவது வேற்றுமையியன்முற்றிற்று.

## இரண்டாவது பகுபதப்பெயரியல்.

(அ௩-சூ.) பகுபதமொன்றுய்ப் பலவொருங்குணர்த்திற், பகாப்பதமவற்றுட் பகுதியென்ப.

*எ-து.* பகுபதப்பகுதிகளாமாறுணர்த்துதும். ஒருமொழியாகநின்றே ஒருப்படப்பொருளையு ணர்த்தும்பகுபதங்கட்கு-பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம், இவ்வாறுறுப்புளவாம், பகுக்கப்பட்டுப்பகாப்பதமாய்முதனிற்பது-பகுதி. இடைநிற்பது-இடைநிலை. கடைநிற்பது-விகுதியாம் [உ-ம்] கூனி, எ-து. கூன்-இ-எனப்பகுதிவிகுதியான்முடிந்தது. உண்டான், எ-து. உண்-ட், ஆன்-எனவவ் விரண்டுடனிடைநிலைபெற்றுமுடிந்தது, உண்டனன். எ-து. உண்-ட்-அன், அன்-என வம்மூன்றுடன் சாரியைபெற்று முடிந்தது-பிடித்தனன், எ-து. பிடி-த், த்-அன்-அன், எனவந்நான்குடன்சந்திபெற்று முடிந்தது. நடந்தனன். எ-து. நட-த்-த், அன்-அன், எனவவ்வைந்தும்பெற்றுச்சந்தியால் வந்ததகரவல் லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும்பெற்றுமுடிந்தது. பொருளாதியறுவகைப் பகாப்பதங்க ளேபகுபதங்கட்குப்பகுதிகளாம். அவை-பொன்மணிமுதலியபொருள்களும், குறிஞ்சி-பாலை-முல்லை-ம ருதம்-நெய்தல்-எனவைந்திணைகளும், தேசம் - ஊர்-வான் - அகம்-புறமுதலியவிடங்களும், பருவம்-மாத ம்-வருடம்-நாண்முதலியகாலங்களும், கண்-கால்-கை-தலை-காது-கொம்பு-தளிர்-பூ-காய்-கனி, முதலியவுறுப் புகளும். அளவு-அறிவு-ஒப்பு-வடிவு-நிறம்-கதி-சாதி-குடி-சிறப்பு-முதலியகுணங்களும் ஓதல்-ஈதல்-ஆடல்-பாடல்-முதலியதொழில்களும், பிறவுமாம் இப்பகுதிசொல்வகையாம். பொன்-பொருப்பு-தை-கண்-கரு மை-கூத்து, இவ்வாறும்பெயர்ப்பகுதிகளாம். [உ-ம்.] பொன்னன்-பொருப்பன்-தையான்-கண்ணன்-கரியன்-கூத்தன், எ-ம். வரும். நட-வா-மடி-சீ-விடு-கூ-வே-வை-நொ-போ-வெள-உரிஞ்-உண்-பொருந்-திரும்-தின்-தேய்-பார்-செல்-வவ்-வாழ்-கேள்-அஃகு, இவை வினைப்பகுதிகளாம். [உ-ம்] நடந்தான்-வந்தான்-மடிந்தான்-சீத்தான்-விட்டான்-கூவினன் - வேந்தான்-வைத்தான்-நொந்தான்-போயினன், வெளவினன்-உரிஞினன்-உண்டான்-பொருநினன்-திருமினன்-தின்றான்-தேய்த்தான்-பார்த்தான்-சென்றான்-வவ்வினன்-வாழ்ந்தான்-கேட்டான்-அஃகினன், எ-ம். வரும். போல்-நிகர், இவை இடைப்பகுதிகளாம். [உ-ம்.] பொ ன்போன்றான்-புலிநிகர்த்தான். எ-ம். வரும். சால்-மாண், இவை உரிப்பகுதிகளாம் [உ-ம்.] சான்றான் - மா ண்டான், எ-ம். வரும். செம்மை-சிறுமை, இவை பண்புப்பெயராகியவிகாரப்பகுதிகளாம் [உ-ம்.] செந் தாமரை-சிறியிலை, எ-ம். வரும். புகு-பெறு-விடு, இவை காலங்காட்டும்விகாரப்பகுதிகளாம் [உ-ம்.] புக்கா ன்-பெற்றான்-விட்டான். எ-ம். வரும். கேள்-கொள்-செல்-தா-சா-வா-கல்-சொல் இவையும்விகாரப்பகுதிக ளாம். [உ-ம்.] கேட்டான்-கொண்டான் - சென்றான்-தந்தான்-செத்தான் - வந்தான்-கற்றான்-சொன்னான், எ-ம். வரும். உழு-தொழு - உண்-தின்-இவை-இயல்புப்பகுதிகளாம். [உ-ம்.] உழுதான்-தொழுதான்-உண்

டான் - தின்றான். எ-ம். வரும். வடநூலார்-பகுதியை - தாது என்பர். எ-று. (க)

(அச-சூ.) அன்ஆன்அள்ஆள்அர்ஆர் துஐ, அபிறவுமைம்பாற்பெயர்ப்பகுபதவிகுதியே.

*எ-து.* பகுபதவிகுதிகளாமாறுணர்த்துதும் அன்-ஆன் இரண்டும்ஆண்பால்விகுதி [உ-ம்] மலையன்-மலையான், எ-ம். அள்-ஆள், இரண்டும்பெண்பால்விகுதி. [உ-ம்.] மலையள்-மலையாள், எ-ம். அர்ஆர், இரண்டும்பலர்பால்விகுதி. [உ-ம்.] மலையர்-மலையார், எ-ம். இவை உயர்திணை-து-ஒன்றன்பால்விகுதி [உ-ம்.] மலையது, எ-ம். ஐ அ இரண்டும்பலவின்பால்விகுதி. [உ-ம்.] மலையவை-மலைய, எ-ம் இவை அஃறிணை-பிறவுமென்றமிகையால். பெருமாள்-முன்னோன்-வில்லி-வாளி-தட்டாத்தி-வண்ணாத்தி-வலைச்சி, எ-ம். வரும்.—தொல்காப்பியம்.—அன்ஆன்அள்ஆள் என்னுநான்கு, மொருவர்மருங்கிற்படர்க்கைச்சொல்லே.—அர்ஆர்பவ்வெனவரூஉமூன்றும், பல்லோர்மருங்கிற்படர்க்கைச்சொல்லே — அஆவ எனவரூஉமிறுதி, யப்பான்மூன்றேபலவற்றுப்படர்க்கை,—ஒன்றன்படர்க்கைதடறவூர்ந்த, குன்றியலுகரத்திறுதியாகும், இவைமேற்கோள். வடநூலார்விகுதியை-பிரத்தியம். என்பர் எ-று. (உ)

(அரு-சூ.) நஞுவிடைப்பகுபத நண்ணலுநெறியே.

*எ-து.* காலங்காட்டாவிடைநிலைகளாமாறுணர்த்துதும். பெயர்ப்பகாப்பதமும் வினைப்பகாப்பதமும்பகுதியாகநிறுத்தி நச்சாரியையும் ஞச்சாரியையுமிடைநிலையாகவைத்து அவ்வப்பாலுக்குரிய விகுதியை ஈற்றின்கண்ணேதந்தது பகுபதமாகும் [உ-ம்.] கிளை-இளை-கடை-நடை எனப்பெயர்ப்பகுதியும். அறி-துணி-குறை-மொழி எனவினைப்பகுதியுநிறுத்தி ந் ஞ் என இடைநிலையும், அர்-என இறுதிநிலையுங்கூட்டி கிளைநர்-இளைநர்-கடைநர்-நடைநர், எ-ம். கிளைஞர்-இளைஞர்-கடைஞர்-நடைஞர், எ-ம் அறிநர்-துணிநர்-குறைநர்-மொழிநர், எ-ம். அறிஞர்-துணிஞர்-குறைஞர்-மொழிஞர், எ-ம். புணர்ந்துவருதல்காண்க. நண்ணலுநெறியேயென்றமிகையால் வலைச்சி-வண்ணாத்தி-இவற்றுள் சகரமெய்யுந் தகரமெய்யும் இடைநிலையாயின பிறவுமன்ன எ-று. (ங)

(அசு-சூ.) வடநடைப்பகுபதம் வரமொழிமுதற்கண், இ எயென ஐ ஔவும் உ ஓவென ஔவும், அவ்வென ஆவுமாம் ஐயிறினீறுபோய், எயனீட்டலன்ற வெச்சமாமுளபிற.

*எ-து.* வடநடைப்பகுபதங்களாமாறுணர்த்துதும். மேற்கூறியபகுபதமெல்லாஞ் செந்தமிழ்நடையனவாம். பகுதியாகநிற்கும்பகாப்பதமுதற்கண் உயிராயினும் உயிர்மெய்யாயினும்வரின் நிலைமொழி, இ எ எனவிரண்டும் ஐயாகத்திரிந்துபகுபதங்களாகும். [உ-ம்] இந்திரனிருக்குங்குணதிசை - ஐந்திரி, எ-ம். கிரியிலுள்ளன-கைரிகம், எ-ம். சிலையாலாயமலை-சைலம், எ-ம். மிதிலையுட்பிறந்தாள்-மைதிலி, எ-ம். நியாயநாலுணர்ந்தோன்-நையாயிகன், எ-ம். வியாகரணமுணர்ந்தோன்-வையாகரணன், எ-ம். வரும். ஓரோவிடத்து இ ஔவாகத்திரியும். [உ-ம்] கிரியிற்பிறந்தாள்-கௌரி, எ-ம. வரும். எ ஐயாகத்திரியும் [உ-ம்] வேதவழிநின்றொழுகுவார்-வைதிகர், எ-ம். வரும். அன்றியும். ஊவும் ஓவும், ஔவாகத்திரியும். [உ-ம்.] சூரனென்னுஞ் சூரியன்மகனுஞ்சனி-சௌரி, எ-ம். கோசலையிடத்துப்பிறந்தாள்-கௌசலை, எ-ம். சோமனென்னுஞ்சந்திரன்மகனும்புதன்-சௌமன், எ-ம். வரும். ஐயாசத்திரிவனவெல்லாம்-அயி எ-ம் ஔவாகத்திரிவனவெல்லாம்-அவு எ-ம். முடியும் [உ-ம்.] சயிரிகம்-சயிலம்-சயிவன், எ-ம். கவுரி-சவுரி-கவுரவர், எ-ம். வரும். அ-ஆவாகத்திரியும் [உ-ம்.] அதிதியின்மக்கள் - ஆதித்தியர், எ-ம். தசரதன்மகனிராமன்-தாசரதி, எ-ம். சனகன்மகளாஞ்சீதை-சானகி, எ-ம் தனுவின்மக்களிராக்கதர்-தானவர், எ-ம். சகரன்மக்கடோண்டினகடல்-சாகரம், எ-ம். வரும். ஐயீற்றுப்பகாப்பதங்களில் ஐயொழித்துவிகுதியாக எயன்-என்றுமுடிந்தால் ஈன்றமகனென்றுகாட்டும்பகுபதங்களாம் [உ-ம்.] கார்த்திகையின்மகன்-கார்த்திகேயன். தாரையின்மகன்-தாரேயன், கங்கையின்மகன்-காங்கேயன், விநதையின்மகன்-வைநதேயன், எ-ம். வரும். பிறவென்றமிகையால் வேதமுரைப்பான்-வேதியன், எ-ம். பங்கத்துள்ளும் அம்புள்ளும், ஆகியதாமரை. பங்கயம்-அம்புயம், எ-ம். சிபியின்மகன்-செம்பியன், எ-ம். சல்சலன்-சலாசலன், எ-ம். சர்சரன் - சராசரன், எ-ம் பத்பதன்-பதாபதன், எ-ம். இத்தொடக்கத்தன. பலவழியானும்வடமொழிப்பகுபதங்கண்முடியும். அன்றியும் பிர-பரா-அப-சம்-அநு-அவ-நிர்-துர்-வி-ஆ-நி-அதி-அபி-சு-உற்-பிரதி-பரி-உப-என இப்பதினெட்டும் வடமொழிகளுக்குமுதலடுத்து வெவ்வேறுபொருளைவிளக்கிவரும். உபசர்க்கங்களாகும் [உ-ம்.] பிரயோகம்-பராபவம்- அபகீர்த்தி- சங்கதி - அநுபவம் - அவமானம் - நிர்க்குணம் - துர்க்குணம் - விகாரம் - ஆகாரம்-நிவாசம் - அதிமதுரம்- அபிவிருத்தி - சுதினம்-உற்பாதம் - பிரதிகூலம் - பரிபாகம் - உபயோகம், எ-ம். வரும். எ-று. (ச)

(அஎ-சூ.) எதிர்மறைப்பகுபதத் தியைந்தமொழிமுத, லொற்றெனிலவ்வு முயிரெனிலன்னு, மிருமைக்காநிரு வெனவடநடையே.

*எ-து.* எதிர்மறைப்பகுபதங்களாமாறுணர்த்துதும். எதிர்மறைப்பகுபதமொழிமுதற்கண் ஒற்றுளவாயின். அவ்வும்உயிருளவாயின், அன்னும்இருவகைமொழிக்கு நிருவும்புணர்ந்து பொருளின்மையும்பிறிதும். எதிர்மறையுங்காட்டும் வடநடைப்பகுபதங்களாம். [உ-ம்.] சயமிலான்-அச்சயன், நீதியின்மை-அநீதி மலவின்மை-அமலம், சீரணமின்மை-அசீரணம், சரவின்மை-அசரம், தருமமின்மை-அதருமம். எ-ம். பிறவுமன்ன. அகமெனும்பாவமில்லான்-அனகன். அங்கமில்லான்-அனங்கன். ஆதியின்மை-அநாதி, ஆசாரவின்மை-அநாசாரம். எ-ம். பிறவுமன்ன. மலவின்மை-நிருமலம். நாமமில்லான்-நிருநாமன். ஆயுதமில்லான்-நிராயுதன், உவமையில்லான்-நிருவுவமன், எ-ம். பிறவுமன்ன. மூவழியும்பகுபதப்பெயர். வடநடையால்வந்தவாறுகாண்க. வடநூலார். பகுபதத்தை தத்திதம் என்பர். எ-று. (ரு)

இரண்டாவது பகுபதப்பெயரியன்முற்றிற்று.

# மூன்றாவது தொகைநிலைத்தொடர்மொழிப்பெயரியல்.

(௮௮-சூ.) தொகைநிலையென்ப தொடரும்பெயரொடு, வினைபெயர்புணர்புளி வேற்றுமைமுதலொழித், தொருமொழிபோற்பல வொன்றியநெறியே.

*எ-து.* மேலேகூறியவிருவகைத்தொடர்மொழிகளினுட் டொகாநிலைவிட்டுத் தொகைநிலையாகத்தொடர்ந்துவருமொழிக்கீண்டுச் சிலவிதியாமாறுணர்த்து தும். பெயருடனேபெயரும், பெயருடனேவினையும்-புணருமிடத்து வேற்றுமைமுதலியவுருபுகள் தோன்றுதொழியநிற்ப இரண்டுசொற்பல சொற்றொடர்ந்ததன்மையால் ஒருபெயர்சசொற்போலவும் ஒருவினைச்சொற்போலவும் வழங்குவன தொகைநிலைத்தொடர்மொழிகளாம். இவற்றுள் வினைச்சொல்விட்டுத் தொகைநிலையாசத்தொடர்ந்துவரும்பெயர்ச்சொற்களாவன. பொருள்-இடம்-காலம்-சினை-குணம்-தொழில்-என்றிவ்வறுவகைப்பெயர் தொக்குநிற்பனவாம். [உ-ம்] பூண்மார்பன்-மலையருவி-மாரிநாட்பயிர்-கைம்மா-கருங்குவளை-கொடைக்கோமான், எனமுறையே. பொருளாதியறுவகைப்பெயர்தொக்குநின்று தொகைநிலைத்தொடர்மொழிவந்தவாறுகாண்க. இவற்றைவிரிக்க-பூணையணிந்தமார்பன்-மலையினின்றுவிழ்கின்றவருவி-மாரிநாளிலுள்ளபயிர் - கையையுடையமா - கருமையையுடையகுவளை - கொடையையியற்றுகின்றகோமான் எ-ம். வரும். எ-று. (௧)

(௮௯-சூ.) தொகைநிலைவகைப்படின் றெருகும்வேற்றுமைவினை, யுவமைபண்பும்மையோ டன்மொழியாறே.

*எ-து.* தொகைநிலைத்தொடர்மொழிகளாமாறுணர்த்துதும். வேற்றுமையுருபுதொக்குநிற்பது வேற்றுமைத்தொகையும். காலத்தைக்காட்டாமல்வினையிற்பிறந்தபெயரெச்சந்தொக்குநிற்பது, வினைத்தொகையும். உவமையுருபுதொக்குநிற்பது, உவமைத்தொகையும். குணப்பெயர்தொக்குநிற்பது, பண்புத்தொகையும். உம்மைதொக்குநிற்பது, உம்மைத்தொகையும் சொன்ன ஐவகைத்தொகையிலொன்று வந்ததனிறுதி. மற்றொருபெயரேயாயினும் பகுபதவிகுதியாயினுந் தொக்குநிற்பது, அன்மொழித்தொகையும். எனத்தொகைநிலைமொழி-அறுவகைப்படும். [உ-ம்] நிலங்கடந்தான்-பொற்குடம், வேற்றுமைத்தொகை. பொருசளம்-வாழ்குடி, வினைத்தொகை. நறுமலர்-ஆனித்திங்கள், குணத்தொகை. பொன்மேனி-மலர்க்கை, உவமைத்தொகை. இவனவன்-ஆறுநான்கு, உம்மைத்தொகை. தாழ்குழல்-பூங்குழல், அன்மொழித்தொகை. சொன்னதொகையெலாம்-விரிக்குங்கால், நிலத்தைக்கடந்தான் பொன்னுலாய குடம். எ-ம். பொருதசளம்-பொருகின்றகளம், பொருங்களம். எ-ம். வாழ்ந்தகுடி-வாழ்கின்றகுடி, வாழுங்குடி. எ-ம். நறவாகியமலர்-ஆனியாகியதிங்கள், எ-ம். பொன்போலுமேனி-மலர்போலுங்கை, எ-ம். இவனுமவனும், ஆறும்நாலும். எ-ம். பூவையணிந்தகுழலாள். எ-ம். வரும். அன்றியும். பூங்குழல்-பொற்றொடி, கவிப்பிலக்கணம். பொற்றாலி-கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக்கழலை. முறையே ஐம்முதலாறுவேறறுமைத் தொகைநிலைக்களத்துப்பிறந்தவன்மொழித்தொகைகள். தாழ்குழல் - வினைத்தொகைநிலைக்களத்துப்பிறந்தவன்மொழித்தொகை - கருங்குழல், பண்புத்தொகைநிலைக்களத் துப்பிறந்தவன்மொழித்தொகை-துடியிடை, உவமைத்தொகைநிலைக்களத்துப்பிறந்தவன்மொழித்தொகை. உயிர்மெய்-உம்மைத்தொகைநிலைக்களத்துப்பிறந்தவன்மொழித்தொகை, தசரஞாழன்மலை-பன்மொழித்தொடர், பூங்குழல். என்புழி. பூவையணிந்தகுழலென வேற்றுமைத்தொகையாய். அக்குழலையுடையாளை யுணர்த்துங்காலன்மொழித்தொகையாம். பிறவுமன்ன—தொல்காப்பியம்—அவற்றுள் வேற்றுமைத்தொகையே வேற்றுமையியல உவமைத்தொகையே வுவமையியல—வினையின்றொகுதிகாலத்திய லும்,—வண்ணத்தின்வடிவினளவிற்சுவையினென், றன்னபிறவுமதன்குணநுதலி, யின்னதிதுவெனவரூஉமியற்கை, யென்னகிளவியும்பண்பின்றொகையே, — இருபெயர்பலபெயரளவின்பெயரே, யெண்ணியற்பெயரே நிறைப்பெயர்க்கிளவி, யெண்ணின்பெயரோ டவ்வறுகிளவியுங், கண்ணியநிலைத்தேயும்மைத்தொகையே—பண்புதொகைவரூஉங் கிளவியானு,மும்மைதொக்கப்பெயர்வரினானும், வேற்றுமைதொக்கப்பெயர்வரினானு, மீற்றுநின்றியலுமன்மொழித்தொகையே. இவைமேற்கோள். எ-று. (௨)

(௯௰-சூ.) தொகைநிலைவிரித்துச் சொல்லுங்காலெழு, வகைநிலையளவும் வகுக்கப்படுமே

*எ-து* தொகைநிலைத்தொடர்மொழிகளுருபுத்தொக்குநிற்கையாற் சிலபொருள்களான் மயங்குமாறுணர்த்துதும் சிலதொகைமொழிகளொருதொடராகநிற்பினும் இரண்டுமுதலாகவேழீறாகப்பலவகைவிரிவு கொள்ளுமென்றுணர்க. [உ-ம்] அலர்முல்லை, என்பதில் அலர்ந்தமுல்லை - அலராவிரித்தமுல்லை, என இருபொருள்விரிந்தன. ஒலிவளை, என்பதில் ஒலிக்கும்வளை-ஒலியையுடையவளை - ஒலிக்கும்வளையையுடையாள், எனமுப்பொருள்விரிந்தன. சொல்லிலக்கணம், என்பதில்-சொல்லுமிலக்கணம்-சொற்கிலக்கணம்-சொல்லின்கணிலக்கணம்-சொல்லிலக்கணத்தைச்சொன்னநூல், என நாற்பொருள்விரிந்தன பொன்மணி, என்பதில்-பொன்னலாகியமணி-பொன்னுகியமணி - பொன்னின்கண்மணி - பொன்னொடுசேர்ந்தமணி-பொன்னுமணியும், என ஐம்பொருள்விரிந்தன-கரும்புவேலி, என்பதில்-கரும்பைக்காக்கின்றவேலி-கரும்புக்குவேலி-கரும்பினதுவேலி-கரும்பின்புறத்துவேலி-கரும்பாலாகியவேலி-கரும்பாகியவேலி, என அறுபொருள்விரிந்தன. சொற்பொருள், என்பதில்-சொல்லாலறியப்படுகிறபொருள் - சொல்லினதுபொருள்-சொல்லுக்குப்பொருள்-சொல்லின்கட்பொருள் - சொல்லும்பொருளும்-சொல்லாகியபொருள்-சொல்லானதுபொருள், என எழுபொருள்விரிந்தன. அளவுமென்றவும்மையால்-எழெல்லைகடந்து வருதலன்றியும், சொல்லணி எ-து. வினைத்தொகையாய்ச்சொல்லுகின்றவணி, எ-ம். வேற்றுமைத்தொகையாய்ச்சொல்லால்வழங்குமணி, எ-ம். பண்புத்தொகையாய்ச்சொல்லாகியவணி, எ-ம். உம்மைத்தொகையாய்ச்சொல்லுமணியும், எ-ம். அன்மொழித்தொகையாய்ச்சொல்லணியைத்தந்தநூல் எ-ம். ஒருமொழி ஐந்தொ

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 0

கையாக விரிந்துவருதலுங்கொள்க—நன்னூல்—தொக்குழிமயங்குந விரண்டுமுதலே, யெல்லைப்பொருளின் மயங்குமென்ப. எ-து. மேற்கோள். எ-று. (௩)

(கூச-சூ) தொகுபெயர்வேற்றுமைத்தொடர்பெயரன்ன, வியற்றிரிபழிவாக்கமியைந்தாந்தொகையே

*எ-து.* கூறியதொகைநிலைகளுக்குப்புறனடையாமாறுணர்த்துதும். ஐம்முதலாறுருபுதொக்குநிற்பத்தொடர்ந்துவருமொழிகள்-இயல்பும்-திரிபும்-குறைதலும்-மிகுதலுமாகவரும். [உ-ம்.] மணிகொடுத்தான்-இயல்பு, சர்சடாவினன்-திரிபு, திண்கொண்டதோள்-குறைதல், பலாக்குறைத்தான் - மிகுதல், இவ்விரண்டனுருபுத்தொகையில்-இயல்புந்திரிபுமழிவுமாக்கமும்வந்தனபோல மற்றைத்தொகையில் வருதலுமறிக, அன்றியும்-ஐயீற்றுப்பெயர்க்கண்-இயல்பும்-அகரமிகுதலுந்தொகைக்காம். [உ-ம்] —சிந்தாமணி—சுவலையநீன்முஞ்சுள்ளியுள்சூழ்மலர், சவலையாகமுஞ்சோங்கமுமாதின், சிவலையசெண்பகவேங்கையோடொற்றுப, மூவலைவன்மேற்றுதிமுற்றெடுத்தோதினுள். எ-ம். வரும். உம்மைத்தொகையாய் ஒருமைப்பெயர்பலகூடிப்பன்மையாய்முடியும். [உ-ம்.] சேரசோழபாண்டியர், எ-ம். இரவிமீன்மதிசவாயியைந்துபூண்டனள், எ-ம். வரும்—நன்னூல்—உயர்திணையும்மைத்தொகைபலரீறே. எ-து மேற்கோள். (௪)

(கூஉ-சூ.) ஐயிறுங்குணப்பெயரஃகியீறொழித, லீறுபோயுகரமிடையிலியாத, லாதிநீடலடியகரமையாத, றன்னொற்றிரட்டன்முன்னின்றமெய்திரித, லினமிகலிவையும்பண்பிற்கியல்பே.

*எ-து.* குணப்பெயர்த்தொகைக்குச் சிறப்புவிதியாமாறுணர்த்துதும். —நன்னூலில்.— செம்மைசிறுமைசேய்மைதீமை, வெம்மைபுதுமைமென்மைமேன்மை, திண்மையுண்மைநுண்மையிவற்றெதி, ரின்னவும்பண்பிற்பகாநிலைப்பதமே. என்றார்-இவற்றுள். ஈறுகெடுதலும் ஈறுகெட்டிடையுகரமிகரமாதலும், ஆதிநீடலும்-அடியகரமைகாரமாதலும், தன்மெய்யிரட்டலும், முன்னின்றமெய்திரிதலும் இனமிகுதலும், இவைபோல்வனபிறவும் பண்பிற்கியல்பாகும் [உ-ம்] நல்லன்-நன்மையின்மையீறுகெட்டது, கரியன்-கருமையின்மையீறுகெட்டிடைநின்ற வுகரமிகரமாயிற்று, பாசிலை-பசுமையின்மையீறுகெட்டாதிநீண்டது, பைங்கிளி-பசுமையின்மையீறு மிடைநின்றவுயிர்மெய்யுங்கெட்டு வருமெழுத்திற்கினமிகுந்தடியகரமைகாரமாயிற்று-வெற்றிலை-வெறுமையின்மையீறுகெட்டுத்தன் னொற்றிரட்டியது-சேதாம்பல், செம்மையின்மையீறுகெட்டாதிநீண்டு முன்னின்றமகரமெய்தகரமெய்யாகத்திரிந்தது-இவையவுமென்றமிகையால்-அரியபொருள்-பெரியமலை, கரியமுகம்-புதியமணம், குறள்வெண்பா. எ-ம். வரும். எ-று. (௫)

(கூங-சூ.) அடைசினைமுதன்முறையடைதலுமீரடை, முதலோடாதலும்வழக்கியலீரடை, சினையொடுசெறிதலுமயங்கலுஞ்செய்யுட்கே.

*எ-து.* மரபுவழுவாமற்சாத்தலும்மரபுவழுவமைதியுமாமாறுணர்த்துதும். குணத்தொகைமொழியெலாம், அடைமொழியெனப்படும். இவைவழக்கிடத்தில் ஒன்றும்-இரண்டும்-முதற்பொருளோடுவந்தடுக்கவும். ஒன்றேசினைப்பொருளோடு வந்தடுக்கவும்பெறும் [உ-ம்] சிறுகருங்காக்கை-இளம்பசுங்கிளி எனமுதற்பொருளோடு-ஈரடையடுத்துவந்தன, செங்காலனை-நெட்டிலைத்தெங்கு, எனச்சினைப்பொருளோடு, ஓரடையடுத்துவந்தன. செய்யுளிடத்தோவெனில் சினைப்பொருளோடும். ஈரடையடுத்துவரப்பெறும். [உ-ம்.] சிறுபைந்தாவி-கருநெடுங்கண், எ-ம். வரும். அன்றியும். அடையொடுபலசினைப்பொருடம்முட்கலந்துசெய்யுளிடத்துவரவும்பெறும். [உ-ம்.] —நைடதம்.— குவிமுலைகயவாய்ச்செங்கட்குடம்புரைசெருத்தன்மேதி. எ-ம். வரும். அடைமொழியை வடநூலார். அவ்வியம். என்பர். எ-று. (௬)

(கூச-சூ.) ஓரொருவீரிருமும்மூநாலையம், மாறறுவேழெழுவெண்ணெனவுயிருட, லியைமுறைக்காகுமெண்ணின்றொகையே

*எ-து.* எண்ணின்பெயரோ தம்மொடுதாமும் பிறவும்வரவேதொக்குநிற்குமாறுணர்த்துதும். ஒன்றும்-இரண்டும், உயிர்வரின். ஓர்-ஈர், எனவாம்-மெய்வரின். ஒரு-இரு, எனவாம். [உ-ம்.] ஒன்று-ஆயிரம், ஓராயிரம். இரண்டு-ஆயிரம், ஈராயிரம். எ-ம். ஒன்று-பொருள், ஒருபொருள். இரண்டு-கலம், இருகலம். எ-ம். வரும். மூன்று, எ-து. உயிரும்-வவ்வும்வரின், மூவெனவும். மற்றைமெய்வரினம்மெய்யிரட்டித்தும்வரும். [உ-ம்.] மூன்று-ஒன்று, மூவொன்று. எ-ம். மூன்று-வழி, மூவழி. எ-ம். முக்கோடி-முச்சான்; முத்தமிழ். முப்பது-முந்நூறு, மும்மொழி. எ-ம். வரும். நான்கு எ-து. உயிர்வரின், நாலெனவுமாம். [உ-ம்.] நான்கு-ஆயிரம், நாலாயிரம். எ-ம். நாற்கழஞ்சு-நாற்சதுரம், நாற்றலை. நாற்படை-நானூறு, நான்மணி. எ-ம். வரும். ஐந்து எ-து. உயிரும்-யவ்வும்வரின்-ஐயெனவும், மற்றைமெய்வரினம்மெய்யிரட்டித்தும்வரும். [உ-ம்.] ஐந்து-ஆயிரம், ஐயாயிரம். எ-ம். ஐந்து-யானை, ஐயானை. எ-ம். வரும். ஐங்கலம்-ஐஞ்சந்தி, ஐந்தலை. ஐந்நூறு-ஐம்பது, ஐம்மூன்று. ஐவண்ணம், எ-ம். வரும். ஆறும்-எழும், உயிர்வரின். இயல்பாகும், மெய்வரின்முதல்குறுகும். [உ-ம்.] ஆறு-ஆயிரம், ஆறாயிரம். எழு-ஆயிரம், எழாயிரம். எ-ம் ஆறு-சழஞ்சு, அறுகழஞ்சு. எழு-கடல், எழுகடல். எ-ம். வரும். எட்டு. எ-து. உயிரும்-மெய்யும்வரின், எண்ணாகும். [உ-ம்.] எட்டு-ஆயிரம், எண்ணாயிரம். எட்டு-பத்து, எண்பது. எ-ம். எண்கலம்-எண்சாண், எண்டிசை. எண்ணூறு-எண்பணங்கு, எ-ம். வரும். —நன்னூல்.— ஒன்றன்புள்ளிரகாரமாக, விரண்டனொற்றுயிரேகவ்வருமே.—தொல்காப்பியம்.—மூன்றனொற்றே வந்ததொக்கும்.— நான்கனொற்றே லகாரமாகும்.—நான்கனொற்றே றகாரமாகும்.—ஐந்தனொற்றே முந்தையதுகெடுமே.—ஆறன்மருங்கிற் குற்றியலுகரமீறுமெய்யொழியக்கெடுதல்வேண்டும்.—எட்டனொற்றேணகாரமாகும்.—மூன்றுமாறுநெடுமுதல்குறுகும். இவைமேற்கோள். எ-று. (௭)

(கூடு-சூ) ஒன்றுமுதலீரைந்தாயிரங்கோடி, யெண்ணிறையளவும்பிறவரிற்பத்தி, னீற்றுயிர்மெய்

கெடுத்தி—னுமிற்று, மேற்படதேற்குமொ—பதுமிவணத்தே.

*எ-து.* பத்துமொன்பதுமெனவிரொண்ணின்றொகையாமாறுணர்த்துதும். பத்தென்னுநிலைமொழிமுன்னே ஒன்றுமுதற்பத்து மாயிரமுங்கோடியுமாகிய எண்பெயரும்-நிறைப்பெயரும்-அளவுப்பெயரும்-பிறபெயரும் - புணர்ந்தாற் பத்தனீற்றுயிர்மெய்கெட்டு இன்னும் இற்றுமேறிமுடியும் ஒன்பதுமிவ்வாறேயாம். [உ-ம்.] பத்து-ஒன்று பதினொன்று, பத்து-ஒன்று பதிற்றொன்று, பதினாயிரம்-பதிற்றுக்கோடி-பதின்றுலாம்-பதிற்றுக்கலன், எ-ம். ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றுக்கோடி, ஒனபதின்றுலாம், ஒன்பதிற்றுத்தூணி, எ-ம். வரும். பத்துமுன்னிரண்டுவரின்-பன்னிரண்டாம், ஒன்பதும்-பத்தும்வரின் இன்சாரியைபெறு [உ-ம்.] பதிற்றொன்பது, பதிற்றுப்பத்து, எ-ம். வரும்.—தொல்காப்பியம் — ஒன்றன்முதலாமெட்டீறாக, வெல்லாவெண்ணும்பத்தன்முன்வரிற், குற்றியலுகரமெய்யொடுங்கெடுமே, முற்றவின்வருஉமிரண்டலங்கடையே. — பத்தனொற்றுக்கெடனகரமிரட்ட, லொத்ததென்பவிரண்டுவருங்காலை. — ஆயிரம்வரினு மாயியறிரியாது. — நிறையுமளவும் வருஉங்காலையுங், குறையாதாகு மின்னென்சாரியை.—ஒன்பானிறுதி யுருபுநிலைதிரியா, தின்பெறல்வேண்டுஞ் சாரியைமரபே. இவை மேற்கோள். எ-று. (அ)

(கக-சூ.) ஒன்றுமுதலெட்டளவூர்ந்தபத்தொற், றொழிதலுமாய்தமுறழ்தலுமாம்பல, வொன்றுடனுறுமொன்பதுமிற்றே.

*எ-து.* ஒன்றுமுதலெட்டீறாகவருமெண்ணின்கீழ்ப்பத்துத்தொடர்ந்துபுணருமாறுணர்த்துதும். ஒன்றுமுதலெட்டெண்களின்முன்னே தொடர்ந்துவரும்பத்தனொற்றாகியதகரங்கெட்டுப்பதுவாதலும் அவ்வொற்றிடமாய்தம்வந்து பஃதுவாதலும் பகரமொன்றேநின்றுமற்றவைபோய் ஆன்சாரியைபெற்றுமுடிதலுமாம். [உ-ம்.] ஒன்று-பத்து, ஒருபது. இரண்டு-பத்து, இருபது. மூன்று-பத்து, முப்பது. எ-ம். ஒருபஃது-இருபஃது-முப்பஃது. எ-ம். ஒருபான்-இருபான்-முப்பான். எ-ம். வரும். பிறவுமன்ன. அன்றியுமிம்மூன்றுந்திரிபொன்பதென்னுமெண்ணிற்குமாகி யொன்பானெனவும்படுமெனக்கொள்க—தொல்காப்பியம் — ஒன்றுமுதலொன்பானிறுதிமுன்னர், நின்றபத்தனொற்றுக்கெடவாய்தம், வந்திடைநிலையுமியற்கைத்தென்ப, கூறியவியற்கைகுற்றியலுகர, மாறனிறுதியல்வழியான. எ-து. மேற்கோள், எ-று. (கூ)

(கஎ-சூ.) ஒன்பதொழித்தவெண் ணொன்பதுமிரட்டின், முன்னதுகுறிகி மற்றுடவுயிர்வரின், வவ்வுமெய்வரின் வந்ததுமிகனெறி.

*எ-து.* மற்றொருவகையெண்ணின்றொகையாமாறுணர்த்துதும். ஒன்பதென்னுமெண்ணொன்றொழிந்த ஒன்றுமுதற்பத்தெண்களுந் தம்மொடுதொம்புணருமிடத்து நிலைமொழிமுதனெடிலெனின்முதல்குறுகி மற்றவைகெட்டும் வருமொழிமுதலுயிரெனில் வகரமிட்டியுமெய்யெனில்வருமெய்யிரட்டியும்புணரும். [உ-ம்.] ஒன்று-ஒன்று, ஒவ்வொன்று. இரண்டு-இரண்டு, இவ்விரண்டு. மூன்று-மூன்று, மும்மூன்று. நான்கு-நான்கு, நந்நான்கு. ஐந்து-ஐந்து, ஐவ்வைந்து. ஆறு-ஆறு, அவ்வாறு. எழு-எழு எவ்வேழு. எட்டு-எட்டு, எவ்வெட்டு. பத்து-பத்து, பப்பத்து எ-ம். வரும். ஒரோவொன்று, இதனுள்வகரமிட்டா—தொல்காப்பியம்—ஒன்றுமுதலாகியபத்தூர்கிளவி, யொன்றுமுதலொன்பாற்கொற்றிடைமிகுமே, நின்றவாய்தங்கெடுதல்வேண்டும். எ-து. மேற்கோள். எ-று. (ய)

(கஅ-சூ.) அளவின்றொகையா யளவொடுதொக்கியை, கலங்கலனாகி யேயுமிகுமே, யுரிவரினாழியினீற்றுயிர்மெய்கெட, மருவுமடகர முரியின்வழியே, யகரவுயிர்மெய்யா மேற்பனவரினே.

*எ-து.* அளவின்பெயர்த்தொகையாமாறுணர்த்துதும். கலமென்பது மற்றோரளவின்பெயரோடுபுணர்புழி ஈற்றுமகரம்-னகரமாகத்திரிந்தபின் எகாரச்சாரியைபெறும். [உ-ம்.] கலம் - குறுணி, கலனேகுறுணி. முக்கலம்-தூணி, முக்கலனேதூணி. நாற்கலம்-இருதூணி, நாற்கலனேயிருதூணி. எ-ம் வரும். அன்றியும், நாழியின்கீழ் உரிவரின்-ழி-கெட்டு டவ்வாகி, நாழி-உரி, நாடுரி. எ-ம் வரும். அன்றியும் உரியின்கீழ் அதனாலளக்கப்பட்டபொருட்பெயர்வரி னுயிர்முதனில்லாதாயின் யகரச்சாரியைபெற்றுவல்லினமிகவுமற்றினமியல்பாதலுமாம். [உ-ம்.] உரி-கொள், உரியக்கொள். உரி-சாமை, உரியச்சாமை. வல்லினமிக்கன. உரியமிளகு-உரியவரகு, மற்றினமிகாதியல்பாயின. உரியரிசி-உரியெண்ணெய்-உயிர்வந்துசாரியைபெறாதும. உரியவுப்பு, உயிர்வந்துசாரியைபெற்றும்வழங்கும்—தொல்காப்பியம்—உரிவருகாலைநாழிக்கிளவி, யிறுதியிகரமெய்யொடுங்கெடுமே, டகாரவொற்றுமாவயினான. எ-று. (யக)

(ககூ-சூ.) திசையொடுதிசையும் பிறவுஞ்சேரி, னிலையீற்றுயிர்மெய் கவ்வொடுநீங்கலும், றஃகானல்வாய்த் திரிதலுமாம்பிற.

*எ-து.* திசைத்தொகையாமாறுணர்த்துதும். திசைப்பெயர்த்தம்முன்றுமேவரினும் பிறிதோர்பெயரொடுபுணரினு முதனிலைப்பெயரீற்றினின் ற-கு-நீங்கியதன்மேற் கவ்வொற்றுளதேலதுவு மொழிந்துவருமினமிகாமற்புணருமெனக்கண்டுணர்க. [உ-ம்.] வடக்கு-கிழக்கு, வடகிழக்கு வடக்கு-மேற்கு, வடமேற்கு. குணக்கு-கடல், குணகடல். குணக்கு-திசை, குணதிசை. எ-ம். வரும். குவ்வின்மேல்-றகரம்வரின் னவ்வும்-லவ்வுமாகத்திரியும். [உ-ம்.] தெற்கு-மலை, தென்மலை. தெற்கு-திசை, தென்றிசை. மேற்கு-வடக்கு, மேல்வடக்கு. மேற்கு-கடல், மேல்கடல். எ-ம். வரும். தகரமுதல்வரின்திரியும் பிறவென்றமிகையால் கிழக்கு-வடக்கு, கீழ்வடக்கு. கீழ்த்திசை, கீழ்த்துறை, கீழ்ச்சேரி, எ-ம். வரும். (இஃது நன்னூலில், கீழின்முன்வன்மைவிகற்பமுமாகுமென்னுஞ்சூத்திரவிதி) — தொல்காப்பியம்—இருதிசைபுணரினேயிடைவருமே, திரிபுவேறுகிளப்பினொற்றுமிறுதியுங், கெடுதல்வேண்டுமென்மனார்புலவ, ரொற்றுமெய்

திரிந்துனகரமாகும், தெற்கெடுபுணருங்காலையான. எ-து. மேற்கோள். (இவ்வியலுட்கூறியதொகை யெலாம்பலவகைப்படும்.) [உ-ம்.] நிலங்கடந்தான்-௨-ம், வேற்றுமைத்தொகை. தலைவணங்கினான்-௩-ம், வேற்றுமைத்தொகை. சாத்தன்மைந்தன்-௬-ம், வேற்றுமைத்தொகை. ஊர்நீங்கினான்-௫-ம், வேற்று மைத்தொகை. சாத்தனது-௬-ம், வேற்றுமைத்தொகை. குன்றக்கூகை-௭-ம், வேற்றுமைத்தொகை. முன்விடுஞ்சலை-இறந்தகாலவினைத்தொகை. இப்போதுவிடுகலை-நிகழ்காலவினைத்தொகை. பின்வி டுங்கலை-எதிர்காலவினைத்தொகை. கருங்குவளை-வண்ணப்பண்புத்தொகை. சதுரப்பலகை-வடிவுப்பண் புத்தொகை. நாற்குணம்-அளவுப்பண்புத்தொகை. இன்சொல்-சுவைப்பண்புத்தொகை. ஆதிபகவன்-இரு பெயரொட்டுப்பண்புத்தொகை. செந்நிறக்குவளை-பன்மொழித்தொடர். குருவிகூப்பிட்டான் - வினை யுவமத்தொகை. கற்பகவள்ளல் - கொடையுவமத்தொகை. குரும்பைமுலை - மெய்யுவமத்தொகை. பவள வாய்-உருபுவமத்தொகை. மரகதக்கிளிமொழி-பன்மொழித்தொடர். ஒன்றேகால் - எண்ணலும்மைத்தொ கை. தொடியேகஃசு-எடுத்தலும்மைத்தொகை. கலனேதூணி-முகத்தலும்மைத்தொகை. சாண்முழம்-நீட் டலும்மைத்தொகை. சேரசோழபாண்டியர்-பன்மொழித்தொடர். தாழ்குழல் - வினைத்தொகையில்வந்த வன்மொழித்தொகை. கருங்குழல்-குணத்தொகையில்வந்தவன்மொழித்தொகை. கொடியிடை - உவமத் தொகையில்வந்தவன்மொழித்தொகை. உயிர்மெய்-உம்மைத்தொகையில்வந்தவன்மொழித்தொகை. பிற வுமன்ன. எ-று. (௰௨) மூன்றாவது தொகைநிலைத்தொடர்மொழிப்பெயரியன் முற்றிற்று.

---

## நான்காவது சுட்டுவினா.

(௱-சூ.) அஇஉம்முதல் வைம்பாற்சுட்டே, யொன்றன்பாலவை யாய்தமிடையெனவும், பலவின் பாலவை வவ்வீற்றனவுமா, மிவைமூன்றுமவ்வின மியைபுளிமுறையே, யாய்தமெலியியல் பாகுமென்ப.

*எ-து.* சுட்டுப்பெயர்களாமாறுணர்த்துதும். மொழிமுதற்கண்-அ-இ-உ-என மூன்றையுங்கொ ள்வன சுட்டுப்பெயர்களாம். [உ-ம்.] அவன்-இவன்-உவன், அவள்-இவள்-உவள், அவர்-இவர்-உவர், என் பனவுயர்திணைமுப்பால். அது-இது-உது, அவை-இவை-உவை, என்பனவஃறிணையிருபால் மொழிய கத்துவந்தன. அக்கொற்றன்-இக்கொற்றன்-உக்கொற்றன், மொழிப்புறத்துவந்தன. அன்றியும், ஒன் றன்பாற்சுட்டுச்சொல்லிடையேவாய்தம்வரவும்பெறும். [உ-ம்.] அஃது-இஃது-உஃது, எ-ம். வரும். பலவின்பாற்சுட்டுசசொல் வகரவொற்றெடுமுடியவும்பெறும். [உ-ம்.] அவ்-இவ்-உவ், எ-ம். வரும். —சிந்தாமணி—வெவ்வினைசெய்யுமாந்தருயிரொனுநிலத்தில்வித்தி, யவ்வினைவிளைவுளுண்ணுமவ்விடத் தாவதுன்ப, மிவ்வெனக்கிளர்த்துமென்றுநினைப்பினும்பிணிக்குமுள்ளள், செவ்வினின்சிறிதுகூறக்கே ண்மதிச்செல்வவேந்தே. என்பதில், இவை-என்பதற்கு-இவ்வெனவந்தவாறுகாண்க. அங்ஙனம் வகரவொ ற்றீற்ற சுட்டுவந்தவற்றின்கீழிடையினம்வரின் வகரந்திரியா தியல்பாய்நிற்பதன்றியே வல்லினம்வரினுய் தமாகவும் மெல்லினம்வரினொத்தமெல்லினமாகவும் வகரந்திரிந்துகெடும். [உ-ம்.] அவை-வலிய, சிறிய, நீடிய, என்பதற்கு அவ்வலிய. அஃசிறிய. அந்நீடிய. எ-ம். வரும்.—தொல்காப்பியம்—அவ்வழி அவனி வனுவனெனவரூஉம்பெயரு, மவளிவளுவளெனவரூஉம்பெயரு, மவரிவருவரெனவரூஉம்பெயரும், யா ன்யாம்நாமெனவரூஉம்பெயரும், யாவன்யாவள்யாவரென்னு, மாவயின்மூன்றொடப்பதினைந்தும், பா லறிவந்தவுயர்திணைப்பெயரே,—அதுஇதுஉதுவெனவரூஉம்பெயரு, மவைமுதலாகியவாய்தப்பெயரு மவையிவையுவையெனவரூஉம்பெயரு, மவைமுதலாகியவகரப்பெயரும், யாதுயாயாவையென்னும்பெ யரு, மாவயின்மூன்றொடப்பதினைந்தும், பாலறிவந்தவஃறிணைப்பெயரே. இவை மேற்கோள் எ-று (௧)

(௱௧-சூ) தொடர்அஇஉச்சுட்டெழுத்தென்ப, வவைவந்தவிணைய வனைத்துமெய்யொட்டு, முயிர்வரி னிருவவ் விடைவரலுரித்தா, மெகரவினுவு மிந்நடையுடைத்தே.

*எ-து.* சுட்டெழுத்துகளுஞ் சுட்டெழுத்துக்கட்புணர்ச்சியுமாமாறுணர்த்துதும். அஇஉ, என விம்மூன்றுஞ் சுட்டெழுத்துக்களாம், இவை பெயரொடுபுணருங்கால் வருமொழிமுதலெழுத்துமி னவ் வொற்றிரட்டலும் வருமொழிமுதலுயிராயினிரண்டு வகரம்புணர்தலுமாம். இங்ஙனம் வினாவெழுத்தாகி யவெகரமும்புணரப்படும். [உ-ம்.] அ-படை, அப்படை. அ-நிலம், அந்நிலம். அ-வழி, அவ்வழி. அ-அணி, அவ்வணி. எ-ம். இப்படை இந்நிலம். இவ்வழி. இவ்வணி. எ-ம். உப்படை. உந்நிலம் உவ்வழி. உவ் வணி. எ-ம். எப்படை. எந்நிலம். எவ்வழி. எவ்வணி. எ-ம். வரும். சுட்டுநீளின்யகரவுடம்படுமெய்யாம், [உ-ம்.] ஆ-இடை, ஆயிடை. ஈ-இடை, ஈயிடை. எ-ம். வரும். அ-யாவன், அவ்யாவன். எனவருதலும றிக—நன்னூல்—எகரவினாமுச்சுட்டின்முன்னர், ருயிரும்யகரமுமெய்தின்வவ்வும், பிறவரினவையுந்தூக்கி ற்சுட்டு, நீளின்யகரமுந்தோன்றுதனெறியே.—தொல்காப்பியம்—அஇஉஅம் மூன்றுஞ்சுட்டு. இவை மேற்கோள். எ-று. (௨)

(௱௨-சூ.) எயாமுதலும் ஆஓவீற்றும், எயிருவழியும் வினாவாகும்மே, யெவனென்வினாவினைக் குறிப்பிழியிருபால்.

*எ-து.* வினாவெழுத்தும் வினாப்பெயருமாமாறுணர்த்துதும். எகரமும்-யாவு மொழிக்குமு தலினும், ஆகாரமும்-ஓகாரமுமொழிக்கீற்றினும், எகரமொழிக்குமுதலினுமீற்றினும் வினாவாகவரு ம். [உ-ம்.] எவன்-எவள்-எவர், யாவன்-யாவள்-யாவர், இவை உயர்திணைமுப்பால். எது-எவை, யாது-யா வை, இவையஃறிணையிருபால். எகரமும்யாவுமொழியகத்துவந்தன. எக்கொற்றன்-யாங்ஙன மொழிப் புறத்துவந்தன. நீயா-நீயோ, ஆகாரமும் ஓகாரமுமொழியீற்றிற்புறத்துவந்தன. எவன் - கொற்றனே, எகாரமுதலிலசத்து மீற்றிற்புறத்தும்வந்தது. அன்றியும், எகரமும்-யாவுமேற்கூறியசுட்டெழுத்தைப் போலபிறபெயரொடுபுணர்ந்து வினாவாம். [உ-ம்.] எ-குதிரை, எக்குதிரை. யா-செயதி, யாச்செயதி. எ-ம்.

வரும். யா, எ-து. வினாவெழுத்தாவதன்றி வினாச்சொல்லாகி வினையொடுபுணரப்பட்டஃறிணை யிருபாலுக்கேற்பன. [உ-ம்.] — குறள் — யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற், சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. எ-ம். வரும். அன்றியும், எவன்-என்னும் வினாச்சொல்லஃறிணையிருபாலிடத்து வினைக்குறிப்பாக வேற்கும். [உ-ம்.] எவனது-எவனவை, எ-ம். அன்றியும் வினைக்குறிப்பாகாமையும் எது, எனுமஃறிணை வினாவிற்கு எவன்-என்பதுமாம்.—குறள்—சிறைகாக்குங் காப்பெவன்செய்யுமகளிர், நிறைகாக்குங்காப்பே தலை. இப்பயன்கொண்டெவனென்னும் வினாவென்னெனவுமாம் —குறள்—ஒலித்தக்காலென்னாமுவரியெலிப்பகை, நாகமுயிர்ப்பக்கெடும். எனவருதலுமறிக.—தொல்காப்பியம் — ஆஎஓஅம் மூன்றும் வினா. எ-து. மேற்கோள். எ-று. (௩) நான்காவது சுட்டுவினா முற்றிற்று.

---

## மூன்றாமோத்து வினைச்சொல்லியல்.

(௰௩-சூ.) வினைமுற்றொருமூன் றெச்சமிரண்டு, வினைக்குறிப்பெனவிவை வினையின்வகுப்பே.

*எ-து.* மேலேவகுத்துக்கூறிய நால்வகைச்சொற்களுளிவ்வோத்தின்கண்ணே வினைச்சொல்லியல்பினைவிளக்குதும். வினையெனப்படுவன; இனிவருமிறப்பெதிர்வுநிகழ்வென முக்காலமுற்றுவினையும், ஏவன்முற்றுவினையும், வியங்கோண்முற்றுவினையும், என வினைமுற்றுமூன்றும்; பெயரெச்சம், வினையெச்சமென வினையிலெஞ்சியமொழிகளிரண்டும்; வினைச்சொல்லல்வாயினும் வினையைப்போலநடந்து குறிப்பினால்வினையின்றொழிலைக்காட்டும் வினைக்குறிப்பொன்றும், இவ்வோத்தினுள்விளங்கும். இவ்வினையே தெரிநிலைவினை-குறிப்புவினை- எனப்பொதுவகையாலிருவகைப்பட்டுஞ் சிறப்புவகையாலறுவகைப்பட்டுஞ் சிறப்பேவேறுவேறுவகைப்பட்டும்வரும். [உ-ம்.] உண்டுவந்தான்-தெரிநிலைவினைமுற்று: உண்டுவந்த-தெரிநிலைவினைப்பெயரெச்சம்: உண்டுவந்து-தெரிநிலைவினைவினையெச்சம் உண்டுவந்தவன்-தெரிநிலை வினையாலணையும்பெயர்; உண்டுவருதல்-தெரிநிலை வினைத்தொழிற்பெயர்; முடிந்தான்-செய்பொருள் குறைவினை; பண்முடிந்தான்-செய்பொருள் குறையாவினை: நடந்தான்-தன்வினை; நடப்பித்தான்-பிறவினை; தின்றான்-செய்வினை; தின்னப்பட்டான் - செயப்பாட்டுவினை; நடந்தான்-விதிவினை; நடந்திலன்-மறைவினை; நோவான் - பொதுவினை; இவைதெரிநிலைவினை. குழையினன்-குறிப்புவினைமுற்று; நெடிய-குறிப்புவினைப்பெயரெச்சம்: அன்றி குறிப்புவினை வினையெச்சம் நல்லனாயினான்-ஆக்கவினைக்குறிப்பு: நல்லன்-இயற்கைவினைக்குறிப்பு; இவைகுறிப்புவினை (மற்றவை தத்தஞ்சூத்திரத்திற்காண்க.) —தொல்காப்பியம்—வினையெனப்படுவதுவேற்றுமைகொள்ளாது, நினையுங்காலைக்காலமொடுதோன்றும், எ-து. மேற்கோள். வடநூலார்-வினையை-கிரியாபாதம், என்பர் (௧)

(௰௪-சூ.) பெயரேயேற்றி மற்றொன் றவாவேண்டா, தேற்பதுவினைவினைக் குறிப்புமுற்றே.

*எ-து.* வினைமுற்றும்வினைக்குறிப்புமுற்றுமாமாறுணர்த்துதும். பொருளிடங்காலஞ்சினை குணந்தொழிலென்னுமறுவகைப்பெயரையும் பயனிலையாகக்கொண்டு மற்றொன்றைவேண்டாது, முடிவன தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம். [உ-ம்.] செய்தானவன்-குளிர்ந்ததுநிலம்-வந்ததுகார்-குவிந்ததுகை-பரந்ததுபசப்பு-ஒழிந்ததுபிறப்பு-இவைதெரிநிலைவினைமுற்று, நல்லனவன்-நல்லதுநிலம்-நல்லதுகார்-நல்லதுகை-நல்லதுபசப்பு - நல்லதுபிறப்பு-இவைகுறிப்புவினைமுற்று,—நன்னூல் — செய்பவன்கருவிநிலஞ்செயல்காலஞ், செய்பொருளாறுந்தருவதுவினையே. —பொதுவியல்பாறையுந்தோற்றிப்பொருட்பெயர், முதலறுபெயரலதேற்பிலமுற்றே. இவைமேற்கோள். எ-று. (௨)

### முதலாவது முக்காலமுற்றுவினை.

(௰௫-சூ.) பொழுதுகொள்வினை வினைப்பகுபதமே, பகுதியேவலெனும் பகாப்பதமாகும், என் ஏன்எம்ஏம் ஓம் அம்ஆம்தன்மை, ஐஆய்இஇர்ஈர் முன்னிலைஅன்ஆன், அள்ஆள்அர்ஆர் உஅபடர்க்கை, வினையின்விகுதி மீண்டுளபிறவுங், கள்ளெனப்பலவொழி பன்மையின்மிகலுமாம்.

*எ-து.* முக்காலவினைப்பகுதியும் விகுதியுமாமாறுணர்த்துதும். முக்காலமுற்றுவினைச்சொல்லெல்லாம்பகுபதமாம், அவற்றுண்முதனிற்கும் நடவாமுதலியவேவல் வினைப்பகாப்பதங்களேமுதனிலைகளாம். முதனிலைமூவகைப்படும் [உ-ம்] வருதல்-வளர்தல்-என்பதில், வரு-வளர், தன்வினைமுதனிலை அடித்தல்-அடுதல்-என்பதில், அடி-அடு, பிறவினைமுதனிலை. வெளுத்தான்-என்பதில், வெளு-பொதுவினைமுதனிலை, பிறவுமன்ன. என்-ஏன்-விகுதி தன்மையொருமை. [உ-ம்.] வந்தனென்-வந்தேன்-யான், எ-ம். எம்-ஏம்-ஓம்-அம்-ஆம்-விகுதிதன்மைப்பன்மை [உ-ம்] வந்தனெம்-வந்தேம்-வந்தோம்-வந்தனம்-வந்தாம்-யாம்-எ-ம்-ஐ-ஆய்-இ-விகுதிமுன்னிலையொருமை. [உ-ம்.] வந்தனை-வந்தாய்-வந்தி-நீ-எ-ம்-இர்-ஈர்-விகுதிமுன்னிலைப்பன்மை. [உ-ம்.] உண்டனிர்-உண்டீர்-நீர்-எ-ம்-அன்-ஆன்-விகுதியாண்பாற்படர்க்கையொருமை [உ-ம்.] வந்தனன்-வந்தான்-அவன், எ-ம். அள்-ஆள்-விகுதிபெண்பாற்படர்க்கையொருமை. [உ-ம்] வந்தனள்-வந்தாள்-அவள், எ-ம். அர்-ஆர்-விகுதிபலர்பாற்படர்க்கை [உ-ம்] வந்தனர்-வந்தார்-அவர், எ-ம். உ-விகுதியொன்றன்பாற்படர்க்கை. [உ-ம்.] வந்தது-அது, எ-ம். அ-விகுதிபலவின்பாற்படர்க்கை [உ-ம்] வந்தன-அவை, எ-ம். வரும். இவைமுக்காலமுற்றுவினைக்குப்பொதுவிகுதிகளாம். பலவின்பாலொழித்தொழிந்த பன்மைவிகுதிகட்கெல்லாமீற்றின்கண்மேனை-கள்-என்னும்விகுதிகூட்டி வரவும்பெறும். [உ-ம்.] வந்தனர்கள்-வந்தார்கள்-எனவரும். பிறவென்றமிகையால்-கொண்மார்-நடப்ப, எ-ம். வரும். —தொல்காப்பியம்—கடதறவென்னுமந் நான்கூர்ந்தகுன்றிய, லுகரமோடென்னே னல்லென்வரூஉமேழுந், தன்வினையுரைக்குந் தன்மைச்சொல்லே.—நன்னூல்—ஐயாயிகரவீற்றமூன்று, மேவலின்

வரூஉமெல்லாவிற்றவு, முப்பாலொருமைமுன்னிலைமொழியே.—இர்ஈரீற்றவிரண்டிருதிணைப், பன்மைமுன்னிலைமின்னவற்றேவல். இவைமேற்கோள், எ-று. (௧)

(௱௬-சூ.) அம்ஆம்என்பன முன்னிலையாரையும், எம்ஏம்ஓம்இவை படர்க்கையாரையும், உம்மூர்க டதறவிருபாலாரையுந், தன்னொடுபடுக்குந் தன்மைப்பன்மை.

*எ-து* சிலவிகுதிவிகற்பங்களாமாறுணர்த்துதும். முக்காலத்துத்தன்மைப்பன்மைக்குரிய விகுதிகளின் அம்-ஆம்-விகுதி தன்மைமுன்னிலையர்காட்டுவனவாம். [உ-ம்.] நடந்தனம்-நடக்கின்றனம்-நடப்பம்-நடந்தாம்-நடக்கின்றாம்-நடப்பாம்-யானுநீயும்-எனவரும். எம்-ஏம்-ஓம்-விகுதிதன்மையும் படர்க்கையுங்காட்டுவனவாம். [உ-ம்.] நடந்தனெம்-நடக்கின்றனெம்-நடப்பெம்-உண்டேம்-உண்கின்றேம்-உண்பேம்-நடந்தோம்-நடக்கின்றோம்-நடப்போம்-யானுமவனும், எனவரும். கும்-டும்-தும்-றும்-விகுதிதன்மையுமுன்னிலையும் படர்க்கையுங்காட்டுவனவாம். [உ-ம்] உண்கும்-உண்டும்-வருதும்-சேறும்-யானுநீயுமவனும், எனவரும்.—தொல்காப்பியம்—அவைதாம்-அம்ஆம்எம்ஏம் என்னுங்கிளவியும், உம்மொடுவரூஉங் கடதறவென்னு, மந்நாற்கிளவியோ டாயெண்கிளவியும், பன்மையுரைக்குந் தன்மைச் சொல்லே. எ-து. மேற்கோள், எ-று. (௨)

(௱எ-சூ.) செய்யுமென்முற்றே சேரும்பலமொழி, மற்றைப்படர்க்கையு மற்றதனீற்றய, லுயிருமுயிர்மெய்யு மொழிந்தேயஃகலும், பலவின்பாற்கள்ளெனப் பற்றிமிகலுமாம்.

*எ-து.* செய்யுமென்னெச்சம்போலவதனாலாகிய செய்யுமென்னுமுற்றுவினை சிலபாலிடங்கட்குச்செல்லாமையுணர்த்துதும். செய்யும்-உண்ணும்-நடக்கும்-உவக்கும்-என்னுநிகழ்காலவெதிர்காலமுற்றுவினை உயர்திணைப்பன்மைப்படர்க்கையன்றி மற்றைநாற்படர்க்கையிடத்தும் வருமெனக்கொள்க. [உ-ம்] அவனுண்ணும்-அவளுண்ணும்-அதுவுண்ணும்-அவையுண்ணும், எனவரும். இஃதன்றிப்பலர்பாலிடத்தும் தன்மையிடத்தும் முன்னிலையிடத்தும் அவைமுற்றுவினையாகவாரா; சொன்னவினைமுற்றிடத்திலீற்றுமகரநிற்ப ஈற்றயலுயிரொன்றுமினு முயிர்மெய்யாயினுங் கெட்டுக்குறுகிவருவனவுள. [உ-ம்.] போலும்-போன்ம், மருளும்-மருண்ம், கழும்-கழ்ம், எனவீற்றயலுயிர்கெட்டன. மொழியும்-மொழிம், ஆகும்-ஆம், எனவீற்றயலுயிர்மெய்கெட்டன.—வெண்பா—வண்கொடைமாரியுமன்னு தயைநிழலின், வெண்குடையும்வெஃகிப்புகழ்முலகங், கண்கொள், புகைப்படப்போர்வெல்லுன்புகழ்நாய வெள்வேல், பகைப்படப்போரஞ்சிப்பணிம். இருவழியுமுயிருமுயிர்மெய்யுங்குறைந்தன. அன்றியும் பலவின்பாலிடத்துக்கள்ளெனக்கூட்டலுமாகும். [உ-ம்] அவையுண்ணுங்கள்-இடுங்கள்-எனவரும்—சிந்தாமணி—அல்லித்தாளற்றபோதுமறாதநூலதனைப்போலத், தொல்லைத்தம்முடம்புநீங்காத்தீவினைதொடர்ந்துநீங்காப், புல்லிக்கொண்டுயிரைச்சூழ்ந்துபுக்குழிப்புக்குப்பின்னின், றெல்லையிறுன்பஞ்செய்தீச்சுட்டெரித்திடுங்களென்றே. எனவரும்—தொல்காப்பியம்—பல்லோர்படர்க்கைமுன்னிலைதன்மை, யவ்வயின்மூன்றுநிகழுங்காலத்துச், செய்யுமென்னுங்கிளவியொடுகொள்ளா. எ-து. மேற்கோள், எ-று. (௩)

(௱அ-சூ.) இறந்தகாலத் திடைநிலைதடறவொற், றின்னேமூவிடத் தைம்பாற்கேற்பன.

*எ-து* இறந்தகாலத்திடைநிலைகளாமாறுணர்த்துதும். த்ட்ற், எனமூன்றுமெய்யும் இன்னும் இறந்தகாலவினையிடைநிலைகளாம். [உ-ம்] நடந்தான்-நடந்தாள்-நடந்தார்-நடந்தது-நடந்தன-நடந்தேன்-நடந்தேம்-நடந்தாய்-நடந்தீர், எ-ம். உண்டான், எ-ம். சென்றான், எ-ம். உறங்கினான், எ-ம். வரும். என்மனார், என்றிசினோர், போனது, எனவருதலுமறிக. எ-று. (௪)

(௱௯-சூ.) நிகழ்பொழுதாநின்று கின்றுகிறுவென, வைம்பான்மூவிடத் தாமிடைநிலையே.

*எ-து* நிகழ்காலத்திடைநிலைகளாமாறுணர்த்துதும். ஆநின்று-கின்று-கிறு-எனமூன்றும் நிகழ்காலவினையிடைநிலைகளாம் [உ-ம்] நடவாநின்றான்-நடவாநின்றாள்-நடவாநின்றார்-நடவாநின்றது-நடவாநின்றன, எ-ம். நடக்கின்றேன், எ-ம். நடக்கிறாய், எ-ம். வரும். உண்ணாகிடந்தான்-உண்ணாவிருந்தான், எனவருதலுமறிக. எ-று. (௫)

(௱௰-சூ.) எதிர்வருங்காலத் திடைநிலைப்பவ்வ, வைம்பான்மூவிடத் தாமிவைசிலவில.

*எ-து.* எதிர்காலத்திடைநிலைகளாமாறுணர்த்துதும். ப்வ், என இரண்டுமெய்யும் எதிர்காலவினையிடைநிலைகளாம் [உ-ம்] நடப்பான்-நடப்பாள்-நடப்பார்-நடப்பது-நடப்பன, எ-ம். நடவேன்-நடவான், எ-ம். வரும். சிலவிலவென்றமையால் சிலவினைமொழிகளிடைநிலையின்றிவரவும் பெறுமெனக்கொள்க. (இவற்றையினிக்காட்டுதும்.) எ-று. (௬)

(௱௰௧-சூ.) எதிர்காலவிகுதியு ளொருமைத்தன்மை, குடுதுறுவென்னுங் குற்றியலுகரமோ, டல்லன்னென்னேனுமெண்ணீறே, பலர்பாற்காகும் பமார்மருமனர்.

*எ-து.* மேற்கூறியமுக்காலவினைக்குப்பொதுவிகுதியாமாறுணர்த்துதும். கு-டு-து-று-அல்-அன்-என்-ஏன்-விகுதியெதிர்காலவொருமைத்தன்மையாம். [உ-ம்.] உண்கு-கொடு-வருது-சேறு-யான், எ-ம். நடப்பல்-நடப்பன்-நடப்பென்-நடப்பேன்-யான், எ-ம். வரும். அன்றியும், ப-மார்-மரும்-மனர்-விகுதியுயர்திணைப்பன்மைப்படர்க்கையாம், [உ-ம்.] சொல்லுப-நடமார்-என்மரும்-என்மனர்-புலவர், எனவரும். அன்றியும், கும்-டும்-தும்-றும்-விகுதிவருதலுங்கொள்க. [உ-ம்.] உண்கும்-எ, உண்டும்-இ, வருதும்-எ, சேறும்-எ, எனவரும். மாரொனும்விகுதிகுறுகிவரும். [உ-ம்.] என்மார், எனவரும்.—நன்னூல்—றவ்வொடுகரவும்மைநிகழ்பல்லவுந், தவ்வொடிறப்புமெதிர்வுமடவ்வொடு, கழிவுங்கவ்வோடெதிர்வு மின்னேவல், வியங்கோளிம்மாரெதிர்வும்பாந்தஞ், செலவொடுவரவுஞ்செய்யுநிகழ்பெதிர்வு, மெதிர்மறைமும்மையுமேற்குமீங்கே. எ-து. மேற்கோள், எ-று.

(௭)

(௱௰௨-சூ.) எதிர்மறைக்கிடைநிலை யின்றியென்னெம்மும், ஆய்ஈர்ஆன்ஆள் ஆர்ஆஅதுஅ, வைம்பான்மூவிடத்தாகுமென்ப.

*எ-து.* ஒருமொழிப்பொருளை நீக்குதற்கெதிர்மறைவிகுதிகளாமாறுணர்த்துதும் நடவா முதலிய ஏவல்வினைப்பகாப்பதத்தைப்பகுதியாகநிறுத்தி இடைநிலையின்றியுத்திரத்திற்காட்டிய விகுதிகளையேற்றிமுடிக்கில்மூவிடத்தைம்பால் எதிர்மறைவினையாம் [உ-ம்.] நடவேன்-யான்; நடவேம்-யாம்: நடவோம்-யாம்: நடவாய்-நீ: நடவீர்-நீர்; நடவான்-அவன்; நடவாள்-அவள்; நடவார்-அவர்: நடவா-குதிரைகள்; நடவாது-யானை; நடவாவன-அவை: எ-ம். வரும். (அ) முதலாவதுமுக்காலமுற்றுவினை முற்றிற்று.

## இரண்டாவதேவல்வியங்கோள்.

(௱௰௩-சூ.) ஏவலொருமைக் கியல்புமாய்இமோ, வேவற்பன்மைக் கீர்தீர்மின்மினீ, ரிருமைக்கோரோவிடத் தாகுங்குவ்வே.

*எ-து.* ஏவல்விகுதிகளாமாறுணர்த்துதும். ஆய்-இ-மோ-விகுதியொருமையேவலாம். [உ-ம்.] உரையாய்-உரை இ-உரைமோ-நடவாய்-சேறாய்-போதி-அருள்தி - கேண்மோ-சென்மோ, எ-ம். வரும். அன்றியும், ஈர்-தீர்-மின்-மினீர், விகுதிபன்மையேவலாம் [உ-ம்.] உரைமீர்-கேளீர்-போதீர் - அருள்தீர்-உரைமின்-கேண்மின்-உரைமினீர்-கேண்மினீர், எ-ம். வரும். அன்றி-கு-விகுதி யொருமைக்கும்பன்மைக்குமாகும். [உ-ம்.]—கம்பன் — அவ்வினையயவினையார்க்கெவ்வாறடுத்தவாறருளுகென்றான், — சிலப்பதிகாரம் — நீயிங்கிருக்கெனறேசி,—சிந்தாமணி—எற்றியல்காணாதமிவட்டருகென்னவே. என்பதில்: அருளுகு - இருக்கு-தருகு என்பனவொருமைக்கேவலாம். மீளவும்,—சிந்தாமணி—எந்தைமார்களெழுகென்றுளென. எழுகு-பன்மைக்கேவலாம், ஒரோவிடத்திவ்விகுதிவியங்கோள்வினைக்குமாம்.—கம்பன்— ஆயிரமர்தர்க்குள்ளவறிகுறியுனக்குண்டாமென்றேசனன் — சிலப்பதிகாரம் — பசியும்பிணியும்பகையுநீங்கிவசியும்வளனுஞ்சுரக்கெனவாழ்த்தி. என்பதில், உண்டாகு-சுரக்கு, இவை உண்டாக - சுரக்க - எனவியங்கோளாய்வந்தவாறுகாண்க. அன்றியும்: வரல்-தரல்-என்னுஞ்சொல், வாராய்-தாராய்-வருதி-தருதி, எ-ம். வாரீர்-தாரீர்-வருதீர்-தருதீர்-வம்மின்-தம்மின்-வம்மினீர்-தம்மினீர், எனவருதலுமறிக எ-று. (௧)

(௱௰௪-சூ.) எதிர்மறையேவற் கேலேஅல்லே, அன்மோஅற்க வாகுமொருமை, ஆமின் அன்மின் அற்பீர்பன்மை.

*எ-து.* எதிர்மறையேவல்விகுதிகளாமாறுணர்த்துதும். எல், அல், அன்மோ, அற்க, விகுதியெதிர்மறையேவலொருமையாம். [உ-ம்.] செய்யேல்-செய்யல்-செய்யன்மோ-செய்யற்க; முனியேல்-முனியல்-முனியன்மோ-முனியற்க, எ-ம். வரும். ஆமின், அன்மின், அற்பீர், விகுதியெதிர்மறையேவற்பன்மையாம் [உ-ம்] செய்யாமின்-செய்யன்மின்-செய்யற்பீர்: முனியாமின்-முனியன்மின்-முனியற்பீர்-எ-ம். வரும். அற்க, என்னும்விகுதி மூவிடத்தைம்பாற்குமேற்றதன்றி வியங்கோளினுமாம். [உ-ம்] நாமும்பொய்யற்க-நீருஞ்சொல்லற்க-அரசன்முனியற்க-இஃதிவள்செய்யற்க-அவரும்வழுவற்க-இதுவழங்கற்க-அவையொழியற்க—குறள்—வியவற்கவெஞ்ஞான்றுந்தன்னைநயவற்க, நன்றிபயவாவினை. (௨)

(௱௰௫-சூ.) ஈதாகொடுவெனு மூன்றுமுறையே, யிழிந்தோனொப்போன் மிக்கோனிரப்புரை.

*எ-து* எவன்மொழிகளுண்மும்மொழிவிகற்பமாமாறுணர்த்துதும். ஈ, என்னுஞ்சொல் ஈவானிழிந்தவிரப்பான்சொல்லுவதாம். தா, என்னுஞ்சொல் ஈவானொடொத்தவிரப்பான்சொல்லுவதாம். கொடு, என்னுஞ்சொல் ஈவானின்மிக்கவிரப்பான்சொல்லுவதாம் [உ-ம்] கர்த்தாவீ-இழிந்தோனிரப்பு. அன்பா தா-ஒப்போனிரப்பு. மைந்தா கொடு-உயர்ந்தோனிரப்பு—தொல்காப்பியம்—ஈயென்கிளவி யிழிந்தோன் கூற்றே—தாவென்கிளவியொப்போன்கூற்றே—கொடுவென்கிளவியுயர்ந்தோன்கூற்றே. எ-று (௩)

(௱௰௬-சூ.) வியங்கோளியலும் விகுதிக்கவ்விய, யவ்வொடுரவ்வொற்று மிவையெங்குமேற்பன, வாழியவென்பத னீற்றினுயிர்மெய், யேகலுமுரித்தஃ தேகினுமியல்பே.

*எ-து.* வியங்கோள்விகுதிகளாமாறுணர்த்துதும். க-ய-ர்-விகுதி மூவிடத்தைம்பாற்கண்ணுமேற்கும்வியங்கோளாம். [உ-ம்] வாழ்க-வாழிய-வாழியர், எ-ம். நான்வாழ்க-நீவாழ்க-அவன்வாழ்க-அவள்வாழ்க-அவர்வாழ்க-அதுவாழ்க-அவைவாழ்க, எனவரும். மற்றவிகுதியுமிவ்வாறொட்டுக. அன்றியும் வாழியவென்னும்வியங்கோளீற்று யகரங்கெட்டு வாழியெனவரின்வல்லினமிகா. [உ-ம்] வாழிகொற்றா-வாழிதேவ-வாழிபூத-வாழிசெல்வ, எனவரும்—நன்னூல்—கயவ டுரவ்வொற்றீற்றவியங்கோ, ளியலுமிடம்பாலெங்குமென்ப — வாழியவென்பதனீற்றுயிர்மெய், யேகலுமுரித்தஃதேகினுமியல்பே. இவைமேற்கோள். எ-று. (௪) இரண்டாவது ஏவல்வியங்கோள் முற்றிற்று.

## மூன்றாவதெச்சம்.

(௱௰௭-சூ.) எச்சமேதொழில்பொழு தென்றிவைதோன்றி, யிடம்பாலொன்று தெஞ்சியவினையென, விவற்றுட்பெயர்சேர்ந் தியலும்பெயரெச்சம், வினையொடுபுணர்வது வினையெச்சம்மே.

*எ-து.* எச்சங்களாமாறுணர்த்துதும். தொழிலுங்காலமுந்தோன்றி இடமும்பாலுந்தோன்றாதுவருவனவெல்லாமெச்சமெனப்படும், ஐம்பான்மூவிடஞ்செய்பவன்முதலியவறுபொருட்பெயரொடுபுணரப்படுவனவெல்லாம் பெயரெச்சமெனப்படும், வினையொடுபுணரப்படுவனவெல்லாம் வினையெச்சமெனப்படும், [உ-ம்.] உண்ட-உண்கின்ற-உண்ணும்-எனநிறுத்தி, அவன்-அவள்-அது-அவை-நான்-நீ-இவைகூட்டுக. அன்றியும் உண்டசாத்தன்-வினைமுதற்பெயர், உண்டகலம்-கருவிப்பெயர், உண்

டவிடம்-இடப்பெயர், உண்டவுணவ்-தொழிற்பெயர், உண்டநாள்-காலப்பெயர், உண்டசோறு-செயப்படுபொருட்பெயர், இவைதெரிநிலைவினைப்பெயரெச்சம். கரியகுதிரை-பெரியகளிறு-முகத்தயானை-படத்தபாம்பு-நெடியவில்-தீயசொல்-புதியநட்பு, இவைகுறிப்புவினைப்பெயரெச்சம். கணக்கட்டபயிர்-கணக்கட்டகூலி, என இன்னதற்கிதுபயனும். உண்டவிளைப்பு-குடிப்போனவூர், எனப்பிறபெயரொடுசேர்தலுமறிக. பெயரெச்சவாய்பாடுகள்: செய்த-செய்கின்ற-செய்யும், எனமூன்றும். இவை இறப்பு, நிகழ்வு, எதிர்வு, முக்காலத்தின்வரும் [உ-ம்] பட்டபகை-படுகின்றபகை-படும்பகை, எனவரும். உண்டுபோனான்-உண்ணப்போனான்-உண்டக்கால்வருவான், இவைமுக்காலத்துவினையெச்சம். (வினையெச்சவிகற்பமினிக்காட்டுதும்.)—நன்னூல்—செய்தசெய்கின்றசெய்யுமென்பாட்டிற், காலமுஞ்செயலுந்தோன்றிப்பாலொடு, செய்வதாதியறுபொருட்பெயரு, மெஞ்சநிற்பதுபெயரெச்சம்மே.—அகத்தியம்—காலமும்வினையுந்தோன்றிப்பாறேன்றுது, வினைகொள்ளுமதுவினையெச்சம்மே.—காலமும்வினையுந்தோன்றிப்பாறேன்றுது, பெயர்கொள்ளுமதுபெயரெச்சம்மே. இவைமேற்கோள். வடநூலார், பெயரெச்சம்-சந்திராந்தம், எ-ம். வினையெச்சம்-துவாந்தம், எ-ம். கூறுவர் எ-று. (௧)

(௱௮-சூ.) உம்மீற்றவெச்சத் தீறுமீற்றய, லுயிருமுயிர்மெய்யு மொழிதலாஞ்செய்யுட், கும்முந்தாதலு மொக்குமென்ப.

*எ-து.* பெயரெச்சத்திற்குச்சிறப்புவிதியாமாறுணர்த்துதும். உம்மெனமுடியும் எதிர்காலப்பெயரெச்சந்தொக்குநின்று ஈற்றுமகரமு மீற்றயலுகரமு முகரத்தோடதன்மெய்யும் வேண்டுழிக்கெடுதலாம், இங்ஙனந்தொகுநிற்புழி முக்காலத்துக்குமேற்பன. [உ-ம்] செய்யுந்தொழில், எ-து. செய்தொழில்-செய்தொழில். எ-ம். வாழுங்குடி, எ-து. வாழுகுடி-வாழ்குடி. எனவரும். இவற்றைவிரிக்குங்கால், வாழ்ந்தகுடி-வாழாநின்றகுடி-வாழுங்குடி. எனமுக்காலத்துப்பொருளனவாம். இவ்வாறொருகாலமுந்தோன்றுது தொக்குநிற்பவே இப்பெயரெச்சங்கள் வருங்காலவினைத்தொகையெனப்படும். [உ-ம்.] ஆகும், எ-து. ஆம். எ-ம். போகும், எ-து. போம். எ-ம். ஈற்றுமகரமின்றதனால் இவை எஞ்சினும்வினைத்தொகையெனப்படா, இஃதன்றியே செய்யுளிடத்தில் ஈற்றின்கண்ணே-து-கூட்டி உம் உந்தாகவும் பெறுமெனக்கொள்க [உ-ம்] செய்யும்-செய்யுந்து-வாழும்-வாழுந்து, எ-ம். புணரிநீர்சூழுந்துபூவுலகில் யாவு, முணரினிணக்கில்லையொப்பு. எ-ம். பிறவுமன்ன எ-று. (௨)

(௱௯-சூ.) வினையெச்சங்கொள் விகுதிஇஉ, உவ்வோடெனவும் ஊபுஆவிறப்பே, அஇருகருத்தாவணையினிகழ்வே, யொருகருத்தாவு மோரிடத்திரண்டு, மிவையவன்றி இல்இன்இயஇயர், வான்பான் பாக்கு வரும்பொழுதாம்பிற.

*எ-து.* முக்காலத்துவினையெச்சவிகுதிகளாமாறுணர்த்துதும். இ உ என ஊ பு ஆ, விகுதியிறந்தகாலங்காட்டுந்தெரிநிலைவினையெச்சங்களாம். [உ-ம்.] ஆடி-ஆடி, எ-ம். செய்து-வந்து, எ-ம். உண்டென-பட்டென, எ-ம். செய்யூ-காணூ, எ-ம். செய்பு-காண்குபு, எ-ம் உண்ணு-காணு, எ-ம். வரும். ஆய்-போய், என-ய-விகுதிவருதலுமறிக. இவ்வெச்சம்பகுதிவிகுதிவிகாரப்பட்டும்வரும் [உ-ம்] புக்குவந்தான்-விட்டுவந்தான், என்பதில் புகு, விடு, பகுதிவிகாரம். தழீஇக்கொண்டான்-உடீஇவந்தான், என்பதில் தழுவி, உடுத்து, விகுதிவிகாரம். அ, விகுதிநிகழ்காலங்காட்டுந்தெரிநிலைவினையெச்சமாம். [உ-ம்] உண்ண-காண, எனவரும். ஒருவன்மோப்பக்குழையுமனிச்சம், எ-து. இருகருத்தாவைப்பற்றிமுடிதலினிகழ்காலவினையெச்சமாயிற்று. யானேமலரைமோப்பவெடுத்தேன், எ-து. ஒருகருத்தாவைப்பற்றிமுடிதலினெதிர்காலவினையெச்சமாயிற்று. பொன்சுடரச்சுடுந்தீ, எ-து. எதிர்காலவினையெச்சமாயிற்று. தீச்சுடச்சுடரும்பொன், எ-து. நிகழ்காலவினையெச்சமாயிற்று. செயவென்னெச்சம் இருகாலத்தில்வந்தது, —விருத்தம்—விண்டுபெய்யவிரிந்தனமுல்லைமேல், வண்டுபாடவந்தாடினமஞ்ஞையைச், கண்டுவாழ்மணிக்கழலார்குழுச், கொண்டுபோகவெங்கொய்யவரேறினர். இதனுண்முதலீரடிக்கணிருகருத்தாவந்தமையானிகழ்காலவினையெச்சமாயிற்று. அன்றியும் இல், இன், இய, இயர், வான், பான், பாக்கு, விகுதியெதிர்காலங்காட்டுந்தெரிநிலைவினையெச்சங்களாம். [உ-ம்] செய்யில்-செயில், எ-ம். படின்-வரின், எ-ம். நடத்திய-உண்ணிய, எ-ம். காணியர்-வாழியர், எ-ம். செய்வான்-உறங்குவான், எ-ம். உண்பான்-உரைப்பான், எ-ம். உண்பாக்கு-உரைப்பாக்கு, எ-ம். வரும். நடந்தால்-நடப்பித்தால், எ-ம். நடந்தக்கால்-ஒலித்தக்கால், எ-ம் நடத்தற்கு-நடப்பித்தற்கு, எ-ம். ஆல்-கால்-கு-விகுதிவருதலுமறிக.—குறள்—பிறர்க்கின்னா முற்பகற்செய்யிற்றமக்கின்னா, பிற்பகற்றாமேவரும். பிறவென்றமிகையால் தொழிற்பெயர்கட்கு உம்மைகூட்டிநிகழ்காலவினையெச்சத்திற்குமாம். [உ-ம்.] கேட்டலும்-வளர்தலும்-வருதலுமுதலியவை, கேட்க-வளர-வர-எனப்பொருள்கொள்ளலுமாம். உணற்குவந்தான், எ-து. செயவென்வாய்பாடுபற்றிக்குவ்விகுதிவரும். உண்ணுமேற்பசிதீரும், எ-து. செயினென்னும்வாய்பாடுபற்றி ஏல்விகுதிவரும். என்றுமேனும்வரும், காண்டலுமிதவேகூறும், இவற்றுள் எனும்-உம்மும்-ஒரோவிடத்தில்விகுதியாம். இறந்தகாலவினையெச்சத்திற்கேவற்பகுதிமேல் விகுதியாகவளபெடுத்த இகாரங்கூட்டுவாருமுளர். [உ-ம்.] கொளீஇ-செலீஇ-இரீஇ-விழீஇ, எ-ம். வரும்—குறள்—கலத்தாற்பொருள்செய்தேமாத்தல்பசுமட், கலத்துணீர்பெய்திரீஇயற்று. இதன்மேலசைமேற்ற இறந்தகாலப்பெயரெச்சமாம். [உ-ம்.] இரீஇய-இருந்த தழீஇய, எ-ம். இரீஇயன-தழீஇயன, எ-ம். வரும். §—§மேதப்பாவணி§—§தழீஇயனகலன்பெருத்தளர்நுசுப்பெணச், குழீஇயனமலர்பெற்றுச்செடிகளுச்செல்கொண், டெழீஇயனகனிபெறுவவாயிபங்கண்மேல், விழீஇயனவினைபெறுவிளங்குமுல்லையே. எ-ம். வரும். ஐயீற்றேவற்பகுதிக்களபெடைகூட்டியிறந்தகாலவினையெச்சமாம் [உ-ம்] வளைஇ, எ-ம். வரும். இதற்கு அகரங்கூட்டினக்காலப்பெயரெ

ச்சமாம். [உ-ம்.] வளாத்த-வளாஇய, எனவரும். துவ்வாமைவந்தக்கடை, நல்வினைத்தானுற்றவழியுதவும், நல்வினைதானுற்றவிடத்துதவும், இவற்றுள் கடை-வழி இடத்து விகுதியிறந்தகாலவினையெச்சமாயின.—நன்னூல்—செய்துசெய்புசெய்யாச்செய்யூச், செய்தெனச்செயச்செயின்செய்யியசெய்யியர், வான்பான்பாக்கினவினையெச்சம்பிற, வைந்தொன்றாறுமுக்காலமுமுறைதரும்—தொல்காப்பியம்—பின்முன்கால்கடைவழியிடத்தென்னு, மன்னமரபிற்காலங்கண்ணிய, வென்னகிளவியுமவற்றியல்பினவே. (௩)

(௱௨௰-சூ.) எனவொழித்தொழிந்த விறப்பெச்சத்தும், வான்பான்பாக்கென வருமூன்றற்கு, மேற்குமொருகருத்தா விரண்டும்பிறவே.

*எ-து.* வினையெச்சவிகற்பங்களாமாறுணர்த்துதும். வினையெச்சமெல்லாந்தனியேவாரா மற்றொருவினையைத்தொடர்ந்துமுடியும், எஞ்சியவினையின்கருத்தாவு மவையேதொடருமுற்றுவினையின்கருத்தாவும் ஒன்றாகவும் பிறிதாகவும்வரும். இஉஊபுஆவிகுதியிறந்தகாலவினையெச்சமும் வான்-பான்-பாக்கு-விகுதியெதிர்காலவினையெச்சமுந் தொடருமுற்றுவினையோடொருகருத்தாவைக் கொள்ளுமல்லாதெஞ்சிய வினைக்கொருகருத்தாவும், முற்றுவினைக்குப்பிறிதொருகருத்தாவுங் கொள்ளின்வழுவாம் [உ-ம்] நீயாடி-அவன்பாடினான், எ-து. ஆடற்குக்கருத்தாநீயே-பாடற்குக்கருத்தாவவனே, ஆகையால் வழுவாம். அவ்வழுவின்றி நீயாட அவன்பாடினானென்க. உவ்வொடுகூட்டிய எனவிகுதிபிறந்தகாலவெச்சமும், அ-விகுதிவினையெச்சமும், இல்-இன்-இய-இயர்-விகுதியெதிர்காலவெச்சமுந் தாமேதொடருமுற்றுவினையோடொருகருத்தாவையும் பலகருத்தாவையுநோக்கிவரும். [உ-ம்.] பசித்தெனப்புலிபுன்மேயாது-தன்வினை முதல்வினை, மாரிபெய்தெனமுல்லைமலர்ந்தது-பிறவினை முதல்வினை, மோப்பவெடுத்தேன்-தன்வினை முதல்வினை, மோப்பக்குழையுமனிச்சம் - பிறவினை முதல்வினை, உண்ணினுவக்கும்-தன்வினை முதல்வினை, உண்ணிற்பசிதீரும்-பிறவினை முதல்வினை, நீரிவைகாணியவம்மின்-தன்வினை முதல்வினை, அவர்காணியவம்மின் பிறவினைமுதல்வினை, நாம்வாழியரொய்தினம் - தன்வினை முதல்வினை, நாம்வாழியரிரும்பொருளளித்தனம்-பிறவினை முதல்வினை, முறையேசொன்னவெச்சங்கள் முற்றுவினையொடு ஒருகருத்தாவும் இருகருத்தாவும்பற்றிமுடிந்தவாறுகாண்க. அன்றியும் எஞ்சியவினைக்கு முற்றுவினைக்குங்கருத்தா ஒன்றெனின்முதல்வினைசொண்டு முடிந்தவினையெச்சமெனவும்வழங்கும்.—நன்னூல் — அவற்றுள் - முதலினான்குமீற்றின்மூன்றும், வினைமுதல்கொள்ளும்பிறவுமேற்கும்பிற. எ-து. மேற்கோள். எ-று. (௪)

(௱௨௧-சூ.) எதிர்மறையெச்சத் திய்லும்விகுதி, யாமலாதாமை யாவெனநான்கே.

*எ-து.* ஒருவினைத்தொழிலைநீக்குதற்கெதிர்மறையாகவரும் வினையெச்சவிகுதிகளாமாறுணர்த்துதும். ஆமல், ஆது, ஆமை, ஆ, விகுதியெதிர்மறைவினையெச்சங்களாம். [உ-ம்.] செய்யாமல்-உண்ணாமல், எ-ம். செய்யாது-உண்ணாது, எ-ம். செய்யாமை-உண்ணாமை, எ-ம். செய்யா-உண்ணா, எ-ம். வரும் கூறாமல், என அல்விகுதிவருதலுங்கொள்க. வரந்தருமுனிவனெய்தவருதலும்வெருவியாயா, நிந்தரமுலகினிற்குநெடும்பழிபூண்டாநின்றான். ஈண்டு-மாயாமலென்பதற்கு மாயாவென்றதுகாண்க எ-று. (௫)

(௱௨௨-சூ.) வரல்தரல்மூவிட மருவுதற்குரிய, செலல்கொடைசேரும் படர்க்கையொன்றே.

*எ-து.* இடம்வழுவாமற்காத்தலாமாறுணர்த்துதும். ஈண்டுவினையியல்புணைப்புழி நால்வினையுரிமையைவிளக்குதன்முறையேயாகையில் வருதல், தருதல், எனவிருவினைச்சொல் தன்மை முன்னிலை படர்க்கையையணைந்துவரும். [உ-ம்.] எனக்காடைவந்தது-நினக்கணிவந்தது - அவனுக்குப்பொன்வந்தது, எ-ம். எனக்குத்தந்தான்-நினக்குத்தந்தான்-அவனுக்குத்தந்தான், எ-ம் வரும் செல்லுதல்-கொடுத்தல், எனவிருவினைச்சொல்படர்க்கைப்பெயரையணைந்துவரும். [உ-ம்.] அவனிடத்துச்சென்றான் - அவனுக்காடைகொடுத்தான், எ-ம். வரும். எனக்குநினக்குமாடைகொடுத்தானெனவரின்வழுவாம் —நன்னூல்— தரல்வரல்கொடைசெலல்சாரும்படர்க்கை, யெழுவாயிரண்டுமெஞ்சியவேற்கும். எ-து. மேற்கோள். எ-று. (௬)

மூன்றாவதீறெச்ச முற்றிற்று.

## நான்காவது வினைக்குறிப்பு.

(௱௨௩-சூ.) வினைக்குறிப்பென்ப வினைபோல்விகுதி, பெற்றிடம்பாற்கும் பெயர்ப்பகுபதமே.

*எ-து.* வினைக்குறிப்பாமாறுணர்த்துதும். மேலேபெயர்ப்பகுபதங்களை விளக்கியவிடத்தில் அவையெலாமற்றைப்பெயர்களைப்போலே வேற்றுமையுருபுபெறுவனவன்றியே வினையைப்போல் நடப்பனவாமென்பதாயிற்று, அங்ஙனநடப்புழி வினைக்குறிப்பெனப்படும். இவையேபெயரியலிசைத்தசொல்லாயினும் வினையின்றொழிலைக்குறிப்பனவும் வினையைப்போனடப்பனவுமாகையில் வினையைவிளக்கியவிடத்து வந்தமுறையெனக்காண்க. வினைக்குறிப்பெல்லா மூவிடத்தும்பால்வினைச்சொற்சேற்றவிகுதியைப்பெற்றுமுடியும். [உ-ம்] பூணினேன்யான் - பூணினேம்யாம்-பூணினைநீ - பூணினீர்நீர்-பூணினனவன்-பூணினளவள் - பூணினரவர்-பூணிற்றது-பூணினவவை, எனவரும் பொருண்முதலாறுகாரணங்களால்வரும்பெயர்ப்பகுபதமெல்லாம் வினைக்குறிப்பாகநடப்பனவாமெனக்கொள்க. அன்றியும் வினைக்குறிப்புவினையைப்போலப்பெயர்முதலாயினவேற்றி மற்றொன்றைவேண்டாதுநிற்பது வினைக்குறிப்புமுற்றெனப்படும். [உ-ம்.] —குறள்— அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன்முதற்றேயுலகு. இதனுள் முதற்று என்னுஞ்சொல் அஃறிணையொருமைக்கண் வினைக்குறிப்புமுற்றெனவும், முதலவென்னுஞ்சொல் அஃறிணைப்பன்மைக்கண் வினைக்குறிப்புமுற்றெனவும்படும், இறைவகொடியை-தாயேயினியை-நீரோதண்ணியை-தீயேவெய்யை - இவைபொதுமைய-இவைதீய - அவைநல்ல, எ-ம்.

ஆங்குப்பயில்வெஃகியநஞ்செய் கசெய்தபின், னீங்குப்புயர்பாலபல. எ-ம். வரும். எ-று. (௧)

(௱௨௪-சூ.) வினைக்குறிப்பொன் றன்பால் விகுதிதுவ்விஃதே, வலிமிகத்து றுடுவாம் ஐயவ்வுமல், லின்னுமள்வு முறையீற்றபெயர்க்கே, அவ்விறுமெல்லாம் பலவின்பாற்கே.

*எ-து.* வினைக்குறிப்புக்கோர்சிறப்புவிதியாமாறுணர்த்துதும் ஒன்றன்பால்வினைக்குறிப்பு வினையைப்போலவே துவ்வெனமுடியும். [உ-ம்] அரிது-பெரிது - வெய்யது-நொய்யது - முகத்தது-புறத்தது, எனவரும். அன்றியும் வினைக்குறிப்பிடத்துவரும்பெயர்ப்பகுதி வேற்றுமைப்பொருளாக வந்துதொக்குநிற்குமென்றுணர்க. [உ-ம்.] தீமைத்து-கடற்று - மாரிநாட்டு, இவற்றைவிரிக்குங்கால் தீமையைக்கொண்டது, கடலிலுள்ளது, மாரிநாளிலாயது, எனவரும். ஐயெனுமுயிரும் ர் ய் எனவீரொற்றுமீற்றபெயரோ வினைக்குறிப்பொன்றன்பால் விகுதியெனுந்துக்கொள்ளுங்கால் தொகைநிலையில க்கணத்தானேவரும். வல்லினவெழுத்திரட்டிமாகையில் ஈண்டுத்தகர்வொற்றுவரப்பெறும். [உ-ம்] உடைத்து-தீமைத்து - நடைத்து, எ-ம். பெயர்த்து-ஊர்த்து, எ-ம். பொய்த்து-மெய்த்து, எ-ம். வரும். —குறள்— பல்லார்பகைகொளலிற்பத்தடுத்ததீமைத்தே, நல்லார்தொடர்கைவிடல். பிறவுமன்ன. அன்றியும் எழுத்திலணந்திய ஞண் சந்தியிலக்கணத்தானேவேற்றுமைப்பொருளா நிலைப்பதவீற்ற னெக்கீழும் ளக்கீழுந்தவ்வரின் அவற்றெருடுதவ்வுமுறையே றடவாமென்றாகையின் லவ்வொற்றீற்றபகுதிக்கண் லகரம் றகரவொற்றாகித் துவ்வும், றுவ்வாம், [உ-ம்.] கடல்-கடற்று; முதல்-முதற்று, மேல்-மேற்று, பால்-பாற்று, எ-ம். யார்க்கும்பொருள் பொழிவார்மேற்றேபுகழ், எ-ம். வரும். அன்றியும் இன்னென்னுமிடைநிலைபெற்றசொற்கண் ளகரம் டகரவொற்றாகத்திரிந்து துவ்வும், றுவ்வுமாம், [உ-ம்.] வில்லினன் - வில்லிற்று, வெற்பினன்-வெற்பிற்று, பொற்பினன்-பொற்பிற்று, இருளினன்-இருளிற்று, எ-ம். வரும். அன்றியும் ளவ்வீற்றபகுதிக்கண் ளகரம் டகரவொற்றாகத்திரிந்து டு, வரும் [உ-ம்] நாள்-நாட்டு, பொருள்-பொருட்டு, இருள்-இருட்டு, இப்பயிர்மாரிநாட்டு, எ-ம். வரும். அன்றியும் ணகரந்திரிந்து சண்ணெனுமேழாம்வேற்றுமையுருபு கட்டெனவுமாம்—குறள்—குடிப்பிறந்துகுற்றத்தினீங்கிவடுப்பரியு, நாணுடையான்கட்டேதெளிவு —வெண்பா—வெற்பிற்றேசெம்பொன்விரிகடற்றேவெண்முத்தம், பொற்பிற்றுப்பூமுளைத்தேதேனினிமை, கற்பித்தே, பெண்ணழகுநல்லறத்தேபேராப்பொருளின்பம், கண்ணழகுசெய்தயைத்தேகாண். என இவையெல்லாம் அஃறிணையொருமைப்படர்க்கைக்கண்வினைக்குறிப்புமுற்றுபின. இவற்றுட்பலவே பெயராகவும்வழங்கும். [உ-ம்.] இருட்டு-பொருட்டு-நன்று - தீயது, எ-ம். வரும் அன்றியும் பன்மைப்படர்க்கையோவெனின் அகரமீறாகமுடியும் [உ-ம்] கொடிய-பெரிய-உடைய-டைய-முகத்த-முகத்தன-புறத்த-புறத்தன-பெயர-பெயரின-முதல-பால-மேல-வில்லின - வெற்பின-நாள-பொருள-பொருளன, எ-ம். வரும். பிறவுமன்ன எ-று. (௨)

(௱௨௫-சூ.) வினைக்குறிப்பெஞ்சி யீற்றகரம்பொதுவே.

*எ-து.* வினைக்குறிப்பெச்சமாமாறுணர்த்துதும். மேற்கூறியபடிபலவின்பால்வினைக்குறிப்புச்சொல்லெல்லாம் அகரவிகுதியான்முடியும் பாலேதோன்றுதெவ்வகைப்பெயர்க்கு மேற்றவினைக்குறிப்பெச்சமாகையில் அகரவிகுதியான்முடியவும்பெறும். அங்ஙனமேற்சொன்னதன்மையாற் பலவின்பால்முற்றுவினையாக நடந்தன, முடிந்தன, பூத்தன, என்வருதலன்றியே அவைநடந்த, இவைமுடிந்த, பலமலர்பூத்த, முதலியமுற்றுவினையெனவழங்குமீண்டிம்மொழிகடாமே பெயரெச்சமாகவழங்கவும்பெறும் [உ-ம்] நடந்தசெய்தியைச்சொல்லாய்-முடிந்ததொழிலைக்காண்மின்-பூத்தமலரையணிமின் எ-ம். இத்தன்மைத்தாகும்வினைக்குறிப்பெனக்கண்டுணர்க, ஆகையிலவையே-திறத்த - இவையரும்பொருள-இம்மலர்சுவலைய-இம்மாடெல்லாமலைய-நின்குணமரிய-நின்சொல்கொடிய, இத்தொடக்கத்தனபிறவும், பலவின்பால் வினைக்குறிப்புமுற்றெனப்படுமீண்டுப்பெயரெச்சம்போலவ் வடைமொழிபோலவுமற்றொருபெயரைச்சார்ந்துவருங்கால் மூவிடத்தைம்பாற்குப்பொதுவாய்நிற்கும் வினைக்குறிப்பெச்சமெனப்படும். [உ-ம்.] திறத்தகையாவனமாய்ந்தது-அரும்பொருளவோ திசவார்சொன்னான் - சுவலையமலைக்கொய்தேன்-மலையநெல்லிது - அரியகுணத்தவன் - கொடியசொல்லன் - என்பாலதொழிலைச்செய்தான்-மையகண்-கையவலை-நவினயகொம்பு-சிவனையமலர் - மூவலையவேன்முதலியபலவும் வினைக்குறிப்பெச்சமெனப்படும். அன்றியுமிம்மொழிகடாமே மற்றொருபெயரைச்சார்ந்து தம்பெயராக வினையொடுபுணர்ந்துபலவின்பாற்பகுபதப்பெயருமாமெனக்கொள்க [உ-ம்] அரியசொன்னாய்-இனியகூறுய்-கொடியசெய்தாய்-திறத்தவாயமல்லோ-மென்னடையவாயவன்னம், இவைபலவின்பாற்பகுபதப்பெயராம். பிறவுமன்ன. எ-று. (௩)

(௱௨௬-சூ.) அன்மைவினைக்குறிப் பவணையுந்திரிபொரு, ளன்றுமேலதுவரி னூன்றுந்தாக்கி, னின்றியன்றியென் றெஞ்சும்இயாப்பி, னுவ்வுமாமாயி னுறுவலியியல்பே.

*எ-து.* சிலவினைக்குறிப்புவிகற்பமாமாறுணர்த்துதும். ஒன்றனியல்புமறுக்கும் அன்மையும் ஒன்றனிருப்புமறுக்கும் இன்மையும் எனவிருசொல்லால் அல்லன், இல்லன், எனவிருபகுபதமாம். இவையேவினைக்குறிப்பாகி அல்லன், இல்லன், யான், எ-ம். அல்லேம், இல்லேம், யாம், எ-ம் அல்லை, இல்லை, நீ, எ-ம். அல்லீர், இல்லீர், நீர், அல்லன், இல்லன், அவன், எ-ம். அல்லள், இல்லள், அவள், எ-ம். அல்லர், இல்லர், அவர், எ-ம். அன்று, இன்று, அது, எ-ம் அல்ல, இல்ல, அவை. எனவருமாயினும் இஃதோ, அஃதோ, என்றையந்தோன்றியபின்னர்த்தேறி ஒன்றைமறுத்து மற்றொன்றைத்தெரிந்துகொள்ளுமிடத்தில் அன்மையில்வரும்வினைக்குறிப்புச்சொல் தெரிந்தபொருளின்பாலும் இடமும்பற்றிவருமெனக்கொள்க. [உ-ம்.] மானல்லன்மகன்-மகனன்றுமான்-இவளல்லரிவர்-ஒன்றல்லபல-பலவன்

றென்று-யானல்லேன்-நீயல்லையாம், எனவரும். அன்றியும் அது-என்னுஞ்சொன்முன்னே-அன்று என்னுஞ்சொல்வரின் செய்யுளில் ஆன்றாம். [உ-ம்] அது-அன்று-அதான்று, எனவரும். இன்றி-அன்றி-என்னும்வினையெச்சங்களிச்செய்யுளில் உகரம்பெற்றுவரும், வரினும்வல்லினமிகா. [உ-ம்] வாளின்றிப்பிடியார்-எ-து. வாளின்றுபிடியார், எ-ம். நாளன்றிப்போகி-எ-து. நாளன்றுபோகி, எ-ம். உப்பின்றுபுற்கையுண்கமா, எ-ம். வரும்—நன்னூல்— அதுமுன்வருமன்றான்றாந்தூக்கின்.—அன்றியின்றியென்வினையெஞ்சிகரந், தொடர்பினுளுகரமாய்வரினியல்பே. இவைமேற்கோள் எ-று. (௪)

(௱௨௭-சூ.) வழுவாமுறைமை மயங்கிச்செடினவை, யிடம்பாறிணைபொழுதிறைவினமரபேழே.

*எ-து.* பெயர்க்கும்வினைக்கும்வரும்வழுவாமாறுணர்த்துதும். பெயர்க்கும் வினைக்குமேலே காட்டியசத்தமியல்புகெடும்படி மயங்கிவருமொழிவழுவெனப்படும், இவை யிடமுதன்மரபீறாகவேழாம், அவற்றுள்ளே மூவிடந்தம்முண்மயங்குவதிடவழுவாம். [உ-ம்] நான்வந்தாய்-நீவந்தான்-அவன்வந்தேன்-யாம்வந்தீர்-நீர்கள்வந்தேம்-அவர்களவந்தீர், எனவரும். ஐம்பாலுந்தம்முண்மயங்குவது பால்வழுவாம். [உ-ம்] அவன்வந்தாள்-அவள்வந்தார்-அவர்வந்தான்-அதுவந்தன-அவைவந்தது, எனவரும். இருதிணைதம்முண்மயங்குவது திணைவழுவாம். [உ-ம்] அவன்வந்தது-அதுவந்தான்-அவர்வந்தன-அவை வந்தார், எனவரும். முக்காலுந்தம்முண்மயங்குவதுகாலவழுவாம். [உ-ம்] பண்டுவருவான்-நாளைவந்தான்-நெருநல்வருவாநின்றான், எனவரும். விடைதம்முண்மயங்குவது விடைவழுவாம். [உ-ம்] திருக்காவலூர்க்குவழியெதுவென்பார்க்கு மருக்காவளர்ந்தது காண், எனவரும். வினாதம்முண்மயங்குவது வினாவழுவாம். [உ-ம்] கறக்கின்றவெருமை பாலோ சினையோ, எனவரும். (அயலுள்-சுத்தசொற்சொல்லிக்காட்டுமரபின்சொல்லெல்லாந்தம்முண்மயங்குவது மரபுவழுவாம்) [உ-ம்] யானைமேய்ப்பானை யிடையன், எ-ம். மாடுமேய்ப்பானைப் பாகன், எ-ம். வரும்.—நன்னூல்— திணையேபாலிடம்பொழுதுவினாவிறை, மரபாமேழுமயங்கினும்வழுவே. எ-து. மேற்கோள். எ-று. (௫)

(௱௨௮-சூ.) ஐயந்திணைபாலவையும்பொதுவே

*எ-து* சிலவழுக்களமைத்தவாறுணர்த்துதும். திணைமேலையந்தோன்றினும் பான்மேலையந்தோன்றினுமவற்றுட்பொதுமொழிகொண்டுமுடிக்கவும். [உ-ம்] குற்றியோமகனோவவ்விடத்தேதோன்றுகின்றவுரு, எனத்திணையையத்திலே உரு என்கிறபொதுச்சொல்லினும்; ஆண்மகனோபெண்மகளோவங்கனந்தோன்றுகின்றவர், எனவுயர்திணைப்பாலையத்திலே தோன்றுகின்றவர் என்கிறபொதுச்சொல்லினும்; ஒன்றோபலவோவிச்செட்புக்கபெற்றம் எனவஃறிணைப்பாலையத்திலே பெற்றம் என்கிறபொதுச்சொல்லினுஞ்சொல்லுக.—நன்னூல்— ஐயந்திணைபாலவ்வப்பொதுவினும், மெய்தெரிபொருண்மேலன்மையும்விளம்புப. எ-து. மேற்கோள். எ-று. (௬)

(௱௨௯-சூ.) சிறப்பணிநடையாற்றிணைசினைமுதல்கள், பிறழ்தலும்பிறவும் பேணுதனெறியே.

*எ-து.* இதுவுமது-இகழப்படும்வழுவின்றி யலங்காரவகையான் மரபல்லவற்றையமைவோராவிடத்தாளைப்பது மிருதிணைதம்முளுஞ்சினைமுதற்றம்முளுமயங்கிவருவதுஞ்சிறப்பாம். [உ-ம்] நம்மரசனெனுஞ்சிங்கத்திற்குப் பகைவர்கூட்டமாகியயானைகளஞ்சியோடின, உயர்திணை அஃறிணையோடுமயங்கிற்று. அவ்வரசனுக்குத்தம்பியரிருவருமிரண்டுதோள்கள், உயர்திணைமுதல் உயர்திணைச்சினையோடுமயங்கிற்று. முகமாகியமதி, உயர்திணைச்சினை அஃறிணைமுதலோடுமயங்கிற்று. கல்விமங்கையைநல்லோர்விரும்புவார், அஃறிணை உயர்திணையோடுமயங்கிற்று. இவை உருவகவணி. மயில்போலுமங்கை, அஃறிணை உயர்திணையோடுமயங்கிற்று. கயல்போலுங்கண், உயர்திணைச்சினை அஃறிணைமுதலோடுமயங்கிற்று. தளிர்போலுமேனி, உயர்திணைமுதல் அஃறிணைச்சினையோடுமயங்கிற்று. இவை உவமையணி. §—§தெம்பாவணி§—§ குரவநீள்வேலிகோலுங்குடர்கையுட்டுஞ்சித்தன்னைக், கரவநீள்பசும்பூநெற்றிக்கரும்புசண்ணுவியுக்கி, விரவநீடலைபின்வாழைவிடுங்கனிநக்கித்தீங்கான், பரவநீள்பலபூங்காவும்படுநெற்பேரியினூரே. இதனுள் பலசினைப்பெயரும் பலதொழிற்பெயரும் பலகுணப்பெயருமுயர்திணைப்பொருட்கன்றிப் பிறழ்ந்துபிறபொருட்குஞ் சிறப்போடுரைத்தவாறுகாண்க. பிறவென்றமிகையால் இவன்சரசுவதிக்கொப்பானவன், எனப்பான்மயங்கக்கூறுதலும்; அரசு-வேந்து, என உயர்திணையை அஃறிணையாகக்கூறுதலும்; அலவன்-நகுலன்-கழுழன்-சுணங்கன்-என அஃறிணையை உயர்திணையாகக்கூறுதலுங்கொள்க.—நன்னூல்— உருவகவுவமையிற்றிணைசினைமுதல்கள், பிறழ்தலும்பிறவும்பேணினர்கொளல். எ-து. மேற்கோள் எ-று. (௭) நான்காவது வினைக்குறிப்பு முற்றிற்று.

## நான்காமோத்து இடைச்சொல்லியல்.

(௱௩௰-சூ.) இடைச்சொற்றனிநிலையின்றிமுன்பின், வினைபெயர்சேர்ந்து வேற்றுமைசாரியை, வினையொப்புருபுகளும் விளங்குதம்பொருளவு, மிசைநிறைப்பனவு மசைநிறைப்பனவுங், குறிப்புமெனவெண் கூற்றனவென்ப.

*எ-து.* மேலேவகுத்துக்கூறியநால்வகைச்சொற்களுளிவ்வோத்தின்கண்ணே யிடைச்சொல்லியல்பினைவிளக்குதும். இடையெனப்படுவன வேற்றுமையுருபுகளும், வினையுருபுகளும், சாரியையுருபுகளும், உவமையுருபுகளும், தத்தம்பொருளைக்காட்டுவனவும், இசைநிறைப்பனவும், அசைநிறைப்பனவும், குறிப்பின்வருவனவும், என்றிவ்வெண்வகையவாகித்தாமாகத்தனியேவாராமற் பெயர்க்கும் வினைக்கும் பின்னுமுன்னுமாக ஓரிடத்தொன்றாயினும் பலவாயினும் வந்துநிற்பது இடைச்சொல்லெனப்படும் [உ-ம்] ஐ-ஆல்-எனவேற்றுமையுருபும், அன்-ஆன்-அள்-ஆள்-எனவினைவிகுதியும், அன்-ஆன்-இன்-அல் என

ச்சாரியையும், போலப்புரைய-என உவமையுருபும், ஏ-ஓ-முதலிய தத்தம்பொருளனவும், ஏ-ஓ-என இசைநி
றைப்பனவும், மியா-இகம்-என அசைநிறைப்பனவும், விண்ணென-ஒல்லென-கல்லென-எனக்குறிப்பு
முறையே வெண்வகையிடைச்சொல்வந்தவாறுகாண்க—நன்னூல்—வேற்றுமைவினைசாரியையொப்புரு
புக, டத்தம்பொருளவிசைநிறையசைநிலை, குறிப்பெனெண்பகுதியிற்றனித்தியலின்றிப், பெயரினும்வி
னையினும்பின்முன்னோரிடத், தொன்றும்பலவும்வந்தொன்றுவ திடைச்சொல். எ-று. (௧)

(௱௩௧-சூ) ஏயென்னிடைச்சொல் லீற்றசைதேற்றமென, வினாப்பிரிநிலையிசை நிறையெனவாறே

*எ-து.* ஏகாரவிடைச்சொல்லாமாறுணர்த்துதும். ஏகாரமென்னும் இடைச்சொல் பொருளில்
லாமையீற்றசையாகவும் தேறின துணிவுகாட்டவும் பலவற்றையடுக்கியெண்ணவும் ஒன்றைவினவவும் ப
லவற்றுளொன்றைப்பிரிக்கவும் ஓசைநிறைக்கவும் என இவ்வாறிடத்துமேற்குமென்றார்புலவர். [உ-ம்.]
மல்லலேங்கெழிலியாவனமருமம்பாய்ந்தொளித்தவே, எ-து. ஏகாரம் பொருளில்லாமைசார்த்திக்கூறி
னதால் ஈற்றசை பொருள்பொழிவார்மேற்றேபுகழ், எ-து. ஏகாரம் தெளிவின்கண்வருதலால் தேற்றம்.
இதைவடநூலார் அயோகவிவச்சேதமென்பர். நிலனே நீரே-தீயே-வளியே-வெளியே, எ-து. ஏகாரம்
நிலனும்-நீரும்-தீயும்-வளியும்-வெளியும்-எனப்பொருள்படவெண்ணிநிற்றலின் எண். நீயேதந்தாய், எ-து.
ஏகாரம் நீயோதந்தாய் எனவினாவிநிற்றலின் வினா. அவனேதந்தான், எ-து. ஏகாரம் ஒருகூட்டத்தினின்
று மொருவனைப்பிரித்துநிற்றலின் பிரிநிலை. இதனைவடநூலார் இதரயோகவிவச்சேதமென்பர். ஏயே
யிவளொருத்திபேடியென்றழுதாள், எ-து. ஏகாரம் செய்யுளிலிசைநிறைத்துநிற்றலின் இசைநிறை இ
வையன்றி எதிர்மறையிலும்வரும் [உ-ம்.] யானேகொண்டேன், எ-து ஏகாரம் யான்கொள்ளேனெ
னப்பொருள்பட்டுநிற்றலின் எதிர்மறை.—நன்னூல்—பிரிநிலைவினாவெண்ணீற்றசைதேற்ற, மிசைநிறை
யெனவாறேகாரம்மே. —தொல்காப்பியம் — தேற்றம்வினாவேபிரிநிலையெண்ணே, யீற்றசையிவ்வைந்
தேகாரம்மே. இவைமேற்கோள் எ-று. (௨)

(௱௩௨-சூ.) ஓபிரிப் பசைநிலை யொழிவெதிர்மறைவினாத், தெளிவுகழிவு சிறப்பெனவெட்டே.

*எ-து.* ஓகாரவிடைச்சொல்லாமாறுணர்த்துதும் ஓகாரமென்னும் இடைச்சொல் பிரிநிலையும்,
அசைநிலையும், ஒருசொல்லொழியவருமொழியிசையும், ஒன்றைமறுத்தலும், வினாவும், தெளிவும், ஒரு
பொருட்கழிதலும், ஒன்றைச்சிறப்பித்தலும், என்றிவ்வெட்டுப்பொருள்களைக்காட்டவருமெனச் சேர்த்தெண்
ணுக. [உ-ம்] அவனோசெய்தான், எ-து ஓகாரம் பலருணின்றுமொருவனைப்பிரித்துநிற்றலின் பிரிநிலை.
ஒழியோவருந்துதும்யாமே, எ-து ஓகாரம் பொருட்குறியாதுநிற்றலின் அசைநிலை. கொளலோகொ
ண்டான், எ-து. ஓகாரம் கொண்டெய்ப்பட்டாபினுனல்லன் என ஒருசொல்லொழிவுபடவந்தமையால் ஒழி
யிசை. யானோசொன்னேன், எ-து. ஓகாரம் யான்சொல்லவில்லை எனப்பொருட்பட்டுநிற்றலின் எதிர்ம
றை. அவனோவல்லவனோ, எ-து. ஓகாரம் அவனோ வல்லவனோ என வினாவிநிற்றலின் வினா. நன்றோவ
ன்றுதீதோவன்று, எ-து. ஓகாரம் அத்தன்மையில்லாமைதெளிந்துவழிநிற்றலின் தெளிநிலை. பைதலின்
றிவ்விறந்தசெய்கின்றானொவ்வுறுட்யும், எ-து ஓகாரம் கழிந்ததற்காங்கிநிற்றலின் கழிவு. ஓஓபெரியன்,
எ-து. ஓகாரம் பெருமைமிகுதியைவிளக்கிநிற்றலின் சிறப்பு. அன்றியும் குற்றியோமகனோ, எ-து. ஓகா
ரம் ஐயப்பொருளைத்தந்துநிற்றலின் ஐயம்.—நன்னூல்—ஒழிபிசைவினாச்சிறப்பெதிர்மறைதெரிநிலை,
கழிவசைநிலைபிரிப்பெனவெட்டோவே — தொல்காப்பியம் — பிரிநிலைவினாவேயெதிர்மறையொழியி
சை, தெரிநிலைக்கிளவிசிறப்பொடுதொகைஇ, யிருமூன்றென்பவோகாரம்மே. எ-று. (௩)

(௱௩௩-சூ.) எனவென்பதுவுவமையெண்குணம்வினைபெய, ரிசைக்குறிப்பியலுமென்றுமிவைத்தே.

*எ-து.* எனவென்றிரிடைச்சொல்லாமாறுணர்த்துதும். இவையே உவமையும் எண்ணும் குண
மும் வினையும் பெயரும் இசையும் குறிப்பும் எனவேழிடத்தும்வரப்பெறும். [உ-ம்.] பூங்கொடிவீ
ழ்ந்தெனவீழ்ந்தாள்-கொடும்புலிபாய்ந்தெனபாய்ந்தான்-என வினையோடியைந்துவந்த வுவமை. கூற்
றெனக்கொடுங்கண்-காளையார்க்கும்பொழிந்தான்-என பெயரோடியைந்துவந்த வுவமை. ஒரோவிட
த்து என்று உவமையுருபாகவரும். அன்றியும் கடலெனக்காலெனக்கடுங்கட்கூற்றெனா-உருமெனவூழித்
தீயென-ஒன்றெனவிரண்டெனமூன்றென-கல்லென்றுமுள்ளொன்று - என, என்று, எண்ணொடியை
ந்தன. வெள்ளெனவெளிர்த்தது-வெள்ளென்றுவெளிர்த்தது-என, என்று, பண்போடியைந்தன கொ
ள்ளெனக்கொண்டான்-கொள்ளென்றுகொண்டான்-என, என்று, வினையோடியைந்தன. சொல்லெனப்ப
டுந்துறையூர்-சொல்லென்றுசொல்லப்படுவதுறையூர்-என, என்று, பெயரோடியைந்தன. ஒல்லெனவொ
லித்தது-ஒல்லென்றொலித்தது-என, என்று, இசையோடியைந்தன. விண்ணெனவிசைத்தது-விண்ணெ
ன்றிசைத்தது-என, என்று, குறிப்போடியைந்தன. பிறவுமன்ன —தொல்காப்பியம் — வினையேகுறிப்
பேயிசையேபண்பே, யெண்ணேபெயரொடவ்வறுகிளவியுங், கண்ணியநிலைத்தேயெனவென்கிளவி.—
என்றென்கிளவியுமதனோரற்றே. இவைமேற்கோள். எ-று. (௪)

(௱௩௪-சூ) உம்மையெதிர்மறையெச்சமுற்றளவை, சிறப்பையமாக்கந் தெளிவெனவெட்டே.

*எ-து.* உம்மையிடைச்சொல்லாமாறுணர்த்துதும். இஃது எதிர்மறையும், பிறவினமும், முற்
றும், அளவையும், சிறப்பும், ஐயமும், ஆக்கமும், தெளிவும், என எண்பொருளைக்காட்டவரப்பெறும்
[உ-ம்.] வருதலுந்தீது, எ-து. எதிர்மறையாகவாராமை தீதென்பதற்குமுரித்தென்றமையால் இதுவே
எதிர்மறையும்மை. சாத்தனும்வந்தான், எ-து. பிறரும்வந்தது விளக்கலின் இறந்ததுதழீஇய வெச்சவும்
மை. இனிக்கொற்றனும்வருவானென்னும்பொருளைத்தரின் எதிரதுதழீஇயவெச்சவும்மை. தமிழ்நாட்டுமூ
வேந்தரும்வந்தார், எ-து. மூவரன்றிவேறில்லையெனவிளக்கலின் முற்றும்மை. ஒன்றுமிரண்டும்பொன்னு

மணியும், எ-து எண்ணுதற்கண் வருதலின் அளவும்மை. பன்முங்கஃசும், எ-து. நிறையளவும்மை. ஒருமகோ ஒரம் அரைகோ ஒலும், எ-து. கோளளவும்மை. ஆழாக்கும் உழக்கும் உரியும் நாழியும், எ-து. அளவினள வையும்மை. குறவருமருளுங்குன்றம், எ-து. குன்றத்திற்குறவர்மயங்காது திரியுமுயர்வைச்சிறப்பித்தது உயர்வுச்சிறப்பும்மை. பூவையும்புலாற்றின்னுது, எ-து. பூவையிடத்திற்புலாற்றின்னுமிழிவைச்சிறப்பித்தது இழிவுசிறப்பும்மை. பத்துமெட்டும், எ-து. ஒன்றிற்றேறுண்மையின் ஐயவும்மை. புலியினுங்கொடியன் கடலினும்பெரிது, எ-து. ஆக்கவும்மை. நன்றுமன்று தீதுமன்று ஆணுமன்று பெண்ணுமன்று, எ-து. இன்னதெனத்தெளிந்தவிடத்து-தெளிவும்மை எச்சவும்மை இருவகை. சிறப்பும்மை இருவகை. அளவும்மை நால்வகை. பிறவுமன்ன—தொல்காப்பியம்—எச்சஞ்சிறப்பேயையமெதிர்மறை, முற்றேயெண்ணேதெரிநிலையாக்கம்மென், றப்பாலெட்டேயும்மைச்சொல்லே. எ-து. மேற்கோள். (ரு)

(௱௩௫-சூ.) வரைப்படுமெண்ணும் வையகத்தில்லவும், விலைப்படினும்மை வேண்டுஞ்செவ்வெண்ணீற்றின்வேண்டு மெச்சவும்மையே.

*எ-து.* உம்மையிடைச்சொற்சிறப்புவிதியாமாறுணர்த்துதும். இத்துணையென்றுவரையறுத்துணப்பட்டபொருள்களும், உலகில்லாடபொருள்களும், வினையொடுகூட்டிச்சொல்லுங்கால் உம்மைகொடுத்துச்சொல்லல்வேண்டும் [உ-ம்] கண்ணிரண்டுஞ்சிவந்தன-சாலமூன்றுங்கண்டான், எ-ம். என்னாங்கைக்குமயிரில்லை - முயற்கோடுமாமைமயிருங்கோழிமுலையும்பண்டுமில்லை - இக்கமுதைக்குங்கோடில்லை, எ-ம் இவையும்மை பின்றிவரின் இரண்டன்றி வேறு கண்ணுள, எ-ம். மற்றொருகைக்குமயிருள, எ-ம். முயற்கோடும் ஆமைமயிரும் கோழிமுலையும் இனமுள, எ-ம். மற்றைக்கழுதைக்குக்கோடுள, எ-ம். வரும். பிறவுமன்ன ஆயினும் இத்துணைத்தென்று எண்ணப்பட்டபொருளின்பெயர் விலைப்படாதுவரின் உம்மைகொடுத்தலுங்கொடாமையுமாம். [உ-ம்] இவையிரண்டும்பசு-இவைமூன்றுங்கன்று, எ-ம். அறமிரண்டு-குறமூன்று, எ-ம் மீளவும் எண்சாட்டுமுருபின்றிச்செவ்வெண்ணாகப்படவெற்றைச்சொல்லின் ஈற்றினிடத்து உம்மைகொடுக்கவும் [உ-ம்.] அடகு புலால் பாகு பாளிதமுமுண்ணான் கடல்போலுங்கல்வியவன், எ-ம். அடகுபுலால்பாகுபாளிதமுமுண்ணுமென்பதாகா, இஃது எச்சவுமையென்றதனுன் முதலியவற்றையு முண்ணுமென்பதுமாயிற்று. பிறவுமன்ன.—நன்னூல் — செவ்வெண்ணீற்றதாமெச்சவும்மை. எ-து. மேற்கோள். எ-று. (சா)

(௱௩௬-சூ.) எண்வகையெட்டனுள் எசெவ்வெண்ணென்று, எனுநான்குந்தொகைபெறுமெனவொடுவும்மை, நான்குந்தொகைமை நடக்கவும்பெறுமே, யென்றெனவொடுமூன்று மெஞ்சிடத்தனவுமாம்.

*எ-து.* எண்ணிற்குரியவிடைச்சொல்லாமாறுணர்த்துதும். எண்ணின்வகை எட்டெனக்கொள்க. அவையே உருபில்செவ்வெண்ணும் - எ-என்று-எனு-என்று-என-ஒடு-உம் - என்றிவ்வேழுருபுபெற்றவெண்ணுமாக எட்டெனப்படும் இவற்றுள் பெயர்க்கண்வருஞ் செவ்வெண்ணும், எசாரவெண்ணும், என்றுவெண்ணும், எனுவெண்ணும், ஆகியநான்கும் ஈற்றின்கண்ணேதொகைபெற்றுநடக்கும். [உ-ம்] சாத்தன்-கொற்றன் இருவரும்வந்தார், எ-ம் சாத்தனே-கொற்றனே-தேவனே மூவரும்வந்தார், எ-ம். நீயென்று-அவனென்று இருவரும்போமின், எ-ம். நானெனு-நீயெனு-அவனெனு மூவரும்வந்தனம், எ-ம். முறையேநான்குந்தொகைபெற்றவாறுகாண்க. என்று-என - ஒடு-உம் - என்றிநான்கெண்ணுந் தொகைபெற்றுநடக்கவுந் தொகைபெறாதுநடக்கவுமாம் [உ-ம்] சாத்தனென்று-கொற்றனென்று-சொன்னவர்வந்திலர், எ-ம். நில்லென - நீரெனவேண்டும், எ-ம் பரியொடுகரியொடுதேரொடுதாவளைபொழிந்தன, எ-ம். நிலனுநீருந்தீயும் - நல்ல, எ-ம். முறையேநான்குந்தொகைபெறாது வந்தவாறுகாண்க. மீளவும் நிலனும்நீரும் இரண்டும்வேண்டும், எ-ம். பிறவுந்தொகைபெற்றுவரவுமாம். அன்றியும் என்று-என-ஒடு- என்றிம்மூன்றிடைச்சொல் எண்ணின்கண் ஓரிடத்தேநிற்பினும் எண்ணப்படும்பொருள்தோறும் பிரிந்துசெல்லுமென்றுணர்க. [உ-ம்.] — குறள்—விலைபகையென்றிரண்டினெச்சநினையுங்கால், தீயெச்சம்போலத்தெறும். எ-ம் — பகைபாவமச்சம்பழியெனநான்கு, மிகவாவாமில்லிறப்பான்கண். எ-ம் — பொருள்கருவிகாலம்வினையிடனோடைந்து, மிருடீரவெண்ணிச்செயல். எ-ம். இவற்றைவிரித்துரைக்கில் வினையென்று-பகையென்று, எ-ம். பகையென-பாவமென-அச்சமென-பழியென, எ-ம் பொருளோடு-கருவியோடு-காலமோடு-வினையோடு-இடனோடு, எ-ம் முறையேமூன்றுமேவலையிடத்தும் பிரிந்துசென்றவாறுகாண்க.—நன்னூல்—பெயர்ச்செவ்வெண்ணேயென்றாவெனாவெண், ணான்குந்தொகைபெறுமும்மையென்றெனவொடு, வந்நான்கெண்ணுமஃதின்றியுமியலும். எ-து. மேற்கோள் எ-று. (எ)

(௱௩எ-சூ.) அத்தந்திலென்றமம வாங்கசூரவாமா, லிட்டிகுர்குறைசா விருந்தின்றேனுரூம், சின்றந்தானின் றுதில்பிறபிறக்கு, மன்மாமன்னே மாதுயாமாதோ, போலும்போமெனப் பொதுவசைமுப்பதே, பித்தையத்தையா ழிகமதிமாஞர், மோமியாவாழிய முன்னிலையசைபத்தே.

*எ-து.* பொதுவசையுமுன்னிலையசையுமாமாறுணர்த்துதும். அத்து-அந்தில்-அன்று-அமம-ஆர்கு-அரோ-ஆம்-ஆல்-இட்டு- இசும்-குரை-சா-இருந்து-இன்று-ஏரும்-சின் - தம்-தான் - நின்று-தில்-பிற-பிறக்கு-மன் - மா-மன்னே - மாது-யா -மதோ- போலும்-போம், எனமுப்பதுமூவிடத்தைம்பாற்குரியவசைச்சொல்லெனப்படும்[உ-ம்] நிலத்தியல்பு-சேயிழையந்திற்சொழுநற்காணிய- அசுடுசேன்றோழுசயதன்றே-அம்மவாழிதோழி-ஆங்கத்திறனல்லயாங்கழற - குயிலாலுமரோ - பண்புமாமென முட்பெருமை-ஆபொத்துளதால்-பிளந்திட்டான்-காண்டிசும் - பல்குரைத்துன்பம்-இவளிவட்காண்டிகா - எழுந்திருந்தேன்-சேர்துமின்றே-அஞ்சுவதோருமறனே - என்றிசின்- அவர்தம்பால்-நீதான் - துணையாய்நின்றன்-பெற்றுங்கழிகதில்லம்மவிவ்வூரே-ஆயவண்யல்லபிற - நகைபிறக்கொழிய-கூறியமேதார்வாண்மன் - உம்

மின்றுபுற்கையுண்சமா - பூங்கொடிப்புகழ்மன்றே - நிறைவிரித்தமோதோ-யா பன்னிருவர்மாணாக்கர கத்தியற்கு-வருந்திவனபோலும்-வாழாதென்போம், எனவரும் அன்றியும் இத்தை-அத்தை-யாழ்-இசை-மதி-மான்-ஆர்-மோ-மியா-வாழிய, எனப்பத்துமுன்னிலையொன்றற்குரியவசைச்சொல்லெனப்படும். [உ-ம்] நீயொன்றுபாடித்தை-நறும்பசளைநின்செல்வத்தை-செவ்வியர்நியாழ்-தண்டுறையூர்காணிச-சென்மதிபெரும-மொழிமான்புலவ-அகத்தியனார்வந்தார்-கண்டதுமொழிமோ-சென்மியா-வாழிவாழிய, எனவருமுறைபற்றிக்காண்க. அன்றியும் இரக்கப்பொருளையும் இகழ்ச்சிப்பொருளையும் அச்சப்பொருளையும் அதிசயப்பொருளையும் தருமிறவிடைச்சொற்களுண்டு. [உ-ம்.] அம்மருங்கிற்கன்றே-பரற்கானமாற்றினகொல்லோ-ஓஒவுழக்குந்துயர்-ஐயோவென்செய்வேன், எனவரும். அன்றே-கொல்லோ-ஓஒ-ஐயோ-இவையிரக்கம், எஎயிவனொருத்திப்பேடியோவென்றார்-சீசீயவன்கெட்டான், எனவரும். எஎ-சீசீ-இவையிகழ்ச்சி, கூகூகொன்றான்-ஐயையோ திருடன்வந்தான், எனவரும். கூகூ-ஐயையோ - இவையச்சம், ஆ அவிதவனெப்படியறிந்தான் - ஓஒநன்றாய்ச்சொன்னான் - அம்மம்மாவெப்படிப்பட்டக்கூத்து, எனவரும் ஆஅ-ஓஒ-அம்மம்மா-இவையதிசயம், அன்றியுமித்தொடக்கத்தன பலவுளவாயினுமவற்றை நிகண்டுதிவாகரமுதலியவற்றின்கண்ணேகாண்க.—தொல்காப்பியம்—அந்திலாங்கவசைநிலைக்கிளவியென், றாயிரண்டாகுமியற்கைத்தென்ப.—மாவென்கிளவியியங்கோளசைச்சொல். — அம்மகேட்பிக்கும்.—ஆங்கவுரையசை.—மியாயிகமோமதியிகுஞ்சின்னென்னு, யாவயினுமுன்னிலையசைச்சொல்.—கொல்லேயையம்.—நன்னூல் — யாகாபிறபிறக்குமோபோமாதிகுஞ், சினகுறையோரும்போலுமிருந்திட், டன்றாந்தாந்தான்கின்றுநின்றசைமொழி.—மன்னேயசைநிலையெதிர்விசையாக்கம், கழிவுமிகுதி நிலைபேறுசும்.—விழைவேகாலமொழிபிசைதில்லே. இவைமேற்கோள். எ-று. (அ)

நான்காமோத்திடைச்சொல்லியன் முற்றிற்று.

---

# ஐந்தாமோத்து உரிச்சொல்லியல்.

(ருங அ-கூ.) உரிச்சொல்லென்ப வுரியபற்குணசொல், லிசைப்பெயர்வினை யவையூர்ந்துவருமே.

*எ - து* மேல்வகுத்துக்கூறியநால்வகைச்சொற்களுளிவ்வோத்தின்கண்ணே யுரிச்சொல்லியல்பினைவிளக்குதும். உரியெனப்படுவன பலவகைக்குணங்களையறிவிக்கும் பெயர்ச்சொற்களாம். இவ்வுரிச்சொல் குறிப்பும், பண்பும், இசையும், எனமூவகைப்படும். குறிப்பாவன-மனத்தாற்குறித்தறியப்படுவன, பண்பாவன-விழியாலறியப்படுவன, இசையாவன-செவியாலறியப்படுவன, இவற்றுள்:

(குறிப்புரிச்சொற்கள்வருமாறு.) சால்-உறு-தவ-நனி-கூர்-கழி - என்னுமாறுமிகுதியென்னுங்குறிப்பையுணர்த்துவனவாம் [உ-ம்.] தென்மலையிருந்தசீர்சான்முனிவரன் - சால், உறுவளிதாக்கும்-உறு, தவப்பல-தவ, நனிப்பயன்கவின்-நனி, துனிகூர்வெவ்வுமொடு-கூர், கழிநலம்-கழி, எனவரும். பையுள்-சிறுமை-இரண்டும்நோயையும், இலம்பாடு-ஒற்கம்-இரண்டும்வறுமையையும், வெறுப்பு-உறப்பு-இரண்டுஞ்செறிவினையும், கறுப்பு-சிவப்பு-இரண்டும்வெகுளியையும், உணர்த்துவனவாம் படர், எ-து நினைத்தல்-செல்லுதல்-நோவு-மூன்றையும் செழுமை, எ-து வளம்-கொழுப்பு-இரண்டையும் தா, எ-து வலி-வருத்தம்-இரண்டையும் உணர்த்துவனவாம்.—நன்னூல்—சாலவுறுதவநனிகூர்கழிமிகல். — தொல்காப்பியம்—பையுளுஞ்சிறுமையுநோயின்பொருள. — இலம்பாடொற்கமாயிரண்டும்வறுமை.—விறப்புமுறப்பும்வெறுப்புஞ்செறிவே.—கறுப்புஞ்சிவப்பும்வெகுளிப்பொருள. — படரேயுள்ளல்செலவுமாகும்.—செழுமைவளனுங்கொழுப்புமாகும்.—தாவேவலியும்வருத்தமுமாகும். இவைமேற்கோள்.

(பண்புரிச்சொற்கள்வருமாறு.) கடி, எ-து. காவல்-கூர்மை-விரை-விளக்கம்-அச்சம்-சிறப்பு-விரைவு-மிகுதி-புதுமை-ஆர்த்தல்-வரைவு-மன்றல்-சிரிப்பு, என்னும்பதின்மூன்றுகுணங்களையுணர்த்துவனவாம் [உ-ம்.] கடிநகர்-காவல், கடிநுனைப்பகழி-கூர்மை, கடிமாலை-வாசனை, கண்ணாடியன்னகடிமார்பம்-விளக்கம், கடியரமகளிர்க்கேசைவிளக்காகி-அச்சம், அம்புதுஞ்சுங்கடியரண்-சிறப்பு, எங்கவலைகடிது-விரைவு, கடியுண்கடவுட்கிட்டசெழுங்குரல்-மிகுதி, கடிமுரசு-ஆர்த்தல், கடித்துக்கரும்பினைக்கண்டகரநாற்-வரைவு, கடிவினைமுடிக-மன்றல், கடிமிளைக்குந்தின்றகல்லாமந்தி-சிரிப்பு, எனவரும். குரு-கெழு-இரண்டுநிறத்தையும் நொசிவு-நுழைவு-நுணங்கு-மூன்றுநுண்மையும் மழவு - குழவு - இரண்டுமிளமையும் தடவு-கயவு-நளி-மூன்றும்பெருமையும் வார்தல்-போகல்-ஒழுகல்-மூன்றும்நேரும்நெடுமையும் உணர்த்துவனவாம் தடவு, எ-து. கோணலும்-பெருமையும் பொற்பு, எ-து. பொலிவும் சாயல், எ-து. மென்மையும் உணர்த்துவனவாம்.—தொல்காப்பியம்—கடியென்கிளவி-வரைவேகூர்மைகாப்பேபுதுமை, விரைவியப்பேவிளக்கமிகுதிச்சிறப்பே, யச்சமுன்தேற்றமீரைந்து, மெய்ப்படத்தோன்றும்பொருட்டாகுமே.—குருவுங்கெழுவுநிறனாகுமே.—நொசிவுநுழைவுநுணங்குநுண்மை.—மழவுங்குழவுமிளமைப்பொருள.—தடவுங்கயவுநளியும்பெருமை.—வார்தல்போகலொழுகன்மூன்று, நேர்புநெடுமையுஞ்செய்யும்பொருள. —அவற்றுள்-தடவென்கிளவிகோட்டமுஞ்செய்யும்.—கயவென்கிளவிமென்மையுஞ்செய்யும்.—நளியென்கிளவிசெறிவுமாகும்.—பொற்பேபொலிவு.—சாயன்மென்மை. இவைமேற்கோள்.

(இசையுரிச்சொற்கள்வருமாறு.) முழக்கு-இரட்டு-ஒலி-கலி-இசை-துவை-பிளிறு-இரை-இரக்கு-அழுங்கல்-இயம்பல்-இமிழ்-குளிறு-அதிர்-குரை-கனை-சிலை-சும்மைகௌவை-கம்பலை-அரவம்-ஆர்ப்பு, என்னுமிருபத்திரண்டுமோசையெனு மிசையையுணர்த்துவனவாம். மாற்றம்-நுவற்சி-செப்பு-உரை-கரை-செடி-இசை-கூற்று-புகறல்-மொழி-கிளவி-விளம்பு-அறை-பாட்டு-பகர்ச்சி-இயம்பல், என்னும் பதினாறும்சொல்லென்னுமிசையையுணர்த்துவனவாம். — நன்னூல்—முழக்கிரட்டொலிகலியிசைதுவை

பிளிறிரை, யிரக்கழுங்கியம்பலிமிழ்குளிறதிர்குரை, கனைசிலைசும்மைகௌவைகம்பலை, யரவமார்ப்போடின்னனவோசை.—நிகண்டு — மாற்றமேமொழியேகிளோவாணியேகதையெதிர்ப்புக், கூற்றுரைபனுவலெசொற்றுயில்விளக்கிளவிகாதை, யேற்றிடுநொடியியைத்தோடிசைபறைவாக்குப்பாணி, தோற்றமாநுவலிரேனுடுமூவேழுஞ்சொல்லின்பேரே. இவைமேற்கோள எ-று. (௧)

(௱௩௰௧-சூ) அறிவருளாசை யச்சமான, நிறைபொறையோர்ப்புக்கடைப்பிடிமைய, னினைவுவெறுப்புவப் பிரக்கநாண்வெகுளி, துணிவழுக்கா றன் பெளிமையெய்த்த, றுன்பமின்ப மிளமைமூப்பிகல், வென்றிபொச்சாப் பூக்கமறமத, மறவியினைய வுடல்கொளுயிர்க்குணந், துய்த்தறுஞ்ச றொழுதலணித லுய்த்தலாதி யுடலுயிர்த்தொழிற்குணம்.

*எ-து.* உயிரின்குணமுமுயிரின்றொழிற்குணமுமாமாறுணர்த்துதும். அறிவு-அருள்-ஆசை-அச்சம்-மானம்-நிறை-பொறை-ஓர்ப்பு-கடைப்பிடி - மையல்-நினைவு-வெறுப்பு-உவப்பு-இரக்கம் - நாணம்-வெகுளி-துணிவு-அழுக்காறு-அன்பு-எளிமை-எய்த்தல்-துன்பம்-இன்பம்-இளமை-மூப்பு - இகல்-வென்றி-பொச்சாப்பு-ஊக்கம்-மறம்-மதம் - மறவி- என்கிறமுப்பத்திரண்டுமிவைபோல்வனபிறவு முடம்போடுகூடியவுயிர்களின்குணங்களாம். துய்த்தல்-துஞ்சல்-தொழுதல்-அணிதல்-உய்த்தல்-என்கிறவைந்துமிவைபோல்வனபிறவு முடம்போடுகூடிய வுயிரினுடையதொழிற்குணங்களாம். இதனுண்முன்னோர் உடல்கொளுயிர்க்குணமென்று முடலுயிர்த்தொழிற்குணமென்றுஞ் சொன்னமையா லுடலிலாவுயிரு முளவெனக்கொள்க. உயிருள்ளபொருள்களோரறிவுமுதலாக வாறறிவீறாகும். — தொல்காப்பியம். — ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே, யிரண்டறிவதுவேயதனொடுநாவே, மூன்றறிவதுவேயவற்றொடுமூக்கே, நான்கறிவதுவேயவற்றொடுகண்ணே, யைந்தறிவதுவேயவற்றொடுசெவியே, யாறறிவதுவேயவற்றொடுமனனே, நேரிதினுணர்ந்தோர்நெறிப்படுத்தினரே. — புல்லும்மரனுமோரறிவின்ப, பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே. — நந்துமுரளுமீரறிவின்ப, பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே.—சிதலுமெறும்புமூவறிவின்ப, பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே.—வண்டுந்தும்பியுநான்கறிவின்ப, பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே.—மாவும்புள்ளுமையறிவின்ப, பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே. — மக்கடாமேயாறறிவுயிரே, பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே, யொருசார்விலங்குமுளவெனமொழிப. இவைமேற்கோள் எ-று. (௨)

(௱௪௰-சூ.) பல்வகைவடிவிரு நாற்றமைவண்ண, மறுசுவையூறெட் டுயிரல்பொருட்குணம்.

*எ-து.* உயிரில்லாதபொருட்குணமாமாறுணர்த்துதும். சதுரம்-நீளம்-வட்டம்-முக்கோணமுதலியவடிவுகளும் இருவகைவாசங்களும் வெண்மை-செம்மை-பொன்மை-கருமை-பசுமை - எனவைவகைவண்ணங்களும் கைப்பு-புளிப்பு-துவர்ப்பு-உவர்ப்பு- தித்திப்பு-கார்ப்பு - எனவறுசுவைகளும் வெம்மை-தண்மை-மென்மை - வன்மை-நொய்மை-சீர்மை-இழுமெனல்-சருச்சரை - எனவெட்டூறுகளும் உயிரில்லாப்பொருள்களின்குணங்களாம். எ-று. (௩)

(௱௪௪-சூ) தோன்றன்மறைதல் வளர்தல்சுருங்க, னீங்கலடைத னடுங்கலிசைத்த, லீதலின்னன விருபொருட்டொழிற்குணம்.

*எ-து* உயிருள்ளபொருட்குமுயிரில்லாப்பொருட்குந்தொழிற்குணமாமாறுணர்த்துதும். தோன்றல்-மறைதல்-வளர்தல்-சுருங்கல் - நீங்கல்-அடைதல்-நடுங்கல் - இசைத்தல்-ஈதல்-இவ்வொன்பதுமிவைபோல்வனபிறவும் உயிருளபொருட்குமுயிரிலாப்பொருட்குமுரிய தொழிற்குணங்களாம். இவ்வகைக்குணங்களலங்காரவழியான்மாற்றவுமாமெனக்கொள்க. [உ-ம்.] பொற்றிரடுஞ்சுமாடம் - சீறந்துயின்றுவாழ்சிறந்தநாடதே-உயிர்தோன்றிமறைந்தது-உடறோன்றிமறைந்தது - நெருப்புத்தோன்றிமறைந்தது. எனவரும் பிறவுமன்ன எ-று. (௪)

(௱௪௨-சூ.) இருதிணைமூவிட நான்மொழியைம்பா, லறுதொகையெழுவழு வுருபுகளெட்டே, தொகாநிலையொன்பது தொகைநிலையாறு, முப்பொழுதிருசொல் லாகுபெயரோ, பகுபதஞ்சுட்டு வினாவேவினையின், மூவகைமுற்றுமிருவகை யெச்சமும், வினைக்குறிப்பிடையுரி விதித்திவைமுத்தமிழ், மொழியெனத் தெளிந்தமுன்னோர், வழியிவண்விளக்கிய வண்சொற்றொகையே.

*எ-து.* இச்சொல்லதிகாரத்துள் விளங்கியவற்றை இங்ஙனந்தொகையாகத்தந்தவாறுகாண்க. (௫)

ஐந்தாமோத்து உரிச்சொல்லியன்முற்றிற்று.

---

அதிகாரமொன்றிற்கு-ஓத்தைந்திற்கு-இயல்பதினொன்றிற்கு, ஆ-சூ, ௱௨. மேற்கோள், சூ. ௱௰௮.

ஆ-சூ. ௨௱௨௰.

அதிகாரமிரண்டிற்கு மேற்கோளொடுகூடிய ஆ-சூ, ௩௱௪௰௧.

சொல்லதிகாரமுற்றிற்று, முற்றும்.

மூன்றுவது

# பொருளதிகாரம்.

(ராசரு-சூ.) மெய்ப்பொருள்பகாப்பொருள் வேதமுதற்பொரு, ளப்பொருளகத்தணிந் தறைகுவல்பொருளே.

*எ-து.* பொருளிலக்கணமாமாறுணர்த்துதும். எந்நூலுரைப்பினு மந்நூற்குப்பாயிரமுரைத்தே நூலுரைக்கப்படும். என்னை-ஆயிரமுகத்தானகன்றதாயினும்,பாயிரமில்லது பனுவலன்றே. என்றுராகலின் இஃதுசிறப்புப்பாயிரம் இந்நூலிலக்கண முரைக்கில் நூனுதலியதுரைத்தலும் நூலுளதிகாரநுதலியதுரைத்தலும் அதிகாரத்துளோத்துநுதலியதுரைத்தலும் ஓத்திடைச்சூத்திரநுதலியதுரைத்தலும் எனநால்வகையானுரைத்தல்வேண்டும். அவற்றுணூனுதலியதுரைத்தலாவது நூலெமாறும் நூலென்றசொற்குப்பொருளாமாறுமுரைத்தல் அவற்றுணூலாமாறுரைக்குங்கால் நான்மூன்றுவகைப்படும். அவை முதனூல்-வழிநூல்-சார்புநூலென்றும், என்னை-முதல்வழிசார்பென நான்மூன்றுகும் என்றுராகலின் அவற்றுண் முதனூலாவது வரம்பிலறிவன்பயந்ததாகும், என்னை வினையினீங்கிவிளங்கியவறிவின், முனைவன்கண்டதுமுதனூலாகும். "என்றுர்தொல்காப்பியனுர்" வழிநூலாவது முதனூறப்பாமரபுபின்னரும்வேண்டும்விகற்பங்காட்டி வழுவாமற்கூறுவது, என்னை முன்னோர்நூலின்முடிபொருங்கொத்துப், பின்னோன்வேண்டும்விகற்பங்கூறி, யழியாமரபினதுவழி நூலாகும். என்றுராகலின்; சார்புநூலாவது அவ்விருவர் நூலின்முடிந்தபொருளை யொருசார்நோக்கியொருங்கொப்புப்படவைப்பது, என்னை இருவர்நூற்குமொருசிறைதொடங்கித், திரிபுவேறுடையதுபுடை நூலாகும். என்றுராகலின்; நூலென்றசொற்குப்பொருளுரைக்குங்கால் தந்திரமென்னும்வடமொழியை நூலென்றுவழங்குவது தமிழ்வழக்கெனக்கொள்க. நூனுதலியதுரைத்தலாவது இந்நூலின்னகருதிற்றென்றுரைத்தல்-அதுதமிழுநுதலிற்றென்றல் - தமிழ் நான்மூன்றுவகைப்படும். அவை இயனூலும்-இசைநூலும்-நாடகநூலுமாமெனக்கொள்க. அதிகாரநுதலியதுரைத்தலாவது, இவ்வதிகாரமின்னதுகருதிற்றென்றல்- இவ்வதிகாரமென்னுதலிற்றோவெனின் பொருளிலக்கணநுதலிற்று இவ்வதிகாரத்துள்விளங்கியவோத்தென்னபெயர்த்தோவெனின்பதிகமென்னும்பெயர்த்து. இத்தலைச்சூத்திரமென்னுதலிற்றோவெனின் கடவுள்வணக்கமுமதிகாரமுநுதலிற்று. இதனுரையாவது - பொழிப்பெனப்படுவது பொருந்தியபொருளைப்பிண்டமாகக்கொண்டுரைப்பதுவே என்றுராகலின்வருமாறு. இப்பூவுலகமாயையுட்படாதெக்காலத்துந்தவிராமெய்ப்பொருளாகவும் கலப்புமின்றி பிரிப்புமின்றி நவமெலாமொன்றென விபல்பாகக்கொண்டு பகாப்பொருளாகவும் வேதநாவலித்தந்தமுதல்வனாகவும் வேதநாலாலடையப்படுமுதற்பொருளேயாகவும் நிற்குமப்பொருளாகிய மெய்யங்கடவுளை மனவணியாகவேத்திப் பொருளதிலக்கணத்தைக்கூறுதும். ஆகையில் இவ்வதிகாரம்வழுவொன்றின்றி முடிப்பதுவேண்டி மீண்டுந்தெய்வவணக்கமுரைத்த முறையைக்காண்க. எ-று. (க)

(ராசச-சூ.) பொருணூலென்பது புகல்பொருணுதலிய, வுரிப்பயன்படுத்துமா றுணர்த்துநூலே.

*எ-து.* இவ்வதிகாரம்பொருணூலினிலக்கணத்தை யுணர்த்துவதாகையி னிச்சூத்திரத்தின்கண்ணே பொருணூலாவதிஃதெனக்காட்டுதும். இங்ஙனம்பொருளெனப்படுவதுதான்விரித்துரைப்பானெடுத்த பொருளைப்பயன்படக்கூறும்படியைக்காட்டுநூலேயெனக்கண்டுர்க. ஆகையாற் புலவராலுரைக்சத்தகும்பொருளாவன, அறம்-பொருள்-இன்பம்-வீடு-எனநான்கு இவற்றுட்பொருணூற்றந்த செந்தமிழுணர்ந்தோர்மற்றையாவுமொழிய அகப்பொருளெனச்சிற்றின்பமொன்றையும் புறப்பொருளெனப்படைச்சேவகமொன்றையும் விரித்துரைத்தார், அங்ஙனம் பொதுப்படாதுரைத்தநூல் சிறுபான்மையாகையின் இங்ஙனமற முதனூன்கிற்சேர்ப்பப்பொது நூலாகவிவ்வதிகாரமுடியுமெனவேகொள்க.(உ)

(ராசரு-சூ.) வழக்குத்தேற்றந் தோற்றமெனவிம், மூவகைப்படுமொழியும்பொருளே.

*எ-து.* பொருட்கூறுபாடாமாறுணர்த்துதும். கற்றோர்பிறர்பயன்பட விரித்துரைக்கத்தகும்பொருளெல்லாம், வழக்கும்-தேற்றமும்-தோற்றமும்-எனவிம்மூன்றுவகையுளடங்கும். இவையேஒழுக்கம்-வழக்கு-தண்டம், எ-ம. கூறுவர். வடநூலார், ஆசாரம் விவகாரம் பிராய்ச்சித்தம், எ-ம். கூறுவர்.(ங)

(ராசசு-சூ.) நீதிவழங்கலு நிலைபெறத்துணிதலுந், தீதெனநன்றெனத் தெளிதலுமிவைவழக், காதிமுப்பொருட் காகும்பயனே.

*எ-து* கூறியமூவகைப்பொருட்குப்பயனையுணர்த்துதும். அவற்றுள் வழக்குப்பயனாவது, முன்யாதொருவன்செய்தவை நீதிநூலிற்கேலாதனவென்பதாயினு மேற்பனவென்பதாயினும் வழக்குமுறையிற்காட்டியதனுள் குற்றந்தோற்றலுங் குற்றங்சாத்தலுமென விருவகைவழக்கென்றவாறு. அங்ஙனம் அஞ்சியோடினுரைத்தொடர்ந்துயிர்செகுத்தலினமென்று குற்றந்தோற்றலுந் தன்னைக்காப்பதுவேண்டி யெதிர்த்தபகைவனைக்கொல்வது வீரமென்றுகுற்றங்காத்தலுமென் றிருவகைவழக்கெனப்படும். தேற்றப்பயனாவது, குறித்ததொழிலைச்செய்யத்தகுவதோ தகாததோவென வையந்தோன்றி யிரண்டிலொன்றைத்தானறிந்ததுவே தகுமென்பதாயினுந் தகாததென்பதாயினும் விரிவாகக்காட்டியையந்தீர்ந்ததையனுகவு மகற்றவு முள்ளந்தேறுதற்கேற்பக்கூறலென் றிருவகைத்தேற்றமென்றவா

று. அங்ஙனம் மேன்மையோர்க்கும்பணிதற்றகுமோ தகாதோவென வையந்தோன்றித் தகுமெனப்ப
லவற்றைக்கொண்டுகாட்டிப் பணிவதற்கவனைவருந் துணியத்தேற்றலுந் தேடியபொருளை நம்பத்தகு
மோ தகாதோவென வையந்தோன்றித்தகாதென விரித்துக்காட்டியவற்றை நம்பாததற்குத்தேற்றலும்
இருவகைத்தேற்றமெனப்படும். தோற்றப்பயனாவது, எடுத்தபொருட்குணந்தோற்றவிளக்கி நல்லவைபு
கழ்தலு மல்லவைபிகழ்தலுமென் றிருவகைப்படுந்தோற்றமென்றவாறு. அங்ஙன மிகப்பொருட்செல்
வன் பிறர்க்கீய்ந்தில்லானாகியு மற்றிரந்தீகைவழங்கினனென்றிவன் கொடையினருமைதோன்ற விளக்கிப்
புகழ்தலுந் தன்றாய்ப்பசிகண்டாற்றாதுண்டானென்றிவன் கொடுமைதோன்றவிளக்கி யிகழ்தலுமென
வினைவிருவகைத்தோற்றமெனப்படும். ஆகையில் நீதிதன்முறைவழங்கல் வழக்கின்கருத்தும் ஐயந்தீர்ந்
தொன்றிற்றுணிதற்றேற்றக்கருத்தும் தீயவுநல்லவும்விளக்கற்றோற்றக்கருத்துமாமெனக்கொள்க. இம்
மூவகைப்பொருடனித்தனிவழங்குமாயினுஞ் சிலவழியிரண்டுங்கூடிவருமெனக்கொள்க. அங்ஙனமே
மேசொல்லப்பட்டபடி இரந்தீந்தவள்ளலருங்கொடைதோற்றிப் புகழுங்காவல வரையாதீதற்சேவனைய
வருந்துணியும்படியே தேற்றுதலுணர்ந்துபேசிவிதுவே தோற்றமுந்தேற்றமுமொருப்பட வழங்கு
மாறெனக்கொள்க. பிறவுமன்ன. சொன்னவிம்மூவகைப்பொருளும் இயற்றமிழானும் இசைத்தமிழா
னும் வேறுபாடின்றிவழங்கும், இவற்றிற்கெல்லாம்பொதுவிதியாக வதற்கதன்குறிப்பின் றகவதாயபய
னையடையும்வழியைக்காட்டல் இவ்வதிகாரநாறரும் பயனெனக்கொள்க. எ-று. (௪)

## முதலாமோததுப்பதிகம்.

(௱௪௭-சூ.) பதிகங்காரணம் பாவுதொகைதுணி, வைந்துமெல்லாப்பொருட் காம்பொதுவழியே.

*எ-து.* சொற்பொருள்பயன்படப்பொதுவழியாமாறுணர்த்துதும். சொன்னமூவகைப்பொரு
ளுங்கருதியபயனையடையசொல்லத்தகும் பொதுவழியாதோவெனில் பதிகமும்-காரணமும்-பாவும்-தொ
கையும்-துணிவும்-எனவிவ்வைந்தும் பொதுவழியாகும். இவற்றை (இனித்தனித்தனிவிளக்குதும்) (௧)

(௱௪௮-சூ.) தெய்வவணக்கமுஞ் செய்பொருட்டொகையுஞ், செப்புவதாகுஞ் சிறப்புப்பாயிரம்.

*எ-து.* நிறுத்தமுறையானேபதிகமாமாறுணர்த்துதும். பதிகம்-பாயிரம் - நான்முகம்-முகவு
ரை - புறவுரை-புனைந்துரை-அணிந்துரை - தந்துரை-இவையொருபொருட்கிளவி, வழக்குமுதன் மூன்
றன்முகத்துப்பதிகமே நான்முகமாகவுரைத்தல்வேண்டும்.—நன்னூல் — ஆயிரமுகத்தானகன்றதாயினு
ம், பாயிரமில்லதுபனுவலன்றே. எ-து. மேற்சோள். பலவகைப்பாயிரத்துள்ளே ஈண்டுச்சிறப்புப்பாயி
ரம்வேண்டுவதெனக்கண்டுணர்க, சிறப்புப்பாயிரம் எத்தன்மைத்தோவெனில் தெய்வவணக்கமாகித்தான்
விரித்துரைப்பானெடுத்தபொருளைத் தொகைப்படக்காட்டல். இவற்றுட்டான் மொழியானும் பொ
ருளானும் வழுவின்றியுரைப்பவு மற்றையவர்மனவெறுப்பின்றிக்கொள்ளவும் எவர்க்கும்வழுவாப்பயனு
ண்டாகவுங் கடவுளுதவியேவேண்டினமையாற் றெய்வவணக்கம்வேண்டுமென்பதாயிற்று. பலபொரு
ட்டொடர்ந்துதருங்கா லிவ்வணக்கமாதியில்வேண்டுவதன்றி யொவ்வொருவகைப்பொருண்முகத்து வே
ண்டாதெனக்கண்டுணர்க. எ-று. (௨)

(௱௪௯-சூ.) பாயிரத்துப்பொருள் பகரிற்கேட்பார்க், கிணக்கமாசை யியையவும்பொருட்டெளி, வு
ரிமைதோன்றவு முரைப்பதுநெறியே.

*எ-து.* பதிகத்துட்பொருட்டொகைப்படவுரைக்குமாறுணர்த்துதும். பதிகத்துள் தொகைப்ப
டப்பொருளையுரைத்துக்காட்டுந்தன்மையாற் கேட்பதற்கிணக்கமுமாசையு மற்றையவரிடத்துண்டாக
வும் தன்பொருடெளிவொடுதோன்றவும் பதிகவுரிமைவழுவாதொழுகவு முரைப்பதுமுறையெனக்கொ
ள்க. இவற்றுட்கேட்போரிடத்திலிணக்கமாவதற் கவையடக்கமாகும். கேட்பதற்காசையாவதற்கெடுத்த
பொருளின்மாட்சியுமருமையும்பயனுங்காட்டுவதாகும். தெளிவுண்டாவதற்சேற்ற பொருளொன்றாகச்
சுருங்கச்சொல்லிப் பின்னதனைற்பெனவதனை யிரண்டுமூன்றுபிரிவாகப்பிரிப்பவு மூன்றுபிரிவுமிக்கது
சிறப்புமன்று மீண்டப்பிரிவிலொன்றுயினு முன்றொகையாகச்சொன்னபொருளி லடங்காபிரிதாய்நி
ற்றலும்வழுவே அங்ஙனம் இந்நாட்டரசன்கைக்கிணையில்லையென்பது தொகையாயுரைத்தபுகழின்று
ற்றப்பொருளாம். இனிப்பிரிவாகவவன்கைபொன்மழைவழங்கலின்மையொழிதலும் விண்மழைவழங்க
வெம்பகையொழிதலுமாமென்பது தொகைப்பொருளிரண்டாய்ப்பிரித்தவாறு. இவ்வாறன்றி யவ
னேசொன்மழைவழங்க வறியாமையொழியுமென்றுவிது முற்றொகையாயுரைப்பவெடுத்தபொருளிலட
ங்காமையால் வழுவெனக்கொள்க. பிறவுமன்ன. அன்றியும்பதிகத்துரிமைவேண்டும் இஃதபொருட்குரி
மையும் அளவிற்குரிமையும் எனவிருவகைப்படும், இவற்றுட்பொருட்குரிமையாவது; தான்விரித்துரை
க்கவெடுத்தபொருட்கன்றியே மற்றொருபொருட்கேலாதாம்படி சிறப்பினையுடையபதிகங்கூற லதன்
பொருட்குரிமையெனப்படும். இதனைப்பற்றிமுன்னோர் பதிகமேநான்முகமென்றார் என்னையோவெ
னில் அணியுடைமுதலியபலர்க்குப் பொதுமையவாகச்செய்பினும் இருவர்க்சேற்கும் பொதுமுகச்சாய
ற்காண்பதரிது, அளவிற்குரிமையாவது; எளியுடற்கியானைத்தலையும் யானையுடற்செவித்தலையுமேலாத
னபோற் பொருளைவிரித்தவளவிற்கதன்முகமாகிய பதிகவளவுந் தகுவதாதலளவிற்குரிமையெனப்படும்.
ஆயினும் பதிகவுறுப்பின்மிக்கநெடுமையிற் குறுமைநன்றெனக்கொள்க. இதற்கெலாமுதாரணமாம்ப
டி திருவள்ளுவநாயனார்பயனெனன்றெடுத்துத்தேற்றப்பொருள்வகைக்கியற்றமிழாய் விரித்துரைப்பப்ப
திகமாவது வேதநான்முதலெவ்வகைநாலுங் கல்லாதாணவுஞ் சொல்லாதுணர்த்தவும் வல்லவராகி மெ
ய்ஞ்ஞானத்திருக்கடலாகிய வொருமெய்க்கடவுடன் றிருவடிமலரோதலைக்கணியெனக்கொண்டேத்தி யிரு

ளிராவிடத்துவிளங்கியவொருமீன்போலவும்பாவிச்சாத்தரிதலர்ந்தபதுமம்போலவு மெய்யாஞ்சுருதிவிளக்கா திருளேமொய்த்தநாட்டின்கண்ணுங் கடவுளேற்றியஞானத்திருவிளக்கெறிப்பத்தெளிந்துணர்ந்தெங்குமொருவிளக்கெனநின் றுயர்ந்த திருவள்ளுவருரைத்த பவைறமொன்றை நான்றெரிந்துரைப்பத்துணிந்தேன். அந்நாயனார்தந்தபயனெனும் பெருங்கடலாழத்தின்மூழ்கி யாங்குடையருமணியொருங் கெடுத்தொருசிறுசெப்பினடைத்தாற் போலத்திருவள்ளுவரது பயனெலாம்விரித்துப்பசருட்படி நான்வல்லனல்லேனாகையினக்கடற்றுறை சேர்ந்தொருமணி யெடுத்துக்காட்டவுணர்ந்தேன். அவர்சொன்ன குறளின்றொன்றேயிங்ஙன நான்விரித்துரைப்பத்துணிந்தேன். அஃதாவது மனத்துக்கண்மாசிலனாதலனைத்தற, னாகுலநீரபிற. எ-து. இல்லறந்துறவறமென்றிவ்விரண்டனுள்ளுமடங்கிநிற்கு மெல்லாவறங்களுமனத்தின்றூய்மையாற் பெறும்பெருமையேதருமமெனவும் மனத்தினுண்மாசுகொண்டவன் செய்யுந்தவமுந்தானமு மற்றையாவுமறத்தினரவமாவதன்றி யறத்தின்பயனுள வல்லவெனவுமக்குறளிருபயனிவையென விரித்துக்காட்டுதும் விரிப்பவேமெய்யும்பொய்யும் விளக்கியுட்பயன்றருமெய்யறத்தின்றன்மையேவெளியாயிஃதொன்றுணர்ந்து நாமதற்கொப்பநடந்தாலிது வீடடைப்துமவழியெனக்காணப்படும். பெரும்பொருணேர்ந்து பொய்ம்மணிகொள்வது கேடென்றுபினும்பொருளைநேர்ந்துமுடலைவாட்டியுமுயிரைவருத்தியுமேற்கதிவிட்டிற் செல்லாச்சிலபொய்யறங்களை யீட்டுவதனுங்கேடாமன்றோ இதனைவிலகித்தன்னுயிராக்கங்காப்பது வேண்டியிக்குறட்பயனாராய்வது நன்றேயெனவிப்பதிசத்துரிய தெய்வவணக்கமுஞ் சொல்லக்குறித்தபொருளைத்தொகையாயுரைத்ததுந் தெளிவாயிருபிரிவாகவகுத்ததுங்கேட்பதற்கிணக்கமாவதற்கவையடக்கமு மாசையாவதற்கசப்பொருண்மாட்சியுமருமையும் பயனுமுறையே வந்தவாறுகாண்க. இலசத்தமிழ்ப்பதிகத்துதாரணமாசக் கம்பனுரைத்தபதிகமுப்பாப்பாயிரத்தைக்காண்க அவற்றுள் முதற்பாத்தெய்வவணக்கமும் பின்னிருபாவுஞ் செய்பொருளுரைத்தலும் பின்னுற்பாவிரேடவையடக்கமு மற்றவைதன்கதைமாட்சியுமருமையும் பயனும்வந்ததறிக (ங)

## இரண்டாவதுகாரணம்.

(௱௫௰-சூ) காரணவழியெனக் காட்டுரைப்பொருட்குறி, யகத்திவணபுறத்திவண யாமிருவகைத்தே.

*எ-து.* நிறுத்தமுறையானேகாரணவழியாமாறுணர்த்துதும். ஈண்டுக்காரணமென்னுஞ் சொல்லானுரைப்பானெடுத்தபொருளைக்காட்டற்குதவு நியாயங்களேவருவனவெனவு மந்நியாயங்கடோன்றுமிடனேயிவணையெனவுங்கொள்க. இவையே யகத்திவணையென்றும் புறத்திவணையென்றும் இருவகைப்படும். ( இவற்றையினித்தனித்தனிவிளக்குதும். ) எ-று. (க)

( ௱௫௧-சூ ) அகத்திவணையியல்பெயரைறபடும்வகையே, பொதுச்சிறப்புவமைபுறநிலையெதிர்நிலை கருவிகாரியக்காரசமுன்னவை, பின்னவையெனவாம் பிரிவீராறே.

*எ-து * நிறுத்தமுறையானேயகத்திவணையாமாறுணர்த்துதும். அவையேயியல்புமுதலாகப்பின்னவையீறுகப்பன்னிரண்டெனப்படும். எ-று. (உ)

(௱௫௨-சூ.) அவற்றுள்-இயல்புரைத்தொப்ப வியம்புதலியல்பே.

*எ-து * நிறுத்தமுறையானேயியல்பெனுமுதலகத்திவணையாமாறுணர்த்துதும். ஆகையிலவ்வவ்வியல்பிவலைக்கொண்டு பொருளைக்காட்டலியல்பகத்திவணையெனப்படும் அங்ஙனநல்லறிவில்லாரீனமொன்றுகட்ட வுணவுமுடையு மைம்புல்நுகர்ச்சியு மற்றவுயிர்க்கும்பொதுமையவாகி நல்லறிவொன்றேமாந்தரியல்பின் சிறப்பென்றமையா லறிவில்லாதார் மக்களெனப்படா விலங்கினோடொவ்வயொனப்படுவரென்ப தியல்பெனுமகத்திவணையாகும் — சிந்தாமணி — பெண்ணெனப்படுவகேண்மோபீடிலபிறப்புநோக்கா, வுண்ணிறையுடையவல்லவோராயிரமனத்தவாகு, மெண்ணிப்பதங்கைபிட்டாலிந்திரன்மகளுமாங்கே, வெண்ணெய்க்குன்றெரியுற்றுற்போன்மெலிந்துபினிற்குமன்றே. என்றூராகையின்மாதரதியல்பினைக்காட்டி மாதரைநம்பலாகாதென்பது காட்டினதாயிற்று. எ-று. (ங)

(௱௫௩-சூ.) தொகைவிரித்துரைத்தல் சொற்பொருள்வகையே.

*எ-து* வகையகத்திவணையாமாறுணர்த்துதும் தொகையாயுரைத்தபொருளை வகையறுத்தியம்புதல்வகையகத்திவணையாம் [உ-ம்] வந்திவளவேனிலுலாவியவனமெலாமகிழ்ந்ததெனத்தொகைப்பொருளாயுரைத்ததைவகையறுத்துரைப்பம், விரைவாய்நாகம்விருப்புறநகைப்பன, முகைவாய்த்தாழைமுறுவிக்கமழ்வன, நறவாய்ப்பன்மலர்நடனம்விழிப்பன, மதுவாய்வண்டினமகிழ்ந்தியாழொலிப்பன, தீங்குரற்குயிலினஞ்சென்றுபாவிசைப்பன, வேலைப்பறவைபினப்பறைதுவைப்பன, வெறிவாய்விரிபிலவேனில், செறிவாய்வனத்துட்செருக்கியுலாவவே. எ-து. வகையகத்திவணையாம் அங்ஙனம் வனத்திற்சிராமர் போசையிலயோத்திமாநகரெல்லாம் வருந்தினதென்பது வகையறுத்துரைப்பனிதர் புலம்பலுரைத்ததின் பின்னர்க்கம்பன்சொன்னதாவது சொடியடங்கினமவனக்குன்றங்சோமூர், சிடியடங்கினமுழக்கிழந்தபல்லியம், படியடங்கலுநிமிர்பசுங்கண்மாரியாற், பொடியடங்கினமதிற்புறத்தவீதியே. அட்டிலுமிழந்தனபுகையகிற்புகை, கொட்டிலுமிழந்தனநிறைந்தபால்கிளி, வட்டிலுமிழந்தனமசளிர்கான்மணித், தொட்டிலுமிழந்தனமக்வுஞ்சோரவே. ஒளிதுறந்தனமுகமுயிர்துறந்தனத், துளிதுறந்தனமுகிற்றொகையுந்தூயவாங், தளிதுறந்தனபலிதானயாவையுங், களிதுறந்தனமலர்களுண்வண்டினே. பலவுமிராமாயணநகர்நீங்குபடலத்திருநூற்றிரண்டாம்பாவேதொடங்கிக்காண்க. எ-று. (ச)

(௱௫௪-சூ) பொதுவெனப்பலவையடக்குமொன்றே, சிறப்பெனவொன்றினடங்கும்பலவே.

*எ-து.* பொதுவகத்திவணையுஞ்சிறப்பகத்திவணையுமாமாறுணர்த்துதும். ஆகையிற்றனக்குறுப்

பெனப்பலவற்றையடக்கிக்கொள்வதுபொதுவெனவு மொன்றினடங்கினபலவற்றுட்டனித்தனி யொ
வ்வொன்றுசிறப்பெனவுங்கொள்க. இவ்வாறுடையைதானம்பொறை தவமூக்கமுதலிய வெல்லாம்பொ
துப்படவறமேயாகையிலறம் பொதுவெனவுமற்றவைத் தனித்தனிச்சிறப்பெனவும்படும். பிறவுமன்
ன. ஆசையிற்றயையைப்புகழப் பொதுப்படவறத்தின் மாட்சியைக்காட்டிப்புகழ்வது பொதுவகத்தி
வணியாம். கல்விபுகழ்ந்துழி திருவள்ளுவர்முதலியகற்றோர் மாட்சியைப்புகழ்வது சிறப்பகத்திவணியாம்.
பிறவுமன்ன. [உ-ம்] —சிந்தாமணி.— தேவரோதாமுமாகித்தேவராற்றெழிக்கப்பட்டு, மேவல்செய்தி
றைஞ்சிக்கேட்டுமணிதமர்பணிகள்செய்து, நோவதுபெரிதுந்துன்பநோயினுட்பிறத்தருன்பம், யாவ
துந்துன்பமன்னுயாக்கைகொண்டவர்கட்கென்றான். இதனுளாதிக்கடவுளன்றி மற்றைத்தேவர்படுந்து
ன்பங்கவிச்சொன்னபின்னத்தேவரு முடலுடையாராகியடையுந்துன்பங் காட்டப்பொதுப்பட்டவுட
லைக்கொண்டயாவர்க்குமெல்லாந்துன்பந்தானே யென்றமுடித்தானுகையிற்பொதுவகத்திவணியாயிற்
று மீளவுங்காமமயக்கத்தைக்காட்டப்பொதுப்படக்காதன்மிகுதியால்வருமதிமயக்கங்காட்டிகாதன்மிக்
குழிகற்றனவுங்கைகொடாவாதல் கண்ணகத்தஞ்சனம்போலுமால். என்பதுசிந்தாமணி இதுவும்பொது
வகத்திவணியாம். எ-று. ( ரு )

(ருருரு-சூ ) உவமையெனப்பிறிதொப்பவுரைத்தலே.

*எ-து.* உவமையகத்திவணியாமாறுணர்த்துதும். தானேயுரைப்பானெடுத்த பொருளைவிளக்க
வுமற்றவரவற்றையொப்பித்துக்கொள்ளவும் பிறிதொன்றவனெடுத்திரண்டிற்கொப்புமைகாட்டித்தன்
பொருடோன்ற விளக்கியுரைப்பதுவமையகத்திவணியெனப்படுமாகையில் விளக்குவமையென்றுமொ
ப்பித்துக்காட்டுவமையென்று மிவையிருவகைப்படும் இவற்றுளத்தாட்சியுமடங்குமென்றுணர்க [உ-ம்]
— குறள் — சலத்தாற்பொருள்செய்தேமாத்தல்பசுமட், கலத்துணீர்பெய்திரீஇயற்று. எ-து. விளக்
குவமை வாளொடென்வன்கண்ணரல்லார்க்கு நூலொடென், நுண்ணவை யஞ்சுபவர்க்கு எ-து. ஒப்பித்
துக் காட்டுவமை. —சிந்தாமணி— காமத்தாற்கேடுவருமெனச்சச்சந்தற்கு மந்திரிசாட்டிச்சொன்னதாவ
து காமமேகன்றிபின்றகழுதைகண்டருளினுமே, வாமனூர்சென்றுகூடிவருந்திநீயொன்னும்வையத, தீமஞ்
சேர்மாவலிபோல விழித்திடப்பட்டதன்றே, நாமவேற்றடக்கைவேந்தோமிது தெரியெனென்றான்.
அன்றியுங் கணவனையிழந்ததற்குள்ளந்தேறவுகினிவலத்தசெல்வமில்லை யென்றத்தாட்சியாகவும் பொ
துப்பொருளாகவும் காட்டினபடியாவது — சிந்தாமணி. — மன்னுநீர்மொக்குளொக்குமாநிடரிளமை
யென்ப, மின்னினுநில்லாச்செல்வம்வெயிலுறுபனியினீங்கு, மின்னிசையாழ்குரல்யாழினியினு
மினியசொல்லா, யன்னதால்வினையினுக்கமழுங்குபடுதென்னையென்றான். இதனுட்பொருட்குப்பொரு
ள்விளக்குவமைகொண்டு தன்பொருளத்தாட்சியாலொப்பித்த வுவமையுரைத்தவாறுகாண்க மீண்டினிய
ணியதிகாரத்துவமைபுமுவமைவிகற்பங்களுள்விரித்துரைப்பாம். எ-று. ( சா )

(ருருசா-சூ.) புறநிலையொப்பிழி வாக்கமெனமூன்றே.

*எ-து.* புறநிலையகத்திவணியாமாறுணர்த்துதும். தான்குறித்தவற்றிற்புறத்து மற்றொருபொ
ருளையெடுத்துக்காட்டிக் குறித்ததன்பொருளைவிளக்குதல் புறநிலையகத்திவணியெனப்படும். இதுவே
ஒப்புமிழிவுமாக்கமுமென மூவகைத்தெனக்கொள்க இவற்றுட் புறத்தெடுத்தபொருட்குத் தன்பொரு
ளொத்ததெனிலொப்பு குறைந்ததெனிலிழிவுமிக்கதெனி லாக்கமெனப்படும் [உ-ம்.] பிறர்சுடுஞ்சொலின்
னினிநாள் பொறுத்ததுகண்டுநீயும்பொறுமோ என்பதொப்புப்புறநிலை அடிப்பாரைபொறுத்தன
னொருசொல்லா விடிப்பாரைபொறார்கொல்லோ என்பதிழிவுபுறநிலை. நச்சளவர்நயன்கொண்டநாட்டுந
ஞ்சொடியபின் மக்களவர்மேனஞ்கொள்வா னுலகநாடாமோ என்பதாக்கப்புறநிலை. பிறவுமன்ன. ( எ )

(ருருஎ-சூ.) குறித்தவைகாட்ட மறுத்தவைகாட்டி, யெதிரில்விளக்க லெதிர்நிலையென்ப.

*எ-து* எதிர்நிலையகத்திவணியாமாறுணர்த்துதும். ஒன்றவலைவிளக்கவதனைமறுத்தெதிரே நிற்
கும்பொருளைக்காட்ட லெதிர்நிலையகத்திவணியெனப்படும். அங்ஙனநல்லோரதுமேன்மைதோன்றத்
தீயோரதீனத்தைக்காட்டலுங் கல்லாமையால்வருமிசழ்ச்சிதோன்றக் கல்விப்பயக்கும்புகழ்ச்சிகாட்டலு
மெதிர்நிலையகத்திவணியாம் [உ-ம்] §—§ தேம்பாவணி §—§ கான்சுரக்குமிவைமுல்லைகாட்டுப்பொன்று
ற்கண்டசோலி, வான்சுரக்கும்பனிமாலைப்பந்தர்முத்தமணற்பாய்த்தித், தேன்சுரக்குநீரூட்டிவளர்த்தபூங்
காத்தீய்ந்தறவோ, மின்சுரக்குமிராவொளித்துப்போதீர்நன்மைவிட்டென்பார் இதனுளொட்டெனுமல
ங்காரவசையாற்சூசைமாமுனியெசித்துநாட்டினீங்கலின்வந்தகேடுதோன்ற வன்னுணங்கிருந்துணர்த்தியத
னல்வந்தநன்மைகாட்டியவாறுகாண்க. — இருமொழிமாலை—கார்முகத்துமுல்லைகதிர்முகத்துத்தாமரை
யே, சீர்முகத்துஞ்சிந்தாப்பொறையினிதே, போர்முகத்து, வில்லெதிரோதோல்லைவயினுமிக்கன்றுமெல்வி
யலார், சொல்லெதிரோதோலாநிலை இதனின்மகளிரோடெதிர்த்திகலின்நின்றுநிகழ்ச்சிதோன்றப்போர்முக
த்துநில்லாதோடின சேவகனிகழ்ச்சிகாட்டப்பட்டது. எ-று. ( அ )

(ருருஅ-சூ.) காரணநான்குங் காரியநான்கும், விரித்துத்தன்பொருள் விளக்கலுரித்தே.

*எ-து.* கருவியகத்திவணியுங்காரியவகத்திவணியுமாமாறுணர்த்துதும். கருவியெனினுங்காரணமெ
னினுமொக்குமாகையிலொன்றற்குள்ளகாரணத்தைக்கொண்டாயினு மதனாலாகுங்காரியத்தைக்கொண்டா
யினுமதனைவிளக்கிக்கூறல் கருவியகத்திவணியுங் காரியவகத்திவணியுமாமெனக்கொள்க. இவற்றுளாக்கி
னொன்னுங்கருத்தாக்காரணமுமுதற்காரணமுந் துணைக்காரணமுங்குறிப்புக்காரணமுமாகக்காரணவகை
நான்கென்ப. அங்ஙனங்கடவுளுரைத்தநூலிஃதாகையிற்பொய்யும்பிழையுமில்லதே என்பதாக்கினோனை
னுங்காரணவகத்திவணி மண்ணாலாயவுடலிஃதாகையினிற்பதரிதே இதுமுதற்காரணவகத்திவணி. ஐம்பொறி

புணர்ந்துந்தன்மையறிவுளோர்நம்பாலொன்றுன் இது துணைக்காரணவகத்திணை. பேருலகாளயான்பிறந்ததாயபின், பாருலகிழிநலம்பற்றிநக்கவோ, இதுகுறிப்புக்காரணவகத்திணை. இந்நால்வகைக்காரணங்களால்வருங்காரியங்களைக்கொண்டிவ்வாறு தத்தங்காரணப்பொருட்களை விளக்கியுரைப்பது காரியவகத்திணையாம்—குறள் — நோயெல்லாநோய்செய்தார்மேலவாநோய்செய்யார், நோயின்மைவேண்டுபவர். பிறர்க்குநோய்செய்தற்காரணமாகத்தனக்கு நோய்காரியமாகவிளையுமென்றமையாற் பிறர்க்குநோய்செய்வதின்றுதெனக்காட்டின காரியவகத்திணையாயிற்றுப் பிறவுமன்ன எ-று. (௯)

(௨௫௯-சூ.) காரகமென்ப கருத்தாகருமங், கருவிகருத்திடங் காலந்திறனேழே.

*எ-து.* காரகவகத்திணையாமாறுணர்த்துதும். ஒன்றனைச்செய்தலிற்கூடியபலவும் பொதுப்பெயராகக் காரகமெனப்படும். அவையேசெய்பவனுஞ் செய்தொழிலுமதற்குதவுமிருவகைக்கருவிகளு மதனாற்கருதியபயனு மதனைமுடித்தவிடமுங் காலமும்படியுமெனக்காரகமெழுவகைப்படும். ஆகையிலொன்றனைவிளக்க விவற்றைவிரித்துக்காட்டில் காரகவகத்திணையாமெனக்கொள்க இவற்றுளெல்லா நடப்பினுஞ்சிலவொழித்துச் சிலநடப்பினுமாம் [உ-ம்.] §—§ தேம்பாவணி §—§ தண்டவத்தவனையடைம்பூந்தருத்திரணிழற்றிக்கவ்வு, மண்டபத்தொருநாள்வைகிமதுநலம்பொழிவாய்க்கஞ்சம், விண்டவத்தொழியுமாந்தர்வீடுறச்செப்பங்காட்டி, யொண்டவத்திறைவன்சூசையுரைவிரிதமிழிற்சொன்னுன். இதிலேயொண்டவத்திறைவன்சூசையென்பது கருத்தாசெப்பங்காட்டிச்சொன்னானென்பதுகருமம் மதுநலம்பொழிவாய்க்கஞ்சம்விண்டென்பது கருவி. அவத்தொழியுமாந்தர்வீடுறவென்பது கருத்து. தண்டவமண்டபத்தென்பதிடம். ஒருநாளென்பது காலம். உரைவிரிதமிழிலென்பது திறனெனவேழும்வந்தவாறுகாண்க ஈண்டுச்சுருங்கச்சொன்னதை விரித்துரைப்பவுமியல்பே. எ-று. (௰)

(௨௬௰-சூ) முன்னவைபின்னவைமுன்பின்னடந்தன, பன்னித்தன்பொருள்பயன்படப்பகர்தலே.

*எ-து.* முன்னவையகத்திணையும் பின்னவையகத்திணையுமாமாறுணர்த்துதும். எடுத்தபொருளேதோன்றுவதற்கு முன்னுயதும்பின்னுவதும்விரித்துக்காட்டல் முன்னவைபின்னவையெனவிருவகையகத்திணையாம். [உ-ம்.] — விருத்தம். — காலைவாய்மலர்க்கமலங்கட்டிந்திதழ்க்கதவடைப்பச், சோலைவாய்ப்பறைதுவைத்தபுள்களிப்பவெங்கதிரோன், வேலைவாயுறமேவியகறவைகள்கனையா, மாலைவாயிருள்வடிவொடுகெங்குல்வந்ததுவே. புறநிலை இதிலேயிராவைவிளக்குவதற்குமுன்வரும்பலவற்றை விரித்துரைத்தமையான் முன்னவையகத்திணையாயிற்று. — குறள் — பகைபாவமச்சம்பழியெனநான்கு, மிகவாவாமில்லிறப்பான்கண், இதில்பிறமனைவிரும்பலாகாதென்பதுகாட்டவிரும்பினபின்னர், வரும்பகைபாவமச்சம்பழியெனநாற்கேடுகளைக்காட்டினவதனாற்பின்னவை யகத்திணையாயிற்று §—§ தேம்பாவணி §—§ தொல்வினைபினியவென்றுதசளூறத்தோன்றுங்காலு, நல்வினையரியவென்றுநடாந்கெடத்தோன்றுங்காலுங், சொல்வினைநிரயச்செந்தீக்குளிப்பநல்லுணர்விற்றுழ்ந்த, வல்வினையூக்கம்பூண்டுமருளலென்னெஞ்சேயென்றான். இதிலேயருமைக்கஞ்சி நல்வினைவிடாமலுமினிமைவிரும்பித் தீவினைசெய்யாமலுமுறுதிபெறும்படித் தீவினைபின்வருநரகப்பீடைகளுணர்வது. நன்றென்றமையாலிதுவும்பின்னவையகத்திணையாயிற்று. (இவ்வகத்திணையை-௨௯௧-ஞ்-சூல்-விரித்துக்கூறுதும்) (௰௧)

(௨௬௧-சூ) புறத்திணையொழுக்க நால் புறக்கரிமூன்றே.

*எ-து*. நிறுத்தமுறையானேபுறத்திணையாமாறுணர்த்துதும். அவையேயொழுக்கமு நாலுங்கரியுமெனமூவகைப்படும் இவற்றுளவ்வவநாட்டினிறைவழுவின்றி யொழுகுமுறையே ஒழுக்கமெனப்படும் இவ்வகைமுறையோடு தன்பொருளொத்ததாகக்காட்ட லொழுக்கப்புறத்திணையாம் [உ-ம்.] — குறள் — எவ்வதுறைவதுலகமுலகத்தோ, டவ்வதுறைவதறிவு என்றாராகையிலுலகுளவழுவற்றமுறையோ டொத்ததுவெனக்காட்டினுலகஞ்சொள்ளத்தகுவதென்பதுவிளங்கும்அன்றியும்வேதநால்நீதிநூல் மனுநால்முதலிய நால்வழிவிலக்கினவும் விதித்தனவுமெடுத்துக்காட்டித்தன்பொருடோன்றவிளக்கல் நூற்புறத்திணையாம் மறுப்பாரின்றிவழங்குநூலினிடத்துத் தானெடுத்துரைத்தபொருளே யுளவெனக்காட்டி னைவருமையமின்றி யொப்பித்துக்கொள்வதெளிதே அன்றியுங்கரியெனினுஞ் சாட்சியெனினுமொக்குமஆகையின்மிக்கறிவுடையோருரைத்ததாயினு மெழுதினதாயினுந் தானெடுத்தபொருட்குச் சாட்சியாகக்கொண்டு காட்டல்கரிப்புறத்திணையாம் ஆகையிலிலக்கியவுதாரணங்களையெடுத்துக்காட்டலிப்புறத்திணையாமெனக்கொள்க. (இப்புறத்திணையை-௨௯௯-ஞ்-சூத்திரத்தில்மேற்கோளாகவிரித்துக்கூறுதும்) (௰௨)

## மூன்றாவது விரிவு.

(௨௬௨-சூ) விரிவெனவணிவழி விரித்ததன்பொரு, டெரியவைக்கட்செலச் செப்புதலென்ப.

*எ-து.* நிறுத்தமுறையானேவிரிவாமாறுணர்த்துதும். விரிவெனினும்பரவெனினுமொக்குமாகையின் மேற்கூறியதிணைமூவைந்துமெல்லாப்பொருட்கெல்லாம் வேண்டியவல்லவாகி யொருபொருட்குரியசிலவுஞ் சிலமற்றொருபொருட்குரியவாகையிற் றான்விரித்துரைப்பவெடுத்தபொருட் கேற்பவற்றைத்தெரிந்து போர்முகத்தணிகளைப்பலவகையூகமாகவகுத்ததுபோலக் குறித்தபயனையடைதற்சேற்றவொழுங்குந்தெளிவுமாம்படித் தெரிந்தநியாயங்களைப்பகுத்தபின்னரோற்றிய சுவர்மேற்சித்திரமெழுதுவார்போலவு மெழுதிச்சுருட்டினபடத்தைவிரிப்பார்போலவு முறையிற்கிடந்தநெடும்வளருவிவீசுவார்போலவுந் தானுமவற்றைத்தனித்தனி விரித்துக்காட்டல்வேண்டு மிதுவேவிரிவெனப்படும். இதற்கைந்தாமதிகாரத்திற சொல்லப்படுமலங்காரங்களேவழியாம் உதாரணங்காட்டவிதியேவிளங்கும் ஆகையிற்பதிகத்துதாரணமாகவெடுத்த குறளுண்முதற்பயனுகியமனத்தின்றூய்மையாலறமெலாம்பெறும் பெ

ருமையுமுடையனவென் பதுபலவசத்திவணையால்விரித்து விளக்கியவாறு அறமென்னப்பட்டயாவுமன்
னுயிர்க் கோருபிராகவுமனத்திற்கோரணியாகவு நெஞ்சத்திற்கொருசெல்வமாகவும்வழங்குமியல்பினையு
டையனவாகையிற் புறத்துத்தோன்றும் வேற்றுருக்கோலங்காட்டி யகத்துண்ணுழையாவறமோவறத்
தின்பேறும்பெருமையுமுடையவென்பர் எப்பொருளினுமதனுண்மையுணர்தலேஞானம் உணர்ந்தபொ
ருளினிவையே நல்லவையெனவுமிவையேயல்லவையெனவுந்தெளிதலேகாட்சி தெளிந்தவழியேயல்லவை
யொருவிநல்லவை மருவியொழுகலேயொழுக்க மிந்நல்லொழுக்கமேயவணத்தறனைகையி லிவையேயலாம
னமுயற்சியாலாகவேண்டுழி மனமொவ்வாவறனெல்லாம் பொய்யெனவிசழப்படுவது முறையேயென
பதிவையுமித்தொடக்கத்தனபலவு மியல்பகத்திவணையாம். அன்றியும் பிறர்நோய்கண்டசத்திரங்காவன
யோவெனவாய்பொய்த்த விரக்கங்காட்டல்தயையோ நெஞ்சங்கடுத்த சுடும்பகைகொண்டான் முகநகைட்
பதுநட்போ வொன்றீந்தொருபத்தடித்துக் கொள்ளத்துணிந்தான் பிறர்க்கீந்துதவுதல்கொடையோ ம
வன்னகர்நாடுமகலநீக்கியுட்பொருளின்பமணுகுமாசை நீங்கான்மறுதுவலையில்லாவனம்புக்குறைதல் து
றவோபிணியுறப்பசிமிசப் பகைப்பட மொய்த்ததுன்பமின்பமென வுணர்ந்தகங்கலங்காதான்புறத்தும்
புலம்பாதிருப்பதுபொறையோ பிறரழகாசைமனம்புகாத்தன்னிறைசாத்த மகளிர்புறத்துக்காட்டுமொடு
க்கமுங்கறபே. தன்மனக்கோடடங்கண்டோனுதல் நாணமேமனத்திலிறைஞ்சிப்பிறலாப்பணிவான்புற
த்துப்பொய்யாச்சொல்லின்வணக்கமும்பணிவே உளத்திற்கலங்காதெதிர்வெம்போர் முகத்தஞ்சான்றுணி
வாய்சேவகந்தானும்வீரமே இவ்வாறவனத்தறன்மனத்துக்கண்மாசிலனுதலாகுமன்றே என்பதிவையு
மித்தொடக்கத்தனபலவும் வகையசத்திவணையாம். அன்றியும் உள்ளொவ்வாமற்புறத்துத்தோன்றுஞ்சித்தி
ரவறத்தின்சாயலும் பயன்றருநல்லறமெனப்படுமோபி னுன்கொண்டாட்டியபுனமரப்பாவையுங் களி
கொண்டாடிய கருங்கட்பாவையும் வேறுபாடின்றியொக்குமெனவுங் கண்ணேகனியவழகுகாட்டியுள்ளு
யிர்கொல்லு நஞ்சுடைக்காஞ்சிரப்பழனும் புறத்துவீசுமணமே யொப்பவசத்துமினிய தேறல்கொண்ட
மாங்கனிதானுமொன்றெனவும் மொளிபெறவெழுதிய வோவியப்படமுமுயிர்பெற்றிமிழ்வாழுட னு
மொன்றெனவுமிவை வேறல்லவென்புழியன்றே மனமுள்ளொவ்வா வனைந்தென்முகத்தெழும் பொய்
யறச்சாயலு நெஞ்சில்விற்றிருந்தினிதிற் புறத்துத்தோன்றுமெய்யறமாட்சியுமொன்றெனச்சொல்ல
வும்படுமே. பசியபொற்றூணிரைத்துநாட்டி மேற்றியிற்பவளபோதிகையேற்றுபு வயிரநன்மணியுத்திர
ம்பாய்த்திப்பளிக்குச்சுவர்மேன்முடிலசுடரிஞ்சுயர்சிகரமொளிபின்மணியார்கூட்டி வானிகர்மாளிகையரு
ந்தொழிற்றச்சர் வழுவறமுடிப்பினுமுள்ளாளரசன் கொடுங்கோலோச்சுங்குறாரனுபி லுலசிலாயவொரு
பயனுண்டோ, அவ்வாறொருவனருமறையோதினு மரும்பொருட்சவிநூல்ளவறச்சற்கினும் பலநதியா
டினும்பலதலஞ்சேரினும் வனைவில்கொடுப்பினும்வழுவில்நடப்பினுங் கோபுன்மண்டபங்குளமுதற்ப
ற்பல வாயிற்றருமெயனவுவந்தியற்றினுந் திரட்பொருளிடடியசெல்வந்துறப்பினு மவன்னகர்நாடுமகார்
மவனசுற்றமுந்துறந்தரும்வனத்திடை துவனட றவுறைபினு மின்புறுசுவைசுகமெல்லாமறுத்தே யைம்
பொறிகொன்றுடலழியநோற்பினு மீரறவழுமெலாமோரறச்செல்லினு மனத்தூடியவிவனமாசளறுயிற்
றனக்கொருபயனுந்தகாதெனவுணர்கஞ்ளிபெறப்பசும்பொன்புறத்துப்பூசியுளுப்பாந்தழிமரப்பாவையா
கவு மழிகிடத்தீட்டியகோலங்காட்டித் தீண்டாவங்சர்ப்பாவனையாகவும் வெருவிடக்கொடும்புலிநெடுந்தோ
ற்போர்த்துப் பசும்புன்மேயிழிவுறுங்கோவாகவு நன்மனத்தாய்மைநண்ணுவறனெலா முட்பயன்கண்ட
வ்வளவிலவனைத்தனதயுமெண்ணுமிலறவன்முகத்துத்தோன்றுமே என்பதிவையு மித்தொடக்கத்தனபலவு
மவலையகத்திவணையா மெதிர்நிலயும்வகையுஞ்சிறப்புங் கலந்துவந்தவாறுகாண்க. அன்றியுமிவற்றிற்
செல்லாங்காரணமியாதெனி லாயிருமுடலுமெனவிரண்டொன்றாய்ச்சேர்ந்தபொருளே மனிதனெனையி
வெற்றுடலுயிரளவின்றி மிக்கதாயுயிர்சேரறுமிக்கவெனப்படும் உடற்கொண்டறத்திற்குரியசெயினுமை
வைபறமல்ல வறவுடலாயவற்றுள்ளமுங் கூடினுயிருளவறமாம் நிறநன்றுபினுங்காஞ்சிரநன்றேமீளவு
முலிருளகலச்செஞ்சதிர்பரப்பிய பருதியேபோல முனவிருளிரியத்திருவொளிக்சதிரென வேதநாலுனை
த்துத்தந்தவிறையோன் விலக்கினநீக்கலும்விதித்தனவாக்கலு மெய்யறம கையிவைற்கோரிருளிதெளி
விற்றேன் மனத்துட்டயவையுளவெனிற் புறத்துக்காட்டியால்விவனயறமெனப்படுவதோ இறை
வற்கேற்பனசெயவேயறமெனின் மனத்தழுச்சாறவற்கேலா திருக்சமைந்தர்ப்புசழ்வதியற்றலாவமெத
ன்னோ தானேவிதித்தவறநல்விவனக்குத்தானே பயன்றரத்தருவனைகையி லுள்ளுந்தெரிந்ததன்கண்வெறுப்
ப வொருவன்கொண்டமனமாசளவெனிலினித்தா னவற்கறப்பயவனத்தருவனோ தோன்றியொழியுமின்
னொளிபோல வுட்பயனறியாமாந்தர் வாய்ப்புகழொன்றேமனமாசொவ்வாப்புறத்தறன்சென்றபயனே
னத் தெளிவிற்றேறிப்பொன்றின்பின்னிவனுல் வரும்புசழாகிற்புழிதானெரிநிலத்தின் வருந்திநிந்தைப்ப
டுமேதெ நீர்மையன்றெனச்சிந்தையின்மாசிலவே றம்போற்றுக என்பதிவையு மித்தொடக்கத்தனபலவுங்
கருவிகாரியமென்றீரகத்திவணை வந்தவாறுகாண்க. அன்றியும் சயவருந்தாமொருசாயுஞ்சனியு முயிரறக்
கொய்தவொருமரக்குறையு மற்றெப்பொருளும்வந்து கொளுங்காலுட் குறைபின்மையுணர்ந்துநாடி
சட்கினிதாகியகாஞ்சிரமொருவி முட்புறவுட்சுவைமுதிர்சனிநன்றென நோக்கியும்புறமெனுதுள்ளழிவுற்
றன நீக்கியுட்டனையதுகொளவாரன்றே வெஞ்ஞான்றும்வானமேவிநிதினழியா மெஞ்ஞானப்பயன்ற
ருமெய்யறமொன்றே யிவ்வாறென்னுநிவைமேயுட்பயனவ்வவர்தாமினுமைமர்தர்புகழுறப் புறத்துச்சா
யல்போதுமென்றறத் திறத்துத்தானுளுந்தெளியாதென்றோ என்பதிவையுமித்தொடக்கத்தனபலவுமா
க்சப் புறநிலையசத்திவணையா மெனக்கொள்க அன்றியு மனவிருளிரியமணிவிளக்காகத், தனியருளிறைவ
ன்றந்தமறைநூல், [illegible]தாதிப்பிண்டியானறைந்தயாவும், [illegible]தமெட்டெனவழங்கித்தான்றுமே, நம்

வாயென்புகழ்நுவன்றுபாட, வெம்வாயெரிப்பெலிமேன்மேற்சொன்றிட, வப்புகழ்ப்பெலியவனையதும்மன, மெரப்பிலாதென்வலையொருவிநிற்றலா, லவையெலாம்பொய்ப்பொருளாகக்கைக்கொளா, நவையெனவெறுத்தனேனானே யெனவும், புணர்ந்திடத்தேவபூசையினேர்ச்சி, கொணர்ந்தழிப்பகையுட்கொண்டதென்னுணர்கி, ணகன்றப்பகைதீர்ந்தல்லாறபூசையு, மசன்றுமறுப்பனுனேயெனவு, மாசிலான்மறையெனவறைந்தபின்மனத்துண், யாசிலுதவேமாண்புறுமவனைத்தற, னல்லதுதீயவையசத்தொளித்தினிய, வல்லிருக்காட்டன்மாணறமென்பவோ, என்பதிவையுமித்தொடக்கத்தனபலவு நூற்புறத்திணையாம் அன்றியும் ஈண்டெப்பிறிதின்வேறொருசாட்சி, வேண்டுமோதனக்குமெய்தானுணப்பிற், புறத்தறச்சாயல்புகழப்பிறர்மெய்த், திறத்துளத்தம்மைதீயெனச்சுடச்சுடச், செறிவாய்மருளறத்தெளிந்துமெய்ம்மைகண், டறிவாரறப்பயனுசையுட்பட்டார். இதனுலன்றே வானுயர்தோற்றமெவன்செய்யுந்தன்னெஞ்சந், தானறிகுற்றப்படின் என்றாரன்றியும். — நீட்டியசடையமாகிநீர்மூழ்கிநிலத்திற்சேர்ந்து, வாட்டியவுடம்பின்யாங்கள்வரகதிவிழைச்சுமென்னிற், கட்டிடைக்காடிபோகிக் கயமூ[illegible]த்தாட்டுணின்றும், வீட்டினைவிளைக்கும்வெண்மெவெளிற்றுனாவிடுமினென்றான் — நுண்டுகில்வேகலஞ்சிநெருப்பகம்பொதிந்துநோக்கிக், கொண்டுபோய்மறையவைத்தாற்கொடுந்தழல்சுடாதுமாமோ, கண்டத்திறுவியார்தங்கடிமவனத்துறந்துகாட்டுட், பண்டவாவுளநீங்காமெதறபாவமோபரியுமென்றான். இங்ஙனேபுறத்தவ்வேடமன்றியுள்ளத்தூய்மையில்லாமுனிவர்க்குச்சிந்தாமணியிற்சீவகன்சொன்னன் — வானோர்புகழ்ந்துவணங்கியதுறவுந், தானோர்பயனில்தாராதகத்தழூஉ், காழுளமேமெனசெத்துளாத்தின், பேறுளதென்பதுபிழையோவென்பார். என்பதிவையுமித்தொடக்கத்தனபலவுஞ் சரிப்புறத்திணையாம் இவவாறேணைத்திணைவேண்டுளிப்பிரித்துக்கூறுக அன்றியும். கட்டனுமித்தகாண்ட மிராவணன்மந்திரப்படலத்திற்பராரத்தைச்சிறைசெய்ததின்னு வென்றவனைவிடத்துணியும்படிதேற்றப்பொருளாய்ப்பலவகைத்திணையும்புறத்திணையுங் கொண்டுரைத்தவாறுகாண்க. — ஓவியமமைந்தநகர்தீயுணவிளைத்தாய், கோவியல்பழிந்ததெனவேறொருநலந்தான், ரேவியையெயந்துசிறைவைத்தசெயனன்றே, பாவியருறும்பழியிதிற்பழியுமுண்டோ — என்றொருவனில்லுறைதவத்தியைபிரங்க, வன்றொழிலிருட்மறைந்துறந்துசிறைவைத்தா, யன்றொழிவதாயினவரக்கர்புகழையா, புன்றொழிலினுமிசைபொருந்தல்புலமைத்தோ. என்பதிவையும்பலவுமியல்பகத்திணையாம் — தூயவர்முறைமையேதொடங்குந்தொன்மையோ, ராய்வர்நிற்சமற்றவுணராதியாந், தீயவரத்திறற்றேவராயது, மாயமோவஞ்சமோவன்மையேகொலோ — அறந்துறந்தமரனைவென்றவான்றொழிற், திறந்தெரிந்திடலதுதானுஞ்செய்தவ, திறந்திறம்பாவகையியறறு நீர்மையன், மறந்துறந்தவர்தரும்வரத்தின்மாட்சியால் எனவிவைகாரணவகத்திணை — மூவரையென்றுமூவுலகுமுற்றுறக், காவலினின்றதுங்களிப்புங்கைமிகவீவதுமுடிவெனவித்தல்வல்லது, தேவரையென்றவர்யாவர்சீரியோர் எனபொதுவெனுமகத்திணை — விலைகவளைவென்றுமேல்விடுகெண்டவ, ரலையமொன்றியும்புதுமிவர்தந்தீமையான், மூவருமபருமுன்னும்பின்னரு, மவனயவர்திறத்திலையாவரற்றினார். எனவெதிர்மறையசத்திணை — கோனசர்முழுவதுநினதுகொற்றமுஞ், சானகியெனும்பெயருலகினம்மவனை, யானவள்கற்பினுல்வெந்தவல்லது, வானரஞ்சுட்டதென்றுணரன்மாட்சியோய். எனமுன்னவையசத்திணை — மீனுடைநெடுங்கடலிலங்கைவேந்தன்முன், னூனுடைநெடுந்தவந்தளர்ந்துசாய்வதோர், மானிடமடந்தையாலென்றன்வாய்மொழித், தேனுடையலங்கலாயின்றுதேர்தியால், என நூற்புறத்திணை — சொல்வரம்பெரிய மாமுனிவரென்பவர்சடந்துவஞ்சிலாதோ, ரல்வரம்பெரியதோளிருவருமமராரோடுலகம்யாவும், வெல்வரென்பதுதெரிந்தெண்ணினர்திருநர்வேர்முழுதும்வீயக், கொல்வரென்றுணர்தலாலவனைவந்தினியபேருறவுகொண்டார்எனப்புறநிலையசத்திணை இவ்வாறிங்ஙனமுரைத்தபலவுங்காண்க. அன்றியுஞ்சிந்தாமணியுட்சாரணர்சீவகற்குறுதிசொல்லித்துறவிற்சவன்றுணியும்பொருட்டுத்தேற்றப்பொருளாய்த்துறவில்-௱௬௰அஞ்செய்யுட்டொடங்கியுரைத்தபவெற்றைக்காண்க. அவற்றுள் பாற்கடற்பனிமதிப்பாவைத்தீங்கதிர், மேற்படமிகநனிசொரியதொப்பவே, நூற்கடன்மாதவனுனித்தநல்லறங், கோற்கடன்மன்னனுக்குரைக்குமென்பவே எனவெடுத்தபொருட்டொடர்ச்சியுரைத்தவாறு — அருமையினெய்துமியாக்கையுமியாக்கையி னிழிவுந், திருமைநீங்கியதுன்பமுந்தெளிபொருட்டுணிவுங், குருமையெய்தியகுணநிலைகொடைபெறுபயனும், பெருமைவீட்டொடுபேசுவல்சேளிதுபெரியோய்எனவனுரைப்பானெடுத்தபொருளை மேலேதொகுத்துக்காட்டின பின்னரீங்கேபிரித்துவகுத்தவாறுகாண்க. இனியப்பிரிவொன்றொன்றாய்ப் பலதிணைவகையா லுரைப்பதுகண்டுகொள்க — விண்டுவேய்நரலுன்விளைகானவரிடமுங், கொண்டுகூர்பனிகுலைத்திடுநிலக்களக்குறும்பு, முண்டுநீரொனவுரையினுமரியனவொருவி'மண்டுதீம்புனல்வளங்கெழுநாடெய்தலரிதே. ௱௪௰௪-முதற்பலவும்வகையகத்திணையானற்பிறப்பெய்தினல்லுடலெய்து மருமையைக்காட்டினவாறு — இன்னதன்மையினருமையினெய்தியபொழுதே, பொன்னுட்வெள்ளியும்புணர்ந்தெனவயிற்றகம்பொருந்தி, மின்னுமொக்குளுமெனநனிவிழினும்வீயும், பின்னெவஃகெனயிற்றிரண்டபின்பிழைக்கவும்பெறுமே. ௱௪௰௫-என்பதாதியேழுமுரைத்தபின் — தேங்கொள்பூங்கண்ணித்திருமுடித்திலகம்வண்குடையோ, யீங்கிதன்றியுமிமையவர்மையராய்ச்சடந்த' தாங்குமாவண்கைச்சக்கரமிக்குயர்பிறரும், யாங்களுரவரூரொடுபெயரொமக்குலையாய். எனவெட்டுச்செய்யுளானும் வகையகத்திணையானுடம்பாட்சி யுவமையகத்திணையானு முடனிலாமைக்காட்டினது — வெவ்விலைசெய்யுமாந்தருயிரொனுநிலத்தில்வித்தி, யவ்விலைவிளைவுளுண்ணுமவ்விடத்தாவதுன்ப, மிவ்வெனக்கிளத்துமென்றுநிலன்பினும்பிணிக்குமுள்ளஞ்செவ்விதிற்சிறிதுகூறக்கேண்மதிசெல்வவேந்தே. ௱௫௰௪-முதலாக-௱அ௰அ-ஈருகப்பாவத்தானரகத்தில்விளையுந்துன்பங்களைக்கன்முனவைத்தா

ற்போலச்சித்திரமுதற்பலவலங்காரவகையானும்பலதிணைவகையானும்விழுமியபொருளாயுரைத்தவா றுகாண்க. அங்ஙனமெடுத்தமற்றவற்றையுமியல்புவமைபுறநிலை முதலியதிணைகளால்விரித்தவாறுகண்டுகொள்க. எ-று. ( க )

## நான்காவது தொகையுந் துணிவும்.

( ௩௬௩-சூ. ) ஒருங்குமுன்விரித் துரைத்தவைமீண்டு, சுருங்கக்காட்டற்றொகையென்றாகும்

*எ-து.* நிறுத்தமுறையானேதொகையாமாறுணர்த்துதும் தன்பொருடோன்றப்பலகாரணவகையால் விரித்தவற்றை யீற்றின்கண்ணொருங்குடன் றொகுத்துக்காட்டல் தொகைவழியெனப்படும் ஆகையிற்பிரிந்த படையணிகூட்டிப்பகையைத்தாக்குவார்போலவுங் கலைவேதைத்துள்ளுருவக்கூர்முனைகூட்டுவார்போலவு மேற்றினகோபுரமழகுபெறமேற்சிகரம்பொருத்துவார்போலவும் பூங்காவனத்திற்பிரிக்துப்பூத்தபன்மலரொருசெண்டாகத்தொடுப்பவர்போலவுந் தானுநினைத்தபயனையடைதற்பொருட்டுப்பலதிணைவகையால் விரித்துக்காட்டியநியாயங்களொருப்படச் சுருக்கிக்கேட்போர்மனத்துள்ளுருவவுரைப்பதுதொகையெனக்கொள்க. இனியுதாரணங்காட்டுதும். எ-று. ( க )

( ௩௬௪-சூ. ) பன்மனந்துணியவுட்படுத்தறுணிவாங், துன்னியவணித்தொகைத்துணிவிற்குரித்தே.

*எ-து.* துணிவாமாறுணர்த்துதும் மேற்கூறியபடிவிரித்தவற்றைச் சுருங்கக்காட்டிவருகையிற் கருதியபயனையடையும்பொருட்டுமற்றவர்துணிவதற்சேர்பவுரைப்பதுதுணிவெனப்படும். ஆகையிற்குற்றத்தந்தம்பொருட்டுரித்தாகக்கேட்பவர் துயரத்திரங்கவுஞ்சினத்திவெரியவுந் தீமைக்கஞ்சவுமொன்றவனையொருவவு மற்றொன்றவனைமருவவுமல்லவை வெறுப்பவுநல்லவைவிரும்பவுமற்றைப் பற்றுதல்களைப்பிற்கேட்டோர் மனமேதன்வசமாக்கியுழுதுவித்தியபைங்கூழ்பழுத்துழிக்கொய்து தெளித்தசெந்நெல்கொள்வதுபோலப் பதிகமுதலியவழியாற்றேடியபயனைத்தருவது துணிவென்றுணர்க. ஆகையிலதற்கதற்சேரப மடக்குவினாவிபாவனைமுதலிய வலங்காரங்களொன்றன்மேலொன்றை யடுக்கிநடக்குந்துணிவெனக்கொள்க. சிந்தாமணி மேற்காட்டியதுறவிடத்துப்பலவற்றை விரித்துநெடிதாயுரைத்தபின்புதொகையாய்க்கூறியவாறு அல்லித்தாளற்றபோதுமறுதநாலதவனைப்போலத, தொல்லைத்தம்முடம்புநீங்கத்தீவினைதொடர்ந்து நீங்காப், புல்லிக்கொண்டுயிரைச்சூழ்ந்துபுக்குழிப்புக்குப்பின்னின்றெல்லையிறுன்பவெந்தீச்சுட்டெரித்திடுங்களன்றே— அறவியமனத்தராகியாருயிர்ச்சருளைச்செய்யிற், பறவையுநிழலும்போலப்பழவினையுயிரோடோடி, மறவியொன்றுமின்றிமனத்ததேசுரக்குநல்லோன், கறவையிற்கறக்குந்தன்னாற்காமுறப்பட்டவெல்லாம். எனவிவைபலவுமுரைத்துத்தொகையாய்க்கூறியவாறு — பொய்யொடுமிடைந்தபொருளாசையுருளாய, மைபடுவினைத்துகள்வழங்குநெறிமாயன், செய்தபொருள்பெய்த்கலஞ்செம்மைசுடுசெந்தீச், கைதவனுனித்தகவருடலொழிகென்றான். ௨௭௬௪-என்பதிவையும்பலவுங் கூறித்துணிவுவழங்கினவாறுகாண்க. அங்ஙனந் தேம்பாவணியிற்காமம்விளைவிக்குந்தீயவிவைக் காட்டியதவனைவிடற்குவாமனுக்குறுதிபலவற்றையும் பலதிணைவகையால்விரிவாய்க்கூறியபின்னர்த்தொகையுந்துணிவுமாகச்சொன்னவாறு — ஐம்பொறிப்பகைகண்டஞ்சி யடக்கவினைமைபோல்வாய், வெம்பொறிப்புதவையோர்ந்துவிவைபகைசிறிதெள்ளறண்ணல், பைம்பொறிப்பாந்தடங்கூர்ப்பல்படமதநீர்க்குன்றிற், செம்பொறிப்புகைக்கண்யாவனைச்சினந்தாயிர்மாளுமன்றே — பிரிந்ததென்றெழித்தபாவம்பெறுமிடத்தணுசெல்வேலோ, யரிந்ததென்றுறங்குமாசை யமைதியால்விழித்துக்கொல்லு, மெரிந்தநின்கமத்தீயையீற்றறவவித்ததென்றேனல், கரிந்ததென்றிருந்தபற்சார்கான்முகத்தெரியுந்தீயே — குலம்புரிகொடியபேய்கள்கோவலத்தொழிற்கருவிருழ்ந்து, சலம்புரிவலையைவைக்கத்தவரைப்படிற்பிரிதரொற்று. வலம்புரிதவத்திறைமவ்வலையுறாவிலகல்வேண்டுங், கலம்புரிபைம்பூமூழ்கிக்கதிர்த்தபொற்குன்றின்மார்போய், கச்சொன்றிட்டுணர்வொடுக்கங்கட்டிமெட்சகட்டையோட்டி, நச்சொன்றிட்டேதச்சேற்றுன்னல்இயிரச்சிற்றன்மற், றச்சொன்றிட்டுர்தறேற்றுதழும்பவிர்சண்டீர்நல்லோர், மெய்ச்சொன்றிட்டச்சிறுமுன்விடுறவூர்மின்பாகீர். என்பனபலவுந்தொகையுந்துணிவும் வந்தவாறுகாண்க. எ-று. ( க )

## ஐந்தாவதுரிமை.

( ௩௬௫-சூ. ) எப்பொருளெவ்வழியியம்பினுமதற்கதற், குரியவுரைப்பதுரிமையாங்கால, மிடம்பண்பொழுக்கிறையெனவைங்கூற்றே.

*எ-து.* உரிமையுமுரிமைவிகற்பமுமாமாறுணர்த்துதும். மேற்கூறியபதிகமுதலெவ்வழிக்கண்ணுமெவ்வகைவிழுமியபொருளை யுரைப்பினுமவற்றவற்றுரிமைவழுவாதுரைப்பது முறையெனக்கொள்க ஆகையிற்காலமுமிடமுங்குணமுமுலகொழுக்கமுஞ்சொல்லுமெனவைந்திணையும்பற்றிவருமுரிமையைவகைப்படுமெனக்கொள்க. ( இவற்றைத்தனித்தனிவிளக்குதும். ) எ-று. ( க )

## காலவுரிமை.

( ௩௬௬-சூ. ) காலமேபருவம்பொழுதெனவிரண்டாய்ப், பருவங்கார்கூதிர்பனிமுன்பின்வசந்த, மெரிமுதிர்வேனிலென்றிருமூன்றே.

*எ-து.* காலவுரிமையாமாறுணர்த்துதும் பருவமும்பொழுதுமெனக்காலமிருவகைத்தே அவற்றைப்பெரும்பொழுதெனவுஞ் சிறுபொழுதெனவுங் குறிப்பாரெனக்கொள்க அவற்றுட்பருவமறுவகைப்படும் அவையே கார்ப்பருவம் கூதிர்ப்பருவம் முன்பனிப்பருவம் பின்பனிப்பருவம் இளவேனிற்பருவம் முதிர்வேனிற்பருவம் எனவாறென்ப. அவையே யாவணிமுதலொவ்வொன்றிற்கிருமதியெல்

லையாகவருமெனக்கொள்க. அவற்றுளிளவேனிலெனினும்வசந்தமெனினுமொக்கும் ஆகையிலவ்வவப் பருவத்துரிமையையினிக்காட்டுதும். — இலக்கணவிளக்கம் — காரேகூதிர்முன்பனிபின்பனி, சீரிள வேனின்முதுவேனிலென்றுங், கிருமூன்றுதிறத்ததுபெரும்பொழுதவைதா, மாவணிமுதலாவிரண்டிரண்டாக, வாடியிறுதியவாயுங்காலே — அகப்பொருள்விளக்கம் — காரேகூதிர்முன்பனிபின்பனி, சீரிளவேனில்வேனிலென்றுங், கிருமூன்றுதிறத்தததெரிபெரும்பொழுதே. இவைமேற்கோள். எ-று. (க)

(௱சுஎ-சூ.) கார்க்காலத்துரிமைகார்க்காலிருட்டிய, வாடையேகோபமயிலேகேகயங், கோடல் செங்காந்தள்கொன்றைகூதாளங், தண்டிமிலுயவைதளவுகடம்பஞ்சனி, வெண்குருந்தவர்தலேவியங்கங்கிளிகுயில், னீங்கலேநீர்மலரோங்கலென்ப.

*எ-து.* கார்ப்பருவத்துரிமையாமாறுணர்த்துதும் வாடைவீசலுமிந்திரகோபமுமயிலுங்கேகயப்புள்ளுந் தோன்றிமகிழ்தலும் வெண்காந்தள்-செங்காந்தள்-கொன்றை-கூதாளம்-வேங்கைமரம்--காக்கணஞ்செடி-முல்லை-கடம்பு-காயா-குருந்தெனவிவையேமலர்தலு மன்னங்கிளிகுயிலகன்று வருதலுந் தாமரைமுதனீர்மலரோ யொளித்தலுங் கார்ப்பருவத்துரிமையெனப்படும். எ-று. (உ)

(௱சுஅ-சூ.) கூதிர்க்குரிமைகூதிரேகுருகே, வோதிமங்குரண்டமொண்மதிச்சகோர, முதுவலைஞெண்டேரூத்துவத்த, னீரேதெளிதனீர்மீன்சனித்தல், காரேசூற்கொளல்பாரிசாதஞ்சந், தாரம்பித்திகைமந்தாரநாணன், முற்றலர்ந்துவத்தலேமற்றுயிர்நைதலே.

*எ-து.* கூதிர்ப்பருவத்துரிமையாமாறுணர்த்துதும் கூதிர்க்காற்றுவீசலுங்குருகு மன்னமுங் கொக்குஞ்சகோரப்புள்ளுஞ் சங்குநண்டு நத்தையுமெனவிவைமகிழ்தலு நீரேதெளிதலு மீனினஞ் சனித்தலுமேகஞ்சூற்கொள்ளலும் பாரிசாதஞ்சந்தனஞ் சிறுசெண்பகஞ்செம்பரத்தை நாணலெனவிவைமலர்தலும் ஈண்டுக்கூறியவுயிரேயன்றி மற்றைப்பறவைவிலங்குமக்களொருங்குடன் வருந்தலுங்கூதிர்ப்பருவத்துரிமையெனப்படும். எ-று. (ங)

(௱சுகூ-சூ.) முன்பனிக்குரிமைதுன்பனிக்கடறுங், கொண்டல்வீசலுங்கூண்டசைசிதகன், மண்டிருட்கூகைகூன்மனமகிழ்ந்தொலித்தலு, மாந்தருஞ்சாமந்தமலர்தலுமிலந்தை, தீங்கனிபுதிர்தலுந்தியெனக்குன்றி, காய்த்தலுநெல்லொடுகரும்புமுற்றலுமாம்.

*எ-து.* முன்பனிப்பருவத்துரிமையாமாறுணர்த்துதும். கொண்டற்காற்றுவீசலுந் தூக்கணாங்குருவியுங் கூகையுமாந்தையு மெனவிவைமகிழ்தலும் வுஞ் சிவந்தியுமலர்தலு மிலந்தைப்பழுத்தலுங்குன்றிக்காய்த்தலுஞ் செந்நெல்விளைதலுங் கரும்புமுதிர்தலு முன்பனிப்பருவத்துரிமை யெனப்படும். எ-று. (ச)

(௱எ௰-சூ.) பின்பனிக்குரிமைபேசுங்காலை, யுலைவீசலேயுளபலபுறவினம், வலிதுகூய்க்கானவாரணங்களித்தலே, கோங்கிலவலர்தலே குரவநெடும்பலை, தீங்கனியுதவலேசிதப்பரிவெடித்தலே.

*எ-து.* பின்பனிப்பருவத்துரிமையாமாறுணர்த்துதும். உலவைக்காற்றுவீசலும்பலபுறவினமுங்கானக்கோழியு மெனவிவைமகிழ்தலுங் கோங்குமிலவும்பூத்தலும்பேரீந்து பலவுமென்றிவையேபழுத்தலும் பருத்திவெண்சுளைவெடித்தலும் பின்பனிப்பருவத்துரிமை யெனப்படும். எ-று. (ரு)

(௱எக-சூ.) வசந்தத்துரிமைவசந்தற்றேறொனூர், தென்றலேவண்டினஞ்சிறுகிளிபூவை, யன்றிலேகுயிலிவையகமகிழ்ந்தார்த்தலே, மாங்கனியுதிர்தலேதேங்கயமலரொடு, வகுளந்தாழைவழைசெண்பகம்பிற, முகிழினிதவிழ்த்தலேமுன்காரிடைக்களி, மிகுவன்மயின்முதன்மெலிதலேயென்ப.

*எ-து.* இளவேனிற்பருவத்துரிமையாமாறுணர்த்துதும். மன்மதன்றேராகியதென்றல்வீசலும்பலவண்டினமுங் கிளியும்பூவையுமன்றிலுங் குயிலுமெனவிவைமகிழ்தலுமாங்கனி யுதிர்தலுநீர்மலரன்றிமகிழ்தாழைபுன்னை செண்பகம்பலவுமலர்தலுங் கார்ப்பருவத்துமகிழ்ந்தகோபங் கேகயப்புண் மயிலிவையே மெலிதலுமிளவேனிற்பருவத்துரிமை யெனப்படும் எ-று. (சூ)

(௱எஉ-சூ.) வேனிற்குரிமைசானிற்றுசெழக், கோடையேவீசக்குறுசப்பேய்த்தேர், காடையேவலியான்கம்புள்காகஞ்,சிரவமொலித்தல்புருண்டிசிந்துரம்பாடலம்பூத்தல்பாலைக்கனியொடு, கோடரநாவல் குலிகங்காய்த்த, னீரலகன்மற்றுயிர்சீரலகிச்சோரலே.

*எ-து.* முதிர்வேனிற்பருவத்துரிமையாமாறுணர்த்துதும். எங்குந்தூசெழும்படிகோடைகாற்றுவீசலுங் கானற்றேன்றலுங் காடையும்வலியானும் வானம்பாடியுங் காகமுங்கவுதாரியுமென விவைமகிழ்தலும் மல்லிகை புளிபாதிரி யென்றிவைபூத்தலும்பாலைகாஞ்சிரம்நாவலிலுப்பையென்றிவைக்காய்த்தலுநீரேகுறுகலும் ஈண்டுக்கூறியவுயிரேயன்றி மற்றெல்லாங்குழைந்து சோரலும்பூவுலகழகு குன்றவருமுதிர்வேனிற் பருவத்துரிமையெனப்படும் ஆகையிலவ்வவப்பருவத்திம்முறைவழுவாதுசாத்தல் பருவத்துரிமையெனப்படும். இவ்வாறன்றியொன்றற்குரியன பிறிதொன்றற்குரைப்பது பருவமலைவாம். [உ-ம்.] வெண்பா. வளைவாய்கனித்துமயிலகைவத்தாழை, களைவாய்முகைத்துக்கமழ, விளைவாய்த், தளவே முகைநெகிழத்தன்கொன்றைபூப்ப, விளவேனில்வந்துவிற்றின்று. இதனின்மயில்களித்தலு முல்லைகொன்றை யென்றிவைபூத்தலுங் கார்ப்பருவத்திற்குரியனவாகி யிளவேனிற்பருவத்துரியனவாகத் தோன்றப்புணர்த்தமையாற் பருவமலைவாயிற்று. பிறவுமன்ன. ஆயினுமடுத்தபருவத்துரியன வொன்றிரண்டொரோவிடத்து விரவிமயங்கினும் வழுவன்றெனக்கண்டுணர்க. அங்ஙனம். கம்பன் கிஷ்கிந்தாகாண்டக்காரகாலப் படலத்துக்கார்கூதிரென்றிரு பருவத்துக்குரியனசிலவற்றை மயங்கவைத்தவாறு காண்க. நடைதத்தோவெனி லிளவேனிற்படலத்திற்சொன்னதாவது. விருத்தம். கள்ளுயர்த்தலருமுல்லைக்கடிமுகைமுறுவலேன்ற, வள்ளிதழ்க்குவளையுண்கண்மலர்ந்துமாந்தளிர்மென்கையாற், கிள்ளைமென்கு

தவிசாற்றிச்சிளரொளிவண்டுபோனற், றெள்விளிப்பாடவேனிற்றிருமகள்சிறந்ததன்றே. மீளவும் அரவமேகலையாயிழையார்க்குயர், குரவம்பாவைகொடுத்தகொழுதியென், முருகுலாமளி மொய்த்தகடம்பினம், பரிவினுடலெண்பந்துகொடுத்தவே. என்பனவற்றுள்ளே முல்லையுங் கடம்புங் கார்ப்பருவத்துரியமலரா கையில்லவேனிற் பருவத்தலர்ந்தனவாகக்கூறியமையாற் பருவமலைவாயிற்றென்மனார் புலவர். ஆகையிவ்வகைவழுவாராமற்காத்தலறிவோர்கடனெனக்கொள்க. எ-று. ( ௭ )

( ௱௪௩-சூ. ) பொழுதுணமாலைக்கெழுயாமம்வைகறை, யெற்றேற்றநண்பகலெற்பாடெனவாரே, மாலைக்குரிமைமலர்தலிற்பலம்புள், சோலைசேர்ந்தொலித்தல்சுரபிகளைத, முன்னடைத்தாமரைசுளித்தெனக்கூம்பல், கன்னடங்காம்போதிகனியப்பாடலே, யாமத்துரிமையாகரிபாடலே, யூமன்சகோரமுவரியுவத்தலே, காமமகினதங்கரவென்றிவையே, வைகறைக்குரிமைவாரணங்கூவன், மெய்யெனக்கனவுறன்மீனொளிசுன்றல், வாமமீனுதித்தன்மாதவர்வாழ்த்த, லிராமகலியுடனிந்தோளம்பாடலே, விடியற்குரிமைவிலங்கொடுமற்றுயிர், கடிமகிழ்ந்தெழுச்சிகொண்டுகமலம், விரிபூமலர்தல் வெண்பனிதுளித்த, லறிபூபாளந்தேசாட்சிபாடலே, நண்பகற்குரிமைநயத்தல்சோகம், வெண்டேரோடன்மேதிநீராடல், பண்டிசைசாரங்கம்பாடலென்பவே, வெற்பாட்டுரிமைவெற்பாணிழனீளல், வானஞ்சிவத்தன்மறியினங்குதித்தல், கானமாய்க்காபிசலியாணிபாடலே

*எ-து.* சிறுபொழுதுரிமையாமாறுணர்த்துதும். ஒளிபோயிருளேபுகும்பொழுதாதியொவ்வொருபொழுதிற்கைந்துநாழிகையெல்லையாகமாலையும் யாமமும்வைகறையும்விடியலுமுச்சிப்பகலுமெற்பாடுமெனவறுபொழுதிவையெனப்படும். எற்றேற்றமெனினும் விடியலெனினுமொக்கும் இவற்றுட்குவளைமலர்தலும் புள்ளினஞ்சோலைகடோறுமடைந்து கலகலெனப்பெரி தொலித்தலும்பசுமுதற்சுறவைகள் கன்றையுள்ளிக்கனைந்து வருதலுந்தாமரைகூம்பலும் கன்னடங்காம்போதியெனவிசிராகம்பாடலு மாலைப்பொழுதிற்குரிமையெனப்படும். ஆசிரியராகம்பாடலுங் கூகையோடுசகோரமகிழ்தலும் பெருங்கடலுவந்தெனப்பொங்கலுங் காமமுழுதொலி யின்மையுங்களவுமென்றிவை மிகுதலும் யாமப்பொழுதிற்குரிமையெனப்படும் சேவற்கூவலு மெய்போற்றெளிந்தகனாத்தோன்றலும் வான்மீனொளியே மறைதலும் வெள்ளிமீனுதித்தலுமாதவரெழுந்துதேவவாழ்த்துரைத்தலுமிராமகலியிந்தோளமென வீசிராகம்பாடலும்வைகறைப்பொழுதிற் குரிமையெனப்படும். விலங்குபறவைமக்கள் முதலியவுயிரெலாமகமலர்ந்துவத்தலும் பூங்காவனத்துள் பூண்டுப்பூகொடிப்பூ கோட்டுப்பூ வன்றியும் நீர்ப்பூவகையுட்கமலமலர்தலும்பூபாளந்தேசாட்சியெனவிசிராகம்பாடலும்விடியற்பொழுதிற்குரிமையெனப்படும். சக்கரவாகப்புள்மகிழ்தலுஞ்சானலெனும் பேய்த்தேரோடலு மெருமைகள் நீரிற்பாய்ந்து கிடத்தலுஞ் சாரங்காகம்பாடலு முச்சிப்பொழுதிற்குரிமையெனப்படும். மலைமுதனிழலெல்லாநீளலும் வானஞ்சிவத்தலும் பல்வகையாட்டுக்குட்டிகள் குதித்தலுங்காபிகலியாணியெனவிசிராகம்பாடலு மெற்பாட்டுப்பொழுதிற்குரிமையெனப்படும். ஆகையிவ்வப்பொழுதிற்குரியவை தோன்றமுறைவிடாதுரைப்பது பொழுதெனுங் காலவுரிமையாம். இவ்வாறன்றி யொன்றற்குரிய பிறிதொன்றிற் றோன்றக்கூறல் பொழுது மலைவாம். வெண்பா. செங்கமலம்வாய்குவியத்தேங்குமுதங்கண்மலர, வெங்குநெடுவான்மீனிமைப்பப், பொங்குதையத், தோராழித்தேரோனெழிலாலுவந்ததே, நீராழிசூழ்தநிலம். இதிற்றாமரைகுவிதலுங்குமுதமலர்தலும் வான்மீன்றோன்றலு மாலைக்குரியனவாதலிக்காலைக்குரியனவாகவுரைத்தமையாற்பொழுதுமலைவாயிற்று. பிறவுமன்ன. ஆயினுமொரோவிடத்துச் சிறப்பித்துரைத்தபொருட்கலங்காரமாக விவ்வாறுரைப்பினுஞ்சிறப்பெனக்கொள்க. [உ-ம்.] வெண்பா. மண்டபத்துமாணிக்கச்சோதியால்வாவிவாய்ப், புண்டரிகமாலைப்பொழுதலருந், தண்டரளத், தாமஞ்சொரியுந்தகைநிலவான்மெல்லாம்பல்,பூமலருங்காலைப்பொழுது. இதனுட்டாமரைமாலையின்மலர்ந்ததாகவுங்குமுதங்காலையின்மலர்ந்ததாகவும் பொழுதுரிமைமாறியுரைத்ததாயினுஞ் சிறப்பலங்காரமாயிற்று பிறவுமன்ன — இலக்கணவிளக்கம். — மாலையாமம்வைகறையென்று, காலைநண்பகலெற்பாடென்று, வறுவகைத்தென்பசிறுபொழுதவைதாம், படுசுடர்மையந்தொடங்கியவிரா, கடிகையளவையகாணுங்காலே. — அகப்பொருள்விளக்கம். — அவற்றுள், கூதிர்யாமமுன்பனியென்றிவை, யோதியகுறிஞ்சிக்குரியவாகும் — வேனிலன்பகல்பின்பனியென்றிவை, பான்மையினுரியபாலைதனக்கே — மல்குகார்மாலைமுல்லைக்குரிய — இருள்புலர்காலைமருதத்திற்குரித்தே — வெய்யோன்பாடு நெய்தற்குரித்தே — மருதநெய்தலென்றிவையிரண்டற்கு, முரியபெரும்பொழுதிருமூன்றும்மே. இவைமேற்கோள். எ-று ( ௮ )

இடவுரிமை

( ௱௪௪-சூ. ) குறிஞ்சிபாலைமுல்லைமருத, நெய்தலைந்திணைக்கெய்தியபெயரென, வரையேசுரமே புறவேபழனம், திரையேயவையவைசேரிடந்தானு, நிரையேயைந்திணைநிலமெனப்படுமே

*எ-து.* நிறுத்தமுறையானேயிடவுரிமையாமாறுணர்த்துதும். இடவகுப்பினுள் முதல்வகுப்பாகக் குறிஞ்சிபாலைமுல்லைமருதநெய்தலெனவிவையைந்திலமெனவுமைந்திணையெனவும்வழங்கும்இவற்றுள் மலைபுமலைசார்ந்தவிடமுங்குறிஞ்சி-சுரமுஞ் சுரஞ்சார்ந்தவிடமும்பாலை-காடுங்காடுசார்ந்தவிடமுமுல்லை-வயலும்வயல்சார்ந்தவிடமுமருதம்-கடலுங்கடல்சார்ந்தவிடமுநெய்தமென்றுவகுத்தார்புலவரென்றறிக. — அகப்பொருள்விளக்கம். — வரையேசுரமேபுறவேபழனம், திரையேயவையவைசேர்தருமிடனே, யெனவிணைவகைத்தவணியிலவே-எ-து. மேற்கோள் இவற்றுளொவ்வொருதிணைக்குவேறுகச்சிலபொருள்வகுத்தவை கருப்பொருளென்றுரைக்கற்றோர் ( இவைவருமவாறு ) எ-று. ( ௧ )

( ௱௪௫-சூ. ) தெய்வஞ்செல்வர்சேர்குடிபுள்விலங், கூர்நீர்பூமரமுணாப்பறையாழ்பண், டொழிலே

னக்கருவிமொழுவகைத்தாகும்.

*எ-து.* கருப்பொருளென்பவையிவையெனவுணர்த்துதும். தெய்வமுந் தலைவனொடு தலைவியுங் குடியும்பறவையும் விலங்குமூருநீருமலருமரங்களும் விளையுமுணவும் பறையும்யாழுமிசைப்பாட்டுந் தொழிலுமெனச்சொல்லப்பட்டபதினான்குகருப்பொருளொவ்வொருதிணைக்குவேறுவேறுகவுளவென வகுத்தார்கற்றோர் இவற்றுளோரிடமெல்லையுளடங்கா வெவ்விடத்துமெக்காலத்துமமைந்துலகு மமைத்துயிருந்தானுளவாக்கவு நிலையினிறுத்தவு முழுதறவொழிப்பவும்வல்லவொருமெய்க்கடவுளன்றிக் குறுங்கோற்றேவராகப் பலரிலவொன்றுமெய்ம்மறைநாலாலறிவோமாயினு மிந்நாட்டிருள்வழிவழங் குமுறையைச்சொல்லிக்காட்டுதும்.—இலக்கணவிளக்கம் — ஆரணங்குயர்ந்தோரல்லோர்புள்விலங், கூர்நீர்பூமரமுணப்பறையாழ்பண், டொழிலெனக்கருவிமொழுவகைத்தாகும், எ-து. மேற்கோள். (உ)

(ராஎசு-சூ.) குறிஞ்சிக்கருப்பொருள் குமரன்றெய்வமே, வெறியணிப்பொருப்பன் வெற்பன்சிலம்பன், குறத்திகொடிச்சி குறவர்கானவர், குறத்தியர்கிளிமயின் மறப்புலிகுடாவடி, கறையடிசியஞ் சிறுகுடியருவி, நறுஞ்சுனைவேங்கை குறிஞ்சிகாந்த, ளாரந்தேக் ககில்சோகநாகம், வேரலையனந் தோரையேனல், கறங்கிசைத்தொண்டகங் குறிஞ்சியாழ்குறிஞ்சி, வெறிகொளைவனம் வித்தல்செறிகுரற், பைந்தினைகாத்தல் செந்தேனழித்தல், செழுங்கிழங்ககழ்தல் கொழுஞ்சுனையாடலே.

*எ-து* குறிஞ்சிக்கருப்பொருளாமாறுணர்த்துதும். குமரன்றெய்வமே - பொருப்பனும்வெற்பனுஞ் சிலம்பனுங்குறத்தியுங் கொடிச்சியுந்தலைவனொடுதலைவியே - குறவருங்கானவருங் குறத்தியருங் குடியே-கிளியுமயிலுமுரியபறவையே - புலியுங்கரடியும்யானையுஞ்சிங்கமும்விலங்கே - சிறுகுடியூரே-அருவியுஞ்சுனையுநீரே - வேங்கையுங்குறிஞ்சியுங்காந்தளுஞ்சந்தனமுந் தேக்குமகிலுமசோகும் புன்னையுமலரேமரமே - மூங்கினெல்லுமைவனநெல்லுந்தோரைநெல்லுந்தினையுமுணவே - தொண்டகம்பறையே- குறிஞ்சியாழ்யாழே - குறிஞ்சிபிசைப்பாட்டே - வெறிகொள்ளலும் ஐவனம்விதைத்தலும் பைந்தினைகாத்தலுந்தேனையழித்தலுங் கிழங்குதோண்டலுஞ் சுனையிற்குளித்தலுந்தொழிலே - எனவிப்பதினால்வகையுங் குறிஞ்சிக்கருப்பொருளாமெனக்கொள்க. எ-று. (ங)

(ராஎஎ-சூ) பாலைக்கருப்பொருள் பகவதிதெய்வமே, காளைவிடலை மீளியெயிற்றி, யெயினரெயிற்றியர் மறவர்மறத்தியர், புறுப்பருந்தெருவை செந்நாய்குறும்பு, குழிவறுங்கூவல் குராஅமராஅ, வுழிஞைபாலை யோமைபிருப்பை, வழங்குசதிகொண்டன செழும்பதிகவர்ந்தன, பகைத்துடிபாலையாழ் பஞ்சுரம்வெஞ்சமம், பகலிற்சூறை பரிவெழுந்தாடலே

*எ-து* பாலைக்கருப்பொருளாமாறுணர்த்துதும். காளிதெய்வமே-காளையும்விடலையுமீளியுமெயிற்றியுந் தலைவனொடுதலைவியே-எயினருமெயிற்றியரு மறவருமறத்தியருங்குடியே - புறாவும்பருந்துங்கழுதும்பறவையே - செந்நாய்விலங்கே-குறும்புதானூரே - கேணிநீரே - குராவுமராவுஞ்சிறுபூளையும் பாலையுமாவுங்கள்ளியு மலரேமரமே - ஓடிவழியிற்பறித்தனவும் புக்குமறுநன்னாட்டிற்றிருடினவு முணவே - துடிபறையே - பாலையாழ்யாழே - பஞ்சுரமும்வெஞ்சமமுமிசைப்பாட்டே - பகற்சூறைகுளித்தறொழிலே - எனவிப்பதினால்வகையும்பாலைக்கருப்பொருளாமெனக்கொள்க. எ-று. (ச)

(ராஎஅ-சூ) முல்லைக்கருப்பொருண் முராரிதெய்வமே, தோல்லைக்குறும்பொறை நாடன்றோன்றன், மடியாக்கற்பின் மனைவிகிழத்தி, யிடையரிடைச்சிய ராயராய்ச்சியர், கானவாரண மான்முயல்பாடி, குறுஞ்சுனைகான்யாறு குல்லைமுல்லை, நிறங்கிளர்தோன்றி பிறங்கலர்ப்பிடவங், கொன்றைகாயா மன்றலங்குருந்தந், தாற்றுச்சதிர்வரகு சாமைமுதிரை, யேற்றுப்பறைமுல்லை யாழ்சாதாரி, சாமைவரகு தரமுடன்வித்த, லவைகளைகட்ட லரிதல்கடாவிடல், செவிகவர்கொன்றைத் தீங்குழலூதன், மூவினமேய்த்தல் சேவினந்தழுவல், குரவையாடல் குளித்தல்கான்யாறே.

*எ-து* முல்லைக்கருப்பொருளாமாறுணர்த்துதும். விட்டுணுதெய்வமே-குறும்பொறைநாடனுந்தோன்றலுங் கற்பின்மனைவியுங்கிழத்தியுந்தலைவனொடுதலைவியே - இடையருமிடைச்சியருமாயருமாய்ச்சியருங் குடியே-காட்டுக்கோழி புள்ளே-மானுமுயலும் விலங்கே-பாடி யூரே - குறுஞ்சுனையுங்கான்யாறு நீரே-துளசியுமுல்லையுங்காந்தளுங்கொன்றையுங்காயாவுங்குருந்தமு மலரேமரமே - வரகுஞ்சாமையுங்காராமணிப்பயறு முணவே-பம்பைப் பறையே-முல்லையாழ் யாழே-சாதாரி பிசைப்பாட்டே - சாமைவரகுவிதைத்தலுமவற்றின்களை களைக்கட்டலுமவற்றையறுத்தலுங் கடாவிட்டவற்றைத் தெழித்தலுங் கொன்றையங்குழலூதலும் பசுமுதல்மூவினமேய்த்தலு மிடபந்தழுவலுங் குரவையாடலுங்கான்யாறுகுளித்தலுந்தொழிலே-எனவிப்பதினால்வகையு முல்லைக்கருப்பொருளாமெனக்கொள்க. (ரு)

(ராஎகூ-சூ.) மருதக்கருப்பொருள் வாசவன்றெய்வமே, விருந்தமையூரன் வெண்டார்கிழவன், கெழுதகுகற்பிற் கிழத்திமனைவி, யுழவருழத்தியர் கடையர்கடைச்சியர், மழலைவண்டான மகன்றினை, யன்னம்போதா நன்னிறக்கம்புள், குருகுதாரா வெருமைநீர்நாய், பெருகியசிறப்பிற் பேரூர்மூதூர், யாறுமனைக்கிணறிலஞ்சிதாமரை, நாறிதழ்க்கழுநீர் நளிமலர்க்குவளை, காஞ்சிவஞ்சி பூஞ்சினைமருதஞ், செந்நெல்வெண்ணெ லந்நெல்லரிகிணை, மன்றன்முழவ மருதயாழ்மருத, மன்றணிவிழாக்கொளல் வயற்களைகட்ட, லேறுயதல்கடாவிடல் பொய்கையாறாடலே.

*எ-து.* மருதக்கருப்பொருளாமாறுணர்த்துதும். இந்திரன்றெய்வமே-ஊரனுங்கிழவனுங்கிழத்தியுமனைவியுந் தலைவனொடுதலைவியே-உழவருமுழத்தியருங் கடையருங்கடைச்சியருங் குடியே - கொக்குமன்றிலு நாரையுமன்னமும் போதாவுங்கம்புளுங்குருகுந்தாராவும் பறவையே-எருமையுநீர்நாயும் விலங்கே-பேரூருமூதூரு மூரே-யாறுநீரே - மிழுந்தாமரையுங்கழுநீருங்குவளையுங்காஞ்சியும் வஞ்சியுமருதமு

மலரோமரமே-செந்நெல்லும்வெண்ணெல்லும் முணவே-கிணையுமணப்பறையும் பறையே-மருதயாழ் யாழே-மருத மிசைப்பாட்டே - திருவிழாவழங்கலும் வயலிற்களைகட்டலுநெல்லையரித்தலுந் தெளித்தலுங்குளநீராடலும் யாற்றுநீர்குளித்தலுந் தொழிலே - எனவிப்பதின்முன்கு மருதக்கருப்பொருளாமெனக்கொள்க. எ - று. (௬)

(௱௮௰-சூ) நெய்தற்கருப்பொருணீராள்வருணனே, மொய்திரைசேர்ப்பன்முன்னீர்புலம்பன், பரத்திநுளைச்சி பரதர்பரத்தியர், நுளையர்நுளைச்சிய ரளவரளத்தியர், சாக்கைசுறவம் பாக்கம்பட்டின, மூவர்நீர்க்கேணி கவர்நீர்நெய்தல், கண்டகக்கைதை முண்டகமடம்பு, கண்டல்புன்னை வண்டிமிர்ஞாழல், புலவுமீனுப்பு விலைகளிற்பெற்றன, நளிமீன்கோட்பறை நாவாய்ப்பம்பை, விளரியாழ்செவ்வழி மீனுப்புப்படுத்த, லுணக்கல்விற்றல் குணக்கடலாடலே.

*எ-து.* நெய்தற்கருப்பொருளாமாறுணர்த்துதும். வருணன் றெய்வமே - சேர்ப்பனும்புலம்பனும்பரத்தியுநுளைச்சியுந் தலைவனுந்தலைவியே - பரதரும்பரத்தியருநுளையருநுளைச்சியருமளவருமளத்தியருங் குடியே-கடற்காக்கைப்பறவையே-சுற விலங்சே-பாக்கமும்பட்டினமு மூரே-உவர்நீர்க்கேணியுங்கடலு நீரே-தாழையுமுட்செடியுமடம்புமுள்ளிச்செடியும் புன்னையுங்கோங்கு மலரே மரமே-புலவுமீனுமுப்பும்விற்றுக்கொண்டனவு முணவே - மீனுங்கோட்பறையும்பம்பையும் பறையே-விளரியாழ் யாழே-செவ்வழியிசைப் பாட்டே-மீனுப்புப்படுத்தலுமீனையுணக்கலு முணங்கியவற்றைவிற்றலுங் கடனீர்குளித்தலுந் தொழிலே-எனவிப்பதினால்வகையு நெய்தற்கருப்பொருளாமெனக்கொள்க. ஆகையிலிவையுமித்தொடக் த்தனபலவு மொவ்வொருநிலத்திற்குரியவாகி யொன்றன்பொருண்மற்றொன்றற்குரையாதுமுறையைக்காப்ப திடவுரிமையெனப்படும். எ-று. (௭)

(௱௮௧-சூ.) இடமெனப்படுவது மலைநாடியாறே.

*எ-து.* மற்றொருவகுப்பிடவுரிமையாமாறுணர்த்துதும். மேற்கூறியவைந்திணை வகுப்பன்றி மலையுநாடும்யாறுமென மற்றொருமூவகைப்படுமிடமெனக்கொள்க இவற்றுட் பொதியமுமிமயமுமுதலியமலைகளேமலையு மகதமுதற்பதினெண்பாடைநிலங்களேநாடுங் - கங்கையும்பொருநையுங் காவிரிமுதலியயாறுகளே யாறுமெனக்கொள்க. இவற்றுளொன்றன்பொருண் மற்றொன்றினுளவாகச்சொல்லாததற்கதற்குரியவற்றைத் தந்துரைப்பதுரிமையெனப்படும். இவ்வாறன்றிப் பொன்மலைச்சந்தனமெனவுந் தென்மலைமதகரியெனவும் பொதியிற்குரியனபொன்மலைக்கண்ணுளவாகவும் பொன்மலைக்குரியன பொதியின்கண்ணுளவாகவு முரைப்பின் மலையெனுமிடவழுவாமெனக்கொள்க. பிறவுமன்ன அங்ஙனமொவ்வொரு மலைநாடியாறுகட்கு முரிமையைத்தமிழ்நாலிடத்துக்காண்க. ஆயினுமொன்றனைப்புகழுமிடத்திவ்வுரிமைமாறி யில்லனவுமுளவெனப்புனைந்துரையாகச்சொல்லினும் வழுவென்றிகழாதலங்காரமென்றுகொள்பவர் முற்றறிவுடையோரெனக்கண்டுணர்க — தண்டியலங்காரம் — இடமெனப்படுவதுமலைநாடியாறே. எ-து மேற்கோள். எ-று. (௮)

பண்புரிமை.

(௱௮௨-சூ.) பண்பெனச்சாதியும் பற்றலுமளவையும், வண்ணமும்பலவும் வகுத்தனர்புலவர்.

*எ-து.* நிறுத்தமுறையானேபண்புரிமையாமாறுணர்த்துதும். ஈண்டுப்பண்பெனுஞ்சொல்லால வனவன்பிறந்தசாதியுநெஞ்சிற்பற்றியபற்றுதலு நால்வகையளவு மைவகைவண்ணமு மறுவகைச்சுவையு மேழுவகையிசையு மெண்வகையூறுமுதலியபலவும் வரப்பெறும் (இவற்றையினித்தனித்தனிவிளக்குதும்) எ-று. (௧)

சாதித்தொழிலுரிமை.

(௱௮௩-சூ.) வன்னியர்மன்னர் வணிகர்சூத்திர, ரென்னிவர்நால்வர்க் கியல்வனவுரைக்கி, லோதற்றொழிலுரித் துயர்ந்தோர்மூவர்க்கு, மல்லாதகல்வி யெல்லார்க்குமுரித்தே.

*எ-து.* நிறுத்தமுறையானேசாதியுரிமையாமாறுணர்த்துதும். ஆகையில் அந்தணரரசர்வணிகர்சூத்திரரென விந்நாட்டில்வழங்குமுயர்சாதியிற் பிறந்தநால்வராகி மற்றவரிழிந்தோரெனப்படுவரென்பனார்க, இந்நாட்டுவழக்கம்பற்றி யவ்வச்சாதிக்குரியதொழிலைவிளக்குதும், ஆகையிலுவினுற்கற்குந்தொழிலுள்வேதத்தை யோதியுணர்தலந்தணரரசர்வணிகரென மூவர்க்குமுரித்தேயொழிய சூத்திரர்க்குத்தகாதெனவும் வேதநூலொழித்தொழிந்தகல்வியாவையு முணர்தனால்வர்க்குமுரித்தெனவுங் கூறுவாரெனக்கொள்க, ஆயினும்வாயாலுணப்படு முடற்குணயார்க்கும்பொதுமையவாகைபிற் காதாலுணப்படுமுயிர்க்குணவாகியமெய்ம்மறையோதல் சிலர்க்குவிலக்கல்கொடுமையன்றே மீளவுமறையேபரகதிவழியைக்காட்டுவதாகையில் அவைவரும்பொதுப்படவக்கதிக்குரியராகப் பிறந்தபின்னரவ்வழியுணர்தல்பொதுமைத்தன்றெனவிதிப்பதுரிறையோ ஆகையில்—வெண்பா — பூரியர்க்கோதன்மின்பொய்யாமறையென்பா, ராரியராய்த்தாங்கண்டறியாரோ, பேரலையு, மொய்மணலொர்கானசமுமுட்கடமுநீர்மல்கப், பெய்முகில்வான்பின்றுச்சிறப்பு. — கற்றொத்தொழுகார்க்குக்காசறுத்தவேதநூல், சொற்றற்கமென்பார்க்குத்தோன்றுதோ, பற்றற்ற, காவியுநீலமுநீவிக்கதிர்க்கையான், மேவியவிண்வேந்தனன்பு. என்றார் மெய்ம்மறையாசாரியனார்—இலக்கணவிளக்கம்—ஓதற்றொழிலுரித்துயர்ந்தோர்மூவர்க்கும் — அல்லாக்கல்வியெல்லார்க்குமுரித்தே. இவைமேற்கோள் எ-று. (௨)

(௱௮௪-சூ.) படைக்கலம்பயிறலும்பகடாதியூர்தலு, முடைத்தொழில்பின்மூவர்க்குரைத்திசினோரே.

*எ-து.* இதுவுமது படைக்கலங்களைவீசியெறிந்தேயதஃகிச்செய்தொழிற்கற்றலும் யானையுங்குதிரையுந்தேருமேறியூர்தலுமாக நாவினாற்சற்குந்தொழிலல்லாததொழில்க ளந்தணரொழித்தொழிந்

தமூவர்க்கு மூரியவென்பார் — இலக்கணவிளக்கம் — படைக்கலம்பயிறலும்பகடுபிறவூர்தலு, முடைத்தொழில்வர்க்கெனவுரைத்திசினேரோ. எ-து. மேற்கோள் எ-று. (ங)

(௱அரு-சூ.) அறப்புறங்காவ லவனிவர்க்குமுரித்தாய், மற்றைக்காவல் கொற்றவர்க்குரித்தே.

*எ-து.* இதுவுமது அறப்புறங்காவலென்றும் நாடுகாவலென்றுங் காவலிருவகைப்படும். இவற்றுளறப்புறங்காவலே நால்வர்க்கும்பொதுமைத்தாகி நாடுகாவலரசர்க்குரித்தெனக்கொள்க — இலக்கணவிளக்கம் — அவற்றுள், அறப்புறங்காவலவனிவர்க்குமுரித்தே. — மற்றைக்காவல்கொற்றவர்க்குரித்தே. இவைமேற்கோள் எ-று. (ச)

(௱அசு-சூ.) வேதமாந்தர் வேந்தரொன்றிருவர்க்குந், தூதுபோதற்றொழி லுரித்தாகும்.

*எ-து.* இதுவுமது வேற்றரசர்கட்குத்தூதுரையுரைக்கப்போத லந்தணர்க்குமரசர்க்குமுரித்தெனக்கொள்க.. எ-று. (ரு)

(௱அஎ-சூ.) சிறப்புப்பெயர்பெறிற் செப்பியவிரண்டு, முதற்குரியமரபின வொழிந்தோரிருவர்க்கும்.

*எ-து.* இதுவுமது அரசனாற்சிறப்புப்பெயரைப்பெற்றவராயின வணிகர்சூத்திரரென்னு மிருவர்க்குநாடுகாவற்றொழிலுந் தூதுபோதற்றொழிலுமுரியனவெனக்கண்டுணர்க. ஆகையிற்சொல்லப்பட்டதொழில்களு மித்தொடக்கத்தனபலவு மொருவர்க்குரியனவாகி மற்றொருவர்க்குரியனவாகக்கூறுதமுறைகாப்பது சாதியுரிமையாமெனக்கொள்க. எ-று. (சா)

பற்றுதலுரிமை.

(௱அஅ-சூ.) வெறுப்புவப்பிரக்கம் வெகுளிசாணந், திறத்துணிவச்சந் தேறுமயலவாப், பலவுமக்கட்பலபெற்றென்ப, பற்றுறும்வழியும் பற்றுற்றோர்க்கு, மற்றுறுமியற்கையும் பற்றிருவகைத்தே.

*எ-து.* நிறுத்தமுறையானேபற்றுதலுரிமையாமாறுணர்த்துதும். வெறுப்புமுதலாகச் சொல்லப்பட்டவையும்பலவு மக்களிடத்துத்தோன்றும்பற்றுதலாகும் ஆகையிற் கேட்போரிடத்துத்தானப்பற்றிவளக்கிளப்புந்தன்மையும் பற்றுடையார்க்கிய லுந்தன்மையு மறிந்தம்முறையே பிறழாதுரைப்பது பற்றுதலுரிமையெனப்படும். இவற்றுட்கேட்போர்மனதிலொன்றன்மேல்வெறுப்பு மொன்றன்மேலாசையு மோரிடத்தச்சமு மோரிடத்தூக்கமு மிவர்க்கேயிரக்கமுமவர்க்கேவெகுளியு மித்தொடக்கத்தனபலபற்றுதலைக்கிளப்புதல் கற்றோர்தொழிலேயாகி யதற்கதற்குரியபொருளு முரியவணியுந்தானறிந்துரைப்பதறிவோர்கடனெனக்கொள்க. அனறியுஞ்சொல்லப்பட்ட பலவகைப்பற்றுதலெழும்பினதன்மையான் மனிதரும்பலகுணமுடையராவர், அங்ஙனங் கடுஞ்சினத்தானிலையுமொழியுநடையும் வேறுபவன்றான் சினமேயாதிநாணங்கொண்டக்கா லனிலையுமொழியுநடையும் வேறுமல்லவோ பிறவுமன்ன ஆகையிலெழும்பின வல்லவைப்பற்றுதற்குரியவை செப்புவதுரிமையாமெனக்கொள்க, இவ்வழியும்வழுவாதுகாப்பதுசற்றோர்கடனே. எ-று. (க)

வடிவுமுதலியவுரிமை.

(௱அகூ-சூ.) வடிவளவூறு மற்றவைபொதுமை, கடியச்சிறப்பிற் காட்டலுரிமை.

*எ-து.* வடிவுமுதற்குணவுரிமையாமாறுணர்த்துதும். சதுரமுதற்பலவடிவு மெண்முதலளவும் வெம்மைமுதலெண்ணூறுமுதலிய குணங்களுளொன்றற்குரியன மற்றொன்றற்குரியவாகத்தோன்றவுரைப்பது குணவழுவாகும் பற்பலபொருட்குப்பொதுப்படாநிற்குங் குணங்களைசசொல்லினும் வழுவன்றாயினும் பொதுப்படாததற்கதற்குரியவைச்சொல்லுதல் சிறப்பாகிக் குணவுரிமையாமெனக்கொள்க. அங்ஙனம் பைந்தினையென்பது பைங்கூழுக்கெல்லாம் பொதுக்குணமாம், செறிகுரற்றினையெனவுந் தாற்றுக்கதிர்வரகெனவுஞ் சிறப்புடைக்குணவுரிமையாம், இவ்வாறே பசுங்கதலி யுயர்தெங்கென்பது பொதுவாய்விரிதலைக்கதலி மூரிவலைத்தெங்கென்பது சிறப்புடைக்குணவுரிமையாம். பிறவுமன்ன இவ்வகையுரிமையேதன்மையலங்காரமெனவும்படுமாதலா லணியதிகாரத்துள்ளுங்காண்க (க)

ஒழுக்கவுரிமை

(௱கூ௦-சூ.) ஒழுக்கமென்ப தீண்டுலகமுறையே.

*எ-து.* நிறுத்தமுறையானேயொழுக்கவுரிமையாமாறுணர்த்துதும். தம்முளொவ்வாமுறைகளைத்தோற்றுதோற்றமுறைகொண் டுலகவியற்கை பிறழாதுரைப்ப தொழுக்கவுரிமை யெனப்படும். [உ-ம்.] — வெண்பா — அலைகடல்களேழுதூர்த்தந்தரத்தினூடே, மலையவனையமால்யானையோட்டிக், கலைவரை, நீறாக்கினையநெடுங்குடையின்கீழ்வைத்தான், மாறுச்சீர்மானித்தார்மன். என்பதிதனுளொருசிலவேந்தனை யெழுகடலைத்தூர்த்தானெனவு மாகாயத்தில்யானையோட்டிப் பகைவரைவென்றானெனவும் வந்தமையாலுலகிலொழுகாமுறையா யொழுக்கவழுவாயிற்று பிறவுமன்ன. எ-று. (க)

சொல்லுரிமை

(௱கூக-சூ) சொல்லெனப்படுவதன் றொகுதிநான்கவற்றுட், சனுக்கிரகஞ்சங்கதந் தேவர்மொழியே, யவப்பிரஞ்சனமொழி யாமிழிசனர்க்கே, வொவ்வொருநாட்டிடை யுரைப்பதுபாகத, மிதுமூவகைத்தாய்வடமொழிதிரிவன், தற்பவம்பிறவும் பொதுமையதற்சமந், சிறந்தொன்றற்குரியன தேசிசமென்ப.

*எ-து.* நிறுத்தமுறையானேசொல்லுரிமையாமாறுணர்த்துதும். சனுக்கிரகமென்றுஞ் சங்கதமென்றும் அவப்பிரஞ்சனமென்றும் பாகதமென்றுஞ் சொல்வகைநான்காகவகுத்தார்புலவர் இவற்றுட்சனுக்கிரகமுஞ்சங்கதமுந் தேவர்மொழியெனவும் அவப்பிரஞ்சனமிழிசனர்மொழியெனவும் பாகதமெல்லாநாட்டிலுமெல்லார்தம்மாலும் வழங்குமொழியெனவுங்கண்டுகொள்க. அன்றியும் பாகதமூவகைத்தாகித் தற்பவந் தற்சமந் தேசிகமெனப்படும், இவற்றுள் ஆரியத்திற்கே யுரியசிறப்பெழுத்தானும்

பொதுவுஞ்சிறப்புமாகிய வீரெழுத்தானுமாகியவாரியமொழிதமிழிற் சிதைந்துவருவனதற்பவமெனப்படும். [உ-ம்.] சுகி-போகி-சுத்தி-ஆன்-அரி-பாபம்-அபாபம்-நயம்-நியம்-நதியம், எனவரும். அன்றியும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகிய வாரியமொழிதமிழில் வழங்குவன தற்சமமெனப்படும். [உ-ம்.] அமலம்-கமலம்-காரணம்-மலயம்-மாருதம்-குங்குமம்-உலகம், எனவரும். அன்றியும் (ஆரியவெழுத்துக்கள்சிதைந்து தமிழில்வழங்குமாறுசிலகூறுதும்) ஆரியத்துளேழாமுயிராகியது - இ - இருவாகவுந் திரிந்துவரும் [உ-ம்.] இட்டம் - எ-ம் இருடி - எ-ம் வரும் அன்றியும்- பதினாறாமுயிர் னகரமாகவேனும் - மகரமாகவேனுந்திரிதலுங்கெடுதலும்பெறும். [உ-ம்.] காமன்-நாகம் - எ-ம் அரி-எ-ம் வரும் அன்றியும் ஆ - மொழியிறுதியில்-ஐ-ஆ-ம்-ஈ-மொழியிறுதியில்-இ - எ-ம்-திரியும் [உ-ம்.] மாலை - எ-ம். கௌரி-எ-ம். வரும் அன்றியும் - கவ்வல்லாத மூன்றும்-க - எ - ம். சவ்வல்லாத மூன்றும்-ச - எ-ம். டவ்வல்லாதமூன்றும்-ட - எ-ம். தவ்வல்லாத மூன்றும்-த - எ-ம் பவ்வல்லாத மூன்றும்-ப-எ-ம். திரிந்துவரும் [உ-ம்.] நகம்-நாகம்-மேகம் - எ-ம். சலவாதி-விசயம்-சருச்சரை - எ-ம். கடிநம்-சடம்-கூடம் - எ-ம், தலம்-திநம்-தரை - எ-ம். பலம்-பந்தம்-பாரம் - எ-ம். முறையேதிரிந்துவந்தன, அன்றியும்-ஜ - மொழிக்கிடையில் யகரமாகத்திரிந்துவரும். [உ-ம்.] புயம்-சயம் - எ-ம். வரும் அன்றியும் மொழிமுதலில்-ச - எ-ம். மொழியிடையில்- ச - என்றாயினும்-ப-என்றாயினுந்திரிந்துவரும். [உ-ம்.] சங்கரன்-சிவன் - எ-ம். அங்குசம்-பாசம் - எ-ம். தேயம்-வயம் - எ-ம். வரும் அன்றியும் ஷ-முதலில்-ச - எ-ம். இடையினுங்கடையினும்-ட-எ-ம். திரிந்துவரும் [உ-ம்] சண்முகம்-எ-ம். சடங்கம்-எ-ம். விடம்-எ-ம். பாடை-எ-ம். வரும் ஸ-முதலினுங்கடையினும் - ச-எ-ம். இடையில் சகரமாகவேனுந்தகரமாகவேனுந்திரிந்துவரும் [உ-ம்] சபை-எ-ம். அசி-எ-ம். வாசம்-எ-ம். ஆதநம்-மாதம்-எ-ம். வரும். அன்றியும் -முதலிற்கெட்டும் இடையினுங்கடையினுங் ககரமாகத்திரிந்துவரும் [உ-ம்] ஆரன்-அரி-எ-ம். ஓமம்-எ-ம். தாகம்-மோகம்-அகி-மகி-எ-ம். வரும் அன்றியும் க்ஷ-முதலில் ககரமாகவும் இடையினுங்கடையினும் இருககரமாகவுந்திரிந்துவரும் [உ-ம்] கோம்-எ-ம். அக்கம்-பக்கம்-குக்கி-பக்கி-எ-ம். வரும்-ய-மொழிமுதலில் தன்முன்னிற்குமேவணயமெய்களோடிவணங்துவருங்கால் முன்னின்றமெய்யிகரம்பெறும் இகரம்பெறுங்காற்சிலவிடத்து யகரங்கெடும் [உ-ம்] தியாகம்-நியாயம்-வியோமம்-எ-ம். விவகாரம் எ-ம். வரும் அன்றியும்-ய - மொழிக்கிடையில் தன்முன்னின்ற மற்றைமெய்களோடிவணங்துவருங்கால் முன்னின்றமெய்மிக்கு இகரம்பெற்றும் சிலவிடத்தம்மெய் இகரம்பெற்றுமிகாமலும்வரும் [உ-ம்] வாக்கியம்-நாட்டியம்-புண்ணியம்-எ-ம். காமியம்-காரியம்-காவியம் - ஆசியம்-எ-ம். வரும் அன்றியும் - ர - மொழிமுதலில் தன்முன்னின்றமெய்யோடிவணயுங்கால் முன்னின்றமெய் இகரம்பெற்றும் சிலவிடத்து உகரம்பெற்றும்வரும் [உ-ம்] கிரமம்-திரவியம் - விரதம்-எ-ம். குரோதம்-சுரோத்திரியம்-எ-ம். வரும் அன்றியும்-ர - இடையிலவ்வாறிவணங்துவரின் முன்னின்றமெய்யிரட்டி இகரம்பெறும் [உ-ம்] வக்கிரம்-வச்சிரம்-சூத்திரம் எனவரும் அன்றியும் - ர - பின்னின்றமெய்யோடிவணங்துவருங்கால் உகரம்பெற்றுவல்லொற்றிரட்டிவரும் சிலவிடத்து இகரம்பெற்றுவரும் [உ-ம்] அருக்கன்-அருச்சனை - வருணம்-எ-ம். பரிசம்-விமரிசம் - எ-ம். வரும் அன்றியும்-ல-முதலில்முன்னின்றமெய்யோடிவணங்துவரின் முன்னின்றமெய் இகரம்பெறும் சிலவிடத்து உகரம்பெறும் [உ-ம்] கிலேசம்-மிலேச்சன் - எ-ம். சுலோகம்-எ-ம். வரும் அன்றியும்-ல - இடையிலவ்வாறிவணயின் முன்னின்றமெய்மிக்கிகரம்பெறும் [உ-ம்] சுக்கிலம் எனவரும் அன்றியும்-ம - முன்னின்றமெய்யோடிவணங்துவரின் முன்னின்றமெய் உகரம்பெறும். வகரமுன்னவ்வாறுவரின் றமெய்மிக்கு உகரம்பெறும் [உ-ம்] பதுமம்-எ-ம். பக்குவம்-எ-ம். வரும் அன்றியும் மொழிக்கீற்றில்வருங் ககரமுதலியவொற்றுக்கள் மிக்கு உகரம்பெறும் [உ-ம்] வாக்கு-திக்கு-விராட்டு-மருத்து - அப்பு-எனவரும். அன்றியும் உற்பவம் - அற்பம் - பற்பம்-அத்தம் - சத்தம் - சத்தி-எனவிங்ஙனஞ்சிதைந்து வருவனவும்பிறவும் வழக்குநோக்கியறிக. இவைநிற்க அவ்வவநாட்டார்சொல்லேயாய் பிறபாடைநோக்காதனவெல்லாந் தேசிகமென்பார் [உ-ம்] நிலம்-நீர் - தீ - வளி - வெளி - சோறு - பாகு - பாளிதம் - பிறவுமன்ன ஆயினுமற்றிருவகைச்சொல்லே நல்லவாயினுந் தேசிகச்சொல்லொவ்வொருநாட்டிற்குரிய சொல்லென்றமையாற் றேசிகச்சொல்லாற்செப்புவ துரிமையாமெனக்கொள்க. எ-று. (க)

(௩௯௨-சூ.) உறுப்புச்செய்யு ளென்றுரைப்பதற்பவச், சிறப்புரைவிரவிச் செப்பியசெய்யுளே.

*எ-து.* தற்பவமொழிக்குச்சிறப்புவிதியையுணர்த்துதும். தேசிகச்சொல்லொடு வடமொழியிற்றிரிந்ததற்பவச்சொல்லொன்றிரண்டுங் கலந்துவந்தசெய்யுள்கேட்போர்க்கின்பமாக வழங்குமுறுப்புச்செய்யுளெனப்படும் [உ-ம்.]—கட்டளைக்கலித்துறை — கருணம்பரியாய்ப்பாவாதிவிவனயிருட்கங்குலற, வருணம்பரியாகவந்துதித்தாளேயவன்த்துயிரா, கிருணம்பரிதருஞ்சிலத்துவான்கதியெய்தவிவ, டெருணம்பரிதாஞ்சரணம்புயஞ்சென்னிசேர்த்துகவே. — வெண்பா — தராதரத்தொப்பத்தராதலத்தோங்கி, வராதரத்தந்தரத்தில்வாழ்ப, பராகச், சிரசரணத்திரவிதிங்சண்மீன்பூண்டாள், கரசரணதிதொழிற்கண்டு. எ-ம். பிறவுமன்ன எ-று. (உ)

(௩௯௩-சூ) கொங்கணமகதங் கோசலந்துளுவஞ், சிங்களஞ்சீனஞ் சிந்துதிராவடம், வங்கஞ்சாவகமராடங்கலிங்க, மங்கஞ்சோனக மருணங்கவுசலம், பப்பரங்காம்போசம் பாடைமூவாறனுண், மருவூரின்மேற்குங்கருவூரின்கிழக்கு, மருதையாற்றின் றெற்கும், வைகையாற்றின்வடக்குஞ், செந்தமிழ்நிலனே- பாண்டிகுட்டம் பன்றிகற்கா, வெண்குடம்பூழி மலாடுசீதம், புனனாடருவாவருவாவடதலை, யெனச்செந்தமிழ்சூழ்பன்னிருநாடே.

*எ-து.* இங்ஙனம்வழங்குநாடிவையெனவுணர்த்துதும். அவ்வவநாட்டிப்பாடைமொழியைத்தே

சிகமென்று மேற்கூறினவதனுலிங்ஙனம் பாடைவேற்றுமைப்பற்றி வேறுவேறாகவழங்குநாடுகள்கொங்கணமுதலாகக் காம்போசமீறாகச்சொல்லப்பட்ட ஐம்பத்தாறுமென்றுணர்க. உலகில்வழங்குமெண்ணிறந்தபாடையுநாடுகளு முளவென்றுபினுங் குறுகியதமிழ்நாட்டெல்லையுள்ளறியப்பட்ட பாடையிவையே ஆகையிலிங்ஙனம் வழங்குந்தேசங்களைம்பத்தாறென்பனவாயினு மவற்றுள்வழங்கும் பாடைகள்பதினெட்டென்ப. ஆகையிலிவற்றுளொழிந்த அவந்தி-கௌடம்-கம்பிலி-குகுதம்-மச்சம்-குரு-கேகயம்-தவத்தவம்-பாஞ்சாலம்-காந்தாரம்-மாளவம்-நிடதம்-குடகம்-தெலுங்கம்-கன்னடம்-கொல்லம் - கலிங்கம்-பல்லவமென விவைபலவுமுன்சொன்ன பதினெட்டுள்ளுமடங்குமெனக்கொள்க. அன்றியுமவற்றுட்டிராவிடமொன்றுதமிழ்நாடாகுந் தமிழுமிருவகைத்தாகிப் பதின்மூன்று குறுநிலத்துளடங்கிச் செந்தமிழென்றொரு நிலத்திலுங் கொடுந்தமிழென்றொரு பன்னிருநிலத்திலும் வழங்கும் அவற்றினெல்லையும் பெயருஞ்சூத்திரத்திற்காண்க. ஆகையிலெல்லாந்தமிழ்ச்சொல்லாயினு மவ்வவநாட்டுத் தேசிகச்சொல்லாகப்பலமொழிதத்தங் குறிப்பான்வழங்கும் [உ-ம்.] தென்பாண்டிநாட்டார் ஆவினைப்பெற்றம் எ-ம். குட்டநாட்டார் - தாயைத்தள்ளை-எ-ம் பன்றிநாட்டார் - செறுவைச்செய் - எ-ம். கர்காநாட்டார் - வஞ்சரைக்கையர்-எ-ம். வேணாட்டார் - தோட்டத்தைக்கிழார்-எ-ம். குடநாட்டார் - தந்தையைஅச்சன்-எ-ம். பூழிநாட்டார் - சிறுகுளத்தைப்பாழி-எ-ம். மலாடுநாட்டார் - தோழியையிகுளை-எ-ம். சீதநாட்டார் - தோழனைஎலுவன்-எ-ம். புனனாட்டார் - தாயைஆய்-எ-ம். அருவாநாட்டார் - சிறுகுளத்தைக்கேணி-எ-ம் அருவாவடதலைநாட்டார் - புளியைஎகினம்-எ-ம. இத்தொடக்கத்தனபலவுமவ்வவத்தமிழ்நாட்டார்வழங்குவனவெனக்கண்டுணர்க. கொடுந்தமிழ்நாடு - டீஉ —வெண்பா— தென்பாண்டிகுட்டங்குடங்கர்காவென்பூழி, பன்றியருவாவதன்வடக்கு, நன்றாய, சீதமலாடுபுனனாடுசெந்தமிழ்சே, ரேதமில்பன்னிருநாட்டெண். (உ)

(ாகூச-சூ) செந்தமிழ்வழக்குரைசெப்புங்காலை, யிலக்கணமுடைய திலக்கணப்போலி, மரூஉவென்றொருமூ வகைத்தாமியல்பு, மிடக்கரடக்கன்மங்கலங்குழூஉக்குறி, யெனுமுத்தகுதியோடிருமூன்றாகும்.

*எ-து.* செந்தமிழ்ச்சொல்லுரிமை யாமாறுணர்த்துதும். செந்தமிழ்வழக்குச்சொல்லாறுவகைப்படும். அவற்றுளிலக்கணமொழியுமிலக்கணப்போலிமொழியு மரூஉமொழியுமென்பனமூன்று மியல்புவழக்கு இடக்கரடக்கல் - மங்கலமரபு-குழூஉக்குறி-என்பனமூன்றுந்தகுதிவழக்கு-ஆகையிலிலக்கணமுறையால் வருவன இலக்கணமொழியெனப்படும். [உ-ம்.] நிலம் - நீர் - தீ - வளி - ஆகாயம் - கூழ் - பால்-பாகு - பானிதம் - எ-ம். வரும் இலக்கணமில்லாதெனினு மிலக்கணமுடையனபோலச்சான்றோரால்வழங்குவன இலக்கணப்போலிமொழியெனப்படும் [உ-ம்.] இல்முன்-முன்றில்-எ-ம். கோவில்-கோயில்-எ-ம்-பொதுவில்-பொதியில்-எ-ம். கண்மீ-மீகண்-எ-ம். யாவர்-யார்-எ-ம். எவன்-என்-எ-ம். வரும் இலக்கணமுறைபிற்சிதைந்து வருவன மரூஉமொழியெனப்படும். [உ-ம்.] சோழநாடு-சோணாடு-எ-ம். மலையமாநாடு-மலாடு-எ-ம்- மட்கட்டி-மண்ணாங்கட்டி-எ-ம். வரும் இம்மூவகையுமியல்புவழக்கெனக்கொள்க. அன்றியுமறைவாகத்தம்பொருளைத்தருவன இடக்கரடக்கலெனப்படும் [உ-ம்] கான்மேனீர்பெய்துவருதும் - வாய்பூசிவருதும், அந்திதொழுதுவருது முதலியபலவுமாம் பொருட்குறைமறைத்துப் புகழ்மொழியாகவருவன மங்கலமரபுமொழியெனப்படும். [உ-ம.] செத்தாரை- துஞ்சினர்-எ-ம். ஓலையை-திருமுகம்-எ-ம் காராட்டை-வெள்ளாடு-எ-ம் சுடுகாட்டை-நன்காடு-எ-ம். கூறுவர் ஒரோகூட்டத்தார் கண்வழங்குவன குழூஉக்குறிமொழியெனப்படும். [உ-ம்.] பொற்கொல்லர்-பொன்னை-பறி-எ-ம். யானைப்பாகர்-ஆடையை-காரை-எ-ம். வேடர்-கள்ளை-சொல்விளம்பி - எ-ம். இழிசனர்-சோற்றை-சொன்றி - எ-ம். கூறுவர் பிறருமன்ன இம்மூவகையுந் தகுதிவழக்கெனக்கொள்க எ-று. (௩)

(ாகூரு-சூ) குறிப்புமொழிவகைக்கூறிற்பொதுச்சொல், விகாரந்தகுதிவினைக்குறிப்பாகுபெய, ரன்மொழிமுதற்றொகைப் பொருட்டொகைக்குறிப்பென, வொன்பதும்பிறவுமிவ் வொழிந்தனவெளிப்படை.

*எ-து.* குறிப்புச்சொல்லுரிமையாமாறுணர்த்துதும். ஒன்றனைக்குறியாப்பொதுமொழியும் விகாரமொழியொன்பதும் தகுதிவழக்குமொழிமூன்றும் வினைக்குறிப்பும் ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் முதற்றொகையும் பொருட்டொகையும் சொல்பவன்குறிப்புமெனக் குறிப்புமொழிகளொன்பதாம் இவையொழித்தொழிந்த மொழியெலாம் வெளிப்படைமொழியெனக்கொள்க. ஆயினுங்குறிப்புமொழிகள் கற்றோருமரிதுணர்மொழிகளாகையிற் செப்பினுளொழியப்பெய்த வணிகலன் போலவாகாமையும் அவற்றைத்தெருவின்மிதிபடவெறிந்தார்போல வாகாமையும் அழகுறவணிந்தநகையெனத்தோன்றற் பொருட்டுக்கூட்டிய அடைமொழியானும் வினைமுதலியவற்றானுந்தானே குறித்தபொருளை அறிவுடையோர்க்குக்காட்டுவது உணர்ந்தோர்சிறப்பெனக்கொள்க ஆகையாற்சொன்னவொன்பதுவகைக்குறிப்புமொழி வருமாறு [உ-ம்] பெற்றமென்பது - காளையும்பசுவுமாகையி லாணும்பெண்ணுமொழிந்த பொதுச்சொல்லாம். இன்றிவ்வூர்ப்பெற்றமெல்லாமுழவொழிந்தவெனி லுழவெனுஞ்சொல்லாலிங்ஙனம் பெற்றங்காளையாயின இன்றிவ்வூர்ப்பெற்றமெல்லா மறத்திற்குக்கறக்குமென்னிற்கறக்குமென்னும் வினையாற்பசுக்களாயின, பிறவுமன்ன விகாரச்சொல்லொன்பதுங் குறிப்புச்சொல்லாகு மதுமரைக்குவிகமேனியென்பதும் நீனிறப்பெருங்கடலென்பதும் மதுவெனுமடைமொழியாற்றுமரையெனவும் நிறமெனும்பெயரானீலமெனவுமறியவந்தன பிறவுமன்ன மேலேசொன்னமூவகைத்தகுதி வழக்குமொழிகளைக்காண்க. இறைவகொடியை-தாயேபினியை-தீயேவெய்யை - நீரோதண்ணியை - முதலியவிளிவேற்றுமையான் முன்னிலைவினைக்குறிப்பெனவறியவந்தன பிறவுமன்ன புளியைத்தின்றானென இவ்வாகுபெயரோ தின்றானென்னும்வினையாலதன்பழமறியவந்தன, பிறவுமன்ன அலர்கூந்தற்கில்லையருள்-பொற்றொடி சொல்லெல்லாம்பொய் எனவிவ்வன்மொழித்தொகையீண்டும்

அருள்சொல்லெனப்பெயராற்குறித்த வலர்கூந்தலுடையாளும் பொற்றொடியுடையாளு மறியவந்த வாறுகாண்க. பிறவுமன்ன முதற்குறிப்புச்சொல்லிருவகைப்படும் முதலெழுத்தொன்றைக்காட்டினவு முதன்மொழி யொன்றைக்காட்டினவுமெனக்கொள்க — குறட்செய்யுள் — குன்றுவிளையுளுயர்நிலந்துன் புறுத்தன், வென்றேபிரப்பாடன்கை. என்பதிஃதேழிசைகுறித்துரைத்ததாம் இவற்றுட்குன்றுவென்புழி - குரனரம்பும், விளையுளென்புழி - விளரிநரம்பும், உயர்நிலமென்புழி - உழைநரம்பும், துன்புற்றென் புழி- துத்தநரம்பும், தாவென்புழி- தாரநரம்பும், இரப்பானென்புழி-இளிநரம்பும், கையென்புழி-கைக்கிளைநரம்பும், எனக்குறிப்பாகவேழிசைமுதனின்ற வோரெழுத்தானறியவந்தன. ஆயினுமிவ்வகை யிருளெனச்சிறுபான்மையென்றுவழங்கற்க அன்றியும்—காரிகை—வளம்படவென்பதுவெள்ளைக்கவற்குதாரணஞ்செங், களம்படக்கொன்றுகலிச்சரிதாயகண்ணார்கொடிபோற், றுளங்கிடைமாதேசுறமறிதொன்னலத்தின்புலம்பென், றுளங்கொடுநாவலரோதினர்வஞ்சிக்குதாரணமே. எனவிக்காரிகையுட்பல்பாட்டுமுதனின்றவோரிருமொழிகாட்டி வெள்ளைமுதலியபாவிற்குதாரணமென்ற குறிப்பினலவ்வவப்பாட்டறியவந்தன. பிறவுமன்ன பொருட்டொகைகுறிப்புச்சொல்லாவன — வெண்பா—புறநிலை ஆறொழித்தைந்தடக்கிமுன்னமூன்றுண்டளிக்கு, மீறொழித்ததாரொருவனென்றேத்தி, யூறொழிப்ப, வாளாயிரண்டயிர்கமாய்ந்தனகாலிவ்வல்லாற், சேளாயுடன்வருவதில். என்பனவிவற்றுட்பலதொகைவந்து கூடியவினையாலறியவந்தவாறுகாண்க ஆகையில் வைரவமுதலாறுசமயமுங் கைப்புமுதலாறுசுவையுங் கார்முதலாறுபருவமும் அரிச்சந்திரன்முதலறுசக்கரவர்த்திகளும் வேற்றுவினைமுதலறுதாவினையு மிவைமுதலாயினபலவுளவெனினு மிங்ஙனமாறொழித்தென்றகுறிப்பினாற் காமக்குரோதமுலோபமோகம்பயமதமெனவாறறியவந்தன அன்றியு மைவண்ண மைந்திவண பஞ்சபூதியமுதலாயினவுளவெனினு மிங்ஙன மைந்தடக்கியென்றகுறிப்பினாற் கண்முதலைம்பொறியறியவந்தன அன்றியுங்காமமுதன்முக்குற்றமுந் தன்மைமுதன்மூவிடமுமுதலாயின வுளவெனினு மிங்ஙனமூன்றுளுமென்றகுறிப்பினால் வானமுதன்மூவுலகறியவந்தன மீண்டுமூன்றினுளுமென்றகுறிப்பினு லாக்கல்காத்தலழித்தலென முத்தொழிலறியவந்தன அன்றியுமிம்மைமறுமையென்றிருமையு நல்வினைதீவினையென்றிருவினையு முதலாயினவுளவெனினுமிரண்டயிர்கமென்றகுறிப்பினு லில்லறந்துறவறமறியவந்தன ஆயினுமிவ்வகைக்குறிப்புமொழிகளறிதற்கரியனவாகையிற் சுருட்டிக்கிடக்கும்பட்டாடையின் முன்றுவனையைக்கொள்வோர்காணக்காட்டும் வாணிகர்போலத்தொகுத்தவற்றுண் முதற்பொருடோற்றித் தொகைமொழிவருவதுதெளிவெனக்கொள்க. [உ-ம்] — வெண்பா—புறநிலை காமமுதலாறொழித்துக்கண்முதலைந்தடக்கி, யேமமுதலோரொருவனென்றேத்தி, வாமமுதிர், வாளாயறஞ்செய்கமாய்ந்தனகாலிவ்வல்லாற், சேளாயுடன்வருவதில். எனவந்தவாறுகாண்க. சொல்பவனுணர்ந்தகுறிப்பினறிய வருமொழி குறிப்பிற் குறிப்புச்சொல்லெனப்படும் [உ-ம்.] — குறள். — கடலோடாகால்வனெடுந்தேர் கடலோடு, நாவாயுமோடாநிலத்து. என்பதிதன் பொருளிடந்தெரிதலெனுமதிகாரப்பெயராலறியவந்தது ஆகையிலினிவருங் குறிப்பெஞ்சணியு மொட்டலங்காரமு மிவ்வகைக்குறிப்புமொழியால் வழங்குமென்றுணர்க அவையேமுன்னும்பின்னும் வரும் பொருளாற்றேறன்றவுரைப்பதுநெறியே அன்றியுஞ்சூத்திரத்துட் பிறவுமென்றமிகையால் பலபொருள்குறித்த திரிசொல்லுங் குறிப்புச்சொல்லெனவுமாம் அவற்றுள்சிலமிகவரிதுணர்மொழிகளாகையிலவற்றைவிளக்கம்வாருபெயரொச்சமாயினு மடைமொழியாயினுங்கூட்டியுரைப்பிற் பொதுமைநீங்கியொன்றற்குரியனவாகத் தோன்றுமென்றுணர்க. அங்ஙனநாகமென்னுந்திரிசொல்லே கைந்நாகம்-பைந்நாகம், பெய்ந்நாகமென்புழி கூட்டியவோரடைமொழியாற் பலவற்றிற்குப்பொதுவாய்நின்றசொல்லொன்றற்குரித்தாயினவாறுகாண்க ஆயினுமெளிதுணர்பொருட்கு விரோதமாகவு மரிதுணர்பொருட்குச் சேர்க்கையாகவு மற்றொருமொழியைக்கூட்டியுரைப்பது சிறப்பெனக்கொள்க. அங்ஙனம் புலியைப்பூவாப்புண்டரீகம், எ-ம். தென்மேற்றிசையானையைப்பூவாக்குமுதம், எ-ம். இடபத்தைப்பறவாநரை, எ-ம். தாழையை உண்ணாக்குமரி, எ-ம். வேங்கைமரத்தைப்பாயாவேங்கை, எ-ம். கண்ணை இமைக்குவளை, எ-ம். இடையைத்துவளுந்துடி, எ-ம். சவளைக்காவல ஊதாச்சங்கு, எ-ம். நெய்யைவெண்டுப்பு, எ-ம். இராகத்தைசெவிக்கின்புகுக்கும்வண்ணம், எ-ம். பிறவுமித்தன்மையாலுணர்ந்த குறிப்பினைத்தோற்றிப்பலவற்றிற்குப்பெதுவாய்நின்றதிரிசொல் லொன்றற்குரியவர்கவுரைப்பது சிறப்புளசொல்லுரிமையாமெனக் கொள்க [உ-ம்] — விருத்தம் — பாடாதகந்திருவம்பதிந்தெறியாக்கந்துகமுட், கோடாதகோணமுனை கூறாதகிள்ளைமலர், சூடாதபாடலம்போர்தொடாக்குந்தம்பின்னிக்கீழ், நீடாதசடிமுகைநெகிழாமாவீங்குளவோ. எனப்பலபொருளைக்குறித்தபலதிரிசொல் லீண்டுக்குறியையொன்றவினைத்தோற்றவந்த வாறுகாண்க எ-று. (௪)

(௩௯௬-௫.) பலவினைக்குரிய பலபொருட்சொல்லொரு, நிலைவரினுரிமை நீத்தசொல்லுரித்தே.

*எ-து.* இனப்பொருள்வினைச்சொல்லுரிமையாமாறுணர்த்துதும். ஓரினப்பொருளவாகிவேறுபடுவினைக்குரிய பொருளுளவெனக்கண்டுணர்க. அவற்றுட் பலவைகூடிவருங்காலவ்வினப்பொருட்குப் பொதுச்சொல்லுரைப்பதுரிமையாமெனக்கொள்க. அங்ஙனம் வாச்சியவினத்துட் கொட்டுவன பறையே - ஊதுவனகுழலே-ஊர்வனயாழே-பிறவுமன்ன அணிகலனினத்துட் கவிப்பனமுடியே-கட்டுவனமேகலையே-இடுவனகுழையே - தொடுவனவளையே - பூண்டனவாரமே-பிறவுமன்ன ஆயுதவினத்துளெய்வனகணையே - எறிவனவேலே-வெட்டுவனவாளே-குத்துவனவிட்டியே - பிறவுமன்ன இவையே இத்தொடக்கத்தன பலவினைச்சொல்லு முரிமைபற்றிவந்தசொல்லெனக்கொள்க. இவையேயன்றி வாச்சியத்திற்கெல்லாம்பொதுவினை முழங்கலியம்பல் படுத்தன்முதலியபலவும் அணிவகைக்கெல்லாம்

பொதுவினை. அணிதல் - தாங்கல்-மெய்ப்படுத்தல்-முதலியபலவும் படைவகைக்கெல்லாம் பொதுவினை. தொட்டல்- வழங்கல்-பயிற்றல் - முதலியபலவும் ஆகையிலித்தன்மைப்பொரு டனித்தனிவருங்காலதற்கதற்குரிய வினையொடுமுடிப்பது சிறப்பாம். ஆயினுங்கூறியவினப்பொருட் பலவுங்கூட்டி யொன்றுபடுத்தினுரியவினைச்சொற்கொண்டுமுடிப்ப தொன்றற்சேர்புழி மற்றவற்றிற்சேலாமையால் வழுவாம். அங்ஙனம் யாழுங்குழலும்பறையுந் தடவினானெனினு மூதினானெனினுங் கொட்டினானெனினுமாகா பொதுச்சொல்லாக முழங்கினாரியம்பினார்படுத்தாரென்பதுமுறையே அங்ஙனம்பசும்பொன்முடியு மின்மணிக்குழையும் பொன்னொளிவளையுமுதலாயின வணிந்தார் தாங்கினாரென்பதும் வேலும்வாளும்வளையுங்கவணையும் வழங்கினார்பயிற்றினாரென்பதுமுரித்தே பிறவுமன்ன இவ்வாறுரிமைநீங்கியபொதுமொழி யிங்ஙனமுரியனவாமெனக்கொள்க எ-று. (ரு)

(௱கூஎ-சூ.) திணைநிலஞ்சாதி குடியேயுடைமை, குணந்தொழில்கல்வி சிறப்பாம்பெயரோ, டியற்பெயரேற்றிடிற் பின்வர லுரித்தே.

*எ-து* சொல்லடுக்குரிமையாமாறுணர்த்துதும். திணைமுதலாயினவற்றைப்பற்றி யொருபொருண்மேற் பலபகுபதப்பெயரையடுக்கி யுரைப்புழியப்பொருட்குரியவியற்பெயர்கடையில் வந்துமுடிவதே யடுக்கியபலபெயர் மொழியிடத்துரிமையாமெனக்கொள்க [உ-ம்.] — விருத்தம். — கார்வளர்வெற்பினன் குரவற்காவலன், போர்வளர்வில்லினன் பொறிச்சொல்வெஞ்சினன், வார்வளர்முரசதிர்வகுலனென்பவன், பார்வளர்நலங்கெடப் படைகொண்டெய்தினான். எ-ம். பிறவுமன்ன இவ்வாறியற்பெயர் கடையிலன்றியிடையினுமுதலினும் வரப்பெறிற் சிறுபான்மையாமென்றுணர்க. எ-று. (சு)

(௱கூஅ-சூ) அசைநிலைபொருணிலை யிசைநிறைக்கோர்சொல், லிரண்டுமூன்றுநான் கெல்லை முறையடுக்கும்.

*எ-து.* மற்றொருசொல்லடுக்குரிமையாமாறுணர்த்துதும். ஆகையிலசைநிலைமொழி இரண்டாக வடுக்கிவரவும் விரைவு - வெகுளி - அவலம் - உவகை - அச்சமுதலியபொருண்மொழி இரண்டு மூன்றுமாகவடுக்கிவரவும் இசைநிறைமொழிகள் இரண்டுமூன்றுநான்குமாகவடுக்கிவரவும் பெறுமெனக்கொள்க [உ-ம்] மற்றோமற்றோ என்றேயென்றேபிறவுமசைநிலை, கள்ளர்கள்ளர் பாம்புபாம்பு தீத்தீத்தீ போபோபோ-பிறவும் விரைவு, எய்யெய் எறியெறியெறி-பிறவும் வெகுளி, உய்யேனுய்யேன் ஐயாவென்னையாவென்னையா வகன்றனையோ-பிறவுமவலம், வருகவருக பொலிகபொலிகபொலிக - பிறவுமுவகை, படைபடை எங்கேயெங்கேயெங்கே-பிறவுமச்சம், எ எயம்பலியம்பினான் நல்குமேநல்குமே நல்குமே நாமகள் பாடுகோபாடுகோபாடுகோ - பிறவுமிசைநிறை—அசைநிலையிரட்டியும்விரைவுமொழிமூன்றினு, மிசைநிறைநான்கினுமொருமொழிதொடரும் — என்றார்தொல்காப்பியனாருமென்றுணர்க. ஆசையிற்காலமிடம்பண்பொழுக்கஞ்சொல்லென விவ்வைந்தும் வழுவாமுறைகாத்ததற்கதற்குரிமைப்பற்றிச் செப்புவதறிவோராகடனெனக்கொள்க. எ-று. (எ)

(௱கூகூ-சூ) அகப்பொருள்புறப்பொரு ளாமிரண்டவற்றுட், பெருகியகைக்கிளைபெருந்திணைக்குறிஞ்சி, யாதியைந்திணை யெனவகத்திணையேழே, கைகோளிரண்டாங் களவுகற்பே, வதுவைவாழ்க்கை வரைவகப்பொருளே, வெட்சிகரந்தை வஞ்சிகாஞ்சி, நொச்சியுழிஞை தும்பையேழ்புறத்திணை, பகைநிரை யோட்டறன்னிரைமீட்டல், பகைமேற்செல்லல் பகைக்கெதிரூன்ற, றன்னெயிற்காத்தல் பகையெயிற்கொள்ளல், போர்வெல்லலெனமுறைபுறப்பொருடிணையே.

*எ-து.* ஈண்டுக்கூறியபொருணூல்வழிப் புறநடையாகையிலிங்ஙன முன்னோர்தந்தபொருணூற்றொகையுணர்த்துதும் ஆகையிற்செந்தமிழுணர்ந்தோர் பொருளெலாமகப்பொருள் புறப்பொருளென் றிருகூறுபாடெனப் பிரித்தவற்றுளகப்பொருளென்பதைக் காமமாகக்கொண் டதனுள்ளு மொருதலைக்காமங் கைக்கிளையெனவும் பொருந்தாக்காமம் பெருந்திணையெனவு மன்புடைக்காமங் குறிஞ்சிமுதலைந்நிலத்திற்குரித்தாயைந்திணையெனவு மெழுதிணைபகுத்தபின் னிவற்றிற்கொழுக்கமுறையைக்கைகோளென்றதைக் களவுகற்பென்றிருவகைப்படுத்தியதற்கதற் குரியபல்நடைபயிற்றலும் வதுவையின் முறையைக்காட்டலும் வதுவைபின்னிருவர் வாழ்க்கையை வகுத்தலும் வரைவெனும்பிரிவின்கட் புலம்பையுரைத்தலு மகப்பொருளென்றார் — அகப்பொருள்விளக்கம். — அவற்றுள் கைக்கிளையுடையதொருதலைக்காமம் — ஐந்திணையுடையதன்புடைக்காமம் — பெருந்திணையென்பது பொருந்தாக்காமம் அவளைவயினின்பத்தைந்திணைமருங்கிற், களவுகற்பெனவிருகைகோள்வழங்கும் — உளமலிகாதற்களவெனப்படுவ, தொருநான்குவேதத்திருநான்குமன்றலுள், யாழோர்கூட்டத்தியல்பினதென்ப—பொற்பமை சிறப்பிற்கற்பெனப்படுவது, மகிழ்வுமூடலுமூடலுணர்த்தலும், பிரிவும்பிறவுமருவியதாகும்—வரைவெனப்படுவதுவோன்கிழத்தியைக், குரவர்முதலோர்கொடுப்பவுங்கொடாமையுங், கரணமொடுபுணரக்கடியயர்ந்துகொளலே. இவைமேற்கோள் அன்றியும்புறப்பொருளென்பதைச் சேவகமாகக்கொண்டதனுள்ளும் வெட்சிமுதலேழுகூறுபாடெனப்பிரித்திவற்றுட் பகைவர்நாட்டிற் புகுந்துநிரையையோட்டுஞ்சேவகம்வெட்சியெனவும் பகைவரோட்டினதன்னிரையைமீட்குஞ்சேவகங் கரந்தையெனவும் பகைவர்மேற்செல்லுஞ்சேவகம் வஞ்சியெனவும்வரும் பகைவரோடெதிர்க்குஞ் சேவகங்காஞ்சியெனவும் தன்னரண்காக்குஞ்சேவக நொச்சியெனவும் பகைவரரண்கைக்கொள்ளுஞ் சேவகமுழிஞையெனவும் பொருதுவெல்லுஞ்சேவகந்தும்பையெனவும் வகுத்தவற்றவற்றிற்குரியபல்நடைகாட்டி விதித்தவேபுறப்பொருளென்றார். — இவற்றிற்குச்செய்யுள் — வெட்சிநிரைகவர்தன்மீட்டல்கரந்தையாம், வட்கார்மேற்செல்வதுவஞ்சியா, முட்கா, தெதிரூன்றல்காஞ்சியெயில்காத்தனொச்சி, யதுவளைத்தலாகுமுழிஞை, யதிரப், பொருவதுதும்

பையாம்போர்க்களத்துமிக்கோர், செருவென்றதுவாகையாம். — புறப்பொருள்—

(வெட்சித்திணைவருமாறு) வெட்சி வெட்சியரவம்விரிச்சிசெலவு, வேயேபுறத்திறையூர்கொலையாகோள், பூசன்மாற்றேபுகழ்சாத்துய்த்த, றலைத்தோற்றம்மேதந்துநிறைபாதீ, டுண்டாட்டியர்கொடை புலனறிசிறப்பே, பிள்ளைவழக்கேபெருந் துடிநிலையே, கொற்றவைநிலையொடுவெறியாட்டுளப்பட, வெட்டிரண்டெண்ணான் கொடுதொகைஇ, வெட்சியும்வெட்சித்துறையுமாகும்.

(கரந்தைத்திணைவருமாறு) கதமில்கரந்தைகரந்தையரவ, மதரிடைச்செலவேயரும்போர்மலைதல், புண்ணொடுவருதல்போர்க்களத்தொழித, லாளெறிபிள்ளைபிள்ளைத்தெளிவே, பிள்ளையாட்டொடுகையறுநிலையே, நெடுமொழிகூறல்பிள்ளைப்பெயர்ச்சி, வேத்தியன்மலிவேமிகுகுடிநிலையென, வருங்கலையுணர்ந்தோரவைபதினான்குங், கரந்தையுங்கரந்தைத்துறையுமென்ப.

(வஞ்சித்திணைவருமாறு) வாடாச்செலவின்வஞ்சிவஞ்சியரவங், கூடார்ப்பிணிக்குங்குடைநிலைவாணிலை, கொற்றவைநிலையேகொற்றவஞ்சி, குற்றமில்சிறப்பிற்கொற்றவள்ளை, பேராண்வஞ்சிமாராயவஞ்சி, நெடுமொழிவஞ்சிமுதுமொழிவஞ்சி, யுழபுலவஞ்சிமழபுலவஞ்சி, கொடைவஞ்சியோடுகுறுவஞ்சிய்யே, யொருதனிநிலையொடுதழிஞ்சிபாசறை, பெருவஞ்சிய்யேபெருஞ்சோற்றுநிலையொடு, நல்லிசைவஞ்சியெனகாட்டினர்தொகுத்த, வெஞ்சாச்சீர்த்தியிருபத்தொன்றும், வஞ்சியும்வஞ்சித்துறையுமாகும்.

(காஞ்சித்திணைவருமாறு) காஞ்சிகாஞ்சியெதிர்வேதழிஞ்சி, பெரும்படைவழக்கொடுபெருங்காஞ்சிய்யே, வாள்செலவென்றுகுடையதுசெலவே, வஞ்சினக்காஞ்சிபூக்கொணிலையே, புகழ்தலைக்காஞ்சிதலைமாராயந், தலையொடுமுடிதன்மறக்காஞ்சிய்யே, மாற்றரும்பேய்நிலைபேய்க்காஞ்சிய்யே, தொட்டகாஞ்சிதொடாக்காஞ்சிய்யே, மன்னைக்காஞ்சிகட்காஞ்சிய்யே, யாஞ்சிக்காஞ்சிமகட்பாற்காஞ்சி, முனைகடிமுன்னிருப்புளப்படத்தொகைஇ, யெண்ணியவகையானிருபத்திரண்டுங், கண்ணியகாஞ்சித்துறையெனமொழிப.

(நொச்சித்திணைவருமாறு) நுவலருங்காப்பினொச்சியேவளை, மறனுடைப்பாசியூர்ச்செருவென்று, செருவிடைவீழ்தறிண்பரிமறனே, யெயிலதுபோரேயெயிறவனையழித்த, லழிபடைதாங்கன்மகண் மறுத்துமொழிதலென, வெச்சமின்றியெண்ணியவொன்பதுநொச்சித்திணையதுவகையெனமொழிப.

(உழிஞைத்திணைவருமாறு) உழிஞையோங்கியகுடைநாட்கோளே, வாணாட்கோளேமுரசவுழிஞை, கொற்றவுழிஞையோடரசவுழிஞை, கந்தழியென்றுமுற்றுழிஞ்ஞையே, காந்தள்புறத்திறையாரெயிலுழிஞை, யருந்தொழிலுழிஞைகுற்றுழிஞைய்யொடு, கோட்புறத்துழிஞைபாசிநிலையே, யேணிநிலையேயிலங்கெயிற்பாசி, முதுவுழிஞையேமுந்தகத்துழிஞை, முற்றுமுதிர்வேயானைகைக்கோளே, வேற்றுப்படைவரவேயுழுதுவித்திடுதல், வாண்மண்ணுநிலையேமண்ணுமங்கலமே, மகட்பாலிகலேதிறைகொண்டுபெயர்த, லடிப்படவிருத்தலொருகைநிலையுளப்பட, விழுமென்சீர்த்தியிருபத்தொன்பது, முழிஞையென்மனாருணர்ந்திசினோரே.

(தும்பைத்திணைவருமாறு) துன்னருங்கடும்போர்த்தும்பைதும்பையரவந், தன்னிகரில்லாத்தானைமறமே, யானைமறத்தொடுகுதிரைமறமே, தார்நிலைதேர்மறம்பாணதுபாட்டே, யிருவருந்தபுநிலையெருமைமறமே, யேமவெருமைநூழிலென்று, நூழிலாட்டேமுன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவைபேய்க்குரவைய்யே, களிற்றுடனிலையேயொள்வாளமலை, தானைநிலையேவெருவருநிலையே, சிருங்காரநிலையேயுவகைக்கலுழ்ச்சி, தன்னைவேட்டலொருகைநிலையுளப்பட, நன்பொருடெரிந்தோர்நாலிருமூன்றும், வண்பூந்தும்பைவகையெனமொழிப. — சூத்திரம் — வெட்சிகரந்தைவஞ்சிகாஞ்சி, யுட்குடையுழிஞைநொச்சிதும்பையென், றித்திறமேழும்புறமெனமொழிப, வாகைபாடாண்பொதுவியற்றிணையெனப், போகியமூன்றும்புறப்புறமாகும். இவைமேற்கோள் எ-று. (௮)

(உா-சூ.) முப்பொருள்வழிமுந்நான்கசத்திணை, முப்புறத்திணைதவாமுறையைந், துரிமையெனவிவைபொருணூற்றொகையே.

*எ-து.* வழக்குத்தேற்றந்தோற்றமெனு முப்பொருளும் பதிகங்காரணம் விரிவுதொகைதுணிவெனு மைவழியுமியல்புமுதலாகப்பின்னவையீறாகப் பன்னீரகத்திணையுமொழுக்கநாற் கரியெனுமுப்புறத்திணையுங்கால மிடம்பண்பொழுக்கஞ் சொல்லெனுமைவகையுரிமையுமென்றிவற்றை விளக்கியவனவனெடுத்தபொருளே பயன்படப்பொருணூலாகக் காட்டியவழியெலா மீண்டுத்தொகைச்சூத்திரமாகத் தந்தவாறுகாண்க. எ-று (௯)

அதிகாரமொன்றிற்கு ஓத்தொன்றிற்கு ஆகூ-சூத்திரம், ௫௮. மேற்கோள் சூத்திரம்-சயி. ஆகூ-ம், கூஅ.

அதிகாரமூன்றிற்கு மேற்கோளொடுகூடிய ஆகூ-சூத்திரம், சாநுயிகூ.

பொருளதிகாரமுற்றிற்று, முற்றும்.

நான்காவது,

# யாப்பதிகாரம்.

(௨௱௧-சூ.) யாப்புறநலமெலா மிலணைந்தவோர்சட்குணன், காப்புறவடிதொழீஇக் காட்டுதுமியாப்பே.

*எ-து* யாப்பிலக்கணமாமாறுணர்த்துதும். எந்நூலுரைப்பினும் அந்நூற்குப்பாயிரமுரைத்தே நூலுரைக்கப்படும் - அஃதென்னை, — நன்னூல்வெண்பா. — மாடக்குச்சித்திரமு மாநகர்க்குக் கோபுரமு, மாடமைத்தோணல்லார்க்கணியும்போ, னாடிமு, னைதுரையா நின்றவணிந்துரையையெந்நூற்கும், பெய்துரையாவைத்தார்பெரிது. என்றார்பவணந்தியாசிரியர் ஆகலிற்பாயிரமுரைத்தன் முறையேயாம் பாயிரமெத்தனை வகைப்படும் பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமும் என விருவகைப்படும் பொதுப்பாயிரத்தினிலக்கணமென்னை — நன்னூல் — நூலேநுவல்வோ னுவலுந்திறனே, கொள்வோன் கோடற் கூற்றாமைந்து, மெல்லாநூற்கு மிவைபொதுப்பாயிரம். எனவரும் சிறப்புப்பாயிரத்தினிலக்கணமென்னை — நன்னூல் — ஆக்கியோன்பெயரே வழியேயெல்லை, நூற்பெயர்யாப்பே நுதலிய பொருளே, கேட்போர்பயனோ டாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே — காலங்களனேகாரணமென்றிம், மூவகையேற்றி மொழிநருமுளரே. எனவரும் பாயிரமில்லாத நூல்களுளவோ சிரமில்லாத வலைவன்முதலியவுடலுயிருளவாயினும் பாயிரமில்லாத நூல்களில்லாம் இத்தலைச்சூத்திரமென்னுதலிற்று கடவுள்வணக்கமு மதிகாரமுநுதலிற்று அதிகாரங்கடோறுங் கடவுள்வணக்கங்கூறல்வேண்டுமென்னை எவ்வுலகினுமெவ்வகைப்பட்ட மேன்பாட்டாருக்குங் கடவுளுதவியன்றி கருதியகருத்துநிறைவுறாதாதலாலே மக்களுடற்குவதனம்போலவுங் கோபுரத்திற்குச்சிகரம்போலவு நூற்கலங்காரமுகமாகநினைத்தகருத்து முட்டின்றுமுடியும் பொருட்டுக்கடவுள்வணக்கங் கூறல்வேண்டுவதாயிற்று ஆகலிவ்விஃது விதிவிலக்கன்று இவ்வதிகாரமென்னபெயர்த்து யாப்பதிகாரமென்னும்பெயர்த்து இவ்வதிகாரமென்னுதலிற்று மேற்கூறியவெழுத்துக்களாலாகிய பலசொற்களாலும் பொருட்கிடனாகக்கற்றுவல்ல புலவரணிபெறப்பாடப்படுமிலக்கண நுதலிற்று இவ்வதிகாரமெவ்வளவிற்று ஓத்துவகையான்மூன்றுஞ் சூத்திரவகையானூறுமாகிய வளவிற்று இம்மூன்றோத்திற்கும் பெயரென்னை இனிவருஞ்சூத்திரத்திற்காண்க இவ்வதிகாரத்தாற்பயன்யாது யாப்பாராய்தல்பயன் யாப்பாராய்தலினாலே மக்களுயிர்க்குறும்பயனென்னை-பா - தாழிசை- துறை விருத்தங்களாலாக்கப்பட்ட - அறம்-பொருள் - இன்பம் - வீடு - என்னுமிவற்றின் மெய்ம்மையறிந்து விழுப்பமெய்தியிம்மைமறுமை வழுவாமை நிகழ்வாராயின் இருமைக்குமக்களுயிர்க்குறும்பயன் யாப்பேயாகும் - யாப்பு - எ-து பாட்டு - அதிகாரம் - எ-து அதிகரித்தல். ஆகையிருட்பிணி முறையினொன்றாகத் தேவனன்னிலையனைத்தையுங்கொண்டுளனாகியவொன்றாய்நின்றறுகுணனெனும் பெயருடைக்கடவுளை மீண்டுச்சொல்லும்பொருள் வழுவிலக்காப்பது வேண்டியவன்றிருப்பாதமலர் தொழுதேத்தியாப்பினதிலக்கண நூலை விளக்கிக்காட்டுதுமென்றவாறு - தெய்வத்தறுகுணமாவன - தன்வயத்தனாதல் - முதலிலனாதல்- உடம்பிலனாதல்-எல்லாநலனுமுளனாதல் - எங்கும்வியாபகனாதல் - எவற்றிற்குங்காரணனாதல் - ஆகையிலீண்டுமிவ்வதிகார நன்றாகத்தெய்வவணக்கம் வந்தவாறுகாண்க- இஃதுசிறப்புப்பாயிரம் - எ-று. (௧)

## முதலோத்துச்செய்யுளுறுப்பு.

(௨௱௨-சூ) சிறைமுதல்யாப்புறச் சேருயிர்க்குடல்போ, லுரைமுதல்யாப்புற வுணர்பொருட்குடலாச், சிறப்பிற்செய்வன செய்யுளாமவை: யுறுப்பியன்மரபுமூன் றுரைப்பவிளங்கும்.

*எ-து.* இவ்வதிகாரஞ் செய்யுளிலக்கண நூலை யுணர்த்துவதாதலால் இம்முதற்சூத்திரஞ் செய்யுளாவதெனவும் இந்நூற்கூறுபாடித்துணையெனவும் அவையிவையெனவுமுணர்த்திற்று ஆசையினரம்பின் பிணிப்போடொழுங்குபடநிரைத்தி வணக்கியபல வெலும்புகளைப்பின்னித்தசையைநிறைப்பிக்குருதியைத் தோய்த்துத்தோலைமூடி மயிர்மேற்பரப்பி யழகுபெறவுயிர்க்கிடனாகச் செய்யப்பட்டவுடலைப் போலப்பலவகை மொழிகளொருப்பட, எழுத்து-அசை - சீர் - தளை - அடி - தொடை - என்றிவற்றானும் யாப்புறவிக்கியுணர்ந்தபொருட்கிடனாகப்பல வலங்காரவகையாற் சிறப்புறச்செய்யப்படுவன செய்யுளெனப்படும் ஈண்டுச்செய்யுளைத் தெளிவுறவிளக்கல்வேண்டிச் செய்யுளுறுப்புஞ் செய்யுட்டன்மையுஞ் செய்யுண்மரபும் பிரித்துக்காட்டி மூவோத்தாக விவ்வதிகாரமுடியுமென்றுணர்க. செய்யுளெனினும் யாப்பெனினும் பாவெனினும் பாட்டெனினுந் தூக்கெனினுந் தொடர்பெனினுங் கவியெனினுமொக்கும் — யாப்பும், பாட்டுந்தூக்குந்தொடர்புஞ்செய்யுளை, நோக்கிற்றென்ப நுணங்கியோரே — என்றார் பிறருமெனக்கொள்க — நன்னூல் — பல்வகைத்தாதுவி னுயிர்க்குடல்போற்பல, சொல்லாற்பொருட்கிடனாக வுணர்வினின், வல்லோரணிபெறச் செய்வனசெய்யுள் — இதுமேற்கோள். எ-று. (௧)

## முதலோத்துச்செய்யுளுறுப்பு.

(உாகூ-சூ.) எழுத்தசைசீர்தளை யடிதொடையாறும், வழுத்தியசெய்யுண் மருவுறுப்பெனவே.

*எ-து.* நிறுத்தமுறையானே செய்யுட்குறுப்பிலக்கணமாமா றுணர்த்துதும். எழுத்தும் - அசையும் - சீரும் - தளையும் - அடியும் - தொடையும் - என்றிவ்வாறுஞ் செய்யுட்குறுப்பாம் இவற்றுளெழுத்தை எழுத்ததிகாரத்திற் கூறியவதனுலிங்ஙன மற்றைந்தினையும்விளக்குதும் — யாப்பருங்கலம் — எழுத்தசைசீர்தளையடிதொடைதூக்கோ, டிழுக்காநடையதியாப்பெனப்படுமே. இதுமேற்கோள் எ-று. (உ)

(அசையிலக்கணம்வருமாறு.)

(உாச-சூ.) அசையேநேர்நிரை யாமிருவகைய, நெடிறனிக்குறின்மெய் நிகழ்குறினேரா, யிணைக்குறில்குறினெடி யிவைநிரையசையே.

*எ-து.* நிறுத்தமுறையானே யசையிலக்கணமாமா றுணர்த்துதும். அசையெனப்படுவன நேரசை - நிரையசை - எனவிருவகைப்படும் — யாப்பருங்கலம். — நேரசையென்றுநிரையசையென்று, வாயிரண்டாகி யடங்குமன்னசையே. இவற்றுள் தனித்துநிற்பது - நேரசை - இணைந்துநிற்பது - நிரையசை - ஆகலின் நெட்டெழுத்தெல்லாந் தனியேவரினும் ஒற்றடுத்துவரினும் குற்றெழுத்து மொழியீற்றின்கட் டனியேவரினும் ஒற்றடுத்துவரினும் இந்நால்வகையானே ரசைவருமெனக்கொள்க. [வரலாறு] ஆழி - என்னுமொழியில் - நெடிலுங்குறிலுந் தனித்துநேரசையாயின - ஆம்பல் - என்னுமொழியில் - நெடிலுங்குறிலுமொற்றடுத்துநேரசையாயின — யாப்பருங்கலம், — நெடில்குறிறனியாய் நின்றுமொற்றடுத்து, நடைபெறுநேரசை நால்வகையானே. இதுமேற்கோள். அன்றியுந்தனிக்குறின் மொழிக்குமுதனேரசையாகாது - விட்டிசைத்தவழிநேரசையாகும் - அஃதென்வனி — தொல்காப்பியம் — தனிக்குறின்முதலசைமொழிசிதைந்தாகாது — காரிகை — விட்டிசைத்தல்லான்முதற்கட்டனிக்குறினேரசையென், றொட்டப்படாததற்குண்ணுதாரணமோசைகுன்று, நெட்டளபாய்விடினேர்நேர்நிரையொடுநேரசையா, மிட்டத்திணுற்குறில்சேரினிலச்சியமேர்சிதைவே — யாப்பருங்கலம் — குறிப்பேயேவறற்சுட்டல்வழித், தனிக்குறின்மொழிமுதறனியசையிலவே என்றுர்பலரும். [வ-று] நாலடியார் - — உண்ணுமொளிநிருமனுக்குபுகழ்செய்யான், றுன்னருங்கேளிர் துயர்களையான், கொன்னே, வழங்கான்பொருள்காத்திருப்பானேல்அஆ, விழந்தானென்றெண்ணப்படும். இதனுள் அஆவென்புழி - அருளின்கட்குறிப்பாய் விட்டிசைத்துவந்தகுற்றெழுத்து மொழிமுதற்கண்ணேரசையாயிற்று அ - அவனும் - இ இவனும் - உ உவனுங்கூடியக்கால் - எ எவவனெவல்லாரிகல் - எ-ம் வரும் — மயேச்சுரர்யாப்பு — எவல்குறிப்பேதற்சுட்டல்வழி, யாவையுந்தனிக்குறின்முதலசையாகா, சுட்டினும் வினாவினுமுயிர்வருங்காலை, யொட்டிவருஉமொருசாருமுளவே. இதுமேறகோள் குறிலிணைந்துவரினும் குறினெடிலிணைந்துவரினும் குறிலிணைந்தொற்றடுத்துவரினும் குறினெடிலிணைந்தொற்றடுத்துவரினும் இந்நால்வகையானிரையசைவருமெனக்கொள்க [வ-று.] வெறி-சுறு-இம்மொழிகள் குறிலிணைதுங் குறினெடிலிணைந்துநிரையசையாயின. நிறம் - விளாம் - இம்மொழிகள் குறிலிணைந்தொற்றடுத்துங் குறினெடிலிணைந்தொற்றடுத்து நிரையசையாயின — யாப்பருங்கலம் — குறிலிணைகுறினெடி றனித்துமொற்றடுத்து, நெறிமையினுன்காய்வருநிரையசையே — தொல்காப்பியம் — குறிலேநெடிலேகுறிலிணைகுறினெடி, லொற்றொடுவருதலொடுமெய்ப்படநாடி, நேருநிரையுமென்றிசினோரே. இவைமேற்கோள். (௩)

(சீரிலக்கணம்வருமாறு.)

(உாரு-சூ) நேரேநிரையே யசைச்சீரிரண்டென, நேர்நேர்நிரைநேர்நிரைநிரைநேர்நிரை, யீரசையியற்சீ ரீரிரண்டிவற்றோ, டுற்றுறுநேர்நிரை யிருநான்குரிச்சீர், நேரிறும்வெண்சீர் நிரையிறும்வஞ்சிச்சீர், நாலசைபொதுச்சீர் நாலுறன்சென்ப.

*எ-து* நிறுத்தமுறையானேசீரிலக்கணமாமா றுணர்த்துதும். கூறியவிருவகையசையேசிறுபான்மைதனித்தும் பெரும்பான்மையிணைந்துஞ் சீராம், இவையே அசைச்சீர்-இயற்சீர்-உரிச்சீர்-பொதுச்சீர் - எனநால்வகைப்படும் இவற்றுளசைச்சீரோரசைச்சீராய் நேரசைச்சீரு நிரையசைச்சீருமென விரண்டாகும் இவற்றிற்குதாரணவாய்பாடு-நேர் - நாள், நிரை - மலர், இவைபெரும்பாலும் வெண்பாவினீற்றிலுஞ் சிறுபான்மையொழிந்தவற்றுள்ளும்வரும் [வ-று] மலர்மிசையேகினுன்மாணடிசேர்ந்தார், நிலமிசைநீடுவாழ்வார் — கற்றதனலாயபயனென்கொல்வாலறிவ, னற்றுடொழா அரெனின். இக்குறள்வெண்பாக்களினிறுதியில்-வார்-நாள், எ-ம். ரெனில்-மலர், எ-ம். ஓரசைச்சீரிரண்டும்வந்தனகாண்க — யாப்பருங்கலம் — ஓரசைச்சீருமஃதோரிருவகைத்தே. என்றுர் அன்றியும் இயற்சீரீரசைச்சீராய் நேர்நேர் - நிரைநேர்-நிரைநிரை-நேர்நிரை - எனநான்காகும் இவற்றிற்குதாரணவாய்பாடு நேர்நேர்-தேமா, நிரைநேர்-புளிமா, நிரைநிரை-கருவிளம், நேர்நிரை-கூவிளம், இவை யகவலுக்கேயுரியவாகி இயற்சீரெனவுமகவற்சீரெனவும்பெயர்பெறும் [வ-று] குன்றக்குறவன்காதன்மடமகள் வரையரமகளிர்புரையுஞ்சாயலளே யையளரும்பியமுலையள் செய்யவாயினண்மார்பினள்சுணங்கே. இவ்வகவலுள் குன்றக்-தேமா, குறவன்-புளிமா, காதன்-தேமா, மடமகள்-கருவிளம், வரையர-கருவிளம், மகளிர்-புளிமா, புரையுஞ்-புளிமா, சாயலள்-கூவிளம், ஈரசைச்சீர்நான்கும்வந்தனகாண்க — யாப்பருங்கலம் — ஈரசைகூடியசீரியற்சீரவை, யீரிரண்டென்பவியல்புணர்ந்தோரே. என்றுர் அன்றியும் உரிச்சீர்மூவசைச்சீராய் நேரீற்றுரிச்சீர் நிரையீற்றுரிச்சீரென விருவகையவாகியிருநான்காகும் இவற்றுணேரீற்றுரிச்சீர்நான்கும் வெண்பாவிற்குரியவாதலின் வெண்சீரெனப்படும் நிரையீற்றுரிச்சீர்நான்கும் வஞ்சிப்பாவிற்குரியவாதலின் வஞ்சிச்சீரெனப்படும் நேரீற்றுரிச்சீர்க்குதாரணவாய்பாடு நேர்நேர்நேர்-தேமாங்காய், நிரைநேர்நேர்-புளிமாங்காய், நிரைநிரைநேர்-கருவிளங்காய், நேர்நிரைநேர்-கூவிளங்காய், இவைவெண்பாவிற்குரியவெண்சீரெனப்படும் [வ-று] நாய்

க்காற்சிறுவிரல்போனன்கணியராயினு, மீக்காற்றுணையுமுதவாதார், நட்பென்னாஞ், சேய்த்தானுஞ் சென்றுகொளல்வேண்டுஞ்செய்விளைக்கும், வாய்க்காலனையார்தொடர்பு. இவ்வெண்பாவினுள் நாய்க்காற்-தேமா, சிறுவிரல்போ-கருவிளங்காய், னன்கணிய-கூவிளங்காய், ராயினு-கூவிளம், மீக்காற்-தேமா, றுணையு-புளிமா, முதவாதார்-புளிமாங்காய், நட்பென்னாஞ்-தேமாங்காய், காய்ச்சீரிறுதியாகிய மூவசைச்சீர்நான்கும்வந்தனகாண்க — சூத்திரம் — காய்முன்னேருங்விளமுன்னேரு, மாமுன்னிரையும்வருமெனமொழிப. என்றொருசாராசிரியரவ்வாறுவருதலறிக. அன்றியும்நிரையீற்றுரிச்சீர்க்குதாரணவாய்பாடு நேர்நேர்நிரை-தேமாங்கனி, நிரைநேர்நிரை-புளிமாங்கனி, நிரைநிரைநிரை-கருவிளங்கனி, நேர்நிரைநிரை - கூவிளங்கனி, இவைவஞ்சிப்பாவிற்குரிய வஞ்சிச்சீரெனப்படும் [வ-று] பூந்தாமரைப்போதலமரத், தேம்புனலிடைமீன்றிரிதரும், வளவயலிடைக்களவயின்மகிழ், விளைக்கம்பலைமனைச்சிலம்பவு, மனைச்சிலம்பியமணமுரசொலி, வயற்கம்பலைக்கயலார்ப்பவு, நாளு, மகிழுமகிழ்தூங்கூரன், புகழ்தலானாப்பெருவண்மையனே. இவ்வஞ்சிப்பாவினுள் பூந்தாமரைப்-தேமாங்கனி, போதலமரத்-கூவிளங்கனி, தேம்புனலிடை-கூவிளங்கனி, மீன்றிரிதரும்-கூவிளங்கனி, வளவயலிடைக்-கருவிளங்கனி, களவயின்மகிழ்-கருவிளங்கனி, விளைக்கம்பலை-புளிமாங்கனி, கனிச்சீரிறுதியாகியமூவசைச்சீர்நான்கும்வந்தனகாண்க — யாப்பருங்கலம் — மூவசைச்சீருரிச்சீரிருநான்கனு, ணேரிறுநான்கும்வெள்ளையல்லன, பாவினுள்வஞ்சியின்பாற்பட்டனவே. என்றார் அன்றியும பொதுச்சீர்நாலசைச்சீராய்நானான்காகும் இவையே இயற்சீர்நான்கிற்குமிறுதியின்கண்ணே தண்ணிழலென நேர்நிரையும்-தண்பூவென நேர்நேரும்-நறும்பூவென நிரைநேரும் - நறுநிழலென நிரைநிரையுங்-கூட்டிடப்பதினாறுகும் இவற்றிற்குதாரணவாய்பாடு தேமாந்தண்ணிழல் புளிமாந்தண்ணிழல் கருவிளந்தண்ணிழல் கூவிளந்தண்ணிழல் தேமாந்தண்பூ புளிமாந்தண்பூ கருவிளந்தண்பூ கூவிளந்தண்பூ தேமாநறும்பூ புளிமாநறும்பூ கருவிளநறும்பூ கூவிளநறும்பூ தேமாநறுநிழல் புளிமாநறுநிழல் கருவிளநறுநிழல் கூவிளநறுநிழல், இவைவெண்பாவினுள்வருவனவல்ல கலியினுள்ளுமகவலுள்ளும் பெரும்பாலுங்குற்றியலுகரம் வந்தவிடத்தன்றிவாரா வஞ்சிப்பாவினுட் பெரும்பாலும்வரவு மோரடியுளிரண்டுநாலசைச்சீர்க்கண்ணுற்று நிற்கவும்பெறும் [வ-று] அள்ளற்பள்ளத்தகன்சோணாட்டு வேங்கைவாயின்வியன்குன்றூரன். இவ்வஞ்சியடியிலிரண்டு நாலசைச்சீர்வந்தனகாண்க — யாப்பருங்கலம் — நாலசைச்சீர்பொதுச்சீர்பதினாறே. என்றார் — காரிகை — ஈரசைநாற்சீரகவற்குரியவெண்பாவினவா, நேரசையாலிற்றமூவசைச்சீர் நிரையாலிறுப, வாரசைமென்முலைமாதேவருபவஞ்சிக்குரிச்சீ, ரோரசையேநின்றுஞ்சீராம் பொதுவோருநாலசையே — தேமாபுளிமாகருவிளங்கூவிளஞ்சீரசைவற், காமாங்கடைகாயடையின்வெண்பாவிற்கந்தங்கனியாய், வாமான்கவலையல்குன்மாதேவருபவஞ்சிச்குரிச்சீர், நாமாண்புரைத்தவசைச்சீர்க்குதாரணநாண்மலரோ. இவைமேற்கோள் எ-று (௪)

(உ௱௬-சூ.) பொதுச்சீரிறுதி முரிச்சீரிறுதியுந், தளைச்செகுக்குமசைச்சீ ரியற்சீரனைத்தே, பொதுச்சீர்வெள்ளையுட் புணராவக்குற, ளல்லனகலியு மகவலுஞ்சேரா, வஞ்சியுளனைத்தும் வரினுமோரடி, யெல்லையுளொன்றுமே விளைபிற்றொடரா.

*எ-து.* சீரிலக்கணத்துக்கோர்சிறப்பிலக்கணமாமாறுணர்த்துதும். தளைமுறையானே பூவெனு நேரீற்றுப்பொதுச்சீரொட்டும் வெண்சீர்போலக்கொள்ளவும் நிழலெனுநிரையீற்றுப்பொதுச்சீரொட்டும் வஞ்சிச்சீர்போலக்கொள்ளவும் அசைச்சீரிரண்டும் இயற்சீர்போலக்கொள்ளவு முறையென்றுணர்க. ஆகையினிக்கூறும்படி வெண்சீர்வந்துநேர்வரின் வெண்டளையாவதுபோலவு நிரைவரின் கலித்தளையாவதுபோலவு நேரீற்றுப்பொதுச்சீரொன்றனுமொன்றுமையும் வெண்டளைகலித்தளையெனப்படும் அங்ஙனம் வஞ்சிச்சீர்முன்னிரைவரி னொன்றியவஞ்சித்தளையு நேர்வரினொன்றுவஞ்சித்தளையுமென்பதுபோல நிரையீற்றுப்பொதுச்சீர்த்தளையும்வழங்கும் அவ்வாறியற்சீரொன்றனு மசைச்சீரொன்றனுமாசிரியத்தளையெனவு மியற்சீர்விகற்பமும் அசைச்சீர்விகற்பமும் வெண்டளையெனவுங்கொள்க. அன்றியும் பொதுச்சீரொன்றும் வெண்பாவினுள்வாரா ஆசிரியத்துள்ளுங்கலியுள்ளுங் குற்றுகரம்வந்தவிடத்தன்றிவாரா வஞ்சியுட்குற்றுகரம்வாராதேயுமல்லாம் வரப்பெறுமாயினும் பெரும்பான்மையாமோரடியுள்ளொன்றன்றிவாரா விரண்டுவரினுந்தொடர்ந்துநில்லாவெனக்கண்டுணர்க. — காரிகை — தண்ணிழறண்பூநறும்பூநறுநிழ றந்துறழ்ந்தா, லெண்ணிருநாலசைச் சீர்வந்தருகுமினியவற்றுட், கண்ணியபூவினங்காய்ச்சீரனையகனியோடொக்கு, மொண்ணிழற்சீரசைச் சீரியற்சீரொக்குமொண்டளைக்கே — தன்சீர்தனதொன்றிற் றன்றளையாந்தளைவாதவஞ்சி, வண்சீர்விகற்பமும்வஞ்சிக்குரித்து வல்லோர்வகுத்த, வெண்சீர்விகற்பங் கலித்தளையாய்விடும்வெண்டளையா, மொண்சீரகவலுரிச்சீர்விகற்பமுமொண்ணுதலே. இவைமேற்கோள் எ-று. (௫)

(தளையிலக்கணம்வருமாறு.)

(உ௱௭-சூ.) தளையாஞ்சீர்தம்முட் டலைப்படுங்கட்டே, யவையேழ்வகைய வாகுமவற்று, ளாசிரியத் தளையாமியற்சீரொன்றல்.

*எ-து.* நிறுத்தமுறையானே தளையிலக்கணமாமாறுணர்த்துதும். கூறியபலவகைச்சீருமொன்றோடொன்றுபிணிக்கப்பட்டுத் தொடர்ந்துவருமுறையே தளையெனப்படும், இவையே நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத்தளையும் இயற்சீர்வெண்டளையும் வெண்சீர்வெண்டளையும் கலித்தளையும் ஒன்றியவஞ்சித்தளையும் ஒன்றாவஞ்சித்தளையும் என தளை யெழுவகைப்படும் — சீரொடுசீர்தலைப் பெய்வது தளையவை, யேழெனமொழிபவியல்புணர்ந்தோரே. எனப யாப்பருங்கலம் ஆகையிலிவற்றுளியற்சீர்வந்து நின்றசீரீற்றசையும் வருஞ்சீர்முதலசையுமொன்றிவரி னாசிரியத்தளையாம். ஆகையிற்

றேமாபுளிமாவரவே தேமாவுங்கூவிளமும்வரப்பெறி னேர்நேரோடொன்றிய வதனு னேரொன்று சிரியத்தளையாம் கருவிளங்கூவிளம்வரவே கருவிளமும்புளிமாவும்வரப்பெறி னிரைநிரையோடொன்றி யவதனு னிரையொன்றாசிரியத்தளையாம் — ஈரசைச்சீர்நின்றினிவருஞ்சீரொடு, நேரசையொன்றனிரைய சையொன்றலென், றாயிருவகைத்தே யாசிரியத்தளை. என்பதியாப்பருங்கலம் [வ-று] திருமழைத லைஇயவிருணிறவிசும்பின் விண்ணதிர்மிழிசைகடுப்பப்பண்ணமைத்தவர்தேர்சென்றவாறே. எனவிருவ கையாசிரியத்தளைவந்தவாறுகாண்க எ-று. (௫)

(௨௱௮-சூ.) வெண்டளையென்பதுவெண்சீரொன்றலு, மியற்சீர்விகற்பமு மெனவிருவகைத்தே.

*எ-து.* வெண்டளையாமாறுணர்த்துதும். ஆகையிலியற்சீர்வந்துநின்றசீரீறுதியும் வருஞ்சீர்முத லுமொன்றுது நேர்முன்னிரையு நிரைமுன்னேருமவரப்பெறி னியற்சீர்வெண்டளையாம் காயீற்றவெண் சீர்வந்து நின்றசீரீற்றசையும் வருஞ்சீர்முதலசையுமொன்றி நேர்முன்னேரும்வரப்பெறின் றன்றளை யாகிய வெண்சீர்வெண்டளையாம். ஆகையின்வெண்டளையுமிருவகைத்தே இவ்விருவகைக்குப்பொதுவி திபாக மாமுன்னிரையும் விளமுன்னேருங் காய்முன்னேரும்வருவதுவெண்டளையெனவேகொள்க.— வெண்சீரொன்றலுமியற்சீர்விகற்பமு, மென்றிரண்டென்பவெண்டளைக்கியல்பே. என்பதியாப்பருங்க லம் [வ-று] வெய்யகுரறேன்றிவெஞ்சினவேறுட்கொளினும், பெய்யுமழைமுகிலைப்பேணுவரால், வை யத், திருள்பொழியுங்குற்றம்பலவெனினும்யார்க்கும், பொருள்பொழிவார்மேற்றேபுகழ். எனவிருவ கைவெண்டளைவந்தவாறுகாண்க. அன்றியும் வெண்பாமுதலியவற்றிற் செழுத்தெண்ணி யசைபிரித்துச்சீ ர்சிக்கறுத்துத் தளைநோக்குங்காலைபிற் சிற்சிலவிடத்துச் சீருந்தளையுஞ்சிதைந்துவருமாயின் குற்றியலி கரங்குற்றியலுகரமுமளபெடையுமலகுபெறுது ஐகாரக்குறுக்கமும் ஒற்றளபெடையுமொவ்வொ ருமாத்திரையாக வலகிடவும்பெறுமெனக்கொள்க. என்னை — காரிகை — சீருந்தளையுஞ்சிதையிற்சிறிய இஉஅளபோடாருமறிவரலகுபெறுமையைகாரநைவே, லோருங்குறிலியலொற்றளபாய்விடினேரலகா ம், வாரும்வடமுந்திகழுமுகிண்முலைவாணுதலே என்றாராகலின் [வ-று] — குறள் — அருளல்லதியாதெ னிற்கொல்லாமைகோறல், பொருளல்லதவ்வூன்றினல். இதனுள்குற்றியலிகரமலகின்றிவந்ததுகாண்க.— இருசீரடிவஞ்சிப்பா — குன்றுகோடுநீடுதருநிபாயவுஞ் சென்றுகோடுநீடுசெழுமலைபொருவன வெ ன்றுகோடுநீடுவிறல்வேழ மென்றுமூடுநீடுபிடியுளபோலு மதனு லீண்டிடையிராவிவணெறிவரின் வ ண்டுண்கோதையுயிர்வாழாளே. இதனுள்குற்றியலுகரமலகின்றிவந்ததுகாண்க. — வெண்பா — பல்லுக் குத்தோற்றபனிமுல்லைபைங்கிளிகள், சொல்லுக்குத்தோற்றின்னந்தோற்றினவா, னெல்லுக்கு, நூறேழ நூறென்பாணுடங்கிடைக்குமென்முலைக்கு, மாறேழமாலன்றளந்தமண். — இடைநுடங்கவீர்ங்கோ தைப்பின்றாழவாட்கண், புடைபெயரப்பேழ்வாய்திறந்து, கடைசடைபோயுப்போலுவெனவுரைத்துமீள் வாளொளிமுறுவற், கொப்போலுநீர்வேலியுலகு. இவற்றுளுமளபெடையலகின்றிவந்ததுகாண்க.— அ ன்னையையானோவதவமாலணியிழாய், புன்னையையானோவன்புலர்ந்து — கெண்டையைவென்றகிளரொ ளியுண்கணாள், பண்டையளல்லள்படி. இவற்றுளைகாரங்குற்றெழுத்தைப்போலலகுபெற்றுவந்தவாறு காண்க. — கண்ண்கருவிளைகார்முல்லைகூரெயிறு, பொன்ன்பொறிசுணங்குபேழ்வாயில்வம்பூ, மின்னு மைமருங்குன்மேதகுசாயலா, ளெண்ண்பிறமாள்மாறு. இதனுளொற்றளபேரலகுபெற்றவாறுகா ண்க.—யாப்பருங்கலம்— தளைசீர்வண்ணந்தாங்கெடவரினே, குறுகியவிகரமுங்குற்றியலுகரமு, மளபெ டையாவியுமியல்பிலவே. — ஆய்தமுமொற்றுமளபெழுநிற்புழி, வேறலகெய்துமவிதியினவாகும். என்றார் காக்கைப்பாடினியார் — ஒற்றளபெழாவழிபெற்றவலகிலவே. — தனிநிலையொற்றிவைதாம லகிலவே, யளபெடையல்லாக்காலையாயின். — ஈரொற்றுபினுமூவொற்றுபினு, மோரொற்றியலவெ ன்மனூர்புலவர். என்றார்பலரும் இவைமேற்சோள் எ-று. (௭)

(௨௱௯-சூ.) கலித்தளைவெண்சீர் கலந்தவிகற்பமே.

*எ-து* கலித்தளையாமாறுணர்த்துதும். வெண்சீர்வந்துநின்றசீரீற்றசையும் வருஞ்சீர்முதலசை யுமொன்றாது சாயாகியநேர்முன்னிரைவரப்பெறின் கலித்தளையாம் — நிரையீறல்லாவுரிச்சீர்முன்னர், நி ரைவருகாலைகலித்தளையாகும் என்பதியாப்பருங்கலம் [வ-று] செல்வப்போர்க்கதக்கண்ணன்செயிர்த்தெ றிந்தசினவாளி, முல்லைத்தார்மறமன்னர்முடித்தலையைமுருக்கிப்போ, யெல்லைநீர்வியங்கொண்மூவிடை நுழையுமதியம்போன், மல்லலோங்கெழில்யானைமருமம்பாய்ந்தொளித்ததே. என வெண்சீருங்கலித் தளையும்வந்தவாறுகாண்க எ-று. (௮)

(௨௱௰-சூ. வஞ்சித்தளையாம் வஞ்சிக்குரிச்சீ, ரொன்றலுமொன்று தொழுகலுமென்ப.

*எ-று* வஞ்சித்தளையாமாறுணர்த்துதும். கனியீற்றவுரிசசீர்வந்து நின்றசீரீற்றசையும் வருஞ்சீ ர்முதலசையுமொன்றி நிரைமுன்னிரையேவரப்பெறி னொன்றியவஞ்சித்தளையாம். அவ்விரண்டொன்று துநிரைமுன்னேர்வரினொன்றாவஞ்சித்தளையாம் ஆகையின்வஞ்சித்தளையு மிருவகைத்தெனப்படும்—தன் சீரிறுதிநிரையோடொன்றலு, மஃதேநேரோடொன்றுதொழுகலும், வஞ்சித்தளையின்வகையிரண்டா கும் என்பதியாப்பருங்கலம்[வ-று] விளைவாய்மலர்நக்குவப்பனமிடைவண்டினம் யாழொலிப்பன, கழை வாபெழுமுகைத்தாழைகள் கடிகமழ்வனசாவெங்கணு,மிளைவாய்விரியிளவேனிலீண்டின்புற்றிருநிலத்துலா வவே. எனவஞ்சிச்சீர்வந்தொன்றியுமொன்றாது மிருவகைவஞ்சித்தளைவந்தவாறுகாண்க. எ-று. (௯)

(அடியிலக்கணம்வருமாறு)

(௨௱௰௧-சூ.) அடியென்பதளைத்த வஞ்சீர்நடையவை, குறளடியிருசீர் சிந்தடிமுச்சீ, ரளவடிநாற்சீ ரைஞ்சீநெடிலடி, கழிநெடிலடியைந்தே கடந்தசீரிவற்று, ளைஞ்சீர்மிக்கடி யெனிற்சிறப்பனறே.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

*எ-து.* இறுத்தருமுறையானேயடியிலக்கணமாமாறுணர்த்துதும். கூறியதளையாற்பிணிக்கப்பட்டசீரோரிவருவனவடியெனப்படும் இவற்றுள் இருசீரான்வந்தவடியே-குறளடி எ-ம் முச்சீரான்வந்தவடியே-சிந்தடி எ-ம் நாற்சீரான்வந்தவடியே-அளவடி எ-ம் ஐஞ்சீரான்வந்தவடியே-நெடிலடி எ-ம். ஐஞ்சீரின்மிக்கசீரான்வந்தவடியே-கழிநெடிலடியெனவும்படும் இவையேயெண்சீரின்மிக்க சீரான்வரின்சிறப்பில்லாயின — குறளொருபஃதமிருதலைசிந்தா, முத்தலையளவடிநாற்றலைநெடிலே, மிக்கனகழிநெடிலென்றிசினோரே என்மருமுளரே. அன்றியும் — ஈரெண்முதலா வெட்டீறாகத், திரண்டசீரடிமுடிவுடைய, விறந்துவரினுமடிமுடிவுடைய, சிறந்தவல்லசெய்யுளுள்ளே. என்றார் காக்கைப்பாடினியார் இவற்றிற்குதாரணம் — மாறுமாண்டீயழுக், கோதுசொன்றுநோய்க், காதுகாத்தவனே, யாதுயாவையே. எனக்குறளடியால்வந்தசெய்யுள் — குயின்மருட்டியகோண்மொழி, மயின்மருட்டியவம்பக. மயின்மருட்டியமாண்புடைக், குயின்மருட்டியகூந்தலாள். எனச்சிந்தடியால்வந்தசெய்யுள் — பருவிலார்மனமெனமுகில்பரந்து நாற், கருவிலார்மனமெனக்கருகவந்தநர், திருவிலார்மனமெனத்தேம்பமாங்குயின், மருவிலார்மனமெனமஞ்ஞையாடுமால். எனவளவடியால்வந்தசெய்யுள். — இன்றேயுள்ளார்நாளைப்பிறப்பாரிதுவல்லார், பொன்றுருண்டோடாவூதைத்தெருங்கும்புகழ்விஞ்சிக், குன்றுமின்னார்காசொளிசேர்ண்மாமுடிகொண்டே, நின்றுருளும்பொன்னுயிர்நீங்காசிவனியார்யார். எனநெடிலடியால்வந்தசெய்யுள். — நால்வழிப்புகழேபோன்றுகொடிப்பிணிற்பரந்தமேகம், வேல்வழியொளியேபோனமின்னியார்த்திறைவன்பின், பால்வழிப்பயனேபோன்றுபகலிராவளவிற்றாவிக், கோல்வழிப்படமேபோன்றுகூடவெலாங்கொழித்ததன்றே. என வறுசீர்க்கழிநெடிலடியால் வந்தசெய்யுள் — கணிகொண்டலர்ந்தநறைவேங்கையோகெமழ்கின்றகாந்தனிதழா, வணிகொண்டலர்ந்தவனமாவலங்குடியகிலாவிதுஞ்சிகமழ, மணிகுண்டலங்களிருபாலுமம்வந்துவளையாககீதுஇவளத், துணிகொண்டிலங்குசுடர்வேலுடுவருவானிதென்சொறுணிவே — எனவெழுசீர்க்கழிநெடிலடியால்வந்தசெய்யுள் — மூவடிவினுலிரண்டுசூழ்சுடருநாண்முழுதுங்குழுமடியேமுவள்வயிராமதிக், தாவடிவினுநிலக்குவெண்குடைப்பினீழற்சுடரொளியையடியோற்றிச்சொல்லுவதொன்றுண்டாற், சேவடிசுடாமணையினசெபிதழ்கடெண்டச்சிவந்தனவோசேவடியின்செங்கதிர்கள்பாயப், பூவடிவுகொண்டனவோபொங்கொளிகள் சூழ்ந்துபொலங்கொளாவாலமக்கெம்புண்ணியர்தஞ்சோவே — எனவெண்சீர்க்கழிநெடிலடியால்வந்தசெய்யுள் — இடங்கைவெஞ்சிலைவலங்கைவாளிவினைதீர்ந்ததாலினையபிலங்குமாழியினிலங்கியோன், முடங்குவாலுவணமடங்கன்மீமிசைமுனிந்துசென்றுடன்றுமாண்டராசவினைமுருக்கியோன், வடங்கொண்மென்முலைநுடங்குநுண்ணிடை மடந்தைசுந்தரிவணங்கொள்பூண் முலைமெழுந்தகோன், நடங்கொடாமணையிடங்கொள்சேவடி தலைக்குவைப்பவர் தமக்குவெந்துயர் தவிர்க்குமே — எனவொன்பதின்சீர்க்கழிநெடிலடியால் வந்தசெய்யுள் — கைத்தலத்தழற்கணிச்சிவைத்திடப் புறத்தொருத்திசட்கைப்படைக்கிலாத்ததிறலோரா, மூத்தலைப்படைக்கரத்தமத்தர்சிற்சடைககுணிற்குமுச்சணக்கருக்கொருத்தர்மொழியாமோ, நித்திலத்திவனப்பதித்தகச்சுமுத்தடிக்கனத்துநிற்குமற்புதத்தனத்தினிடையேவே, எத்திறத்தினிற்றெடுத்து விட்டுமெட்டயிர்கணித்திலக்கணுற்றிடச்செய்விக்குமதுதானே — எனவொன்பதின்சீர்மிக்ககழிநெடிலடியால்வந்தசெய்யுள் — யாப்பருங்கலம் — குறளடிசிந்தடியளவடிநெடிலடி, கழிநெடிலடியெனக்கட்டுரைத்தனரே — குறளடிசிந்தடியிருசீர்முச்சீ, ரளவடிநெடிலடிநாற்சீரைஞ்சீர், நிரனிறைவகையானிறுத்தனர்கொளலே — கழிநெடிலடியேகசடறக்கிளப்பி, னறுசீர்முதலாவைம்பிரண்டீறு, வருவனபிறவும்வகுத்தனர்கொளலே — தொல்காப்பியம் — நாலெழுத்தாதியாகவாறெழுத்தேறியநிலத்தேகுறளடியென்ப — எழுத்தென்பசிந்தடிக்களவே, யீரெழுத்தேற்றமவ்வழியான — பத்தெழுத்தென்பநேரடிக்களவே, யொத்தநாலெழுத்தேற்றலங்கடையே — மூவைந்தெழுத்தேநெடிலடிக்களவே, யீரெழுத்துமிகுதலுமியல்பெனமொழிப — மூவாறெழுத்தேகழிநெடிற்களவே, யீரெழுத்துமிகுதலுமியல்பெனமொழிப — உயிரில்லெழுத்துமெண்ணப்படாஅ, வுயிர்த்திறமியக்கமின்மையான — காரிகை — குறளிருசீரடிசிந்துமுச்சீரடிநாலொருசீரறைதருகாலையளவொடுநேரடியையொருசீர், நிறைதருபாதநெடிலடியாநெடுமென்பவனத்தொட், கறைகெழுவேற்கணல்லாய்மிக்கபாதங்கழிநெடிலே இவைமேற்கோள் எ-று. (௰)

(தொடையிலக்கணம்வருமாறு.)

(௨௱௰௨-கு) தொடையென்பவீரடிதொடுப்பதாமவை, யடைமுதன்மோனையந்தமியைபே, யிடையேயெதுகையெதிர்மொழிமுரணா, யடையேயளபாமெனவைவகையே

*எ-து.* இறுத்தருமுறையானே தொடையுந்தொடைவிகற்பமுமாமாறுணர்த்துதும். மேற்கூறியவவ்வகையடிகடம்முள் ளிரண்டாயிவணைந்துதொடுப்பது தொடையெனப்படும் இவையே மோனைத்தொடையும் - இயைபுத்தொடையும் - எதுகைத்தொடையும் - முரண்டொடையும் - அளபுத்தொடையும் - எனவைவகைப்படும். இவற்றுள் முதலெழுத்தொன்றிவரத்தொடுப்பது மோனைத்தொடை எ-ம். ஈற்றெழுத்தொன்றிவரத்தொடுப்பது இயைபுத்தொடை எ-ம். இரண்டாமெழுத்தொன்றிவரத்தொடுப்பது எதுகைத்தொடை எ-ம். மொழியானும் பொருளானுமறுதலைப்படத்தொடுப்பது முரண்டொடை எ-ம். உயிரளபெடையும் ஒற்றளபெடையும் ஒன்றிவரத்தொடுப்பது அளபெடைத்தொடை எ-ம் கொள்ளல்வேண்டும் இவற்றின்வகையும்விகற்பமும் (௨௱௬-ஞ் சூத்திரத்தில்விளக்குதும்) — யாப்பருங்கலம் — தொடையேயடியிரண்டியையத்தோன்றும் — ஆதியெழுத்தேயடிதொறும்வரினது, மோனைத்தொடையெனமொழிமனார்புலவர் — இறுவாயொப்பினஃதியைபெனப்படுமே — இரண்டாமெழுத்தொன்றினவதேயெதுகை — மொழியினும்பொருளினுமாறுதன்முரணே — அளபெடை

யொன்றுவதளபெடைத்தொடையே. இவைமேற்கோள் எ-று. (௰௧)

(உ௱௰ங-சூ) மோனைகிளைமே அஆஐஔவும், இஈஎஏவும் உஊஒஓவும், சதவும் ஞநவும், மவவுமெனவே.

*எ-து.* மோனைத்தொடைக்கோர்சிறப்பிலக்கணமாமாறுணர்த்துதும். மோனையாவதற் கடிமுதற்கண்ணேவந்த முதலுயிரொழுத்து முயிர்மெய்யெழுத்து மீண்டுவரத்தொடுப்பதுமோனையாம். அவ்வவ்வெழுத்துத்தானேவரினும் அவற்றவற்றினவெழுத்துவரினுமிழுக்கா மோனையாவதற்கெழுத்தினமாவன அ-ஆ-ஐ-ஔ-என்னுமிந்நான்கு மொன்றற்கொன்றுமோனையாம். இ-ஈ-எ-ஏ-என்னுமிந்நான்கு மொன்றற்கொன்றுமோனையாம். உ-ஊ-ஒ-ஓ-என்னுமிந்நான்கு மொன்றற்கொன்றுமோனையாம் இவையுயிரெழுத்தினம் அன்றியும்-சதவும்-ஞநவும-மவவும்-ஒன்றற்கொன்றுமோனையாம். இவையுயிர்மெய்யெழுத்தினம் [வ-று] — ஔவைக்குறள். — அண்ணுக்குத்தன்னையடைத்தங்கமுதுண்ணில், விண்ணோர்க்குமேவந்தாய்விடும் — ஆதியொளியாகியாள்வானுந்தானுகி, யாதியவனுருவமாம் — ஐயைந்துமாயாலசத்தியொளிநோக்கற், பொய்யைந்தும்போகும்புறம் — நிகண்டு — ஔவையம்மையைந்தாளம்மையேயாயேயன்னை — இராப்பகலன்றியிருசுடரைச்சிந்திக்கில், பராபரத்தோடொன்றலுமாம் — ஈசனோடொன்றிவிசையாப்பொருளில்லைத், தேசவிளக்கொளியேயாம் — எள்ளகத்தியெண்ணெயிருந்தவாறெருக்குமே, யுள்ளகத்திலீசனியல் — ஏறுமதியமிறங்கிலுறங்கிடுங், கூஉறும்பூரணையாங்கோள் — உடம்பினாற்பெற்றபயனாவதெல்லா, முடம்பினிலுத்தமனைக்காண் — ஊறுமமுதத்தையுண்டங்குறப்பார்க்கின், மாறும்பிறப்பறுக்கலாம் — ஒருவற்கொருவனேயாகுமுயிர்க்கெல்லா, மொருவனேபல்குணமுமாம் — ஓசையுணர்வுகளெல்லாந்தருவிக்கு, நேசத்தாலாயவுடம்பு. இவைமுறையேயுயிரொழுத்தினமோனைவந்தவாறறிக அன்றியும் [வ-று] சங்குநிறம்போற்றவளவொளிகாணி, லங்கையினெல்லியதேயாம் — ஞானமாசாரநயவாரிடைப்புகலு, மேவனநால்வேதமிருக்குநெறி — மதியொடுகோளும்வன்னியொன்றுகவே, கதிரவனுமெனவேகாண் இவையுயிர்மெய்யெழுத்தினமோனைவந்தவாறறிக அவ்வவ்வுயிரொழுத்திற்குக்கூறியமோனையே அவ்வவ்வுயிரேறிய அவ்வவ்வுயிர்மெய்யெழுத்திற்குமாமெனக்கொள்க மோனை-அனு-என்பனவொருபொருள் இம்மோனையேவருக்கமோனை-நெடின்மோனை-வல்லினமோனை-மெல்லினமோனை-இடையினமோனை-தலையாகுமோனை-இடையாகுமோனை-கடையாகுமோனை-இரண்டாமடிமோனை-விட்டிசைமோனை எனப்பலவகைப்படும் [வ-று] பகலேபல்பூங்கானற்கிள்ளையோப்பியும், பாசிலைக்குழவியொடுகூதாளம்விரைஇப், பின்னும்பிணியவிழ்ந்தநன்னெடுங்கூந்தல், பிறங்கப்பெய்துதேம்படத்திருத்திப், புன்னையிரோதிசெய்குறிநசைஇப், பூந்தார்மார்பபுனத்துட்டோன்றிப், பெருவரையடுக்கத்தொருவேலேந்திப், பேயுமறியாமாவழங்குபெருங்காட்டுப், பைங்கணுழுவைப்படுபகைவெரீஇப், பொருதுசினந்தணிந்தபூணுதலொருத்தல், போதுதரவழங்குமாரிருணடுநாட், பௌவத்தன்னபாயிருணீந்தி, யிப்பொழுதுவருகுவையாயி, னற்றூர்மார்பதிணடலங்கதுப்பே. இஃதுபகரமெய்வருக்கமோனை. — ஆர்கலியுலகத்துமக்கட்செல்லா, மோதலிற்சிறந்ததன்றேயொழுக்கமுடைமை இஃதுநெடின்மோனை — கயலேருண்கண்களுமூரளுஞ், சுடர்புரைதிருநுதல்பசலைபாயத், திருந்திழையமைமேதோளரும்படருழப்பப், போகல்வாழியைய, பூத்தகொழுங்கொடியணிமலர்தயங்கப், பெருந்தண்வாடைவரூஉம்பொழுதே. இஃதுவல்லினமோனை. இவ்வாறேமெல்லினமோனையும் இடையினமோனையும்வருவதறிக. — பற்றுகபற்றற்றான்பற்றினையப்பற்றைப், பற்றுகபற்றுவிடற்கு. இஃதுதலையாகுமோனை — மாவும்புள்ளும்வதிவயிற்படர, மாநீர்விரிந்தபூவுங்கூம்ப, மாலைதொடுத்தவாடை, மாமேயாளின்னுயிர்ப்புறத்திறுத்தற்றே. இஃதிடையாகுமோனை-பகலேபல்பூங்கானலென்பதுகடையாகுமோனை — உபதேசகாண்டம். — ஊறுமாமறையோதியதத்தையே, யூறுமாமறையோதியதத்தையே, நாறுபூமலர்நந்தவனங்களே, நாறுபூமலர்நந்தவனங்களே. இஃதிரண்டடிமோனை அ அவனும் இ இவனுங்கூடியக்கால் எ எவனைவெல்லாரிகல் இஃதுவிட்டிசைமோனை பிறவுமன்ன. (௰௨)

(உ௱௰ச-சூ.) எதுகையென்ப விவையனமொழிகண், முதலெழுத்தளவொத்து முதலொழித்தொன்றுதன், மூன்றுமெழுத்தொன்றலாசினந்தவலியர், சிடைகடையாறுமெதுகைவகையே.

* எ-து.* எதுகைத்தொடைக்கோர் சிறப்பிலக்கணமாமாறுணர்த்தும். இரண்டாமெழுத்தொன்றிவரத்தொடுப்பதெதுகையெனப்படும் ஆயினுமுதலெழுத்துத்தானேவாராமன் முதலெழுத்தெல்லாந்தம்முண்மாத்திரையளவோ டொத்தனவாதல்வேண்டும் — முதலெழுத்தளவோடொத்ததுமுதலா, வஃதொழித்தொன்றிவருமெதுகை — என்றார்பல்காயனார் ஆசையிர்கட்டென்பதற்குப் பட்டென்பதெதுகையல்லது, பாடடென்பதெதுகையாகாது ஆகலின் ஐகார ஔகாரங்கணெட்டெழுத்தாயினுமடிமுதல்வருங்கால் -ய-வ-என்னுமொற்றடுத்து வந்தகுற்றெழுத்தாக வெண்ணப்படும் [வ-று.] ஔவைக்குறள் மெய்யகத்துள்ளேவிளங்கச்சுடர்சாணிற், கையகத்துநெல்லிக்கனி — குறள். — அவ்வித்தழுக்காறுடையானைச்செய்யவ, டௌவையைக்காட்டிவிடும் — கையிரண்டென்பதற்கு மெய்யிரண்டு எ-ம். ஔவியமென்பதற்குச்செவ்வியல் எ-ம் எதுகையாம் அன்றியும் இரண்டாமெழுத்தொன்றுவதெதுகையென்புழி யொற்றெழுத்தெனக்கொள்க. உயிரில்லாவொற்றுகவரினும் உயிரேறியவுயிர்மெய்யாகவரினும்அவ்வொற்றெழுத்து வருவதேயெதுகையாயினும் -ய-ர-ழ- என்னுமூன்றொற்றின்கீழ்மற்றோரொற்றுவரினுமெதுகையாம் [வ-று] — குறள் — ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான் கேண்மைகடைமுறை, தான்சாந்துயரந்தரும் — ஔவைக்குறள் — மெய்ப்பாலறியாதவூடர்தந்நெஞ்சத்து, ளப்பாலதாகுஞ்சிவம் — யார்க்குந்தெரியாதருவந்தவனை நோக்கிப், பார்க்கப்பராபரமேயாம். — பாழ்ங்கணறு என

வரும் ஆர்ந்தன - சேர்ந்தன - எதுகையல்லது சேர்ந்தானென்பதற்குப் பார்ப்பானென்பதில் - ரகரவொற்றுநிற்பினுமதன்கீழ்வந்தவொற்றுமாறினவதனுமெதுகையாகாதபிறவுமன்ன அன்றியுமூன்றாமெழுத்தொன்றெதுகையும் - ஆசெதுகையும் - இனவெதுகையும் - தலையாகெதுகையும் - இடையாகெதுகையும் - கடையாகெதுகையும் - எனவறுவகைப்படும் இவற்றுளிரண்டாமெழுத்தாசவந்தவொற்றுமாறியொற்றின்கீழ்வருமுயிர்மெய் வரப்பெறின் மூன்றாமெழுத்தொன்று மெதுகையெனப்படுமாயினுமிதுசிறப்பன்று [வ-று.] — குறள். — பொய்ம்மையும்வாய்மையிடத்தேபுரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின் இஃது மூன்றாமெழுத்தொன்றெதுகை அன்றியும் - ய - ர - ல் - ழ - என்னுநான்கொற்றொழிபினுமவற்றின்கீழ் வருமெழுத்தொன்றுவதாசெதுகையெனப்படும்—யரலழவென்னுமீரிண்டொற்றும், வரன்முறைபிறழாதுவருவதிடையுயிர்ப்பி, னாசிடையெதுகையென்றறிந்தனர்கொளலே [வ-று.] காய்மாண்டதெங்கின்பழம்வீழக்கமுகினெற்றிப், பூமாண்டதீந்தேன்றொடைகீறிவருக்கைபோழ்ந்து, தேமாங்கனிசிதறவாழைப்பழங்கள்சிந்து,மேமாங்கதமென்றிசையாற்றிசைபோயதன்றே. இஃதுயகரவொற்றிடைவந்தவாசெதுகை — மாக்கொடியாவனையுமௌவற்பந்தருங், கார்க்கொடிமுல்லையங்கந்தமல்லிகைப், பூக்கொடிப்பொதும்பருங்கானலூழலுந், தூக்கொடிசமழ்ந்துதான்றுறக்கமொக்குமே இஃதுரகரவொற்றிடைவந்தவாசெதுகை — ஆவேறுருவினவாயினுமாயந்த, பால்வேறுருவினவல்லவாம், பால்போ, லொருதன்மைத்தாகுமறநெறியாபோ, லுருவுபலகொளலீங்கு இஃது லகரவொற்றிடைவந்தவாசெதுகை—அந்தரத்துள்ளயகங்கைபுறங்கையா, மந்தரமேபோலுமவணிவாழ்க்கை, யந்தரத்து, வாழ்கின்றேமென்றுமகிழன்மின்வாழ்நாளும், போகின்றபூவணாயேபோன்று. இஃது ழகரவொற்றிடைவந்தவாசெதுகை. அன்றியும் வல்லினமுதன்மூவினமுநதம்முண்மயங்கினினவெதுகையெனப்படும்[வ-று]தக்கார்தகவிலரென்பதவரவ, ரெச்சத்தாற்காணப்படும் இஃதுவல்லினவெதுகை — அன்பீனுமார்வமுடைமையதுவீனு,நண்பென்னுநாடாச்சிறப்பு இஃதுமெல்லினவெதுகை—எல்லாவிளக்கும்விளக்கல்லசான்றோர்க்குப்,பொய்யாவிளக்கேவிளக்கு இஃது இடையினவெதுகைஅன்றியுமுதற்சீர்முழுதுமொன்றிவருவதுசிறப்பாயதலையாகெதுகையெனவும் இரண்டாமெழுத்தொன்றே வருவதிடையாகெதுகையெனவும் சீரீற்றெழுத்தொன்றேவருவதுகடையாகெதுகையெனவுமாம் இவற்றிற்குசாரணமினிவருஞ்சூத்திரத்திற்காண்க சூத்திரத்திலோதுமென்றதனமையினூல் - உயிரொதுகை - நெடிலெதுகை - வருக்கவெதுகை - இடையிட்டெதுகை-இரண்டடியெதுகை முதலியவுங்கொள்க [வ-று] துனியொடுமெய்ந்நயதாங்கிருண்டநா, ளணிகிளர்தாரோயருஞ்சுரநீந்தி, வடிவமையெஃசம்வலவயினேந்தித், தனியேவருதிநீமெயின், மையிருங்கூந்தலுய்தலோவரிதே இஃது இரண்டாமெழுத்தொன்றாதாயினும் இரண்டாமெழுத்தின்மேலேறியவுயிரொன்றி வந்தமையால் உயிரொதுகையென்றுகையனார்காட்டியசெய்யுள். — ஆவாவென்றேயஞ்சினராழ்ந்தாரொருசாரார், கூகூவென்றேகூவிளிகொண்டாரொருசாரார், இஃதிரண்டாமெழுத்தொன்றாதாயினு மிரண்டாமெழுத்தினெடிலொப்புமைநோக்கி நெடிலெதுகையெனப்படும் —ஔவைக்குறள். — நாடிவழக்கமறிந்துசெறிந்தடங்கி, நீடொளிகாண்பதறிவு இஃது டகரமெய்வருக்கவெதுகை—மேவலியமுதைவிலங்காமற்றுனுண்ணிர், காலவனவஞ்சிக்கலாம் இஃதுசெரமெய்வருக்கவெதுகை — தோடாரெல்வளைநெகிழநாளு, நெய்தலுண்கண்பைதலுழப்ப, வாடாவவ்வரிபுதைஇப்பசலையும், வைகறோறும்பையப்பெருகி, நீடாரிவரெனநீண்பணங்கொண்டோர், சேளார்கொல்லோகாதலர்தோழி, வாடாப்பௌவமறமுகந்தெழிலி, பருவஞ்செய்யாதுவலனேர்புவளைஇ, யோடாமலையவேலிர், கடிதுமின்னுமிக்கார்மழைக்குரலே. இஃதடியிடையிட்டுவந்தமையாலிடையிட்டெதுகையென்றுதொல்காப்பியர் காட்டியபாட்டு — நாலடியார். — புதுப்புனலும்பூங்குழையார்நட்புமிரண்டும், விதுப்பறநாடின்வேறல்லப், புதுப்புனலு, மாரியறவேயறுமேயவரன்பும், வாரியறவேயறும். இஃதுமுன்பிரண்டடியுமோரொதுகையாய்ப் பின்பிரண்டடியுமற்றோரொதுகையாய் வந்தமையாலிரண்டடியெதுகை — இலைமுத்தநாளெல்லைபிகவாபிளைழத்தொரீஇக், கூற்றங்குதித்துய்ந்தாரீங்கில்லை, யாற்றப், பெரும்பொருள்வைத்தீர்வழங்குமினவளுத், தழீஇஇந்தழீஇந்தண்ணம்படும் இஃதிடையிரண்டடியொழிந்தவேனையிரண்டடியுமோரொதுகை. — தவலருந்தொல்கேள்வித்தன்மையுடையா, ரிகலிலரெஃகுடையார்தம்முட், குழீஇ, நகலினினிதாயிற்காண்பாமகல்யானத், தும்பருறைவார்பதி இஃதீற்றடிபுமுதலடியுமொழிந்தவேனையிரண்டடியுமோரொதுகை. — ஒருநன்றிசெய்தவர்க்கொன்றியெழுந்த, பிழைநூறுஞ்சான்றோர்பொறுப்பர், கயவர்க், கெழுநூறுநன்றிசெய்தொன்றுதீதாயி, னெழுநூறுந்தீதாய்விடும் இஃதுமுதலாமடியொழிந்தவேனை மூன்றடியுமோரொதுகை — சொன்னேனசழிந்தன்றிவளுமையுமின்னே, பிணியொடுமூப்புவருமாற், றுணிவொன்றி, யென்னொடுசூழாதெழுநெஞ்சேபோதியே, நன்னெறிசேர நமக்கு இஃதிரண்டாமடியொழிந்தவேனை மூன்றடியுமோரொதுகை — மாக்கேழ்மடநல்லாயென்றாற்றுஞ்சான்றவர், நோக்கார்கொலோநொய்யதோர்புக்கில்லை, யாக்கைக்கோ, ரீச்சிறகன்னதோர்தோலறினும் வேண்டுமே, காக்கைகடிவதோர்கோல். இஃதுமூன்றாமடியொழிந்தவேனை மூன்றடியுமோரொதுகை. — எறிநீர்ப்பெருங்கடலெய்தியிருந்து, மறுநீர்சிறுகணற்றாறல்பார்த்துண்பர், மறுமையறியாதாராக்கத்திற்சான்றோர், கழிநல்குரவேதலை. இஃதுநான்காமடியொழிந்தவேனை மூன்றடியுமோரொதுகை. என்றொருசாரார் பரி-திரு-இரை-இரவு-எதுகையாம். இரீ-இராமெதுகையாகா எ-று. (௰௩)

(௨௱௰௫-சூ.) தலையாகெதுகை தலைச்சீர்முழுதுற, விடைகடையவ்வவ்வெழுத்தொன்றுவதே.

*எ-து.* இதுவுமது முதலெழுத்தொன்றல்லாது முதற்சீரெழுத்தெல்லாந்தாமே மீண்டுவருவது தலையாகெதுகையெனப்படும் அங்ஙனங்கருவியென்றதற்கு-மருவி - அருவி - உருவி - குருவி - என

வந்தொருசீர்முழுதொன்றுவதரிதாயினும் புகழப்படுஞ்சிறப்புடையதலையாகெதுகையாம் [வ-று.] குறள் — சிற்றின்பம்வெஃகியறனல்லசெய்யாரே, மற்றின்பம்வேண்டுபவர். — கலித்துறை. — கரோருகம்போல்வளரென்பாவந்தீக்கவின்மதிபூண், சரோருகமென்சேவடிகண்டணியென்னேதர்ரசைசூழ், சிரோருகம்பூப்பப்புணர்பவத்திதன்றுஞ்செழுங்கருவண, யுரோருகமாகவிவளாகாவனூரமலோற்பவியே. — விருத்தம் — துறவினுளுடலிருக்கைதுறந்ததோருயிர்களொப்பா, ருறவினுலன்பின்மிக்கோருயிர்க்கெலாமுடல்களொப்பா, ரறவினூல்வழீஇயதன்மைத்தருண்மலியமரரொப்பார், நறவினலலர்ந்தகானுநலத்தில்வாளுல்கொப்பாமே எனபனபிறவுமுதலொருசீர் முழுதொன்றித்தொடுத்ததலையாகெதுகை வந்தவாறு காண்க. மீளவும்பலசீரொன்றித்தொடுத்துவரினதின்மிக்கசிறப்பெனக்கொள்க. [வ-று.] — வெண்பா — நீணிறத்தாற்சேவலிகிறம்பெயரநீடியதன், ருணிறத்தாற்பொய்கைத்தலஞ்சிவப்ப, மாணிறத்தான், முன்னப்புட்டோன்றருளளித்தலைவைகு, மன்னப்புட்டோன்றுமருகு. எனமுதற்றொடைக்கண்ணொருசீருமிரண்டாந்தொடைக்கண்ணிருசீருமொன்றித்தொடுத்தவாறுகாண்க. — விருத்தம். — யாவலையெழுங்கடலேந்தியதேர்பரிகாற், சேவலையெழுங்கடல்சென்றுசெழுங்கடன்மே, லேவலையெழுங்கடன்மோதலெனப்பகைவர், தாவலையெழுங்கடலோடுதலைப்படுமால். எனவும் காமமேபறவைத்தேர்மேற்கசடெனும் பாவலைச்சேர்ந்தாள், வீமமேபறவைத்தேர்மேல் விலாதவக்குறிஞ்சிஞான, வாமமேபறவைத்தேர்மேல்வளரறமுல்லைசேர்ந்தென், ஞமமேபறவைத்தேர்மேனயப்பவானுட்டைச்சேர்வாள். எனவும் நான்கடிக்கண்ணிருசீருமுச்சீரு மொன்றித்தொடுத்தவாறுகாண்க. பிறவுமன்ன. அன்றியு மிரண்டாமெழுத்தொன்றேமாறாது தொடுத்துவருவதிடையாகெதுகையெனப்படும். [வ-று.] — குறள் அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன்முதற்றேயுலகு. எ-ம் அன்றியுமுதற்சீர்க்கடையெழுத்தொன்றே மாறாதுதொடுத்துவருவது கடையாகெதுகையெனப்படும் [வ-று] எச்சத்தாரொன்றதற்குச்சுற்றத்தாரெனவும் பரியாவென்றதற்குமணியாலெனவும்பிறவுங்கடையாகெதுகை ஆயினுமிதுசிறப்பன்று எ-று. (௰௪)

(உரை௯௬-௬.) மோனைமுதலடிமுதல்வரினடியே, யிணைவதிணையேயிடைவிடல்பொழிப்பே, யிருவதோரூஉவீன்றொன்றொழிவது, கூழைமுதலயல்குன்றன்மேற்கதுவா, யீற்றயலொன்றொன்றுதெனிற்கீழ்க்கதுவா, யெல்லாமொன்றுவதெனின்முற்றென்ப.

*எ-து.* இனித்தொடைவிகற்பமாமாறுணர்த்துதும் மேற்கூறிய-மோனை - இயைபு - எதுகை -முரண் - அளபு -எனவைந்தொகையும ஒவ்வொன்றெண்வகைப்படுமெனக்கொள்க. (இவற்றை-உரை௯அருஞ்சூத்திரத்திற்காண்க.) அவற்றுள் அடிதோறுமுதலெழுத்தொன்றிவரத்தொடுப்பது அடிமோனைத்தொடையும் அடிதோறுமிறுதிக்கண்ணெழுத்தொன்றி வரத்தொடுப்பது அடியியைபுத்தொடையும் அடிதோறுமிரண்டாமெழுத்தொன்றி வரத்தொடுப்பது அடியெதுகைத்தொடையும் அடிதோறுமுதற்கண்மொழியானும்பொருளானுமறுதலைப்படத்தொடுப்பது அடிமுரண்டொடையும்அடிதோறுமுதற்கண்ணுயிரளபெடையு மொற்றளபெடையு மொன்றிவரத்தொடுப்பது அடியளபெடைத்தொடையுமெனப்படும்—முதலெழுத்தொன்றின்மோனையெதுகை, முதலெழுத்தியைபோடொத்ததுமுதலொ,மஃதொழித்தொன்றினுருமென்ப. என்றார்பல்காயனர். — இறுவாயொப்பினஃ தியைபெனமொழிப. என்றார்கையனர் — மொழியினும்பொருளினுமுரணுத்தன்முரணே. என்றார்தொல்காப்பெருமைத்தொல்காப்பியனர். —அளபெடைத்தொடைக்கேயளபெடையொன்றும் என்றார்நற்றத்தனர் [வ-று] — மாவும்புள்ளும்வதிவயிற்படர, மானீர்விரிந்தபூவுங்கூம்ப, மாலைதொடுத்தகோதையுங்கமழ, மாலைவந்தவாடை, மாயோளின்னுயிர்புறத்திறுத்தற்றே இஃதடிதோறுமுதலெழுத்தொன்றிவரத்தொடுத்தமையாலடிமோனைத்தொடை — இன்னகைத்துவர்வாய்க்கிளவியுமணங்கே, நன்மாமேனிச்சுணங்குமாரணங்கே, யாடமைத்தோளிகூடலுமணங்கே, யரிமதர்மழைக்கண்ணுமணங்கே, திருநுதற்பொறித்ததிலதமுமணங்கே. இஃதடிதோறுமிறுதியெழுத்துஞ்சொல்லு மொன்றிவரத்தொடுத்தமையாலடியியைபுத்தொடை. — வடியோர்கணீர்மல்கவான்பொருட்கட்சென்றார், கடியார்கனங்குழாய்காணார்கொல், காட்டி, னிடிபின்முழக்கஞ்சிபீர்ங்கவுள்வேழம், பிடியின்புறத்தசைத்தகை. இஃதடிதோறுமிரண்டாமெழுத்தொன்றிவரத்தொடுத்தமையா லடியெதுகைத்தொடை — இருள்பரந்தன்னமானீர்மருங்கி, னிலவுகுவித்தன்னவெண்மணலொருசிறை, யிரும்பினன்னகருங்கோட்டுப்புன்னை, பொன்னினன்ன நுண்டாதிறைக்கு, ஞ்சிறுகுடிப்பரதவர்மடமகள், பெருமதர்மழைக்கணுமுடையவாலணங்கே. இஃதடிதோறுஞ்சொல்லானும் பொருளானுமறுதலைப்படத் தொடுத்தமையா லடிமுரண்டொடை — ஆஅவளியவலவன்றன்பார்ப்பினோ, டீஇரினையுங்கொண்டூஉவாப்பள்ளியுட், டூஉந்திரையலைப்பத்துஞ் சாதிறைவன்றேண், மேஎவலைப்பட்டநம்போனறுதுதா, வோஒவுழக்குந்துயர். இஃதடிதோறுமுதற்கணளபெடுத்தொன்றி வரத்தொடுத்தமையாலடியளபெடைத்தொடை அன்றியும்ஒவ்வோரடிவரையுள்ளுமோனைமுதலைந்தும் வரப்பெறும் வருங்காலுநாற்சீரான்வருமளவடியைப்பற்றி யெழுவிகற்பாகும் ஆகையின்முதலெழுத்திரண்டாஞ்சீர்க்கண்வரின். இணைமோனை-எ-ம் மூன்றாஞ்சீர்க்கண்வரின் பொழிப்புமோனை - எ-ம் நான்காஞ்சீர்க்கண்வரின் - ஒரூஉமோனை - எ-ம் இறுதிச்சீரொழித்தொழிந்த சீர்க்கண்வரின் - கூழைமோனை - எ-ம். இரண்டாஞ்சீரொழித்தொழிந்த சீர்க்கண்வரின் - மேற்கதுவாய்மோனை - எ-ம் மூன்றாஞ்சீரொழித்தொழிந்த சீர்க்கண்வரின் - கீழ்க்கதுவாய்மோனை - எ-ம் எல்லாச்சீர்க்கண்வரின் முற்றுமோனை எ-ம் கொள்க. — யாப்பருங்கலம். — இருசீர்மிசைவரத்தொடுப்பதிணையே — முதலொடுமூன்றாஞ்சீர்த்தொடைபொழிப்பே — சீரிரண்டிடைவிடத்தொடுப்பதொரூஉத்தொடை — மூவொருசீரு முதல்வரத்தொடுப்பது, கூழையென்மனார்குறிப்புணர்ந்தோரே — முதலயற்சீரொழித்தல்லனமூன்றன், மிசை

வரத்தொடுப்பதுமேற்கதுவாயே — ஈற்றயற்சீரொழித்தெல்லாந்தொடுப்பது, கீழ்க்கதுவாயின்கிழமையதாகும் — சீர்தொறுந்தொடுப்பதுமுற்றெனப்படுமே. என்றாராகலின் [வ-று] — திருக்காவலூர்க்கலம்பகத்தகவல் — பனிமதுப்பதுமந்தன்னிகன்மறந்து, குனிமதிப்பிறைமேற் கோங்குமிழ்ந்தலரவுந், தொல்வலயந்தற்பகையொழிந்துசூட்டொழிச், தெல்வலயுமென்னுளத்திவளம்பிறைவீசவுந், தொற்பகைப்பரிதிசெய்சுடர்முன்றேலா, நற்பகனண்ணியவுடுவொளிநல்கவு, மவையொருங்கணிதேவருங்கொடியலிருச்; சுவையொருங்கமைகனிசுமந்துயர்நிமிரவும், பெருந்திருக்கலாபப்பீலிளாடு, மருந்திருக்காவலூரகத்துக்கண்டேன், கண்டுளம்பிணித்துகுங்கனிதே, னுண்டுளம்பிரிவினியூழியுமரிதே. இப்பன்னீரடியகவலுண்முதலேழடிக்கண்முறையே இவணமோவனை - பொழிப்புமோவனை - ஒரூஉமோவனை - கூழைமோவனை - மேற்கதுவாய்மோவனை - கீழ்க்கதுவாய்மோவனை - முற்றுமோவனை - எனவெழுவகைமோவனையும்வந்தவாறறிக. — மொய்யுளங்குளிர்க்குமுகிலேபொழிலே, பெய்யுளமயிலேபேர்க்குநிழலே, வில்லேயேந்தியவிதுவதிகழலே, யெல்லாமொலேயியலேயுடலே, வெயிலேவயலேமின்றவழ்குழலே, குயிலேநிகராக்குரலேசொல்லே, மயிலேயியலேமயலேவிகலே, யிவ்வுருவிங்ஙனமெய்தலி, னெவ்வுயிராயவைத்துமின்னுயிராயவே. இதனுளிவணயியைபுமுதலாகியவெழுவகையியைபும்வந்தவாறறிக. ஈற்றெழுத்தொன்றிமீண்டுவருவதியைபென்றுகையி லிதற்கடியீற்றின்கண்வந்தசீர்முதற்சீராகக்கொண்டுவரும்புணர்கெதிரேபோவதுபோன்மூன்றுஞ்சீரிரண்டாஞ்சீராகவுமிரண்டாஞ்சீர் மூன்றுஞ்சீராகவுமுதற்சீர் நான்காஞ்சீராகவுங்கொள்க. — பொன்னினன்னபொறிசுணங்கேந்தி, பன்னருங்கோங்கினன்னலங்கவற்றி, மின்னவிரொளிவடந்தாங்கியன்னிய, நன்னிறமென்முலைமின்னிடைவருத்தி, யென்வணயுமிடுக்கண்டுன்னிவித்தின்னடை, யன்னமென்பெடைபோலப்பன்மலர்க்கன்னியம், புன்வணயினீழற்றுன்னிய, மயிலோசாயல்வாணுத, வயில்வேலுண்கணெம்மறிவுதுவலைத்தனவே. இதனுளிவணயெதுகைமுதலாகியவெழுவகையெதுகையும்வந்தவாறறிக. — திருக்காவலூர்க்கலம்பகவிருத்தம். — ஆங்கமலத்தேங்கமலமாய்நிலாத், தாங்கவருபாங்கவருதாளெழீஇ, நீங்கவவலயாங்கவவலீசவென், றீங்குவகைநீங்குவகைசேர்ந்ததே. இதுவுமது — சிறடிப்பேரகலல்குலொல்குபு, சுருங்கியநுசுப்பிற்பெருவடந்தாங்கிச், குவிந்துசுணக்கரும்பியசொங்கைவிரிந்து, சிறியபெரியநிகர்மலர்க்கோதைதன், வெள்வவளைத்தோளுஞ்சேயரிக்கருங்கணு, மிருக்கையுநிலையுமேந்தெழிலியக்கமுங், துவர்வாய்த்தீஞ்சொலுமுவந்தவணமுனியா, டொன்றுமின்னணமருமதி, பொன்றிகழ்நெடுவேற்போர்வல்லோயே. இதனுள் இவணமுரண்முதலாகிய வெழுவகைமுரணும்வந்தவாறறிக. — தாஅட்டாமரைமலருழக்சிப், பூஉக்குவளைப்போஒதருந்திச், சாஅய்ச்செங்நெற்சறித்துப்போஒய், மாஅத்தாண்மோஒட்டெருமை, தேஎம்புனலிடைசோஒபான, மீஇலுஅர்ந்துசலுஞ், சீஇரோஒஅர்நீஇணீஇருரன், செய்தகேண்மை, யாய்வவளைததோழிக்கலராளுவே — இதனுளிவணயளபெடைமுதலாகிய வெழுவகையளபெடையும் வந்தவாறறிக. எ-று. (௰௫)

(௨௱௰௭-சூ.) அந்தாதியடிக் கடைபாதியாத, லிரட்டைமுழுதோ ரிறையடிக்கியவடி, செந்தொடைதொடையொன்றுஞ் சேராவடியே.

*எ-து* அந்தாதித்தொடையுமிரட்டைத்தொடையுஞ்செந்தொடையுமாமாறுணர்த்துதும். மோவனைமுதலலந்தொடையுங் கூறியவடிமுதலெண்வகைவிகற்பத்தொடுகூட்டிக் குனிக்கச்சொன்னதொடையுந் தொடைவிகற்பமுநாற்பதெனக்கண்டுணர்க. அவையுமன்றி அந்தாதித்தொடை - இரட்டைத்தொடை-செந்தொடை - இம்முத்தொடையுமுளவெனச்கொள்க. இவற்றுள் அடிதோறுமிறுதிக்கணின்ற வெழுத்தானுமசையானுஞ்சீரானுமடியானு மற்றையடிக்காதியாகத்தொடுப்பது அந்தாதித்தொடையெனப்படும் [வ-று.] உலகுடன்விளக்குமொளிகிளரவிர்மதி, மதிநலனழிக்கும்வளங்கெழுமுக்குடை, முக்குடைநீழற்பொற்புடையாசன, மாசனத்திருந்ததிருந்தொளியறிவவனை, யறிவுசேருள்ளமொடருந்தவம்புரிந்து, துன்னியமாந்தரெனப், பன்னருஞ்சிறப்பின்விண்மிசையுலகே. எனவெழுத்தானுமசையானுஞ்சீரானுமடிதோறு மந்தாதித்தொடைவந்தவாறுகாண்க. அன்றியும் அளவடிக்கண்ணேயோரடிமுழுதுமொருசொல்லேவரத்தொடுப்ப திரட்டைத்தொடையெனப்படும் இதனுளீற்றெழுத்தொன்றுகுறையினுமிழுக்கா [வ-று.] — ஒக்குமேயொக்குமேயொக்குமேயொக்கும், விளக்கினுட்சிறெரியொக்குமேயொக்குங், குளக்கோட்டிப்பூவினிறம். எனமுதலடியிரட்டைத்தொடையாகவந்தவாறுகாண்க. அன்றியுமோவனைமுதலாகியதொடையுந் தொடைவிகற்பமுமின்றிவேறுபடத்தொடுப்பது செந்தொடையெனப்படும் இதனுண்முதலசையானுமுதற்சீரானுமடிதோறும் வேறுபடத்தொடுத்தமைபிற்சிறப்புடைச்செந்தொடையாமெனக்கொள்க. [வ-று.] — அகவல். — பூத்தசல்லகிவிபன்சிவணைக்காவின்மிசைதிருக்காவலூரகத்தின்பெழுந்தாளும்வான்மதியாளே. எனத்தொடைவிசற்பமின்றி யசையுஞ்சீருந்தம்முண்மறுதலைப்படத் தொடுத்தமையாற்சிறப்புடைச் செந்தொடைவந்தவாறுகாண்க. — யாப்பருங்கலம் — செந்தொடையிரட்டையோடந்தாதியெனவும், வந்தவகையான்வழங்குமன்பெயரே. — ஈறுமுதலாத்தொடுப்பதந்தாதியென், றேதினர்மாதோவுணர்ந்திசினோரே. — இரட்டையடிமுழுதொருசீரியற்றே — செந்தொடையொவ்வாத்திறத்தனவாகும். — காரிகை. — அந்தமுதலாய்த்தொடுப்பதந்தாதியடிமுழுதும், வந்தமொழியேவருவ திரட்டைவரன்முறையான், முந்தியமோவனைமுதலாமுழுதுமொவ்வாதுவிட்டாற, செந்தொடைநாமம்பெறுநறுமென்குழற்றேமொழியே. இவைமேற்கோள் எ-று. (௰௬)

(௨௱௰௮-சூ.) அடியிவணப்பொழிப் பொரூஉக்கூழைமேற்கீழ்க், கதுவாய்முற்றெனவெட்டொடுமோவனை, யியைபெயெதுகைமுரணேயளபே, யெனவைந்துறழவெண்வணந்தாகி, யடியந்தாதியிரட்டைச்செந்தொடை,யெனவிம்மூன் றுமியையத்தொடையும்;விகற்பமுமெண்வணந்தொருமூன்றென்ப.

* எ-து. * மேலேவகுத்துரைத்தநாற்பதின்மூன்றுதொடையுந்தொடைவிகற்பமுமீண்டுத்தொகுத்துக்காட்டுதும் அடிமுதல்வெட்டுடனே மோனைமுதலாந்திணையுங் கூட்டியுறழநாற்பதாகும் அவையவருமாறு, அடிமோனை - இணைமோனை - பொழிப்புமோனை - ஒரூஉமோனை - கூழைமோனை - மேற்கதுவாய்மோனை - கீழ்க்கதுவாய்மோனை - முற்றுமோனை - எ-ம். அடியியைபு - இணையியைபு - பொழிப்பியைபு - ஒரூஉவியைபு - கூழையியைபு - மேற்கதுவாயியைபு - கீழ்க்கதுவாயியைபு - முற்றியைபு - எ-ம். அடியெதுகை - இணையெதுகை - பொழிப்பெதுகை - ஒரூஉவெதுகை - கூழையெதுகை - மேற்கதுவாயெதுகை - கீழ்க்கதுவாயெதுகை - முற்றெதுகை - எ-ம். அடிமுரண் - இணைமுரண் - பொழிப்புமுரண் - ஒரூஉமுரண் - கூழைமுரண் - மேற்கதுவாய்முரண் - கீழ்க்கதுவாய்முரண் - முற்றுமுரண் - எ-ம் அடியளபெடை - இணையளபெடை - பொழிப்பளபெடை - ஒரூஉவளபெடை - கூழையளபெடை - மேற்கதுவாயளபெடை - கீழ்க்கதுவாயளபெடை - முற்றளபெடை - எ-ம் வரும் அன்றியும் அந்தாதித்தொடை - இரட்டைத்தொடை - செந்தொடை - எ-ம். வரும் — யாப்பருங்கலம். — மோனையெதுகைமுரணியைபளபெடை, பாதமிணையேபொழிப்போ டொரூஉத்தொடை, கூழைகதுவாய் மேலதூஉங்கீழதூஉஞ், சீரியமுற்றெட்டுச்சிவணுமாசவையே இதுமேற்கோள். எ-று (௩௭)

முதலாமோத்துச்செய்யுளுறுப்பு முற்றிற்று.

# இரண்டாமோத்துச்செய்யுளியல்.

(௨௱௧௯-சூ.) வெண்பாவகவல்விரிகலிவஞ்சி, மருட்பாவெனவைவகைப்பாவன்றியுந், துறைதாழிசை விருத்தந்தூக்கெனமூன்றே.

* எ-து. * பாவும்பாவினமுமாமாறுணர்த்துதும் மேற்கூறியவுறுப்பினாற்பாவும் பாவினமுமாகும் இவையே - வெண்பா - ஆசிரியப்பா - கலிப்பா - வஞ்சிப்பா - மருட்பா - எனபாவைவகையாமெனக்கொள்க. அன்றியும் துறை - தாழிசை - விருத்தம் - எனமருட்பாவொழித்தொழிந்தமற்றைநாற்பாவிற்கினமூன்றுமெனவுங்கொள்க. ஆகையிவ்வைவகைப்பாவுமுந்நான்கினமுமாகச் செய்யுள்வகையொருபதினேழென்பர் அவையாவன வெண்பா - வெண்டுறை - வெண்டாழிசை - வெளிவிருத்தம் - எ-ம். ஆசிரியப்பா - ஆசிரியத்துறை - ஆசிரியத்தாழிசை - ஆசிரியவிருத்தம் - எ-ம் கலிப்பா - கலித்துறை - கலித்தாழிசை - கலிவிருத்தம் - எ-ம். வஞ்சிப்பா - வஞ்சித்துறை - வஞ்சித்தாழிசை - வஞ்சிவிருத்தம் - எ-ம். மருட்பாவோடுபதினேழாம் இவ்வகைச்செய்யுளெல்லா மிவ்வோத்தின்கண்ணே விளங்குவதாகையினிவ்வோத்துச்செய்யுளியலெனும் பெயர்த்தெனக்கொள்க. — யாப்பருங்கலம். — செய்யுட்டாமேமெய்ப்பெறவிரிப்பிற், பாவேபாவினமெனவிரண்டாகும் — வெண்பாவாசிரியங்கலிவஞ்சி; பண்பாய்ந்துரைத்தபாநான்கும்மே — தாழிசைதுறையேவிருத்தமென்றிவை, பாவினம்பாவொடுபாற்பட்டியலும் இவை மேற்கோள் எ-று. (௧)

(வெண்பாவிலக்கணம்வருமாறு.)

(௨௱௨௰-சூ) வெள்ளைக்கியற்சீர் வெண்சீர்விரவி, யேற்குமளவடி யீற்றடிசிந்தடி யீற்றுச்சீரசைச்சீருக்குறண்மிசலுமாம்.

*எ-து* நிறுத்தமுறையானே வெண்பாவியல்பும்விகற்பமுமாமாறுணர்த்துதும் வெண்பாவிடத்துத்தனக்குரிச்சீராகிய நேரீற்றலுவசைச்சீரும் வெண்சீருமன்றியீரசைச்சீராகிய வியற்சீரும்வரப்பெறும் அன்றியும் வெண்பாவெல்லாமளவடியானே நடக்குமாயினுமீற்றடிசிந்தடியாகவருமிதனீற்றுச்சீர்நாண்மலரெனுமோரசைச்சீராம் ஆயினுமிவ்வோரசைக்குக்குற்றியலுகரங்கூட்டிக்காசுபிறப்பெனவெண்பாவிற்கீற்றுச்சீராகவரவும்பெறுமே [வ-று] — குறள். — சொல்லப்பயன்படுவர்சான்றோர்கரும்புபோற் கொல்லப்பயன்படுங்கீழ் எ-ம். எனப்பகையுற்றாருமுய்வர்வினைப்பகை, வீயாதுபின்சென்றடும் எ-ம். அறங்கெட வெஞ்ஞான்றுஞ்செய்யற்கசெய்யிற், றிறங்கெடச்சாதலிற்றீது. எ-ம். சிறுவரையே யாயினுஞ்செய்தநன்றல்லாற், றுறுபயனில்லையுயிர்க்கு. எனவுமிவையளகிடுங்கால்வெண்சீரியற்சீர்விரவிமுதற்கண்ணளவடியாகவுமீற்றின்கண் சிந்தடியாகவுமீற்றுச்சீர்முறையே நாள் - மலர் - காசு - பிறப்பு - என நான்கும்வந்தவாறுகாண்க. அன்றியுமோரோவிடத்திலக்கியவழியான் முற்றியலுகரங்காசுபிறப்பென்னுமீற்றுச்சீராகவரப்பெறும் [வ-று.] எவ்வதுறைவதுலகமுலகத்தோ, டவ்வதுறைவதறிவு. எனவிதுமுற்றியலுகரத்தோடு வந்தபிறப்பு என்னும்வாய்பாடு பிறவுமன்ன — யாப்பருங்கலம். — செப்பலிசையனவெண்பாமற்றவை, யந்தடிசிந்தடியாகுமவ்வடி, யந்தமசைச்சீராகவும்பெறுமே. எ-று. (௨)

(௨௱௨௧-சூ.) வெள்ளையுட்பிறதளை விரவாவெண்டளை, யொன்றுச்செப்பலோசையாமஃதே, யேந்திசைவெண்சீரியற்சீர்தூங்கிசை, யொழுகிசையிரண்டுமுளவெனலாகும்.

*எ-து* வெண்பாவோசையின்விகற்பமுணர்த்துதும். வெண்பாவிற்கெல்லாமாமுன்னிரையும்விளமுன்னேருங் காய்முன்னேரும்வந்துதனக்குரிய வெண்டளையன்றிப்பிறதளைவாரா அங்ஙனம் வெண்டளையால்வருமோசைசெப்பலோசை யெனப்படுமாயினும் இவைமூவகையவாகும். வெண்சீர்வெண்டளைவருவதேந்திசைச்செப்பலெனவும் இயற்சீர்வெண்டளைவருவது தூங்கிசைச்செப்பலெனவும் வெண்சீருமியற்சீரும்விரவிவெண்டளைவருவதொழுகிசைச்செப்பலெனவுங்கொள்க. [வ-று] தீயவைமூன்றுன்

பிறர்க்குச்செய்யற்கதன்னுயிர்க்கே, நோயவைபின்றூன்வேண்டாதான். என்பதேந்திசைச் செப்பலோ
சை — பகையவர்க்கன்பிவனைக்காட்டவிற்பார்மேற், றகையவையெங்குமில. எ-து. தூங்கிசைச்செப்ப
லோசை — அன்றறிவாமென்னுத றஞ்செய்கமற்றது, பொன்றுங்காற்பொன்றுத்துணை என்பதொழு
கிசைச்செப்பலோசை பிறவுமன்ன

(௨௱௨௨-சூ.) குறள்சிந்தின்னிசைநேரிசைசவலை, பஃறொடையென்வெண்பாவாறவற்று, ளீரடி (௩)
குறளேயிருகுறள்சவலை, யிருகுறளிடைக்கூனியைநேரிசையே, நாலடிவிகற்பநடையின்னிசையே, நே
ரிசை யின்னிசை நேர்மூவடிசிந்தே, நாலடிமிக்கடி நண்ணிற்பஃறொடை, யெனவறுவெண்பா வேற்கு
நடையே.

*எ-து* வெண்பாவிகற்பமாமாறுணர்த்துதும் அவையே-குறள்வெண்பாவும்-சிந்தியல்வெண்பா
வும்-இன்னிசைவெண்பாவும்-நேரிசைவெண்பாவும்-சவலைவெண்பாவும்-பஃறொடைவெண்பாவும்-எனவ
றுவகைப்படும். இவற்றுட்குறள்வெண்பாநாற்சீர் முச்சீரொனவிரண்டடியொருவிகற்பத்தானுமிருவிகற்
பத்தானும்வரப்பெறும் முச்சீர்நாற்சீர்வருவனவுமுளவெனக்கொள்க மேலேகாட்டியவுதாரணங்களுட்க
ண்டுகொள்க அன்றியும் இருகுறளொருவிகற்பத்தான்வருவதுசவலைவெண்பாவெனப்படும்—நனியிருகு
றளாய்நான்கடியுடைத்தாய்த்தனிநிலைபில்லதுசவலைவெண்பாட்டே. என்றுமொருசாராசிரியர் [வ-று]
அட்டாலும்பால்சுவையிற்குன்றாதளவல்ல, நட்டாலுநண்பல்லார்நண்பல்ல, கெட்டாலுமேன்மக்கண்மே
ன்மக்களேசங்கு, சுட்டாலும்வெண்மைதரும். எனவிதுமூதுரைக்கண்வந்தமையான் மூதுரைவெண்பா
வென்பாருமுளரெனக்கொள்க. அன்றியும் இருகுறள்வந்துநடுவே முதற்றொடைக்கேற்றத்தனிச்சொற்
பெற்றிருகுறளோவ்வொருவிகற்பமாய்வரினும் இருகுறளுமொருவிகற்பமாய்வரினு நேரிசைவெண்
பாவெனப்படும் தனிச்சொல்லெல்லாமொருசீராகிற்பினு மச்சீரொருவகையசையானு மிருவகையசை
யானும்வரப்பெறும் இவற்றுள் நேர்நேர் நிரைநிரை நேர்நேர் நேர் எனமூன்றுமொருவகையசையா
ன்வந்தசீராய் மற்றைந்துமிருவகையசையான் வரப்பெறும் ஆகையிலொருவகையசையாற்றனிச்சொல்
வரின் ஓராசிடைநேரிசைவெண்பாவெனவும் இருவகையசையாற்றனிச்சொல்வரின் ஈராசிடைநேரிசைவெ
ண்பாவெனவுஞ்சொல்லுவர்புலவர் [வ-று] பரப்புநீர்வையகத்துப்பல்லுயிர்கட்செல்லா, மிரப்பவரின்வ
ள்ளல்களில்லை, யிரப்பவ, ரிம்மைப்பயனுமினிச்செல்கதிப்பயனுந், தம்மைத்தலைப்படுத்தலான். என்பதி
திலேதனிச்சொல்லாக விரப்பவராகியகருவிளமென்னு மொருவகையசைச்சீர்வந்தமையா லிதுவோராசி
டை நேரிசைவெண்பாவெனப்படும் — எஞ்சினுரில்லையெனக்கெதிராயின்னு யிர்கொண்டஞ்சினுரஞ்சா
துபோயகல்கவெஞ்சமத்துப், போரதவராசத்தன்றிப்பிறர்முதுகிற், சாராவென்கைபிற்சரம். என்பதிதி
லேதனிச்சொல்லாக வெஞ்சமத்தாகியகூவிளங்காயென்னுமிருவகை யசைச்சீர்வந்தமையா லிதுவீராசி
டைநேரிசைவெண்பா வெனப்படும் நேரிசைவெண்பாமிக்குவழங்குமென்றமையாற் பொதுப்பெயர்
தனக்குரித்தாகி வெண்பாவெனப்படுமென்றறிக அன்றியுநாற்சீர்மூவடியுமுச்சீரீற்றடியும் வருவதின்னி
சைவெண்பாவெனப்படும் இதுவுமொருவிகற்பத்தானு மிருவிகற்பத்தானும்வரப்பெறும் [வ-று] து
கடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டுப், பகுடடந்தகூழ்பல்லொராடுண்க, வகுடுறயார்மாட்டு
நில்லாதுசெல்வஞ், சகடக்கால்போலவரும் எ-ம் இன்றுகொன்றுகொலென்றுகொலென்னாது, பின்
றையேநின்றதுகூற்றமென்றெண்ணி, யொருவுமின்றீயவையொல்லும்வகையான், மருவுமின்மாண்
டாரறம் எ-ம் ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானு மின்னிசைவெண்பாவந்தவாறுகாண்க மிகவழங்
குமிவ்வகையின்னிசைவெண்பாவன்றியு நேரிசைவெண்பாப்போல நாற்சீர்முச்சீர்தனிச்சொல்லொரு விக
ற்பத்தால்வந்துநாற்சீர்முச்சீர் வேறிருவிகற்பத்தால் வருவதுநாற்சீர்முச்சீர்தனிச்சொல் முச்சீரிருவிகற்ப
த்தால்வருவதுநாற்சீர் முதன்மூவடியுமுச்சீர்நான்காமடியுமடிதோறு மொரூஉத்தொடை பெற்றுவ
ருவது மின்னிசைவெண்பாவெனப்படும் [வ-று] — வெண்பா பேரொளிவண்டிற்பொருள்பொழி
கபின்றனக்கே, சேர்பொருள்வேண்டிற்றீதொழிக, பாருலகி, னின்றுவப்பவேண்டினெறிநிற்ப துயரின்
மை, வேண்டின்வெகுளிவிடல் அன்றியும் — நீலஞ்சுனைத்தன்னநீர்மைதயைநிலைத்தே, ஞாலந்தரினே
ன்னுநட்பில்லாற், பூமணமும், பூண்மணியும்பொன்றுமணி யொளிபுமாமன்றே, நாமகடந்தசீர்க்கெல்லா
நட்பு. அன்றியும் மழையின்றிமாநிலத்தார்க்கில்லை மழையுந்தவமில்லாரில் வழியில்லைத்தவமு மரசில்லாரி
ல்வழியில்லையரசனுமில்வாழ்வானில்வழியில். எனமுறையே மூவகை யின்னிசை வெண்பாவந்தவாறுகா
ண்க. ஆயினுமின்றிவைவழங்கா அன்றியு நான்கடிமிக்கப் பலவடிநாற்சீரடியாய்வந் தீற்றடி முச்சீராய்
வருவனபஃறொடைவெண்பா வெனப்படும் பலதொடையாகவருமென்றமையாற பஃறொடையென்
னும்பெயர்த்து [வ-று] பேதமைவித்திட்டேடலேபேதைநிலைமைரமாய்த், தீதமைவின்றேறுப் மூவாயே
கண்ணீர்தெளித்துயர்ந்து, காதல்வேர்வீழ்த்திமருள்காமக்கவடாண்டாய், வேதவனபூநிந்தைகாய்வீதல்
கனியாமென், றெண்ணார்க்கேயின்னுவிவாயுமெனத்தேறி, மண்ணார்மபனீத்தமாதவத்தின், வாளான், ம
றமரக்சோடூர்த்துக்கதிக்கனியைவாய்த், தீன்றமரயாக்கலினிது. என்பதிருமொழிமாலைக்கண்ணுற்றொ
டையாகவந்தபஃறொடைவெண்பா ஆயினுமிந்நாளிலிதுவும்வழங்கா அன்றியுமூவடியால்வருவதுசிந்தி
யல்வெண்பா இதுவேநேரிசைவெண்பாப்போல நாற்சீர்முச்சீர்தனிச்சொல்லொருவிகற்பத்தானு முச்
சீர்மூன்றுமடியவ்விகற்பத்தானும் வேறேவிகற்பத்தானும் வரப்பெறினேரிசைச்சிந்தியல்வெண்பாவெ
னப்படும் [வ-று] ஆநிறம்வேறுபினுமந்நிறத்தவாபயந்த, பானிறம்வேறன்றுபல்குலத்தோர்நானிலை
யின் வேறெனினுஞ்செய்யறனேவேறு. எ-ம் அன்றியுமின்னிசைவெண்பாப்போல நாற்சீர்முச்சீர்தனி
ச்சொல்லின்றி யொருவிகற்பத்தானும் பலவிகற்பத்தானுமடிதோறு மொரூஉத்தொடையானும் வரு

வனவின்னிசைச் சிந்தியல்வெண்பா வெனப்படும் [ வ-று ] சாவாசினத்தென்பேர்கேட்டவிற்காய்ந்தெள்ளேல், பூவேங்கைபூநாகம்பூஞ்சுட்டமுண்டெவணயுங்கோவே விவணயாற்கொளல் எ-ம் பிறவுமன்ன. ஆயினுமிவையுமிந்நாளில்வழங்கா. இங்ஙனமறுவகைவெண்பாவந்தவாறுகாண்க. அன்றியும் வெண்பாவிற்செல்லா நாற்சீரால்வருமளவடி யுரித்தாகையிற்குறளேயோரடிமுக்காலெனவும சிந்தியலீரடிமுக்காலெனவுநேரிசையுமின்னிசையு மூவடிமுக்காலெனவும் பஃறொடைபலவடிமுக்காலெனவும் வழங்குவருளரோ. ஆகையின்வெண்பாவும் வெண்பாவிகற்பமுமிந்நடை பெறுவனவாயினுந் தண்டமிழ்ச்சொல்லினும விழுமியபொருளானும் வருவதேவெண்பாவியல்பெனக்கொள்க இவ்வாறன்றிச்சீருந்தளையும்வழுவாதொழுகினுஞ் சொல்லும்பொருளுமிழிவாய்வந்தவெண்பாவே வண்புலித்தோலைப்போர்த்துப்பசும்புன்மேய்ந்தகோவெனவிழிப்படத்தோன்றுமென்றுணர்க — யாப்பருங்கலம் — குறள்சிந்தின்னிசைநேரிசைபஃறொடை, எனவைந்தாகும்வெண்பாத்தானே. — ஈரடிகுறள்சிந்திருதொடையியற்றே. — நாலோரடியாய்த்தனிச்சொற்பெற்றுட னீரொருவாய்முற்றிருவிகற்பொன்றினு நேரிசைவெண்பாவெனப்பெயராகும் — விகற்பொன்றுக்யுமிக்குந்தனிச்சொலியற்றப்படாதனவின்னிசைவெண்பா. — பாதம்பலவிற்பஃறொடைவெண்பா. — இலக்கணத்திரட்டு — இருகுறள்சவலையொருவிகற்பாகும். எ-று. ( ச )

( ஆசிரியப்பாவிலக்கணம்வருமாறு )

(உஉஉக-சூ) ஆசிரியத்தொலியகவலாயியற்சீர், தன்றளைபிறவுந்தழுவியவளவடி, நடையானடந்து நால்வகைத்தாமவை, நேரிசையிணைக்குறணில்மண்டிலமே, யடிமறிமண்டிலமாகுமென்ப.

* எ - து. * நிறுத்தமுறையானே ஆசிரியப்பாவியல்பும் விகற்பமுமாமாறுணர்த்துதும் ஆகையிலாசிரியப்பாவிற்செல்லா மகவலோசையாகுமென றமையாலாசிரியமெனினு மகவலெனினுமொக்கும் அகவற்கெல்லாந்தனக்குரிச்சீராகியவியற்சீரன்றியோரோவிடத்து வெண்சீருந்தேமாங்கனி புளிமாங்கனியென்னுமிடைநேரிசை வஞ்சிச்சீருங்குற்றியலுகரவீற்றப்பொதுச்சீரும் வரப்பெறும் அங்ஙனந்தன்றளையன்றிவெண்டளையும் வஞ்சித்தளையுங் கலித்தளையுமயங்கிவழங்கும் அன்றியுமகவலெல்லாமளவடியானடக்குமாயினு மினிச்சொல்லும்படி யொரோவிடத்துக் குறளடியுஞ் சிந்தடியும்வரப்பெறும் அன்றியு நேரிசையாசிரியப்பாவும் - இணைக்குறளாசிரியப்பாவும் - நிலைமண்டிலவாசிரியப்பாவும் - அடிமறிமண்டிலவாசிரியப்பாவு மெனவாசிரியப்பாவிகற்பநான்காகு மிவற்றிற்குதாரணமினிக்கூறுதும். — யாப்பருங்கலம். — அகவலிசையனவகவன்மற்றவை, எஓஈஆயெனவையென்றிறுமே. — நேரிசையிணைக்குறண்மண்டிலநிலைப்பெய, ராகுமண்டிலமென்றகவலொன்கே. இவைமேற்கோள். எ-று. ( ரு )

(உஉஉச-சூ) நேரிசைச்சிறுமைநேருமூவடியே, வரையாப்பெருமையேமற்றடியளவடி, யீற்றயற்சிந்தடியியைந்துவருமே.

* எ- து * நேரிசையாசிரியப்பாவாமாறுணர்த்துதும். மூவடிகுறையாமற்பலவடிவந்து மற்றடியளவடியாகியீற்றயலடியே சிந்தடியாகவரப்பெறுமகவல் நேரிசையாசிரியப்பாவெனப்படும் இதுவே பொதுப்பெயராகவிந்நாளி லகவலென்றுவழங்கும் இதற்குதாரணமாக இருநூற்றுப்பதின்மூன்றுசூத்திரத்திற்காட்டியவிரண்டகவல்காண்க. — யாப்பருங்கலம். — அந்தவடியினயலடிசிந்தடி, வந்தனநேரிசையாசிரியம்மே. இதுமேற்கோள். எ-று. ( சா )

(உஉஉரு-சூ) இணைக்குறண்முதலீற் றீரடியளவடி, யிடைக்குறள்சிந்தடியிணையப்பெறுமே.

*எ-து.* இணைக்குறளாசிரியப்பாவாமாறுணர்த்துதும். முதலடியுமீற்றடியு மளவடியாகியொழிந்தநடுவிரண்டடியும்பலவடியுங் குறளடியாகவுஞ்சிந்தடியாகவும் வருவனவிணைக்குறளாசிரியப்பாவெனப்படும் [வ-று] — திருக்காவலூர்க்கலம்பகம் — வாழியவும்பர்வணங்கியவணங்கே, வாழிவாவொளியே, வாழிபாருயிரோ, யாதியையீன்றவள், நீதியையூன்றிவள், பாவொளியணிந்தவள், மீவொளிபுனைந்தவள், குறைமதிமிதித்தவள், மறைமதிவிதித்தவள், மேதினிகாத்தவள், தீதினிதாற்றிவள், கதிக்கதவாயிவள், திதிக்கனிவாயிவள், வானோர்களித்தவள், யீனோரளித்தவள், தொழுமுளத்துள்ளுறைசோதியை, யழுமுளத்தாதரவோதியை, சீகத்தம்புயநேரிவள், யாரகத்தம்பரநீரிவள், வானவர்வாழத்தவானமாண், டீனவர்வாழவிங்கெய்தினள், யாவலூர்வழியாற்றிருக், காவலூருங்காதலே, யன்புணர்நீயிவணமைந்தபின், பொன்புணருலகெடுபூவுலகொத்ததே. எனமுதற்கண்ணு மீற்றின்கண்ணுமளவடிவந்திடையே குறளடிபலவுஞ் சிந்தடிபலவும் வந்தவாறுகாண்க —யாப்பருங்கலம்— இணைக்குறளிடைபலகுறைந்திறியல்பே ( எ )

(உஉஉசா-சூ.) நிலமண்டிலத்தெங்கு நீங்காவளவடி, யடிமறிமண்டில மந்நடைத்தாகி, யடிமாறினுந் தானழியாநிலத்தே.

*எ-து.* நிலமண்டிலவாசிரியப்பாவு மடிமறிமண்டிலவாசிரியப்பாவுமாமாறுணர்த்துதும். ஆகையிலெல்லாவடியு மளவடியாகவருவன நிலமண்டிலவாசிரியப்பாவெனப்படும் [வ-று.] சீதமதிக்குடைசேர்ந்தறங்கிடப்பத், தாதவிழ்தாரான் றனிக்கோலுங்கப், போதவிழ்நிழற்பொழிற்புலியுடனுழைபகைப், பேதநீத்தலவும்பெரும்புகழ்நாடே எ-ம். புறநிலையன்றியுமெல்லாவடியு மளவடியாகவருவதல்லாதே முதலடியீற்றடியிடையடிபலவு மாறியுச்சரிப்பினு மோசையும்பொருளும் வழுவாதுவருவன அடிமறிமண்டில வாசிரியப்பாவெனப்படும். [வ-று] நீரிடைநுரையினேர்கெடுமிளமையே, காரிடைமின்னிற்கடிதுறுப்புகழே, தேரிடையுருளிற்செல்வமாறுமே, தாரிடைமதுவினிற்றவிர்ந்தொழியின்பமே. எ-ம். புறநிலை —காரிகை— கடையயற்பாதமுச்சீர்வரினேரிசைக்காமருசீ, ரிடைபலகுன்றினிணைக்குறளெல்லாவடியுமொத்து, நடைபெறுமாயினிலமண்டிலநடுவாதிய‌ந்தத், தடைதருபாதத்தகவலடிமறிமண்டிலமே — யாப்பருங்கலம் — ஒத்தவடியினதாகியுமொற்றி, நிற்பவுமென்னுநிலமண்டிலமே இவைமேற்கோள். (அ)

( ௨௱௨௭-சூ. ) கலியோலிதுள்ளல்கலித்தளைபிறவும், வெண்சீர்பிறவும்விரவியவளவடி, தன்னுடைக்குந்தன்மைத்தாகி, யொத்தாழிசைமூன்றுமோரைங்கொச்சகம், வெண்கலிகலிவெண்பாவிகற்பமீரைந்தே.

*எ-து.* கலிப்பாவியல்பும்விகற்பமுமாமாறுணர்த்துதும். கலிப்பாவோசைதுள்ளலோசையெனப்படும் கலிப்பாவிற்கெல்லாச்சீரும் விரவிவரினுநிரையீற்றியற்சீருநேரிடைவஞ்சிச்சீரும் வெண்சீருமேற்பன விவற்றுண்ணிரைமுதல்வரும் வெண்சீருமிகுமெனக்கொள்க மீளவுந்தன்றளையன்றிப்பிறதளைவரவும்பெறுமே அன்றியுங்கலிப்பாவெல்லா நாற்சீரான்வருமளவடியானடக்குமென்றுணர்க அன்றியு மொத்தாழிசைக்கலிப்பாமூன்றுங் கொச்சகமைந்தும் வெண்கலிப்பாவொன்றுங் கலிவெண்பாவொன்றுமாகக் கலிப்பாவிகற்பம்பத்தெனக்கொள்க இவற்றிற்செல்லாந்தனித்தனிச்சூத்திரம் வாராமுனரவற்றிற்கு வேண்டியவுறுப்பிவையெனக்காட்டுதும் — யாப்பருங்கலம் — துள்ளலிசையனகலியேமற்றவை, வெள்ளையுமகவலுமாய்விளைந்திறுமே. இதுமேற்கோள் எ-று. (௯)

(௨௱௨௮-சூ.) கலிமுதலுறுப்பாந் தரவுதாழிசையே, துணையுறுப்பெனக்கூன் சுரிதகம்வண்ணகமம்போதரங்க மாமிவைநான்கே.

* எ-து. * கலிப்பாவுறுப்பிவையெனவுணர்த்துதும் ஆசைமின்முதலுறுப்பெனவுந் துணையுறுப்பெனவுங் கலிப்பாவுறுப்பிருவகைப்படுமிவற்றுட் டரவுந்தாழிசையுமெனவிரண்டு முதலுறுப்பாம் கலிப்பாதலைப்பில்வருதலிற் றரவெனும்பெயர்த்து என்வன - தரவெனினு மெருத்தெனினுமொக்கும். அங்ஙனந்தரவின்கீழேதாழ்ந்திசைப்படுதலாற் றாழிசையென்னும்பெயர்த்து அன்றியுந்தனிச்சொல்லுஞ் சுரிதகமும் வண்ணகமு மம்போதரங்கமு மெனத் துணையுறுப்பொருநான்மகென்ப. இவற்றுட்கூனெனினுந் தனிச்சொல்லெனினு மொக்கும் இவையெல்லாவற்றையுமினிவிளக்குதும். எ-று. (௰)

( ௨௱௨௯-சூ ) தரவுதாழிசைதன்றளைவெண்டளை, யிரண்டுறழ்ந்தளவடியிரண்டும்பலவுமாம்.

* எ-து * தரவுதாழிசையாமாறுணர்த்துதும். தரவுந்தாழிசையுங் கலித்தளைவெண்டளையெனவிரண்டும் விரவியளவடியாயடியிரண்டும் பலவுமாகநடக்கும் இவற்றிற்குதாரணமினிக்காட்டுதும் (௰௧)

( ௨௱௩௰-சூ. ) வண்ணகமளவடிவரைமுதற்பலவடி, நான்காதியெட்டீறுயநடைமுடுகராகமாம்.

*எ-து.* வண்ணகமாமாறுணர்த்துதும் வண்ணகமெனினுமுடுகியலெனினு மராகமெனினுமொக்கும் இதுவேயளவடிமுதலாவெல்லாவடியானும் வந்துநான்கடிதறையாவெட்டடிமிகா வருமெனக்கொள்க. இதற்குமினிவருமுதாரணங்காண்க. எ-று. (௰௨)

( ௨௱௩௧-சூ ) அம்போதரங்கமமபளந்திரைபோ, லளவடியீரடியிரண்டும்பேரெண், ணளவடியோரடிநான்குமளவெண், சிந்தடியோரடியெட்டுமிடையெண், குறளடியோரடிநானுன்குஞ்சிற்றெண், ணெட்டுநானுன்கு நான்குமெட்டுமாய்ச், சுருங்கவுமங்நாறுவணயுறுப்புடைத்தே.

* எ-து.* அம்போதரங்கமாமாறுணர்த்துதும் அம்போதரங்கமென்பது கரைசாரக்கரைசாரவொருகாலைக்கொருகாற்சுருங்கி வருநீர்த்தரங்கம்போல நாற்சீரடியுமுச்சீரடியுமிருசீரடியுமாகப் பேரெண்ணளவெண்ணிடையெண்சிற்றெண்ணென நாலுறுப்போடுவருமென்றுணர்க. அவற்றுள்ளேயளவடியீரடியாகவிரண்டுவருவதுபேரெண் அளவடியோரடியாகநான்குவருவதளவெண் சிந்தடியோரடியாகவெட்டுவருவதிடையெண் குறளடியோரடியாகப்பதினாறுவருவதுசிற்றெண்ணெனப்படும் இவற்றுள்ளெட்டும்பதினாறுமாகவருவனசுருங்கிநான்குமெட்டுமாய்வரவும்பெறுமெனக்கொள்க. ஆயினுந்தரவுமுதன்மேற்கூறியவுறுப்பெல்லாந்தேன்றவொவ்வொருதரவுமொவ்வொருதாழிசையுமொவ்வொன்றும் வண்ணகவராகமு மிவையொன்றுந்தத்தம்பொருளை முடியத்தருதல்வேண்டுமெனக்கண்டுணர்க. இனியிவற்றிற்குமுதாரணங்காண்க. எ-று. (௰௩)

( ௨௱௩௨-சூ ) சுரிதகமென்பசுரிந்தெனக்கூனின், பின்னகவல்வெள்ளையாகமுடிவதே.

* எ-து * சுரிதகமாமாறுணர்த்துதும் மேற்கூறியவுறுப்பினுள் வரவேண்டுவற்றைவருவித்தொருசீரான்வருந்தனிச்சொல் வந்தபின்மூன்றடிமுதலாப்பலவடியான்வருமகவலானே சுரிதகம்வந்து கலிப்பாவெல்லாமுடியும் ஓரோவிடத்துச்சுரிதகம் வெண்பாவானும் வரப்பெறும் இனிவருமுதாரணங்காண்க. எ - று. (௰௪)

( ௨௱௩௩-சூ ) நேரிசையம்போதரங்கவண்ணக, மென்றொத்தாழிசை யிவைமூன்றிவற்றுட்; டரவொன்றொருமுத்தாழிசைதனிச்சொல்; சுரிதகமெனநாற்றுணைவரு நேரிசை; தாழிசைக்கீழம்போதரங்கஞ் சாரவு; மம்போதரங்கமேராகமணையவு; மம்போதரங்கமேயாம்வண்ணகமாம்.

* எ-து * ஒத்தாழிசைக்கலிப்பாவிகற்பமாமாறுணர்த்துதும் நேரிசையென்றும் அம்போதரங்கமென்றும் வண்ணகமென்றும் ஒத்தாழிசைக்கலிப்பாமூவகைப்படுமிவற்றுட்டரவொன்றுதாழிசைமூன்றுதனிச்சொற்சுரிதகமெனவிந்நான்குறுப்பாக வருவன நேரிசையொத்தாழிசைக்கலிப்பாவெனப்படும் [வ-று.] — வானிடியோர்மூசார்ப்ப வண்ணமுகில்வாகனத்தின், மீனெடிதோர்கொடியேந்திவிளையெதிரொப்பொனறிலனை, யொருதானுமாய்ப்படைத்தவுலகனைத்தும் புரந்தாளுஞ், சொருதானுநன்குடாதொழும்பன்சொல்லருளிக்கேள் இதுநான்கடித்தரவொன்று. — தேடரியபொருணோந்தோர்சீரடிமைக்கொண்டன்பின்; வாடரியதுயர்க்குலையமறப்பவரோமாண்புளரோ; புலற்கரியவிழுஞ்செல்வம்பொழிந்தடிமைகொண்டன்பிற், சொலற்கரியதுயர்க்குலையத்தாத்துவரோதொடர்புளரோ, மிடிகாணுவாழ்ந்துவப்பவிழைந்தடிமைகொண்டன்பின், னடிகாணுத்துயர்க்குலையவகற்றுவரோவன்புளரோ. எனவொருபொருண்மேன்மூன்றடுக்கிவந்த வீரடித்தாழிசைமூன்றும்-எனவாங்கு-தனிச்சொல்-கோடியவென்குறைகொண்டெவனியொருவர, வாடியவென்னுயிர்வாழ்ந், தோடியநின்னடிசேரவருள்தியே. என

மூவடியகவற்சுரிதகமாக நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா வந்தவாறுகாண்க. அன்றியும் மேற்கூறிய நான்குறுப்பினடுவே தாழிசையின்கீழம்போதரங்கத்தி லெல்வகையெண்ணுங்கூட்டி வருவனவம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா வெனப்படும். [வ-று] — இலங்கொளிவடிவினேடிபிணையினின்றலை, யலங்கொளிமணிகொழித் தமிழ்தவேலைபே, சேரளித்தவனத்தையுந் திவளகருநின்சொடை, பாரளித்தீறிடைனித்த மரியே. இதுபேரெண் — பூவுலகவளத்தையு மொழிகொண்டராகிவன, பூவுலக்குறைத்துளிபொழிந்தறித்தவன, யைந்நகர்கடுஞ்சினத்தழல நாறிவன, மூந்நகரருட்கொடுமுகிளநோக்கிவன, இதுவளவெண். — வான்றேய்நயப்பயந்தோய்நீ, மண்டோய்துயரொழித்தோய்நீ, தேன்றேயருட்கடலோய்நீ, செலதோய்மழைத்தயையோய்நீ: இதுநான்கடியாகச்சுருக்கியவிடையெண் — அருவமைந்தவன, யுருவமைந்தவன, வான்றுறந்தவன, வான்றிறந்தவன, பழிவிலக்கிவன, வழிதுலக்கிவன, யறத்திறுழியை, திறத்தினூழியே. இது எட்டடியாகச்சுருக்கியசிறவெண் ஆலகையின்மேற்சொன்னசெய்யுட்கண்ணே தாழிசைக்கீழிவைசொருகிவைப்புழி யம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பாவாமெனக்கொள்க அன்றியும் அம்போதரங்கமேசல தாழிசைக்கீழயராகங்கூட்டித் தரவுதாழிசை யராகமம்போதரங்கந்தனிச்சொற்சுரிதகமென வாறுறுப்பாகவருவன வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவெனப்படும் அராகமெனினும் வண்ணகமெனினு மொக்கும். அசையடியெனினும் அம்போதரங்கமெனினு மொக்கும். [வ-று] சினவழியுளியுளிசிதைவுறமுனிவிவன, மனவழியருடாள்வழிநனிதயையிவன, மருடருமறுவறமனமுறைறயொளியிவன, பிருடருவெளிறற மிருமறையருளிவன. இது அராகமாகையின்மேல்வந்தவுறுப்புக்களன்றித்தாழிசைக்குமம்போதரங்கத்திற்கு நடுவேயிவையிசைப்புழிவண்ணக வொத்தாழிசையாமெனக்கொள்க ஆசைபின்முறையேயொத்தாழிசைக்கலிப்பா விகற்பமூன்றும் வந்தவாறுகாண்க. — யாப்பருங்கலம். — நேரிசையம்போதரங்கம்வண்ணகமென, நேறியமூன்றேயொத்தாழிசைக்கலி — தரவொன்றுதாழிசைமூன்றுஞ்சமனாய்த், தரவிற்சுருங்கித்தனிநிலைத்தாகச், சுரிதகஞ்சொன்னவிரண்டினுளொன்றாய், நிகழ்வது நேரிசையொத்தாழிசையே — முந்தியதாழிசைக்கீறாய்முறைமுறை, யொன்றினுக்கொன்றுசுருங்குமுறுப்பின, தம்போதரங்கவொத்தாழிசைக்கலியே. — அவற்றொடுமுடுகியலடியுடையராக; மடுப்பதுவண்ணகவொத்தாழிசையே. இவைமேற்கோள் எ-று. (௰௫)

( ௨௱௩௪-சூ. ) கொச்சகக்கலியைங்கூறுபாடெனத், தரவேதரவிணைதாழிசைசிலபல, சிலபிறழ்ந் தாறழ்ந்துஞ்சிலமயங்கியுமாம்.

* எ - து. * கொச்சகக்கலிப்பாவிகற்பமுணர்த்துதும் அவையேதரவுக்கொச்சகக்கலிப்பா எ-ம். தரவிணைக்கொச்சகக்கலிப்பா எ-ம். சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா எ-ம். பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா எ-ம் மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா எ-ம். கொச்சகக்கலிப்பாவிகற்பமைந்தெனக்கொள்க. இவற்றுள்.

( தரவுக்கொச்சகக்கலிப்பாவருமாறு. ) நான்கடிதரவுதனிச்சொற்சுரிதகமென விம்மூன்றுறுப்பாகவருவனதரவுகொச்சகக்லிப்பா வெனப்படும். இதுவேதனிச்சொற்சுரிதகமின்றியும் வருமெனக்கொள்க. [வ-று.] செல்வப்போர்க்கதக்கண்ணன் செயிர்த்தெறிந்தசினவாளி, முல்லைத்தார்மறமன்னர்முடித்தலையைமுருக்கிப்போ, யெல்லைநீர்வியன்கோண்மூவிடைநுழையுமதியம்போன், மல்லலோங்கெழில்யானைமருமம்பாய்ந்தொளித்ததே. எனக்கலித்தளைபாய்நான்கடித்தரவு தனிச்சொற்சுரிதகமின்றிவந்தவாறுகாண்க. அன்றியும்

(தரவிணைக்கொச்சகக்கலிப்பாவருமாறு.) தரவுதனிச்சொற்றரவுதனிச்சொற்சுரிதகமாகவருவனதரவிணைக்கொச்சகக்கலிப்பாவெனப்படும் [வ-று] வடிவுடைநெடுமுடிவானவர்க்கும்வெலற்கரிய, கடிபடுநறும்பைந்தார்க்காவலர்க்குங்காவலனாங், கொடிபடுவரைமார்பிற்கூடலார்கோமானே. தரவு-எனவாங்கு-தனிச்சொல - துணையவளைத்தோளியன்மெலியத்தொன்னலந் தொடர்புண்டாங் - கிணைமலர்த்தாரருளுமேலிதுவிதற்கோர்மாறென்று - துணைமலர்த்தடங்கண்ணார் துணையாகக்கருதாரோ-தரவு - அதனால் தனிச்சொல் - செவ்வாய்ப்பேதையிவடிறத் - தெவ்வாறுஞ்சொலிஃதெண்ணியவாறே. இஃது இடையிடையேதனிச்சொற்பெற்றாசிரியச்சுரிதகத்தான் முடிந்ததென்றறிக அன்றியும்.

( சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பாவருமாறு ) தரவுதாழிசைதனிச்சொற்றாழிசை தனிச்சொற்சுரிதகமாகவருவன சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பாவெனப்படும். [வ-று] பரூஉத்தடக்கைமதயானைப்பணையெருத்தின்மிசைத்தோன்றிக், குரூஉக்கொண்டவெண்குடைக்கீழ்க்குடை மன்னர்புடைசூழப், படைப்பரிமான்றேரினொடும்பரந்துலவுமறுகினிடைக், கொடித்தானையிடைப்பொலிந்தான் கூடலார்கோமானே இதுதரவு ஆங்கொருசார், உச்சியார்க்கிறைவனுயுகமெல்லாங்காத்தளிக்கும், பச்சையார்மணிப்பைம்பூட்புரந்தரனாப்பாவித்தார், வச்சிரங்காணாதகாரணத்தான்மயங்கினரோ - ஆங்கொருசார், அக்காலமணிநிரைகாத்தருளாயாற்பனிதவிர்த்து, வக்கிரனைவடிவழித்தமாயவனாப்பாவித்தார், சக்கரங்காணாதகாரணத்தாற்சமழ்த்தனரோ ஆங்கொருசார், மால்கொண்டபகைதணிப்பான்மாத்தடிந்துமயங்காச்செங், கோல்கொண்டசேவலங்கொடியவனாப்பாவித்தார், வேல்கொண்டதின்மையால்விம்மிதராய்நின்றனரோ இவைமூன்றுந்தாழிசை-அஃதான்று-தனிச்சொல்-கொடித்தேர்த்தோன்றல்கொற்கைக்கோமானின்புகழொருவன்சேம்பூட்சேஎ, யென்றுநனியறிந்தனாபலரோதானு, மைவருளொருவனென்றறியலாகா, மைவரையானைமடங்காவென்றி மன்னவன்வாழியென்றேத்த, தென்னவன்வாழ்திருவொடும்பொலிந்தே, சுரிதகம் இதுதனிச்சொல் இடையிடைபெற்று ஒருதரவும் மூன்றுதாழிசையும் சுரிதகமுங்கொண்டு நேரிசையொத்தாழிசைக்கலியிற்சிறிதுவேறுபட்டுவந்ததென்றறிக. அன்றியும்

( பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா வருமாறு ) தரவுதாழிசை மூன்றின்மிக்கனபலவுந் தனிச்சொற்

சுரிதகமாகவருவன பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பாவெனப்படும் [வ-று] தண்மதியேர்முகத்தாளைத்த யிடத்துநனிகண்டாங், குன்மதியுமுடனிறையுமுடன்றரள முன்னுட்கட், கண்மதியோர்ப்[...]பின் காரிகைபினிறைகவர்ந்து, பெண்மதியின்மகிழ்ந்தநின்பேரருளும்பிறிதாமோ இது தர[...] வள்வாடவிருந்பெருட்குப்பிரிவாயேற், றளவநலமுகைவெண்பற்றாழ்குழற்றளர்வா[...] வாடத்தரும்பொருட்குப்பிரிவாயேல், வகைநலமிவளாவாடிவருந்தீயிலிருப்பாளோ அ[...] ம்பொருட்குப்பிரிவாயேன், மணிநலமகிழ்மேனிமாசோமேடிவாளோ, நாம்பிரியோ[...] தலைப்பிரிவாயே, லோம்பிரியோமெனவுரைத்த வுயர்மொழியும்பழுதாமோ, குன்[...] கொய்புனத்திற்கூடியநா, ளன றளித்தவருண்மொழியாலருளுவ துமருளாமோ, சி[...] ம்பொலிச்சீறடிப்பரவிப், பலபகலுந்தலையளித்தபனிமொழியும்பழுதாமோ இ[...] னுல் தனிச்சொல் அரும்பெறலிவளினுந் தரும்பொருளதனினும் பெரும்பெற[...] றமேற விழுமியதறிமதிவாழி கெழுமியகாதலிற்றரும்பொருள்சிறந்தே இதுசுரிதகம்நா[...] த்தாழிசையாறுந் தனிச்சொல்லுநான்கடி யகவற்சுரிதகமுமாய் வந்ததென்றறிக அன்றி[...]

(மயங்கிசைக்கொச்சகக்கலிப்பாவருமாறு.) தரவிரண்டுந்தாழிசையாறுமராகமு[...] றுமம்போதரங்கமுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமுமாகவருவன மயங்கிசைக்கொச்சகக்[...] டும் [வ-று.] மணிகிளர்நெடுமுடிமாயவனுந்தம்முனும்போன், றணிகிளர்நெடுங்க[...] ன்றுமா, னுரைநிவந்தவையன்னநொப்பறையஞ்சிறையன்ன, மிரைநயந்திறைகூரு[...] மேசா, வரைமேயனமழைமேயனமஞ்செனத்திரைபொங்கிக், கரைமேயனக்காற்றெனக்கடி த[...] விழுமியோர்வெகுளிபோல்வேலாழியிறக்கல்லா, தெழுமுன்னீர்ப்பரந்தொழுகுமேமஞ்சா[...]கள் இவையிரண்டுந்தரவு—கொடிபுரை நுழைநுசுப்பிற்குழைக்கமர்ந்த திருமுகத்தோ, டொடிம[...]தோள்கண்டுந் துறவலனேயென்றியால், கண்கவருமணிப்பைம்பூட்சயில்கவையசிறுபுறத்தோ, டெண்பனிநீருகக்கண்டுந்திரியலனேயென்றியா, னீர்பூத்தநிரையிதழ்க்கண்ணின்றேசிந்தபுருவத்தோள், பீர்பூத்தநுதல்கண்டும்பிரிபலனேயென்றியால், அவணவரல்யாற்றிருகரைபோற்கைந்நில்லாதுண்ணெகிழ்ந்து, நிலையுமென்னிலைகண்டுநீங்கலனேயென்றியால், வீழ்சுடரினெய்யேபோல்விழுமநோய்பொறுக்கல்லாத், தாழுமென்னிலைகண்டுந்தாங்கலனேயென்றியால், கலன்கவிழ்த்தநாயகன்போற் களைதுணைப்பிறிதின்றிப், புலம்புமென்னிலைகண்டும்போகலனேயென்றியால் இவையாறுந்தாழிசை அதனால் தனிச்சொல் அமெப[...] றும்பின் னெடும்பணைமிசைதொறுங், கொடும்புறமடலிடையொடுங்கினகுருகு, செறிசெறூவி[...] யெறிதொழிலிளையவா, நெறிதருபிறவிபினமறிதருந்தீயில், அரசுடைநிரைபடை விரைசெறிமுரசென[...] நுரைதருதிரையொடு கரைபொருங்கடல் அலங்கொளியவிர்சுட ரிலங்கொளிமணிதொறுங், கலந்தெதிரொலிடும் புலம்பினபொழில் இவைநான்குமராகம் விடாஅதுகழலுமெனவெள்வளைபுந்தவிர்ப்பாய்மன், கெடாஅதுபெருதமெனக்கேண்மையுநிறுப்பாயோ, ஒல்லாதுகழலுமென்னொளிவளையுஞ்செறிப்பாய்மன், நில்லாதுபெருகுமென்னெஞ்சமுநிறுப்பாயோ, தாங்காதுகழலுமென் றகைவளையுந்தவிர்ப்பாய்மன், நீங்காதுபெருகுமென்னெஞ்சமு நிறுப்பாயோ, மறவாதவன்பினென்மனநிற்குமாறுரையாய், துறவாததமருடையென்றுயர்தீருமாறுரையாய், காதலார்மார்பின்றக்காமக்குமருந் துரையாய் எதிலார்தலைசாயயானுய்யுமாறுரையாய், இவணப்பிரிந்தார்மார்பின்றியின்பக்குமருந்துரையாய், துவணப்பிரிந்தயருடையென்றுயர் தீருமாறுரையாய், இவையாறுந்தாழிசை-எனவாங்கு-தனிச்சொல்- பகைபொன்றது துறை பரிவாயினகுறி, நகையிழந்தது முகநனிவாடிற்றுடம்பு, தகையிழந்ததுதோ டலைசிறந்தது துயர், புகைபரந்ததுமெய், பொறையாகிற்றுயிர் இவையிருசீரோரடி யெட்டம்போதரங்கம் அதனால் தனிச்சொல் இவளையதுநிலையா லிலையதுபொழுதா, னிலையலவாழிதோழி துலையாப்பனியொடுகழிகவுண்கண்ணெடுகழிகவித்துன்னியநோயே இதுசுரிதகம் தரவிரண்டுந்தாழிசையாறுந் தனிச்சொல்லுமராகமுமீண்டுதாழிசையாறு மம்போதரங்கமுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும்வந்ததென்றறிக. இதுமேற்கூறியவாறுறுப்பிற் சிற்சிலபிறழ்ந்துமுறழ்ந்துங் குறைந்துமிக்கு மயங்கிவருவதாகையின் மயங்கிசைக்கொச்சகக்கலிப்பாவெனும் பெயர்த்து மீண்டிதையொருபோகென்மருமுளரோ யெனவுமிதுவே கலம்பகமுதலுறுப்பாகவரப்பெறுமெனவுங்கொள்க. — யாப்பருங்கலம் — தரவேதரவிணைத்தாழிசைதாமுஞ், சிலவும்பலவுஞ்சிறந்துமயங்கிய, மற்றும்விகற்பம்பலவாய்வருநவுங், கொச்சகமெனனுங்குறிப்பினவாகும். இதுமேற்கோள். எ-று. (டுசு)

(உாஙடு-சு.) வெண்கலிச்சளவடி பலதளைபல்தொடை, மண்டியீற்றசைச்சீர் வந்துசிந்தடியாங், கலிவெண்பாவெண் கலியெனநடப்பினும், வலிவெண்டளைதவா வரவும்பலதொடை, நேரிசைவெண்பா நேரவும்பெறுமே.

*எ-து.* வெண்கலிப்பாவுங்கலிவெண்பாவுமாமாறுணர்த்துதும். ஆகையிற் கலித்தளை வெண்டளையொரோவிடத்துப்பிறதளையாகவும் அளவடியிரண்டுமோரொதுகையால் வந்தொருவிகற்பமாய்ப் பலதொடையாகவு மீற்றடிசிந்தடியாகி நாண் மலர் காசு பிறப்பென வோரசைச்சீரான் வெண்பாப்போல முடிந்தனவாகவும் வருவன வெண்கலிப்பாவெனப்படும் [வ-று] சென்னுகநீர்பொழியசெல்வநிலைக்கறமுமிகப், பொன்னகநகர்புரையப்புவனமெலாம் புரந்தாண்டே, கருமேவும்வளைதவழுங்கமழ்வயற்பாய்பூந்தடஞ்சூழ், மருமேவுநிழற்சோலைமயின்மேவிக்களித்தாடக், கரும்பொப்பச்செஞ்சாலிகாய்த்தலர்கைக்கடைசியரோ, சுரும்பொப்பச்சூழிரப்போர் துதித்துவப்பவியந்தீந்து, மர்லைதாழ்குழலைசையமணக்குரவையொலித்தாட, வாலைதாழ்புனலொழுகியலர்வனமுங் கனிபொழிலு, மல்கிவளர்சிறப்போங்கவளா

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA ...

ச்சீர்மனம்வெறுப்ப, நல்கிவளரீத்தலினன்று. எனவைந்தொடையோடு கலித்தளைவெண்டளைவிரவி
றம ... யீற்றடிசிந்தடியாக வெண்பாப்போலச்சாசெனுமசைச்சீரான்வந்தவெண்கலிப்பா வெண
... கலிவெண்பாவும் வெண்டளையன்றிப்பிறதளைவிரவாவென்ற வேற்றுமையல்லது
... டக்குமென்றுணர்க. ஆயினுநேரிசைவெண்பாப்போல நாற்சீர்முச்சீர் தனிச்சொல்
... ற்பமாகவந்து பலதொடையிவ்வாறொன்றித்தொடர்ந்து முச்சீரீற்றடிநான்மலர்
... ரசைச்சீரானுமுடிந்துவருவது சிறப்பெனக்கொள்க. உலாமடல் முதலியுவிந்நடை
... ணர்க. [வ-று.] — தீயோருரைகேளான்றீயோர்வழிசெல்லான், றீயோர்முறை
... ன, தூயமறைச், சொல்லொன்றேதேடகத்தான்சோராதிராப்பகலச், செந்
... ன்சொல்வோனே, யொல்லெனப்பாய், நீர்முகத்துப்பொய்யா நிறைகனிகொய்
... ர்முகத்துப்பாசிவலையுங்காய்ந்திரா, சீர்முகத்து, மாசில்லோர்க்கெல்லாமயக்கம
... ள்ளோர்க்கப்படியோவல்லவல்ல, வேசுபெறக், காமமுதற்பற்றுதவாற்கால்சுழற்
... ாமமுதலற்றறிவார்நச்சறிவார், வீமமிகத், தீர்வையிநொளிற்சிதைந் தேந்திநல்லவருட்,
... பிரிந்துசூழ்ந்துவளைவார், போர்வையில, தூயோர்நெறியறிவான்சூழாள்வான் கெடுக்
... றிவானமேசர்ந்து. எனப்பலதொடையாய்நேரிசைவெண்பாப்போல வந்தகலிவெண்
... -று. (யஎ)

... டளைக்கலிப்பாக் காட்டுங்காலை, யொருமாக்கூவிள மொருமூன்றியைய, நேர்பதி
... ன்னீரெழுத்தாய், நடந்தடிப்பதியாய் நான்கடியொத்தவாய், வருவதின்று வழங்கு
மெ...

... * கட்டளைக்கலிப்பாவாமாறுணர்த்துதும். இன்றைப்புலவர்மற்றொருவகைக் கலிப்பாவை விதித்துக்கட்டளைக்கலிப்பாவென்றுவழங்குவர் அதுவேயிரட்டையடியாயொவ்வொருபாதிசீர் வகையாற்றேமாவாயினும் புளிமாவாயினும்வந்து மூன்றுகூவிளங்கூட்டி நாற்சீராகவுமெழுத்துவகையானெவ்வொருபாதி நேரசைமுதலாயிற் பதினொன்றெழுத்தாகவு நிரையசைமுதலாயிற் பன்னீரெழுத்தாகவு ம்வருமென்றுணர்க. இவற்றிற்செல்லாஞ் சூத்திரமாகவுமுதாரணமாகவும் வருமிக்கட்டளைக்கலிப்பாக் காண்க [வ-று] — இட்டசீர்வகையாறொருமாவின்பீழியைமுக்கூவிளமோரடிப்பதியாய், மொட்டடிக் ... ழுத்தெண்ணினதன்மையானிரைபன்னீரெழுத்தாய்ப் பதினொன்றுநேர், நட்டிரட்டினஃதோரடி ... கயிந் நடையநான்கடி யொப்பநடந்தபாக், கட்டளைக்கலிப்பாவெனவின்றுபாரகவல்லவல்லோருணர்ந் ... தோதினமொன்பவே. என்பதிலக்கணமுமுதாரணமும்வந்தவாறுகாண்க. எ-று. (யஅ)

( வஞ்சிப்பாவிலக்கணம்வருமாறு )

(உஎஙஎ-ரூ) வஞ்சிக்கோசைவழங்குந் தூங்கலே, தன்சீர்தன்றளைதவிர்த்துபிறபெறுங், குறளடிசிந்தடிகொண்டுமூவடி, துறையாமூன்றனமேற்கூறில்பெருகத், தனிச்சொல்லிடைவந்தழுவுவொடிறுமே.

* எ-து. * நிறுத்தமுறையானேவஞ்சிப்பாவாமாறுணர்த்துதும் ஆசையிற்றூங்கலோசையான் வரும்வஞ்சிப்பாவிற்செல்லாம் வஞ்சிக்குரிச்சீரொனநிரையீற்றமூவசைச்சீரும் பிறவுந்தனக்குரியவிருவகைத்தளையும்பிறவுமேற்பன அன்றியும் வஞ்சியெல்லாங்குறளடியானுஞ்சிந்தடியானுநடக்கும் இங்ஙனநடப்புளிமூவடிசிறுமையெனவும் பெருமைக்கோர்வரையில்லையெனவுங்கொள்க. அன்றியுமூவடியானும் பலவடியானுநடந்துதனிச்சொற்பெற்றுப்பலவடியான்வருமகவல் கூடியாசிரியச்சுரிதகத்தான் முடியும்வஞ்சிப்பாவென்றுணர்க. — தூங்கலிசையனவஞ்சிமற்றவை, யாய்ந்ததனிச்சொலேர், டகவலினிறுமே. என்பதியாப்பருங்கலம் [வ-று] — திருக்காவலூர்க்கலம்பகம் — சீர்விளக்கியசெல்வியாய்ப், பார்விளக்கியவையே, தென்காவிற்றிரண்டோலிப்ப, மன்காவிரியலர்மேழ்ப், பூந்தாதகுபுடைநிழற்றத், தீந்தாதகிற்றிவளைக்குளிர்ப்ப, வருட்காவலூர்ந்தமைந்தளிப்பத், திருக்காவலூர்சேர்ந்தன்னே. சேர்ந்தபின்னுமென்பூண்பழிநையமெவண்மதி, தானேபூண்பதந்தான்றுராமோ, திருவடியொளியுளந்தெளிவுறக்கண்டாற், சருவடியிருளறக்கண்டு, மருவடிமலரடிவான்கதியடைந்தமே. எனவிதுகுறளடிவஞ்சியாய்ச்சேர்ந்தபின்னுமென்னுந்தனிச்சொற்பெற்றகவற்சுரிதகத்தோடுமுடிந்தவாறுகாண்க. எ-று (யகூ)

( மருட்பாவிலக்கணம்வருமாறு. )

(உஎஙஅ-ரூ) மருட்பாவெள்ளைவந்தபின்னகவ, லீற்றின்மருளுமியல்புடைத்தென்ப.

* எ-து * நிறுத்தமுறையானேமருட்பாவாமாறுணர்த்துதும் வெண்பாபலவடியாகமுதற்கண்வந்தபின்னகவலிறுதியாகமருண்டுதொடுப்பது மருட்பாவெனப்படும்—வெள்ளைமுதலாசிரியமிறுதிக், கொள்ளத்தொடுப்பதுமருட்பாவாகும். என்றார்காக்கைப்பாடினியார். [வ-று] — திருக்காவலூர்க்கலம்பகம் வைகலெனவந்துமன்னுபிரார்கங்குலறும், வைகலைச்செய்தேயொளியோன்வாய்த்துயிர்த்தே, வைகினுங், காவலூருறைநகாதலார்துறை, யோவலீர்கிளியோதியாமொளி, தெளித்த நாவிதிறத்தஞ்சிலி, களித்தமாலை, கயத்தவேலை, மந்திரமறைமொழி, மண்டலகுறைமொழி, சந்திரவடியினள், சந்துடுமுடியினள், காதலுயகசதிதரும், வேதநாயகிமெல்லடிபணிவமே. ஆகையின்வெள்ளையகவல் கலிவஞ்சிமருட்பாவெனவைம்பாவுமவற்றின்விகற்பமும்வந்தவாறுகாண்க. எ-று. (உய)

( பாவினம்வெண்டுறையிலக்கணம்வருமாறு )

(உஎஙகூ-ரூ) துறைதாழிசைவிருத்தந் தூக்கினமூன்றனுள், வெண்செந்துறைகுறள் வெண்பாவினமாய்ச், சீர்தளையடியெலாஞ் சேர்ந்துவிடினு, மொத்தடியிரண்டா யொழுகுமற்ற, வெண்டுறையன்னவை விரவினுமூன்றடி, யாதியேழடி யந்தமாயீற்றிற், சிலவடிதஞ்சீர் சிலகுறைந்திறுமே.

*எ-து.* விருத்தமுறையாமோ பாவினத்தியல்பும் விகற்பமுமுணர்த்துதும். மருட்பாவொழித்தொ
ழிந்தநால்வகைப்பாவினமாகத் துறையுந்தாழிசையும் விருத்தமுமெனமும்மூன்றும் வருமென்றுணர்க
அவற்றுட்டுறையே விளங்குமாறு குறள்வெண்பாவினமாகவருந்துறை வெண்செந்துறையெனவுஞ்
செந்துறைவெள்ளையெனவும்வழங்கும் இவையேயெச்சீரானு மெத்தளையானு மெவ்வடியானுந் தம்
முள்ளொத்தவிரண்டடியாக வரப்பெறும் — ஒழுகியவோசையி னொத்தடியிரண்டாய், விழுமியபொருள
துவெண்செந்துறையே. என்பதியாப்பருங்கலம் [வ-று] மீனைவெய்ந்தசெல்விமெல்லடி, நாமேனமயே
த்திநாளுஞ்சூடுவேன். எ-ம். அன்றியுமற்றவெண்பாவினமாய் வருந்துறை வெண்டுறையேயெனப்படு
ம் இவையேயெச்சீரானுமெத்தளையானு மெவ்வடியானுமூன்றடிகுறையாமலு மேழடிமிகாமலுமீற்
றுச்சிலவடி சிலசீர்குறைந்துவருமெனக்கொள்க — மூன்றடிமுதலா வேழடிகாறும்வந், தீற்றடிசிலசில
சீர்தவிற்பினும், வேற்றொலிவிரவினும்வெண்டுறையாகும். என்பதியாப்பருங்கலம் [வ-று] மீனுருங்
கொடிமுன்னவின்முரசார்த்தொலிதுவப்பமிடைந்தவாமேனர், கானுருமதுப்பூவும்பூட்புகையுங் காட்டிபு
ளங்களித்துவாழ்த்தப், பானுருங்கதிர்மைப்பபனிமுகிற்றேருந்தி, வானுருமரசியுன்மகமேனறிச் சென்று
ன். என நான்கடியாயீற்றடியிரண்டுமிரண்டுசீர் குறைந்துவந்தவெண்டுறையிதுவெனக்காண்க. (உக)

(ஆசிரியத்துறையிலக்கணம்வருமாறு.)

(உாசஎ-ரூ.) ஆசிரியத்துறையளவில்சீர்வரு, மடிநான்சீற்றயலா திகுறைநவு, மிருவழியிடைமட
க்கினவுநால்வகைய.

*எ-து* ஆசிரியத்துறையாமாறுணர்த்துதும் ஆசிரியப்பாவினமாய் வருந்துறைசீர்வரையறை
யில்லாதுநான்கடியாய் வந்துநால்வகைப்படும் ஆகையிலீற்றயலடிகுறைந்து வருவனவு மீற்றயல்கு
றைந்திடைமடக்காய்வருவனவு முதலுமீற்றயலு மிடையிடைகுறைந்து வருவனவு மிடையிடைகுறை
ந்திடைமடக்காய் வருவனவுமிந்நால்வகையு மாசிரியத்துறையெனப்படும் — கடையதனயலடிகடைதபு
நடையவு, நடுவடிமடக்காய்நான்கடியாகி, யிடையிடைகுறைநவுமகவற்றுறையே. என்பதியாப்பருங்கல
ம். [வ-று] பனிக்காலமெக்காலம்படடாற்றுமென்றன்றே, வினிக்காதல்களித்துவப்பவிவளாவேனில்வா
ராதோமென்றவனெஞ்சே, யினிக்காதல்களித் துவப்பவிவளாவேனில்வந்தகன்று, துனிக்காலமுதிர்வே
னிற்சுடச்சுடவந்துற்றதினி யென்செய்வாய்நெஞ்சே எனவிரண்டாமடியுநான்காமடியு மாறுசீரான்வந்
து முதலுமீற்றயலுநாற்சீராகி யிடையிடைகுறைந்து மிடைமடக்காகியும்வந்தவாசிரியத்துறை [வ-று]
வண்டுளர்பூந்தார்வளர்செழுசெம்பூட்சேய் வடிவேபோலத் - தண்டளிர்ப்பிண்டித்தழையேந்தி மாவினவி
த்தண்ணந்தார்யாரோ - தண்டளிர்ப்பிண்டித்தழை யேந்திவந்துநம் - பண்டைப்பதிவினவிப் பாங்குபட
மொழிந்துபடர்ந்தோரன்றே. இதுநான்கடியாயீற்றய லடிகுறைந்திடைமடக்காய் வந்தவாசிரியத்து
றை [வ-று] — கொன்றூர்ந்தமைந்துருமுசத்திகழினிற் குருதிக்கோட்டினவிருந்தாட்பெருங்கைக் - குன்
றுமெனவன்றுமெனக்குமுறுநின்றனகொடுந்தொழில்வேழம் - வென்றூர்ந்தமைந்தவிளங்கொளியிவளம்
பிறைநுதளங்குவாளிலங்கயிற்ற ழுவுவளப்பருஉத்தாளதிருமவாமெனவே திருங்கூற்றெனச்சுழலாநின்
றனசுழிகண்யாளி - சென்றூர்ந்தமைந்தசிறுநுதிவள்ளுகிர்ப்பொறியெருத்தெறுழ்வலிப் புலவுநாறதூஉ
வாய்ப் புனலாமெனக்கனலாமெனப்புகையாநின்றனபுலிமானேற்றை - யென்றுங்கிவைபியங்கலினெனந்
திறத்தினிவரல்வேண்ட லந்தனிவரமினைத்தவலிவிலக்கலி னிறுவரைமிசையெறிகுறும்பிடை யிதுவென்
னவதுமிவளூர்கரவிரவிடைக்களவுளமதுகற்றேர ரதுகற்பன்றே. இது நான்கடியாய்முதலடியுமூன்
றாமடியும் பதினாறுசீரா யல்லாதவடியிரண்டும் பதினாறுசீ ராயிடையிடைகுறைந்துவந்தவாசிரியத்துறை
[வ-று] இருங்குயின்முழவாவின்னிசையாழ்தேனு - வரங்கமணிபொழிலாவாடும்போலுமிவளாவே
னி - லரங்கமணிபொழிலாவாடுமாயின் - மரங்கொன்மணந்தகன்றார் நெஞ்சமென்செய்ததிவளா வேனில்.
இது நான்கடியதாயிடையிடைகுறைந்திடைமடக்காய்வந்த வாசிரியத்துறை. எ-று. (உஉ)

(கலித்துறையிலக்கணம்வருமாறு.)

(உாசக-ரூ.) கலித்துறைநெடிலடி நான்கொத்தவற்று, ளிடைநேர்வெண்சீ ரியற்சீர்முதலுன், கி
டைநிரைவெண்சீ ரிறுதிச்சீர்மோவன்னயாப்பு, கடையேகொண்டிறுங் கட்டளைக்கலித்துறை.

*எ-து.* கலித்துறையாமாறுணர்த்துதும். நெடிலடியாகவொத்தநான்கடியான்வருஞ் செய்யு
ளெல்லாங் கலித்துறை யெனப்படும் — நெடிலடிநான்காய் நிகழ்வதுகலித்துறை. எனபதியாப்ப
ருங்கலம் [வ-று] — சிந்தாமணி — கற்பாலுமிழ்ந்தமணியுங்கழுவாதுவிட்டா, னற்பால்வழியுநகைவெண்
மதிபோனிறைந்த, சொற்பாலுமிழ்ந்தமறுவுமதியாற்றுடைத்துப், பொற்பாவிழைத்துக்கொளற்பால
ர்புலமைமிக்கார் — முந்நீர்ப்பிறந்தபவளத்தொடுசங்குமுத்து, மந்நீருவர்க்குமெனின்யாரவைநீக்கு கிற்
பார், நின்றவென்சொற்பழுதாயினுங்கொள்பவன்றே, பொய்ந்நாவல்லாப்பொருளால் விண்புகுதுமெ
ன்பார். எ-ம். — இராமாயணம் — மன்னின்சோதிப்போதினிறூற்றம்பொலிவேமே, வின்னுண்டேனி
ற்றீஞ்சுவையின்சொற்கனியின்பச், கன்னிமாடத்தும்பரின்மாடேசனிபேடோ, டன்னமாடுமுன்றுறை
கண்டாங்கயனின்றார். எ-ம். § — § மீதம்பாவணி § — § பண்டைண்டியேகுதல்போலன்பும்பூசல்பரவு
மெனக், கண்டண்டிமநட்டியசாரவினாப்பண்கரந்தடும்போல, விண்டண்டியாடுகொடிமாடநல்லூர்வி
ட்டகன்று, புண்டண்டியாற்றுமருந்தொத்தநீரார்போத்லூற்றார். எனவுமிவையெல்லாமஞ்சீரடிநான்கொ
த்துவந்தமையாற் கலித்துறையெனப்படும். இவையே காப்பியக்கலித்துறை எ-ம் விருத்தக்கலித்துறை
எ-ம் வழங்கும் இவ்வகையன்றிக்கட்டளைக் கலித்துறை யுளவெனக்கொள்க. இவையின்றுரிப்பெயராகக்
கலித்துறையெனப்படும் இவற்றிலிலக்கணமாவன வொவ்வோரடியைவ்வைந்துள்ளிவையேநெடிலடியான

ந்தடிதோறு முதனாற்சீரியற்சீருமிடைநேர்வெண்சீருமாகவு மிறுதிச்சீரிடைநிரைவெண்சீராகவு மோவ்வோரடியெல்லையுள் வெண்டளைவழுவாதொழுகலும் இவ்வாறொழுகிநேர்முதலாய்வருங் கலித்துறையடியொவ்வொன்றிற் சொற்றொழித்தெழுத்துப்பதினாறுநிரைபதினேழுங்கொள்ளுமென் றுணர்க சூத்திரம். — முதற்சீர்நான்கும் வெண்டளைபிழையா, கடைச்சீரொன்றும்விளங்காயாகி. நேர்பதினாறேநிரைபதினேழென், றேதினர்கலித்துறையோரடிக்கெழுத்தே. அன்றியு மைந்தாஞ்சீர்க்கண்ணேமோனைவருவதுமீற்றுச்சீர்ற்றின்கண்ணே யீற்றசையேகாரம்வருவதுமுறையெனக்கொள்க [வ-று] புறநிலை—சந்தாரம்டாடிக்களித்தாடும்வண்டினங்காமுறுபூள், சந்தாரநாறுநிழற்சோலைக்காவூர்தங்கியவா, னிந்தாரம்பூண்டதிருவடிகண்டேத்தவெவ்வுபிறும், வந்தாரக்காண்பேறுவானலங்சொண்டாரவையசமே. எனமேற்கூறியவிலக்கணத்தோடு கட்டளைக்கலித்துறைவந்தவாறுகாண்க. அன்றியுமிவற்றுதாரணமாகவுஞ்சூத்திரமாகவும்வரு மிச்செய்யுளைக்கண்டுகொள்க — இடையேநேர்வெண்சீரியற்சீர்வருமுதலீரிருசீர், கடையேயிடைநிரைவெண்சீராய்வெண்டளைகாத்தடிநான், குடையேகடையாய்க்கடைமோனைநான்கடியோ டொதுசை, நடையேகலித்துறையாமெனக்கற்றோர்நவின்றனரே. என்பதாதலையின்முதனாற்சீர் தேமாபுளிமாகருவிளங்கூவிளமென நாலியற்சீராகவு மோரோவிடத்துத்தேமாங்காய்புளிமாங்காயென விடைநேரிருவெண்சீராகவும்வருமேயல்லன. கருவிளங்காய்கூவிளங்காயென விடைநிரையிருவெண்சீர்கலித்துறைக்கைந்தாஞ்சீராக வருவதுமுறையாமன்றியே முதனாற்சீராகவராவெனச்சொள்க. எ-று. (உங)

(வஞ்சித்துறையிலக்கணம்வருமாறு.)

(உாசஉ-சூ.) வஞ்சித்துறைகுறளடிநானொத்ததே.

*எ-து.* வஞ்சித்துறையாமாறுணர்த்துதும குறளடிநான்குமொத்துவருவன வஞ்சித்துறையெனப்படும் — குறளடிநான்காய்கூடிப்பொத்த, முறையான்வருவனவஞ்சித்துறைய என்பதியாப்பருங்கலம். இவையும் விருத்தமெனப்படும் [வ-று] — திருக்காவூர்ச்சைம்பசம் — வண்டிமிரும்வாட்மலர்க்சாக், கண்டிமிருங்காவலூர், பண்டினிதாள்பாவைப்பணிர், தண்டினநோயண்டாரோ. எ-ம். — பேரறிவனூன், சாரவிருந்த, வூர்னுமில்லென், றாவிசழ்ந்தே. எ-ம். வருமா-று. (உச)

(தாழிசையிலக்கணம்வருமாறு.)

(உாசங-சூ) குறட்டாழிசையொலி குன்றுங்குறளு, மந்கடிகுறைநவுஞ் செந்துறைச்சிதைவுமாம், வெண்டாழிசையெனில் வெண்சிந்தியல்போல், லண்டாப்பிறதளை யவ்வாறுதுவருமே.

*எ-து.* நிறுத்தமுறையானேகுறட்டாழிசையும் வெண்டாழிசையுமாமா றுணர்த்துதும். குறள்வெண்பாவினமாய்வருந்தாழிசைக் குறட்டாழிசை எ-ம். தாழிசைக்குறள் எ-ம். வழங்கும் இவையே கடைகுறைகுறட்டாழிசை எ-ம். செந்துறைச்சிதைவுத்தாழிசைக்குறள எ-ம் குறட்டாழிசை எ-ம் மூவசைப்படுமெனக்கொள்க — அந்தடிகுறைநவுஞ்செந்துறைச்சிதைவுந், சந்தழி தறளுந்தாழிசைக்குறளே. என்பதியாப்பருங்கலம் ஆகையினிவற்றுட்சீரளவின்றிப் பலசொன்வருமீரடிபெற் றீற்றடியேயளவுகுறைந்துவருவன கடைகுறைகுறட்டாழிசையெனப்படும் [வ-று] துற்றுவாய்மதுமலர்சாச்சூழ்ந்தசாவலூர்நாயக, யேற்றுவார்வியவபடாற்றிவுளமெவட்டினளே. என முதலடியைஞ்சீரானு மீற்றடி நாற்சீரானும் வந்தமையாற் கடைகுறைகுறட்டாழிசையாயிற்று அன்றியுஞ்செந்துறைபோலவளவடியிரண்டுமளவிலொத்துச்சீர்வகையானே தம்முளொவ்வாதொழுகியவோசையின்றிவருவன செந்துறைச்சிதைவுத்தாழிசைக்குறளெனப்படும் [வ - று] கொடிநித்தமலரொப்பார்தாயேகூன்மதியேற், றடியையேத்தாதன்புணராதாரோ. எனவரும் அன்றியுங்குறள்வெண்பாப்போலவந்து பிறதளைவிரவிவருவன குறட்டாழிசையெனப்படும் [வ-று] விண்ணுநம்மாளிமதியவிழ்ந்தேத்துமடியைய, நண்ணாநண்ணாயன். எனவரும் அன்றியும் [வ-று] நன்னுவார்வி்ண்ணையநாடோறுநாறவர்க்சரசாயஞானநற், கண்ணிறைனடிபேயடைவார்கள்சற்றவரோ. எ-ம். — அறுவர்க்கறுவரைப்பெற்றுங்கவந்தி, மறுவறுபத்தினிபோல்வையிரோ. எ-ம். — வண்டார்பூங்சொந்தைவரிவளைக்கைத்திருநுதலாள், பண்டையலல்லள்படி எ-ம். அன்றியமற்றைவெண்பாவினமாய்வருந்தாழிசைவெண்டாழிசை எ-ம் வெள்ளைத்தாழிசை எ-ம். வழங்கும் இவையேபின்னிசைச்சிந்தியல்வெண்பாப்போல நாற்சீர் நாற்சீர்முச்சீரெனமூவடியான்வந்து வெண்டளைசிதைந்து பிறதளைதட்டுவருவனவெண்டாழிசையெனப்படும் - அடியொருமூன்றும்வந்தந்தடிசிந்தாய், விடினதுவெள்ளைத்தாழிசையாதும் என்பதியாப்பருங்கலம் [வ-று] நண்பிதென்றுதீயசொல்லோர், முன்புரின்றுமுனிவுசெய்யா, ரன்புமவண்டுபவர். இதுமூன்றடியால்வந்தவெண்டாழிசை— அம்பேருங்கண்ணார்க்கழிந்தமடநெஞ்சே, சொம்பேறுடையான்சழலிறைஞ்சாதென்கொலியாம், வம்பேபிறந்துவிடல் வாணேருங்கண்ணார்க்கழிந்தமடநெஞ்சே, நீறணிசம்பூண்டான்சழலிறைஞ்சா தென்கொலியாம், வீணேபிறந்துவிடல் கோளாருங்கண்ணார்க்கழிந்தமடநெஞ்சே, யாளாகவாண்டான்சழலிறைஞ்சாதென்சொலியாம், வாளாபிறந்துவிடல். இதுசிந்தியல்வெண்பாவொருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தவெள்ளைத்தாழிசை. எ-று. (உரு)

(உாசச-சூ.) அசவற்றாழிசை யடிமூன்றொத்தவா, யடுக்கியமூன்றுமொன்றாகியும்வருமே:

*எ-து.* ஆசிரியத்தாழிசையாமாறுணர்த்துதும் எவ்வகைச்சீரானும் எவ்வகையடியானு மொத்தமூவடியாகவொருபொருண்மேன்மூன்றடுக்கிவருவன வாசிரியத்தாழிசையெனப்படும் [வ-று] — பருதியுடையாகவினிதுடுத்தநாயகி, மருவிநம்மேலிரங்குவளேலவள்வாயி, விருதியந்தீங்குரல்சேளாமோவென்னெஞ்சே — வேய்ந்தமுடியாசமீன்புவனந்தநாயகி, வாய்ந்துநம்மேலிரங்குவளேலவள்வாயி, லாய்ந்தவந்தீங்குரல்கேளாமோவென்னெஞ்சே. — திங்களணியாகச்சேர்த்தியதாணுயகி, யிங்கணம்மேலிரங்குவ

ளேலவள்வாயின், மங்களந்தீங்குரல்கேளாமோவென்னெஞ்சே. — எனவிவைமூன்றுமொருபொருண்மேலடுக்கிவந்தவாசிரியத்தாழிசை யொரோவிடத்திவ்வாறொத்தமூவடியா லொருசெய்யுளாகவின்றுமாசிரியத்தாழிசையாகும் [வ-று] — மீனுடைக்கொடியவனைவெண்மதியடியவனை, பானுடைவடிவினைபாமொருஞ்சோம்பினை, வானுடையரசிநின்மலரடிதொழுதனம். எ-ம். வரும் அன்றியும் [வ-று] சத்தமுமாகிய ச்சத்தத்தாற்பெறு, மத்தமுமாகலினனந்தன்கண்களே, யுத்தமவினைதெழுத்துருவங்காண்பன இது தனித்துவந்தவாசிரியத்தாழிசை — கன்றுகுணிலாக்கனியுகுத்தமாயவ, னின்றுநம்மானுள் வருமேலவன்வாயிற், கொன்றையந்தீங்குழல்கேளாமோதோழி, பாம்புகயிறாக்கடல்கடைந்தமாயவ, னீங்குநம்மானுள்வருமேலவன்வாயில், ஆம்பலந்தீங்குழல்கேளமோதோழி, கொல்லையஞ்சாரற்குருந்தொசித்தமாயவ: னெல்லிநம்மானுள்வருமேலவன்வாயின், முல்லையந்தீங்குழல்கேளாமோதோழி. இது ஒருபொருண்மேன்மூன்றடுக்கிவந்தவாசிரியத்தாழிசை. மூவடியொத்துமூன்றடுக்கியுந்தனியேயான், றுக்யுமகவற்றாழிசையாகும். என்பதியாப்பருங்கலம் எ-று. (உசு)

(உாசரு-சூ.) கலித்தாழிசையேகடையடிமிகுமற், றடியெவணைத்தாகியு மளவொத்தொவ்வா, தொருமூன்றடுக்கியு மொன்றுமாய்வருமே.

*எ-து,* கலித்தாழிசையாமா றுணர்த்துதும். ஈரடிமுதலாய்ப்பலவடியானும் வந்தீற்றடிசீரான்மிக்குமற்றடியளவொத்துமொவ்வாதும் வருவனகலித்தாழிசையெனப்படும் இவையுமொருபொருண்மேன்மூன்றடுக்கவிற்சிறப்பாச்சித்தனியே யொன்றாய்வரவும்பெறுமே [வ-று] — தாயடியேநின்கண்மேற்சாய்வதுகண்டேன், றீயடியாட்கினியாமோ தீர்ந்ததென்றுன்பங்காமெனஞ்சே. — பூண்பிறைமேற்கஞ்சத்தாள்பூப்பதுகண்டேன், சேண்பிறைபோன்மலரேறேந்தீர்ந்ததென்றுன்பங்காமெனஞ்சே. — மதிசேர்ந்ததாட்சேர்ந்து மாவலியிற்கொண்டேன், றிதிசேர்ந்துவாழேனேதீர்ந்ததென்றுன்பங்காமெனஞ்சே. எனவீரடியாயீற்றடிநீண்டு மூன்றடுக்கிவந்த கலித்தாழிசை அன்றியும் — மூவாசைதவச்சிறையின்முற்றடுக்கியேதிரிவீட், டேவாசையாளுந்திருவணங்கே. — தேவாசையாளுந்திருவணங்கைச்சேர்ந்தக்கான், மேவாசையாறும்ம மெல்லடிபேத்தவேறேத்தவே. எனவிரண்டாமடிகுறைந்து முதலடியுமூன்றாமடியுமொத்துவந்தீற்றடிநீண்டுதனியேவந்தகலித்தாழிசை அன்றியும் [வ-று] — இருகூற்றுநவத்திருந்தண்பொழிற்றில்லை, யொருகூற்றின்கூத்தையுணராய்மடநெஞ்சே, யொருகூற்றின்கூத்தையுணராயெனின்மற்றுநட், பொருகூற்றந்தோற்றபபுலம்பேல்வாழிமடநெஞ்சே, இதுஈற்றடிமிகுந்துதனித்துவந்தநான்கடிக்கலித்தாழிசை. — பூண்டபறையறையப்பூதமருள, நீண்டசடையாடுமேம, நீண்டசடையானாடுமென்ப, மாண்டசாயன்மலைமகள்காணவேகாணவே, எனச்சிறுபான்மைபேயவனையடிகளொவ்வாது வருதலுமுண்டு. — செல்லார்பொழிற்றில்லைச்சிற்றம்பலத்திங்கள், பொல்லாமணியைப்புகழ்மினோவம்மின்புலவீர்காள், முத்தேவர்தேவைமுனிவர்திருமன்றனை, புத்தேளிர்போலப்புகழ்மினோவம்மின் புலவீர்காள், ஆங்கற்பகக்கன்றளித்தருளுந்தில்லையனைப், பூங்கற்பகத்தைப்புகழ்மினோவம்மின் புலவீர்காள், இது ஒருபொருண்மேன்மூன்றடுக்கியீற்றடிமிக்குவந்த கலித்தாழிசை. — அடியெவணைத்தாகியுமொத்தும்வந்தளவின்றிக், கடையடிமிகுவனகலித்தாழிசையே. என்பதியாப்பருங்கலம். எ-று. (உஎ)

(உாசசு-சூ) வஞ்சித்தாழிசைகுறளடிநான், கார்த்து நான்மூன்றடுக்குமோர்பொருளே.

*எ-து* வஞ்சித்தாழிசையாமா றுணர்த்துதும். குறளடிநான்காயொருபொருண்மேன்மூன்றடுக்கிவருவன வஞ்சித்தாழிசையெனப்படும் [வ-று] — பருந்துலவப்பார்ப்பிழந்தாய்பரிந்திறசாற்பசைமறைக்கும், பெரும்பழியாலொருகதனமேலோங்குந்தாய்மனனேகாண். — எரிபகரும்பிலம்பார்ப்பவிரிசிறகால்வெயின்மறைக்கும், விரசத்தாலெழுந்தனமேற்பரிபுந்தாய்மனனேகாண். — இடித்துழித்தாபிரும்பார்ப்பைக், கடிச்சிறகான்மழைமறைக்கு, மிடிச்சனுமெழுந்தனமேலடுக்குந்தாய்மனனேகாண். எ-ம். வரும் — குறளடிநான்கின்கூடினவாயின் மூன்றமைபினவ்வகைமூன்றிணைந்தொன்றி, வருவனதாழிசைவஞ்சியின்பெயரே. என்பதியாப்பருங்கலம். — இவ்வாறன்றிநாற்குறளடியாலொன்றாய்த்தனிவரிற்றாழிசையாகாமேற்காட்டியவடிவஞ்சித்துறையெனப்படுமென்றுணர்க அன்றியும் [வ-று] பிணியென்றுபெயராமே, துணிவின்றுதவஞ்செய்வீ, மணிமன்றனுமைபாகன், மணிமன்றுபணிவீரோ, என்னென்றுபெயராமே, கன்னின்றுதவஞ்செய்வீர், நன்மன்றனுமைபாகன், பொன்மன்றுபணிவீரோ, அரிதென்றுபெயராமே, வரைநின்றுதவஞ்செய்வீ, குருமன்றனுமைபாகன், திருமன்றுபணிவீரோ, இதுவும்வஞ்சித்தாழிசை ஆகையினுற்பாவினமாகிய தாழிசையிலக்கணம் வந்தவாறுகாண்க. ஆயினுந்தொடிராகத்துக்சேற்றவடியானடக்குமாசிரியவிருத்தமெல்லாமின்றுதாழிசையெனப்படும். எ-று. (உஅ)

(விருத்தவிலக்கணம் வருமாறு)

(உாசஎ-சூ) விருத்தமென்பவிரவியெல்லாஞ், சீருமடியுஞ்சிதையாக்கொளினு, மவையொத்தனவாயடிநான்கவையும்மை, மாவிளங்காயேவஞ்சிச்சீரிடையுந், பொதுச்சீரிடையும்புணர்மாவிளமிவை, யொப்பவரிற்சீரொப்புமையாகும்.

*எ-து* விருத்தமுறையானேவிருத்தமும் விருத்தவிகற்பமுமுணர்த்துதும். விருத்தமென்பவையெல்லாச்சீரானுமெல்லாத்தளையானு மெல்லாவடியானுநடக்கும். நடப்பினுமவையோரோதுகையானான்கடியாகவொத்தசீரானுமொத்தவடியானும் வரப்பெறும். அங்ஙனம் விருத்தத்திற்கண்வேண்டியசீரொப்புமையாவது மாவீற்றசீரிரண்டும்விளவீற்றசீரிரண்டுங் காயீற்றசீர்நான்குந்தம்முளொத்தசீரெனப்படும் அன்றியும் வஞ்சிச்சீரும்பொதுச்சீருந்தத்தமிடையினின்றமாவும் விளமும்பற்றியொப்புமைக்கொள்க. ஆகையினோரடிக்கண்ணே தேமாவந்தவிடத்தின்மற்றோரடிக்கட் டேமாவாயினும் புளிமாவா

யினும் வரப்பெறிதோசைவழுவர் அங்ஙனங்கருவிளம் வந்தவிடத்திற் கூவிளமுந்தேமாங்காய்வந்த விடத்தின் மற்றைக்காயுந்தேமாங்கனிவந்த விடத்திறபுளிமாங்கனியுங் கருவிளங்கனிவந்தவிடத்திற் கூவிளங்கனியும்வரப்பெறிலோசைவழுவா பொதுச்சீருமிவ்வ றெனக்கொள்க. [வ-று] வேனேர்சிறுவிழிம்வேசமிரேர்விரிந்துசிவணுத்தண்மயிர்ச்செவியா, னூனேமொழுகிய பிணக்குப்பையுதட்டுநோறியபேழ்வாயான், கானேர்நெருங்கித்தெறிலைநேர்சமுநீள்சிவந்தனதாடியினுன், முனேரின்றிமாசொருங்கவனைத்துந்தாங்குமவானாமுகவடிவான் எனமா-விளம்-காய் - மா-விளம் - காயெனவாறுசீரோரடியாய்நடக்கு மிவ்விருத்தத்துண் முதன்முயடிக்கிரண்டாஞ்சீர்கருவிளமாய் நான்காமடிக்கண்கூவிளமெனவு மூன்றாஞ்சீர்முதலடிக்கண்ணு மூன்றாமடிக்கண்ணுங் கூவிளங்காயுமிரண்டாமடிக்கண் புளிமாங்காயுநான்காமடிக்கண் கருவிளங்காயு மெனவுநான்கான்சீர்முதன்மூவடிச்சீர்க்கட் புளிமாவுநான்காமடிக்கட் டேமாவுமெனவும் ஐந்தாஞ்சீர்முதலடி மூன்றாமடிக்கட்கருவிளமு மற்றிரண்டடிக்கட்கூவிளமுமெனவும் ஆறாஞ்சீர்முதலடிநான்காமடிக்கண்ணே கருவிளங்காயு மிரண்டாமடிக்கட் டேமாங்காயு மூன்றாமடிக்கட்கூவிளங்காயுமெனவும்வரும் வரினுஞ்சீரொப்புமைமாறுமையாலோசையும் வழுவாதொழுகிய வாறுகாண்க. பிறவுமன்ன இவ்வாறன்றியவந்தவிடத்தில் விளமுங்காயும்வரப்பெறிலோசைவழுவாம் பிறவுமன்ன இவ்வகைவட்டவடிவாலிச்செய்யுள் வருகின்றமையால் விருத்தமென்மனார்புலவர் என்வனியோவெனில் விருத்தமெனினும் வட்டமெனினு மொக்கும் அங்ஙனமொருவகையடியால்வரும் விருத்தங்களுள்ளு மொன்றற்கொன்றுவேறுபட-மா - விளம் - காய் - முதலாயினசீர்தம்முண்மாறிவரப்பெறி னோசையுமாறிச்சந்தபேதகமனைவொன்றின்றிப்பலவா மெனக்கண்டுணர்க. எ-று. (உகூ)

௨௭ (உ௱௪௩-ரு) விருத்தவிகற்பம்விளக்கியசாவல, வஞ்சிசிந்தடிவருங்கலியளவடி, யடிதொறுந்தனிச்சொல்வனைவது வெள்ளை, யகவல்கழிநெடிலடிகொள்விருத்தமே.

இ-ள். * எ-து. * விருத்தவிகற்பமுணர்த்துது மேற்றத்தமிடத்துக்காட்டியபடி வஞ்சித்துறையெனவொத்தநாற்குறளடியால்வரும் விருத்தமுங்கலித்துறையெனசாமெனடிலடியால்வரும் விருத்தமுமன்றியேயொத்தநாற்சிந்தடியால்வருவன வஞ்சிவிருத்தமெனவும் - அளவடியால்வருவன கலிவிருத்தமெனவும் - அளவடியாகமூன்றடியானு நான்கடியானும் வந்தடிதோறுந்தனிச்சொற் பெற்றுவருவன வெளிவிருத்தமெனவும் கழிநெடிலடியால்வருவன வாசிரியவிருத்தமெனவும்வழங்கும் — சிந்தடிநான்காய்வருவனவஞ்சிய, மெஞ்சாவிருத்தமென்மனார்புலவர். — அளவடிநான்கினகலிவிருத்தம்மே — நான்கடியானுநடைபெற்றடிதொறுந், தாந்தனிச்சொற்கொளின் வெளிவிருத்தம்மே. — கழிநெடிலடிநான்கொத்திறினெல்லா, மழியாமரபாசிரியவிருத்தமே. என்பதியாப்பருங்கலம் [வ-று] — ஆவலவாயடுங்கழைத்தேனுஞ், சோவலவாய்ச்சுவைக்கனித்தேனு, மாவலவாய்வழிமலர்த்தேனும், வேவலவாய்மடுப்பமீன்மேயும். — சாந்தநேறியதாழ்மொழி, சாய்ந்தவேலிருகாதிலும், போந்தபொன்முபுகுந்திட, மாந்தராருளமக்ளினர் - இவைவஞ்சிவிருத்தம் நீட்முகத்திணங்கிளொதில்லச்செச்சுடர், காய்முகத்திருளிவலக்குழுங்கித்தபே,பாய்முகத்தவணியில்லயன்புபற்றிய, வாய்முகத்தரியதோர்வருத்தமில்லையால்— வேய்தவலநிடியவெள்ளியிலங்கலி, னாய்தலிறுணைசுடராழியினுன்றமர், வாய்தலினின்றனர்வந்தெனமன்னன்முன், னிறைவலசென்றுரைநீள்சடைகாப்போய். இவை கலிவிருத்தம் — அங்கட்கமலத்தலர்கமலமேயீரு, நீரோபோதும், வெங்கட்சுடிகைவிடவரவின்மேயீரு நீரோபோலுங், திங்கட்சடையீருந்தில்லவனத்துள்ளீரோ - நீரோபோலும். இது மூன்றடியாலடிதோறுந் தனிச்சொற்பெற்றுவந்தவெளிவிருத்தம் — துன்னித்தொன்மெய்த்தீர்ந்துகுறிப்பாமொருபாலர், சென்னித்தாராய்ச்சிறடிகொள்வாமொருபாலர், முன்னிக்குன்றுவுன்புகழார்ப்பாமொருபாலர், கன்னித்தாயுன்சாவலில்வாழ்வாமொருபாலர். இது நான்களவடியாலடிதோறுந் தனிச்சொற்பெற்றுவந்த வெளிவிருத்தம். — மணிபுரையரும்பிவான்மீன்வடிவொடுமலர்ந்துவெண்முத், தணிபுரையணங்சொடேன்பெய்யழகரைன்றுவாடித், துணிபுரைசீழ்விழ்ந்தாய்துளிவலக்கன்றுஞ்சென்மப், பிணிபுரைபிணித்தயாமோம்பர்கிலொவாழ்துமென்பாம். இது அறுசீர் ஆசிரியவிருத்தம். தாமமெய்ந்திருண்டகுழலினூர்மார்பிற் றுளங்கியமுத்தணிவடமேற், சாமனேகளிப்பற்றுசலாடியகால் கசடறுமிவர்வரச்சண்டு, வீமமெயுற்றுநடுக்சொடுவெழுவி வீழ்ந்துளத்தழற்றழ்லிறத், தாமமெயளிப்பாற்குளிரவுட்களித்துத் தயவொடுதீதறப்புகழ்ந்தார். இது எழுசீர் ஆசிரியவிருத்தம். கனிமாவலிசிவலையேந்தத்தீந்தேனெந்துங் காவலூராவலூர்ந்தனுகிப்போற்றும், பனிமாவலயேர்திரவிச்சதிர்செய்மாவலப் பற்றிண்டாள்பற்றினர்வாழ்நாளீர்றுகத், துனிமாவலதோன்றியுயிர்க்கந்திமாவலிசொல்ருமுன்றுதிமாவல கொண்டுடைம்பொன், னனிமாவலத்திருக்கோயிலிடத்தா டெவநங்கைதிருவட்கைதருமாவலகூடீர். இது எண்சீர்ஆசிரிய விருத்தம். — வளங்குலாவருமணங்கனூர்விழி மயக்கிலேமுவ்லமுயக்கிலேயவிழுமாந்தர்காள், களங்குலாமுட லிறந்துபோயிடு சாடுசேர்முனம்வீடுசேர்வகைகேண்மினோ, துளங்குநாகழுநளங்கவாடல்செய் சோதியானனி பூதியானுமைபாதியான், விளங்குசேவடியுளங்கொளீரெமன் விடுத்தபாசமுமடுத்தபாசமும்விலக்குமே இது ஒன்பதின்சீர் ஆசிரியவிருத்தம் — சொங்குதங்கு கோதையோதி மாதரோடுகூடிநீடுமோடைநெற்றி, வெங்கண்யானை வெந்தர்போந்துவேதநீதாதவென்றுவின்றுதாழ, வங்கபூவமாதியாயவாதிநாலி னீதியோது மாதியாய், செங்கண்மாலமாலகாலம்சேர்நர்சேர்வர்சோதி சேர்ந்தசித்திதானே. இது பதின்சீர் ஆசிரியவிருத்தம் — ஆசிரியங்கண்டு — சங்கரன்சம்புசதாசிவ னுமாபதித்தாணுவே பூதநாதன்சந்திரசேகர னீலகண்டனீமத்தாடிதற்பரன்பேயோடாடி, யங்கணனபசுபதியரன் சிவனுருத்திரனழலாடிபாண்டரங்க னந்திவண்ணன்பசவனந்திநண்பன்சோதியமலனனந்தனுதி, மங்கைபாகன்சடவலயடியரவாபரணன்மழுவாளிகைவலயாளி மாதே

வனிருமல்ன்மறைமுதலியோகிமானிடமேந்திகாமதகனன், கங்காதரன்கறைமிடற்றண்ணலம்முகன்காலகாலன்கிரீசன் கங்காளன்முத்தனித்தன்பரமனுலமர்கடவுணீறணிக்கடவுளே. இதுபன்னிருசீர் ஆசிரியவிருத்தம். — சீட்டுக்கவி. — மகபதிநராதிபதிமாதுபதிசேதுபதி வாசற்பிரசண்டவாக்கி வடிதமிழ்ச்சோமசுந்தரகுருசுவாமியடிமைக்கு மடிமைக்குமடிமை, மயில்வாகனக்கடவுளருளினுலுபையசாய்மறைவிருதுகொண்டதுல்லியன் மலையாளராசனருடந்தபல்லக்குவெகு மதிபெற்றசார்வபூமன், புகமெலாமகிமைபெறுதஞ்சைமகராசனையோ ரெட்டடியளைத்தநிபுண னுசிதன்சாதநபாவிருகையாற்றரும்வரிசையொருகையால்வாங்குகவிஞ - னுற்றசிவகங்கையிற்கவுரிவல்லவராச னுதவுவளநாடுபெற்றே னுயரிலங்கைப்பூமிராசசமுகத்தினி லுமொருகோடிவரிசைகொண்டோன், கக்கனமுதண்டவேதண்டபிரமாண்டமுங்கனபுகழ்படைத்தவுரவோன் காசிமுதலாகராமேசாம்வரைக்குங்கவித்துவசநாட்டும்விசையன் - கற்றுச்சொலிக்கும்வருதானுபதிக்குமிரு கனகதண்டிகைகொடுத்தோன் கவிமதக்குஞ்சரஞ்சரவணப்பெருமாள்கவிச்சக்கரவர்த்தியோலை, புகழ்மேவுசிங்கநகர்வளருங்குமாரவேல்பூபனெதிர்கொண்டுகாண்க போர்வராவேங்கைகைபாராந்தாதுசெம்புத்திரமில்லாத சாமிபுவியிலிருளாவேம்மூரா லுண்ணுமாடுபொங்கிவேகாதகாணம் பூண்டொடிபடாவத்தம்றுபடாவுடலெழுபொதிதந்துநீவாழியே. இதுபன்னிருசீர் இரட்டையாசிரியவிருத்தம். எ-று. (௫௰)

(௨௱௪௯-சூ.) சந்தவிருத்தந்தம்முளொத்தெழுத்தசை, வந்தொலிபற்றிவருமுளபிறவே.

*எ-து* சந்தவிருத்தமுணர்த்துதும். மேற்கூறியவிருத்தவகையுமன்றிச் சந்தவிருத்தமெனறும் வண்ணவிருத்தமென்று மற்றொருவகைவிருத்தமென்றுமுளவாம். இவையே சிறொண்ணுமலுங் குறிப்புச்சந்தம்பற்றி யெழுத்துவகையானு மசைவகையானும் வேறுபடவருமாதலா லெழுத்துச் சந்தவிருத்தமும் அசைச்சந்தவிருத்தமுமென விருவகைப்படும் ஆகையிலிவற்றுட் சிலவிருத்த மெழுத்துமாத்திரையாயினு மொற்றுகவருமெழுத்தினமாயினு மாறினதன்மையே சந்தவோசையுமாறும். சிலவிருத்தமெழுத்துமாறினு மசைமாறாதாயினோசையுமாறாதெனக்கொள்க. [வ-று.] — தேம்பாவணி. — அழலெழுவளைத்தசாபவிருமுகிலளவில்பனித்தபாணமழையோடு, நிழலெழமறைத்தவானம்வெருவுறநிரைநிரையெதிர்த்ததானைமுரிதரப், புழலெழவுளைத்தவாளிவழிவழிபுனலெனவிரத்தமோடவிருவருந், சுழலெழவுருத்தவாரிபொனவமர்தொடுமுறையுளாப்பநூலினளவதோ. — எனவிதிலே நெடிலுங்குறிலு மொற்றினினமுமாறாதெழுத்துவகையாற் சந்தவிருத்தம்வந்தவாறுகாண்க. — தேம்பாவணி. — வளையீர்புனலேமழையீர்வளையே, விளையீரமராவிரிபூந்தடமே, சுளையீர்மலரத்தொடைசூழ்பொழிலே, யுளையீருயிரின்னுயிருள்வழியே. — என்விதிலே நெடில்குறிலொற்றினமாறிபு நிரைநேரினுமசைமாறாதசைவகையாற் சந்தவிருத்தம்வந்தவாறுகாண்க. அன்றியுஞ்சிலவிருத்தமிவ்வகையொப்புமை யெல்லாச்சீரினும்வேண்டா தொரோவிடத்துமாத்திரம் வேண்டுவதுளவெனக்கொள்க. [வ-று] — தேம்பாவணி. — தொல்லையிம்மருளினாழ்ந்ததுகள்விடத்துணிதலொன்று, வொல்லையிந்நசைநீங்காதேதுளாழ்விலவேதலொன்று, வெல்லையிவ்விண்டிலொன்றேயாவருந்தவிராதென்ன, வல்லையிவ்வுணர்விற்றேர்திமாற்றலர்வணங்கும்வேலோய். எனவிதிலே மற்றச்சீர்தப்பும் மேற்சொன்ன வினத்தைப்பற்றி மாறிவரினு மூன்றாஞ்சீராகவு மாறாஞ்சீராகவு மடிதோறும் வருந்தேமாமாறி புளிமாவரினோசைகுன்றுமென்றமையா லொரோவிடத்தசை யொப்புமைப்பற்றிவந்த விருத்தமெனக்கொள்க. அன்றியுஞ்சூத்திரத்துள் பிறவென்றமையாற் சிந்தாமணியுள்ளெழுத்து மசையுஞ்சிறுமென்றிவை தம்முளொப்புமையின்றிவரும் விருத்தமுளவே. ஆயினும் வெண்டளைசிதையாவருமாகையின் வெண்பாவிற்கேற்ற செப்பலோசைபெறுமெனக்கொள்க. [வ-று] — வீங்கோதவண்ணன்விரைததும்பும்பூம்பிண்டித், தேங்கோதைமுக்குடைத்தேவர்பெருமானைத், தேவர்பெருமானைத்தேனார்மலர்சிதறி, நாவின்விற்றுதார்வீட்டுலகநண்ணாரோ. எ-ம். — தேம்பாவணி. — பாற்கடலென்னுள்ளப்பதுமமலரரும்ப, நூற்கடலேயீங்குதித்தாய் நுண்மலர்க்கண்முத்தரும்ப, நுண்மலர்க்கண்முத்தரும்பநோய்செய்வினைசெய்தே, னென்மலர்க்கண்முத்தரும்பவின்றுவினைதீர்த்தாய், எ-ம் எழுத்தசைசீர்களு மொவ்வாமல் வெண்டளையாகவந்தவிருத்த மிவையெனக்காண்க. அன்றியும் பாரதத்துள்ளே மற்றொருவகைவிருத்தங்காணப்படும். அஃதெத்தன்மைத்தோவெனின் முதற்றொடையடியெதுகையன்றிப் பொழிப்பெதுகையும்பெற்றபின் னிரண்டாந்தொடையுமிவ்வாறே வேறோரெதுகைப்பெறுமென்றறிக [வ-று] — பற்பலருமத்திரதர்விற்பவணக்கியெதிர், சொற்பொலிவபப்பகழிசிற்சிலதொடுத்தனகாந், பெய்கணைபடங்கவிவனெய்கணைவிலக்கிடவு, மொய்கணையனந்தமிவன்மெய்கணையவுந்தினனே. எ-து. பாரதத்துட்பதின்மூன்றாம்போர். ௫௯-ம் யாட்டெனக்கொள்க. ஆகையில் விருத்தமும் விருத்தவிகற்பமும் வந்தவாறுகாண்க. எ-று. (௫௧)

(௨௱௫௰-சூ.) பத்தியமென்பபாவொடுபாவினங், கத்தியமவைபோற்கலையல்லனவே, வண்ணமென்பவலிமெலியிடையொழு, கென்னுருட்டெனமுடுகேந்தலூங்க, லகைப்புப்புறப்பாட்டகப்பாட்டளபு, பாவுநவிபுதரவுவொரூஉக், குறினெடில்சித்திரங்கூறுபாடிருபதே.

* எ-து * பாப்பாவினங்கட்கும் பொதுவிதியுணர்த்துதும். மேற்கூறிய விலக்கணவகையான் வரும்பாவைத்தும் பாவினமுன்னான்குமாகப் பதினேழுவகைச்செய்யுளும் பொதுப்பெயராக வடமொழியாற் பத்தியமென் றுவழங்கும். இலக்கணஞ்சிதையினு மிலக்கணப்பாவினடையோடொப்ப வருவனவெல்லாங் கத்தியமெனப்படும். ஆகையிற் கொன்றைவேந்தனென்பது முதலாயின கத்திய

மென்கக்கண்டுணர்க. அன்றியும் பாவிற்கும் பாவினங்கட்குமேற்கும்வண்ண மிருபதென்மனார் தொல்காப்பியனார்முதலாப்பலரோ. அவையிவையெனவருமாறு. எழுகைமுதலடியெல்லாம் வல்லினமிகுவன வல்லிசைவண்ணமும் மெல்லினமிகுவன மெல்லிசைவண்ணமும் இடையினமிகுவன இடையிசை வண்ணமும் மூவினமும் விரவிவருவன ஒழுகிசைவண்ணமும் பலவையெண்ணிவருவன எண்ணுவண்ணமும் ஆரத்தொடுவருவன உருட்டுவண்ணமும் ஆரகமாய்வருவதன்றி யடியின் முதலு மீறுந் தோன்றுமற்றொடர்ந்து நீண்டவடியால்வருவன முடுகுவண்ணமும் நேரீற்றவுரிச்சீர் மிகவந்தேந்திய வோசையின்வருவன ஏந்திசைவண்ணமும நிரையீற்றவுரிச்சீர்மிக்குத்தூங்கியவோசையின்வருவன தூங்கிசைவண்ணமும் மறுத்தறுத்தியல்வன வகைப்புவண்ணமும் முகிந்ததுபோல முகியாதியல்வன புறப்பாட்டுவண்ணமும் முகியாததுபோல முகிந்துவருவன அகப்பாட்டுவண்ணமும் அடிதோறுமளபெடையெதுகைகொண்டுவருவன அளவுவண்ணமும் நாற்பாலுமாத்துவருவன பாவுவண்ணமும் அடிதோறு மெதுகையாகவாய்தங்கொண்டுவருவன நலிபுவண்ணமும் ஓரடிக்கோரடியிடை விட்டடியெதுகையொன்றிவருவன தரவுவண்ணமும் அடிதோறுமொன்றுத தொடையோடுவருவன ஒரூஉவண்ணமும் குற்றெழுத்தியைந்துவருவன குறுஞ்சீர்வண்ணமும் நெட்டெழுத்தியைந்துமிகுவன நெடுஞ்சீர்வண்ணமும் நெடிலுங் குறிலும் விரவிவருவன சித்திரவண்ணமுமெனப் பாவண்ணமிருபதும் விளக்கியவாறுகாண்க. இவற்றிற்கெல்லா முதாரண மீண்டுக்கூறிற் பெருகும் வந்தவழியேகாண்க. அன்றியு மிவற்றை நூற்குக்கியவிநயனார் விரித்தோதினரெனக்கொள்க. அவைவருமாறு தூங்கிசைவண்ணம் - ஏந்திசைவண்ணம் - அடுக்கிசைவண்ணம் - பிரிந்திசைவண்ணம் - மயங்கிசைவண்ணம் - என்றிவ்வைந்தினையுமுதல்வைத்து, அகவல்வண்ணம் - ஒழுகிசைவண்ணம் - வல்லிசைவண்ணம் - மெல்லிசைவண்ணம் - என்றிந்நான்கினையுமுறழ விருபதாம், இவ்விருபதுடனும் - குறில்வண்ணம் - நெடில்வண்ணம் - வல்லிசைவண்ணம் - மெல்லிசைவண்ணம் - இடையிசைவண்ணம் - என்றிவ்வைந்தினையுங்கூட்டிபுறழ நூறுவண்ணமும் பிறக்குமெனக்கொள்க. இவற்றுள் - தூங்கிசைவண்ணம் - ௨௰ - ஏந்திசைவண்ணம் - ௨௰ - அடுக்கிசைவண்ணம் - ௨௰ - பிரிந்திசைவண்ணம் - ௨௰ - மயங்கிசைவண்ணம் - ௨௰ - ஆ வண்ணம் - ௱.

(தூங்கிசைவண்ணமிருபதாவன) - குறில்கவற்றூங்கிசைவண்ணம் - நெடில்கவற்றூங்கிசைவண்ணம் - வலியகவற்றூங்கிசைவண்ணம் - மெலியகவற்றூங்கிசைவண்ணம் - இடையகவற்றூங்கிசைவண்ணம் - ௫ - குறிலொழுகற்றூங்கிசைவண்ணம் - நெடிலொழுகற்றூங்கிசைவண்ணம் - வலியொழுகற்றூங்கிசைவண்ணம் - மெலியொழுகற்றூங்கிசைவண்ணம் - இடையொழுகற்றூங்கிசைவண்ணம் - ௫ - குறில்வல்லிசைத்தூங்கிசைவண்ணம் - நெடில்வல்லிசைத்தூங்கிசைவண்ணம் - வலிவல்லிசைத்தூங்கிசைவண்ணம் - மெலிவல்லிசைத் தூங்கிசைவண்ணம் - இடை வல்லிசைத் தூங்கிசைவண்ணம் - ௫ - குறின்மெல்லிசைத்தூங்கிசைவண்ணம் - நெடின்மெல்லிசைத்தூங்கிசைவண்ணம் - வலிமெல்லிசைத் தூங்கிசைவண்ணம் - மெலிமெல்லிசைத் தூங்கிசைவண்ணம் - இடைமெல்லிசைத் தூங்கிசைவண்ணம் - ௫ - ஆ ௨௰.

(ஏந்திசைவண்ணமிருபதாவன) குறில்கவலேந்திசைவண்ணம் - நெடில்கவலேந்திசைவண்ணம் - வலியகவலேந்திசைவண்ணம் - மெலியகவலேந்திசைவண்ணம் - இடையகவலேந்திசைவண்ணம் - ௫ - குறிலொழுகலேந்திசைவண்ணம் - நெடிலொழுகலேந்திசைவண்ணம் - வலியொழுகலேந்திசைவண்ணம் - மெலியொழுகலேந்திசைவண்ணம் இடையொழுகலேந்திசைவண்ணம் - ௫ - குறில்வல்லிசை யேந்திசைவண்ணம் - நெடில்வல்லிசை யேந்திசைவண்ணம் - வலிவல்லிசை யேந்திசைவண்ணம் - மெலிவல்லிசையேந்திசைவண்ணம் - இடைவல்லிசையேந்திசைவண்ணம் - ௫ - குறின்மெல்லிசையேந்திசைவண்ணம் - நெடின்மெல்லிசை யேந்திசைவண்ணம் - வலிமெல்லிசையேந்திசைவண்ணம் - மெலிமெல்லிசை யேந்திசைவண்ணம் - இடைமெல்லிசை யேந்திசைவண்ணம் - ௫ - ஆ ௨௰.

(அடுக்கிசைவண்ணமிருபதாவன) குறில்கவலடுக்கிசைவண்ணம் - நெடில்கவலடுக்கிசைவண்ணம் - வலியகவலடுக்கிசைவண்ணம் - மெலியகவலடுக்கிசைவண்ணம் - இடையகவலடுக்கிசைவண்ணம் - ௫ - குறிலொழுகலடுக்கிசைவண்ணம் - நெடிலொழுகலடுக்கிசைவண்ணம் - வலியொழுகலடுக்கிசைவண்ணம் - மெலியொழுகலடுக்கிசைவண்ணம் - இடையொழுகலடுக்கிசைவண்ணம் - ௫ - குறில்வல்லிசையடுக்கிசைவண்ணம் - நெடில்வல்லிசையடுக்கிசைவண்ணம் - வலிவல்லிசையடுக்கிசைவண்ணம் - மெலிவல்லிசையடுக்கிசைவண்ணம் - இடைவல்லிசையடுக்கிசைவண்ணம் - ௫ - குறின்மெல்லிசையடுக்கிசைவண்ணம் - நெடின்மெல்லிசையடுக்கிசைவண்ணம் - வலிமெல்லிசையடுக்கிசைவண்ணம் - மெலிமெல்லிசையடுக்கிசைவண்ணம் - இடைமெல்லிசையடுக்கிசைவண்ணம் - ௫ - ஆ ௨௰.

(பிரிந்திசைவண்ணமிருபதாவன) குறிலகவற்பிரிந்திசைவண்ணம் - நெடிலகவற்பிரிந்திசைவண்ணம் - வலியகவற்பிரிந்திசைவண்ணம் - மெலியகவற் பிரிந்திசைவண்ணம் - இடையகவற் பிரிந்திசைவண்ணம் - ௫ - குறிலொழுகற் பிரிந்திசைவண்ணம் - நெடிலொழுகற் பிரிந்திசைவண்ணம் - வலியொழுகற்பிரிந்திசைவண்ணம் - மெலியொழுகற்பிரிந்திசைவண்ணம் - இடையொழுகற்பிரிந்திசைவண்ணம் - ௫ - குறில்வல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - நெடில்வல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - வலி

வல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - மெலிவல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - இடைவல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - ௩ - குறின்மெல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - நெடின்மெல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - வலிமெல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - மெலிமெல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - இடைமெல்லிசைப்பிரிந்திசைவண்ணம் - ௩ - ஆக உ௰.

(மயங்கிசைவண்ணமிருபதாவன) குறிலகவன் மயங்கிசைவண்ணம் - நெடிலகவன் மயங்கிசைவண்ணம் - வலியகவன் மயங்கிசைவண்ணம் - மெலியகவன் மயங்கிசைவண்ணம் - இடையகவன்மயங்கிசைவண்ணம் - ௫ - குறிலொழுகன்மயங்கிசைவண்ணம் - நெடிலொழுகன்மயங்கிசைவண்ணம் - வலியொழுகன்மயங்கிசைவண்ணம் - மெலியொழுகன்மயங்கிசைவண்ணம் - இடையொழுகன்மயங்கிசைவண்ணம் - ௫ - குறில்வல்லிசை மயங்கிசைவண்ணம் - நெடில்வல்லிசை மயங்கிசைவண்ணம் - வலிவல்லிசை மயங்கிசைவண்ணம் - மெலிவல்லிசைமயங்கிசைவண்ணம் - இடைவல்லிசைமயங்கிசைவண்ணம் - ௫ - குறின்மெல்லிசை மயங்கிசைவண்ணம் - நெடின்மெல்லிசை மயங்கிசைவண்ணம் - வலிமெல்லிசைமயங்கிசைவண்ணம் - மெலிமெல்லிசைமயங்கிசைவண்ணம் - இடைமெல்லிசைமயங்கிசைவண்ணம் - ௫ - ஆக உ௰. ஆக வண்ணநூறும் வந்தவாறுகாண்க. வண்ணமெனத்தொகையானொன்றும்வகையானேந்தும்விரியானூறுமெனப்பிரித்துச் சொன்னார்கையனார்முதலாகியவொருசாராசிரியர். — தொல்காப்பியம் — வண்ணந்தாமே நாலைந்தென்ப — அவற்றுள் பாஅவண்ணஞ் சொற்சீர்த்தாகி நூற்பாப்பயிலும் — தாஅவண்ணமிடையிட்டுவந்தவெதுகையாகும் — வல்லிசைவண்ணம் வல்லெழுத்துப்பயிலும் — மெல்லிசைவண்ண மெல்லெழுத்துமிகுமே — இயைபுவண்ணமிடையெழுத்துமிகுமே — அளபெடைவண்ண மளபெடைபயிலும் — நெடுஞ்சீர்வண்ண நெட்டெழுத்துப்பயிலும் — குறுஞ்சீர்வண்ணங் குற்றெழுத்துப்பயிலும் — சித்திரவண்ண நெடியவுங் குறியவு நேர்ந்துவருமே — நலிபுவண்ணமாய்தம்பயிலும் — அகப்பாட்டுவண்ண முடியாத்தன்மையின் முடித்ததன்மேற்றே — புறப்பாட்டுவண்ண முடிந்ததுபோன்றுமுடியாதாகும் — ஒழுகுவண்ணமோசையினொழுகும் — ஒரூஉவண்ணமொரீஇத்தொடுக்கும் — எண்ணுவண்ணமெண்ணுப்பயிலும் — அகைப்புவண்ணமறுத்தறுத்தொழுகும் — தூங்கல்வண்ணம்வஞ்சிபயிலும் — எந்தல்வண்ணஞ்சொல்லியசொல்லிற்சொல்லியதுசிறக்கும் — உருட்டுவண்ணமராகந்தொடுக்கும் — முடுகுவண்ண மடியிறந்தோடி யதனோரற்றே — வண்ணந்தாமே யிவையெனமொழிப. இவைமேற்கோள். எ-று. (௯உ)

இரண்டாமோத்துச் செய்யுளியன் முற்றிற்று

——00000——

## மூன்றுமோத்துச் செய்யுண்மரபியல்.

(உ௱௯௧-சூ.) செய்யுடெரிவுறமுத்தகங்குளகந் , தொகைதொடர்நிலையெனத் தொகுதிநான் கவற்றுண் , முத்தகந்தனித்தாய் முடியுஞ்செய்யுளே.

* எ-து. * மேல்விரித்துரைத்தபாவும் பாவினமுந் தனித்துநின்றுந்தொடுத்துநின்றுந் தன்பொருண்முடியவருவன செய்யுளெனப்படும். இவற்றின்வகையுமிவற்றிற்கியலுந்தன்மையுமீண்டுவிளங்குவதாகையி விவ்வோத்துச்செய்யுண் மரபெனும்பெயர்த்து இதனைப்பாட்டியலென்மருமுளரெனக்கொள்க. ஆகையின்முத்தகமென்றுங் குளகமென்றுந் தொகைநிலையென்றுந் தொடர்நிலையென்றுஞ் செய்யுளெல்லா நால்வகைப் படுமென்றுணர்க. இவற்றுண் முத்தகச்செய்யு ளென்பது தனியேநின்றொருபொருளைப்பயின்று முடியும் [வ-று] — வெண்பா — மூவாமுதலாமூவாளோர்முதலோனைத் , தாவாமேதார்மூவுலகுந்தாழ்ந்தேத்தத் , தூவாத , பாவடியைப்பாடிப் பரகதிநாஞ்சேரச் ’ சேவடியைச்சேர்ந்துந்தொழுது. எ-ம் — ஞானமேநல்லமைச்சாய் நாற்கரணநாற்படையாய்த் , தானம்விருதாய்த்தவமரணைப் ’ பானணியாய்க் , காவலூர்த்தாய்க்கண்ணருட் குடைக்கீழ்க்கன்னிமையே. யாவலூர்ந்தாளுமரசு எ-ம். பிறவுமன்ன. — தண்டியலங்காரம் — செய்யுளென்பவைதெரிவுறவிரிப்பின் , முத்தகங்குளகந் தொகைதொடர்நிலையென , வெத்திறத்தனவுமீரிரண்டாகும் அவற்றுண் , முத்தகச்செய்யுட்டனிநின்றுமுடியும் இவைமேற்கோள். எ-று. (௧)

(உ௱௯௨-சூ.) குளகமொருவினைகொளும்பலபாட்டே.

* எ-து. * குளகமாமாறுணர்த்துதும் ஒவ்வொருபாட்டுத் தன்வினைக்கொள்ளாமற்பலவேகூடியொருவினைகொண்டுமுடிவன குளகச்செய்பு ளெனப்படும். [வ-று] — கோதொழிமெய்ம்மறைக்குன்றுங்கூவெலாந் , தீதொழித்தீர்த்தநன்னதியுஞ்சேர்பொதுப் , பாதொழிநாடெனப்பவனமூன்றுமுன ’ வாதொழிதிருவில் வாழ்வார்செல்பாழியும் — ஆக்கமேபிணையிலீரறத்தின்மாலையு , மூக்கமேபுரவியுமுலகைதீர்த்தடு ’ நோக்கமேவேழமுநொடிப்பின்யாவையுந் , தாக்கமேலதிர்முகின் முரசின்றன்மையும். — மியரிதுதித்தமீன்விரிபதாகையு , நோயரிநீதியினுனித்தகோன்மையுங் , காயரிதினைந்தபூங்காவிற்காவலூர்த் , தாயரிதீன்றகோன்றசாங்கமென்பவே. என விம்மூன்றுமொருவினைகொண்டு முடிந்தமையாற் குளகச்செய்புளெனப்படும் பிறவுமன்ன — தண்டியலங்காரம் — குளகம்பலபாட் டொருவினைகொள்ளும் இது மேற்கோள். எ-று. (உ)

(உ௱௯௩-சூ.) தொகைநிலைச்செய்புடோன்றக்கூறி , னொருவனுரைத்தவும்பல்லோர்பகர்ந்தவு

ம், பொருளிடங்காலந்தொழிலென நான்கினும், பாட்டினுமளவினுங் கூட்டியதாகும்.

* எ-து * தொகைநிலைச்செய்யுளாமாறுணர்த்துதும் சூத்திரத்திற்காட்டிய பல்வகைத்தொகைப்பாட்டிணைந்து வருவனதொகைநிலைச்செய்யுளெனப்படும் ஆகையிற்றிருவள்ளுவப்பயனென்பது பலபாட்டாகியு மொருவனானுரைக்கப்பட்டவதனாற் றொக்குநின்றுதொகைநிலைச்செய்யுளாயிற்று. நெடுந்தொகையென்பது பலராலுரைக்கப்பட்டதொகைநிலைச்செய்யுள் புறநானூறென்பது பொருளாற்றொகுத்த தொகைநிலைச்செய்யுள்-களவழிநாற்பதென்பதிடத்தாற் றொகைநிலைச்செய்யுள்-கார்நாற்பதென்பது காலத்தாற்றொகைநிலைச்செய்யுள்-ஐந்திணையென்பதுதொழிலாற்றொகைநிலைச்செய்யுள் - கலித்தொகையென்பது பாட்டாற்றொகைநிலைச்செய்யுள் குறுந்தொகையென்பதளவினாற்றொகைநிலைச்செய்யுள்-பிறவுமன்ன. எ-று. (௩)

(உாருச-சூ.) தொடர்நிலைப்பொருளினுஞ்சொல்லினுமாகும், பொருட்டொடர்நிலைதற்பொருடரத்தானே, பற்பலபாட்டாய்ப்பயனிற்றொடருஞ், சொற்றொடர்நிலையெனிற்றாக்கந்தாதியே

* எ-து * தொடர்நிலைச்செய்யுளாமாறுணர்த்துதும் பலபாட்டாகிப்பொருளானுஞ் சொல்லானுந்தொடர்ந்தொருப்படவருவன தொடர்நிலைச்செய்யுளெனப்படும் இவற்றுளொருபொருளைவிளக்கத்தம்முட்டொடர்ந்துவரும் பலபாட்டேபொருட்டொடர்நிலைச்செய்யுளென்ப இராமாயணஞ் சிந்தாமணிபலவுமிந்நடையுளவெனக்கொள்க. அன்றியுமொருசெய்யுளிறுதிமற் றொருசெய்யுட்காதியாகச்செய்யுளந்தாதியோடு தொடுத்துவருவன சொற்றொடர்நிலைச்செய்யுளென்ப கலம்பகமுதலியவிந்நடை யுளவெனக்கொள்க. — தண்டியலங்காரம் — பொருளினுஞ் சொல்லினுமிருவகைத்தொடர்நிலை — செய்யுளந்தாதிசொற்றொடர்நிலையே. இவைமேற்கோள் எ-று (௪)

(உாருரு-சூ.) பொருட்டொடர்நிலையே புகலிற்காப்பியம், பெருங்காப்பியமெனப் பிரிவிரண்டவற்றுட், காப்பியமறமுதனான்கிற்குறைநவும், புராணம்பற்கதைபுனைநவுமென்ப.

* எ-து * காப்பியமும்புராணமுமாமாறுணர்த்துதும் கவியாற்பாடப்படுவனவெல்லாங்காப்பியமாயினும் பொதுவாய்நின்றபெயரைச் சிறப்பிற்குறுகிப்பொருட் டொடர்நிலைச்செய்யுளைக்காப்பியமென்றார் அங்ஙனஞ் சேற்றுண்மலர்வன வெல்லாம்பங்கய மெனப்படுமாயினும் பெயர்தாமரையொன்றின்மேலாயிற்று இவைபெருங்காப்பியமென்றுங் காப்பியமென்றுமிருவகைப்படும் இவற்றுளறம்பொருளின்பம்வீடெனநான்குமொருப்படத் தோன்றவுரையாதவற்றுளொன்றும் பலவுங்குறைந்துவருவன காப்பியமெனப்படும் காப்பியந்தானேபலகதைகளைவிளக்கிவரிற் புராணமெனப்படும். — தண்டியலங்காரம் — பெருங்காப்பியமேகாப்பியமென்றாங், கிரண்டாவியலும்பொருட்டொடர்நிலையே — அறமுதனான்கினுங் குறைபாடுடையது, காப்பியமென்று கருதப்படுமே இவைமேற்கோள் எ-று. (௫)

(உாருசு-சூ) பெருங்காப்பியநிலைபேசுங்காலை, வாழ்த்துவணக்கம், வரும்பொருளிவற்றினொன், றேற்புடைத்தாகமுன்வரவியன்று, நாற்பொருட்பயக்குநடைநெறித்தாகித், தன்னிகரில்லாத்தலைவனையுடைத்தாய், மலைகடனாடுவளர்நகர்பருவ, மிருசுடர்தோற்றமென்றினையனபுனைந்து, நன்மணம்புணர்தல் பொன்முடிகவித்தல், பூம்பொழினுகர்தல் புனல்விளையாட, றேம்பிழிமதுக்களிசிறுவரைப்பெறுதல், புலவியிற்புலத்தல் கலவியிற்களித்தலென், றின்னனபுனைந்தநன்னடைத்தாகி, மந்திரந்தூதுசெலவிகல்வென்றி, சந்தியிற்றொடர்ந்து சருக்கமிலம்பகம்' பரிச்சேதமென்னும் பான்மையின்விளங்கி, நெருங்கியசுவையும்பாவமும்விரும்பக், கற்றோர்புனையும்பெற்றியவென்ப, கூறியவுறுப்பிற் சிலகுறைந்தியலினும்' வேறுபாடின்றெனவிளம்பினர்புலவர்.

* எ-து * பெருங்காப்பியமாமாறுணர்த்துதும் பெருங்காப்பியமாவதற்குத்தன்பா நாயகனிகரில்லாதனாகவும் அறம்பொருளின்பம்வீடென நாற்பொருள்விளைவதற் கேதுவாகவும்வேண்டும் அதன்றிப்பெருங்காப்பியத்துறுப்பாவன தெய்வவணக்கமுஞ் செய்பொருளுரைத்தலு மென்றிவ்விருவகைச் சிறப்புப்பாயிரமுமிவ்விரண்டிற் கேற்புழிவாழ்த்துங்கூட்டவுமலையுங் கடலுநாடுநகரும் பருவங்களும் பருதியுதையமு மதியவுதையமு மென்றிவற்றின் வருணனையுநன்மணமாதலும் பொன்முடிசூடலும் பொழிலினுநீரினும் விளையாடலும் பெற்றசிறுவரும்புலவியுங் கலவியு மென்றிவற்றைப் புகழ்தலு மந்திரமுந் தூதுஞ் செலவும் போரும்வெற்றியுமென்றிவற்றைத் தொடர்ந்துகூறலும் பெருங்காப்பியத் துறுப்பாம் இவற்றுட் சிலகுறையினுங் குறையன்றென வுரைத்தனர்கற்றோர் சொல்லப்பட்டவுறுப்பெல்லாம் வேறுவேறாய்ச்சருக்கமாகவு மிலம்பகமாகவும் பரிச்சேதமாகவும் பிரிந்துமுடியும் சருக்கமெனினும் படலமெனினுமொக்கும் இவற்றுள்தொடுத்த பொருள்பலவாகப்பிரித்துத்தருவன சருக்கம்படலமுதலாயின அங்ஙனங்கம்பன் சீதைமணக்கதை மிதுலைகாண்படலத்திற்றொடங்கிப் பலபிரிவாகவகுத்துப் பதினைந்தாம்படலத்தின் முடித்தவாறுகாண்க. இலம்பகமோவெனிற்றொடுத்தபொருள் பிரிவிரிவின்றியொன்றாய்த்தருமெனக்கொள்க. அங்ஙனஞ்சிந்தாமணியிற் காந்தருவத்தைமுதலெண்மாமணக்கதை யொவ்வோரிலம்பகத்திற் றொடுத்துமுடித்ததுகாண்க. அன்றியுஞ்சுவையும் பாவமும்விரும்பவென்பதுவீரமிழிவச்சம் வியப்பலங்காரமுருத்திரநகையெனவெண்மைப்பாடுகள் சுவையெனவுமவற்றைக்காட்டுங்குறிப்புகள் வடமொழியிற்பாவமெனவுங்கொள்க. எ-று. (௬)

(உாருஎ-சூ) பிள்ளைக்கவியின்பெற்றியைக்கூறச், சுற்றவகுப்பொடு தெய்வங்கொலைகாப்ப,

வொற்றைப்படமூன்றுதிமுவே , ழீரூய்மதியினுமைந்தேழாண்டினுங் , காப்புச்செங்கீரை தால்சப்
பாணி , முத்தம்வாரானையம்புலிசிறுபறை , சிற்றில்சிறுதேராடவர்க்கேகடை , மூன்றொழித்தரிவை
யர்க்காங்கழங்கம்மானை, யூசலென்றிவையவ்விருபாற்குப் , பத்துறுப்பாயொவ்வொன்றுவிருத்தம்,
பப்பத்தாகப்பாடலென்ப.

* எ-து. * பிள்ளைக்கவியாமாறுணர்த்துதும். பிள்ளைப்பிறந்தமும்மாதமுதற் கொண்டிருபத்
தொன்றெல்லையாகவைத்தவற்று ளொற்றைப்படக்கிடந்த மூன்றைந்தேழொன்பது பதினொன்று
பதின்மூன்று பதினைந்து பதினேழுபத்தொன்ப திருபத்தொன்றெனப் பத்துபாதங்களினுமன்றி
யைந்தாமாண்டினு மேழாமாண்டினு முரைக்கத்தக்க பிள்ளைக்கவியிற்சுற்றத்தோடு பாநாயகனைத்
தெய்வங்கொலையகற்றிக்காப்பவென்றுகாப்பே முதலுறுப்பன்றிச்செங்கீரையுந்தாலுஞ் சப்பாணி
யுமுத்தமும்வாரானையுமம்புலியு மென்றிவ்வேழுமாந்தர்க்கு மாதர்க்கும்பொதுவாய் நிற்பச்சிறுப
றையுஞ்சிற்றிலுஞ் சிறுதேருமெனமூன்றாடவர்க்குந் தீம்புனலம்மானையூசலென்றிவை யாடலென
மூன்றரிவையர்க்குஞ்சிறப்பா யொவ்வொருபாற்குப் பத்துறுப்பாக வொவ்வோருறுப்புப் பத்து
விருத்தமாகப் பலசந்தமாய்நடக்கும் பிள்ளைக்கவியெனக்கொள்க. பிள்ளைக்கவியெனினும் பிள்ளைத்
தமிழெனினுமொக்கும், அன்றியுங் கழங்கென்பதை யபிடேகமென்மருமுளரோ உதாரணம்வந்தவ
ழியேகாண்க. எ-று. (எ)

( உாடுஅ-சூ. ) கலம்பகத்துட்புயங்கைக்கிளைத்தவமே, காலம்வண்டம்மானை, காற்றுப்பா
ணன், குறஞ்சித்திங்கல்குளிர்தழைசம்பிரத, மறந்தூதுசன்மதங்கமடக்கென , விரவிமூவாறும்வே
ண்டுமுறுப்பா, வொரும்போகுவெண்பாவுடன்கலித்துறையிவை, நிரையேமுதற்கண்ணின்றுபிற்கலந்
தவைம், பாத்துறைவிருத்தமந்தாதிவருமே , வந்தாலீசர்க்குவருநூறுமுனிமெய்யர்க் , கைந்தஃகு
மரசர்க்காற்றொண்ணூறு, மமைச்சர்க்கெழுபதுமைம்பதும்வணிகர்க் , கமைந்தவேனையோர்க்கா
றைந்தளவே.

* எ-து * கலம்பகமாமாறுணர்த்துதும். புயமுதலாக மடக்கீறுகக்கிடந்த மூவாறுறுப்புமு
ன்னும்பின்னுந் தம்முட்கலந்துவரவேநடக்குங் கலம்பகமெனக்கண்டுணர்க. அதுவே வழங்கும்பா
ட்டியாதோவெனின் முதற்கண்ணொருபோகும்வெண்பாவுங் கலித்துறையு மிவை மூன்றொழுங்கு
மாறுமல்வந்தபின்னர் வெண்பா வகவல கலிப்பா வஞ்சிப்பா மருட்பாவென வைவகைப்பாவும் வஞ்
சித்துறையும் கலித்துறையும் பலவகைவிருத்தமுந் தம்முட்கலந்துவரப்பெறும். வரினு மொருசெ
ய்யுளீற்றுமொழி மற்றொருசெய்யுளாதியாகவு மாதிச்செய்யுண் முதன்மொழி யீற்றுச்செய்யுட்க
டைமொழியாகவும்வந் தந்தாதிவருமெனக்கொள்க. இவற்று ளொருபோகென்பது மயங்கிசைக்
கொச்சகக்கலிப்பாவென்றுணர்க. ஆகையிவிது நடக்குந்தன்மையை - உாகூச-ஞ் - சூத்திரத்துட்கா
ண்க. அன்றியு மிம்முறைநடக்குங் கலம்பகத்தளவியாதோவெனில் வானோர்க்குக்குறையாத வொரு
நூறுபாட்டாகவும் முனிவர்க்கு மந்தணர்க்கு மைந்துகுறைத்துத் தொண்ணூற்றைந்தாகவு மரசர்
க்குத் தொண்ணூறாகவு மந்திரி தளகருத்தாவுக்கெழுபதாகவும் வணிகர்க்கைம்பதாகவு மொழிந்தம
ற்றையவர்க்கொருமுப்பதாகவும் வருமெனக்கொள்க. எ-று. (அ)

(உாடுகூ-சூ.) பரணிக்காயிரம்பகடுகொன்ற, தெரிவருந்தலைவனுய்த்தேவவாழ்த்தாதி, கடை
திறப்புங்கனல்காய்நிலம்பாலையும், புடையிற்காளிபொலிந்தகோயிலும், பேயொடுகாளிபேய்கள்கா
ளியோ, டோயிலவுரைத்தவிலோர்த்தவன்கீர்த்தி, புகறலுமவன்வழிபுறப்பொருடோன்றவு, மிகவெ
ஞ்சமரும்விரும்பலுமென்றிவை, யளவடிமுதற்பலவடியானிரடி, யுளபஃறுழிசையுளாப்பதுநெ
றியே.

* எ-து * பரணியாமாறுணர்த்துதும். போர்முகத்தாயிரம்யானையைக்கொன்றவீரனே பாட்
டுநாயகனுகக்கொண்டு பரணிக்குறுப்பெனக் கடவுள்வாழ்த்துங் கடைதிறப்பும் பாலைநிலமுங் காளி
கோயிலும் பேய்களோடுகாளியுங் காளியோடுபேய்களுஞ் சொல்லச்சொல்லக் கருதியநாயகன் கீர்
த்திவிளங்கலு மவன்வழியாகப் புறப்பொருடோன்ற வெம்போர்வழங்க விரும்பலுமென்றிவையெ
ல்லா மிருசீர் முச்சீரடியொழித்தொழிந்த மற்றடியாக வீரடிபஃறுழிசையாய்ப்பாடிய செய்யுளே
பரணியெனப்படும். எ-று. (கூ)

(உாகூய-சூ.) உலாவெனமலைந்தியுயர்நாடூர்மாலை, குலாவியபரிகரிகொடிமுரசுயர்கோ, விழை
ந்தத்சாங்கமுமேழ்பருவத்தார், வியந்துதொழுதலும்வேண்டுறுப்பாயக், கலிவெண்பாவாற்குலமக
ற்புகழ்தலே.

* எ-து * உலாவாமாறுணர்த்துதும். மலையும் யாறு நாடு மூரு மாலையுங் குதிரையும் யானையு
ங் கொடியு முரசுஞ் செங்கோலுமென வித்தசாங்கம் பத்துறுப்பாக விரிவாய்விளக்கியவையத்து
ணையுமுடைய வுயர்ந்தகுலமக னெடுந்தெருவருகையி லவனைக்கண்டவயதேழும் பதினொன்றும் பதி
ன்மூன்றும் பத்தொன்பது மிருபத்தைந்து முப்பத்தொன்று நாற்பதுமுள, பேதை பெதும்பை
மங்கை மடந்தை யரிவை தெரிவை பேரிளம்பெண்ணென வெழுவகைப்பருவமாத ருளம்வியந்த
வனைத்தொழுதலு மற்றோரோழுறுப்பாக விளக்கிக் கலிவெண்பாவாற்பாடிய செய்யு ளுலாவெனக்
கொள்க. கலிவெண்பாவருந்தன்மையை - உாகு-ஞ் - சூத்திரத்துட்காண்க. எ-று. (ய)

(௨௱௬௧-சூ.) மடலென்பதுலாப்போல்வழங்கினுங்கண்ட, மடவார்மயலும்வருந்தலைமகன் பெயர்ப், படமாறுவெதுகையும்பகர்தலுரித்தே.

* எ-து * மடலாமாறுணர்த்துதும். உலாவுறுப்பன்றிப் பாட்டுடைத்தலைவனைக்கண்ட மாதர்க்கெழும்பின வினியகாதலு மற்றோருறுப்பாகக் கூட்டி யவன்பெயரொதுகையாகக்கொண்டோரொதுகையோடு பாவெல்லாம்வந் துலாப்போல் கலிவெண்பாவாற்பாடிய செய்யுண்மடலெனவழங்கும். எ-று. (௰௧)

(௨௱௬௨-சூ.) அங்கமாலையேயங்கவகுப்பெலாம், பாதாதிகேசமுங்கேசாதிபாதமுங், கலிவெண்பாவாதல்வெளிவிருத்தமாதல், வலிதெனப்புகழ்ந் துவகுத்தசெய்யுளே.

* எ-து * அங்கமாலையாமாறுணர்த்துதும். கலிவெண்பாவாலாயினும் வெளிவிருத்தத்தாலாயினு முடலினுள்ளவுறுப்பெலா மொவ்வொன்றாகவிரித்துப் புகழ்ந்துபாடிய செய்யுளங்கமாலையெனப்படும். அவற்றுட் பாதந்தொட்டு மேலேறி தலைமயிரளவும்புகழ்வது பாதாதிகேசமெனவுஞ் சிரந்தொட்டிறங்கிப் பாதத்தளவும்புகழ்வது கேசாதிபாதமெனவும் வழங்கும். எ-று. (௰௨)

(௨௱௬௩-சூ.) சின்னப்பூவெனத்தெளிநேரிசைவெண்பா, நூறுதொண்ணூறெழுப லதம்டதாறைந்துமாய்ப், பாடித்தசாங்கம்பற்றிப்புகழ்வதே.

* எ-து * சின்னப்பூவாமாறுணர்த்துதும். மலைமுதற்றசாங்கத்தி னாம்பொருளையு நேரிசைவெண்பாவாலேசூத்திரத்துட்காட்டியவளவொடுபாடியசெய்யுளே சின்னப்பூவெனவழங்கும். அன்றியுந் தசாங்கத் தொவ்வொருபொரு ளொவ்வொருவெண்பாவாகப் பத்துப்பாடலுமா மங்களம்பாடியசெய்யுள் தசாங்கமெனப்படும். எ-று. (௰௩)

(௨௱௬௪-சூ.) ஒருபாவொருபதாமுறைப்பரும்வெண்பா, வகவல்கலித்துறையவற்றுளொன்றூற், பத்தெனப்பாடிப்பகுத்தசெய்யுளே.

* எ-து * ஒருபாவொருபதாமாறுணர்த்துதும். எப்பொருண்மேலும் பத்துவெண்பாவாயினும் பத்துக்கலித்துறையாயினும் பத்தாசிரியப்பாவாயினும்பாடியசெய்யு ளொருபாவொருபதெனப்படும். எ-று. (௰௪)

(௨௱௬௫-சூ.) இருபாவிருபதாமிணைந்தநாலைந்தாய், வெள்ளையகவல்விரவிப்பாடலே.

* எ-து * இருபாவிருபதாமாறுணர்த்துதும். வெண்பாவு மகவலு முறையேகலந் தோரிருபதுபாவான்முடித்த செய்யு ளிருபாவிருபதெனப்படும். எ-று. (௰௫)

(௨௱௬௬-சூ.) ஆற்றுப்படையென்பவாற்றெதிர்ப்படுத்திய, புலவர்பாணர் பொருநர்கூத்தர், பலபுகழ்கவற்பாவொடுபாடலே.

* எ-து * ஆற்றுப்படையாமாறுணர்த்துதும். ஒருவனைப் புகழ்ந்துவாழ்த்தப் புலவரும் பாடுவரும் பொருநருங் கூத்தருமென் றிவரடங்கலுமாத விவருளொருவகுட்பாதல்வழி யெதிர்ப்பட்டதாகப்புகழ்ந் தாசிரியப்பாவாற்பாடுவ தாற்றுப்படையெனக்கொள்க. என்னை ஆறெனினும்வழியெனினுமொக்கும் படையெனினும் படுத்தலெனினுமொக்கும். எ-று. (௰௬)

(௨௱௬௭-சூ) வருக்கமாலையாம்வருக்கவெழுத்தென, வுயிரோடு-க-ச-த-ந-ப-ம-வ-வெனவெண், வரிமுதல்வந்துவருமெண்ணகவலே.

* எ-து * வருக்கமாலையாமாறுணர்த்துதும். வருக்கவெழுத்தெனக்கூறிய வெண்பரியெழுத்துமுதற்கண்வந் தெட்டகவலை யெப்பொருண்மேலும்பாடிய செய்யுள் வருக்கமாலையெனப்படும். ஆகையி லிங்கண்வருக்கவெழுத்தெனப்படுவன மொழிமுதற்கண்வருமெழுத்தாயாயினு மவற்றுள்ளுவ்வரியவ்வரிமிகவழங்காமையானிங்கணொழிந்தன. எ-று. (௰௭)

(௨௱௬௮-சூ.) மாலையேயகவலால்வழங்குமவற்றுட், டானைபோர்வெற்றிதனித்தனிபுகழ்வது, தானைவஞ்சிவாகையெனமூன்றும்.

* எ-து * மூவகைமாலையாமாறுணர்த்துதும். பலநேரிசையாசிரியப்பாவொடு நால்வகைவீரத்தானையைப்புகழ்வது தானைமாலையெனவும் பகைவரைத்தாக்கச்செல்லும் வீரத்தைப்புகழ்வதே வஞ்சிமாலையெனவும் பகைவரைச்செகுத்துக்கொண்டவெற்றியைப்புகழ்வது வாகைமாலையெனவும் வழங்கும், ஆகையிற் சூத்திரத்துண்மாலையென்பது முதனிலைத்தீவகமாக நின்றதெனக் கண்டுணர்க. எ-று. (௰௮)

(௨௱௬௯-சூ.) புகழ்ச்சிமாலையாம்பூங்குழலாரை, யிகழ்ச்சியில்குலமியைவஞ்சிபாட, நாமமாலையாநம்பிகட்புகழ்தலே.

* எ-து * புகழ்ச்சிமாலைநாமமாலையாமாறுணர்த்துதும். தன்னுரிச்சீருந்தளையுமன்றிப் பிறவசீரையுங்கூட்டியவடிகள் கலந்துவரும்வஞ்சிப்பாவாற் குலப்பெயர்விளங்கித்தோன்ற மாதரைப்புகழ்வதுபுகழ்ச்சிமாலையெனவுமங்கண்மாந்தரைப்புகழ்வதுநாம்மாலையெனவும்வழங்கும். எ-று (௰௯)

(௨௱௭௰-சூ) செருக்களவஞ்சியாஞ்செருமுகத்தாயவை, சுருக்கியவஞ்சிதொடுத்துப்பாடலே.

* எ - து * செருக்களவஞ்சியாமாறுணர்த்துதும். தேர் கரி பரி பதாதியென விருபடைதாற்றானையெதிர்த்துக் கணைகொடுத்தலு மடுத்துவளைவேலெறிதலுங்கலந்து கைவாள் வீசலும் வலமிடம் வளைத்ததேரும் வெருவுறச்சினத்தகளிறுந் தூசெழப்பாய்ந்த பரியு மொலிமிகப்பொருதபதாதியுமிவையு மிவற்றோடு போர்க்களத்தாயினயாவுந்தோன்றப் பற்பல வஞ்சிப்பாவொடு

தொடுத்த செய்யுளே செருக்களவஞ்சி யெனப்படும். எ - று. (௨௰)

(௨௱௭௧-சூ.) வரலாற்றுவஞ்சியாம்வல்லறமுதலுன்கும, வருமாறுணாத்துவஞ்சிபாடலே.

* எ-து * வரலாற்றுவஞ்சியாமாறுணர்த்துதும். அறம்பொருளின்பம்வீடென நான்கு மாமா றுணர்த்தி வஞ்சிப்பாவான்முடிந்தசெய்யுளே வரலாற்றுவஞ்சியெனப்படும். எ-று. (௨௧)

(௨௱௭௨-சூ) நான்மணிமாலையேநாற்பதந்தாதியாய்த், தாவிமணிக்கொத்தன தந்தன்மனவி ருத்தமே.

* எ-து * நான்மணிமாலையாமாறுணர்த்துதும். கழிநெடிலடியால்வரு மாசிரியவிருத்த மந் தாதியாயொருநாற்ப துமாசத்தொடுத்தசெய்யுளே நான்மணிமாலையெனப்படும். மனவிருத்தமெ னினு மாசிரியவிருத்தமெனினுமொக்கும். எ-று. (௨௨)

(௨௱௭௩-சூ.) விருத்தவிலக்கணம் விளம்புங்காலைக், குடையூர்நாடுகோல்பரிகரிவில்வடி, வாள் வேலொன்பான்வகுப்புமனவிருத்த, மீரைந்தவ்வவற்றியற்பெயர்கொள்ளுமே.

* எ-து *விருத்தவிலக்கணமாமாறுணர்த்துதும். பாட்டுடைத்தலை மகனுடைய குடையுமூரு நாடுஞ் செங்கோலுங் குதிரையும் யானையும்வில்லும் வாளும்வேலுமென்றிவ் வொன்பதுறப்பும் விளங்கித்தோன்றப் புகழ்ந்தொவ்வொரு வகுப்பிற்குப்பத்தாசிரிய விருத்தமாகப்பாடவே விருத்த விலக்கணமெனும் பெயர்பெற்றெவ்வொரு வகுப்புத்தத்தமுறுப்பியற் பெயரைக்கொண்டுவழங்கு மங்ஙனங்குடைவிருத்தமூர் விருத்தநாட்டுவிருத்தம். பிறவுமன்ன. எ-று. (௨௩)

(௨௱௭௪-சூ.) அட்டமங்கலமெட்டுமனவிருத்தங், கவிதோறுந்தெய்வங் காப்பவென்றுரைப் பது, நவமணிமாலையந்நடையவென்ப.

* எ - து. * அட்டமங்கலநவமணிமாலையாமாறுணர்த்துதும். பாட்டுடைத்தலைவனைக் கவிகவி தோறுந்தெய்வங்காப்பவென் றாசிரியவிருத்தமெட்டாகமுடிவ தட்டமங்கலமெனவுமொன்பதாக முடிவதுநவமணிமாலையெனவும் வழங்கும். எ-று. (௨௪)

(௨௱௭௫-சூ.) பலசந்தமாலைபப்பத்தொருசந்தஞ், சிலவந்தாதியாய்ச்செப்புமனவிருத்தமே

* எ- து. * பலசந்தமாலையாமாறுணர்த்துதும். அந்தாதியாகநூறாசிரியவிருத்தம்பாடி பப்ப த்தொவ்வொரு சந்தமாகத்தொடுத்தசெய்யுளே பலசந்தமாலையெனப்படும். எ-று. (௨௫)

(௨௱௭௬-சூ.) ஊசலென்பவூசலாய்க்கிளையள, வாசிரியவிருத்தமாகப்பாடலுந், தன்னுவி வருங் கலித்தாழிசைப்பாடலும், வண்ணகமுதற்கண்வரினுமியல்ப்ப.

* எ-து * ஊசலாமாறுணர்த்துதும் ஊசலைப்பாடிப்பாட்டுடைத்தலைமகனது சுற்றத்தாரள வாக வாசிரியவிருத்தமாயினுங் கலித்தாழிசையாயினும் பாடுவதூசலெனப்படும். அவற்றின்முதற்க ண்வண்ணகமொன்றுவரினு மியலுமென்றுணர்க. வண்ணகமெனினு மராகமெனினு முடுகியலெனி னுமொக்கும். எ-று. (௨௬)

(௨௱௭௭-சூ.) கோவையேயகப்பொருட் கூறுபாடிசைப்பட, நாவலர்கலித்துறைநானூறுரை த்தலே.

* எ-து * கோவையாமாறுணர்த்துதும் பொருளதிகாரத்தின்கண்ணே காட்டியதன்மையிற் களவுகற்பெனவிருபாலுடைய வகப்பொருட்டிணைகளேழும் விளக்கிக்கலித்துறை நானூறாகப்பா டித்தொடுத்தசெய்யுள் கோவையெனப்படும். எ-று. (௨௭)

(௨௱௭௮-சூ.) இரட்டைமாலையாமிணைந்தபப்பத்தாய், வெண்பாகலித்துறைவிரவிப்பாடலே

* எ-து * இரட்டைமாலையாமாறுணர்த்துதும் எப்பொருண்மேலுமுறையே கலந்தபத்துவெ ண்பாவும் பத்துக்கலித்துறையும் வருவதிரட்டைமாலையெனப்படும். எ-று. (௨௮)

(௨௱௭௯-சூ) மணிமாலைவெண்பாவகைநாலைந்துட, னிணையாய்க்கலித்துறையிரட்டைப்பாடலே.

* எ-து * மணிமாலையாமாறுணர்த்துதும் எப்பொருண்மேலும் வெண்பா விருபதுங் கலித் துறைநாற்பதுங்கலந்துவருவதுமணிமாலையெனப்படும். எ-று. (௨௯)

(௨௱௮௰-சூ.) பன்மணிமாலைபன்னிற்கலம்பகத், தொருபோகம்மானை யூசலிவைநீத், தகவல் வெள்ளையருங்கலித்துறையென், றவைசெறிநூறந்தாதியாய்வருமே.

* எ-து. * பன்மணிமாலையாமாறுணர்த்துதும் மேலேகாட்டிய கலம்பகத்தின் முகத்துவரு மொருபோகுமம்மானையு மூசலுமென்றிம்மூன்றுமொழித்தொழிந்த கலம்பகவுறுப்புடைத்தாகி வெ ண்பாவகவல் கலித்துறையென் றிம்மூவகைப்பாட்டா னூறாகவு மந்தாதியாகவு முடிந்தசெய்யுள் பன்மணிமாலையெனப்படும். எ-று. (௩௰)

(௨௱௮௧-சூ.) மும்மணிக்கோவையேமுப்பதந்தாதியா, யகவல்வெள்ளை கலித்துறைமுறைவரு மும்மணிமாலையாமுறைமாறிவெள்ளை, கலித்துறையகவல்கதிபெறுஞ்செய்யுளே.

* எ- து * மும்மணிக்கோவையு மும்மணிமாலையுமாமாறுணர்த்துதும் அந்தாதியாகவு முப்ப துபாட்டாகவுமகவல்வெண்பா கலித்துறையென விம்மூன்றுமிம்முறையானே தொடுத்துவருவது மும்மணிக்கோவையெனப்படும் அங்ஙனமம்மூவகைப்பாட்டொழுங்குமாறிவெண்பா கலித்துறை யகவலாகத்தொடுத்துவருவது மும்மணிமாலையெனப்படும். எ-று. (௩௧)

(௨௱௮௨-சூ.) இணைமணிமாலையிணை வெண்பாக்கலித்துறை, யகவன்மனவிருத்தந்தொடர்நூ றியம்பலே, யலங்காரபஞ்சக மந்நால்வகைப்பாக், கலந்தவ்வைந்தாய்க் கதிபெறப்பாடலே.

* எ-து. * இணைமணிமாலையுமலங்காரபஞ்சகமுமாமாறுணர்த்துதும். வெண்பா கலித்துறை யாசிரியப்பா வாசிரியவிருத்தமென விந்நான்குங்கலந்து நூறாகவருவதிணைமணிமாலையெனவு மந் நால்வகையும்வகைக்கோரைந்துபாட்டாக வருவதலங்காரபஞ்சகமெனவும் வழங்கும். எ-று. (௬௨)

(௨௱அ௬-௬.) பாப்பொருள்ளவாதிபலபெயருளபிற.

* எ-து * செய்யுட்குப்பொதுவிதியுணர்த்துதும் மேற்கூறியவற்றையன்றிப்பாவானும் பொருளானுமளவானுமுதலியகாரணங்களானும் வேறுபடப்பெயர்பெறுவனவுளவெனக்கொள்க. அங் ஙனமாசிரியமாலை - வெண்பாமாலை - முதலியபலவும் பாவாற்பெயரைப்பெற்றன தாராகியகொடிப்படையைப் பாடலிற்றார்மாலையுங் கார்முதலாறுபருவங்களைப் பாடலிற் பருவமாலையுமினியவுமின்னாவும்பாடலிலிருமொழிமாலையு முதலியபலவும் பொருளாற் பெயரைப்பெற்றன நயனப்பத்தும் பயோதரப்பத்துமினியநாற்பதுமின்னாநாற்பது முதலியபலவும்பொருளானு மளவானும் பெயரைப்பெற்றன. சூத்திரத்துட்பிறவென்றமிகையான் மற்றைப்பிரபந்தங்கள் வருமாறு.

(ஐந்திணைச்செய்யுள்) புணர்தன்முதலியவைந்துரிப்பொருளும் விளங்கக்குறிஞ்சி முதலியவைந்திணையினையுங்கூறுவது.

(வருக்கக்கோவை) அகரமுதலாகிய வெழுத்துவருக்க மொழிக்குமுதலா மெழுத்துமுறையே காரிகைத்துறைப்பாட்டாகப்படுவது.

(அநுராகமாலை) தலைவன்கனவின்கணொருத்தியைக்கண்டுகேட்டுண்டுயிர்த் தினிமையுறப்புணர்ந்ததைத்தன்னுயிர்ப்பாங்கற் குரைத்ததாக நேரிசைக்கலிவெண்பாவாற்கூறுவது.

(பெருமகிழ்ச்சிமாலை) தலைவியினழகு குணமாக்கஞ் சிறப்பினைக்கூறுவது.

(மெய்க்கீர்த்திமாலை) ¦ சொற்சீரடியென்னுங் கட்டுரைச்செய்யுளாற் குலமுறையிற் செய்தகீர்த்தியைக்கூறுவது.

(காப்புமாலை) தெய்வங்காத்தலாக மூன்றுசெய்யுளானும் ஐந்துசெய்யுளானும் எழ்செய்யுளானும் பாடுவது.

(வேனின்மாலை) வேனிலையு முதிர்வேனிலையுஞ்சிறப்பித்துப் பாடுவது.

(வசந்தமாலை) தென்றலைவருணித்துப் பாடுவது.

(தாரகைமாலை) அருந்ததிக்கற்பின்மகளிர்க் குள்ள வியற்கைக்குணங்களை வகுப்பாற்கூறுவது தூசிப்படையி னணியைப்புகழ்ந்தவகுப்பென்பாருமுளர்.

(உற்பவமாலை) திருமால்பிறப்புப் பத்தனையு மாசிரிய விருத்தத்தாற்கூறுவது.

(தண்டகமாலை) வெண்பாவான்முந்நூறு செய்யுட்கூறுவது இதுவே புணர்ச்சிமாலை யெனவும்படும்.

(வீரவெட்சிமாலை) சுத்தவீரன்மாற்றாரூரிற்சென்றுபசுநிரைகோடற்கு வெட்சிப்பூமாலைசூடியவ்வண்ணம்போய்நிரைகவர்ந் துவரிலவனுக்கு முன்பு தசாங்கம்வைத்துப்போய்வந்த வெற்றிப்பாடுவது.

(வெற்றிக்கரந்தை மஞ்சரி) பகைவர்கொண்ட தந்நிரைமீட்போர்கரந்தைப் பூமாலைசூடிப் போய்மீட்பதைக்கூறுவது.

(போர்க்கெழுவஞ்சி) மாற்றார்மேற் போர்குறித்துப் போகின்ற வயவேந்தர்வஞ்சிப் பூமாலைசூடிப்புறப்படும் படையெழுச்சிச் சிறப்பையாசிரியப்பாவாற் கூறுவது.

(காஞ்சிமாலை) மாற்றாரூர்ப்புறத்துக்காஞ்சிப் பூமாலைசூடியூன்றலைக்கூறுவது.

(நொச்சிமாலை) புறத்தூன்றியமாற்றார்க்கோடலின்றி நொச்சிப்பூமாலைசூடித்தன்மதில் காக்குந்திறங்கூறுவது.

(உழிஞைமாலை) மாற்றாரதூர்ப்புறஞ்சூழவுழிஞைப்பூமாலைசூடிப்படைவளைப்பதைக்கூறுவது

(தும்பைமாலை) மாற்றாரொடு தும்பைப்பூமாலை சூடிப்பொருதுவதைக்கூறுவது.

(வாதோரணமஞ்சரி) கொலைபுரிமதயானையைவயப்படுத்தி யடக்கினவர்கட்கு மெதிர்பொருகளிற்றை வெட்டியடக்கினவர்கட்கும் பற்றிப்பிடித்துச் சேர்த்தவர்கட்கும் வீரப்பாட்டின்சிறப்பைவஞ்சிப்பாவாற்றொடுத்துப்பாடுவது.

(எண்செய்யுள்) பாட்டுடைத்தலைவன தூரினையும் பெயரினையும் பத்துமுதலாயிரமளவும்பாடியெண்ணாற் பெயர்பெறுவது.

(ஒலியலந்தாதி) பதினாறுகலையோரடியாகவைத்திங்ஙன நாலடிக்கறுபத்துநாலுகலைவகுத்துப்பலசந்தமாகவண்ணமுங் கலைவைப்புந்தவறுமலந்தாதித்து முப்பதுசெய்யுட்பாடுவது சிறுபான்மை யெட்டுக்கலையானும்வரப்பெறும் அன்றியும் வெண்பா வகவல் கலித்துறையாகியவிம்மூன்றையும் பப்பத்தாகவந்தாதித்துப்பாடுவதுமாம்.

(பதிற்றந்தாதி) பத்துவெண்பா பத்துக்கலித்துறைப் பொருட்டன்மைதோன்ற வந்தாதித்துப்பாடுவது.

(நூற்றந்தாதி) நூறுவெண்பாவினாலேனு நூறு கலித்துறையினாலேனு மந்தாதித்தொடையாற்கூறுவது.

(வளமடல்) அறம்பொருளின்பமாகிய வம்மூக்கூறுபாட்டின்பயனை யெள்ளி மங்கையர் திற

த்துறங்காம வின்பத்தினையே பயனெனக்கொண்டு பாட்டுடைத்தலைமகனியற் பெயர்க்குத்தக்கதை யெதுகையாகநாட்டி யுரைத்தவ்வெதுகைபடத்தனிச் சொல்லின்றி யின்னிசைக்கலிவெண்பாவாற்றலைமகனிரந்துகுறைபெறாதுமடலேறுவதாயீரடி யெதுகைவரப்பாடுவது.

(கண்படை நிலை) அரசருமரசனைப் போல்வாரு மவைக்கணெடிது வைகியவழிமருத்துவரு மமைச்சருமுதலியோரவர்க்குக் கண்டுயில்கோடலைக்கருதிக்கூறுவது.

(துயிலெடைநிலை) தன்வலியாற்பாசறைக்கண்ணொரு மனக்கவற்சியின்றித் துயின்றவரசர்க்கு நல்லபுகழைக்கொடுத்தலைக் கருதியசூதர் துயிலெடுப்புதலாகப்பாடுவது.

(பெயரின்னிசை) பாட்டுடைத்தலைவன்பெயரினைச்சார-இன்னிசைவெண்பாவாற் றொண்ணூறேனும் - எழுபதேனும் - ஐம்பதேனும்பாடுவது.

(ஊரின்னிசை) பாட்டுடைத்தலைவ னூரினைச்சார வின்னிசைவெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும்பாடுவது.

(பெயர் நேரிசை) பாட்டுடைத்தலைவன் பெயரினைச்சார நேரிசைவெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனுமைம்பதேனும் பாடுவது.

(ஊர் நேரிசை) பாட்டுடைத்தலைவ னூரினைச்சார நேரிசைவெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனுமைம்பதேனும்பாடுவது.

(ஊர்வெண்பா) வெண்பாவா லூரைச்சிறப்பித்துப்பத்துச் செய்யுட்கூறுவது.

(விளக்குநிலை) வேலும்வேற்றலையும் விலங்காதோங்கியவாறுபோலக் கோலொடுவிளக்குமொன்றுபட்டோங்கு மாறோங்குவதாகக்கூறுவது.

(புறநிலை) நீவணங்குந்தெய்வ நின்னைப்பாதுகாப்ப நின்வழிவழிமிகுவதாக வெனக்கூறுவது.

(கடைநிலை) சான்றோர்சேணிடைவருதலாற் பிறந்தவருத்தந் தீரவாயில்காக்கின் றவனுக்கென் வரவினைத்தலைவர்க்கிசையெனக்கடைக்கணின் றுகூறுவது.

(கையறு நிலை) கணவனொடுமனைவி கழிந்துழியவர் கட்பட்ட வழிவுப்பொருளெல்லாம்பிறர்க்கறிவுறுத்தித்தாமிறந்துபடாதொழிந் தவாயத்தாரும் பரிசில்பெறும்விறலியருந் தனிப்படருழந்த செயலறுநிலையைக்கூறுவது.

(தசாங்கப்பத்து) நேரிசைவெண்பாவா லரசன்படைத்த தசாங்கத்தினைப்பத்துச்செய்யுளாற்கூவது.

(தசாங்கத்தயல்) அரசன் றசாங்கத்தினையாசிரியவிருத்தம் பத்தினாற்பாடுவது.

(அரசன்விருத்தம்) பத்துக்கலித்துறையு முப்பது விருத்தமுங்கலித்தாழிசையுமாக - மலை - கடல் - நாட்டுவருணனையு நிலவருணனையுமா வாண்மங்கலமுந் தோண்மங்கலமும் பாடிமுடிப்பது - இதுமுடிபுனைந்தவேந்தற்காம்.

(நயனப்பத்து) கண்ணினைப்பத்துச் செய்யுளாற்கூறுவது.

(பயோதரப்பத்து) முலையினைப் பத்துச்செய்யுளாற்கூறுவது.

( கைக்கிளை ) ஒருதலைக்காமத்தினை யைந்துவிருத்தத்தாற்கூறுவது அன்றி வெண்பாமுப்பத்திரண்டு செய்யுளாற்கூறுவதுமாம்.

( மங்கலவள்ளை ) உயர்குலத்துதித்தமடவரலை வெண்பாவொன்பதாலும் வகுப்பொன்பதாலும்பாடுவது.

( தூது ) ஆண்பாலும்பெண்பாலு மவரவர்காதல் பாணன்முதலிய வுயர்திணையோடுங் கிள்ளைமுதலிய வஃறிணையோடுஞ்சொல்லித் தூதுபோய்வாவெனக் கலிவெண்பாவாற்கூறுவது.

( நாற்பது ) காலமுமிடமும் பொருளுமாகிய விவற்றுளொன்றனை நாற்பதுவெண்பாவாற்கூறுவது.

( குழமகன் ) கலிவெண்பாவான் மாதர்கடங்கையிற்கண்ட விளமைத்தன்மையுடைய குழமகனைப்புகழ்ந்துகூறுவது.

( தாண்டகம் ) இருபத்தேழெழுத்துமுதலாக வுயர்ந்தவெழுத்தடியினவாயெழுத்துங் குருவுமிலகுவு மொத்துவந்தன, அளவியற்றாண்டகமெனவும் எழுத்தொவ்வாது மெழுத்தலகொவ்வாதும்வந்தன அளவழித்தாண்டகமெனவும்படும்.

( பதிகம் ) ஒருபொருளைக்குறித்துப் பத்துச்செய்யுளாற்கூறுவது.

( சதகம் ) அகப்பொருளொன்றன்மேலாதல் புறப்பொருளொன்றன்மேலாதல் கற்பித்துநூறுசெய்யுட்கூறுவது.

( செவியறிவுறூஉ ) பொங்குதலின்றிப் புரையோர்நாப்பண் விதல்கடனெனவவையடக்கியற் பொருளுறவெண்பாமுதலு மாசிரியமிறுதியுமாகக்கூறுவது.

( பவனிக்காதல்) உலாக்காட்சியா லெய்தியகாமமிக்கா லவைபிறரொடுமுரைத்துவருந்துவது.

( குறத்திப்பாட்டு ) தலைவன்பவனிவரவு மகளிர்காமுறுதல் மோகினிவரவு உலாப்போந்த தலைவனைக்கண்டுமயங்கல் திங்கள்தென்றன்முதலியவு வாலம்பனம் பாங்கியுற்றதென்னெனவினவல தலைவிபாங்கியோடுற்றதுகூறல் பாங்கிதலைவனைப்பழித்துக்கூறல் தலைவிதலைவனைப்புகழ்ந்துகூறல் தலைவிபாங்கியைத்தூதுவேண்டல் தலைவிபாங்கியொடுதலைவனுடையாளங்கூறல் குறத்திவரவு தலைவி

குறத்தியைமலைவள்முதலியவினவல் குறத்திமலைவளநாட்டுவளமுதலியகூறல் தலைவன்றலைவளங்கிளைவளமுதலியகூறல் குறிசொல்லிவந்தமைகூறல் தலைவிகுறிவினவல் குறத்திதெய்வம்பராவல் குறிதேர்ந்து நல்வரவுகூறல் தலைவி பரிசிலுதவிவிடுத்தல் குறவன்வரவு புள்வரவுகூறல் கண்ணிகுததல் புட்படுத்தல் குறத்தியைக் காமுற்றுத் தேடல் குறவன் பாங்கனொடு குறததியடையாளங்கூறல் குறவன்குறத்தியைக்கண்ணுறல் குறவனணிமுதலியகண்டையுற்றுவினவலு மாண்டாண்டுகுறத்தி விடைகூறலுமாகக்கூறல் பெரும்பான்மையுமிவ்வகையுறுப்புக்களால் அகவல்வெண்பா தரவுகொச்சகம் கலித்துறை கழிநெடில்விருத்தம் கலிவிருத்தம் இச்செய்யுளிடைக்கிடைகூறிச் சிந்துமுதலிய நாடகத்தமிழாற்பாடுவது.

(உழத்திப்பாட்டு) கடவுள்வணக்க முறையே மூத்தபள்ளி யிளையபள்ளி குடும்பன் வரவோடவன்பெருமைகூறல் - முறையே யவர்வரலாறு - நாட்டுவளன் - குயிற்கூக்கேட்டல் - மழைவேண்டிக்கடவுட்பரவல் - மழைக்குறியோர்தல் - ஆற்றின்வரவு - அதன்சிறப்புக்காண்ட விவற்றிற் கிடையிடையகப்பொருட்டுறையுங்கூறிப் பண்ணைத்தலைவன்வரவு பள்ளிகளிருவர்முறையீடு - இளையாளையவனூப்பல் - பள்ளன்வெளிப்படல் - பண்ணைச்செயல்வினவல் - அவன் துகூறல் - ஆயனைவருவித்தல் - அவர்வரல் - அவர்பெருமைகூறல் - மூத்தபள்ளிமுறையீடு - குடும்பன் கிடையிலிருந்தான் போலவரல் - அவனைத்தொழுவின்மாட்டல் - அவன்புலம்பல் - மூத்தபள்ளியடிசிற்கொடுவரல் - அவன்வளொடுகூறல் - அவன்வளைமன்னித்தல்கேட்கவேண்டல் - அவன்மறுத்தல் அவன்சூளுறல் - அவள்வனைமீட்கவேண்டிப்பண்ணைத்தலைவனைப்பரவல் - விதைமுதலியவளங்கூறல் - உழவருழல் - காளைவெருளல் - அதுபள்ளனைப்பாய்தல் - பள்ளிகள்புலம்பல் - அவனெழுந்துவித்தல் - அதைப் பண்ணைத்தலைவர்க்கறிவித்தல் - நாறுநடல் - விளைந்தபிற்செப்பஞ்செயல் - நெல்லளத்தல் - மூத்தபள்ளிமுறையீடு - பள்ளிகளுளொருவர்க்கொருவ ரேசலென விவ்வுறுப்புக்களுறப் பாட்டுடைத்தலைவன் பெருமை யாங்காங்குதோன்றச் சிந்தும்விருத்தமும் விரவிவர விவற்றாற்பாடுவது.

(கடிகைவெண்பா) தேவரிடத்து மரசரிடத்து நிகழுங்காரியங் கடிகையளவிற்றோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசைவெண்பாவாற்கூறுவது.

(முதுகாஞ்சி) இளமைகழிந் தறிவுமிக்கோ ரிளமைகழியாதவறிவின்மாக்கட்குக்கூறுவதாம்.

(இயன்மொழிவாழ்த்து) இக்குடிப்பிறந்தோர்க்கெல்லா மிக்குண மியல்பென்று மவற்றை நீயுமியல்பாகவுடையையென்று மின்னோர்போல நீயுமியல்பாகவீயென்று முயர்ந்தோரவனைவாழ்த்துவதாகக்கூறுவது.

(பெருமங்கலம்) நாடோறுந் தான் மேற்கொள்கின்ற சிறைசெய்தன்முதலிய செற்றங்களைக்கைவிட்டுச் சிறைவிடுதன்முதலிய சிறந்ததொழில்கள் பிறத்தற்குக்காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக்கூறுவது. எ-று. (கூரு)

(உாஅச-சூ) முதன்மொழிப்பொருத்தந்தந்திடுங்காலை, மங்கலஞ்சொல்லெழுத்துத் தானம் பாலுணக் , கங்கில்வருண நாட்கதிகணமீரைந்தே.

* எ-து. * செய்யுட்கெல்லாம் பொதுவாய்ச் சிலவிலக்கணங்களை யுணர்த்தத் தொடங்கினோம் செய்யுட்கெல்லா முதன்மொழியிடத்துப் பலவகைப்பொருத்தம் வேண்டுவதாகவிதித்தார் முன்னோர் அவையே - மங்கலம் - சொல் - எழுத்து - தானம் - பால் - உண - வருணம் - நாள் - கதி - கணம் - எனப்பத்துவகைப்படும் இவற்றைத்தனித்தனிவிளக்குதும் — பொருத்தவியல். — பகர் செய்யுண் மங்கலஞ்சொல்லெழுத்துத்தானம்பாலுண்டி வருணநாட்கதியேயென்றுப் ' புகரில்கணமெனப்பத்தும்பிறங்குகேள்விப் புலவர்புகழ்முன்மொழிக்குப் புகல்வர்செம்பொற்' சிகரகிரியெனப் பணைத்துப்புடைத்து விம்மித்திரண்டெழுந்துவளர்ந்திளகிச் செறிந்தகொங்கைத் , தகரமலர்க்குழற்கருங்கட்குமுதச் செவ்வாய்ச்சரிவளைக்கைக்கொடியன்னத்தயங்குமாதே இதுமேற்கோள் (கூச)

(உாஅரு-சூ.) மங்கலப்பொருத்தமேகங்கைமலைநிலங் , கார்புயல்பொன்மணிகடல்சொல்கரிபரி , சீர்புகழெழுத்தலர் திங்கடினகரன் , றேர்வயலமுதந் திருவுலகாரண , நீர்பிறவருமுதனிலைச் சொல்லியல்பே.

* எ-து * மங்கலச்சொற்பொருத்தமாமாறுணர்த்துதும் மங்கலப்பொருத்தம் - கங்கை - மலை நிலம் - கார் - புயல் - பொன் - மணி - கடல் - சொல் - கரி - பரி - சீர் - புகழ் - எழுத்து - அலர் - திங்கள் - தினகரன் - தேர் - வயல் - அமிழ்தம் - திரு - உலகு - ஆரணம் - நீர் - என்றுசொல்லப்பட்ட விருபத்திருநற்சொல்லு மித்தொடக்கத்தன பிறவுமங்கலச்சொல் எ-ம் செய்யுண்முதற்சொல் எ-ம் பெறும் பிறவென்றமிகையாற் சொன்னவற்றின்பயனுளமற்றைத் திரிசொல்லெல்லா மேற்குமென்றுணர்க. காரென்பதற்கு-முகில் - மழை - குயின் - செல் - கனம் - மஞ்சு - எனினுமொக்கும் இவ்வகைச்சொல்லினென்றேமுதற் சொல்லாகவிணையாதாயின் மங்கலச்சொல்வழுவெனப்படும் அங்ஙனங்கம்பர் உலகம்யாவையுந்தானுளவாக்கலுமென்றார் திருவள்ளுவர் அகரமுதலவெழுத்தெல்லாமென்றார் பிறவுமன்ன ஆயினுமச்சொற்றாமேமுதல்வாராமையுமவற்றவற்றடுக்கிய பலவடைமொழியேவரினுமேற்குமென்றுணர்க. நன்னூலினுலகமுதல்வாராமல் மலர்தலையுலகமென்றதாகவுஞ் சிந்தாமணியின் மூவாமுதலாவுலகமொருமூன்று மென்றதாகவு நைடதத்துண்மழைமுதல்வாராமற் கருவிமாமழையென்றதாகவுங் காரிகையின்மலர்முதல்வாராமற்கத்தமடிவிற் கடிமலரொன்றதாகவுங்

ண்டுமுதற் சொல்லாகமங்கலச்சொற் கடைமொழியேவந்தவாறுகாண்க. — பொருத்தவியல் — மாமணிதேர்புகழமுதமெழுத்துக்கங்கை மதிபரிதிகளிறுபரிபுலகஞ்சீர்நாட், பூமலைகார்திருக்கடனீர்பழனம்பார்சொற்பொன்றிகிரிபிறவு முதன்மொழிச்சீர்க்காகு, நாமவகையுளிசேர்தல்பொருளதின்மைநலமிலதாய்வைத்தல் பலபொருளாய்த்தோன்ற, லாமினியசொல்லீறுதிருதல்போலுமாதிமொழிக்காகாவாநந்தமாமே. இதுமேற்கோள் எ-று. (௫௫)

(௨௱௮௬-சூ) சொல்லின்பொருத்தஞ் சொல்லுங்காலை, யரிதுணர்சொல்லு மருந்திரிசொல்லுந், திரிபுடைச்சிருந்தீதாமுதற்கே.

* எ-து * சொற்பொருத்த மாமாறுணர்த்துதும் செய்யுண்முதற்கண் மங்கலச்சொல்லே வரினுங்கற்றோராலுமெளிதிற்புலப்படாச் சொல்லுமையமாகப்பலபொருள் குறித்தவரியயன்றிரிசொல்லுமுதற்சீர்ற்றெழுத்தேசத்திவகையாற்றிரிந்தசொல்லுமுடையசீரு முதற்கண்வரின்வழுவாமெனக்கொள்க ஆகையிற்கடறவழுலகமெனினுந் தேருருடிரிதருமெனினு மீற்றுத்திரிபினலாகா சீரிமருவுந்திருநிழற்சோலை யெனிலரியென்பது சிங்கமோ - வண்டோ - பன்றியோ - யாதோவென்றுதோன்றுமையத்தாலாகா — பாட்டியல.—வெண்பாவ-கையுளிசேர்தல்வணப்பின்றுயநிற்ற, றுகையார்பொருள்பலவாய்த்தோன்ற, றகைவில், பொருளின்மையீறுதிரிதலேபோல்வ, தருமுதற்சீர்ச்சொற்காகுந்தப்பு. இதுமேற்கோள் பிறவுமன்ன. எ-று. (௫௬)

(௨௱௮௭-சூ.) எழுத்தின்பொருத்தமேயெழுவாய்ச்சீர்க்கண்மூன், றைந்தேழொன்பதுவியநிலைநன்று, மிரண்டுநான்காறெட்டுச் சமநிலைவழுவாம்.

* எ-து. * எழுத்தின்பொருத்தமாமாறுணர்த்துதும் முதற்சீராகவொற்றுமுயிருமுயிர்மெய்யுமொற்றைப்படமூன்று மைந்துமேழுமாகவரினது வியநிலையாகிநல்லதென்ப இரண்டு நான்குமாறுமெட்டுமாகவரினது சமநிலையாகிவழுவாமென்ப ஆயினுஞ்சிந்தாமணியின் மூவாவென்றிரண்டெழுத்து வந்தவாறுகாண்க. ஒற்றுமுட்படக்கொண்ட காரணம்யாதோவெனின் முதற்கண்மூவசைமிக்கனசீர்வாராவென்றமையானு மூவசைச்சீருமொற்றெழுத்தொன்பதெழுத்தாக வாராவென்றமையானு மொற்றுமுட்படக்கொண்டவாறுகாண்க. — பாட்டியல் — தப்பாதமூன்றைந்தே ழொன்பான்றவறில்வென், றெப்பாமுதற்சீர்க்குறைசெய்வர் செப்புங்காற், றண்டாதநாலாறெட்டாகாதவிரென்று, கொண்டாரெழுத்தின்குறி. இதுமேற்கோள். எ-று (௫௭)

(௨௱௮௮-சூ.) தானமே, குறிநெடிறம்முன்னேந்து இ உவ்வுடன், ஐ ஔவுஞ்சேர்புழியைந்தாமவற்றுட், டலைமகனியற்பெயர்தானமுதலாப், பாலன்குமரனிராசன்மூப்பு, மரணமுறையெண்ணி வருமுதலெழுத்தின், றனமீற்றிரண்டெ னிற்றவிர்கவென்ப.

* எ-து * தானப்பொருத்தமாமாறுணர்த்துதும் குற்றெழுத்தைந்தையு மவற்றவற்றெத்தநெடிலையுங்கூட்டி இவ்வருந்தானத்தில் ஐயும் - உவ்வருந்தானத்தில் ஔவுஞ்சேர்த்தால் - ஐந்தானமாகும் அவையே அ-ஆவும் - இ - ஈ - ஐயும் - உ - ஊ - ஔவும் - எ-ஏயும் - ஒ-ஓவுமென்றிவையுயிராகவரினு முயிர்மெய்யாகவரினு மெழித்தின்றானமைந்தெனக்காண்க. இவற்றைக்கொள்ளுமாறு பாட்டுநாயகனியற்பெயர் முதலெழுத்தின்றானமுதற்கொண்டெண்ணி முறையேயைந்துதானங்களுக்குப்பாலனகுமரனிராசன் மூப்புமரணமெனு மைம்பெயரிட்டுமங்கலச்சொன் முதலெழுத்து மூப்பெனுந்தானத்திலுமரணமெனுந்தானத்திலும்வரின் தாகாதென்றுதவிர்தல்வேண்டு மென்மனூர்புலவர் அங்ஙனமிராமாயணநாயகனிராமனுகையில் இவருந்தானம்பாலதானமாகக்கொண்டு கம்பனெடுத்த மங்கலச்சொல்லெனு மூலகத்தின்முதலெழுத்துக் குமரதானமாயிற் றெனக்கொள்க —தேம்பாவணி.—நாயகன்வளனுகையில் அவருந்தானம்பால தானமாகிச்சீரியவெனு முதற்சொற்பார்க்கிற் குமரதானமாகவும் உலகமெனுமங்கலச்சொற் பார்க்கிலிராசாதானமாகவும் வந்தவாறுகாண்க. — பாட்டியல் — குறிலைந்துந்தன்னெடில்கொண்டி உ ஐ ஔ சேர்த், தறிபாலனாதியாவைந்து மிறைவன்பேர், முன்னெழுத்துப்பாலனில்வைத்தெண்ணிமூப்பேமரண, மென்னுமிவைதீதென்றேயெண் இதுமேற்கோள். எ-று. (௫௮)

(௨௱௮௯-சூ) பாலெனக், குறிலாணெடில்பெண்மற்றுயிராணுயிர், மெய்பெண்ணெனமருமுளரோயவைதம், பாவியல்கெடினுமாமற்றவையவியே.

* எ-து * பாற்பொருத்தமாமாறுணர்த்துதும் குற்றெழுத்தெல்லா மாண்பாலெனவு நெட்டெழுத்தெல்லாம் பெண்பாலெனவுங் கொள்க. அன்றியுமுயிரெலா மாண்பாலெனவு முயிர்மெய்யெல்லாம் பெண்பாலெனவுங்கொள்வார் பிங்கலத்தைமுதலியநூலார் அவற்றுண் மாந்தரைப்புகழ வாண்பாலெழுத்து மாதரைப்புகழப் பெண்பாலெழுத்து முதற்கண்வரிற் பாலொன்றிச்சிறப்பாமாயினுமவையேமயங்கிவரினுமிழுக்கா ஒற்றெழுத்துமாய்தமுமுதற்கண்வாரா அவையலியெனப்படும். — பாட்டியல் — எண்ணுங்குறிலாணியைந்தநெடிலெல்லாம், பெண்ணாகுமொற்றாய்தம்பேடாகும், பெண்ணிறை, டாண்புணர்ச்சிக்கவ்வவெழுத்தேமயங்கினுமா, மாண்பில்பேடென்றார்மதித்து இதுமேற்கோள். எ-று. (௫௯)

(௨௱௯௰-சூ) உணவெண், அ - இ - உ - எ - க - ச - த - ந - ப - ம - வ - வென், றமுதெழுத்தாகியாதிச்சீர்க்குந், தசாங்கத்தயற்குந்தகுவனவென்ப, யா - யோ - ரா - ரோ - லா - லோ - வவற்றெற்று, மளபெடைமக்குறளாய்த நஞ்செழுத்தே.

* எ-து * உணவுப்பொருத்தமாமாறுணர்த்துதும் கூறியநாளுயிருமேழொற்றும் அமுதெழுத்தெனப்படு மிவைமுதற்சீர்க்குமலேமுதன்மேற்காட்டிய தசாங்கத்தின்யற்குமாகும் அன்றியும் யா - யோ - ரா - ரோ - லா - லோ - ய - ர - ல - என்னு மூவொற்றெழுத்து மீண்டளபெடையு மகரக்குறுக்கமு மாய்தமு மென்விவைநஞ்செழுத்தாகி முதற்சீர்க்கண்ணுந் தசாங்கத்தினயற்குமாகா வென்மனார்புலவர். — பாட்டியல் — மறித்த க ச த ந ப மவ்வொடுவவ்வு, முதித்தமைந்தநாற்குற்றுயிருந், துதித்தமுதென், றுதிமொழிக்குந்தசாங்கத்தயலுக்குந், தீதிலவேயென்றார்தெரிந்து இது மேற்கோள். எ-று. (சும)

(உாகூக-சூ) வருணப்பொருத்தமே, வருமுயிராடங்கலுங், கம்முதலாறுங்கைசிகர்க்காகுந், தம்முதலாறுந்தருமன்னவர்க்கே, ல் வ் ற் ன் வணிகர்க்காம், ழளச்சூத்திரர்க்கே, யிம்முறைநஞ்செழுத்தியலினுமிழுக்கா.

* எ-து * வருணப்பொருத்தமாமாறுணர்த்துதும் பன்னீருயிரும் க் ங் ச் ஞ் ட் ண் என்னுமாறொற்றுமந்தணர்க்கெனவும் த் - ந் - ப் - ம் - ய் - ர் - என்னுமாறொற்று மரசர்க்கெனவும் ல் வ் ற் ன் என்னுநான்கொற்றும்வணிகர்க்கெனவும் ழ் ள் என்னுமிரொற்றுஞ் சூத்திரர்க்கெனவுங் குறித்தார்புலவர். இம்முறையோடுநஞ்செனவிலக்கிய வெழுத்துவரினும் வழுவன்றெனக்கொள்க. — பொருத்தவியல். — தீதிலுயிரீராறு முதலொற்றாறுந் திருமறையோர்க்கடைவே யோராறும்வேந்தர்க், கேதிலவறனக்கள்வணிகர்க்குமற்றை யெழுத்துளவைசூத்திரர்க் காமியன்றசாதி, யோதிமன்றன்படைப்புயிரோயரன்மால் செவ்வேளும்பர்கோன் பரிதிமதிமறலி நீர்க்கோன், காதலளகேசனிவரிவ ரீண்டாய்க்கம்முதன் மூவாறொற்றுங்கருதிச்செய்தார். இது மேற்கோள் எ-று (சுக)

(உாகூஉ-சூ) நாளின்பொருத்தநவிலுங்காலே, நான்குமைந்துமூன்றுமாய்ப்பிரியுயிர், கார்த்திகைபூராடமுத்திராடம்மே, கவ்வரிநான்கிரண்டிருமுறைமூன்றிவை, யோணமாதிரைமுறையிருபூசமே, சவ்வரிநான்கைந் துந் தருங்கடைமூன்றென, வவ்வவையிரேவதி யசுவதிபரணியே, ஞவ்வரிஞாஞெஞொவ்வாமவிட்டமே, தவ்வரியிரண்டேழுதற்கடைமூன்று, சோதிவிசாகந்தூயோனிச்சதையமே, நவ்வரியாறுநண்ணுமிருமூன்றும், பொற்பனைகேட்டைபூராட்டாதியே, பவ்வரி நான்கும்பிற்பகிரண்டா, றெனவுத்திரமத்தமொளிசித்திரையே, மவ்வரியாறுமற்றிருமூன்று, மகமாயிலியமகத்தொடர்பூரமே, யயாவுத்திரட்டாதியூயோமூலமே, வவ்வரிநந்நான்குரோகணியீற்றா, னவ்வவ்வெழுத்திற்கவ்வவைகுறித்தபின், றண்மூவொன்பதாநாயகனியற்பெயர், நாண்முதன்மங்கல நவில்சொல்லீறு, வெண்ணியிரண்டுநான்காறெட்டொன்பதா, மன்றியொன்றுமூன்றைந்தேழாகா.

* எ-து * நாட்பொருத்தமாமாறுணர்த்துதும் மொழிமுதற்கண் வருமெழுத்திற்க சுவதிமுதலிருபத்தேழு நட்சத்திரங்களைப்பகுத்தார்புலவர். அவற்றுள் அ - ஆ - இ - ஈ கார்த்திகையன உ - ஊ - எ - ஏ - ஐ - பூராடத்தன ஒ - ஓ-ஔ - உத்திராடத்தன க - கா - கி - கீ - திருவோணத்தன கு - கூ - திருவாதிரையன கெ - கே - கை - புணர்பூசத்தன கொ - கோ - கௌ - பூசத்தன ச - சா - சி - சீ - இரேவதியன சு - சூ - செ - சே - சை - அசுவதியன சொ - சோ - சௌ பரணியன ஞ - ஞா - ஞெ - ஞொ - அவிட்டத்தன த - தா - சோதியன தி - தீ - து - தூ - தெ - தே - தை - விசாகத்தன தொ - தோ - தௌ - சதையத்தன ந - நா - நி - நீ - நு - நூ - அனுடத்தன நெ - நே - நை - கேட்டையன நொ - நோ - நௌ - பூரட்டாதியன ப - பா - பி - பீ - உத்திரத்தன பு - பூ - அத்தத்தன பெ - பே - பை - பொ - போ - பௌ - சித்திரையன ம - மா - மி - மீ - மு - மூ - மகத்தன மெ - மே - மை - ஆயிலியத்தன மொ - மோ-மௌ பூரத்தன யயா - உத்திரட்டாதியன யு - யோ - மூலத்தன வ - வா - வி வீ உரோகணியன வெ - வே - வை - வௌ - மிருகசீரிடத்தன இங்ஙனம் பகுத்தவற்றைக்கொள்ளுமாறுபாட்டுநாயகனியற்பெய ராதியெழுத்திற்குள்ளே முதற்கொண்டொன்பதொன்பதாக வெடுத்தமங்கலச்சொன் முதலெழுத்துநாளளவுமெண்ணி யிரண்டு நான்குமாறுமெட்டுமொன்பதுங் கண்டானல்லனவெனவு மொன்றுமூன்றுமைந்து மேழுங்கண்டாற்றியனவெனவுங்கூறினார்புலவர். — விருத்தப்பாட்டியல் — கருதுமுயிரடைவேநான்கைந்து மூன்றுங்கார்த்திகையேபூராடமுத்திராட, முரணறுகவ்வரியினான்கிரண்டுமூன்றுமூன்றோண மாதிரையேபுணர்தம்பூச, மிருமைகொள்சவ்வரியினான்கைந்துமூன்று மிரேவதியாம்பரிபரணி ஞகரமைந்தும் வருமவிட்டந்தகரமிரண்டேழுமூன்றும் வளர்சோதிவிசாகமே சதையமன்னும்— சதிர்திகழ்நவ்வினிலாறு மூன்றுமூன்றுந் தருமனுடங்கேட்டையேபூரட்டாதி, திதமிகுபவ்வரியினான்கிரண்டோடாறுத்திரமுதன்மூன்று மவ்விலாறுமூன்று, மிதின்மூன்றுமகமாமாயிலியம்பூரம் யயாவுத்திரட்டாதியுபூமூல, முதவியவம்முதனான்கு மொழிந்தநான்கு முரோகணியா மிருகசீரிடமாம்பேர்நாள். இவைமேற்கோள். எ-று. (சுஉ)

(உாகூரு-சூ) கதியின்பொருத்தவிதியைக்கூறில், ஒவ்வொழிகுறிலேறவ்வொழிவலியே, செவ்விதாகுந்தேவர்கதியே, னவ்வொழிமெலியேநெடின்முதனான்கும், வவ்விலஃதாகுமக்கட்கதியே ஓஓய, ர ல ழ ற வும் விலங்கின்கதியே, னவள ஐ ஔவுநரகர்கதியே.

* எ-து * கதிப்பொருத்தமாமாறுணர்த்துதும் அ-இ-உ-எ-க-ச-ட-த-ப எனவொன்பதெழுத்துந்தேவர்கதியெனவும் ஆ-ஈ-ஊ-ஏ-ங-ஞ-ண-ந-ம எனவொன்பதுமக்கட்கதியெனவும் ஓ-ஓ-ய-

ர-ல-ழ-ற எனவேழும்விலங்கின்கதியெனவும் ஐ-ஔ-வ-ள-ன எனவைந்துநரகர்கதியெனவும் வழங்
கும், இவற்றுட் டேவர்கதியு மக்கட்கதியு நல்லனவெனவு மற்றவிருகதி தீயனவெனவுங்கொள்க. —
வெண்பாபாட்டியல். — வேண்டுங்குறில்வன்மையீறொழித்தால் விண்ணோர்க்கா, மாண்டுநெடின்மு
தலன்கத்தமொழித், தீண்டிய, மென்மையாமக்கட் கிவையொண்டுயெய்க்கதிக்கு, நன்மையா மூன்
மொழிக்குநாட்டு. — நாட்டிய ஏ ஓ ய ர ல ள நல்வன்மைக், கேட்டியவந்த மிவைவிலங்காங், காட்
டா, தொழித்தநரகர்க்கென்றோதினரின்ன, வெழுத்தாகாவாதியிடத்து. இவைமேற்கோள். (சங)

(உாகசச-சூ.) கணமியல்பொருத்தமேகணமெனுஞ்சீரினுண், மூன்னரிந்தான் மூன்னிரைநி
லனே, நிரைநேர்நேர்மதிநேர்நிரைநிரைநீ, ரிந்நாற்கணநன்றாமிவைமுதற்சீர்க்கே, யிருவிளங்காய்
முறையநத்தரஞ்சூரிய, விருமாங்கனிமுறைவாயுதீயிவை, வருமுதற்சீர்க்குவழுக்கணமென்ப.

* எ-து * கணப்பொருத்தமாமாறுணர்த்துதும. வடமொழியாற்கணமெனினுந் தென்மொ
ழியாற் சீரெனினுமொக்கும், இவற்றுள் முதற்கண்வருஞ்சீர் தேமாங்காயாயி னிந்திரகணமெனவு
ம் கருவிளங்கனியாயி னிலககணமெனவும் புளிமாங்காயாயின் சந்திரகணமெனவும் கூவிளங்கனி
யாயி னீர்க்கணமெனவும்வழங்கும், இந்நாற்கணமு நல்லனவென்ப. அன்றியு முதற்கண்வருஞ்சீர் க
ருவிளங்காயாயி னந்தரகணமெனவுங் கூவிளங்காயாயிற் சூரியகணமெனவுந் தேமாங்கனியாயின் வா
யுகணமெனவும் புளிமாங்கனியாயின் தீக்கணமெனவும்வழங்கும். இவை முதற்சீராகவரின் தீதென்
பர், என்னை அந்தரகணமே வாழ்நாட்குன்றும் — சூரியகணமே வீரியமகற்றும் — வாயுகணமே
செல்வமழிக்கும் — தீயின்கணமே நோயைவிளைக்குமென்மனோர்சிலரோ. ஆயினு மிவற்றை யிருள்வ
ழிமதமெனவிதித்தார் வேதவழித்தெளியாதாரொனக்கண்டுணர்க, அன்றியு மிலக்கணமுறையே வட
மொழிநூலில்வழங்கு நடையாமொழியத் தென்மொழிநூலார் முதற்சீரா வியற்சீர்மிகவே வழங்கு
வாரொனவுங்கொள்க. — விருத்தப்பாட்டியல்.— துறக்கமதிவான் பரிதிகாய்ச்சீர்மூன்னுஞ்சூழ் காற்
றுத்தீதிலநீர்கனிச்சீர்பின்னு, நிறுத்துகணமிவையுமாமகவற்சீரினேரிறும்வெள்ளைச்சீர்நிரை வஞ்சிச்சீ
ர், சிறப்புடையவ்விரண்டுமாங் கணப்பேர்மற்றுந் திகழயற்சீர்க்கயன்றிருக்கொக்கருடன்மூன்னும்,
வெறுத்தபின்னுமாமென்ப விறைவனுட்குமேவுகணநாட்பொருத்தம்வேண்டுமாலே. — ஆவதும
ங்கலத்தேற்ற பரியாயச்சொல் லடைகொடுத்து முதற்சீருக்கெடுத்தல்செய்யுள், மேவுமுதலிடை
மங்கலச்சொல்வைத்தல்விதி யெழுத்துப்பால்வருண மயங்குமென்பர், வாவுமிருந்தியான மூன்
னோர்நூலின் மங்கலத்தானஞ் சுசிலவமுதமாகுந், தூவமுதமெனக்கதியிற்பழுதுபோ மேதறு
டர்கலப்பாமிம்மரபின்றொடக்கஞ்சொல்வாம். — இவைமேற்கோள். எ-று. (சச)

(உாகக-சூ.) சாதிநிலநிறந்தகுநாளிராசிகோ, ளோதினராறுமொவ்வொருபாவிற்கே, வெ
ண்பாமுதற்குலமுல்லைவெண்மை, கார்த்திகைமுதலேழுங்கடகம்விரிச்சிக, மயிலைமதிகுருவழங்குமி
யல்பே.

* எ-து * நாற்பாவிற்குச் சிலவிலக்கணங்களைபுணர்த்தத்தொடங்கினோம். மேற்கூறியசெய்யு
ளனைத்து மவற்றைப்போல்வன பிறவு மெல்லாம் வெள்ளையாசிரியங் கலிவஞ்சியென நாற்பாவாலா
யினு மவற்றினத்தாலாயினும் வழங்கு மாகையின் முதற்பாவாகிய நான்கிற்குஞ் சிலவிலக்கணங்க
ளையுரைத்தார் முன்னோர், அவை யொருபயனு மொருகாரணமுமின்றி முன்னர் நிறுத்தியமதத்தி
லான்றினவாயினும் பிறன்மதங்கூறவே தந்திரயுத்தியாகையி லவற்றைக்காட்டுதும். ஆகையில் வெ
ண்பாமுதற்கொண் டவ்வவபாவிற்குரிய சாதியு நிலமு நிறமு நாளு மிராசியுங் கிரகமுமென வாறி
லக்கணப்பகுதி குறித்தார் முன்னுணர்ந்தோரொனக்கொள்க. அவற்று ளந்தணர்சாதியு முல்லைநில
மும் வெள்ளைநிறமுங் கார்த்திகை விருச்சிக மீனமென மூன்றிராசியுந் திங்கள் வியாழமென விருகி
ரகமும் வெண்பாவிற்கியல்பெனக்கொள்க. எ-று. (சரு)

(உாகசு-சூ.) அகவற்கரசருங்குலங்குறிஞ்சி, குருதிமகமுதற்கொண்டெழுமேட, மரிதனு
ச்செவ்வாயாதவனியல்பே.

* எ-து * ஆசிரியப்பாவியல்புணர்த்துதும். அரசர்சாதியுங் குறிஞ்சிநிலமுஞ் சிவப்புநிறமு
மகம் பூர முத்திர மத்தஞ் சித்திரை சோதி விசாகமென வேழுநாளு மேடஞ் சிங்கந் தனுவென
மூன்றிராசியு ஞாயிறு செவ்வாயென விருகிரகமு மகவற்கியல்பெனக்கொள்க. எ-று. (சசு)

(உாகஎ-சூ.) கலிக்கேவணிகங்கழனிபொன்மை, குலாம்பனைமுதலாறுங்குடமொடுமிதுனந்,
துலாம்புதன்சனியெனத்தொக்கிவையேற்கும்.

* எ-து * கலிக்கியல்புணர்த்துதும். வணிகர்சாதியு மருதநிலமும் பொன்னிறமு மனுடங்
கேட்டை மூலம் பூராட முத்திராடந் திருவோணமென வறுநாளு மிதுனந் துலாங் குடமமென மூ
ன்றிராசியும் புதன் சனியென விருகிரகமுங் கலிப்பாவிற்கியல்பெனக்கொள்க. எ-று. (சஎ)

(உாகஅ-சூ.) வஞ்சிக்கேதியல்வருணநெய்த, லஞ்சனமவுட்டமாதியேழும், விடைபெண்கலை
புகர்விடதரமியலுமே.

* எ-து * வஞ்சிக்கியல்பினையுணர்த்துதும். சூத்திரர்சாதியு நெய்தநிலமுங் கரியநிறமு மவிட்
டஞ் சதையம் பூரட்டாதி யுத்திரட்டாதி யிரேவதி யசுவதி பரணியெனவேழுநாளு மிடபங்கன்னி
மகரமென மூன்றிராசியுஞ் சுக்கிரன் பாம்பெனவிருகிரகமும்வஞ்சிக்கியல்பெனக்கொள்க, ஆகையி
ன்முதற்பாநான்கிற்குமிலக்கணமாறும் வந்தவாறுகாண்க. எ-று. (சஅ)

(௨௱௯௯-௫.) ஆசுமதுரஞ்சித்திரவித்தார, மேசில்கவிநான்கிவையென்பவற்று, ளெடுத்த பொருளிற்றொடுத்தவின்பத்தி, லடுத்தபொழுதிற்பாடுவதாசே, புடைப்பொருட்பொலிவுமுரிச் சொற்செல்வமுந், தொடைப்பொலிவிகற்பமுந்தொடரணிச்சிறப்பு, மிசைபெறவோசையு மியலப் பாடி, வசையில்வருங்கவிமதுரமாமே, கோமூத்திரிமுதற்கூறியமிறைகவி, சித்திரமென்பர்சிறுபான்மையவையெனப், பத்திரமுதனுண்பத்தியிற்பாடிச், சித்திரம்போல்வனசித்திரக்கவியே, தொடர்நிலைதொகைநிலைதொடுத்தபல்பாவுந், தொடைபலவாகத்தொடுத்தவொருபாவும், வித்தாரக்கவியெனவிளம்பினர்புலவர்.

* எ-து * நாற்கவியியல்பினையுணர்த்துதும். எவ்வகைச்செய்யுளைப்பாடினும் பாடியதிறத்தால்வேறுபடாமன்மற்றொருநால்வகைக்கவிவகுத்தார்புலவர், அவையேஆசுமதுரஞ்சித்திரவித்தாரமென நாற்கவியாமன்றியே யவற்றைப்பாடுவோர்க்கும் பெயர்செல்லுமென்றுணர்க. அங்ஙனம் ஆசுகவியைப்பாடும்புலவனு மாசுகவியெனப்படுவன் பிறருமன்ன ஆகையி லவற்றுட்பொருளு மடியும்பாவு மணியுமுதலியவற்றை மற்றொருவன்குறித்துப் பாடுகவென்றவுடனே பாடுவ தாசெனப்படும். அன்றியும் பொருட்பொலிவாதி சூத்திரத்துட்கூறிய விலக்கணமுறையாற்றொடுத் தமுதூட்டினாற்போலக் கேட்போருவப்ப வின்பமிகுத்துவருங்கவி மதுரமெனப்படும். [வ-று] — கலித்துறை. சுந்தாரம்பாடிக் களித்தாடும்வண்டினங்காமுறுபூஞ், சந்தாரநாறுநிழற்சோலைக்காவலூர்த் தங்கியவா, னிந்தாரம்பூண்டதிருவடிகண்டேத்தவெவ்வுயிரும், வந்தாரக்காண்பேனேவானலங்கொண்டார் வையகமே. எ-ம். பிறவுமன்ன அன்றியுங்கோமூத்திரிமுத லினி யணியதிகாரத்துட்காட்டும்படியே வழங்கு மிருபது மிறைக்கவியைச் சித்திரக்கவியென்மருமுள ராயினு மவை சிறுபான்மையென்று மதியார் புலமையின்மிக்கோர். ஆகையிலோரிலைமுதலா நுணுக்கத்தனைத் துமொழுங்கொடுதோன்ற வெழுதிய சித்திரப்படத்தைக்காட்டின தன்மையிற்பாடிய கவியைச் சித்திரமென்பார். [வ-று] — ணைடதம். — விழைவுறுகலவியின்மெலிந்தோர்தாளினின், றெழிநிகழ்பொன்னிறவெருத்தங்கோட்டுபு, தழைவுறுசிறகரான்மூடித்தண்ணறு, வழிமலர்செக்கையி னன்னந்துஞ்சுமால். எ-ம் (சித்திரவணியாவன) — யாப்பருங்கலம் - முடிவுச்சூத்திரம். — மாலைமாற்றேசக்கரஞ்சுழிகுள, மேகபாதமெழுகூற்றிருக்கை, காதைகாப்பேகரந்துறைப்பாட்டே, தூசங்கொளலேவாவனஞாற்றிக், கூடசதுக்கங்கோமூத்திரியே, யோரெழுத்தினத்தாலுயர்ந்தபாட்டே, பாதமயக்கேபாவிற்புணர்ப்பே, யொற்றுப்பெயர்த்தலொருபொருட்பாட்டே, சித்திரக்காவேவிசித்திரக்காவே, விகற்பநடையே வினாவுத்தரமே, சருப்பதோபத்திரஞ்சார்ந்தவெழுத்தும், வருக்கமுமற்றும்வடநூற்கடலு, மொருங்குடன்வைத்தவுதாரணநோக்கி, விரித்துமுடிப்பமிறைகவிப்பாட்டே, புருவகமாதிவிரவியலீறாய், வருமலங்காரமும்வாழ்த்தும்வசையுங், கவியேகமகன்வாதிவாக்கியென், றவர்கடன்மையு மவ்வமினமைதியும், பாடுதன்மரபுந் தாரணைப்பகுதியு, மானந்தமுதலியவூனச்செய்யுளும், விளம்பினத்தியற்கையுநரம்பின்விகற்பமும், பண்ணுந்திறனும்பாலையுங்கூட்டமு, மெண்ணியதிணையுமிருதுவுங் காலமு மெண்வகைமணமுமெழுத்துஞ் சொல்லுஞ், செந்துறைமார்க்கமும் வெண்டுறைமார்க்கமுந், தந்திரயுத்தியுந்தருக்கமுநடமு' முந்துநான்முடிந்தமுறைமையின்வழாமை, வந்தனபிறவும் வயினதிந்துணைப்போ, னந்தமில்கேள்வியாசிரியன்னே. என்றரமுதசாகரவாசிரியர். — மாலைமாற்றுவது-மீளவாசித்தாலுமதுவே வரப்பாடுவது-சக்கரமாவது-நான்காற்சக்கரமும் எட்டாற்சக்கரமும் ஆறாற்சக்கரமும்வரப்பாடுவது சுழிகுளமாவது-நெட்டெழுத்தியன்ற நால்வரியாகவெழுதிசுழித்து வாசிக்கச்செய்வதுஏகபாதமாவது-நான்கடியுமோரடியாகப்பாடியடிகடோறும்வேறுபொருள்விளக்குவது எழுகூற்றிருக்கையாவது-எழிறையாக்கிக்குறுமக்கண்முன்னின்றும் புக்கும்போந்தும்விளையாடும்பெற்றியால்வழுவாமையொன்றுமுதலாக வேழிறுதியாக முறையானேபாடுவது காதைகாப்பாவது அணியதிகாரத்துட்காண்க கரந்துறைப்பாட்டாவது-ஒருபாட்டைச்செவ்வையே யதனுவீற்றுமாதிக்குமுதலாமெழுத்துத்தொடங்கி யொன்றுவிட்டுவாசிக்க மற்றொருபாட்டாவதாம் தூசங்கொளலாவது ஒருவனொருவெண்பாச்சொன்னால தனீறேயீறாகவதன்முதலேமுதலாக மற்றொருவெண்பாப்பாடுவது ஞாற்றியாவது முந்துறக்கொடுத்தவெழுத்துக்கீறுபாடிப்பின்னைக் கொடுத்தவெழுத்துக்கீற்றயல்பாடியதன்பின்பு கொடுத்தவெழுத்துக்கிரண்டாமடிபாடி யதன்பின்பு கொடுத்தவெழுத்திற்பாடிமுடிப்பது கூடசதுக்கமாவது-நாலாமடியுமுன்னின்ற மூன்றடியும்பெருக்கிக்கொள்வது கோமூத்திரியாவது இரண்டுவரியாகவெழுதி கோமூத்திரம் விட்டதுதோன்றும் வளைவுபோல் வாசிக்கப்பாடுவது - ஓரெழுத்தாலு மோரினத்தாலு முயர்ந்தபாட்டாவன் - ஓரெழுத்தாலேமுடியப்பாடுவது - மூவினத்தாலேமுடியப்பாடுதல்செய்வது மூவினமாவன் வலி மெலி இடை பாதமயக்காவது மூவர் மூன்றுசீரிய மூவடிச்சொன்னாற் றானே ரடிசொல்லிக் கிரியைக்கொடுப்பது பாவிற்புணர்ப்பாவது நால்வர் நான்குபாவிற் பாட்டினைசொன்ன விவண்டிக்குமுதலாகப்பாடி பொருண்முடிப்பது ஒற்றுப்பெயர்த்தலாவது ஒருமொழியைப்பாடி நிறுத்திறுத்திவைத்துப் பிறிதொருபொருள்பாடுவது ஒருபொருட்பாட்டாவது ஒன்றனையே யணித்துப்பாடுவது சித்திரக்காவாவது நான்குகூடியவெல்லாம் பத்தாகவு மூன்று கூடினவெல்லாம் பதினைந்தாகவும் பிறவாற்றானுமெண்வழுவாமற்பாடுவது விசித்திரககாவாவது எங்கு மேழமையாகக்கீறி மேலேயொழுகி நுண்மொழிமுதலாகியவெழுத் தொருபொருள்பயக்க நிறுவி யவ்வெழுத்துக்களே யெங்குமொழுகுங் கண்

ணறைவும் பாடமேதிறவி யோரொழுத்துக் கோரடிவர யாதானு மொருசீராகவானும் பாடுவது
விகற்பநடையாவது வேறுபட்டநடையுடைத்தாகப் பாடுவது வினாவுத்தரமாவது வினாவிற்கு வி
டையளிக்கப்பாடுவது சருப்பதோபத்திரமாவது எட்டெழுத்தின்ற நான்குமா யவை மாலைமாற்று
ஞ்சுழிகுளமு மொருங்குவரப்பாடுவது சார்ந்தவெழுத்தாவது ஒரொழுத்துமுதலாக கலைசிறந்தேறி
யவெழுத்தின்முறையே பொருள்பயக்கப்பாடுவது வருக்கமாவது மொழிக்குமுதலாம் வருக்கவெ
ழுத்தினுக் கொவ்வோர்செய்யுட் கூறுவது உருவகமுதலாகிய வணிகளை யலங்காரத்திற்கண்டுகொள்
க. வாழ்த்திருவகைப்படும் வாயுறைவாழ்த்தும் புறநிலைவாழ்த்தும் வாயுறைவாழ்த்தாவது வேம்பு
ங் கடுவும்போல்வனவாகிய வெஞ்சொற்கண்முன்னர்த் தாங்கக்கூடாவாயினும் பின்னர்ப் பெருதும்
பயன்றருமென மெய்ப்பொருளுறவெண்பாமுதலு மாசிரியமிறுதியுமாகக்கூறுவது. புறநிலைவாழ்
த்தாவது வழிபடுதெய்வநிற்புறங்காப்பப்பழிதீரசெல்வமோ டொருகாலைக்கொருகா ற்சிறந்துபொ
லிவாயெனவெண்பாமுதலு மாசிரியமிறுதியுமாகப்பாடுவது அன்றியும் —வெண்பா— கார்நறுநீல
ங்கடியகத்துவைகலு, நீர்நிலைநின்றபயன்கொலோ, கூர்நுனைவேல்' வண்டிருக்குந்தக்கத்தார்வாமன்
வழுதியாற், கொண்டிருக்கப்பெற்றகுணம் இதுமெய்வாழ்த்து-பண்டுமொருகாற்றன் பைந்தொடி
யைக்கோட்பட்டு , வெண்கடம்வில்லேற்றிக்கொண்டுழந்தான் , றெண்களந்தைப் , பூமான்றிருமக
ளுக்கின்னும்புலம்புமால், வாமான்றேர்வைகையார்கோன் இது இருபுறவாழ்த்து-வசையாவது மெ
ய்வசையும் இருபுறவசையுமாம்-மெய்வசையாவது—வெண்பா— தந்தையிலைச்சுமடன்றாய்தொழிவி
தான்பார்ப்பா, னெந்தைக்கிதெங்ஙனம்பட்டதுகொல், மூந்தை, யவியுணவினர்தெரியின்யாவர்தா
ங்கொல்லோ, கவிகண்ணனுர்தம்பிறப்பு இதுமெய்வசை இருபுறவசையாவது—வெண்பா —படை
யொடுபோகாதுநின் றெரிந்தானென்றுங், கொடையொடு நல்லார்கட்டாழந்தான், படையொடு,
வாடிவழங்குந்தெருவெல்லாந்தான்சென்று, கோடிவழங்குமகன் இது இருபுறவசை கவி-கமகன்-
வாதி வாக்கி இந்நால்வர்தன்மையாவது ஆசுகவியும் மதுரக்கவியும் சித்திரக்கவியும் வித்தாரக்கவியு
ம் எனவமையும்பாடுதன்மைாவது இலக்கணமுறைபிறழா துபாடுதல்தாரணைப்பகுதியாவது சதுரங்
கதாரணையோடும்பாடுதலாம் ஆனந்தமாவது ஆனந்தம்பயக்கச்செய்யுள்சொல்வது செய்யுளாவன
தனிநிலைச்செய்யுள்தொடர்நிலைச்செய்யுளிரண்டாமவிளம்பினதியற்கையாவது சூத்திரம் விளம்பின
தியற்கைவிரிக்குங்காலை,யாரியத்தமிழினொடுதெரிகிடைக்கி,னுலகின்றோற்றமுமூழினிறுதியு,மலகிற்
றெண்ணூறறுவாதியற்கையும், வேதநாலும்வேதியரொழுக்கமு, மாதிகாலத்தரசுசெயற்கையு,மப்
பாநாட்டாரறியும்வகையா, லாடியும்பாடியுமைவாக்கிளர்த்தல், நரம்பாவன —சூத்திரம்.—குரலே
துத்தங்கைக்கிளையுழையுளி, விளரிதாரமெனவெழுநரம்பே-பண்ணுவன -பாலையாழ்-குறிஞ்சியாழ்-
மருதயாழ்-செவ்வழியாழ்-எனநான்காம் திறனுவன-அராகம்-நோதிறம்-வறட்டு-குறுங்கலி எனநா
ன்காம பாலையாவன-செம்பாலை-மடுமலைப்பாலை-செவ்வழிப்பாலை-உரும்பாலை-கொடிப்பாலை-இன
ப்பாலை-விளரிப்பாலை எனவேழாம் கூடமாவன எழுவகையகத்திற்கண்டுகொள்க. திணையாவன அக
மேயகப்புறமே புறமேபுறப்புறமே எனநான்காம் இருதுவாவன கார்-கூதிர்-முன்பனி-பின்பனி-
இளவேனில்-முதுவேனில்-எனவாறுமாம்காலமாவன இறப்பு எதிர்வு நிகழ்வு எனமூன்றும் மணமெ
ட்டாவன-பிரமம்-பிராசாபத்தியம-ஆரிடம்-தெய்வம்-காந்தருவம்-அசுரம்-இராக்கதம்-பைசாசம்-இ
வற்றுள்-பிரமசாரிக்குக்கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பது பிரம்மணம்-தலைமகனினத்தார்வேண்ட
த்தலைமகளினத்தாருட்பட் டவளைத்தீமுன்னர்க்கொடுப்பது பிராசாபத்தியமணம்-ஒன்றிரண்டுபசுவு
மெருதும்வாங்கிக்கொண்டு கன்னியைத்தீமுன்னர்க்கொடுப்ப தாரிடமணம் -வேள்வியால்வந்தகன்
னியைத் தீமுன்னர்க்கொடுப்பது தெய்வமணம் -கொடுப்பாருங்கேட்பாருமின்றி யிருவருந்தனியி
டத்தெதிர்ப்பட்டுத்தாமேகூடுவது காந்தருவமணம் -பெண்ணுக்குப்பொன்பூட்டிச்சுற்றத்தார்க்கு
ப் பொன் வேண்டுவனகொடுத்துக் கொள்வ தசுரமணம் -பெண்ணும் பெண்ணினத்தாருமுடன்ப
டாமல் வலிதிற்கொள்வ திராக்கதமணம் -துயின் றுண்மாட்டுச்சென்று கூடுவது பைசாசமணம்-
எழுத்துஞ் சொல்லுமாவன -தத்தமதிகாரத்துட்காண்க. -செந்துறைமார்க்கமும் வெண்டுறைமா
ர்க்கமுமாவன -நாற்பெரும்பண்ணு மேழெழுத்தினுந் தோற்றி னின்னிசைச் செந்துறையாகும் -
ஒன்பதின்மெற் பதினொன் றுமென்பனவெல்லாம் வெண்டுறையாகும். -தந்திரயுத்தியாவது— நன்
னூல்— நூற்பொருள்வழக்கொடுவாய்ப்பக்காட்டி, யேற்புழியறிந்திதற்கிவ்வகையாமெனத், தகு
ம்வகைசெலுத்துதறந்திரவுத்தி. -தருக்கமாவது -நியாயசூடாமணி புதியநுட்பமுதலானவற்றுட்
கண்டுகொள்க.—வீரசோழியம்.—ஏறியமாலைமாற்றேசக்கரமினத்தாலெழுத்தாற், கூறியபாட்டு
வினாவுத்தரமேகபாதமன்றித், தேறியகாதைகாப்புச்சுழிகுளஞ்சித்திரக்கா, வீறியல்கோமூத்திரியு
ம்பிறவும்விரித்துரையே. -இவை மேற்கோள். இனி மற்றைச் சித்திரக்கவிகளை கூசகூச-ஞ் சூத்திர
த்தில் விரிவாக வுரையிற் கூறுகின்றும். அன்றியும் பலபாட்டாகவந்துமேற்காட்டிய தொகைநிலைச்
செய்யுளுமன்றி யொருபாட்டாகவரினும்பலதொடையாகத் தொடுத்துநடக்குஞ்செய்யுளெல்லாம்
வித்தாரக்கவியெனவழங்கும். இவையே பகலக்கவியெனினுமொக்கும். ஆகையாற் பெருங்காப்பிய
முதலியவன்றி யுலாமுதலாயின வித்தாரக்கவியெனக்கண்டுணர்க. —பிங்கலம்— கவியேகமகன்வா
திவாக்கியென், றிவையொருநான்கும்புலமைக்கியல்பே, —அவைதாம், ஆசுமதுரஞ்சித்திரவித்தா
ரமென்ப, பாவகைப்பாடுவோன் கவியெனப்படுமே.— ஞாபகஞ்செம்பொரு ணடையினெப்பொ

ருளுங், காசின்றுரைப்போன்கமகனாகும். — எதுவுமேற்கோளுமெடுத்துக்காட்டித்' தன்கோணிறீஇப்பிறன்கோண்மறுப்போன், மன்பதைவதிகத்வாதியாகும் — அறம்பொருளின்பம்வீடெனுந்திறங்கள், கேட்போர்வேட்பவினியனகூறு, மாற்றலுடையான்வாக்கியாகும். — அவற்றுள், கொடுத்தபொருளிற்றொடுத்தவினத்தி, லடுத்தபொருளிற் பாடுவதாசுகவி. — பொருளின்பொலிவுஞ் சொல்லின்றிறனுந், தொடையுந்தொடைக்கண் விகற்பமுந் துதைந்து, முருவகமுதலா வலங்காரங்களுடன்கொண்டோசைபொலிவுடைத்தாகி, யுய்த்துணர்வோர்கடம் முள்ளங்கட்கு, மாகடல்முதம்போல் பாடுவோன்மதுரகவி. — மாலைமாற்றேசக்கரஞ்சுழிகுள, மேகபாதமெழுகூற்றிருக்கை, காதைகாப்பே கரந்துறைப்பாட்டே, தூசங்கொளலே வாவலநாற்றே, பாதமயக்கே பாவின்புணர்ப்பே, கூடசதுக்கங்கோமூத்திரியே, யோரெழுத்தினத்தாலுயர்ந்தபாட்டே' யொற்றுப்பெயர்த்தலொருபொருட்பாட்டே, சித்திரப்பாவேவிசித்திரப்பாவே, விகற்பநடையேவினவுத்தரமே, சருப்பதோபத்திரஞ் சார்ந்தவெழுத்தும், வருக்கமுமற்றும் வடநூற்கடலு, மொருக்குடன்வைத்தவுதாரணநோக்கி, விரித்துநிறைத்துமிறைக்கவிபாட்டுந், தெரிந்துபாடுவோன்சித்திரக்கவியே. — மும்மணிக்கோவையும்பன்மணிமாலையு, மறமுங்கவிவெண்பாவும்மடலூருதலுங், கிரீடையுங்கூத்தும்பாசாண்டத் துறையும், வருத்த வருப்பும் விருத்தக்கவியும், விரித்துப் பாடுவோன் வித்தாரக் கவியே. எ-று. (௪௯)

(சூா-சூ.) ஈரசையைஞ்சீரெழுத்தளையையடி, யாறேழொருதொடையைம்பாமூவினஞ்,செய்யுணான்குஞ் செய்யுள்விகற்பமு, மையிருபொருத்தமுமாக, மெய்யுறையாப்பைவிளக்கியதொகையே

* எ-து * ஆதியினிறுததமுறையானே யாப்பதிகாரத்துள் விளக்கியபொருளெலாமொன்றுபடுத்தியதொகைசசூத்திரம்வந்தவாறுகாண். எ-று. (௫௰)

மூன்றாமோத்துச் செய்யுண்மரபியல் முற்றிற்று.

—00000—

அதிகாரமொன்றிற்கு - ஓத்து மூன்றிற்கு - ஆக சூத்திரம் - ௱ - மேற்கோள் சூத்திரம் - ௱௯௪
ஆக சூத்திரம் - ௨௱௯௪.

அதிகார நான்கிற்கு மேற்கோளோடுகூடிய ஆக சூத்திரம் - ௭௱௫.

யாப்பதிகார முற்றிற்று முற்றும்.

—000—

ஐந்தாவது

# அணியதிகாரம்.

(ரு௱க-சூ) கலையணிச்செல்வன்கமலச்சேவடி, தலையணிபுனைந்தசாற்றுதுமணியே.

* எ-து * அணியிலக்கணமாமாறுணர்த்துதும் வேதநான்முதலெந்நூலு நலம்பெறக்காரணமாகநிற்கு மெய்க்கடவுடன் திருக்கமலபாத மென்றலையணியாகக்கொண்டேத்தியணிய திலக்கணநூலை விளக்குதும், என்பதாயீற்றுகையின் முதலிடையொப்பக் கடையும் வழுவா திறைவன்காப்பதுவேண்டி யீண்டுந் தெய்வவணக்கம்வந்தவாறுகாண்க. இவ்வதிகார நூலைப் புலமையின்மிக்கதண்டியெனபான் விதித்துரைத்தமையானவன்பெயர்கொண்டு தண்டியலங்காரமென்றுவழங்கும், என்னை—மணமகளணிநறுமாலைபோலவுங், கனமிகமார்புறைகலனணிபோலவு, மணிசுவர்க்கெழுதியவடிவுருப்போலவு, மற்புதத்தனுவுறுப்படைமரப்பாவை, பொற்புறத்தீர்ந்தபொற்சுதையோலவுங், கற்றோருணர்க்குங்கருதரும்பொருட்கே, மற்றோணிதான்வழங்குமென்றுணர்க. அன்றியுமேனிறுத்தமுறையான்முன்னோர்தந்தவற்றுட் சிலவொழித்து மிகவுணாவேண்டியபலவற்றைவிளக்கிச்செந்தமிழுணர்ந்தோர் நூலிலொழிந்த சிற்சிலகூட்டியுணர்த்துதும். இஃது சிறப்புப்பாயிரம் எ-று. (க)

(ரு௱உ-சூ.) அணியெனச்சொல்பொருளாமிரண்டவற்றுள், வேற்றுளாவரக்கெடுமெனிசொல்லணியுளா, மாற்றினுந்தோன்றியவணிபொருளணியே.

* எ-து * இயலிசைநாடகமென்னு முத்தமிழ்க்கலங்காரமாகவருமணி சொல்லானும் பொருளானும் வழங்குவதாகையிற் சொல்லணியென்றும் பொருளணியென்று மணி யிருவகைப்படும், அவற்றுளோரணிவந்தசொலலே மாறினதன்மையாலவ்வணிகெடுமெனிற் சொல்லணியெனப்படும். சொல்லேமாறினும்சொல்லால் வழங்கியபொருளே மாறாதாயி னணியுங்கெடாதெனிற் பொருளணியெனப்படும். [வ-று] முல்லைநகைத்தனவென்றதற்கு முல்லைபூத்தனவெனச் சொன்மாறவவ்வணியிலாமையா லிது சொல்லணியெனவும் பவளவாயென்றதற்குச் சொன்மாறித் துகிற்போற்செவவாயெனிற் சொன்மாறினுந்தன்பொருண்மாறுமையா லணிநின்றதாகையி லிது பொருளணியெனவுங்கண்டுகொள்க. ஆகையி லிவ்விருவகையணிபற்றியீரோத்தாக விவ்வதிகாரமுகியுமென்றுணர்க. எ-று. (உ)

## முதலோத்துச்சொல்லணியியல்.

(ரு௱ங-சூ.) சொல்லணிமறிநிலைமிகடுலஞ்சலொப்பென், றெல்லணித்தொகுதியொருநான்கென்ப.

* எ-து * சொல்லணியிலக்கணமாமாறுணர்த்துதும். சொல்லால்வழங்குமலங்காரங்க ணால்வகைப்படும், அவையே மறிநிலையணியுஞ்சொன்மிக்கணியுஞ்சொல்லெஞ்சணியுஞ் சொல்லொப்பணியுமெனவேவழங்கு மிவற்றைத்தனித்தனிவிளக்குதும். எ-று. (க)

### முதலாவது மறிநிலையணி.

(ரு௱ச-சூ.) மறிநிலையுரிமைமாறணியாயவை, குணமுதல்காரணங்குறிப்பொழுக்கமைந்தே.

* எ-து * நிறுத்தமுறையானே மறிநிலையணியாமா றுணர்த்துதும். பொருட்பெயர்மாறியொன்றன்பெயர் பிறிதொன்றற்குரைப்பது மறிநிலையெனப்படும். இவற்று ளொன்றன்குண மற்றொன்றற்குரைப்பது பண்புமறிநிலை எ-ம் சினைப்பெயர் முதற்கு முதற்பெயர் சினைக்குஞ் செல்லவுரைப்பது முதன்மறிநிலை எ-ம் இவ்வாறே காரணமுங் காரியமுந் தம்முண்மாறவுரைப்பது காரணமறிநிலை எ-ம் சொல்வேறுணர்ந்த குறிப்பு வேறாகத்தோன்றவுரைப்பது குறிப்புமறிநிலை எ-ம் உலகிலொழுக்க மாறவுரைப்ப தொழுக்கமறிநிலை எ-ம வழங்கும். [வ-று] சினத்திற்காய்ந்தான் உளத்தில்வெந்தான் முல்லைநகைப்பன குவளைவிழிப்பன அள்ளருடுஞ்சுமார்பன் நள்ளிருடுஞ்சுங்கூந்தல் நெட்டொளிவேங்கையா னிசிப்படநீத்திங்குயிராக், கட்டொளியைக்காட்டுங்கதிர்வேந்தன். என்பனவற்று ளொன்றன்குணம் பிறிதொன்றற்குரைப்பது குணவழுவென்றுதோன்றினுமவையேசிறந்தவுவமையாற் பிறிதிற்பொருந்தப் புனைந்துரைத்தலமையாற் பண்புமறிநிலையலங்காரமாயிற்றெனக்கொள்க. இதனைச்சாமாதியென்மருமுளரென் றுணர்க. அன்றியும் பூநிழற்சோலையென மரமாகிய முதற்பொருள்செய்நிழல்மலராகிய சினைப்பொருண்மேலுரைப்பவும் நறும்பொழிலெனமலராகிய சினைப்பொருளால் வரும்வாசனை பொழிலாகிய முதற்பொருண்மேலுரைப்பவு முதலுஞ்சினையுமாறி முதன்மறிநிலையலங்காரமாயின. அன்றியும் ஏரினுநன்றாமெருவிடுதல்கட்டபின், னீரினுநன்றதன்காப்பு, என உழுந்தொழிலைக்காட்ட வதற்குக் காரணமாகிய ஏரினையுரைப்பவும் ஒளியெழுந்தேதொழீஇயுலகம்வாழ்த்தத். எனவொளியாகியகாரியத்தால் ஞாயிறென்னுங் காரணத்தைக்காட்டிய

னைப்பவும் இருவகைக்காரணமதிநிலையிலங்காரமாயின அன்றியுமாறுமாதயென்பதற்காறுநிங்களெனவும், ஆறுவருடமாயிற்றென்பதற் கறுபயிராயிற்றெனவும், இராவடுத்துறுங்கால்வந்தானென்பதற்கு — கஞ்சமேசினந்தெனக்கமழ்கதவடைப்பவும், பஞ்சிறைக்கிளியொடுபறவைபார்த்தொடுங்கவும், பிரிநிலைக்கண்டுணர்பெற்றம்வந்தேதங்கவும், விரிநிலைத்தோளினன்விரும்பியெய்தினன். என்பன விவற்றுட் சொல்வேறாகிக் குறித்தபொருள் வேறாகையிற் குறிப்புமதிநிலையலங்காரமாயின. அன்றியும்—வண்டிசைக்குங்கூந்தன்மதர்விழிகள்சென்றுலவ, வெண்டிசைக்கும்பேர்தாதிடம். எ-ம் கெழுஞ்சுனைவரம்பில்வைகிக்கிளைத்தநோயழன்றநெஞ்சா, னழுஞ்சுனைப்பெருகுங்கண்ணீரகல்கடல்வெள்ளமாற்று. எ-ம் சேட்டிளம்பரிதிமார்பன் எ-ம் முகிற்கை அயிற்கண் வரைத்தோள் எ-ம் பலவுமுலகிலொழுகுந்தன்மையைக்கடந்தவாயினுஞ்சிறந்தபுகழ்வழியாகப்புனைந்துரைத்தமையாலொழுக்கமலைவாகாம லொழுக்க மதிநிலையலங்காரமாயின இவற்றுட் பலவைபொருளைப்பற்றிவரினு மொருசொல்லெல்லையின் முகியுமென்றமையாற் சொல்லணியாகவைக்கப்பட்டன. எ-று. (க)

(௲ரு-சூ.) பொருள்கோளுமதிநிலை போல்வனவாம்வை, யாற்றுநீர்மொழிமாற்றுநிரனிறைவிற்பூண், டாப்பிசையளைமறிபாப்புக்கொண்டுகூட், டடிமறிமாற்றெனவாகுமெட்டென்ப.

* எ-து * முன்னோர்வகுத்த வெண்பொருள்கொளு மதிநிலையணியெனவழங்கும். அவையே யாற்றுநீர்ப்பொருள்கோளுமொழி மாற்றுப்பொருள்கோளுநிரனிறைப்பொருள்கோளும் பூட்டுவிற்பொருள்கோளுந் தாப்பிசைப்பொருள்கோளு மளைமறிபாப்புப்பொருள்கோளுங் கொண்டுகூட்டுப்பொருள்கோளு மடிமறிமாற்றுப்பொருள்கோளுமெனப்படும். இவற்றை யினி யொவ்வொன்றாகவிளக்குதும். — நன்னூல். — யாற்றுநீர்மொழிமாற்றுநிரனிறைவிற்பூண், டாப்பிசையளைமறிபாப்புக்கொண்டுகூட், டடிமறிமாற்றெனப்பொருள்கோளெட்டே. இது மேற்கோள் எ-று (உ)

(௲௬-சூ) யாற்றுப்புனலேயடிதொறும்பொருளற, வேற்றடிநோக்காவிளம்பலினுகும்.

* எ-து * யாற்றுநீர்ப்பொருள்கோளாமாறுணர்த்துதும். மற்றடிநோக்காதடிதோறும்பொருளற்று வருவதியாற்றுநீர்ப்பொருள்கோளெனப்படும் [வ-று] விலைப்பாவினீர்கலந்துவிற்றலுங்குற்ற,மலைப்பாலைப்பேணமறுத்தலுங்குற்ற,நிலைப்பாலைத்தூக்கிநெகிழ்தலுங்குற்றங்,கொலைப்பாலகுற்றமேயாம். எ-ம் பிறவுமன்ன—நன்னூல்—மற்றயனேக்காதடிதொறும்வான்பொருளற்றற்றொழுகுமஃதியாற்றுப்புனலே. இது மேற்கோள் எ-று. (ஈ)

(௲எ-சூ.) மொழிமாற்றென்பமொழிகடம்பயன்படும், வழிபெயர்த்தோரடிவளையுட்கொளலே.

* எ-து.* மொழிமாற்றுப்பொருள்கோளாமாறுணர்த்துதும். ஓரடியெல்லையுட்டதம்பொருளுக்கேற்றமொழிகடன்னிலைதப்பி யொழுங்குமாறச்சொல்லுவதுமொழிமாற்றுப்பொருள் கோளெனப்படும் [வ-று] கரையாடக்கெண்டைகயத்தாடமஞ்ஞை, சுரையாழவம்மிமிதப்ப,வரையனைய, யானைக்குநீத்துமுயற்குநிலையென்ப, கானகநாடன்சுனை எ-ம். இதனுட்கெண்டைகயத்தாடமஞ்ஞைகரையாடவெனவுஞ் சுரைமிதப்பவம்மியாழவெனவும் யானைக்குநிலைமுயற்குநீத்தெனவுங்கொள்ளவேண்டலினேடியுண்மொழிகளை மாற்றினவாறு காண்க.—நன்னூல்—எறறபொருளுக்கியையுமொழிகளை, மாற்றியோரடியுள்வழங்கன்மொழிமாற்றே. இது மேற்கோள் எ-று (ச)

(௲அ-சூ) நிரனிறையாநிரைநிறீஇயபெயர்வினை, யிரண்டும்வேறடுக்கியெதிரினும்வைத்த, நிரையினும்பொருளேநேர்தலென்ப.

* எ-து * நிரனிறைப்பொருள்கோளா மாறுணர்த்துதும் பலபெயர்ச்சொல்லையும் பலவினைச்சொல்லையும் வேறுயடுக்கியபின்னரவற்றிற்குப்பொருளாய் வருஞ்சொற்களைமுறையேயாயினு மீறுமுதலாகவெதிரோயாயினுமடுக்கிவைப்பது நிரனிறைப்பொருள்கோளெனப்படும் [வ-று] கொடிகுவளைகொட்டைநுசுப்புண்கண்மேனி, மதிபவளமுத்தமுகம்வாய், முறுவல், பிடிபிணைமஞ்ஞைநடைநோக்கஞ்சாயல், வடிவினளேவஞ்சிமகள். இது பெயர்நிரனிறை—காதுசேர்தாழ்குழையாய்க்கன்னித்துறைசேர்ப்ப, போதுசேர்தார்மார்பபோர்ச்செழிய, நீதியான், மண்ணமிர்தமங்கையர்தோண்மாற்றுரையேற்றூர்க்கு, நண்ணியவுாயபொருள். இது வினைநிரனிறை — காதமருகவினுதிதுனிகண்புருவஞ், சிதமுகங்கொங்கைதிரண்டவா, யோதக், கரும்பாரமம்பாடிக் காங்கேயன்பட்டத், தரும்பார்குழலளகத்தார்க்கு இது எழுத்துநிரனிறை.—கூற்றுவனைவின்மதனையரக்கர்கோவைக்கூனிலவைக்குஞ்சரத்தையிஞ்சிமூன்றை, யேற்றுவனபுறவுருவமாளத்தோள்களிறவெறிப்பவிமயப்பெண்வெருவவேவக், காற்றொழிலானயனத்தால் விரலாற்கற்றைக்கதிர்முடியாற்கரதலத்தாற் கணையாற்பின்னு, மூற்றழியவுதைத்துரித்து நெரித்துச்சூடியுரித்தெரித்தானவ னெம்மையுடையகோவே. இது முறைநிரனிறை.—நன்னூல்.—பெயருவினையுமாஞ் சொல்லையும்பொருளையும், வேறுநிரனிறீஇமுறையினுமெதிரினு, நேரும்பொருள்கோணிரனிறைநெறியே. இது மேற்கோள் (ரு)

(௲கூ-சூ) பூட்டுவில்லென்பபூட்டியவிற்போற், பாட்டிருதலையொருபாற்பொருள்கொளலே.

* எ-து * பூட்டுவிற்பொருள்கோளாமாறுணர்த்துதும் பொருளைக்கொள்ளும்படி பாவின் முதலினுமீற்றினுநின்ற விருமொழிகூட்டவேண்டுழி யதுபூட்டுவிற்பொருள்கோ ளெனப்படும். [வ-று] திறந்திடுமின்மீன்முடியுஞ்செங்கதிரோன்றன்சூட், டிறந்திடுவில்லாடையெழிலுஞ், சிறந்திடுமின்,றண்ணாரமாய்மதியந்தாங்கடியும்பூண்டாளைக்,கண்ணாக்காணக்கதவெனத்திறந்திடுமின்கது

யென்பது பொருளாகையிற்பூட்டுவிற்பொருள்கோளா மெனக்கொள்க.—நன்னூல்— எழுவாயிறுதி நிலைமொழிதம்முட், பெருளேற்குடைய துபூட்டுவில்லாகும். இது மேற்கோள் எ-று (௬)

(௱௰-சூ.) தாப்பிசைமுதற்கடைத்தன்பொருடருமொழி,யாப்பிசையிடையேயியம்புதலென்ப.

* எ-து * தாப்பிசைப்பொருள்கோளா மாறுணர்த்துதும் பாவினடுவே நின்றமொழிமுதலினு மீற்றினுங்கூட்டியபொருளைக்கொள்வது. தாப்பிசைப்பொருள்கோ ளெனப்படும் [வ-று] நோயிடுமென்றஞ்சி நுதலற்கத்தியவையே, நோயிலதாஞ்செய்யாதகால். என இதனுட்டியவையென விடைநின்றமொழியேமுதலினு மீற்றினுங்கூட்டியபொருளைக் கொள்ளுமாறுகாண்க.—நன்னூல்.—இடைநிலைமொழியேயேனையீரிடத்து, நடந்துபொருளை நண்ணுதருப்பிசை. இது மேற்கோள் எ-று. (௭)

(௱௰௧-சூ.) அளைமறிப்பாப்பேயந்தமொழிமற், றுளவிடத்துய்த்துத்தன் னுரைப்பொருள் கொளலே.

* எ-து * அளைமறிபாப்புப்பொருள்கோளா மாறுணர்த்துதும். செய்யுளீற்றினின்றமொழியே யிடையினுமுதலினுங்கூட்டிப்பொருளைக்கொள்வதே யளைமறிபாப்புப் பொருள்கோளெனப்படும் [வ-று]—விருத்தம்—தாழ்ந்தவுணர்வினராய்த் தாளுடைந்துதண்டேன்றித்தளர்வார்தாமுஞ், சூழ்ந்தவினையாக்கைசுடவிளிந்துதீநரகிற் சூழ்வார்தாமு, மூழ்ந்தபிணிநலிய முன்செய்தவினையன்றேமுனிவார்தாமும், வாழ்ந்தபொழுதின்னேவானெய்து நெறிமுன்னிமுயலாதாரே. எனமுயலாதாரென்றீற்றுநின்றமொழியே யிடையினு முதலினுங்கூட்டிப் பொருளைக்கொள்ளுமாறுகாண்க. அன்றியு மொருசொல்லோரிடத்து நின்றுசெய்யுட் பலவிடத்துநின்ற சொற்களோடுபொருந்திய பொருளைவிளைப்பது தீவகமென்பார் அதுமுதலிடைகடைவரப்பெறும் வரின்முதனிலைத்தீவகமிடைநிலைத்தீவகங் கடைநிலைத்தீவகமெனப்படும். —நன்னூல். —செய்யுளிறுதி மொழியிடைமுதலினு, மெய்தியபொருள்கோளளைமறிபாப்பே. இது மேற்கோள். எ-று (௮)

(௱௰௨-சூ) கொண்டுகூட்டென்ப கொள்பொருட்கேற்ப, விண்டடிபலவினும் வினைகொண் மொழியே.

* எ-து * கொண்டுகூட்டுப்பொருள்கோளாமாறுணர்த்துதும். பாவின்பலவடிக்குள்ளு நின்றமொழிகளைப் பொருளேற்குமிடத்துக்கொண்டுகூட்டுப் பொருள்கோளெனப்படும் [வ-று] ஆலின்மேற்பாயுங்குவளைகுளத்தலரும், வாலினெடியகுரங்கு. என்பதாலின்மேற்குரங்குபாயுங் குளத்தினுளலருங்குவளையெனவீரடியுட்கலந்து வந்தமொழிகளைப் பொருள்வேண்டுழிக்கொண்டு கூட்டிப் பொருளைக் கொள்ளுமாறுகாண்க. இதுவேயோரடியெல்லையுள்வரின் மொழிமாற்றெனவழங்கும். —நன்னூல்.—யாப்படிபலவினுங்கோப்புடைமொழிகளை, யேற்புழியிசைப்பது கொண்டுகூட்டே. இது மேற்கோள் எ-று. (௯)

(௱௰௩-சூ.) அடிமறிமாற்றேயடிபெயர்பொருளவு, மடியிடமாறினுமழியாப்பொருளவும்.

* எ-து * அடிமறி மாற்றுப்பொருள்கோளா மாறுணர்த்துதும். பொருள்கொள்ளும்படியோரடியெடுத்தேற்புழிக்கொண்டுகூட்டவேண்டியதாகவுஞ் செய்யுளடியெலாந் தன்னிலைமாறிமுதலினுமிடையினுமீற்றினுமுச்சரிப்பினுமோசையும்பொருளும்வழுவாதாகவும்வருவதடிமறிமாற்றுப்பொருள்கோளெனப்படும் [வ-று] கற்றகழிநாலுங்கைகூடாமுற்றிற்கு'முற்றபொருளுமொழிந்தகலு, நற்சுருதி, யோதலும்பொய்ப்பெற்றவொளிநீத்திகழ்வாங்கு, காதலுளத்தழன்றக்கால். என இதனுளீற்றடியேனையடியிடத்துமெடுத்துக்கூட்டிப்பொருளைக்கொள்ளுமாறுகாண்க. மீனேதவழ் வில்விரிமாமுடியாள், பானேயுடையாய்ப்பனிவீசுடலாள், பானேர்மதியே பணிபூவடியாள், தானேரிலவான்றலமாள்ரசாள். எனவிக்கவிவிருத்தவடிநான்குந் தம்முன்முன்னும்பின்னுமாகமாறியுச்சரிப்பினு மோசையும்பொருளும் வழுவாதியனுமாறுகாண்க. இவ்வகையணியோட்ளவடியாக வந்தநான்கடியாசிரியப்பாவு மடிமறிமண்டிலவாசிரியப்பா வெனப்படுமென்று செய்யுளியல்தந்தவிடத்துச் சொன்னதாகவுங் கண்டுகொள்க.—நன்னூல்—எற்புழியெடுத்துடன் கூட்டுறுமடியவும், யாப்பீறிடைமுதலாக்கினும்பொருளிசை, மாட்சியுமாறுவடியவுமடிமறி. இது மேற்கோள். (௰)

## இரண்டாவது சொன்மிக்கணி.

(௱௰௪-சூ) சொன்மிக்கணியென்பசொன்மறிதரலவை,மடக்கிசையந்தாதியடுக்கெனமூன்றே.

* எ-து * நிறுத்தமுறையானே சொன்மிக்கணியிலக்கண மாமாறுணர்த்துதும் வந்தசொல்மீண்டு மீண்டுவருவதுசொன்மிக்கணியெனப்படும் அவையேமடக்கு மிசையந்தாதியுமடுக்குமெனமூவகையவாகு மிவற்றைத்தனித்தனிவிளக்குதும். எ-று (௧)

(௱௰௫-சூ) மடக்கணியோர்மொழி மடங்கிவரலவை, யிடையிடுமுதல்கடை யிருவழிமடக்கு, மிடையிடாமடக்கு மெனநால்வகையே.

* எ-து * மடக்காமாறுணர்த்துதும் அடியானுஞ் சொல்லானு மெழுத்தானும் வருமடக்காயினு மிங்கண்சொல்லணியாகவருகையிற் சொல்லாலாயினமடக்குவருமெனக்கொள்க. ஆகையிலொருசொல் பெயர்ந்துமீண்டுவருவது மடக்கணியெனப்படும் இதுவேயிடையிடாவரவு மிடையிட்டுவரவும்பெறுமே அன்றியுமிடையிட்டுவருங்கான் முதலினுமீற்றினுமிருவழியினும்வரப்பெறும் வரின்

முதன்மடக்கெனவுங் கடைமடக்கெனவு மிருவழிமடக்கெனவும்வழங்கும். [வ-று] விதியைவிளக்கும் இனியாரினியாரொனேக்காப்பரெனவு நீயேநீயேமுன்காத்தும்பின்காப்ப துநாளுநாளுமே. எனவுமிவையிடையிடாமடக் கெனக்கொள்க. பிறவுமன்ன இனியாரொனேத்தாங்கியென்றுயனைநீப்பா, ரினியார்மறைநூலாலென்னைத்தெளிப்பா, ரினியாரென்னேயச்சமுதாயாற்றுவாரொன்று,யினியாருன்னல்லாலெனக்கு என்பதிடையிடு முதல்மடக்காயிற்று —விருத்தம்.—வளைவா யல்காமெய்ம்மறையெங்கும் வளர்காலம், விளைவாய்ப்பைம்பூவொத்தறமெல்லாம்விளைகாலந், திளைவாயெவ்வாச்சீர்நலமல்கித்திளைகால, மளைவாய்த்திங்கடாங்கடிநாமேயணிகாலம் என்பதிடையிடுகடைமடக்காயிற்று ஆரொன்னைத்தேற்றியருள்புரிந்தார் நீயன்றே, வாரொன்னேயாற்றியமுதானூர்நீயன்றே, எனபதிடையிடுமிருவழிமடக்காயிற்று இவையெலாமியற்றமிழிடத்துஞ் சிறப்போடு வருமென்றுணர்க அன்றியுஞ்சூத்திரத்திலே நால்வகையென்னாது எனநால்வகையென்றமிகையால்

(மற்றைமடக்குகள்வருமாறு)-தண்டியலங்காரம்-ஆதியிடைகடையாதியோடிடைகடை,யிடையொடுகடைமுழுதெனவெழுவகைத்தே. என்றாராகலின்-ஆதிமடக்கும்-இடைமடக்கும்-கடைமடக்கும் - ஆதியோடிடைமடக்கும் - ஆதியோடுகடைமடக்கும்- இடையோடுகடைமடக்கும் - மூன்றிடத்துமுற்றுமடக்கும் - எனவெழுவகைப்படும். அன்றியும் — ஓரடியொழிந்தனதேருங்காலை, யிணைமுதல்விகற்பமேழுநான்கும், வினையுறுபெற்றியின்றியத்தோன்றும். — என்றாராகலின் - முதலடிக்கண்ணு மிரண்டாமடிக்கண்ணு மடக்குதலும் - முதலடிக்கண்ணு மூன்றாமடிக்கண்ணுமடக்குதலும் - முதலடிக்கண்ணுநான்காமடிக்கண்ணுமடக்குதலும் - இரண்டாமடிக்கண்ணு நான்காமடிக்கண்ணுமடக்குதலும் - இடையீரடிக்கண்ணுமடக்குதலும் - இரண்டாமடிக்கண்ணு மீற்றடிக்கண்ணுமடக்குதலும் - என்னுமாறுமீரடிமடக்கு - ஈற்றடியொழித்தேனை மூன்றடிக்கண்ணு மடக்குதலும் - ஈற்றயலடியொழித்தேனை மூன்றடிக்கண்ணு மடக்குதலும் முதலயலடியொழித் தேனைமூன்றடிக்கண்ணு மடக்குதலும் - முதலடியொழித்தேனை மூன்றடிக்கண்ணு மடக்குதலும் - என்னு நான்கு மூன்றடிமடக்கு - நான்கடியுமடக்குதன்முற்றுமடக்கு - இவை பதினேந்துமேற்கூறிய வேழுகூறுபாட்டோடுமுறழ நூற்றஞ்சுவகைப்படும் - அவை இடையிடாதனவும் - இடையிட்டனவும் - இடையிட்டு மிடையிடாதனவும் என்னுமூவகையோடுமுறழ முந்நூற்றொருபத்தைந்துவகைப்படும் அவற்றுள் சிலவருமாறு [வ-று] துறைவா துறைவா பொழிற்றுணைவாநீங்க, வுறைவார்க்குமுண்டாங்கொல்செல்வஞ், சிறைவாங்கிப், பேடைக்குருகாரப்புல்லும்பிறங்கிருள்வாய், வாடைக்குருகார்மனம். - எ-து - முதலடிமுதன்மடக்கு - கனிவாமிவள்புலம்பக் காவனீங்கி, வினியாரினியாரொமக்குப், பனிநா, ளிருவராய்த்தாங்கு முயிரின்றியெங்குண், டொருவராய்த்தாங்குமுயிர். எ-து. இரண்டாமடிமுதற்கண்மடக்கு - தேங்கானன்முத்தலைக்குந் தில்லைத்திருநடஞ்செய், யோங்காரத்துட்பொருளாமொண்சுடர்க்கு, நீங்கா, மருளாமருளாதரித்துனைக்குமாற்றம், பொருளாம்புனைமாலையாம். எ-து. மூன்றாமடிமுதன்மடக்கு. - இவளளவுத்தீயுமிழ்வதென்கொலோதோயுங், கவளமதமான்கடமுந், திவளு, மலையார்புனலருவிநீயனுகாநாளின், மலையாமலையானிலம் எ-து. ஈற்றடிமுதன்மடக்கு - இவைநான்குமோரடிமடக்கு - நினையாநினையாநிறைபோயகலா, வினையாவினையாமிலமா, நனையார், குராவாருங்கூந்தற்குமுதவாய்க்கொம்பின், புரவாளரிபிரிந்தபோது. எ-து. முதலீரடிமடக்கு - அடையாரடையாரரணழித்தற்கின்ன, விடையாடுநெஞ்சமேயேழை, யுடைய, மயிலாமயிலாமதர்நெடுங்கண்மாற்றங், குயிலாமென்றெண்ணல்குழைந்து. எ-து முதலடியுமூன்றாமடியுமடக்கு - மானவாமானவாநோக்கின்மருசாஞ்சூழ், கானவாங்கூந்தலங்காரிகைக்குத், தேனெ, பொழியார்ந்தார்மேனுநின்புயத்துமேலுங், கழியாகழியாதரவு. எ-து. முதலடியு மீற்றடியுமடக்கு. - மாதருயிர்தாங்கவள்ளல்வருநெறியிற், பேதுநோய்செய்யும்பெரும்பாந்தள், யாதும், வரையாவரையாவெனுமாமதமா, விளையாவிளையாவெழும். எ-து. கடையீரடிமடக்கு - குராவார்குழலாள் குயின்மென்மொழிதாம், விராவாவிராவாமென்றென்ற, ஆவா, வரவாவரவாமெனநினையார் வையம், புரவாளர்க்கேதாபுகழ். எ-து இடையீரடிமடக்கு-மழையார்கொடைத்தடக்கைவாள்கைய னெங்கோன், விழையாவிழையார்மெல்லாடை, குழையா, விழையாமுணவுங்கனியாமினமூ, முழையாமுழையாமுறை. எ-து இரண்டாமடியுமீற்றடியுமடக்கு-இவையாறுமீரடிமடக்கு இறைவாவிறைவால்வளைகாத்திருந்தியா, றுறைவாருறைவார்புயலா, னறைவாய், வண்டளவுவண்டளவு நாளின்மயிலாலக், கண்டளவுநீர்பொழியுங்கண். எ-து. ஈற்றடியொழித்தேனைமூன்றடிமடக்கு - மலையுமலையு மகிழ்ந்துறையும்வேயுங், கலையுங்கலையுங்கடவுந், தொலைவி, னமரியெமக்காமென்னுமுன்னிற், குமரிகுமரிமேற்கொண்டு. எ-து. ஈற்றயலடியொழித்தேனைமூன்றடியுமடக்கு-கொடியார்கொடியுயார் மதின்மூன்றுங்கொன்று, படியார்பணைத்தடக்கைநால்வாய்க், கடியா, ருரியாருரியாரொனையாளவோதற், கரியார்கரியார்களம். எ-து முதலயலடியொழித்தேனை மூன்றடியுமடக்கு - பாலையாழ்தன்னிற்பதிற்றிரட்டிவேய்ந்தன்றே, மாலைவாய்மாலைவாயின்னிசை, மேலுனையே, மேவலர்மேவலர்மெல்லாவிவாட்டோர், காவலர்காவலாங்கால். எ-து முதலடியொழித்தேனைமூன்றடியுமடக்கு இவைநான்குமூன்றடிமடக்கு-வளையவளையகாஞ்சென்றார்மாற்றம், புனையபுனையவெனப்பொன்மேன, புரைய, னனையாயனையாதொடைநம்மைமேவ, வினையாவினையாவினைந்து. எ-து முற்றுமடக்கு இவைநான்குமூன்றடிமடக்கு-இவைபதினைந்துமடிமுதன்மடக்கு மனமுங்குழையகுழையவாமாற்ற, ரினநீங்கரியகரிய,பு

னைவனத், துள்வாவிவாவிகயல்வாட்டுமென்னுள்ளங், கள்வாள்வாள்வாங்கண். எ-து. இடைமுற்றும டக்கு - ஒழிந்தவிடைமடக்கும்வந்துழிக்காண்க - மாலைமருளா துவஞ்சியான்வஞ்சியான், மேலையம ரர்கடைவேலை, வேலை, வளையார்திரைமேல்வருமன்னமன்ன, விளையாளிவளைவளை. எ-து இறுதிமுற் றுமடக்கு ஒழிந்தவிறுதிமடக்கும்வந்துழிக்காண்க. கொண்டல் கொண்டலாபொழிரெறும்பண்ணை யாய்ப்பண்ணையாய்த்துள்ளார, வண்டல்வண்டலாய்த்தா துகொண்டியற்றலான் வருமணன்மணன்மு ன்றிற், கண்டல்கண்டனர்மகிழ்செய்யவோதிடங்கலந்துலற துறைவெள்ள, மண்டன்மண்டலமுழுது டன்வளை தருவளை தருமணிவேலை எ-து முதலுமிடையுமடக்கிய முற்றுமடக்கு - ஒழிந்தவாதியோ டிடைமடக்கும்வந்துழிக்காண்க - நிரையார்நிரையாமணுயோனிறைகோடல்கோடல், வரையார்வ ரையாரிருண்முன்வருமாலைமாலை, விரையாவிரையாவெழுமின்னொளிர்மேகமேக, முரையாருரையா ரினுமொல்லெனுமுல்லைமுல்லை எ-து முதலுங்கடையுமடக்கிய முற்றுமடக்குஒழிந்தவாதியொடுக டைமடக்கும்வந்துழிக்காண்க. - வருகம்புளினம்புளினம்பயில்வேலைவேலை, யொருகாலுலாவாவுலவா ருமோதமோதம், வருகேதகைகேதகைசேர்தருமன்னமன்ன, பெருகாதனகாதனவேசைமாதர்மா தர் எ-து இடையுங்கடையுமடக்கியமுற்றுமடக்கு ஒழிந்த விடையொடுகடைமடக்கும்வந்துழிக்கா ண்க. களைகளையமுளரியருகடைகடையமகளிர்கதிர்மணியுமணியும், வளைவளையகரதலமுமடைமடை யமதுமலருமலையமலைய, விளைவிளையர்கிளைவிரவியரியரியின்மிசைகுவளைமலருமலருங், கிளைகிளை கொளிசையளிகண்மகிழ்மகிழ்செய்கெழுதகையமருதமருதம். எ-து. மூன்றிடத்துமடக்கியமுற்று மடக்கு - ஒழிந்தமுழுமடக்கும்வந்துழிக்காண்க. இனியிடையிட்டு வந்தமடக்குமிடையிடாது வந்த மடக்குமிவ்வாறேற்கொள்க - அவற்றுள்சிலவருமாறு - தோடுகொண்டளிமுரனறெழக்குடைபவர்து றைசேர், தோடுகொண்டதேமலர்சுமந் தகில்கமழ்ந்தவர்தந், தோடுதைந்த செஞ்சாந்தணிந்திளை முலையிடைதோய்ந்த , தோடுதண்புனனித்திலந்துறைதொறுஞ் சொரியும் - எ - து இடையிடாத னமுற்றுமடக்கு - பரவிநாடொறும்படியவாம்பல்புகழ்பரப்பு, மிரவிசேறியபடியவாம பதியெரிக வர, விரவிமாண்பயில்படியவாம் வேய்தலைபிணங்கு, மருவிவாரணம்படியவாம் பல்பணைமருதம். எ-து இடையிட்டிடைமுற்றுமடக்கு - சொன்னநாளிதுசுரும்பிமரிதழிபோன்கால, மின்னுவாள்வி டவில்வளைத்தூன்றியகால, மின்னகார்முகிலின மிருண்டெழுதருகால, மன்னர்வாரலாதாம்வருமயிலி னம்வருகாலம். எ-து. இடையிட்டிறுதிமுற்றுமடக்கு - இவைபிடையிட்டுவந்தனவிவற்றது விகற்ப ம்வந்துழிக்காண்க. இனியிடையிட்டுமிடையிடாதும்வருவனவற்றுள் சிலவருமாறு வாமானமானம ழைபோன்மதமானமான, நாமானமானமுகிருழ்ந்ததமானமான, தீமானமானவர் புகழ்த்திறமா னமான, காமானமான கற்சூங்கன்மானமான. எ-து இடையிட்டுமிடையிடாதும்வந்துமிடையுமி றுதியுமடக்கியமடக்கு. பிறவும்வந்துழிக்காண்க. வருமறைபலமுறைவசையறப்பணிந்தே. மதியொ டுசெடைமுடிமருவுமப்பணிந்தே, யருநடநவில்வதுமழகுபெற்றன்றே, யருளொடுகடவுவதனிகொ ள்பெற்றன்றே, திருவடிமலர்வனதிகழொளிச்சிலம்பே, தெளிவுடனுறைவதுதிருமறைச்சிலம்பே, யிருவினைதடிப்பவரடைபதத்தன்றே, யிமையவர்முதல்வனினைநினைத்தன்றே. என வருவனவற்று ள் வேறுபாடுமெறிக அன்றியும்.

( அம்மடக்கலங்காரங்கள் வேறுபாடுவருமாறு. ) — தண்டியலங்காரம் — அடிமுழுதுமடக்கு தலாங்கதன்சிறப்பே என்றாராகலின் - இரண்டடிமடக்கு மூன்றடிமடக்கும் நான்கடிமடக்கும் என மூவகைப்படும் அவற்றுள்சிலவருமாறு - விரைமேவு மதமாயவிடர்கூடுகெடுநாக, விரைமேவுமதமா யவிடர்கூடுகெடுநாக' வரைமேவுநெறியூடுதனிவாரன்மலைவாண, நிரைமேவுவளைசோரவிவளாவிநிலை சோரும். எ-து முதலீரடிமடக்கு - கடன்மேவுகழிகாதன்மிகநாளு மகிழ்வார்க, ளுடன்மேவுநிறை சோரமெலிவார்தம்முயிர்நோவுங், கடன்மேவுகழிகாதன்மிகநாளுமகிழ்வார்க, ளுடன்மேவுபெடை கூடுமுறுகாலுமுரையார்கொல். எ-து. முதலடியுமூன்றாமடியுமடக்கு - கருமாலைதொறுகாதல்கழி யாதுதொழுதாலு, முருமாயமதனுகமடுமாறுபுரிவார்முன், னுருமாயமதனுகமடுமாறு புரிவார்மு ன், வருமாயவினைதீரவொருநாளுமருளார்கொல் எ-து இடையீரடிமடக்கு - மறைநுவல்கங்கைதாங் கினர், நிறைதவமங்கைகாந்தனர், குறையெனவண்டர்வேண்டவே, மறைநுவல் கங்கைதாங்கினர் எ-து. முதலடியுமீற்றடியுமடக்கு - கொல்லியம்பொருப்பனைமேவார்கோனக, ரில்லெரிமேவுவதிய ம்பல்வேண்டுமோ, வல்லியந்தாமரைவனங்களாயின, வல்லியந்தாமரைவனங்களாயின. எ-து கடை யீரடிமடக்கு - நலத்தகைபிறவிருசரணமேத்துநங், குலத்தகைபணிகொளேகம்பரத்தனே, நலத் தகைமகளொருபாகநன்னுமெங், குலத்தகைபணிகொளேகம்பரத்தனே. எ-து இரண்டாமடியுமீ ற்றடியுமடக்கு - இவையாறுமீரடிமடக்கு - காமரம்பயினீர்மதுகரங், காமரம்பயினீர்மதுகரங், கா மரம்பயினீர்மதுகர, நாமரநதையுறநிலையார்நமர் எ-து ஈற்றடியொழித்தேனை மூன்றடியுமடக்கு கடியவாயினகாமருவண்டின, மடியவாமகன்றுருழைவாரலா, கடியவாயினகாமருவண்டினங், கடி யவாயின காமருவண்டினம். எ-து இரண்டாமடியொழித்தேனைமூன்றடியுமடக்கு - கோவளர்ப்ப னகோனகரங்களே, கோவளர்ப்பனகோனகரங்களே, மேவளக்கர்வியன்றிரைவேலைசூழ், கோவளர் ப்பன கோனகரங்களே. எ - து. ஈற்றயலடியொழித்தேனை மூன்றடியுமடக்கு - வரியவாங்கு ழன்மாதரிளங்கொடி , யரியவாங்கயத்தானவனங்களே, யரியவாங்கயத்தானவனங்களே , யரிவா ங்கயத்தானவனங்களே. எ - து. முதலடி யொழித்தேனை மூன்றடியுமடக்கு - இவை நான்கு

மூன்றடி மடக்கு. வானகந்தரு மிசையவாயின, வானகந்தரு மிசையவாயின, வானகந்தரு மி
சையவாயின, வானகந்தரு மிசையவாயின. எ-து. நான்கடிமடக்கு - இதனையே யேகபாத
மென்க அன்றியும் ஒருசொல்லேநான்கடியாய்மடக்குமென்பார் [வ-று] மாதானுமாதானு, மா
தானுமாதானு, மாதானுமாதானு, மாதானுமாதானும். எ-து முற்றுமடக்கு பணிபவனந்தமதா
கமன்னுவார், பணிபவனந்தமதாகமன்னுவா, ரணியனமேயதமன்பராகமே, யணியனமேயதும
ன்பராகமே. எ-ம் கலைநிலாவருமாலைமணங்கொள்வான், மலையமாருதமாறலமாதர்கண், கலைநிலாவ
ருமாலைமணங்கொள்வான், மலையமாருதமாறலமாதர்கண். எ-ம் ஓதநின்றுலவாவரும்வெலைவாய், மா
தரங்கமலைக்குநிகரவே, யோதநின்றுலவாவரும்வேலைவாய், மாதரங்கமலைக்குநிகரவே. எ-ம் வரும்பி
றவுமன்ன மாலைமாலையாகவேயனங்கவேளபயிறரு,மாலைமாலைவேட்டவர்மனங்கலேறவன்றுழாய்,மா
லைமாலையோவுடைத்ததுநினைந்தெழுதரு, மாலைமாலையாவுடையவனைவந்திடர்செயும் எ-து இடை
யிட்டிறுதிமுதன்மடக்கு - கயலேதாவருங்கடிபுனற்காவிரி, காவிரிமலருங்கரைபொருமரவு, மரவம
பூஞ்சினைவண்டொடுசிலம்புஞ், சிலம்புசூழ்தருந்தளிரடிமனைக்கயலே. எ-து அந்தாதிமடக்கு அன்
றியும் — தண்டியலங்காரம்— ஓரெழுத்துமடக்கனு முரித்தெனமொழிப. என்றார் [வ-று] நாநா
நாதங்கூடிசைநாதந்தொழிலோவாய், தாதாதாரமாக விரைத்தண்மலர்மீதே, வாவாவார்தண்சோ
லையிலவாழும்வரிவண்டே, யாயாயானிற்சேர்த்துவதன்பர்க்குரையாயால். ஓரெழுத்துமடக்கு (௨)

(௩௱௰௬-சூ) இசையந்தாதியேயீற்றுச்சொன்மீண், டிசைபெறவுருபுவேறெனினுமியைதலே

* எ-து * இசையந்தாதி யாமாறுணர்த்துதும். ஒருவசனத்தீறாகநின்ற மொழிமற்றொருவச
னத்தாதியாக வருவதிசையந்தாதியெனப்படும் அவற்றிற்குருபு வேறெனினுமென்றமையால் வேறு
ருபுபெற்றும் பெருமையுமாமெனக்கொள்க. இதுவேயோரடியீற்றினின்றது மற்றோரடிமுதலாக
வரினந்தாதித்தொடையெனச்செய்யு ளிலக்கணத்துட்சொன்னார்புலவர் இயற்றமிழுதாரணம் மாந்
தர்க்கெல்லாங்கேள்வியாலறிவு மறிவினாற்கல்வியுங் கல்வியாற்புகழும் புகழாற்பெருமையும் விளைந்
துவளருமன்றோ. எ-ம். பிறவுமன்ன. எ-று. (௩)

(௩௱௰௭-சூ) அடுக்கணியொருபொருட்கடுக்கியதிரிசொ,லடுக்கிவைப்பதடுக்கணியெனப்படும்

* எ-து * அடுக்கணியாமாறுணர்த்துதும் சிறப்புக்காட்டவுமன்புதுயர்களிப்பிவற்றைமிக்கெ
னத்தோற்றவு மொருபொருளைத்தரும்பலதிரிசொல்லடுக்கிவைப்பதடுக்கணியெனப்படும் [வ-று]
இகழ்ந்தொளித்தானேவென்னை யிகழ்ந்தகன்றானே கொடியநெஞ்சான். எ-ம் —வெண்பா.— என
னுயிர்காத்துப்புரந்தாண்டவென்னிறைவன், றன்னுயிர்பட்டிறந்து சாய்ந்தொழிந்தான், பின்னுயி
ராய், மீண்டென்னைக்காத்தோம்ப மேவிப்புரந்தளிப்ப, யாண்டையும்யார்யாரெனக்கு. என்பன
விவற்றுட்டுயரின் மிகுதியைக்காட்டப்பலதிரிசொல் சிறப்பிலடுக்கிவந்தவாறுகாண்க. எ-று. (௪)

## மூன்றாவது சொல்லெஞ்சணி.

(௩௱௰௮-சூ) எஞ்சணியென்பவெளிதுணர்பலமொழி, துஞ்சில்சிறப்பிற்றோன்றுதொழித்தலே

* எ-து. * சொல்லெஞ்சணியிலக்கணமாமாறுணர்த்துதும் உணதற்கெளிதாயவிடத்துப்பெ
யர் வினைமுதவியசொல்லொழித்துரைப்பது சொல்லெஞ்சணியெனப்படும் இவையேயைந்திருவ
கையவாகி யீரைந்தெச்சமென்மனார்முன்னோர். எ-று. (௧)

(௩௱௰௯-சூ.) பெயர்வினையும்மைசொற்பிரிப்பெனவொழியிசை, யெதிர்மறையிசைக்குறி
ப்பெஞ்சணிபத்தே.

* எ-து * எஞ்சணியாமாறுணர்த்துதும். பெயரொஞ்சணியும் வினையெஞ்சணியும் உம்மையெ
ஞ்சணியும் சொல்லெஞ்சணியும் பிரிநிலையெஞ்சணியும் எனவெஞ்சணியும் ஒழியிசையெஞ்சணியும்
எதிர்மறையெஞ்சணியும் இசையெஞ்சணியும் குறிப்பெஞ்சணியுமெனச் சொல்லெஞ்சணியொருப
ஃதாம் அவை [வ-று] கொன்றன்னவின்னாசெயினுமவர்செய்த, வொன்றுநன்றுள்ளக்கெடும். எ-து
பிறரின்னாசெயினு மவர்செய்தநன்றுதா னுள்ளக்கெடுமென்று பிறருந்தானுமெனவெஞ்சிய விரு
பெயர்கொண்டுமுடிக்கவேண்டலிற் பெயரொஞ்சணியாயிற்று. வினைச்சொல்லாயினும் வினையைப்ப
ற்றிவரு முருபுசொற்களாயினு மெஞ்சவரின் வினையெஞ்சணியெனப்படும்.—நிலத்தியல்பானீர்திரி
ந்தற்றாகுமாந்தர்க், கினத்தியல்பதாகுமறிவு. எ-து நீர்சேருநிலத்தியல்பானது திரிவதுபோல மா
ந்தர்சேருமினத்தியல்பானே தமக்காகுமறிவென்று முகிக்கவேண்டலிற் சேருமென்றும் வினைச்
சொல்லெஞ்சியவாறு. — சிறுவரையேயாயினுஞ் செய்தநன்றல்ல, துறுபயனில்லையுயிர்க்கு எ-து
தன்னாற்செய்யப்பட்டநன்றென்று முடிக்கவேண்டலிலாலெனும் வேற்றுமையுருபுசொல்லெஞ்சி
யவாறு ஆகையி லீரிடத்தும் வினையெஞ்சணியாயிற்று. — இலங்குவாளிரண்டிருவிருகைவீசி எ-து
இருகையுமென்று முடிக்கவேண்டலி னும்மையெஞ்சணியாயிற்று. ஆகையி லும்மையெஞ்சணியுமு
ம்மைத்தொகையுமொக்கும். — இசையாவொருபொரு ளில்லென்றல்யார்க்கும் வசையாவதெங்கு
மில. எ-து இல்லென்றுசொல்லுதலென முடிக்கவேண்டலிற் சொல்லெஞ்சணியாயிற்று. — ஒரு
சொல் தன்னிலையன்றிப்பிரிந்து மற்றவிடத்துங் கூட்டல்வேண்டுழிப் பிரிநிலையெஞ்சணியெனப்படு
ம். — வெண்பா. — அறிமின்றநெறியஞ்சுமின்கூற்றம், பொறுமின்பிறர்கடுஞ்சொற்போற்றுமின்
வஞ்சம், வெறுமின்வினைதியார்கேண்மையெஞ்ஞான்றும் பெறுமின்பெரியார்வாய்ச்சொல் என்பதி

திலே யெஞ்ஞான்றுமெனுஞ்சொல் மற்றவழியுங்கூட்டி யறிமி னெஞ்ஞான்றுமுதலிய வந்துமுடிக்கவேண்டலிற் பிரிநிலையெஞ்சணியாயிற்று. இதுவே முதலிடைகடைப்பற்றிவரின் மேற்காட்டியதாப்பிசையாயினு மளைமறிபாப்பாயினு மென்றுவழங்கும். — உண்ணலுமீதலுமாயிண்டல்லது-முண்டோபொருட்கட்பயன். எ-து உண்ணலுமீதலுமெனவென்று முகிக்கவேண்டலிலெனவே யெஞ்சணியாயிற்று. — சொன்னவையன்றி மற்றொன்றுதோன்றக்கூற லொழியிசையெஞ்சணியெனப்படும். கற்றோருங்காணலரிது என்றார் கல்லாதவர்க்கெளிதல்லதெனத்தோன்றலி லொழியிசையெஞ்சணியாயிற்று. — ஓகாரவெதிர்மறையு மும்மையெதிர்மறையுமென வெதிர்மறையெஞ்சணி யிருவகைப்படும். ஆகையிலொன்றைமறுக்க வெதிர்மறைச்சொல்லின்றி யோகாரம்வரினு மும்மைவரினு மவ்வலங்காரமாகும் செய்யேனென்பதற்கு யானோசெய்வேனென வோகாரவெதிர்மறையெஞ்சணியாயிற்று. இவ்வெழுத் திவ்வழிதிரியவும்பெறுமென்றாற் றிரியாமையும்வருமெனத்தோன்றலி னும்மையெதிர்மறையெஞ்சணியாயிற்று.—ஒல்லெனநதிவந்தோடுமென்புழி ஒல்லெனவொலித்தென முடிக்கவேண்டலி னிசையெஞ்சணியாயிற்று. அங்ஙனம் அம்மென லிமமெனல்வந்தொலிவினையெஞ்சவருவனவெல்லா மிவ்வலங்காரமாகும், என்னை ஒலியெனினு மிசையெனினுமொக்கும். அன்றியு மிருபயன்றிரிசொல்வந் தொன்றுசொல்ல மற்றொன்று பொருளிசைத்தற்கிதமாகவரி னிசையெஞ்சணியென்மருமுளரோ ஆயினு மினிவரும்படி யிது சிலேடையென்று பொருளணியாகும். அச்சத்தின்குறிப்புச்சொல்லுஞ் சீக்கிரத்தின்குறிப்புச்சொல்லுமுதலியவந் தவற்றவற்றிற்குரிய வினைச்சொல்லெஞ்சவருவன குறிப்பெஞ்சணியெனப்படும். துண்ணெனநின்றான் ஐயெனப்போனான் என்பன துண்ணெனவெருவி யையயெனவிரைந்தெனக்கூட்டி யவ்வவச்சொல்குறித்தவினையோடு முடிக்கவேண்டலிற் குறிப்பெஞ்சணியாயின, அன்றியு மொனறுசொல்லிக் குறித்த மற்றொருபொருளைத்தோற்றுவித்தல் குறிப்பெஞ்சணியென்மருமுளரோ ஆயினு மினிவரும்படி யிது நுட்பமென்று பொருளணியாகும் ஆகையிற் சொல்லெஞ்சணி யீரைந்தும் வந்தவாறுகாண்க. —நன்னூல். — பெயர்வினையும்மைசொற்பிரிப்பெனவொழியிசை,யெதிர்மறையிசையெனுஞ்சொல்லொழிபொன்பதும், குறிப்புந்தத்தமெச்சங்கொள்ளும். — தொல்காப்பியம். — அவற்றுட்பிரிநிலை யெச்சம்பிரிநிலை முடிபின. — [illegible] குறிப்பு, நினையத்தோன்றியமுடிபாகும்மே, யாவயிற் குறிப்பேயாக்கம் [illegible] கிளவிபெயரொடுமுடிமே. — ஒழியிசையெச்சமொழியிசைமுடியின. — எதிர்மறையெச்சமெதிர்மறைமுடிபின. — உம்மையெச்சமிருவீற்றானுந், தன்வினையொன்றியமுடிபாகும்மே. — தன்மேற்செஞ்சொல்வரூஉங்காலை, நிகழுங்காலமொடுவாராக்காலமு, மிறந்தகாலமொடுவாராக்காலமு, மயங்குதல்வரையார்முறைநிலையான. — எனவென்னெச்சம்வினையொடுமுடிமே. — எஞ்சியமூன்றின்மேல் வந்துமுடிக்கு, மெஞ்சுபொருட்கிளவியிலவென மொழிப. — அவைதாந், தத்தங்குறிப்பினெச்சஞ்செப்பும்.—சொல்லெனெச்சமுன்னும்பின்னுஞ், சொல்லளவல்ல தெஞ்சுதலின்றே. — அவையலகிளவி மறைத்தனர்கிளத்தல். — இவைமேற்கோள். எ-று. (௨)

## நான்காவதுசொல்லொப்பணி.

(௱௨௰-சூ.) ஒப்பணிதிரிபியைபொழுகிசையியைபிசை, தப்பில்சமமெனத்தகுநால்வகையே.

* எ-து * நிறுத்தமுறையானே சொல்லொப்பணியிலக்கணமாமாறுணர்த்துதும். இவையொப்புமையைப்பற்றிவருவன வாகையிற் சொல்லொப்பணி யெனவழங்கும். இவையே திரிபியைபு மொழுகிசையுமியைபிசையுஞ்சமமுமென நால்வகையாகும், இவற்றைத்தனித்தனிவிளக்குதும் (௪)

(௱௨௧-சூ.) திரிபியைபொருமொழிசேர்பல்லுருபு, மருமொன்றனைபலவுமாயுமென்ப.

* எ-து * திரிபியைபணியாமாறுணர்த்துதும். ஒருபெயருமொருவினையும் பலவேற்றுருபுபெற்றும் பலபெயர் பலவினை யோருருபுபெற்றும் பலவழிவரத்தொடுப்ப தியைபுதிரிபாகித் திரிபியைபெனப்படும். [வ-று] — தேம்பாவணி. — மாண்டகையா ரறஞ்சார்பாரல்லதினமனுச்சாரா, ராண்டகையாரருட்சாரார்க்கல்லதொருதுயர்சாரா, சேண்டகையாரிவன்சார்பாற் செல்லுநாமெனவானார், பூண்டகையாலறஞ்சார்ந்தாள்பூசாரப்புகல்செய்தாள். எ-ம் இதனுளிவைந்தவொருசொல்லாறுதிரிபாகவந்தவாறுகாண்க. — தாழிசை — வழுவார்க்குநீதிலையேமருள்வார்க்குநீதெளிவே, யழுவார்க்குநீகளியே யயர்வார்க்குநீதிதியே, கல்லார்க்குக்கலைக்கடனி கடவார்க்குநிலைத்திறநீ, யில்லார்க்கு மிாணியநீயெல்லார்க்குமெல்லாநீ எ-ம் விரைவினாற்காற்றெனவு முழக்கத்தாற்கடலெனவு மச்சத்தாலிடியெனவுஞ் செய்குலையாற்கூற்றெனவு மதகரிவந்தெதிர்த்தபடை முருக்கினதே. எ-ம் இவற்றுட்பலபெயரோருருபுபெற்றுத் திரிபியைபாயினவாறுகாண்க. எ-று. (௨)

(௱௨௨-சூ.) ஒழுகிசைச்சீரொத்தொழுகியசெய்யுள்போல், வழுவிலவியற்றமிழ்வருநலுமாகும்.

* எ-து * ஒழுகிசையணியாமாறுணர்த்துதும். மேற்காட்டியசெய்யு ளிலக்கணத்தாலொத்த சீரொடுவருவ தொழுகியவோசையென்பதுபோல வியற்றமிழிடத்தும் பெயரு மீரொச்சமு முரிச்சொல்லு மிடைச்சொல்லும் பலபலவசனத்திலொப்பவந்து வருமெழுத்தெண்ணுமொன்றுவ தொழுகிசையலங்காரமெனப்படும். [வ-று] விடாது நறுநெய்பூசிநீங்கா, தொளிமணிசேர்த்திமங்காம

துமலர்சூடி, யொழுங்கிட்வகுத்துவனப்புறவளைத்துப், புடைப்பெழச்சொருகித்தமக்கழகாகவும், பிறர்க்கிழிவாகவும் நள்ளிருட்கூந்தலே, யளகமாகசேர்த்துவ ரிழிவிலமாதரன்றே. எ-று. (௩)

(௱௨௩-சூ.) இயைபிசைசொல்லுரு, பீற்றிலொத்தாதலே.

* எ-து * இயைபிசையணியாமாறுணர்த்துதும். பற்பலவசனத்திறுதிமொழிகடம்மு ளொருபி னொப்புமையா வியைந்துவருவதியைபிசையலங்காரமெனப்படும். இதுவேசெய்யுளிலக்கணத்தியை புத்தொடையென் றெண்விகற்பமாகவழங்குவதெனக்கண்டுணர்க. [வ-று] செங்கதிர்நெடுங்கைநீ ட்டிமல்கிருட் கங்குலோட்டிப்படரொளிமுகத்தைக்காட்டிப்பருதியேகடன்மேலெழுந் தழிச்செவ் விதட்டாமரைபூப்பச் சோலைவாய்ப்பறவைகளார்ப்ப வம்புவியிராவிருணீப்பவணியழகொப்பொன் றிலதே எ-ம். வியற்றமிழ்-இனிச்செய்யுளியைபிற குதாரணந்தொடைவிகற்பத்துடன்காண்க. (௪)

(௱௨௪-சூ.) சமமென்பமாத்திரை தவுதல்வேற்றெழுத் , தொன்றுறலன்றியொன்றியசொல் லே,மற்றவற்றினமாமாத்திரைச்சுருக்கந், திரிபதாதிசேர்ந்தனபிறவே.

* எ-து * சமவணியாமாறுணர்த்துதும் இருமொழிபலமொழிதம்முண்மாத்திரையானுமோ ரெழுத்தானும் வேறுபாடுடையவாதலன்றித்தம்முளொப்பவருவது சமவணியெனப்படும் [வ-று] எரியோவெரியோவங்கண் டொன்றுவதெனவும் பாடவோபாடவோ வந்தாயெனவும் கந்தரக்கந் தாரத்தின்புகுக்குங்காந்தாரமெனவு மிவைமாத்திரையொன்றுவேறுபடவந்தசமவணி பிறவுமன்ன. —திருக்காவலூர்க்கலம்பகத்தாழிசை.—வீதிமந்திரநூலியே, யாதிதந்திரவேலியே, வென்றிதந்தம டங்கலே, நன்றிதந்தவடங்கலே, நீதிசுந்தரகோவியே, கோதிலந்தரசிலியே, நிந்தைநீங்குமனந்த மே, யெந்தையீங்கருளந்தமே, பாதியிந்தணிபாதியே, சோதிவந்தணிசோதியே, பங்கநீத்தலர்கஞ் சமே, பங்கநீத்தமர்தஞ்சமே, யோதியம்பரஞானமே, யேதிலும்பரமானமே, யோவலீரெனதன் பளே, காவலூரசென்பளே. என்பதிதனு ளொவ்வோரெழுத்தே யாறிவேறுபடுவதன்றி யொன் றியபலசொல்லிணைந்து வந்தசமவணிபிறவுமன்ன. அன்றியுமாத்திரைவேறுபட வருஞ்சமமறைத் துரைப்பது மாத்திரைச்சுருக்கமெனப்படும். [வ-று] —வெண்பா— நேரிழையார்கூந்தலினோர் புள்ளிபெறநீண்மரமா, நீர்நிலையோபுள்ளிபெறநெருப்பாஞ், சீரளவு, பாட்டொன்றொழிப்பவிசை யாமதனளவு, மீட்டொன்றொழிப்பமிடறு. என்பதிதனுள் ஓதி - கூந்தல் - ஓதி - மரம் - எரி - நீர் நிலை - எரி - நெருப்பு-காந்தாரம்பாட்டு-கந்தாரமிசை - கந்தரமிடறு-பிறவுமன்ன. அன்றியுமெழு த்துவேறுபடவருஞ்சமவணிவகையி னடுவுயிரெழுத்துளமொழியே யொருபொருளாகவு மவற்று ண்முதலொழித்தொழிந்த மற்றீரெழுத்துமிடையெழுத்தொழிந்த மற்றீரெழுத்தும் வேறிருமொ ழியாய் வேறிருபொருளைத்தரவரினது வெதிர்ப்பதாதியெனப்படும். [வ-று] கவரி - கரி - வரி - கவலை - கலை - வலை - கமலம் - கலம் - மலம் -புவனம் - புனம் - வனம் - பாசடை - பாடை - சடை பூபதி - பூதி - பதி - எ-ம். —வெண்பா.—மூன்றெழுத்துமென்கோன்முதலீறொருவள்ள, லீன்றுல கங்காப்பதிடைகடை, யானறுரைப்பிற், பூமாரிபெய்துலகம் போற்றிப்புகழ்ந்தேத்தறுங், காமாரிகா ரிமாரி. எ-ம். —வெண்பா.—கவரிகரிவரிசேர்ந் தார்த்துக்களிப்பத், தவமேதவாவாழமலையா, யுவ மையைப்பின்' வைத்தெரியைவானவழியாமெனச்சேர்ந்தேன், கித்தேரிதெரிக்கிரி. எ-ம். பிறவுமன் ன. அன்றியுஞ்சூத்திரத்துட் பிறவென்றமிகையான் மிறைகவியென்றுஞ்சித்திரக்கவியென்றுமொ ருவகைச்சமம் பற்றியவிருபதுவகைக்கவி தண்டியலங்காரத்துட்காணப்படும் அவையாவன மேற்கூ றியமாத்திரைச்சுருக்கமுந்திரிபதாதியுமன்றிக்கோமுத்திரியுங்கூடசதுக்கமுமாலைமாற்று மெழுத்து வருத்தனமுநாகபந்தனமும் வினாவுத்தரமுங்காதைகாப்புங் கரந்துறைச்செய்யுளுஞ் சக்கரமுஞ் சு ழிகுளமுஞ் சருப்பதோப்பத்திரமு மக்கரச்சுத்தமுநீரோட்டமுமொற்றுப்பெயர்த்தலுமாத்திரைவ ருத்தனமுமுரசபந்தனமுந்திரிபங்கியும் பிறிதுபதரிபாட்டுமென்றிவை யிருபதுமிறைகவி யென்ப ராயினு மிவைசிறுபான்மையாகையிவிங்கண்விரிவுக்கஞ்சியொழித்தனர் எ-று. (௫)

(௱௨௫-சூ) சொல்லணிமறிநிலையைந்துங்கோளெடடுஞ், சொன்மிக்கணிமூன்றுஞ் சொல் லெஞ்சணிபத்துஞ், சொல்லொப்பணிநான்குந்தொகையாறைந்தே.

* எ-து * முறையேசொல்லணியோத்தினுள் விளக்கியவற்றின் றொகைச்சூத்திரம்வந்தவாறு காண்க. எ-று. (௬)

முதலோத்துச் சொல்லணியியன் முற்றிற்று.

—00000—

# இரண்டாமோத்துப்பொருளணியியல்.

(௱௨௬-சூ.) பொருளணியாறைம்புணர்ப்பெனத்தன்மை, யுரியபலவிகற்பவுவமையுருவகம், வேற்றுப்பொருள்வைப்பே வேற்றுமைதானே , யொட்டணியவநுதியுகாஞ்சிதமே , நுட்பம்புக ழ்மாற்றே தன்மேம்பாட்டுரையே, பின்வருநிலையேமுன்னவிலக்கே, சொல்விலக்கிலேசஞ்சுவையே யுதாத்த , மொப்புமைக்கூட்டமொப்புமையேற்றம் , விபாவனைவிசேடம் விரோதம்பிறிதுரை, விடையில்வினாவேவினவில்விடையே, சித்திரமொழிப்பமைவுசிலேடைசங்கீரண, மித்திறத்தனையவு மியம்பினர்கற்றோர்..

* எ-து * பொருளணியிலக்கணமாமா றுணர்த்துதும். ஆதியினிறுத்தமுறையானே சொல்லாலணியியலினை விளக்கியபின்னர் பொருளாலவருமணியியலினை விளக்கலாவ பொருளணியியெனும்பெயர்த்து இதனுட்செந்தமிழ் நன்குணர்ந்தோர் நன்றாத்தவற்றுள் வேண்டாதனசிலவொழித்து வேண்டிய சிற்சிலகூட்டித் தன்மைமுதற்கொள்ளிடாத்தவணிக ளாறைத்ததையுந் தனித்தனி விளக்குதும். சூத்திரத்திலனையவுமென்றமிகையா லிவ்வாசிரியர்சொல்லாதவற்றை யிந்நூற்கண்ணே சொலவேண்டியவிடத்திற் பன்னூலினுஞ் சிற்சிலவெடுத்தாக்கூறுதும். — தண்டியலங்காரம். — தன்மையுவமையுருவகந்தீவகம், பின்வருநிலையே முன்னவிலக்கே, வேற்றுப்பொருள்வைப்பே வேற்றுமை வியாவனை, யொட்டேயதிசயந்தற்குறிப்பேற்ற, மேதுநுட்பமிலேசநிரனிறை, யார்வமொழிசுவை தன்மேம்பாட்டுரை, பரியாயம்மேசமாயிதமுதாத்த, மரிதுணர்வநுதிசிலேடைவிசேட, மொட்புமைக்கூட்டமெய்ப்படுவிரோத, மாறுபடுபுகழ்நிலைபுகழாப்புகழ்ச்சி, நிதரிசனம்புணர்நிலைபரிவருத்தனையே, வாழ்த்தொடுசங்கீரணமபாவிகமிவை, யெத்திறச்செய்யுட்கணியேனைந்தே. - இதுமேற்கோள். எ-று. (௧)

(நூஉஎ-சூ.) தன்மையணியேதன்பொருட்குரிய, வன்மைபலவும்வழுவா துரைத்தலே.

* எ-து * தன்மையலங்காரமாமா றுணர்த்துதும். பொருள்திராத்தி அரிமையெனும்பெயரிட்டுவழங்கின நீண்டித் தன்மையணியெனக்கொள்க: பொருளானுங் குணத்தானுஞ் சாதியானுந் தொழிலானு மூரிமையுந் தன்மையும் வழங்குமென்றுணர்க. [வ-று] மீனைதலையரும்ப வெண்மதியேதாளரும்பப், பாமேனுடலரும்பப்பாங்குருவே, தாமேன, குடைத்தாடிருக்காவளாகத்துவைத்தா, டைத்தாள்வினைத்துபமோதொக்கு. இதுபொருட்டன்மையணி. — உள்ளங்குளிரவுரோமஞ்சிலிர்த்துறையுந், தள்ளவிழ்நீர்த்ததும்பத்தன்மறந்தாள், புள்ளொலிக்குஞ்,சேந்தாமரைவயல்சூழ்த்திலலத்திருநடஞ்செய், பூந்தாமரைதொழுதபோன். இதுகுணத்தன்மையணி. — பத்தித்தகட்டகறைமிடற்றவைவிரியுந், துத்திக்கவைத்ததுளையெயிற்ற, மெய்த்தவத்தோ, ராகத்தான்மயலத்தாராவமிழ்தணங்கின், பாகத்தான்சாத்தும்பணி. — இதுசாதித்தன்மையணி. — சூழ்ந்துமூண்டவைவாசந்துதைந்தாடித், தாழ்ந்துஅதுநுகர்ந்துதாதருந்தும, வீழ்ந்தவிழ்ந்த, பர்சத்தார்நீங்காப்பாஞ்சடாரின்பைங்கொன்றை, வாசத்தார்நீங்காதவண்டு. — இதுதொழிற்றன்மையணி. — தண்டியலங்காரம். — எவ்வகைப்பொருளுமெய்வகைவிளக்குஞ், சொன்முறைதொடுப்பதுதன்மையாகும். — அதுவே, பொருள்குணஞ்சாதிதொழிலொடுபுலனும். இவைமேற்கோள். எ-று. (௨)

(நூஉஅ-சூ.) உவமையென்பதுரிக்குணத்தொழிற்பய, னிவற்றொன்றும்பலவுமிணைத்துதமூடு, வொப்புமைதோன்றச்செப்பியவணியே.

* எ-து * உவமையென்னு மலங்காரப்பொதுவிலக்கணமாமா றுணர்த்துதும்: இருபொருடம்முட் குணத்தாலுந் தொழிலானும் பயனுனு மொத்தனவாகக்காட்ட லுவமையலங்காரமெனப்படும். இவற்று ளொருபொருட் கொருபொருளுவமையும் ஒருபொருட்குப் பலபொருளுவமையும் பலபொருட்கொருபொருளுவமையும பலபொருட்குப்பலபொருளுவமையும் வருமெனக்கொள்க. [வ-று] பவளத்தன்னசெவ்வாய் இது பண்புவமை - அரிமாவன்னபோர்முகத்தப்பகைசெகுத்தான் - இது தொழிலுவமை - மாரியன்னபொழிவண்கையான் - இது பயனுவமை - அன்றியும் - பிறைபோலுமவாணுதல - இது ஒருபொருட்கொருபொருளுவமை - பிறைபோலுங்கூனெயிறு - இதுபலபொருட்கொருபொருளுவமை - சோனையம்புத்திரளொப்பக் கணைதொடுவில்லான் - இது ஒருபொருட்குப்பலபொருளுவமை — தேன்னிகோதையார் சென்றணுகத்தானடுவே, மீன்னிங்கணேர்வப்நூற்ருள் - இது பலபொருட்குப் பலபொருளுவமை — தண்டியலங்காரம். — பண்புந்தொழிலும் பயனுமென் றிவற்றி, னொன்றும்பலவும் பொருளொடுபொருள்புணர்ந், தொப்புமைதோன்றச்செப்புவதுவமை. இதுமேற்கோள் எ-று. (௩)

(நூஉகூ-சூ.) உவமைவிகற்பித்துரைக்குங்காலை, விரிவேதொகைவிதரோதம்விபரித, மறுபொருணியமமையமின்சொல், கூடாவுவமைகோத்தமாலை, புன்மையெனவிவைபுவமைவகையே.

* எ-து * உவமையலங்காரமாமா றுணர்த்துதும். எல்லாவலங்காரத்துள்ளு முவமையலங்காரஞ்சிறப்புடைத்தென்பார் என்னை பலநிறமதுமலர்சேர்த்திய படலைமாலைபோலவு நால்வகைச்சாந்துங்கூட்டி நவிகட்டுகலவைபோலவு மிவ்வலங்காரத்தானும பலவகைப்பொருளை யொருப்படத்தோற்றித்தருதலாற் கேட்பார்க்கிதுவேசிறந்தவின்பம்பயக்குமென்றுணர்க. உவமித்தபொருளுமுவமைப்பொருளு முவமித்தற்குக்காரணமாகி யவ்விரண்டிற்கும் பொதுவாய்நிற்குங் குணமுந்தொழிலும் பயனுங்கூடக்காட்டி தண்டியலங்காரத்தில் — போலமானப்புரையப்பொருவ, நேரக்கடுப்பநிகர்ப்பநிகா, வேரவேயமலையவியைய, வேற்பவெள்ளவுறழவொப்ப, வன்னவனையவமரவாங்க, வென்னவிகலவிளையவெதிரத், துணைதாக்குண்டார்நகைமிகுதகைவீ, றனைகேழற்றுசச்சதொடுபிறவு, நவைதீர்பான்மையுவமைச்சொல்லே. என்னுமுருபுகளா லவற்றைப்பிணித்துவருவ துவமையெனக்கொள்க. இவ்வலங்காரத்தைப்பிரித்துப் பலவிகற்பமாக வகுத்தார்புலவர் அவற்று ளீண்டுவிரியுமுதற்கொண் டுண்மைமீறாகப் பதினொருவிகற்பங்களுந் தொகுத்துரைத்தவாறுமாண்க. சூத்திரத்துள்ளெனவிவையென்றமிகையால் - சமுச்சயம் - புகழ்தல் - நிந்தை - தெரிதருதேற்றம் - இயல்வேடகை - பலபொருள் - விகாரம் - மோகம் - அபூதம் - பலவயிற்போலி - ஒருவயிற்போ

வி - பொருணீங்கு - அதிசயம்முதலிய வுவமையலங்காரங்களும்வரும். சமுச்சயவுவமையாவது - அத
ளுனேயன்றித‌னையீதொப்பதிதனாலுமொக்குமென்பது [வ-று] அளவேய்வடிவொப்பதன்றியேப
ச்சை, யிளவேறுநிறத்தாலுமேய்க்குந், துளவே, கலைக்குமரிபோர்துளக்குங்காரவுணர்வீரத், தொ
லைக்குமரி யேறுகைப்பாடோள். எனவரும். புகழுவமையாவது உவமையைப்புகழ்ந் துவமிப்பது
[வ - று] இறையோன்சடைமுடிமேல்வைத்தாளுந்தாங்கும், பிறையோதிருநுதலும்பெற்ற, துறை
புனல்சூழ், பூவலயந்தாங்குமரவின்படம்புரையும், பாவைநின்னல்குற்பரப்பு. எனவரும். நிந்தையு
வமையாவது உவமையைப்பழித் துவமிப்பது [வ-று] மறுப்பயின்றவாண்மதியும் மதிக்குத்தோற்
கு, நிறத்தலருமேநேரொப்பதேனுஞ், சிறப்புடைத்துத், தில்லைப்பெருமானருள்போற்றிருமேனி, மு
ல்லைப்பூங்கோதைமுகம். எனவரும் தெரிதருதேற்றவுவமையாவது ஐயுற்றதனைத்தெரிந் துணிவ
து [வ-று] தாமரைதான்மலருந் தண்மதியால்வீறழியுங், காமர்மதியுங்கறையிலவு, மாமதனுற், பொ
ன்னைமயக்கும்பொறிசுணங்கின்றூர்முகமே, யென்னைமயக்குமிது. எனவரும். இயம்புதல்வேட்கையு
வமையாவது பொருளையின்னதுபோலுமென் றுசொல்லல்வேட்கினறிதன்னுள்ளமென்பது [வ-று].
நன்றுதீதென் றுணரா தென்னுடையநன்னெஞ்சம், பொன்றுதைந்தபொற்சுணங்கிற் பூங்கொடி
யே, மன்றன், மடுத்துதைந்ததாமரைநின் வாண்முகத்துக்கொப்பென், றெடுத்தியம்பல்வேண்டுகி
ன்றதின்று. எனவரும். பலபொருளுவமையாவது ஒருபொருளுக்குப்பலபொருளைக் காட்டுவது
[வ-று] வேலுங்கருவிளையுமென்மானுங்காவியுஞ், சேலும்வவெகிருஞ்செஞ்சரமும், போலுமாற்,
றேமருவியுண்டுசிலைறவண்டிறைகூந்தற், காமருவுபூங்கோதைகண். எனவரும். விகாரவுவமையாவது
உவமையைவிகாரம்பண்ணியுவமிப்பது [வ-று] சீதமதியினொளியுஞ்செழுங்கமலப், போதின்புது
மலர்ச்சியுங்கொண்டு, வேதாத்தன், கைம்மலரால்ன்றிக்கருத்தால்வகுத்தமைத்தான், மொய்ம்மலர்ப்
பூங்கோதைமுகம். எனவரும். மோகவுவமையாவது ஒருபொருண்மேலெழுந்தவேட்கையான் வந்
த வுள்ளமயக்கந்தோன்றவுரைப்பது [வ-று] கயல்போலுமென் றுநின்கண்பழிப்பக்கண்ணில், செ
யல்போற்பிறழுந்திறத்தாற், கயல்புகழ்வ, லாரத்தானேர்மருங்குலந்தரளவான்முறுவ, லீர்த்தாலு
ளவெதும்பும்யான். எனவரும் அபூதவுவமையாவது முன்பில்லாததனையுவமையாக்கி யுரைப்பது
[வ-று] எல்லாக்கமலத் தெழிலுந்திரண்டொன்றில், வில்லேர்புருவத் துவேனெடுங்கண், ணல்லார்,
முகம்போலுமென்னமுறுவலித்தார்வாழு, மகம்போலுமென்றனதிவு. எனவரும். பல்வயிற்போலி
யுவமையாவது ஒருதொடர்மொழிக்கட் பலவுவமைவந்தா லவ்வுவமைதோறுமுவமைச்சொற்புணர்
ப்பது [வ-று] மலர்வாவிபோல்வரான்மாதர்க்மல, மலர்போலுமாதர்வதன, மலர்க்கு, மளிக்குலங்
கள்போலுமளகமதனுட், களிக்குங்கடல்போலுங்கண். எனவரும் ஒருவயிற்போலியாவது ஒருதொட
ர்மொழிக்கட்பலவுவமைவந்தா லவ்வுவமைதோறு முவமைச்சொற்புணரா தொருவுவமைச்சொற்பு
ணர்ப்பது [வ-று] நிழற்கோபமல்கநிறைமலர்ப்பூங்காயாச், சுழற்கலவமேல்விரித்ததோகை, யழற்
குலவுந், தீம்புகையாடுஞ்செறிகுழலார்போலுங்கார், யாம்பிரிந்தார்க்கென்றுமினி. எனவரும். பொ
துநீங்குவமையாவது உவமையைக்கூறிமறுத் துப்பொருடன்னையேயுவமையாக்கியுரைப்பது [வ-று]
திருமருவுந்தண்மதிக்குஞ்செந்தாமரையின், விரைமலர்க்குமேலாந்தகையார், கருநெடுங்கண், மட
னேயிருளகஞ்சூழ்ந்தநின்வாண்முகந், தானேயுவமைதனக்கு. எனவரும். அநியமவுவமையாவது,
நியமித்தவுவமையைநீக்கிப் பிறிதுபொருணேர்வது [வ-று] கவ்வைவிரிதிரைசூழ்காவிரிநீர்நாட்டு,
மௌவல்கமழுங்குழன்மடவாய், செவ்வி, மதுவாய்கவிரோநின்வாய்போல்வதன்றி, யதுபோல்வது
ண்டெனுமாம்! என்வரும் — தண்டியலங்காரம். — அதுவே, விரியேதொகையே யிதரவிதர, மு
றைபெறுசமுச்சயமுண்மைமறுபொருள், புகழ்தனிநிந்தைநியமம்நியம், மையந்தெரிதருதேற்றமி
ன்சொ, லெய்தியவிபரிதமியம்புதல்வேட்கை, பலபொருள்விகாரமோகமபூதம், பலவயிற்போலி
யொருவயிற்போலி, கூடாவுவமைபொதுநீங்குவமை, மாலையென்னும்பாலதாகும். என்றுரன்றியும்
(அவ்வுவமையணிபிறவணியோடு வருமாறு) — தண்டியலங்காரம். — அற்புதஞ்சிலேடையதி
செயம்விரோத, மொப்புமைக்கூட்டந்தற்குறிப்பேற்றம், விலக்கேயேதுவெனவேண்டவும்பெறு
மே. என்றாராகலின் அற்புதவுவமை - சிலேடையுவமை - அதிசெயவுவமை - விரோதவுவமை - ஒப்
புமைக்கூட்டவுவமை - தற்குறிப்பேற்றவுவமை - விலக்குவமை - ஏதுவுவமை என்று வழங்கப்படு
மவைவருமாறு [வ-று] குழையருகுதாழக்குனிபுருவந்தாங்கி, யுழையருயிர்பருகிநீண்ட, விழியுடை
த்தாய், வண்டேறிருளகஞ்சூழவருமதியொன், றண்டேவிவண்முகத்துக்கொப்பு. இதுஅற்புதவு
வமை.— செந்திருவுந்திங்களும் பூவுந்தலைசிறப்பச், சந்தத்தொடையோ டணிதழுவிச், செந்தமிழ்
நூல், கற்றோர்புனையுங்கவிபோன்மனங்கவரு, முற்றாமுலையாண்முகம். இதுசெம்மொழிச்சிலேடை
யுவமை — நளிதடத்தவல்லியின்கண்ணெகிழுஞாலத், தளவுநிறைகடாஞ்சிந்தக், களிறகலுங், கந்த
மலையானிலவுங்கவடசைய, வத்தமலையாநிலம். இது பிரிமொழிச்சிலேடையுவமை. இதனைச்சந்தான
வுவமையென்பர். நின்னுழையேநின்முகங்காண்டுநெடுந்தடந், தன்னுழையேதன்னையுங்காண்குவ,
மென்னு, மிதுவொன்றுமேயன்றி வேற்றுமையொன்றுண்டோ, மதுவொன்றுசெந்தாமரைக்கு.
இது அதிசெயவுவமை செம்மைமைமலருந்திங்களுநும்முகமுந், தம்முட்பகைவிளங்குந்தன்மை
யவே, யெம்முடைய, வைப்பாகுஞ்சென்னி வளம்புகராபோவினியீ, ரொப்பாகுமென்பாரு
இது விரோதவுவமை. விண்ணின்மேற்காவல் புரிந் துறங்கான்விண்ணவர்கோன், மண்ணின்

னவயவேந்தே, தண்ணளியாற், சோரவுணர்குலங்களைப்பூத்தேவர்கோ, னேரார்மேலத்தகையேந், இது ஒப்புமைக்கூட்டவுவமை உண்ணீர்மைதாங்கியுயர்ந்தநெறியொழுகி, வெண்ணீர்மைநீங்கிவிள ங்குமாற், றண்ணளித், தரம்போலுமென்னத் தருகடம்பைமாறன், கரம்போற்கொடைபயில்வான் கார். இது தற்குறிப்பேற்றவுவமை. குழைபொருதநீண்டகுமிழ்மேன்மறியா, வுழைபொருதென் னுள்ளவ்வைரா, மழைபோற், றருநெடுங்கைச்சென்னிதமிழ்நாடனையார், கருநெடுங்கண்போலு ங்காயல். இது விலக்குவமை —— வாளரவின்செம்மணியும் வன்னிமிளம்பாசிலைபு, நாளிளையதிங்க ணைநிலவு, நீளொளியாம், தேனிலவுபூங்கொன்றைத் தேவர்கோன்செஞ்சடைமேல், வானிலவுவிற் போல்வரும். இது எதுவுவமை பிறவுமன்ன. எ-று. (௪)

(௫௱௪௰-சூ.) விரிவெனவிருபொருள்விழித்திறமுருபிவை, தெரிவுறவிரித்துச் செப்புதன்மற் றுந், தொகைபொப்பர்ங்குணந் தொழில்பயன்றொகவே.

* எ-து * விரிவுவமையலங்காரமுந் தொகயுவமையலங்காரமு மாமாறுணர்த்துதும். மேற் கூறியவுவமைப்பொருளு முவமித்தபொருளுங் குணமுதலுவமைக்காரணமூன்று முவமையுருபு மெனவிவைவெல்லாந்தோன்றவரின் விரிவுவமையெனவுமற்றவைதோன்றி யுவமைக்காரணமூன்று ந்தோன்றுதளைப்பி னதுதொகையுவமையெனவும்வழங்கும். [வ-று] பவளம்போலுஞ்செவ்வா யென்பதிதனுள் வாயேயுவமித்தபொருளும் பவளமேயுவமைப்பொருளுஞ் செம்மையேயுவமைக் காரணமாங்குணப்பொருளும்போலுமே யிடைச்சொல்லாகியவுவமை யுருபுமெனக் கண்டுணர்க. —வெண்பா.—பால்போலுமின்சொற் பவளம்போற்செந்துவர்வாய்ச், சேல்போற்பிறழுந்திரு நெடுங்கண், மேலாம், புயல்போற்கொடைக்கைப்புனலுடன்கொல்லி, யயல்போலும்வாழ்வதவர். என்பதிதனுட்குணத்தாலுந் தொழிலாலும்பயனாலும் விரிவுவமைவந்தவாறுகாண்க. அன்றியும் தா மரைபோன்முகத் துத்தண்டரளம் போன்முறுவற், காமருவுவேய்ப்புரைதோட்காரிகையீர், தேமருவு, பூங்குழலின்வாசப்பொலைறசுமந்துநொந்தாற், பாங்குழவுந்தென்றற்புரிசி. எ-ம். பவளம்போலு ம்வாய் - சிங்கம்போலுஞ்சேவகன் - முகில்போலுங்கை - இவை குணத்தொழிற்பயனு வமைக்கார ணமூன்று முறையேதொக்கு நின்றவாறுகாண்க. இவைதொகையுவமை. எ-று (௫)

(௫௱௪௧-சூ.) இதரேதரமென்ப விருபொருண்மாறலே.

* எ-து * இதரேதரவுவமையலங்கார மாமாறுணர்த்துதும். உவமைப்பொருளு முவமித்த பொருளுந் தம்முண்மாறிப்பொருளே யொருகாலுவமையாகவுமுவமையொருகாற்பொருளேயாக வம் வேறுவேறுய்த்தொடர்ந்து வருவதிதரேதரவுவமையெனப்படும். என்னை. இதரமெனினும்வே ற்றுமையெனினுமொக்கும். [வ-று] களிக்குங்கயல்போலநின்கண்ணின்கண்போற், களிக்குங்கயலு ங்கனிவாய்த், தளிர்க்கொடியே, தாமரைபோன்மலருநின்முகநின்முகம்போற், றாமரையுஞ்செவ்வி தரும். எ-ம் —வெண்பா.—தளிர்பெற்றுவ்விகிய தன்சுனைநீல, மளிபெற்றார்கண்போல்வரு, மிளி பெற்ற, நல்லார்திருமுகத்திறைத்தளிபெற்றக்’கல்லாரம்போன்மலருங்கண். எ-ம்பிறவுமன்ன (௬)

(௫௱௪௨-சூ.) விபரீதபொருளாவிளம்பியவுவமையே.

* எ-து * விபரீதவுவமையலங்கார மாமாறுணர்த்துதும் காட்டவெடுத்தபொருளை யுவமைப் பொருட்கோருவமையாக மாறுபாடாவுரைப்பது விபரீதவுவமையெனப்படும் [வ-று.] திருமுகம் போன்மலருஞ்செய்யகமலங், கருநெடுங்கண்போலுங்கயல். எ-ம் —வெண்பா.—தாயேநின்னுன் னம்போற்சந்திரனேமுற்றியபின், மேயாநின்றன்னுதல்போற்சீர்த்ததுவே, நோயாக, வீரொளிரிற் றேற்றாதேங்கிவரங்கேட்டுன், சீரடியைப்பூண்டிறைஞ்சுஞ்சேர்ந்து. எ-ம்பிறவுமன்ன எ-று (௭)

(௫௱௪௩-சூ.) மறுபொருளாம்பொருள்வந்தொப்புரைத்தலே.

* எ-து * மறுபொருளுவமையலங்கார மாமாறுணர்த்துதும் பொருளைக்கூறிய பின்னதற்கு வமைகூறுவது மறுபொருளுவமையெனப்படும். [வ-று.] வெண்பா. அன்னையாயெவ்வுயிர்க்குமா தரவாயன்பருளு, நின்னையாரொப்பார்நிலவேந்த, ரன்னதே, பாரிடையேதோன்றிப் பயன்றருத ற்கில்லையாஞ், சூரியனேபோலுஞ்சுடர். எ-ம்பிறவுமன்ன. எ-று (௮)

(௫௱௪௪-சூ.) நியமமாம்பிறிதிலையேகாரம்வந், தியனிகரொன்றுரைத்தேனையநீக்கலே.

* எ-து * நியமவுவமையலங்கார மாமாறுணர்த்துதும். எடுத்தபொருளுக் கின்னதுவமைய ன்றி மற்றொன்றில்லையென்றுகாட்டிக் கூறியவுவமைப்பொருண்மேற்பிறிதிலையேகாரந்தந்து முடி ப்பது நியமவுவமையெனப்படும். என்னை நியமமெனினுமிணையின்மையெனினுமொக்கும். [வ-று]. செங்கமலவாயொழுகுந்தேனேயுன்சொற்கிணையாம். எ-ம சுடுழிழ்த்தீயே நிகருஞ்சொற்சொன்று ன். எ-ம் —வெண்பா.—தேன்மலரோவாடுமென்செங்கதிரோன்காயுமெனப், பான்மதியேதேயு மெனப்பாங்கினையர, நான்மருவுந், தாயேதிருக்காவலூராசேதாரணிமே, னீயேநினக்குநிகர். என வே நினக்குநிகரில்லையென்பது கருத்து இதனைப்பொதுநீங்குவமை யென்மருமுளரெனக்கொ ள்க. எ-று. (௯)

(௫௱௪௫-சூ.) ஐயங்கொண்டனவிருபொருளறைத, லையவுவமையாகுமென்ப.

* எ-து * ஐயவுவமை யலங்கார மாமாறுணர்த்துதும். உவமையோபொருளோ வென்றுளத் தையந்தோன்றினதாகக்கூறுவதையவுவமையெனப்படும். [வ-று.] தாதளவிவண்டு தடுமாறுந்தா மரைகொன், மாதர்விழியுலவும்வான்முகங்கொ, லேதென், றிருபாற்கவாவுற்றிடைபூசலாடு, மொரு.

பாற்படாதென்றுளம். எ-ம் —வெண்பா— வெஞ்சினவேநின்றுலவும் விண்முகிலோசெப்பொலை யா, லெஞ்சினபோரீற்றுலவுங்குஞ்சரமோ, நெஞ்சி, லொருபாற்குற்றேரு வுளநேதேற்றினெனின், டிருபார்நருமோட்னன்றென்று. எ-ம். பிறவுமன்ன. எ-று. (௰)

(௩௱௩௬-ரு.) இன்சொல்லுரிமைபாமிணையிவையென்ற, பின்சொல்லியபொருட் பெற்றிமியு ணர்த்தலே.

* எ-து * இன்சொல்லுவமையலங்காரமாமாறுணர்த்துதும். ஒன்றையுவமித்தபின்பு பொரு ளின்சிறப்பெலா முவமைக்கில்லையென்றுகாட்டுவ தின்சொலலுவமையெனப்படும். [வ-று] மான் விழிதாங்குமட்டக்கொடியேநின்வதன, மான்முழுதுந்தாங்கிவருமதிய, மாறுவு, முற்றிழைதல்லாய் முகமொப்பதன்றியே, மற்றுயர்ச்சியுண்டோமதிக்கு. எ-ம். —வெண்பா.—குழுமேவும்பாற்கதிருத் தோன்மிமறுத்தொன்றுக், காழுருவுந்தேயா துகன்னித்தாய், வாழுந், தளரவாறெண்முகங்கண் டேங்கிற்றெதாடகீழ், வளராவர்மறெனேமைதி. எ-ம். பிறவுமன்ன. எ-று. (௰௧)

(௩௱௩௭-ரு.) கூடாவுவமையேகூறியநிகர்க்கண், ணூடாதவைபொருட்குரியனவெனலே.

* எ-து * கூடாவுவமையலங்காரமாமாறுணர்த்துதும உவமைப்பொருட்கடகூடாதவைதானெ டுத்தபொருட்கட்கூடுமென்றுகாட்டல் கூடாவுவமையெனப்படும். [வ-று] சுடுமதிபோலுன்மு கம இருபொழுதும்வாய்மலருந் தாமரையேநின்முகம். — விருத்தம்.—மருட்கொள்ளாவுவாக் கொள்ளாமணிகடல்போல்கன்மனமே, யிருட்சொள்ளாநிழற்கொள்ளுமினர்ப்பொழில்போலரு ந்தையே, வெருட்கொள்ளாவிடிப்பாய்ப்பெய்வியன்முகிற்போற்லகக்கொடையே, கருட்கொள்ளா நிழற்சோலைக் காவணவூர்த்தாயியல்பே. எ-ம். சந்தனத்திற்செந்தழலுந் தண்மதியிலவெவ்விடமும் வந்தனவேபோலுமானின்மாற்றம், பைந்தொடியாய், வாவிக்கமலமலர்முகங்கண்டேககறுவா, ரா விககிவைபோவரன். எ-ம். பிறவுமன்ன. எ-று. (௰௨)

(௩௱௩௮-ரு.) மாலையுவமையாமருவியபலதிகர், மாலையாக்கோத்தபின்வனபொருளியம்பலே.

* எ-து * மாலையுவமையலங்காரமாமாறுணர்த்துதும். பன்மாலைபோ லொருபொருட்குப் பலபலவுவமைதொடர்ந்து கூறிக்கடையிற்பொருளையுரைப்பதுமாலையுவமையெனப்படும [வ-று] —தேம்பாவணி.—நிறைதவிர்ந்துணர்ந்தகாமநெறியிற்கைப்பொருளேபோன்று, முறைதவிர்ந்த டைசிர் போன்றுமுனிகடம்முனிவுபோன்றும், பொறைதவிர்ந்திழிந்தீண்டோடும் புனலினையெதிர் கொண்டாங்கத், துறைதவிர்ந்திடத்திடப்பேட்கித்துளித்தந்தன்முலைசேர்ந்தார். எனவரும் நீரொழுங் குமுழிபோன்றுநெடியதேர்நேமிபோன்றுங், காரொழுமின்னுப்போன்றுங் கடலெழுந்திரைகள் போன்றும், பாரொழுஞ்செல்வத்திலைப் பதியுமோர்நிலையுமென்றூர், சீரொழுஞானத்தீர்க்குத்திரை திரண்டலைவதுண்டோ. எ-ம் மலயத்துமாதவனேபோன்றுமவன்பா, லலைகடலேபோன்றுமதனுட, குலவு, நிலவலையமேபோன்றுநெறியன்பானிற்குஞ், சிலைகெழுமேதாள்வேந்தர்திரு. பிறவுமன்ன. (௰௩)

(௩௱௩௯-ரு.) உண்மையுவமையா முவமைமறுத்தென, நுண்மையிற்பொருடிற நுவன்று விளக்கலே.

* எ-து * உண்மையுவமையலங்காரமாமாறுணர்த்துதும். உவமைமறுத்துப்பொருளைக்கூறுவ துண்மையுவமையெனப்படும். [வ-று] தாமரையன்றுமுகம வண்டல்லகருங்கண் எ-ம். —வெண் பா. — அஞ்சன்மின்மாங்குயிலகாளங்கண் வாளெழுந்திருளு, பஞ்சன்மேமஞ்சிடிற்தவார்பன்றே, பெஞ்சாது, காய்ந்தெழுந்தம்பூம்புகையாய்த் காவணவூராளரசாள், வேந்தெழுந்தேரோடுமவி ளைவு. எ-ம. தாமரையன்றுமுகமேயீதிங்கிவையுங், காமருவண்டலகருநெடுங்கண், டேமருவு, வல் லியினல்லளிவ்வெளன்மனங்கவரு, மல்லிமலர்க்கோதையாள். பிறவுமன்ன. எ-று. (௰௪)

(௩௱௪௰-ரு.) உவமைவழுவென்பவுரியபான்மாற றவன்மிகலுயர்தாழ்தலெவ்வறைந்தே.

* எ-து * உவமைவழுவலங்காரமாமாறுணர்த்துதும் ஒன்றனையுவமித்துரைக்குங்காலை வழுவு றுமைவேண்டியவற்றை யறிந்துகாத்தல்கல்விவல்லோர்கடன் அவையாவன ஆண்பான் முதற்பால் நூற்றம்முண்மாறிவருதலும் பொருட்கண்ணுள்ளதின்குறைநீத தும்மிக்கது முவமைக்கண்வருதலு முயர்ந்தவ்வமைமயோ டிழிந்தபொருளுவமித்தலுமிழிந்தவுவமையோ டுயர்ந்தபொருளுவமித்தலு மென்றிவ்வைந்துமோரோவிடத்தோர் சிறப்புக்காட்டுதற்கொழியவழுவாம். [வ-று] —வெண்பா —மன்னவர்க்குநாய்போல்வனப்புடையாவாள்வயவர், மின்மினிவெஞ்சுடர்போல்விளங்கு, மன் னட், பெடைபோலுஞ்சந்திரன்பைந்தடங்கள்போலு, மிடைமாசொன்றில்லாவிசும்பு. எனவிதனு ள்வீரரைநாய்போலவனப்புடையாரென்றதிழிந்தவுவமையோ டுயர்ந்தபொருளுவமித்ததும் வெஞ் சுடர்போலமின்மினிவிளங்குமென்றதுயர்ந்த வுவமையோடிழிந்தபொருளு வமித்ததுஞ் சந்திர னுக்குவமையாகப் பேடையன்னம்வைத்ததாண்பாற்குப்பெண்பா லுவமித்ததுமொன்றும் விசும் பிற்குப் பயனில்லாமற்பன்மையிற்றடங்களென்ற தொருமைக்குப்பன்மையுவமித்தது மென்றிவை யெல்லாங்குற்றமாயின —வெண்பா.—நீலப்பருவக்குவளைவிழிமதர்ப்ப, மாலைக்குழல்சூழ்ந்தநின்வ தனம், போலும், கயல்பாயவாசங்கவருங்களிவண், டயல்பாயுமம்போருகம. என்பதிதனுட்பருவ மெனும்பொருட்குவமைக்கண் ணொன்றில்லாமையா லுவமைகுறைந்துகுற்றமாயிற்று —வெண்பா. —நாட்டந்தடுமாறச்செவ்வாய்நலந்திகழத், தீட்டரியபாவைதிருமுகங், காட்டுமாற், கெண்டைமீ தாடநறுஞ்செமிதழ்கவர, வண்டிருஞ்செந்தாமரை. என்பதிதனுண் முகத்திற்குத்தாமரை விழிக்கு

க்கினன்டைவாய்க்குச்செவ்விதழுவமையாகி மீண்டுவமைக்கண்வந்தவன்மேற்குப் பொருட்கண்ணென்றிலலாமையாலுவமைக்குக்குற்றமாயிற்று. பிறவுமன்ன. ஆயினும்மாமாவிடத்திலவை சிறப்புக்காட்ட வழுவேயின்றிப்பயன்படவருமெனப்பெறுமெனக்கொள்க. எ-று (௩௫)

(சூசக-ஞ) உருவகமென்பவுவமைமேவறு, பொருள்வேறின்றிப்புணர்த்தொடுத்ததுவே.

* எ-து * உருவகவலங்காரமாமாறுணர்த்துதும் உவமையும் பொருளும் வேறுபடாமற் குணத்தொழிற்பயனென்ன முக்காரணத் தோன்றாமலு முவமையுருபில்லாமலு மொன்றுபடவருமுவமையுருவகமெனப்படுமே இவ்வுருவகமே பதினைந்துவகைப்படும் —தண்டியலங்காரம்.— தொகையேவிரியேதொகைவிரியெனாஅ, இயைபியைபின்மையியனில்லெனாஅ, சிறப்பேவிருப்பஞ்சமாதானமெனாஅ, வுருவகமேகமேகாங்கமெனாஅ, முற்றவயவமவயவியெனாஅ, சொற்றவைம்மூன்றாமாங்கதன்விரியே. என்றாராகலின் - தொகையுருவகமாவது மாட்டேற்றுச் சொற்றொகுத்துக்கூறுவது [வ-று] அங்கைமலருமடித்தளிருங்கண்வண்டும், கொங்கைமுகிழுங்குழற்காருந், தங்கியதோர், மாதர்க்கொடியுளதாலன்பாவதற்கெழுந்த, காதற்குளதோகனி. எனவரும் விரியுருவகமாவது - அச்சொல்விரிந்துநிற்பது [வ-று] கொங்கைமுகையாக மென்மருங்குல்கொம்பாக, வங்கைமலராவடித்தளிரா, தங்க, ளாளிநின்றமாலணங்காமெனக்கு, வெளிநின்றவேனிற்றிரு எனவரும் தொகைவிரியுருவகமாவது - அச்சொற்றொக்கும்விரிந்துநிற்பது [வ-று] வையந்தகழியா மாகடனெய்யாக, வெய்யகதிரோன்விளக்காகச், செய்ய, சுடராழியானடிக்கேசூட்டினேன்சொன்மாலை, யிடராழிநீங்குகவேயென்று. எனவரும் இயைபுருவகமாவது பலபொருளையுருவகஞ்செய்யுங்காற் றம்முள்ளியைபுடைத்தாகவுருவகஞ்செய்வது [வ-று] செவ்வாய்த்தளிருநகைமுகிழுங்கண்மலரு, மைவாரளகமதுகரமுஞ், செவ்வி, யுடைத்தாந்திருமுகமென்னுள்ளத்துவைத்தார், துடைத்தாரேயன்றே துயர். எனவரும் இயைபின்மையுருவகமாவது - பலபொருளுந்தம்முளியையாமலுருவகஞ்செய்வது [வ-று] தேனக்கலர்கொன்றைப் பொன்னுகசெஞ்சடையே, கூன்றபவளக்கொடியாகத்தான், மழையாகக்கொண்டுமதியாகத்தோன்றும், புழைபார்தடக்கைப்பொருப்பு. எனவரும் இயல்புருவகமாவது ஒன்றனங்கம்பலவற்றையுமுருவித்துமுருவியாதுமொன்றைச் சங்கியையவருவித்துரைப்பது [வ-று] செவ்வாய்நகையரும்பச்செங்கைத்தளிர்விளங்க, மைவரிநெடுங்கண்மதர்த்துலவச், செவ்வி, நறவலருஞ்சோலைவாய்நின்றதேநண்பா, குறவர்மடமகளாங்கொம்பு. எனவரும் சிறப்புருவகமாவது ஒருபொருளையுவமித்தவிடத்துச்சிறந்தவடைகளையுருவித்தவற்றன்னையுருவகமாகவுரைப்பது [வ-று.] வாரிடலை நீமதினிநான்முகன்மீகாமச், சார்தியாயுசக்கதொடுத்த, வரிதிருந்தாள், கூமபாகவெப்பொருளுங்கொண்டுபெருநாவா, யாம்பொலிவதுறுமின்றாலின்று எனவரும் விருப்பவுருவகமாவது - ஒருபொருட்கூடாததன்மை பலவுங்கூட்டியுருவகஞ்செய்வது [வ-று.] தண்மதிக்குத்தோலாது தாழ்தடத்துவைகாது, மூண்மருவுந்தாண்மேன்முகிழாது, நண்ணி, யிரவுபோதுஞ்செவ்வியலராய்மலரு, மருவைவதனம்புயம். எனவரும் சமாதானவுருவகமாவது - ஒருபொருளைன்றாகவுவமித்துவைத்ததனைத் தீங்குதருவதாகக்கூறியதற்கிசைந்த அருமின்றதன்றென்றதற்குப் பிறிதோர்காரணங்கூறுவது. [வ-று.] கைகாந்தள்வாய்க்குமுதங் கண்ணெய்தலனாரிகைமீர், மெய்க்காரமயிலகொங்கைமென்கோங்க, மிவ்வனைத்தும், வன்மைசேர்ந்தாலிவருத்துவது மாதவமொன், றின்மையேயன்றோவெனக்கு. எனவரும் உருவகவுருவகமாவது - ஒன்றனையுருவகஞ்செய்ததனையேபோலும் பிறிதொன்றாகவுருவகஞ்செய்வது [வ-று.] கன்னற்றன்கொங்கைகளுவடாங்கடாக்களிற்றைப், பொன்னெடுந்தோடருன்பூம்புனைகத்தா, மன்னவநின், னகத்தடந்தேர்வகமாகயானணைப்பல, சோகத்தருவேளரறவன். எனவரும். ஏகாங்கவுருவகமாவது - ஒருபொருள்தன்கமபலவற்றுள்ளோரங்கமே யுருவகஞ்செய்து ஒழிந்தவங்கமேவாராமற்கூறுவது. [வ-று] காதலனைத்தாவென்றலாவுங்கருநெடுங்க, ணேதிலவர்பாலென்னுமின்மொழித்தேன், மாதர், மருண்மடமனமகிழ்ச்சி வாழ்முகத்தில்வந்த, விருண்டிருமெனசெய்க்காவியான். எனவரும். அநேகாங்கவுருவகமாவது - ஒன்றனங்கமபலவற்றையுருவகஞ்செய்துரைப்பது [வ-று] கைத்தளிராற்கொங்கை முகிழ்தாங்கிக்கண்மணன்று, மைத்தடந்தேர்சன்றுமத்தர்மனங்கலங்க, வைத்ததோர் மின்னுளதாமேகஞ்சையுளதாமற்றதூஉ, மென்னுளதாநண்பாவினி. எனவரும். முற்றுருவகமாவது - அவயவமவ்வயவிகளையேற்றவிடத்தொருங்கேற்றமுற்றவுருவகஞ்செய்வது [வ-று.] விரிகேசிவிவன்னமென்னகையேதாது, மொழிமேயமுருந்துவாந்தேறல், பொழிகின்ற, தேமருவுகோதைத் தெரிவைதிருமுகமே, தாமரையென்னுள்ளத்தடத்து. எனவரும். அவயவவுருவகமாவது - அவயவமேயுருவித்தவயவியேவாராமற்கூறுவது. [வ-று.] புருவச்சிலைகுனித்துக்கண்ணம்பாலுள்ள, முருவத்தொடுத்தாரொருவரருவி, பொருங்கடற்சிலம்பிற்புனைபலதுற்றோர்மேன், மருங்குற்கொடி நடங்கலந்து. எனவரும் அவயவியுருவகமாவது - அவயவியையுருவகஞ்செய்வது. [வ-று.] வார்புருவக்கூத்தாடிவாய்மழலைச்சார்ந்தசைய, வேர்மருவச்சேர்ந்துவிழமதர்ப்ப, லூர, லாகுந்தெரிவை வதனம்புயத்திற், களிக்குந்நம்மடைமியான்கண். எனவரும அன்றியும்.

(அவ்வுருவகவலங்காரங்களாடு பிறவலங்காரங்கூடிவருமாறு.) —தண்டியலங்காரம்.— உவமையேதுவேறுகுறைமிக்கே, யபநிதிசிலேடையென், றவற்றொடும்வருமே. என்றாராகலின் உவமவுருவகமாவது - [வ-று.] மதிமகிழ்ந்த்தமாதர்வதனமதிய முதையமதியேயொக்கு மதிதளர்வென்

வெம்மைதணியுமதராகமேமிகுக்குஞ்' செம்மையொளியாற்றிகழ்ந்து. எனவரும். எ-து வுருவக
மாவது. [வ-று.] மாற்றறத்தாற்கிள்ளைநடையான்மடவன்னந்' தோற்றறத்தாற்றண்ணென் சுடர்விளக்
குப்' போற்று' மியலான்மயிலெம்மையின்னீர்மையாக்கு' மயலார்மதர்நெடுங்கண்ணாள். எனவரு
ம். வேற்றுமையுருவகமாவது [வ-று.] வையம்புரக்குமனு மன்னவநின்கைக்காருந்' பொய்யின்றி
வானிற்பொழிகாருங், கையா' மிருகார்க்குமில்லைப்பருவமிடிக்கு' மொருகார்ப் பருவமுடைத்து.
எனவரும் விலக்குருவகமாவது [வ-று] வல்விவதனமதிக்குமதித்தன்மை' மில்லையுளதேலிவின்றி'
யெல்லை' விளக்குமொளிவளர்த்துவெம்மையானெம்மைத்' துளக்குமியல்புடைத்தோசொல், என
வரும். அவநுதியுருவகமாவது [வ-று.] பொங்களகமல்லபுயமேலிவையிவையுங், கொய்சையிணை
யல்லகோங்கரும்பு, மங்கைநின், மையரிக்கண்ணல்லமதர்வண்டிவையிவையுங், கையல்காந்தண்ம
லர், எனவரும். சிலேடையுருவகமாவது [வ-று] உண்ணெகிழ்ந்தசெவ்வித்தாய்ப் பொற்றோடொ
ளிவளரத், தண்ணளிகுழின்பத்தரமலர்ந்து, கண்ணெகிழ்ந்து, காதல்களையிறப்பவாவிடவாது' மா
தர்வதனும்புயம். எனவரும்: அன்றியும்
(அவ்வுருவகவுவமையென்னுமிரண்டிற்கும் புறனடைவருமாறு.) — தண்டியலங்காரம். — உரு
வகவுவமையெனவிருதிறத்தவு, நிரம்பவுணர்த்தும்வரம்புதமக்கின்மையிற், கூறினநெறியில்வேறு
படவருபவை, தேறினர்கோடறெள்ளியோர்கடனே. என்றாராகலின். [வ-று] வில்லேருழவர்பகை
கொளினுங்கொள்ளற்க, சொல்லேருழவர்பகை. எனவரும் எரியிரண்டுசிறகாவெயில்வயிறாக், காரு
டையபீலிகடிகாவா, நீர்வண்ண, னத்தியூர்வாயாவணிமயிலேபோன்றமேத, பொற்றோன்கச்சிப்
பொலிவு, எனவரும் இவையே துவுருவகம்-மலையிற்பிறவாமடமஞ்ஞைவாரி, யலையிற்பிறவாவமிர்தம்,
விலையிட், டளவாதநித்திலமாராததேறல், வளவாண்மதர்நெடுங்கண்மான், எ-ம் மழலைவாய்நவ்விம
தர்நெடுங்கண்மஞ்ஞை, குழலின்புறமலிந்தகொம்பர், சுருளளகந், தாங்கியவன்னந்தடங்கொங்கை
யார்மாதந், தேங்கொள்கமலத்திரு. எ-ம் இவைசிறப்புருவகம். மன்றற்குழலாருயிர்மேன்மதன்கட்
வுந், தென்றற்கிரிதடிக்குந்திண்கணைய, மன்றவனைக், கங்குற்கடலின்கரையேற்றுநீள்புணையாம், பொ
ங்குநீர்நாடன்புயம். இது அற்புதவுருவகம் - நல்லார்கட்பட்டவறுமையினின்னாதே, கல்லார்கட்பட்
டதிரு, இதுதேற்றவுவமை அடிநோக்கினாழ்கடல்வண்ணனவன்றன், படிநோக்கிற்பைங்கொன்றை
த்தாரோன், முடிநோக்கிற், றேர்வளவனுதறெளிந்தேனவன்முடிமே, லாரலங்கலோங்கிய துகண்டு
இதுபலவயிற்போலி முத்துக்கோத்தன்னமுறுவன்முறுவலே, யொத்தரும்புமுல்லைக்கொடிமருங்
குன், மற்றதன்மேன், மின்னளிக்குங்கார்போன்ம்விரைக்கூந்தன்மெல்லியலி, தண்ணளிக்குமுண
டோதரம், இதுமெய்யுவமை. பிறவுமன்ன. எ-று. (௰௬)
(௱௪௨-சூ.) வேற்றுப்பொருள்வைப்பே விளங்கினதுதொடங்கி, யீற்றினுதலிய வேற்றியு
ணாத்தலே.
* எ-து * வேற்றுப்பொருள்வைப்பலங்காரமாமாறுணர்த்துதும். எவருமறிந்த வொன்றைக்
கூறியபின்ன ரெடுத்ததன்பொருளத்தன்மைத்தாகுமெனக்கூறுவது வேற்றுப்பொருள்வைப்பென
ப்படும். இதுவு முவமைவிகற்பத்துளடங்கவும்பெறும். [வ-று] நெட்டொளிவேங்கையா னிசிப்ப
டநீத்தீங்குயிராய்க், கட்டொளியைக்காட்டுங்கதிர்வேந்தன், பட்டொளிநீ, ராங்கொழியக்கண்டன்
பின் னுசைபுட்கொள்வாரோவீங், கோங்கழியாச்செல்வமுண்டென்று. எ-ம் வெய்யகுரோன்றிவெ
ஞ்சினவேறுட்கொளினும், பெய்யுமழைமுகிலைப்பேணுவரால், வையத், திருள்பொழியுங்குற்றம்
பலவெனினும்யார்க்கும், பொருள்பொழிவார்மேற்றேபுகழ். எனவரும். அன்றியும்
(அவ்வலங்காரவிரிவுவருமாறு) — தண்டியலங்காரம். — முழுவதூஉஞ்சேறலொருவழிச்சேற
ன், முரணிற்றோன்றல்சிலேடையின்முடித்தல், கூடாவியற்கைகூடுமியற்கை, யிருமைவிபரிதமெனவ
தனியல்பே. என்றாராகலின் முழுவதுஞ்சேறலாவது ஒருதிறமுரைத்தா லத்திற மெல்லாவற்றுமே
முற்றச்செல்வதாப்பது [வ-று] புறந்தந்திருளிரியப்பொன்னேமியுய்த்துச், சிறந்தவொளி
வளர்க்குந்தேரோன், மறந்தாற், புறவாழிசூழ்ந்தபுவனத்தேதோன்றி, யிறவா துவாழ்கின்றார்யார்.
எனவரும். ஒருவழிச்சேறலாவது ஒருதிறமுரைத்தா லத்திற மெல்லாவற்றுமேனு முற்றச்செல்லா
து சிலவற்றின்மேலேசென்றொழிவது. [வ-று] எண்ணும்பயனாக்காதியார்க்குமவளாயாது, மண்
ணுலகில்வாமனருள்வார்க்குந், தண்ணுறந்தேன், புத்தளிக்குந்தாராய்புகழாளர்க்கெவ்வுயிருங், கா
த்தளிக்கையன்றேகடன். எனவரும். முரணிற்றோன்றலாவது தம்முன் மாறுபட்டிருக்கு மியல்பு
டைத்தாய்ப்பொருள்வைத்தல் [வ-று] வெய்யகுரற்றோன்றி வெஞ்சினவேறுட்கொளினும், பெய்
புமழைமுகிலைப்பேணுவரால், வையத், திருள்பொழியுங்குற்றம் பலவெனினும்யார்க்கும், பொரு
ள்பொழிவார்மேற்றேபுகழ். எனவரும். சிலேடையின்முடித்தலாவது முன்னர்வைத்த பொருளையு
ம்பின்னதனையு மொருசொற்றொடரால்சொல்லுவது. [வ-று] எற்றேநொடிமுல்லைதன்னைவளர்த்
தெடுத்த, முற்றிழையாள்வாடமுறுவலிக்கு, முற்று, முடியாப்பரவைமுழங்குலகிற்றேதன்றுங், கொ
டியார்க்குமுண்டோகுணம். எனவரும். கூடாவியற்கையாவது கூடாததனைக் கூடுவதாகக்கூறுவது
[வ-று] ஆவடமுமதிசேதசந்தனமு, மீர்நிலவுமெரிவிரியும், பாரிற், றதிவகையான்மேம்படட்டு
ப்புாவுந்தத்தம், விதிவகையான்வேறுபடும். எனவரும். கூடுமியற்கையாவது கூடுமதனைக்கூடுவதா
கக்கூறுவது [வ-று] பொய்புனையாதன்பாபுனைதேர்நெறிநோக்கிக், கைவளைசோர்ந்தாவிகனாகு

வார், மெய்வெதும்பப், பூந்தகைப்புஞ்செங்காந்தள்பொங்கொலிநீர்ஞாலத்துத், தீத்தகையார்க்கே தோசெயல். எனவரும். இருமையியற்கையாவது கூடாத்தனையுங் கூட்டுவத்தனையுங் கூடுவதாகக் கூறுவது. [வ-று] கோவலர்வாய்வேய்ங்குழலேயன்றிக்குளாகடலுங், கூவித்தமியோரைக்கொல்லு மாற், பாவாய், பெரியோரும்பேணாதுசெய்வரோபோலுஞ், சிறியோர்பிறர்க்கியற்றுந்தீங்கு. என வரும். விபரீதமாவது விபரீதப்படச்சொல்லுவது [வ-று] தலைமிழந்தானெவ்வுயிருந் தந்தான்பி தாவைக், கொலைபுரிந்தான்குற்றங்கடிந்தா, னுலகிற், றனிமுதன்மைபூண்டுயர்ந்தோர் வேண்டுவரோ நற்பா, விளையும்விபரீதமாம். எனவரும் எ-று. (௫௭)

(நாசஙு-சூ.) வேற்றுமையென்பமுன்னூற்றியவிருபொருள், சாற்றியவுவமையில்வேற்றுமை ப்படுத்தலே.

* எ-து * வேற்றுமையலங்காரமாமாறுணர்த்துதும். இருபொருளைத்தம்முள் ளுவமித்துப் பின்னரவற்றுள் வேற்றுமைதோன்றக்கூறுதல் வேற்றுமையலங்காரமெனப்படும். ஆகையிலிதுவுமு வமைவிகற்பத்துளடங்கும். [வ-று] மீனணியும்பாற்கடலும், வெண்மதிக்குமம்மதியைத், தானணி யுநாய்க்குஞ்சரல்பூண்டு, வானணியுந், திங்கட்குண்டல்லாதோர் தேய்வுமிருண்மறுவு, மெங்கட்கு ண்டாளரசாட்சில். எ-ம் அன்றியும் — தண்டியலங்காரம். — கூற்றினுங்குறிப்பினுமொப்புடையி ருபொருள், வேற்றுமைபடவரின்வேற்றுமையதுவே என்றாராதலின் [வ-று] அனைத்துலகுஞ்சூழ் போயரும்பொருள்கைக்கொண், டினைத்தளவைத்தோற்றகரிதாம், பனிக்கடன், மன்னவநின்சே னைபோன் மற்றதுநீர்வடிவிற், றென்னுமிதுவன்றேவேறு. எ-து ஒருபொருள்-சென்றுசெவியளக் குஞ்செம்மையவாய்ச்சிந்தைபுளே, நின்றளவியின்பநிறைபவற்று, ளொன்று, மணிவருங்கூந்தலா ர்மாதர்நோக்கொன்று, மணிவருங்கூந்தறன்வாக்கு. எ-து இருபொருள்-மலிதேரான்கச்சியு மா கடலுந்தம்மு, ளொலியும்பெருமையுமொக்கு, மலிதேரான், கச்சிபடுவகடல்படாகச்சி, கடல்படு வதெல்லாம்படும். எ-து கூறலு-கார்க்குலமும்பாய்திரையுங்காட்டுங்கடல்படையும், போர்க்களிறு ம்பாய்மாவும்பொங்குமா, லேற்ற, கலமுடைத்துமுந்நீர் கதிராழித்தீண்டேர், பலவுடைத்துவேந் தன்படை. எ-து சமம்-பதுமங்களிக்குமளியுடைத்துப்பாவை' வதன்மதர்நோக்குடைத்துப்' புதை யிருள்கு' மூப்போதியல்பழியு மம்போருகமவதன' மெப்போதுநீங்காதியல்பு. எ-து உயர்ச்சி இவை குறிப்பு. அன்றியும்

(அவ்வேற்றுமையலங்காரம் பிறவலங்காரங்களோடும்வருமாறு)— தண்டியலங்காரம் — அது வே, குணம்பொருள்சாதிதொழிலொடுபுணரும். என்றாராகலின் [ வ - று. ] சுற்றுவிற்காமனுஞ் சோழர்பெருமானுங், கொற்றப்போர்க்கிள்ளியுங்கோளொவ்வார்' பொற்றெரடி' யாழியுடையான் மகன்மாரன்மாயனே' கோழியுடையான்மகன். எ-து குணவேற்றுமை. ஓங்கலிடைவந்துயர்ந்தோர் தொழவிளங்கி' யேங்கொலிநீர்ஞாலத்திருள்கற்று' மாங்கவற்றுள்' மின்னேர்தனியாழிவெங்கதிரொ ன்றேனையது' தன்னேரிலாததமிழ். எ-து பொருள்வேற்றுமை. வெங்கதிர்க்குஞ்செந்தீவிரிசுடர் க்குநீங்காது' பொங்குமதியொளிக்கும்போகாது' தங்கும்' வளமையான்வந்தநெறிமயக்கமாந்தர் க்' இளமையான்வந்தவிருள். எ-து சாதிவேற்றுமை. புனனாடர்கோமானும்பூந்துழாய்மாலும்' வி னைவகையான்வேறுபடுவர்' புனனாட' னேற்றெறிந்துமாற்றலர்பாலெய்தியபார்மாயவனு' மேற்றி ரந்துகொண்டமையாலின்று. எ-து தொழில்வேற்றுமை. எ-று. (௫௮)

(நாசச-சூ.) ஒட்டெனத்தன்பொருளுரையாதுவமை' சுட்டலிலப்பொருடோன்றவியம்பலே.

* எ-து * ஒட்டலங்காரமாமாறுணர்த்துதும். தான் கருதியபொருளை வெளிப்படுத்துதற் கதனைச்சொல்லாததற்கு த்தக்க மற்றோருவமைப்பொருளைச்சொல்வதே யொட்டலங்காரமெனப்ப டும். ஆகையிலிதுவு முவமைவிகற்பத்துளடங்கும் [வ-று] ஒண்ணிலவுநீர்மைத்தா யோயாப்பயஞ் சுரந்து, தண்ணளிதாங்குமலர்முகத்துக்'கண்ணெகிழ்ந்து' நீங்கவரிய நிழலுடைத்தாய்நின்றெமக்கே' யோங்கியதோர்சோலையுடைத்து. எ-து இதனுட் டன்னையாதரிக்கும் வள்ளலைக்கருதி யவனையொ ழித் தவட்கேற்ற வுவமைப்பொருளைக் கூறியவாறுகாண்க. அன்றியும் பனிமதப்பதுமம் ஊழியு மதுவேயென்று · ௨ாயசு-ஞ் சூத்திரத்தில்வந்த வகவலி லொட்டலங்காரமாகத் திருக்காவலூர்நா யகி வெளிப்படாதொழித் தவட்கேற்ற வுவமைப்பொருளைக் கூறியவாறுகாண்க. அன்றியும்.

(அவ்வலங்காரவிரிவுவருமாறு) — தண்டியலங்காரம். — அடையும் பொருளுமயல்படமொழித லு' மடைபொதுவாக்கியாங்கனமொழிதலும்' விரவத்தொடுத்தலும்விபரீதப்படுத்தலு, மெனநா ல்வகையினுமியலுமென்ப. என்றாராகலின் [வ-று] வெறிகொளினச்சுரும்பு மேய்ந்ததோர்காவிற், குறைபடுதேன்வேட்டுங்குறுகு, நிறைமதுச்சேர்ந், துண்டாடுந்தன்முகத்தே செவ்வியுடையதோர், வண்டாமரைபிரிந்தவண்டு. எ-து அடையும்பொருளு மயல்படமொழிந்தது. — ஒண்ணிலவுநீர்மை த்தாயென்றசெய்யுள். அடைபொதுவாய் பொருள்வேறுபட்டது-தண்ணளிசேர்ந் தின்சொன்மரு வுந்தகைமைத்தா, யெண்ணியமெய்ப்பொருளுமெற்றாளு, மண்ணுலகில், வந்துநமக்களித்துவாழு மூதிலொன்று, தந்ததான்முன்னைத்தவம். எ-து அடைவிரவிப் பொருள்வேறுபட்டது. — கடை கோளுலகியற்கைகாலத்தின்றிங்கா, லடைபவறிதாமிற்றன்றே, யடைவோர்க், கருமையுடைத்தன்றிய ந்தேதல்சுவைத்தாய்க், கருமைவிரவாக்கடல். எ-து விரவத்தொடுத்தல் பிறவுமன்ன எ-று. (௫௯)

(௲௪௫-சூ) அவநுதியென்பவாய்மெய்மறுத்துமற், றிவறியவொன்றனையேற்றியியம்பலே, யருவகங்கூடடிச்செருஞ்சிறப்பாகும்.

※ எ-து ※ அவநுதியலங்காரமாமாறுணர்த்துதும். எடுத்தபொருள் மிகத்தோன்றவதற்குள் ளசிறப்பியல் குணமுதலாயவற்றினுண்மைமறுத் ததிர்மறையாக மற்றொன்றனையுரைப்ப தவநுதியலங்காரமெனப்படும். — தண்டியலங்காரம். — சிறப்பினும்பொருளினுங் குணத்தினுமுண்மை மறுத்துப்பிறிதுரைப்ப தவநுதியாகும். என்றார் [வ-று] நறைகமழ்தார்வொட்டார் நலனழித்து நாணு, நிறையுநிலைதளராநீர்மை, யறநெறிசூழ், செங்கோலனலலன்கொடுங்காலன்றெவ்விரோ நா, வெங்கோபமால்யானைவேந்து. எ-து சிறப்பவநுதி. நிலவுமிழ்விசும்பாதிமிர்காலாத்தியா, மலர்கதிராமவானுமதியா, மலர்கொனறை, பொன்னனுந்தாராசொருவனுயிர்க்குயிரா, யெண்ணிறந்தா னெப்பொருநமாம். எ-து பொருளவநுதி. மனுப்புவிமேல்வாழ்மறைவளர்க்குபார்ய, பனித்தொடையபதாதிவர்கோனெங்கோன், றனிக்கவிகை, தன்மைநிழற்றன்று தற்றொழுதம்பதையர்க்கு, வெண்மைநிழற்றுவிவிடும். எ-து குணவவநுதி. அன்றியும் இதனை யுருவகங்கூடடித் சிறப்பாம். [வ-று] பொங்குளகமலலபுயமேலிவையிவையும், கொங்கையிணையல்ல கோங்கரும்பு, மங்கைநின், மையரிக்கண்ணலல மதர்வண்டிவையிவையும், கையல்லகாந்தண்மலர். எ-து வண்டலகருங்கண் ணென்றவனமறுப்ப துண்மையுவமையெனவும்கண்ணலலவண்டென்றுபொருளைமறுப்ப தவநுதி யுருவகமெனவுங்கண்டுகொள்க. எ-று (௨௰)

(௲௪௬-சூ) ஊகாஞ்சிதமென்ப வுரிமையொழித்துமற், றுமொர்குறிப்பொருளறைந்து பொருத்தலே.

※ எ-து ※ ஊகாஞ்சிதவலங்காரமாமாறுணர்த்துதும். எடுத்தபொருட்கண் ணியலபாயினவற் றைக்கூறினுமவற்றிற்குரியகாரணத்தையொழித்துமற்றொன்றன்சிறப்புதம்தான்றக்கவி தான்கருதிய மற்றொருகாரணத்தைக்கூறுவது ஊகாஞ்சிதமெனப்படும். இதனைத் தற்குறிப்பேற்றமென்பாருமுளர். என்னை ஊகாஞ்சிதமெனினுந் தற்குறிப்பெனினுமொக்கும் அஞ்சிதமெனினும்பொருத்தமெனினுமொக்கும் [வ-று] மண்படுதோட்கிள்ளி மதயானைமாற்றாசர், வெண்குடைக்கேவைத்தவெகுளியான், விண்படர்ந்து, பாயுங்கொலென்றுபமதியம்போலவுதாஉற், தேயுந்தெளிவிசும்பின்ன்று. எ-து பெயர்பொருள்-வேனில்வெயிற்குலர்ந்த மெய்வெறுமையைசண்டிரங்கி, வானில் வளஞ்சூழ்ந்தவண்புபற்குத், தானுடைய, தாதுமதக்கமதுவந்தடஞ்சினையாற், போதுமேதந்துப்பொழில. எ-து அலபொருள். — தண்டியலங்காரம் — பெயர்பொருளலபொருளெனவிருபொருளினும், மியல்பின்விளைத்திறனன்றியயலொன்று, தான்குறித்தேற்றுத றற்குறிப்பேற்றம் இதுமேற்கோள். எ-று. (௨௧)

(௲௪௭-சூ) நுட்பமாந்தெளிவுறறவலாதவற்றையு, முட்படுத்திடுங்குறிப்புரையரிதுணர்த்தலே.

※ எ-து ※ நுட்பவலங்காரமாமாறுணர்த்துதும். எடுத்தபொருளை வெளிப்படக்கூறுதநவே தோன்றவுவமைபாலாயினு முன்பின்வருவதைக்கொண்டாயினுமதனைக்காட்டுங் குறிப்பினையுரைப்பது நுட்பமெனப்படும். [வ-று.] — வெண்பா. — வற்றியநீர்ப்பொய்கை மலர்கண்டறிந்தணுகப், பற்றியமான்பற்றிலர்தமயாவுறவே' மற்றுவரி, சேர்ந்தகலவெய்யோன் செழுமபொய்கைத்தாமரைகள், போர்ந்தகலகதீசருறவு. என்பதிதனுடசான்றோருறவு துன்பமவரினுமெத்நாளுமாறுதென வு றீசருறவுநிலலாதொருபொழுதெல்லையுண்மாறுமெனவுங் குறிப்பிற்காட்டியவாறுகாண்க: — பாடலபயிலும்ப மொழிதன்பணைத்தோள், கூடலவாயிற்குறிப்புணர்த்து, மாடவர்கரு, மெய்தீந்தொடையாழின்மெலலவேவைநவந்தா, லின்றீங்குறித்தியிசை, எ-து தொழில — தண்டியலங்காரம்.---தெரிபுவேறுகிளவாதுகுறிப்பினுந்தொழிலினு, மரிதுணர்வினைத்திறநுட்பமாகும் இது மேற்கோள். எ-று. (௨௨)

(௲௪௮-சூ) புகழ்மாற்றென்பபுகழ்வதுபோலிகழ்ந், திகழ்வதுபோற்புகழ்ந்தியம்பியதிலமேய.

※ எ-து ※ புகழ்மாற்றலங்காரமாமாறுணர்த்துதும். ஒனறனைப்புகழ்ந்தாற்போல வதனைப்பழித்தலும்பழித்தாற்போலவதனைப்புகழ்தலுமென விருவகைபுப்புகழ்மாற்றெனப்படும் [வ-று] — வெண்பா. — உள்ளுமயின்னுறசசிருய்த்திரவுதீர்மழைபெய், வள்ளலினையென்பார்வாழ்த்தியூர், வெள்வேலாய், பொய்வலலாரொன்றும்போதுமாதர்மார்பியாய், பொய்வலலார்கட்யாய்ப்புதுத் எ-து. பழித்தாற்போலப்புகழ்ந்தது. — வெண்பா. — வினையோர்கைட்பொருட்கொண்டேற்றலலாதின்பொருளைத், தானிடாயென்றும்பொய்தாமுரைத்தார், வேலினவர்க்கு, மண்டாதாவாதளவின்றியெத்நாளு, முண்டாதரவிவாய்நாய். என்பதுபுகழ்ந்தாற்போலப்பழித்தது. — குறள். — எற்றிற்குரியர்கயவரொன்றுற்றக்கால, விற்றற்குரியர்விரைந்து. என்பதிதுவும் புகழ்ந்தாற்போலப்பழித்தது. பிறவுமன்ன — தண்டியலங்காரம். — பழிப்பதுபோலும் பான்மையின்மேன்மை, புலப்படமொழிவதுபுகழாப்புகழ்ச்சி. இது மேற்கோள். எ-று. (௨௩)

(௲௪௯-சூ) தன்மேம்பாட்டுரைதான்றற்புகழ்தலே.

※ எ-து ※ தன்மேம்பாட்டுரையலங்காரமாமாறுணர்த்துதும். ஒருவன்றனக்குமேம்பாட்டாகத்தோன்றத் தன்னைத்தானேபுகழ்வது தன்மேம்பாட்டுரையெனப்படும். [வ-று] — வெண்பா. —

லாம்விழியொள் றுளதேனுரைநீர். என்பதிதனுட்டன்கண்ணேக்கிப்பேசினவாறு. பிறவுமன்ன (௩௬)

(௩௱௬௨-சூ.) விடையில்வினாவே விடைவேண்டாமையு மடையிலாவுமஃறிணையவற்றையு, மனவிபப்பாதிவழங்கப்பலகுணம், வினவினாற்போலவிளம்பியநிலையே.

* எ-து * விடையில்வினாவலங்கார மாமாறுணர்த்துதும். மறுமொழிவேண்டாமையு முன்னிலையல்லாவையு மறிவிலவற்றையும் வினவினாற்போலவுரைப்பது விடையில்வினாவணியெனப்படும். இதுவேயதிசயமுமையமுமகிழ்ச்சியுஞ் சினமுமுதலியவற்றைக்காட்டவு மொன்றனைமறுப்பவுநொந்துபுலம்பவுமுதவுமென்றுணர்க. [வ-று] — விருத்தம். — கண்பட்டுறங்கவெண்ணிறைமேயான்கண்டேனோகண்டனைத்தேனோ, பண்பட்டினியமழலைச்சொற்பகரவினிதிற்கேட்டேனோ' புண்பட்டளையென்னெஞ்சுவப்பப்பூங்கண்ணெனன்மேன்மலர்ந்தனவோ, வெண்பட்டிநப்பவுயிர்செலவோ வென்மேலிங்குந்தயையிதுவோ என்பது, மகிழ்ச்சிவினாவணி. — விருத்தம். — கெட்டோநாமோமின்னெனவேல்கிக்கெடுநன்றி' யிட்டோநாமோவிட்டதினஃதோபயனந்தோ' பட்டோநாமோபுன்னயநக்கிப்பரவீட்டை, விட்டோநாமோவேகுதுன்மோவெனவேவார். என்பதிதனுள் ளனுகிநொந்தார்புலம்பியவினாவணி — களிப்பனேவாழுவனேகனியதானெனே' விளிப்பனேசுளிப்பனேவிழைத்தவாண்முக, மொவிப்பனோதழுவியவவப்பின்முத்தமு, மளிப்பனேவுலகெலாமளித்தநாதனே. என்பதையவினாவணி. பிறவுமன்ன எ-று. (௩௭)

(௩௱௬௩-சூ.) வினவில்விடையேவினவினாவெனப்பிறர், மனவுணர்வுரைத்துமறுவுரைகூறலே.

* எ-து * வினவில்விடையலங்காரமாமாறுணர்த்துதும். ஒன்றையுரைக்குங்காற் பிறரொதிர்ப்பிறிதொன்றையுணர்ந்து வினாவினதாகச்சொல்லித் தன்பொருள்விளங்க மறுமொழியுரைப்பது வினவில்விடையணியெனப்படும். [வ-று] — தேம்பாவணி. — காதலேபாசமாய்க்கால்கைவீக்குத, லாதலேபிரிவுனக்கரியதாமென்பாய், காதலேபாசமாய்க்காதன்மிக்குளத், தாதலேநாடொறுமிறுக்கலாவதேன். — கொந்தியவிரகநோய்கொழுந்துவிட்டெரிந், தந்திலவழலவிப்பரியதாமென்பாய், கொந்தியதீயுலைதூண்டிக்கொண்டுநீ யந்திலநசைக்கறலட்டலாவதேன். — நெடிதுநாளுற்ற நோய் மருந்தினீர்மையாற்' கடிதுதீர்தரலருங்கருமமாமென்பாய், நெடிதுநாளுற்றநோய்நீளமீண்டுயிர், கடிதுமாய்ந்தொழிதரக்கடுவுண்பாவதேன். எ-ம். பிறவுமன்ன எ-று. (௩௮)

(௩௱௬௪-சூ.) சித்திரவணியேதீட்டியப்படவடி, வத்திறத்தனைத்தையுமையெனவகுத்தலே.

* எ-து * சித்திரவலங்காரமாமாறுணர்த்துதும். காதலுணர்ந்தவை கண்ணாற்கண்டாற்போலப் பிறர்தெளிந்துணர்வுற நுட்பவிபரத்தெடுத்தபொருளை விரித்துக்காட்டல சித்திரவலங்காரமெனப்படும். — நைடதம். — அவிர்பூவெறிவியாமலடக்கினளாய்க், கவர்வான்வரல்கண்டுமகன்றிலதாற், றுவர்வாய்மயிலொட்டிடலாகுமென, நவைதீரனமெல்லநடந்ததுவே. எ-ம். — தேம்பாவணி. — புலம்புமோதையிலொந்தெனப்பொன்னிடச், சிலம்புமேல்வலசசீறடியூன்றிவித், கலம்புனைந்தபொற்காலயற்பொன்மலைத், தலம்புனைந்தமின்சாயலொத்தாளரோ. — துகிற்கலாபமூடொன்றவிளிம்பெடுத், துகிற்கொடாயலர்கிள்ளியுதிர்த்தடு, மகிற்குலாம்புகைதூவிட்டங்குழன், முகிற்குலாமினின்மின்முகங்கோட்டுவாள். எ-ம். பிறவுமன்ன. இதற்கு மீண்டுமசித்திரவணியைக்காண்க. அன்றியும் இதற்குமிதன்மேற்கூறிய சுவையலங்காரத்திற்கும் வேற்றுமையாதெனி லது மனத்தினிகழ்ந்த பற்றினைமாத்திரம் புறத்துத்தோன்றுங்குறிகளால் விரித்துக்காட்டவியல்பாம். அசித்திரமோவெனி லெவ்வகைப்பொருளுங் கண்முன்வைத்தாற்போல நுட்பமாகக்காட்டு மியல்புடைத்தாகுமென்றுணர்க. — தண்டியலங்காரம். — கோமூத்திரியேகூடசதுக்க, மாலைமாற்றேயெழுத்துவருத்தனே, நாகபந்தம்வினாவுத்தரமே, காதைகாப்பேகரந்துறைச்செய்யுள், சக்கரஞ்சுழிகுளஞ்சருப்பதோபத்திர, மக்கரச்சுதகமும்வற்றின்பால். இது மேற்கோள் எ-று. (௩௯)

(௩௱௬௫-சூ.) ஒழிப்பணிபலவற்றையொழித்தனவுரைத்தலே.

* எ-து * ஒழிப்பலங்காரமாமாறுணர்த்துதும். தன்பொருள்விளக்கற்குரிய பற்பலவற்றையுரைக்கமாட்டாதொழித்தாற்போல வவற்றைச் சுருங்கக்காட்ட லொழிப்பணியெனப்படும். [வ-று] — வெண்பா. — ஞானமுஞ்சீர்நலமுநொந்தொன்றுமோத்தியதன், வேனலமுமாற்றுவிளம்பனே, தேனலமுண், டுன்றவருண்முகிற்கையெங்கோன்கொடையொன்றே, தேர்ன்றவுரைப்பேன்றொழுது. எனப்புகழொழிப்பணி. — வெண்பா. — உள்பொருள்சொல்லாயுனைவார்கண்டொன்றியாய், கொள்பொருள்வெஃகிக்குடியலைப்பா, யெள்பொரு, ளின்றுவினிதென்பாயிஃதிறியெய்க்கடவு, டுன்னுப்பகைப்பானென்சொல். என விகழ்வொழிப்பணி. பிறவுமன்ன எ-று. (௪௰)

(௩௱௬௬-சூ.) அமைவணியல்லவு மாமென்றதுபோற், சமைந்துமற்றொன்றன் றகவெழவியம்பலே.

* எ-து * அமைவலங்காரமாமாறுணர்த்துதும். நன்மையல்லனவு மெய்யல்லனவும் பிறர்க்குபகாரமாம் நல்லவாகவு முள்ளவாகவு மொப்பித்தாற்போலமைந்து பிறிதொன்றனை மிக்குரைத்தொழுத்த லமைவணியெனப்படும். [வ-று] — வெண்பா. — பொய்யுங்களவும் புறக்காமதீதிழிவு, நையுமுயிர்க்கேற்றவையன்றோ, செய்யுள், குலத்துரிமையென்றுயுளதெனிலுஞ்செந்நீத், தலத்துரிமைதானேவுனக்கு. எ-ம். பிறவுமன்ன எ-று. (௪௧)

(௩௱௬௭-சூ.) சிலேடையென்பதிரிசொல்பலவினைந், திருபயனுகவொருதொடர்புரைத்தலே.

* எ-து. * சிலேடையலங்கார மாமாறுணர்த்துதும். பலபொருள்குறித்தவொருசொல்லாகிய திரிசொற்கொண்டிருபயனைக் கொள்ளும்பாட்டைமுடிப்பது சிலேடையெனப்படும். [வ-று.] — வெண்பா.—பாடலமேறிப்பகைக்கிள்ளையார்த்தோட்டிச், சேடலர்தன்பூத்தகுதிகொகாத்தா, ளூடக, மார்ந்தகவிகையால்யாதனையுமாங்கோட்டி, யோர்ந்துறைமேவுற்றுளெளி என்பதிதனிற்பாடல மரத்திலேறிக்கிளிகளைக்கூப்பிட்டோட்டிப் பூத்ததினைப்புனங்காத்தாளெனவுந் துவரங்காட்டினி றைந்தகுரங்குகள் யாவையுங்கையாலோட்டினளெனவு மொருபயனைக்கொண்டு பின்னையுங்குதிரை யேறிப்பகைவர் பரிப்படையைப்பொருதோட்டித் தன்னாட்டுச்சிறப்பை காத்தாளெனவு மளித்த பொன்னிறைந்த கொடையாலாங்கில்லாம்படி துன்பங்களையுமோட்டினளெனவும் .வேறொருபய னைக்கொள்ளவும் பெறுமெனக்காண்க. அன்றியும் —விருத்தம்—[illegible]ல்பூத்தருத்தருநான்கடுத் தம்மூன்றுங்கழித்துக் காய்தளிர் [illegible] சவலையாடைக், கினிதவ[illegible]ணமலர் பஃறொடை யேகுடியியைவெள்ளித்தளைக்குறட் கொம்பி[illegible], [illegible]சித்து மும்மத த்தாற்சாயளியின்னிசைபாட வெள்ளையானை, [illegible]வர்மாபுக[illegible]விரபாகை[illegible] வுயர்தென்ம லையக்கோட்டிற்கண்டேன். என்பதிதனுட்சொன்னபொரு[illegible] மொருபய[illegible]கொண்டா லியா னைக்குரியவாகவு மவைமற்றொரு பய[illegible]க்கொண்டா [illegible] வெண்பாவிற்குரியவாகவு ம் பயன்படுமெனக்கண்டுணர்க. இது[illegible]லேடையுவமையெனப்படும். —[illegible]ச்சொற்றொடர் பலபொருட்பெற்றி, தெரிவுதரவருவது[illegible]யாகும். என்[illegible]ன்றியும்.

(அச்சிலேடையலங்கார விரிவுவருமாறு.) —தண்டியலங்காரம் — அதுவே, செம்மொழிபிரி மொழியெனவிருதிறப்படும். என்றார் செம்மொழிச்சிலேடையாவது. ஒருவகையானின்ற பலபொ ருள்படுவது [வ-று.] செங்கரங்களாவிாவுநீக்குந்திறம்புரிந்து, பங்கையமாதர்நலம்பயி[illegible], பொங் குதையத், தோராழிவெய்யோனுயர்ந்தநெறியொழுகு, நீராழிசூழ்ந்தநிலத்து. எனவரும். பிரி மொழிச்சிலேடையாவது. ஒருவகையானின்ற சொல்லைப்பிரித்துத் தொகைவே[illegible]படுத்தும். பல பொருள்கொள்ளப்படுவது: [வ-று] தள்ளாவிடத்தோதடந்தாமரையல[illegible], [illegible]வரிமானிட ர்மிருப்ப, வுள்வாழ்தேஞ், சிந்துந்தகைமைத்தேயெங்கோன்றிருவுள்ள, [illegible] நாடு. எனவரும். அன்றியும். —தண்டியலங்காரம்.— ஒருவினைபலவினை[illegible]யம, மறிய மவிலக்குவிரோதமவிரோதமென, வெழுவகையானுமியலுமென்ப. என்றாராகலின். ஒருவினைச்சி லேடையாவது. ஒருவினையான்வருவது. [வ-று] அம்பொற்பணைமுகத்துத்தி[illegible]நாகம், வம்புற்றவோடைமலர்த்திலங்க, வும்பர், தவம்புரியும்வான தியுநாண்மதியு நல்[illegible], தவம்புரிவார்க்கி ன்பந்தரும் எனவரும். பலவினைச்சிலேடையாவதுபலவினையான்வருவது [வ-று] தவிர்வின்மதுவுண் களிதளிர்ப்பநீண்டு, செவிமருவிச்செந்நீர்மைதாங்கிக், குயிலிசையு, மின்னுமிரார் நல்லிடையார், மென்றேனைக்குமேவிலா, ரின்னுயிரையீர்க்கின்றன எனவரும். முரண்வினைச்சிலேடையாவது. மாறுப [illegible]யான்வருவது. [வ-று] மாலைமருவிமதிதிரியுமாமணஞ்செய், காலத்துணைமேவலார்கடிய வேலைமேன், மிக்கார்கலியடங்காதார்க்கும் வியன்பொழில்கள், புக்கார்கலியடங்கும்புள். எனவரு ம். நியமச்சிலேடையாவது. சிலேடித்தவற்றைநியமஞ்செய்வது. [வ-று] வெண்ணீர்மைதாங்குவ ளமுத்தேவெறியவாய்க், கண்ணீர்மைசோர்வகடிபொழிலே, பண்ணீர்மை, மென்கொவியாழேயி ரங்குவனவேல்வேந்தே, நின்கொலுலாவுநிலத்து. எனவரும். நியமவிலக்குச்சிலேடையாவது. சிலே டித்தபொருளைநியமஞ்செய்தநியமத்தைவிலக்குவது. [வ-று] சிறைபடுவபுட்குலமுந்தீம்புனலுமன் ன, விறைவனிகாத்தளிக்குமெல்லை, முறையிற், கொடியனமாளிகையுங்குன்றமுமேயன்றிக், கடிக மழ்பூங்காவுமுள. எனவரும். விரோதச்சிலேடையாவது. சிலேடித்தவற்றைப் பின்னரும்விரோதிப்பச் சிலேடிப்பது. [வ-று] விச்சாதரனெனினுமந்தரத்தின்மேவாறு, லச்சுதன்வண்ணத்தின்மாயனு, னிச்ச நிறைவான்கலையானகளங்கநீதி, யிறைபானனகனெங்கோன். எனவரும். அவிரோதச்சிலே டையாவது முன்னர்ச்சிலேடித்தபொருளைப்பின்னரும்விரோதியாமற்சிலேடிப்பது. சோதியிரவிக ரத்தாலிரவொழிக்கு மாதிடத்தான்மன்மதனைமாற்றழிக்கு, மீதா, மனகமழிதோற்றிக்குமுதளி க்குந், தனதனிருநிதிக்கோன்றான். எனவரும். பிறவுமன்ன. எ-று. (௬௨)

(௱௯௮-சூ.) சங்கீரணமென்பதரும்பலவ[illegible]வகை கொங்கிரத்தொடையெனக் கூட்டிக்கூறலே.

* எ-து * சங்கீரணவலங்காரமாமாறுணர்த்துதும். மேற்கூறியவலங்காரங்களிற் பலவுந்தம்மு ட்கலந்துகூடிவரத்தொடுப்பது. சங்கீரணவணியெனப்படும். [வ-று] திருக்காவலூர்க்கலம்பகம், —வெண்பா.—கார்த்தடகைகஞ்சத்தாள் காவிக்கண்ணைம்பல்வாய், வேய்ந்தலர்ந்தகாவலூர்மென் கொடியே, யீய்ந்தமது, வுண்ணவிகாள்சொன்மின்மொத்துளதோபூவுலகிற், பண்ணளிப்பூத்தீந் தேன்பனித்து. என்பதிதனுளுருவகமுமொட்டும் விடையில்வினாவும் பிறிதுமாயுமென விவ்வலங்கா ரங்கள்கலந்துகூடிவந்த வாறுகாண்க. அன்றியும் தண்மறைநீர்நின்றதவத்தாலளிமருவும், புண்ட ரிகநின்வதனம்போன்றதா, லுண்டோ, பயின்றருளம்பருமேபான்மொழியாய்பார்மேன், மூய ன்றுன்முடியாப்பொருள். எனவரும் — தண்டியலங்காரம்: — மொழியப்பட்டவணிபலதம்முட், டழுவவுரைப்பதுசங்கீரணமே. இது மேற்கோள் எ-று. (௬௩)

(௱௯௯-சூ.) சொல்லணியாறைந்தும் பொருளணியையைந்தும், புல்லணியிருவகைபுணர்ந்த தொகையென, முத்தமிழ்க்கிவையெலாமுகமறைசிக்கொறை, யத்தகைத்தாகாவணிகலந்தகதிகா

ன் டெந்நூற்குமுதலாம்புத்தியஃதி லா லந்நூல்பித்தனகங்கைவாளென்ப.

* எ-து * இவ்வதிகாரத்துள் விளக்கியசொல்லணிமுப்பதும் பொருளணிமுப்பது மியலிசை நாடகமென்னும்முத்தமிழ்மூன்றற்புனைதற்குரியன ஆயினுமொளிதருமின்மணிகுயிற்றியவணிகலன்று முயிருறுமவிருகண்ணுடிவரின் மாசிசமுவ ற்றற்போல விவ்வணிவகையானுந் தானுரைக்கும்பொருட்கிருருறுமைமேபணி யின்னதற்கின்ன துரியதெனவு மின்னதற்குரியவிட மின்னதெனவுமுணர்ந்து கூறுதல் சான்றோர்கடனெனக்கொள்க. அன்றியுந்திருமணி யணிகலனுயினுமொழுங்குமின்றி மட்டுமின்றித்திரளாய்த்திரட்டிக்குவித்ததுதா செசுமையாகவெடுத்தல் சிங்காரமன்றதும்பால விவ்வகைய வணிகளும் பொருட்குப்பாரமாக்குவிந் தேற்றுமவணிகலனு யலங்காரந்தோன்ற வளவுமிகாமனு மொழுங்குகெடாமனு மவற்றைவகுத்துப்புனைல்வேண்டும். இவற்றிற்கெல்லாம்புத்தியேமுதற்காரணமாகவேண்டிற் றெனற்கிலலாதாயிற் கற்றநூலெலாந்தன்னைக்கொல்வதற் கேதுவாகநிற்கும். பித்தன்கைப்பிடித்தவாளே யொக்குமென்மனார் புலமையின்மிக்கோரெனத்கண்டுணர்க. எ-று. (சச)

(சூ௱௰-சூ.) எந்நூனிலையினும்பிறைபெலாமுணர்த்துது, மந்நூலரியதெனவஃகினுமொருநூல், காட்டிப்பலநடைக்கடைப்பிடித்தவற்றுறு, கூட்டியமற்றவைகொள்பநல்லோரென, வெழுத்துச் சொற்பொருள்யாப்பணியென்றிவன், றழுத்தியவைம்பொருள்வழக்கஞ்சுருக்கித், தொன்னூனடைபேரிசிறந்தபுறநிலைப், பன்னூனடையிற்பழையனகழிதலும், புதியனபுகுதலும் புலமையின்மிக்கோர், விதியெனவிம்முறைவிருப்பிவழுவில, முந்நூல்விளக்கியமுத்தமிழ்த், தொனனூல்விளக்கந் துலங்கியவாறே. (சரு)

* எ-து * எவ்வகைநூலினு மவ்வவற்றுரியனவெல்லாவற்றையு முழுதுரைத்திருவது முற்றுணர்ந்தோர்க்குமேலாவருமையாகையி லிங்கனுரைத்தவைப் பற்றுக்கோடாகக்கொண் டொயாதனவு முணர்வதறிவோர்தொழிலெனக்கொள்க. அன்றியுந் தொன்னூலைவிளக்கிய புதுநூலர்க வீண்டுச் சொல்லப்பட்ட வைந்திலக்கணவழியே தொன்மையிற் செந்தமிழ்நூலில்வழங்கிய சிற்சிலவொழிப்பினு மின்று மந்நூலிற்புதியன சிற்சிலவிதிப்பினு மவையெலாங் காலவேற்றுமையானும் புறநிலைநூலின்வழி வந்தமையானும் வழுவென்றிகழப்படாவென நன்னூற்கலைவல்லோன்முதற் றென்னூற்புலவருள்ளும் பலரொன்றுணர்க. எ-று. (சஎ)

இரண்டாமோத்துப் பொருளணியியல் முற்றிற்று.

—ooo—

(சூத்திரம்.) மெய்ப்பொருளொருபொருண்மேவியேத்தவுஞ், செப்பருமறைப்பொருடிசையெலாம்வழங்கவும், வேதப்பயன்றரும்வெளிறிலவாயா, லோதித்தொன்னூலுடைப்பயன்பொதுப்படச், செந்தமிழுணர்ந்துதெளிந்தமுலவோர். தந்தநடையொடுசிலபுறநடையியைந், தெண்ணைந்தெழுத்துஞ்சொன்னூற்றிரண்டு, மெண்ணைம்பிரண்டுபொருள்யாப்பொருநூறு, மெண்ணெட்டாமணியெனசசூத்திரத்தொகை, யெண்ணூற்பத்தைந்துமீரைந்துமாக, வருந்தமிழிலக்கணமைந்தையும், விரித்துவிளக்கினன் வீரமாமுனியே. என்பது மாணாக்கன்றெழுதுரைத்த வாறுகாண்க. (க)

வெண்பா.

ஆதிநாவேதியவோராதிப்பொருடோரா
ன்றுநூலாய்ந்துமுணர்வாரே, கோதினுற்,
கற்றுங்கற்றபயனுண்டோவக்கடவு
ளெற்றுமேத்தாக்கடை.

இந்நூற்குக்கலைவல்லவர் தெருட்குருவென்னுஞ்சிறந்தநாமஞ்சூட்டினர்
அஃதென்னையோவெனின்

கட்டளைக்கலித்துறை.

அருட்கலைஞோர்முத்தமிழ்நூலுரைத்தவறமுதறைற்
பொருட்களையாய்ந்துழிவல்லோர்தெரித்தபுதைபொருளின்
மருட்களைநூக்கிப்பொருட்பயன்சூட்டிவழுத்துதலாற்
றெருட்குருநாமந்தொன்னூல்விளக்கிற்குச்சிறந்ததுவே.

அதிகாரமொன்றிற்கு - ஒத்திரண்டிற்கு - ஆ சூத்திரம் - எ௰. - மேற்கோள் சூத்திரம் - ௫௰௬.
ஆ சூத்திரம் - ௱௨௬.
அதிகாரமைந்திற்கு மேற்கோளோடுகூடிய ஆ சூத்திரம் - அ௱௨௬.

அணியதிகாரம் முற்றிற்று முற்றும்.

முன்னூற்றுளக்கிய வைந்திலக்கணத் தொன்னூல்விளக்கம்

முற்றிற்று முற்றும்.

——oo‡oo——

வீரமாமுனிவர்மீதிவு முன்னூற்றுளகசிய தொனனூல்விளக்கமீதிலும் புகழ்ச்சிமாலை.

ஆதிமீறில்லாதகன்டசுபரூபகுண, வேதன்ருட்போற்றிசென்னிமேல்வைத்த, வாதரவால், சீர்வீரமாமுனிமேற்சீரியர்கள்செப்பியபா, மீவார்மாலையாய்த்தொகுக்குதும்.

ஆதிநூலிற்குமருள்வீரமாமுனிவ, ரோதுநூலிற்குமொருபொருளே, யாதென்னில், வேதநூறன் னிலைமெய்யறத்தைச்சொல்லிவ, ரோதுநூலுமஃதென்றுணர். ( ௧ )

நன்மைமீன்வன்மையுந்தின்மையின்புன்மையுட், டன்மையைப்பன்மையாய்ச்சாற்றினர், மன்பதை, யுன்னியுணர்ந்திடவீரமுனிமுன்னூலும், பன்னிப்பகுச்சுப்பயன் ( ௨ )

தொன்னூலகராதிதேம்பாவணியென்னு. முன்னூலுங்கேளாச்செவிகட்கும், பன்னூலும், பாராதக ண்சட்கும்பன்னுதநாவுக்கும், வாராதறிவொளிவுவாக்கு. ( ௩ )

சீர்வீரமாமுனிவர்செப்பியமுன்னூற்கவிசுபு, மோர்மோவுமைமொவனாமோவிப், பார்மீதில், வந் திப்பாய்சைத்தவமேவாழ்த்துவாய்நாவகமே, சிந்திப்பாய்நெஞ்சேதினம். ( ௪ )

சிந்தைமகிழுஞ்செவிகுளிரும்வாய்வாழ்த்துந், தொந்தக்கரங்கடொழுகுங்கம், வந்தவிணையும், பண்ணுமுடல்புளகமாம்வீரமாமுனிநற், புண்ணியநூல்வாசிக்கும்போது. ( ௫ )

தருமப்பாதேம்பாவணியாகச்சாற்றிப், பொருளகராதியாய்ப்பூட்டி, யருளின்பந், தொன்னூல்விளக்கமாய்ச்சொற்றனர்முப்பாலு, முன்னூலாய்வீரமுனி. ( ௬ )

முத்தலமுமுப்பதமுமுச்சுடருமுக்கனலு, முத்தொழிலுமுத்திறமுமுப்பரங்கோ, டத்துவமு, முன்னூலுமும்மொழியுமுத்தமிழும்வீரமுனி, முன்னூலின்முற்றுமுள. ( ௭ )

ஆரியத்திற்சொன்னவருண்மறையினுட்பயவன்ப் பாரிற்றமிழ்ப்பாவாய்ப்பாடிவைத்த, வீரமுனி, யைப்போலவுள்ளிபதெல்லாம் பாடவல்லவர்க, ளிப்பாரிலெங்குமில. ( ௮ )

கையறவலீக்கப்பொய்யறமுநாக்கி, மெய்யறமுண்டாக்கிவிட்டின்ப, மையமறக், காட்டிமருளோட்டிநிறைநாட்டிமறைநீட்டியநற், றூட்டியனுர்வீரமுனிதான். ( ௯ )

உன்னுதலுன்னினவையோதுதலே தினவை, யன்னபடியேவனாயவாரறிகு, ரின்னபடி, செய்யத் திருவள்ளுவர்வீரமாமுனியீ, ரையரல்லால்வேறிலை. ( ௰ )

சற்றோர்குருவீரமாமுனிவரொப்பல்லோன், மற்றோரைச்சற்றோராய்வாழ்த்துத, லெற்றோடு, நேரொன்றுற்சூரியவன்மாவென்றுமஞ்சனத்தின், பேருமாவென்றழைத்தல்போல். ( ௰௧ )

பேரசத்தியஞ்சிற்றசத்தியந்தொல்காப்பியம்பின், னோடுக்காய்த்தான்சுருக்கியோதவே, வீரமுனி, யல்லான்முன்னூற்றுக்குளாய்ந்தசூத்திரஞ்சொல்ல, வல்லார்யார்மாகுருவல்லால். ( ௰௨ )

நிறைசவலைசுவேதமாய்நோக்கக்களங்கின், மறைவிழுவின்மகிழ்ச்சிக், குறைவிலவா, யெண்ணுர்குருவீரமாமுனிநாற்பான்மைத்தே, தண்ணுர்மதியத்துடான். ( ௰௩ )

வெள்ளிபொன்னுஞ்சந்திரனும்வெஞ்சுடர்தீபஞ்சிதமும், பொள்ளெனவேநீக்கும்புறவிருளை, யுள்ளிருளும், பன்னூலிருளும்பழுதறவேநீக்குமே, தொன்னூல்விளக்கச்சுடர். ( ௰௪ )

இருட்கவலையுள்ளமருட்கவலைநீக்கிப், பொருட்சுவையின்புகலுந், தெருட்தரு, வென்னும்பெயர்பெற்றிலங்குதொன்னூல்விளக்கம், பன்னும்பலகாலும்பார். ( ௰௫ )

அசமெழுத்துச்சொற்றிரியாயணிவெவனணெய்யாய்ச், சிசிபொருட்டிபம்யாப்பிரோமை, நகர்முனிவர், பன்னூலிருளகற்றப்பார்மீதிலேற்றியதே, தொன்னூல்விளக்கச்சுடர். ( ௰௬ )

மக்களிதையகமலமலரவித்துப், புக்குமகத்திருளைப்போக்குதலான், மிக்கொளிசெய், சூரியனுந்தொன்னூல்விளக்கமுநேரொக்குமெனக், காரியத்திலறிந்துகாண். ( ௰௭ )

ஒருசடவுண்மெய்யென்றுணர்ந்தேமுலகி, லிருவிவையின்பயனுங்கண்டேந், திரிதமிழுர், தேர்ந்தேம்பொருளுற்றிறமுணர்ந்தேம்வீரமுனி, கூர்ந்தவைந்திலக்கணத்தைக்கொண்டு. ( ௰௮ )

முன்னூலின்முத்திநெறியின்மையெனவீரமுனி, பன்னூலுமாய்ந்தேபழுதில்லாத், தொன்னூல், விளக்கமதிற்சத்தியவேதத்தின்பொருளைத், துளக்கமாய்சொற்றவைசூழ். ( ௰௯ )

நாற்குணநாலுமையாய்ப்பெற்றவிலக்கியப்பெண், ணற்குணனுற்பாவாணிலக்கணனு, மேற்கலந்து, பன்னுட்டவம்புரிந்துபார்மீதிற்பெற்றெடுத்தார், தொன்னூல்விளக்கச்சுதன். ( ௨௰ )

இறைக்கச்சுரக்குநீரோரிசுள்பாவலைச், சறக்கச்சுரக்குங்கபிலை; சிறுசேய்; குடிக்கச்சுரக்குந்தாய்க்கொங்கைபிற்பீர்தொன்னூற்: படிக்கவறிவூறும்பார். ( ௨௰௧ )

முசமெழுத்துக்கண்சொன்முலையணியாப்புப், புகல்சேதனனேபொருணூற், றகைபெற்ற, காரிகைதொன்னூல்விளக்கங்கற்றோர்க்குத்தாரமாய், வீரமுனிதந்தார்விதித்து. ( ௨௰௨ )

முன்னோர்கள்செந்தமிழைமுடவிவிர்தமிழாற், றொன்னூல்விளக்கத்தைச்சொற்றினதார், பன்னூலிலக்கணவிகங்கட்கிதுதிறக்குங்கோலாற், கலக்கமறவிதைனன்றாய்க்கல். ( ௨௰௩ )

கற்றற்கெளிதாகக்கல்லார்க்கிலக்கணத்தைச், சொற்றற்கெளிதாகத்தொன்னூலிற், பற்றுதலாற், சொன்னவற்றைக்கேட்கச்செவிக்கின்பந்துயபொருட், பன்னமனம்வாய்கடுமின்பம்பார். ( ௨௰௪ )

எழுத்துச்சொற்பொருள்யாப்பணியிவ்வைந்து, ளோரிழுக்குமின்றியுவுள்ளபடி, வீரமுனி, கல்லாரொல்லாமெளிதாகற்கத்தொன்னூல்விளக்கத், தெல்லாமியம்பிவைத்தாரொண். ( ௨௰௫ )

எழுத்தாலசொற்பகடியாப்புவடம்பூட்டிக், கழைபொருட்டாழியணிகாய்ச்சிக், குழம்புகற், கண்டுசருக்கரைப்பாவாக்கித்தொன்னூல்விளக்கம் விண்டளித்தார்வீரமுனிவிள். ( ௨௰௬ )

மரபெழுத்துச்சொற்கால்வடம்யாப்பணியாய்ப், பொருள்சுக்காணுகப்புரிந்து, பெருநீ, ரிலக்கணத்

திற் றொன்னூலென்னுங் கப்பலோட்டி, நிலைக்க வைத்தார் வீரமுனி. (௨௭)

தோற்றமொ நான்குசொல் வகுப்புக்கோட்டுச, சாற்றும் விகாரமிருபஃது, தேற்றமாய்ச், சொற்றனர்குத்திரனாற்பானெழுத்தியற்குச், கற்றகுருவீரமுனிதான். (௨௮)

நூற்பாவாற் சொல்லுமொரு நூற்றிரண்டேயெழுத்து, நாற்பான்பொருவலும் பானுவிரண்டே, யாப்புசதஞ், சொன்னாணியெழுபான்சூத்திர முன்னூற்றெழுபான், றொன்னூல்விளக்கத்தொகை. (௨௯)

ஒருபொருளில் விடுமேபன்றுன்றேற்மென்மைத்தே, யிருபொருளில்லறமென்மைத், திரிபொருளி, னம்பெரியேமுக்கியமானாற்பொருளிற்புண்ணியமே, யைம்பொருளிற்றொன்னூலேயாம் (௩௰)

சற்களின்பாணிக்கங்கண்டம்புராந்திம, நெற்களிற்சம்பாநிழற்பால், நற்கம, மணத்திற்றெள்ளாம்பன்மலர்பஞ்சவிகை, கணத்திற்றொன்னூல்விளக்கம் (௩௧)

தொன்னூல்விளக்கத்துட்சூத்திரங்களாதியந்த, முன்னூற்றெழுபான்முகபாடம், பன்னா, விலக்கணநாடுவதேமெனநாலினுளைக், கலக்சங்கணிக்குமிதைக்கல். (௩௨)

காரிகைகாக்கைப்பாடியம்யாப்பருங்கலம், வீரசோழியநேமிநாதமுமே, லாரியமாய்ச், சொன்னூற்கண்முன்னூற்றெருதப்பினுட்டெள்ளினாற், றொன்னூல்விளக்கமெனசசொல். (௩௩)

நன்னூலென்னுங்காட்டினத்தமதைதாங்கடந்தேந், தொன்னூல்விளக்கச்சுடராலே, யிந்நாலே, தொல்காப்பியக்களிற்றைச்சொல்விக்சத்தோட்டியதாற், பல்காலுமீதேபயில. (௩௪)

குடமெழுத்துச்சொன்மத்தக்கோவணியாப்பு, வடம்பொருளேதயிராகவார்த்துக், கடைந்தெடுத்தே, யாயனெனும்வீரமாமுனிவனேயளித்தா, னேயதொன்னூல்விளக்கநெய். (௩௫)

வித்தெழுத்துவேர்பொருண்மேய்ந்தவிலைசொன்மலர், கொத்தணியாப்புபலகோடாக, தித்திப்பு, வாட்கவிசணமென்னும்பெருமரங், காய்த்தே தொன்னூற்கனி. (௩௬)

சொன்னமெழுத்தாம்முசுமசொல்லாக்கயாப்பணி, வன்னமேர்க்குப்பொருண்மாமணியாய்ச், கன்னராம், வீரமுனிவிற்பனர்க்குத்தொன்னூல்விளக்கமெனு, மாரமமைத்தளித்தார். (௩௭)

---

## சதுரகராதிபின்பரில் வாழ்த்துமாலை.

முதுநூற்களாய்பவர்முண்மெய்த்தமருட்குச், சதுரகராதியிற்சன்ன, விதுபயனென், றோர்மொழியமோதாதுமைசெட்டுணத்துவதாற், கூர்மவுருசாரியெனச்சொள். (௧)

செந்தமிழ்ச்சொன்முற்றுஞ்சேர்ந்தவகராதி, வந்தகவலியுண்மருட்சியறச், சுந்தரமாய்ப், பேசாதுணர்த்திப்பிரித்துரைப்பதான்மவுன, வாசானமுக்கென்றுமாம். (௨)

பேர்தசழிமநய்பொருளாய்ப்பேணித்திரிதொகையா, யேர்விளக்குத்தண்டுதொடையிந்நான்கால், சீர்வீ, மாமுனிவனூலிருவன்மாற்றவசராதி, மெய்மவொளியேற்றிவைத்தானான். (௩)

ஞானிலக்கணநூற்றுங்கம்பொருணுரைணு, யாருமண்டம்வாட்டமலாளவே, வீரமுனி, யண்டிசதுரங்கவகராதிமாற்படையைக், கொண்டளித்தாரெமவர்நிமக்கு. (௪)

நால்வன்புதைபொருளினுட்பங்காட்டஞ்சனத்தைப், பொல்வகராதிபுலவர்க்கு, வாலறிவ, னும்வீரமாமுனிவனத்தத்திவெபிட்டா, னுமஞ்சனங்காணவே. (௫)

நிகண்டுசூடாமணிமதுகம்பூநேரோ; யகராதிசர்க்கரைமுன்னுக; புகைகொல்லர்; வீதிபினிற்குசிவிலைகூறனெனர்பிங்கலையுமோதுவாகரம்முரிச்சொலும். (௬)

பாராமலேநிகண்டுபன்னவருக்கல்லாதே; யார்யார்க்குமாகவகராதி; நேராகப்; பார்த்தறியவேவீரமாமுனிவன்பன்னுதமிழ் கோர்த்தளித்தார்யாவருக்கும். (௭)

பன்னிரண்டுதொகுதிபாராமல்பன்னபின்; பின்னமொழிபிக்கவியிலித்தருண; மென்னபய; னென்றெண்ணியேங்காதெடுக்கவகராதி நின்றளித்தார்வீரமுனி. (௮)

பெயரகராதிப்பிரித் துணர்வீராகிற்; பயனுப்ந்துண்வீரோபாரீர்; நியமாகச்; சொன்னூற்குநன்னூற்குந்தொன்னூற்குமுன்னூற்கும்: பன்னூற்குமோதும்பயன். (௯)

துதியவனைத்தும்பெற்றிடச்சொல்லுமிஃதென்வனை மதிவளர்ப்போதிவைக்கும்வர்த்திச், சதுரகராதிக்குள்ளேமிக்கதெனத்தக்கவர்களொக்குவுந்த, திக்கும்பெயரகராதி. (௰)

பொருளகராதிபுட்பூட்டினவைமுறநூர்; தெருளுணர்ந்தாய்ந்துதெளிந்தான்; மருணீங்கி, மேவலர்க்குமேவலனாய்விற்பனர்க்குமுற்பனனாய், நாவலர்க்கும்பாவலனுவாய். (௧௧)

ஓர்ந்தானுணர்வாய்பெயர்த்தொகுப்பைபவீரமுனி, தேர்ந்தேயொருங்குடன்சேர்த்ததா; லார்ந்த, விருளுமருளும்வெருளுமுருளுஞ், தெருளும்பொருளகராதி. (௧௨)

தொகையகராதியுட்சூட்டியவைசுற்று, வகையாகவருணித்துவந்தா, னகைபெருகப், பாவலர்க்குமாவலுற்பாடப்பிரசங்கிக்க, யாவருக்குந்தேவைநீயாவாய். (௧௩)

உன்னப்பிரசங்கமோதவலங்கிருதம், பன்னச்சிங்காரம்பகுத்துணாப், பின்னு, மகமகிழுமென்று மிகுபுகழூண்டார், தொகையகராதிதொகுப்பு. (௧௪)

கல்லாதவருங்கவிபாடக்கற்பிக்கு, நல்லாசிரியர்க்கிணையாகும், வல்லாரா, யார்க்குந்தோற்றுதவருமொழிகள்காட்டிமரு, டீர்க்குந்தொகையகராதி. (௧௫)

தொடையகராதியுட்சொற்றவைகற்கி, லடிதொடைமோவவழுவா, நொடியிற்; கடகடெனச்சொல்லித்தடதடெனப்பேசிப்; படபடெனவாசிப்பாய்பார். (௧௬)

தொகையகராதியெனச்சொற்றுமந்நாமந். தகைபெற்றதன்றெனத்தக்க, வகையாக; நிற்சங்கத்தாய்ந்துநியமித்தநாமமாம், நிற்சங்கரத்தினுரம். (௧௭)